திருக்குறள்

மூலமும் உரையும், ஆங்கில மொழிபெயர்ப்பும்

ஆ - அரங்கநாத முதலியார்
Retired Manager and Accountant, P. W. D.
Hony. Presy. Magistrate
and
Publisher of 'Sri Vishnu Sahashranamam'
with Tamil Meaning.
இயற்றியது.

"சுவர்ண விலாஸ்" 13 பெரிய தெரு
திருவல்லிக்கேணி
1933

[All Rights Reserved.]

TO

THE MEMORY OF

MY BELOVED

SON

A. PADMANABHAN.

FOREWORD

By

THE HON'BLE DIWAN BAHADUR
S. KUMARASWAMI REDDIAR B.A., B.L.

Minister of Education
(Government of Madras)

MYLAPORE, MADRAS
23rd April 1933.

The translation of Kural is no easy undertaking. This masterpiece of Thiruvalluvar owes its greatness not only to its sublime and wonderful thoughts but also to its epigramatic and poetic form. Unique in thought and form it is a work that can be best appreciated only when read in its original : but it is such a treasure house of truths and morals that it is necessary to bring it within the reach of the world at large, Tamil and non-Tamil. With this view several translations have been attempted in the past with varying degrees of success. Mr. A. Ranganatha Mudaliyar, in his retirement, has also undertaken this laudable and difficult work. I have gone through his translation though yet only superficially : and I hope to be able soon to devote more attention to it. He must be congratulated on the result of his labours. He has brought out, as best as any translator can, the true spirit of the original and has not produced a mere translation of its language. I am sure that when I read it with greater care, as I soon hope to do, I shall find it very interesting and instructive. I commend his work to the attention of the public.

S. KUMARASWAMI
Minister for Education

ஸ்ரீ:

முன்னுரை

தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் அருளிச்செய்த திருக்குறளின் அருமை பெருமைகள் உலகம் அறிந்தனவாதலால் அவைபற்றி நான் இங்குக் கூறவேண்டியதில்லை. நல்லறிஞர் பல்லோர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும், பல பாஷைகளிலும் மொழிபெயர்த்துதவிய மேல்நாட்டறிஞர்பலரது புகழ்ச்சியுரைகளும் இந்நூலின் பெருமையை நன்கு விளக்கக்கூடியன. இவ்வரிய பெரிய நூல், பற்பல தமிழ்ப் பதிப்புக்களைப் பெற்றும், பாஷாந்தரங்களில் மொழிபெயர்க்கப்பட்டும் உலகத்தார்க்கு உத்தமதர்மங்களை விளக்கியுதவுதல் பலருமறிந்ததே. இன்னும், எத்தனை பதிப்புக்கள் இந்நூல் சம்பந்தமாக வெளிவரினும் அவை யாவும் தமிழர்க்கு இதன்கணுள்ள பேரார்வத்தைப் பூர்த்தி செய்விக்கக்கூடியன வாகா. நம்மவர்க்கு இந்நூலின்கண் இயல்பாயமைந்துள்ள ஆர்வமாகிய பெருவிடாயை இப்பொழுது வெளிவந்துள்ள இந்நூற்பதிப்பும் ஒருபடியாகச் சமனஞ் செய்தற்குரியதென்னலாம். இப்பதிப்பை வெளியிட்டுதவியவர்கள், ஸ்ரீபார்த்தசாரதி கோயில் போர்டு மெம்பர்களுள் ஒருவரும், ஆனரெரி பிரசிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டுமாகிய ஸ்ரீமான் ஆ. அரங்கநாதமுதலியாரவர்கள். இவர்கள் இந்நூன்முழுமைக்கும் கருத்தை நன்கு விளக்கும் பொழிப்புரை எழுதியுள்ளதோடு ஆங்கிலத்தில் சிறந்ததொரு மொழிபெயர்ப்பும் தந்துள்ளார்கள். இவர்களின் உரை பரிமேலழகர் கருத்துக்களை விடாதுதழுவி இனிய எளிய நடையில் யாவர்க்கும் விளங்கும்படி அமைந்துள்ளது. இதன் ஆங்கிலமொழிபெயர்ப்புள்ளே, தானி பாவ முதலியன நிரம்பித் ததும்பும் காமத்துப்பால் பகுதி மிகவும் சிறப்புடையதென்பது, அப்பகுதிக்கு முன்னையோர் செய்த மொழி பெயர்ப்புக்களையும் பரிமேலழகரது உரை நுட்பத்தையும் உடன்வைத்து ஒப்பு நோக்குவார்க்குத் தெள்ளிதிற் புலப்படும். இம்மொழிபெயர்ப்பால் தெய்வத் திருவள்ளுவரின் உண்மைப் பெருமையை ஆங்கிலவறிஞரும் அறிந்து உவக்கும்படி செய்து இந்நூற்பதிப்பை முதலியாரவர்கள் செவ்வியமுறையில் வெளியிட்டுள்ளார்

கள். ஆசிரியரைப் பற்றியும், நூலைப்பற்றியும் எழுதிய இந்நூன் முகவுரையினின்று நூற்பெருமையாவும் நன்கு விளங்கி நிற்றலால் அவைபற்றி யான் வேறுகூறுதல் மிகையேயாம். வள்ளுவனாரை எக்குடியினராகப் பிறர் கூறினும், அவரை, வேறுவகையில் முரசறைந்து இறையாணை சாற்றும் மரபினராகவே நாம் கூறல் தகும். ஆனால் பிறர்கருத்தின்படி இவரதுகுடி மானிடம் பற்றிய வள்ளுவ மரபு அன்று. மோனை முத்தமிழ் மும்மதமும் சொரியும் கல்வியென்னும் கடாஅக்களிற்றின் மீதூர்ந்து நாக் கடிப்பாகத் தம் திருவாய் முரசங் கொண்டு உத்தம தர்மங்களாகிய இறைவனாணையை உலகிற்குச் சாற்றிய ஒப்புயர்வற்ற தெய்வவள்ளுவரிவரென்றே நாம் முடிவு கூறலாம். அவ்விறைவனாணையை வெளிப்படுத்தும் சீரியபத்திரங்களுள் இந்நூற் பதிப்பும் ஒன்றென்பதைத் தமிழ் மக்கள் நன்கறிந்து இதனைப் போற்றத் தவறார்களென்றே நம்புகின்றேன்.

23—4—'33
திருவல்லிக்கேணி.

இங்ஙனம்,
மு. இராகவையங்கார்.

Chief Pandit,
University Tamil Lexicon Office, Madras.

ஸ்ரீ

நூலையும் நூலாசிரியரையும் பற்றிய சில குறிப்புக்கள்

திருக்குறளாசிரியராகிய தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரைப் பற்றிக் கர்ணபரம்பரையாக வழங்கும் சரித்திரங்கள் பலவுண்டு. அவற்றையும், மற்றும் பல அறிஞர்கள் ஆராய்ச்சியிற்கண்ட செய்திகளையும் ஆதாரமாகக்கொண்டு வள்ளுவர் பிறப்பு முதலிய வரலாறுகள் ஈண்டு தொகுத்துக் கூறப்படும்.

பிறப்பு:—இவர் பகவன் என்ற வேதியர்க்கும் ஆதி என்பவளுக்கும் பிறந்தவ ரென்பதும், அவ் ஆதி என்பவள் நீசகுலப் பெண்ணென்பதும், இவருடன் பிறந்தவர்—கபிலர், அதிகமான், ஔவை முதலிய அறுவ ரென்பதும் கர்ணபரம்பரையாக வழங்கிவரும் பழங்கதையாகும். இவ்வரலாற்றிற்குக் கபிலரகவல் முதலியன ஆதாரமாம். ஆயினும், எழுநூறு எண்ணூறுவருடங்களுக்கு முற்பட்ட ஞானாமிர்தம் என்னும் சைவசமயநூல், யாளிதத்தன் என்னும் பார்ப்பனனுக்குப் புலைச்சி யொருத்தியிடம் கபிலர் அதிகமான் முதலிய அறுவருடன் இவர் பிறந்தவரென்று கூறும். இவ்வெழுவருடைய ஊர் குலம் முதலியவற்றின் வரலாறுகள் பழைய நூல்களில் வேறாகக் காணப்படுதலால், மேற்குறித்த கர்ணபரம்பரையின் உண்மை தெளியக்கூடவில்லை என்பது அறிஞர் கருத்து.

குலம்:—இவர் பிறந்த குடி வள்ளுவக்குலம் என்பது பலர் கொள்கை. வள்ளுவராவார், யானைமீது முரசறைந்து அரசனாணை சாற்றுவோர் ஆவர். இவர்கள் மன்னருக்கு உள்படுகருமத்தலைவராக விளங்கியவ ரென்பதும், திருநாள், படையெடுப்பு நாள், மணநாள் என்ற இப்பெருநாட்கல்லது பிறநாட்கு அறையாத முரசுடையோரென்பதும் பண்டைநூலால் வெளியாகின்றன (பெருங்கதை.). இவர் தாழ்ந்த குடியினரென்று சிவஞான முனிவரும் குறிப்பிடுவர் (சோமேசமுதுமொழி வெண்பா). இவர் நான்முகன் அவதார மென்பது திருவள்ளுவமாலைப் பாடல்கள் பலவற்றால் (4, 28) வெளி

யாவதால் பார்ப்பன மரபினர் இவர் என்பதும், அரசாங்கத்தில் மன்னரைச் சார்ந்தொழுகி இராஜகாரிய துரந்தரராய் விளங்கினவ ரென்பதும் ஒரு சிலர் கொள்கை. இக்கொள்கைப்படி, வள்ளுவர் என்பது கருமாத்யகூர் என்னும் வடமொழிப் பொருளுடைய வல் லபர் என்னும் வடமொழியின் சிதைவாகும். 'இராஜசேகரரான வள் ளுவரும் கூடிச் செய்த கச்சம்' (S.I.I. Vol. v No. 775) 'பாண் டியன் ஸ்ரீவல்லுவன்' (E. P. Report 46 of 1907) என்னும் சாஸனத் தொடர்களில் வல்லபர் என்பது வல்லுவர், வள்ளுவர் என்று திரிந்து வரும் முறையையும், சேரன் படைத்தலைவனொருவ னுக்கு நாஞ்சில்வள்ளுவன் என்ற பெயர்வழக்குள்ளதையும் இதற்கு ஆதாரமாகக் காட்டுவர். (Vide தமிழர் நேசன், Vol. X, pp. 6-10). எவ்வாறாயினும், அரசாங்க விஷயங்களில் ஆழ்ந்தவறிவும் அனுபவ மும் பெற்றுத் தாம் பிறந்த குலத்துள் அரசர்யாவரும் உச்சிமேற் கொண்டு போற்றற்குரிய உயர்குடியி லவதரித்தவர் நம்புலவர் பெரு மான் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

இவர் பெயர்:—திருவள்ளுவர் என்னும் பிரசித்தமான பெயரே யன்றித் தேவர், முதற்பாவலர், பொய்யில்புலவர், தெய்வப்புலவர், செந்நாப் போதார், பெருநாவலர் என்னும் பல பெயர்களும் இவர்க்கு வழங்கி வந்தன வென்பது திருவள்ளுவமாலை முதலியவற்றால் விளங்குகிறது.

மனைவியார்:—திருவள்ளுவர்க்குக் கற்புடை மனைவியாக விளங் கிய மனைவியின் பெயர் வாசுகி என்று கூறுவர். இவள் பெயர் மாதாநுபங்கி என்பது திருவள்ளுவமாலைப் பாடலினின்றும் ஊகிக்க லாகும். மாதாநுபங்கி என்பது தாயை நிகராகக் கொண்டு நடக்கின்ற ஒழுங்கினள் என்னும் பொருளுடையதாம். (திருக்குறள், மு. இராகவையங்கார் பதிப்பு, முகவுரை, பக் 4-5 கீழ்க்குறிப்பு).

ஊர்:—இவர் மயிலாப்பூரில் அவதரித்தவர் என்பது கர்ண பரம்பரை. ஆனால், சிலர் மதுரையில் இவர் அவதரித்தவர் என்றும், மயிலாப்பூரில் இவர் வாழ்ந்திருக்கலாம் என்றும் கருதுவர். வட நாட்டில் நப்பின்னைநாயகனாகிய கண்ணபிரான் உத்தரமா மதுரைக்கு எங்ஙனம் ஆதாரமாவரோ, அங்ஙனமே தென்மதுரைக்கு மாதாநுபங் கியை மணந்த செந்நாப்போதார் ஆதாரமாவர் என்னும் பொருள் கொண்ட—'உப்பக்கம் நோக்கி' என்னும் வள்ளுவமாலைப் பாடல்

கொண்டு இவரதுபிறப்பகம் தென் மதுரையெனக் கோடல் ஒருவாறு பொருத்தமேயாம்.

இவர் மதம்:—இவர் மதத்தை இன்னதென்று குறிப்பிட்டுச் சொல்வதற்கில்லை. இவரைச் சிலர் வைதிகமதத்தவரென்றும், சிலர் வைஷ்ணவரென்றும், சிலர் சைவர் என்றும், சிலர் ஜைனரென்றும், சிலர் புத்தரென்றும் சொல்லுவர். கிறிஸ்தவரோ, 'தங்கள் ஏசுநாதர் மலைமேற் செய்த ஹிதோபதேசத்தின் பிரதித்வனியாகும் இத்திருக்குறள்' என்பர். 'எப்பா லவரு மியைபவே வள்ளுவனார், முப்பால் மொழிந்த மொழி' 'சமயக்கணக்கர் மதிவழி கூறாது, உலகியல் கூறிப் பொருளிது வென்ற வள்ளுவன்' என்ற முன்னோர் கூற்றுக்களாலும், 'எல்லா நூல்களினும் நல்லனவெடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கியல்பு' என்றுகூறும் பரிமேலழகியார் உரையாலும் எவரெவர் எத்திறத்தர் அவரவர்க்கு அவ்வத்திறத்தராய்த் தோன்றும் சர்வசமயவாதி என்றே நம் தெய்வப்புலவரைக் கொள்ளுதல் சால்புடைத்தாகும்.

இவர் காலம்:—இவர் கடைச்சங்கத்தார் காலத்திருந்தவரென்றும், அச்சங்கத்தார்முன் தம் நூலை அரங்கேற்றினரென்றும், அரங்கேற்றிய காலத்துச் சங்கப்பலகை மற்ற நூல்களைத் தள்ளி இவர் நூலொன்றையுமே அங்கீகரித்ததென்றும் கூறுவர். சிலர் கடைச்சங்கத்திற்கும் சில நூற்றாண்டுகள் இவர் முற்பட்டவரென்று கொள்வர். மணிமேகலையில் சீத்தலைச் சாத்தனார், பரசுராமன் காலத்து நிகழ்ச்சி யொன்றற்கு அக்காலத்தவர் கூற்றில் வைத்துத் 'தெய்வந் தொழாஅள்...தெழுவாள்' என்னுங் குறளைக்காட்டலால், அச்சாத்தனார்க்குச் சில நூற்றாண்டுகளாவது இவர் முற்பட்டவராயிருத்தல் வேண்டுமென்பது பொருத்தமென்றும், சாணக்கியராகிய கௌடில்யரும், அவரது சீடராகிய காமந்தகரும் எழுதிய அருத்தநூற்கருத்துக்கள் திருக்குறளுட் பலவிடங்களினும் பயினுதலால் அவர்கள் வாழ்ந்த கி. மு. நான்காம் நூற்றாண்டுக்குப் பின்னும் கடைச்சங்கத்திற்கு முன்னும் இவர் விளங்கியவராகலாம் என்றும் கருதுவர், ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்கள்.

II. திருக்குறள்

இயன்முறை:—இவரியற்றிய இப்பெரு நூல் 1330 குறள் வெண்பாக்களால் அமைந்தது. அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பெரும் பகுதிகளுடைமையால் முப்பால் என்னும் பெயர் பெற்றது.

நான்முகன் அவதார மென்று வள்ளுவனரை முன்னோர் புகழ்ந்து கூறினரென்பது முன்னரே கூறப்பட்டது. அந்நான்முகனாகிய பிரம தேவர், 'திரிவர்க்கம்' என்ற மகாசாஸ்திரத்திற்கு ஆசிரியர் என்பதும், அறம், பொருள், இன்பம், என்னும் முப்பகுதியினையுடைய அத்திரி வர்க்கமென்னும் நூலைச் சுருக்கிப் பார்கஸ்பத்யம், சுக்ரநீதி முதலிய நூல்கள் வியாழன், வெள்ளி முதலியோரால் இயற்றப் பெற்றன வென்பதும் பிறவும் மகாபாரதம் சாந்தி பர்வம் 58-ம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளன. இதனை நோக்குமிடத்து, பிரமதேவரியற்றிய அப்பெருநூலைப்போலவே வள்ளுவனரும் முப்பாலாகிய திருக்குறளை இயற்றினமையால் நான்முகன் அவதாரம் திருவள்ளுவர் என்று முன்னோர் கூறலாயினர் என்று, ஸ்ரீமத் மு. இராகவையங்கார் கருதுவர் (செந்தமிழ். தொகுதி 8, பகுதி 11) மற்றும் இந்நூல், திருவள்ளுவர், திருவள்ளுவப் பயன், வள்ளுவர் வாய்மொழி, வள்ளுவர் வாய்ச்சொல், தெய்வநூல், பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை, உத்தரவேதம், பொருளுரை, முதுமொழி என்னும் பல பெயர்களால் வழங்கும். இதன் பெரும் பகுப்பை,

'பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
தூய துறவறமொன் றாழாக—வாய
வறத்துப்பா லுல்வகையா வாய்ந்துரைத்தார் நூலின்
திறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து'

'அரசிய லையைந் தமைச்சிய லீரைந்
துரைநா டரண்பொரு ளொவ்வொன்—றுரைசால்
படையிரண்டு நட்புப் பதினேழ்பன் மூன்று
குடியெழுபான் றொக்கபொருட் கூறு'

'ஆண்பாலே ழாறிரண்டு பெண்பா லடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராறாக—மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு'

'ஐயாறு நூறு மதிகார மூன்றுமா
மெய்யாய வேதப் பொருள்விளங்கப்—பொய்யாது
தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனாகி
யந்தா மறைமே லயன்'

என்று வரும் வள்ளுவமாலை வெண்பாக்களா லறிக.

இவற்றுள், பாயிரம், கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலியுறுத்தல் என்னும் நான்கு அதிகாரங்களை உடையது. இவற்றை நூன்முதலில் பாயிரமாக ஆசிரியர் கொண்டதற்குத் தக்க காரணந் தெளிதல் அரிதாகும். இந்நான்கதிகாரங்களும் கடவுள் வாழ்த்து, கொடிநிலை, கந்தழி, வள்ளி என்று தொல்காப்பியனார் பாடாண்டிணை வகையாகக் கூறிய வாழ்த்துக்களைப் பற்றியன என்பது அறிஞர் சிலர் கருத்து. (தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, பக். 120-3.)

இந்நூலிற் கண்ட பால், இயல், அதிகார முறைகளைப்பற்றி முன்னோர் கொண்ட கருத்து வேறுபாடு அடியில் வரும் அரிய உரைப்பாயிரம் ஒன்றால் இனிதுணர்ந்து தெளிதலாகும்.

'புருடார்த்தமாகிய தன்மார்த்த காம மோக்கங்களுண் முதன் மூன்றனையும் வழுவா தொழுகவே மோக்க மெய்துதலான் அதற்கு வேறு வகுத்துக் கூறவேண்டுவதின்மையின் அஃதொழித்து, ஒழிந்த தன்மார்த்த காமப் பகுதிகளை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் பேர் கூறுவார், மங்கல வகையான் எப்பொருட்கு முதலாகிய கடவுள் வாழ்த்தும், அக்கடவுளினது செய்கைத்தாகி இவ்வுலகிற்குஇன்றியமையாதாகிய வான்சிறப்பும், பிறப்பினிற் சிறப்பெய்துதற் குரியராகிய முனிவரதுபெருமையும், அவராற் கொண்டுய்க்கப் படுகின்ற அறத்தினது வலியும் நான்கதிகாரத்தாற் பாரித்துப், பிரமசரியம், காருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாதம்என்னும் நால்வகைப் பட்ட அறத்தினுட் பிரமசரியஞ் சீடராய் நின்றோதுவதல்லது செய்வது பிறிதின்மையின் அதனைப் புதல்வரைப் பெறுதல் என்புழி யடக்கிக் காருகத்தம் இருபததிகாரத்தானும், வானப்பிரத்தம் பத்ததிகாரத்தானும், சந்நியாதம் மூன்றதிகாரத்தானும் எல்லார்க்கும் பொதுவாகிய ஊழ் ஓரதிகாரத்தானுமாக முப்பத்து நான்கதிகாரத்தான் அறத்துப்பால் கூறிப்—பொருட்பாலில், அரசனை முதலாக நாட்டி அவற்குப் புறத்துறுப்பாவன படை குடி கூழமைச்சு நட்பரணென ஆறாகப் பகுத்து அரசர்க்குரிய திறம் இருபத்தைந்ததிகாரத்தானும், அமைச்சரதியல்பு பத்ததிகாரத்தானும், நாடும், அரணும், பொருளும் ஓரோரதிகாரத்தானும், படை இரண்டதிகாரத்தானும், நட்பு ஐந்ததிகாரத்தானும், பகை ஆறதிகாரத்தானும், அரசற்கு அங்கமான பெரியாரைப் பிழையாமை முதல் மருந்தீறாக ஆறும் ஆறதிகாரத்தானும், அதற்குறுப்பாகிய குடிமை முதல் நாணுடைமை எனப்படு

வன ஏழும் ஏழதிகாரத்தானும், அரசர்க்கும் ஏனைவருணங்கட்கும் ஒப்பவுரித்தாகிய குடிசெயல் வகையும், அவருட், பார்ப்பா ரொழித்துப் பெரும்பான்மை வேளாளர்க் குரித்தாகி ஏனையோர்க்குச் சிறு பான்மை யுரித்தாகிய உழவும் ஓரோரதிகாரத்தானும், அவ்வாறு பொருள் செய்யாதவழி யுளதாகும் நல்குரவும், அதுபற்றித் தோன்றும் இரவும், இரவின்கண் உளதாகிய அச்சமும், இரப்பார்க்கீயாதாருள்ளிட்ட கயவரதொழுக்கமுமாகிய இந்நான்கும் ஓரோரதிகாரத்தானுமாக எழுபததிகாரத்தாற் கூறிக்—காமத்துப்பால் கூறுவார், குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் ஐந்திணையும், முதல்கருவுரிப் பொருள் என்ற மூன்றனுட் பெரும்பான்மையும் உரிப்பொருள்பற்றிப் புணர்தலும் புணர்த னிமித்தமும் குறிஞ்சி எனவும், பிரிதலும் பிரிதனிமித்தமும் பாலை எனவும், இருத்தலும் இருத்தனிமித்தமும், முல்லை எனவும், இரங்கலும் இரங்க னிமித்தமும் நெய்தலெனவும், ஊடலும் ஊடனிமித்தமும் மருதமெனவும் ஓரோவொரு நிலம் ஐந்ததிகாரமாக இருபத்தைந்ததிகாரத்தாற் கூறி ஆக நூற்று முப்பத்து மூன்றதிகாரமாக்கி, ஓரோவதிகாரம் பத்துக் குறள் வெண்பாட்டாகக் கொண்டு இங்ஙனம் ஆயிரத்து முந்நூற்று முப்பது பாட்டான் வடநூலுந் தமிழ்நூலுங் கூறும் பொருளெல்லாம் தொகுத்துக் கூறினாரென உணர்க' (செந்தமிழ், Vol. I. pp. 246-8.)

பரிமேலழகர் அறத்துப்பாலை இல்லறம், துறவறம் என இரு பகுதியாகவும், பொருட்பாலை அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூவகையாகவும், காமத்துப்பாலைக் களவியல், கற்பியல் என இரு பகுதியாகவும் பகுத்துக்கொண்டு உரைகூறுவர். மேற்கூறிய உரைப்பாயிரமுடையார் பரிமேலழகரின் வேறாகப் பிரமசரியம், இல்லறம், வானப்பிரத்தம், சந்நியாதம் என்னும் நான்கு நிலைகளுக்கும் ஏற்ப அறத்துப்பாலையும், பலபடியாகப் பொருட்பாலையும், குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்திணைக்கும் முறையே உரித்தாக்கி ஒவ்வொன்றுக்கு ஐந்தைந்ததிகாரமாகக் காமத்துப்பாலையும் பகுத்துக்கொண்டு கூறுதல்காணலாம். வேறொரு சாரார் பொருட்பாலை அரசியல், அமைச்சியல், பொருளியல், நட்பியல், துன்பவியல், குடியியல் என அறுவகைப்படுத்துவர் (குறள், ஸ்ரீமத். மு. இராகவையங்கார் பதிப்பு, பக் 13—14)]

நூற் சிறப்பு:—'சமயக்கணக்கர் மதிவழி கூறாது, உலகியல் கூறிப் பொருளிது வென்ற, வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்,

முதற்கவி பாடிய முக்கட் பெருமான்' என்று கல்லாடர் கூறியபடி ஒருசார்சமயநெறி ஸாற்றுாது உத்தமதருமங்களைப் பெருந்தெய்வமும் புகழுமாறு ஓதிய இத்தெய்வப் புலவரது அருமை பெருமைகளைப் பற்றி முன்னோரும் பின்னோரும் கூறிய புகழ்ச்சி யுரைகள் எண்ணிறந் தன. அவருட் சங்கத்துச் சான்றோர்கள் பாடிய திருவள்ளுவமாலையை நோக்குவார்க்குத் திருக்குறள் தமிழ்வேதமாகவே மதிக்கப்பட்டதென் பதும், அதனை இயற்றிய வள்ளுவர் நான்முகன் அவதாரமேயன்றி மானிடரல்லர் என்று போற்றப்பட்டாரென்பதும் புலனாகும்.

'கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக், குறுகத் தறித்த குறள்' என்று இந்நூலை இடைக்காடர் சிறப்பித்துள்ளதாக வேறு தனிக் குறள் வெண்பாவொன்றும் வழங்கும். இத்திருக்குறளில் உலகத்தார் உள்ளுவனவாகிய அரிய பெரிய கருத்துக்கள்யாவும் ஒருங்கமைந்து உள்ளமையால், முன்னூல்களும் பின்னூல்களும் இந்நன்னூலின் சொற்பொருள்களைத் தழுவியனவாகவே அமைந்தன. இதுபற்றி யன்றோ—"எல்லாப்பொருளு மிதன்பாலுள்ள விதன்பால், இல்லாத வெப்பொருளு மில்லையால்" என்றார் ஆன்றோரும். சங்கப் புலவர் களே,

'அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்—மறனெறிந்த
வாளார் நெடுமாற! வள்ளுவனார் தம்வாயால்
கேளாதன வெல்லாங் கேட்டு'

'சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த விருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய வின்குறள் வெண்பா'

'தேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர் வெண்பா'
'முப்பாற்கு, பாரதஞ் சீராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்.

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

என்பன முதலாக முன்னோர் கூறிய புகழ்ச்சியுரைகள் இந்நூற் பெருமையை ஒருபடியாக விளக்குவன. இக்காலத்தும் இவ்வரிய நூல் உலகம் புகழும் பெருமை வாய்ந்து விளங்குகின்றது. தமிழ் மக்களது ஒழுக்கத்தை நிலை நிறுத்தி அவர்களை நன்னெறியில் உய்த் தற்கு இந்நூல் இதுவரை புரிந்துவரும் உதவி பெரிதாம். இதனை மேல் நாட்டாரும் அறிந்து தத்தம் மொழிகளில் பெயர்த்துப் படித்து மகிழ்வாராயினர். இவருள், வீரமாமுனிவர் (Father Beschi) குறிப் புரையுடன் லத்தீனிலும், டாக்டர் கரால் என்பார் இந்நூலை 1856-ல் லத்தீன், ஜர்மன் என்னும் இருமொழிகளிலும், W. H. ட்ரூ என்னும் பாதிரியாரும், பரிமேலழகர் உரையைத் தழுவி G. U. போப் என்னும் விற்பனரும் ஆங்கில மொழியிலும், மற்றும் பலர் பல்வேறு மொழி களிலும் இவ்வருநூலைப் பெயர்த்தெழுதி இதன் பெருமையை உலக முழுதும் அறிந்து போற்றும்படி செய்தனர். இந்நாட்டுப் பிற[illegible] கள் பலவற்றிலும் இது மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதன் [illegible] நூல் மொழிபெயர்ப்பொன்று தஞ்சாவூர் சரஸ்வதி மஹாலில் [illegible] ளதாம். இஃது இயற்றப்பெற்றது ஒரு நூற்றாண்டுக்கு முன்னிருக்கலா மென்று தெரிகிறது. இம்மொழிபெயர்ப்பாசிரியர் திருவள்ளுவரை ஸ்ரீவல்லபாசாரியரெனக் குறித்திருப்பது நாம் மேற்கூறிய வள்ளுவச் சொல்லின் வரலாற்றுடன் ஒப்பிடத்தக்கது. திருக்குறளிலுள்ள 'அகர முதல' வென்று தொடங்கும் முதற் செய்யுளுக்குத் தத்தம் சமயம் பற்றி, உள்ளுறை பொருளாகவும், வெளிப்படை பொரு ளாகவும் பலர் பலவேறு கருத்துக் கூறுவர். அவற்றை யெல்லாட் ஆங்காங்குக் கண்டு ஏற்பன கொள்க. 'அகர முதல வெழுத்தெல் லாம்' என்பது தலைமைபற்றி வந்த எடுத்துக் காட்டுவமை என்றார் பரிமேலழகர். ஆவியும் ஒற்றும் ஆகிய எல்லாவெழுத்துக்களு தம்மைத் தோற்றிக் கலந்தியக்கித் தன்னின் வேறாகிய அகரமுதலையு டைய, அதுபோல இயங்குதிணையும் நிலைத்திணையுமாகிய இவ்வுலகம் தன்னைத்தோற்றிக் கலந்தியக்கித் தன்னின் வேறாய ஆதிபகவனென்னும் முதலையுடையதென உவமையையும் பொருளையும் விரித்துரைத்தலும், பொருந்தும். நச்சினார்க்கினியரும், 'மெய்யினியக்க மகரமொடு சிவணும்' (தொல்காப். எழுத். 46) என்னும் சூத்திரவுரையில் இக்கருத்தே பற்றிக் கூறுதலுங் காண்க. இங்ஙனம் தலைமைபற்றி வந்ததை ஆ

சாமான்யம் என்றும், அகரமும் இறைவனும் எழுத்தின் கண்ணும் உயிர்க்கண்ணும் கலந்தியக்கும் தன்மையை ஆப்திசாமான்யமென்றும் கூறுவர் வடநூலார்.* மகாவித்துவான் ஸ்ரீமத். ரா. இராகவையங்காரவர்கள் இக்கருத்துக்களை விரித்து, கௌடபாதகாரிகையில் அகார வுவமைக்கு இவ்விரண்டு சாமான்யங்களையும் எடுத்துரைத்த சுலோக மொன்றை மேற்கோள் காட்டினர். இவ்வாறே ஐயங்கார் அவர்கள் வடமொழிப் பெருநூல்கள் பலவற்றோடு ஒப்புமையுடைய திருவள்ளுவர்கருத்துக்களைத் தொகுத்துக் கூறியிருத்தல் ஈண்டறியத்தக்கது. (செந்தமிழ், Vol. I, பக். 197—203)

திருவள்ளுவனார் 'அகர முதலவெழுத்தெல்லாம்' என அகர முதலாகத் தொடங்கி 'கூடுதல்......பெறின்' எனத் தமிழிற் சிறந்த னகர வொற்றிறுதியாகக் கூறியது தமிழுக்குப் பொருந்தவைத்தமை குறித்ததாம். வடநூலில் வான்மீகிமுனிவரும், 'தபஸ்வாத்யாய ம... எனக் காயத்திரியின் முதலெழுத்தாகிய தகாரத்தால் ...ங்கி 'ஈயாத்' என்னும் காயத்ரியின் இறுதியாகிய தகரவொற்றால் ...தலான் தம் நூலைக் காயத்ரியின் அர்த்தமாகக் கொள்க என்பது குறித்தாற்போலக் கொள்க' என்பர். (செந்தமிழ் Vol. I பக் 248). இனி,வள்ளுவனார் வேதவேதாங்கங்களின் அரியபெரிய கருத்துக்களைத் தம் நூலுள் தொகுத்துக் கூறினரென்பதை 'வேதப் பொருளை விரகா லறிந்துலகோ, ரோதத் தமிழா லுரைசெய்தான்' என்னும் முன்னோர் கூற்றாலறியலாம். அவ்வாறே தமிழ்நூல்களுள், இவர் தொல்காப்பியத்தையே தமக்கிலக்கணமாகக்கொண்டு தம் நூலை இயற்றியவராவர். இதனை 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த, மறைமொழி தானே மந்திர மென்ப' என்னும் தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரத்தின் சொல்லும் பொருளுங்கொண்டு 'நிறைமொழி மாந்த ராணை ...த்து, மறைமொழி காட்டி விடும்' என்று கூறுதல்காண்க. இவ்வாறே அந்நிலைமருங்கி னறமுதலாகிய, மும்முதற் பொருட்கு முரிய வென்ப' எனத் தொல்காப்பியனார் பாக்களை வரையறை செய்த இலக்கணந் தழுவி யுரைத்தமையும் அறியத்தகும். நச்சினார்க்கினியரும் இச் சூத்திரத்தை எடுத்தோதி 'இக்கருத்தானே வள்ளுவனாரும் முப்பாலாகக் கூறி மெய்யுணர்தலால் வீடுபேற்றுக்கு நிமித்தங் கூறினார்' என்பர். 'கடலன்ன காம முழந்து மடலேறாப், பெண்ணிற் பெருந்தக்க தில்'

---

* ஆதிசாமான்யம் - தலைமையாகிய பொதுத்தன்மை; ஆப்தி சாமான் - வ்யாப்தியாகிய பொதுத்தன்மை.

(1137) என்பது 'எத்திணை மருங்கினு மகடூஉ மடன்மேற் பொற்புடை நெறிமை யின்மை யான' என்னும் சூத்திரநெறியிலே யுரைத்ததாகும். இன்னும், 'மாவு மாக்களும் ஐயறி வினவே, மக்க டாமே ஆறறி வுயிரே' எனத் தொல்காப்பியனார் மரபியலுட் கூறிய இலக்கணம் பிழையாது திருக்குறளிற் பல விடத்தும் மாக்கள் என்னுஞ் சொல்லை இழிந்தோர்க்கும் மக்களென்னுஞ் சொல்லை உயர்ந்தோர்க்கும் வள்ளுவனார் வழங்கி வருவர். 'கொலை வினையராகிய மாக்கள்' (329) 'செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்' (420) எனவும், 'மரம்போல்வர் மக்கட்பண் பில்லாதவர்' (997) 'மக்களே போல்வர் கயவர் (1071) எனவும் வருவனவற்றானறிக. இன்னும் இந்நூலின் அருமை பெருமைகளும் பிறவும் முன்னோர் உரைகளானும், நல்லறிஞர் ஆராய்ச்சிக் கட்டுரைகளானும் அறிந்து கொள்க.

'இனி, திருக்குறளில் வடமொழி வழக்குக்கள் பலவற்றைத் தெய்வப் புலவர் கூறுதல் போலவே வடமொழிப் பதங்கள் பலவும் ஆளுவர். இவற்றில், தற்சமமாகவும், தென்மொழியில் வழக்கு மிகுதியாகவுமுள்ள வடசொற்களை நீக்கிப் பார்த்தாலும் ஏறக்குறைய ஐம்பதுக்கு மேற்பட்ட சுத்த வடபதங்கள் காணலாம்' (குறள். மு. இராகவையங்கார் பதிப்பு—முகவுரை.)

இந்நூல் மேற் கணக்கு, கீழ்க் கணக்கு என்பனவற்றுள் கீழ்க் கணக்குநூல் பதினெட்டனுள் ஒன்றாகவைத்து எண்ணப்படுவதாம். கீழ்க்கணக்கின் இலக்கணத்தைப் பன்னிருபாட்டியல்முதலிய நூல்களானுணர்க. இவ்விலக்கணங்களினின்றும் கீழ்க்கணக்கு என்பது, சிலர் கருதியவாறு, சிறப்பின்மை பற்றி வழங்கியதன்று என்றும், அளவுபற்றி அவ்வாறு வகைபெற்றதென்றும் தெரியலாகும்.

III. பரிமேலழகர்

இவ்வரிய பெரிய நூலுக்கு உரையிட்ட பெரியோர் பதின்மர். இவ்வுரைகளுள், பரிமேலழக ருரையே பிற்பட்டதும், சிறந்ததுமாமென்பது நல்லறிஞர் பலரது கொள்கை. இப்பரிமேலழகர் தொண்டைநாட்டுக் காஞ்சீபுரத்தில் வசித்தவரென்பது தொண்டைமண்டல சதகத்தா லறியப்படும். இவரை அத்திருப்பதியிலுள்ள உலகளந்த பெருமாள் கோயில் அருச்சகர் மரபினர் என்பர். இவர் வேதவேதாங்கங்களையும், தமிழ் நூல்களையும் கரைகண்ட புலவர் பெருமானாதலால் தம் பெருமைக்கேற்பத் திருக்குறளுக்கு உரைசெய்யப்

புகுந்து, முன்பு பல்லோராலும் இயற்றப்பட்ட உரைகளிலமைந்த குற்றங்களைக் களைந்து அற்புதமானதோருரை இயற்றியருளினர். இவ்வுரையின் அருமை பெருமைகளைப் புகழ்ந்து,

"நூலிற், பரித்த வுரையெல்லாம் பரிமேலழகன்
தெரித்த வுரையாமோ தெளி"
"திருந்திய தமிழிற் றெய்வப் புலமை
அருந்திறல் வள்ளுவன் ஆய்ந்துதன் வாக்கால்
அறம்பொரு ளின்பம் வீடென நான்கின்
திறந்தெரிந் துரைத்த செவ்விழுப் பாலுக்கு
ஒருரை யின்றி யொன்பது சென்றும்
ஐயுற வாக நையுறு காலை
வள்ளுவன் மீளவும் வந்துதித் துலகோர்க்கு
உள்ளிய பொருளை யுரைத்தன னென்ன
... ...
... ...
விழுப்பொருள் தோன்ற விரித்தினி துரைத்தனன்"

என்று முன்னோர் கூறியவற்றால் நன்கறியலாம். இவர் பரிபாடலுக்கும் ஓர் சிறந்த உரை யியற்றியுள்ளார். பரிமேலழகர் என்ற இவர் பெயர்பற்றிச் சில வரலாறுகள் வழங்குவதுண்டு. பாண்டியன்முன் குறளுரைகள் சில அரங்கேறும்போது, அரசன் கட்டளைப்படி, வெண்கலப் பரிமேலிருந்து இவர் தம் உரைப்பொருளுரைக்க, அப்பரி இவரைக்கொண்டு ஊர்ந்து சென்றதென்றும், ஏனையோரை மேற்கொள்ளாது கீழே உதறி விலக்கியதென்றும், அதனால் இவர் இப்பெயர் பெற்றாரென்றும், இங்ஙனம் இவரோடு மாறுபட்ட உரையாளர் நச்சினார்க்கினியரென்றும் கதை கூறுவர். இவற்றுக்கு யாதோர் பிரமாணமும் இல்லை. இவர் மதம் வைணவமென்பதே பலர் கொள்கை. பிறர் பிறவாறுங் கூறுவர். இவர் சிறப்புப்பாயிரமாக அமைந்த தனிப்பாடலொன்றில் 'ஒக்கை காவலன்' என்று இவர் வழங்கப்பட்டிருத்தலால் இவரூர் ஒக்கை என்று தெரிகின்றது. இவ்வொக்கை எது என்பது தெளியக்கூடவில்லை. இவர் காலம் இற்றைக்கு அறுநூறாண்டுகட்கு முற்பட்டதெனச் சொல்லலாமென்பது, உமாபதி சிவாசாரியர் பாடிய வெண்பா ஒன்றைக் கொண்டு கருதப்படுகின்றது. (ஸ்ரீமத் மு. இராகவையங்கார் குறட்பதிப்பு, பக் 21). அபிதான கோசத்தில்

யாழ்ப்பாணம் ஆ. முத்துத்தம்பிப் பிள்ளையார்கள் இவருரையைப் பற்றி எழுதியன வருமாறு:—

'இவருரையிலே பொருள் வன்மையும், செஞ்சொற் சிறப்பும், இலக்கணங் கூறும் சாதுரியமும், விசேடவுரை தெரிக்கும் ஆற்றலும், மேற்கோளெடுத்துச் சித்தாந்தஞ் செய்யும் உபாயமும், பிறர்க்கெல்லாம் பல வசனங்களானன்றி அமையாத விஷயங்களைச் சில சொற்கொண்டு தெற்றெனக் காட்டும் பேராண்மையும், வடமொழிப் பதங்களைச் செந்தமிழ் மொழியாக்கும் அற்புத சாமர்த்தியமும், சொன்முட்டுற்று வடமொழிப் பதங்களை எடுத்தாளும் நல்குரவுடையார் போலாது செந்தமிழ்ச் சொற் செல்வமுடைமையும், வேதாகமவியாகரண சாஸ்திர புராணேதிகாச ஸ்மிருதி காவியாலங்காராதி வடநூற் பயிற்சியோடு முத்தமிழ்ப் பரப்பெலாம் முற்றவுணர்ந்து கூறும் நுண்புலமையும் நன்கு பெறப்படுகின்றன. பரிமேலழகர் யோகப் பயிற்சியுடையரென்றும், ஒவ்வொரு சொல்லுக்கும் சமாதியிலிருந்தே மெய்ப்பொருள் கண்டாரென்றுங் கூறி வருகின்றனர். இது அவருடைய உரையை ஊன்றி நோக்குந்தோறும் நம்பத்தக்கதாகின்றது' என்பதே. "இத்தகையன்றி யீசனதருளால், உய்த்துணர் வுடையதோர் உண்மையாளன்" என்று இவரைப்பற்றிய பாயிரம் கூறுவதும் மேற்கண்ட கருத்துடன் ஒப்பிடத்தக்கது. இவர்க்கு முற்பட்ட உரையாசிரியர்களுள், மணக்குடவர் இயற்றியவுரை இப்போது அச்சிடப்பட்டுள்ளது: இவ்வுரையினின்று, அதிகாரங்களுட் சிலவும் அவற்றுளடங்கிய குறள்களிற் பலவும் பரிமேலழகர் முறைவைப்பினின்று மாறுபட்டுள்ளன என்பது விளங்கும். இதனால் உரைப்போக்குக் கேற்ப உரையாசிரியர்களால் குறள்களின் முறைவைப்பு அமைக்கப்பட்டன என்பது அறியப்படும். இவ்வுரையேயன்றி வேறோருரையும் தமிழ்ப் பெரியார்சிலரிடத்து உளதென்று தெரிகின்றது. மற்றும் நூலைப்பற்றியும் ஆசிரியரைப்பற்றியும் அறிதற்குரிய விஷயங்களை அநுபந்தமாக இந்நூலிறுதியில் சேர்த்திருக்கும் மூன்றும் அட்டவணையுட் கண்ட நூல்களைக்கொண்டு அறியத்தக்கன.

ஸ்ரீ

ஆக்கியோன் முகவுரை

அரசாங்க உத்தியோகத்தினின்றும் நீங்கி ஓய்வுபெற்றிருக்கும் இக்காலத்தில், உலகினருக்குப் பயன்படும்படியான தொண்டு ஒன்றில் ஈடுபட வேண்டுமென்ற அவா எனக்குத் தோன்ற, சென்ற 1931 ஆம் ஆண்டில் "ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம்" என்னும் நூலைத் தமிழில் மொழிபெயர்த்து என் சொந்தசெலவில் பதிப்பித்துப் பலருக்கும் விலையின்றி வழங்கினேன். இது பக்தி மார்க்கத்தில் நிற்போருக்கு மிகவும் உதவியாயிருக்குமென்பதில் ஐயமில்லை.

ஒழுக்க மேம்பாட்டோடு விளங்கும் பக்தியே சிறப்புடைத்தாதலின், வாழ்க்கை முழுவதற்குமுரிய ஒழுக்க முறையை வகுக்கும் திருவள்ளுவரின் திருக்குறளைப் பொழிப்புரையோடு ஆங்கில மொழிபெயர்ப்பையும் சேர்த்துப் பதிப்பித்தால் பக்தியில் ஈடுபடும் பொது மக்களுக்கு ஒழுக்கத்தின் உயர்வை அறிந்து மேம்பாடடைதற்கு வழியுண்டு என்று நினைத்து இப்போது இத்திருக்குறட் பதிப்பை வெளிப்படுத்தியுள்ளேன். உள்ளிருள் நீக்கவல்ல மருந்தாய், இருவினைகளையும் ஒழிக்கவல்லதாய், "இதற்குரியாரல்லாதார் இல்" என்றபடி, எக்காலத்திற்கும், எந்நாட்டினருக்கும், எச்சமயத்தினருக்கும், எச்சாதியினர்க்கும், எந்நிறத்தாருக்கும் பொதுவான ஒழுக்கமுறையைப் போதிக்க வல்லதாய்ச் சாதி மத தேச மொழி நிற வேறுபாடுகளை வென்று தமிழ் நீதி நூல்களுக்கெல்லாம் தாயகமாய் விளங்கும் திருக்குறளின் பெருமையை அறியாதார் யார்? மேலும் திருக்குறளுக்கு அமைந்த ஆங்கில மொழிபெயர்ப்புகள் எல்லாம், மிகவும் உயர்ந்த விலைக்கு விற்கப்பட்டு வந்ததோடு இப்பொழுது கிடைப்பதற் கரியனவாயுமிருத்தலால், குறைந்த விலைக்கு, நல்ல பதிப்பு ஒன்றை ஆங்கில மொழிபெயர்ப்போடு பொது மக்களுக்கு அளிக்க முன் வந்துள்ளேன்.

திருவல்லிக்கேணி ஹிந்து உயர்தரக் கலாசாலைத் தலைமை தமிழ்ப் பண்டிதராயிருந்து ஓய்வுபெற்றுள்ள ஸ்ரீ. உ.வே. திருத்தேரி-இராகவா

சாரியர் அவர்கள் பொழிப்புரையில், எனக்கு உற்றதுணையாய் நின்று உதவிபுரிந்தார். இவருக்கு என் மனமார்ந்த நன்றி உரியதாகுக. மேலும் இந்நூல் அச்சாகி வரும்போது அவ்வச்சமயங்களில் பார்வையிட்டுக் கொடுத்தும் வேண்டிய உதவி புரிந்தும் வந்த இராசதானிக் கல்லூரி, தமிழாசிரியராகிய எனது நண்பர் S. ஆறுமுக முதலியார் B.A., L.T. அவர்களிடத்தும் நான் நன்றியறிவுள்ளவனுயிருக்கின்றேன்.

இந்நூலை கால நீட்டிப்பின்றி குறித்த காலத்துக்குள் மிகவும் உயர்ந்த முறையில் நன்றாய் அச்சிட்டுக் கொடுத்த மவுண்ட்ரோட் B. N. அச்சுக்கூட உரிமையாளருக்கும் என் நன்றியுரிமையாகின்றது.

ஆங்கில மொழி பெயர்ப்பு என்னுடைய எனது நண்பர்கள் B. L. அரங்கனாத ஐயர், M. A., R. ஸ்ரீநிவாச தேசிகன், M. A., அவர்களாலும் சேர்ந்து செய்யப்பட்டது.

ஒன்றுக்கும் பற்றாத சிறியேனை இத்தொண்டில் ஈடுபடுத்தித் தோன்றாத் துணையாயிருந்து என்னை ஊக்கிவந்த இறைவன் திருவருளை வழுத்துகின்றேன்.

திருவல்லிக்கேணி,
1—5—1933.

ஆ. அரங்கநாதன்.

திருக்குறள்

பாலியல் அதிகார அடைவு.

CONTENTS.

I. அறத்துப்பால்—On Virtue.

Chapter.			Page.
	பாயிரம்	**Introduction.**	
1.	கடவுள் வாழ்த்து	In praise of the Lord ...	
2.	வான் சிறப்பு	In praise of Rain ...	3
3.	நீத்தார் பெருமை	The Greatness of the Ascetics ...	5
4.	அறன்வலி யுறுத்தல்	The Glorification of Righteousness ...	8
	இல்லறவியல்	**Domestic Virtue.**	
5.	இல் வாழ்க்கை	Family Life ...	10
6.	வாழ்க்கைத்துணை நலம்	The Blessings of a Good Wife ...	13
7.	புதல்வரைப் பெறுதல்	Children ...	15
8.	அன்புடைமை	Love ...	17
9.	விருந்தோம்பல்	Hospitality ...	20
10.	இனியவை கூறல்	On kind words ...	22
11.	செய்ந்நன்றி யறிதல்	Gratitude ...	24
12.	நடுவு நிலைமை	Equity ...	26
13.	அடக்கமுடைமை	Self-Control ...	29
14.	ஒழுக்கமுடைமை	Purity of conduct ...	31
15.	பிறனில் விழையாமை	Not coveting another's wife	33
16.	பொறையுடைமை	Forbearance ..	36
17.	அழுக்காறாமை	Non-envying ...	38
18.	வெஃகாமை	Non-coveting ...	40
19.	புறங் கூறாமை	Refraining from back-biting	42
20.	பயனில சொல்லாமை	Refraining from idle talk ...	45
21.	தீவினையச்சம்	Dread of evil deeds ...	47
22.	ஒப்புரவறிதல்	Benevolence ...	49
23.	ஈகை	Charity ...	51
24.	புகழ்	In praise of glory ...	54

			Page.
	துறவறவியல்	**Ascetic Virtue.**	
25.	அருளுடைமை	Mercy ...	56
26.	புலால் மறுத்தல்	Refraining from eating flesh	59
27.	தவம்	Penance ...	61
28.	கூடா ஒழுக்கம்	Imposture ...	64
29.	கள்ளாமை	Absence of Fraud ...	66
30.	வாய்மை	Truthfulness ...	69
31.	வெகுளாமை	Abstaining from anger ...	71
32.	இன்னாசெய்யாமை	Non-Injuring ...	73
33.	கொல்லாமை	Non-Killing ...	76
34.	நிலையாமை	The instabilitity of all things	78
35.	துறவு	Renunciation ...	80
36.	மெய்யுணர்தல்	Realization ...	83
37.	அவா வறுத்தல்	The slaying of desire ...	85
38.	ஊழ்	Destiny ...	88

II. பொருட்பால்—On Wealth.

	அரசியல்	**The duties of a King**	
39.	இறைமாட்சி	The Greatness of a king ...	93
40.	கல்வி	Learning ...	96
41.	கல்லாமை	The Neglect of learning ...	98
42.	கேள்வி	Listening to the Wise ...	100
43.	அறிவுடைமை	Knowledge or Wisdom ...	103
44.	குற்றங் கடிதல்	Eschewing of faults ...	105
45.	பெரியாரைத் துணைக்கோடல்	Seeking the counsel of the Great ...	107
46.	சிற்றினஞ் சேராமை	On avoiding low company...	110
47.	தெரிந்து செயல்வகை	On acting with forethought	112
48.	வலி யறிதல்	On judging of strength ...	114
49.	காலம் அறிதல்	On seizing the opportune moment ...	117
50.	இடன்அறிதல்	On choosing the right place	120
51.	தெரிந்துதெளிதல்	Selecting trustworthy ministers ...	122
52.	தெரிந்து வினையாடல்	On selecting and employing men ...	124
53.	சுற்றந்தழால்	On cherishing one's kith and kin ...	127
54.	பொச்சாவாமை	Against forgetfulness ...	129
55.	செங்கோன்மை	On wielding the sceptre ...	131
56.	கொடுங்கோன்மை	Tyranny ...	134
57.	வெருவந்த செய்யாமை	Against the reign of terror...	136

			Page.
58.	கண்ணோட்டம்	Benignity ...	139
59.	ஒற்றாடல்	The employment of spies ...	141
60.	ஊக்க முடைமை	Unflagging energy ...	143
61.	மடியின்மை	Abstention from sloth ...	146
62.	ஆள்வினையுடைமை	Manly effort ...	148
63.	இடுக்கணழியாமை	Courage in the hour of gloom ...	150
	அங்கவியல்	The members of the Body Politic	
64.	அமைச்சு	The ministers of the state...	152
65.	சொல்வன்மை	Eloquence ...	155
66.	வினைத்தூய்மை	Purity of action ...	158
67.	வினைத்திட்பம்	Firmness of action ...	160
68.	வினைசெயல் வகை	Method of action ...	162
69.	தூது	The Ambassador ...	165
70.	மன்னரைச் சேர்ந்தொழுகல்	Conduct and service under the sovereign ...	168
71.	குறிப்பறிதல்	Divining the sovereign's mind ...	170
72.	அவை யறிதல்	Feeling the pulse of the king's council chamber ...	172
73.	அவை யஞ்சாமை	Fearlessness before the council ...	175
74.	நாடு	The Land ...	177
75.	அரண்	Fortresses ...	180
76.	பொருள் செயல்வகை	The Acquisition of wealth ...	182
77.	படை மாட்சி	In praise of the army ...	184
78.	படைச்செருக்கு	The Height of valour ...	187
79.	நட்பு	Friendship ...	189
80.	நட்பாராய்தல்	Searching for true friendship ...	192
81.	பழைமை	Close and fast friendship ...	194
82.	தீ நட்பு	Evil company ...	196
83.	கூடா நட்பு	False friendship ...	198
84.	பேதைமை	Folly ...	200
85.	புல்லறி வாண்மை	Ignorance ...	203
86.	இகல்	Enmity ...	205
87.	பகைமாட்சி	Hatred of the enemy ...	207
88.	பகைத்திறந்தெரிதல்	The nature of enmity ...	209
89.	உட்பகை	Hidden hate ...	212
90.	பெரியாரைப் பிழையாமை	Not offending the Great ...	214

		Page.
91.	பெண்வழிச் சேறல்	Submission to one's wife ... 216
92.	வரைவின் மகளிர்	Wanton women ... 219
93.	கள்ளுண்ணாமை	Against drunkenness ... 221
94.	சூது	Gambling ... 224
95.	மருந்து	Medicine ... 226
	ஒழிபியல்	**Miscellaneous**
96.	குடிமை	The nobility of birth ... 229
97.	மானம்	Honour ... 231
98.	பெருமை	Greatness ... 233
99.	சான்றாண்மை	Perfection ... 235
100.	பண்புடைமை	Courtesy ... 238
101.	நன்றியில் செல்வம்	Profitless riches ... 240
102.	நாணுடைமை	True modesty ... 242
103.	குடி செயல்வகை	Adding to the glory of the family ... 244
104.	உழவு	Husbandry ... 247
105.	நல்குரவு	Poverty ... 249
106.	இரவு	Begging ... 251
107.	இரவச்சம்	The dread of begging ... 254
108.	கயமை	Baseness ... 256

III. காமத்துப் பால்—On Love.

	களவியல்	**The Secret Union**
109.	தகையணங் குறுத்தல்	The aching of the heart ... 261
110.	குறிப்பறிதல்	On reading the signs of love 264
111.	புணர்ச்சி மகிழ்தல்	Love's embrace ... 267
112.	நலம் புனைந்துரைத்தல்	In praise of her beauty ... 270
113.	காதற் சிறப்புரைத்தல்	The glory of love ... 273
114.	நாணுத்துற வுரைத்தல்	The wild madness of love ... 276
115.	அலரறி வுறுத்தல்	On rumours afloat ... 278
	கற்பியல்	**Wedded Love**
116.	பிரிவாற்றாமை	The pangs of separation ... 281
117.	படர் மெலிந்திரங்கல்	Wailing in sorrow ... 284
118.	கண் விதுப்பழிதல்	Lack-lustre eyes ... 287
119.	பசப்புறுபருவரல்	The pallor of love ... 290
120.	தனிப்படர் மிகுதி	The anguish of a lone heart 292
121.	நினைந்தவர் புலம்பல்	Sighing for the absent one... 295
122.	கனவுநிலை யுரைத்தல்	The dreams of a love-laden heart ... 297

			Page.
123.	பொழுது கண்டிரங்கல்	Sighing at the approach of even tide ...	300
124.	உறுப்பு நலன்அழிதல்	Wasting away ...	303
125.	நெஞ்சொடு கிளத்தல்	Soliloquy ...	306
126.	நிறை யழிதல்	The loss of maiden modesty	309
127.	அவர் வயின் விதும்பல்	The yearning of lovers ...	311
128.	குறிப்பறி வுறுத்தல்	Divining the thoughts of each other ...	314
129.	புணர்ச்சி விதும்பல்	The longing for each other's embrace ...	317
130.	நெஞ்சொடு புலத்தல்	Chiding the heart ...	320
131.	புலவி	Sulks ...	323
132.	புலவி நுணுக்கம்.	Bickerings over trifles ...	326
133.	ஊடலுவகை	The charm of love quarrels	329

திருக்குறள்

மூலமும் உரையும், ஆங்கில மொழி பெயர்ப்பும்

அறத்துப் பால்

---

1. பாயிரம்

அதிகாரம்—1

கடவுள் வாழ்த்து

IN PRAISE OF THE LORD

எடுத்துக்கொண்ட காரியம் இடையூறின்றி இனிது முடிதற் பொருட்டுக் கடவுளை வாழ்த்துதல்.

1. *அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
பகவன் முதற்றே உலகு.

எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக உடையன; (அதுபோல), உலகம் ஆதிபகவனை (முதற் கடவுளை) முதலாக வுடையது.

Ă is the first stir in the world of sound: even so the Eternal Adorable One is the prime impulse of all creation. 1

2. *கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்*
நற்றாள் தொழாஅ ரெனின்.

மெய்யறிவுடைய கடவுளது நல்ல அடிகளை வணங்காராகில், பல நூல்களையுங் கற்ற மனிதர்க்கு, அக்கல்வி அறிவினால் உண்டாகிய பயன் சிறிதும் இல்லை.

Of what avail is one's vast learning, if one adores not the holy feet of Him who is the pure light of wisdom. 2

3. *மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்*
நிலமிசை நீடுவாழ் வார்.

அன்பரது நெஞ்சமாகிய தாமரை மலரில், அவர் நினைந்த உருவத்தோடு சென்று தங்குபவனாகிய கடவுளது பெருமை பொருந்திய திருவடிகளை இடைவிடாது நினைக்கின்றவர்கள், எல்லா உலகங்களுக்கும் மேலாகிய முத்தி உலகத்தில் அழிவில்லாமல் வாழ்வார்கள்.

Those who meditate day and night on the sacred feet of the Lord that abides in the lotus-shaped region of a devout heart shall endlessly inhabit the heavenly abode. 3

4. வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க் (கு)
யாண்டும் இடும்பை இல.

விருப்பும் வெறுப்பும் இல்லாத கடவுளது திருவடிகளை, இடைவிடாது சிந்திப்பவர்க்கு, எக்காலத்திலும் பிறவித் துன்பங்கள் உண்டாகா.

No ills of life ever touch those that cling to the feet of Him who is beyond the world of likes and dislikes. 4

5. இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

கடவுளது உண்மையான புகழை இடைவிடாது விரும்பிச் சொல்பவரிடத்து, அறியாமையால் வருகின்ற நல்வினை, தீவினையாகிய இருவினைகளும் உண்டாகா.

Deeds, good or evil, that spring from darkness shall not affect those who gloriously sing the praises of the Lord. 5

6. பொறிவாயில் ஐந் (து) அவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

ஐம்பொறிகளின் வழியாக எழும் ஐந்து வகை ஆசைகளையும் நீக்கின கடவுளது மெய்யான ஒழுக்க வழியிலே வழுவாது நின்றவர், பிறப்பில்லாமல் எக்காலத்திலும் ஒரு தன்மையராய் வாழ்வார்.

For ever do they dwell in eternal bliss that pursue the faultless way of Him who has burnt away the desires of the five senses. 6

7. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் (கு) அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது

ஒரு விதத்திலும் தனக்கு நிகரில்லாத கடவுளுடைய திருவடிகளையடைந்தவர்க்கேயல்லாமல், தமது மனத்தின்கண் உண்டாகும் துன்பங்களை நீக்கிக் கொள்ளுதல், மற்றெவராலும் முடியாது.

They alone are relieved of the eating cares of the mind, who take refuge in the feet of Him who is incomparable. 7

8. *அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் (கு) அல்லால்*
பிறவாழி நீந்தல் அரிது.

அறக்கடலாகிய கடவுளது திருவடியாகிய மரக்கலத்தைச் சேர்ந்தவர்க் கல்லாமல், அதனில் வேறாகிய பொருளும், இன்பமுமாகிய இருகடல்களை யுங் கடத்தல் முடியாது.

Impossible is the crossing of the sea of endless temptations of life, except by those who adore the feet of that Gracious Being who is the sea of virtue and glory. 8

9. கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்ளுதல் இல்லாத பொறிகள்போல, எண்குணனாகிய கடவுளது திருவடிகளை வணங்காத தலைகள் பயனில்லா தனவாம்.

Of what worth, like the palsied organs of sense, is the head that bows not before the feet of the Lord of the eight attributes. 9

10. *பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
இறைவன் அடிசேரா தார்.

கடவுளது திருவடியாகிய மரக்கலத்தைச் சேர்ந்தவர், பிறவியாகிய பெரிய கடலைக் கடப்பார்; அதனைச் சேராதவர் கடக்க மாட்டார்.

None but those who cleave to the feet of the Supreme can traverse the boundless ocean of births and deaths. 10

அதிகாரம்—2

வான் சிறப்பு

IN PRAISE OF RAIN

மழையின் சிறப்பைக் கூறுதல்

11. வானின் றுலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று.

மழையானது நீங்காமற் பெய்து நிற்க, உலகத்துயிர்கள் நிலைபெற்று வருதலால், அம்மழைதான் உயிர்களுக்கு அமிர்தமாகும் என்று கருதத் தக்கது.

By the unfailing fall of rain does the world subsist: therefore is it known as the ambrosia of all that breathes. 1

12. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

உண்பவர்க்கு நல்ல உணவுகளை உண்டாக்கி, அவ்வுணவுகளை உண்பவர்க்குத் தானும் உணவாய் இருப்பதும் மழையே ஆகும்.

All that is good and delicious, the rain yields to man and itself becomes part of his food. 2

13. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியன் உலகத்(து)
உண்ணின்று உடற்றும் பசி.

பெய்ய வேண்டுங் காலத்தில் மழை பெய்யாமல் பொய்க்குமானால், கடலால் சூழப்பட்ட பரந்த உலகத்திலே, பசிப்பிணி நிலைபெற்று, உயிர்களை வருத்தும்.

If rains should fail, famine would rage over the wide sea-girt earth. 3

14. ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

மழை என்கிற வருவாய், தன் பயன் குறையுமாயின், பயிரிடுவோர் கலப்பையால் நிலத்தை உழமாட்டார்.

No more would the farmers till their fields, if the springs of the heavens should go dry. 4

15. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

பெய்யாது நின்று கெடுப்பதும், அவ்வாறு கெட்டவர்க்குத் துணையாக நின்று பெய்து முன் கெடுத்தது போலவே, அவர்களை வாழ்விப்பதும் ஆகிய எல்லாம் செய்யவல்லது, மழையே யாம்.

It is the rain that causes ruin, and it is the rain again that restores the ruined to fortune. 5

16. விசும்பிற் றுளிவீழின் அல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

மேகத்தினின்றும் நீர்த்துளிகள் பூமியில் விழுந்தால் காணலாமே யன்றி, வீழாதாயின் அப்பொழுதே பசும்புல்லினது தலையையும் காணுதல் அரிது.

Not even a blade of grass will rustle, if rain drops not from on high. 6

17. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்.

மேகமானது, கடல் நீரைக் குடித்து அதனிடத்தில் திரும்பப் பெய்யாது விடுமானால், அளவில்லாத அந்தப் பெரிய கடலும், தனது வளத்திற் குறைந்து விடும்.

Even the treasures of the mighty ocean would diminish, if the clouds should cease to suck its waters and give them back in refreshing showers of rain. 7

18. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

மழை பெய்யாவிட்டால், தேவர்களுக்கும் இவ்வுலகத்தில் மனிதரால் செய்யப்படும் நித்திய நைமித்திய பூசைகள், நடவா.

Were the heavens to withhold their waters, there would be neither festivals, nor daily worship of the gods. 8

19. தானம் தவம் இரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

மழை பெய்யாதாயின், இந்தப் பெரிய உலகத்திலே, தானமும் தவமும் ஆகிய இரண்டு தருமங்களும் நிகழாமல் போய்விடும்.

If it rains not, there will be no alms-giving and austerities in this wide world. 9

20. நீரின் (று) அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின் (று) அமையா தொழுக்கு.

எவ்வகைப்பட்ட மேன்மை யுடையோர்க்கும், நீர் இல்லாமல் பொருள் இன்பங்களாகிய உலகியல் அமையா தென்றால், அந்நீர் இடையறாது ஒழுகும் ஒழுக்கும், மழையில்லாது நிகழாதாம்.

All functions and concerns of life cease without water, and there will be no flow of water without rain. 10

அதிகாரம்—3

நீத்தார் பெருமை

THE GREATNESS OF THE ASCETICS

முற்றத் துறந்த முனிவரது பெருமையைச் சொல்லுதல்.

21. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

தமக்குரிய ஒழுக்கத்தினிடத்தே தவறாது நின்று, உலகப் பற்றை முற்றும் துறந்த முனிவரது பெருமையே மிகவும் சிறந்ததென்று நூல்கள் துணிந்து கூறும்.

All the scriptures of the world rapturously sing with one voice, beyond every other blessing, the praise of those who have renounced all and stand true to their rule of conduct in scorn of consequence. 1

22. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

அகங்கார மமகாரம் ஆகிய இருவகைப் பற்றுக்களையும் துறந்தவரது மகிமையை அளவிட்டுக் கூறத்தொடங்கல், உலகத்திலே பிறந்து இறந்தவர்களது அளவைக் கூறத்தொடங்குவதுபோல, முடியாததாம்.

The greatness of an ascetic baffles one's understanding: you may as well count the number of the innumerable dead. 2

23. இருமை வகைதெரிந்து ஈண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு.

பிறப்பின் துன்பத்தையும், முத்தியின் இன்பத்தையும் ஆராய்ந்து அறிந்து, அப்பிறப்பை நீக்குதற்கு இம்மையிலேயே துறவறத்தை மேற்கொண்டவரது பெருமையே உலகில் சிறந்ததாகும்.

The roof and crown of all the things of this earth is nothing but the glory of those, who, having weighed this passing empty life with the one eternal beyond the grave, walk only in the path of righteousness that leads on to the far-off bliss of heaven. 3

24. உரனென்னும் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து.

அறிவு என்னும் அங்குசத்தினால் மெய், வாய், கண், மூக்கு, செவிகளாகிய யானைகள் ஐந்தையும் தத்தம் புலன்களின்மேல் செல்லாமல் தடுப்பவன், எல்லா நிலத்தினும் மேற்பட்ட முத்தியுலகத்துக்கு ஒரு விதை போல்வான்.

Verily he is a seed that can flourish in the soil of heaven who has subdued his rebellious senses with the titanic force of his will. 4

25. ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி.

புலன்களிற் செல்லுகின்ற ஐந்தாசைகளையும் ஒழித்த முனிவரது வலிமையை அறிந்து கொள்ளுதற்குப், பெரிய வானுலகில் உள்ள தேவர்களுக்குத் தலைவனாகிய இந்திரனே தகுந்த சாட்சியாவான்.

Indra, the lord of the gods on high is himself a witness to the might of him that has burnt away his five senses. 5

26. செயற்கரிய செய்வார் பெரியர்: சிறியர்
செயற்கரிய செய்க லாதார்.

ஒத்த பிறப்பினராகிய மனிதர்களிலே, செய்வதற்கு அரிய காரியங்களைச் செய்பவர், பெரியோர் ஆவர்; அவ்வரிய காரியங்களைச் செய்யத் திறமையற்றவர், சிறியோர் ஆவர்.

The great achieve the impossible; the low cannot. 6

27. சுவைஒளி ஊறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று சொல்லப்பட்ட பஞ்சதன்மாத்திரைகளது வகைகளை ஆராய்ந்து அறிபவனது அறிவினிடத்தே உலகம் உள்ளதாம்.

The infinite book of the secret of nature lies open only to those who are endowed with the gift of understanding the sensations of touch and taste, and sight and sound, and smell. 7

28. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

சாப அனுக்கிரக சக்தியையுடைய முனிவரது மகிமையை, இவ்வுலகில் அவர்கள் ஆணையிட்டுக் கூறிய மந்திரங்களே பிரத்தியட்சமாகக் காட்டிவிடும்.

The greatness of the sages of wisdom is known by their mighty words that act like the spell of a new prophecy and shape the destinies of men. 8

29. குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது.

துறவு, மெய்யறிவு, அவாவின்மை முதலிய நற்குணங்களாகிய மலையின் உச்சியில் நிற்கும் முனிவரது கோபமானது, தான் உள்ள அளவு கணப் பொழுதேயாயினும், கோபிக்கப்பட்டவராலே தடுத்தல் முடியாததாகும்.

The wrath of those who stand secure on the mountain heights of virtue, though lasting for a second, is so terrible and volcanic that the world can hardly resist. 9

30. அந்தணர் என்போர் அறவோர்: மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

எல்லா உயிர்களிடத்தும் உண்மையான அருளைச் செலுத்துவதையே தமக்குரிய கடமையாகக் கொண்டு நடத்தலால், அந்தணர் என்று சொல்லப்படுவோர் துறவறத்தினர் ஆவர்.

It is the virtuous that are called '*Anthanar*'; for it is they that scatter kindness towards all that breathes. 10

அதிகாரம்—4

அறன் வலியுறுத்தல்

THE GLORIFICATION OF RIGHTEOUSNESS

அறத்தின் வலிமையை உறுதியாகக் கூறுதல்.

31. சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்(கு)
ஆக்கம் எவனோ உயிர்க்கு.

ஒருவனுக்கு மோட்சத்தையும், சுவர்க்கம் முதலிய செல்வத்தையும் கொடுப்பது அறமே யாகும்; ஆதலின், அவ்வறத்தைக் காட்டிலும் மக்களது உயிர்களுக்கு மேன்மை தருவது வேறு எது?

It is the spirit of righteousness that flings open the doors of heaven and unlocks the treasures of the earth: what else does profit man more than righteousness? 1

32. அறத்தினூஉங்(கு) ஆக்கமும் இல்லை: அதனை
மறத்தலி னூங்(கு) இல்லை கேடு.

ஒருவனுக்கு, அறஞ் செய்தலின் மேற்பட்ட உயர்வைத் தருவதும் வேறில்லை; அதனை அறியாமையால் மறந்து விடுவதைக் காட்டிலும் மேற்பட்ட கேடு தருவதும் வேறு இல்லை.

To dwell in the spirit of the higher law of your being is life, but to forget it is death itself. 2

33. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாஞ் செயல்.

யாவரும் தத்தமக்கு இயன்ற அளவு இல்லறம், துறவறம் ஆகிய இரு வகை அறங்களையும் இடைவிடாமல் மனோவாக்குக் காயங்களால் செய்யக் கடவர்.

Be unwearied in your service in the cause of righteousness and pursue its spirit wheresoever it guides you. 3

34. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்:
ஆகுல நீர பிற.

அவ்வாறு அறஞ் செய்பவன், தனது மனத்தில் குற்றம் இல்லாதவனாகக் கடவன்; அஃதே அறத்தின் எல்லையாம்: மனத்தில் குற்றம் உடையனாய்ப் பேசும் பேச்சும், செய்யும் தொழிலும் அறம் ஆகாது; வேடமேயாம்.

Be spotlessly pure in your heart; verily everything is in this one commandment; all else is nothing but a vain show and a hollow symbol. 4

35. அழுக்கா(று) அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற(து) அறம்.

பிறர் உயர்வுகண்டு பொறாமையும், ஐம்புலன்கண்மேற் செல்லுகின்ற அவாவும், அவை காரணமாகப் பிறர்மீது தோன்றும் கோபமும், அதுபற்றி வருகின்ற கடுஞ்சொல்லும் ஆகிய இந்நான்கும் நீங்கி இடையறாது நடப்பதே அறத்தின் இயல்பாம்.

Steer clear of envy, lust, wrath and bitter speech in your short sojourn on earth; that is the only way to be virtuous. 5

36. அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க: மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.

இப்பொழுது, 'நாம் இளைஞரா யிருக்கின்றோம்; ஆதலின் இறக்குங் காலத்திலே செய்வோம்' என்று கருதிக் காலத்தைக் கழிக்காமல், அறத்தை எப்போதும் செய்யவேண்டும்; அவ்வாறு செய்த அறம் உயிர் உடலினின்று நீங்கும்போது அதற்கு அழியாத் துணையாகும்.

Act, act in the living present of the fleeting moments of life and crowd it with glorious acts of righteousness; for it is righteousness that is your surest guide in the dim borderland of life and death. 6

37. அறத்தா(று) இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ(டு) ஊர்ந்தான் இடை.

தருமத்தின் பயன் இன்னது என்பதை நூலினால் அறிய வேண்டியது இல்லை. சிவிகையின்மீது செல்வோன் இடத்திலும், அதனைச் சுமப்போன் இடத்திலும் கண்கூடாகக் காணலாம்.

Toil not through sacred books to know what the fruits of virtue are; but pause and look at the palanquin-bearer, and him that proudly rides in it. 7

38. வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழி யடைக்குங் கல்.

நாளை வீணாகக் கழிக்காமல் அறத்தை ஒருவன் செய்வானாயின், அச் செயல் அவன் மீண்டும் பிறக்கும் வழியை அடைக்கும் கல்லாகும்.

All through life pursue righteousness: you will find in your unwearied search a stone that blocks up the painful road to future births. 8

39. அறத்தான் வருவதே இன்பம்: மற் றெல்லாம்
புறத்த புகழும் இல.

இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பம் ஆகும்; பிறனில் விழைவு முதலாகப் பிறவழியில் வருவன வெல்லாம் இன்பமாகத் தோன்றினும், பின்பு துன்பத்திற் சேர்ந்தனவேயாம்; அதுவுமன்றி, அவை புகழைக் கொடுப்பனவும் அல்ல.

Verily that alone is delight which comes of the stern spirit of righteousness; all else brings in its train either pain or shame. 9

40. செயற்பால தோரும் அறனே: ஒருவற்(கு)
உயற்பால தோரும் பழி.

ஒருவனுக்குச் செய்தற்கு உரியது அறமே (நல்வினையே). நீக்குதற்கு உரியது தீவினையே யாகும்.

What is virtue but all the lovely things that must be accomplished on earth: what is vice but all the hideous forces of evil that we should abhor and resist with our very lives. 10

2. இல்லறவியல்

அதிகாரம்—5

இல்வாழ்க்கை

FAMILY LIFE

இல்வாழ்க்கையில் நின்று கற்புடைய மனைவியோடு கூடி வாழ்தல்

41. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கு
நல்லாற்றின் நின்ற துணை.

இல்லறத்தோடு கூடி வாழ்பவனென்று சிறப்பித்துச் சொல்லப்படுவோன், மற்றைய பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி என்னும் மூவர்க்கும் அவ்வவரது நல்லொழுக்கமாகிய ஆசிரமங்களில் நிலைபெறச் செய்யும் துணையாவான்.

The true householder is the mainstay of the student, the hermit and the ascetic. 1

42. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

ஆதரித்தவரால் விடப்பட்டுக் கதியற்றவர்க்கும், வறுமை அடைந்தவர்க்கும், வேறு கதியின்றித் தம்மிடம் வந்து இறந்தவர்க்கும் இல்லறத்தில் இருப்பவனே துணையாவான்.

Verily the householder is the friend of the orphan, the poor and the helpless dead. 2

43. தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தானென்றாங்(கு)
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.

பிதிரர்களும், தேவர்களும், அதிதிகளும், சுற்றத்தாரும், தானும் என்று சொல்லப்பட்ட ஐவகை இடத்தும் செய்தற்குரிய தரும வழியை வழுவாமல் செய்தல், இல்வாழ்வானுக்குச் சிறந்த அறமாகும்.

The greatest duty of the householder is to keep to the five-fold rule of conduct towards his departed, his gods, his guests, his kith and kin, and himself. 3

44. பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

பொருளைச் சம்பாதிக்கும்போது, பாவத்துக்குப் பயப்பட்டுச் சம்பாதித்து, முன் சொல்லப்பட்டவர்க்குப் பங்கிட்டுக் கொடுத்துத் தானும் உண்ணும் இல்வாழ்வானுடைய சந்ததியானது குறைதல் எந்நாளும் இல்லை.

Behold a god-fearing man that raises his fortune with an unspotted hand and joyously shares his bread with others; the glorious line of his descendants shall never wane. 4

45. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

ஒருவனது இல்வாழ்க்கையானது, தன் மனையாளிடத்துச் செய்யத் தகும் அன்பினையும், பிறர்க்குப் பங்கிட்டு உண்ணுதலாகிய அறத்தினையும் உடையதானால், அவ்வுடைமையானது அந்த இல்வாழ்க்கைக்குக் குணமும் பிரயோசனமும் ஆகும்.

If the light of love and virtue illumines a home, it becomes perfect and all its ends fulfilled. 5

46. அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவ(து) எவன்?

ஒருவன், இல்வாழ்க்கையை அதற்குரிய அறவழியிலே நடத்துவானா யின், அவன் அதற்கு வேறாகிய துறவறத்திலே சென்று அடையும் பயன் யாது உளது? (ஒன்றுமில்லை)

No need for a householder to yearn for other spheres of life, if he keeps the lustre of his soul undimmed amidst the ceaseless toil of his home. 6

47. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

இல்வாழ்க்கையிலே நின்று அதற்குரிய இயல்போடு கூடி வாழ்பவன் என்று சொல்லப்படுபவன், ஐம்புலன்களை விட முயற்சி செய்வார் எல்லாருள் ளும் மேற்பட்டவனாவான்.

Among those who labour for the life eternal, the greatest are those who lead a virtuous family life. 7

48. ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து.

தவஞ் செய்வோரையும் தமது வழியில் நடத்தித் தானும் அறநெறி நின்று நீங்காத ஒருவனது இல்வாழ்க்கையானது, அத் தவஞ் செய்வோரது நிலையைப் பார்க்கிலும் மிக்க பொறுமையை யுடையது.

Far holier, and more patient than the recluse is the householder who helps the hermits in the observance of their duties, and himself swerves not from virtue. 8

49. அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை: அஃதும்
பிறன்பழிப்ப(து) இல்லாயின் நன்று.

இருவகை அறங்களுள் நூல்களால் அறன் என்று சிறப்பித்துச் சொல் லப்பட்டது இல்வாழ்க்கையே; மற்றைத் துறவறமோ என்றால், அதுவும் பிறரால் பழிக்கப்படுவது இல்லையாயின், அவ்வில்வாழ்க்கையோடு ஒரு தன் மையதாக நன்று.

Virtue rightly belongs to the married life; and the other walks of life, if found blameless, due praise may claim. 9

50. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

இல்லறத்தோடு கூடி வாழும் இயல்பினால், மண்ணுலகத்துள் வாழ்பவன், மண்ணுலகத்தானே யாயினும், இங்குச்செய்யும் அறத்தினது பயனால், தேவருள் ஒருவனாகப் பிறந்து அனுபவிக்கப்படுவது நிச்சயமாதலின், அவன் விண்ணுலகத்திலிருக்கின்ற தேவருள் ஒருவனாக நன்கு மதிக்கப்படுவான்.

A god among men he will be looked upon, who fulfils the charities of home. 10

அதிகாரம்—6

வாழ்க்கைத்துணை நலம்

THE BLESSINGS OF A GOOD WIFE

இல்வாழ்க்கைத் துணையாகிய இல்லாளது நன்மை

51. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

இல்லறத்துக்குரிய நற்குண நற்செய்கைகளை யுடையளாகித் தன்னைக் கொண்ட கணவனது வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்பவள் அவ் வில்வாழ்க்கைக்குத் துணையாவாள்.

She is a good helpmate who possesses all the wealth of wifely virtues and spends not beyond the means of her husband. 1

52. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்.

இல்லறத்திற்குரிய நற்குண நற்செய்கைகள் ஒருவனது மனையாளிடத்தே இல்லையானால் அவ்வில்வாழ்க்கையானது செல்வத்தால் எவ்வளவு பெருமையை யுடையதா யிருந்தாலும் பயனில்லை.

All other blessings avail not, if the wife is devoid of household excellence. 2

53. இல்லதென் இல்லவள் மாண்பானால்: உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை.

ஒருவனுக்கு மனையாள், நற்குண நற்செய்கை யுடையவளாகில், அவனது இல்லின்கண் இல்லாத பொருள் யாது? அம்மனைவி அப்படிப் பட்டவளாகாதிருந்தால் உள்ளது யாது?

What is there that is lacking in the home that is sweetened by a worthy mate, and what would profit it, were it to be devoid of the charm of virtuous womanhood. 3

54. பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.

ஒருவன் பெறுதற்குரிய பொருள்களுள் மனைவியைப் பார்க்கிலும் உயர்வாகிய பொருள்கள் எவை இருக்கின்றன? அவளிடத்தே கற்பு என்னும் கலங்கா நிலைமை உண்டாயிருக்கப்பெற்றால்.

And what gift is more precious than a woman, who seeks strength in the citadel of her chastity? 4

55. தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

பிற தெய்வத்தை வணங்காளாகித், தனது தெய்வமாகிய கணவனை வணங்கா நின்றே நித்திரை விட்டு எழுந்திருப்பவள், மழையைப் பெய் யென்று சொல்ல அது பெய்யும்.

Even the clouds as they pass, the behests of a woman obey, who, rising with the sun, worships no other gods than her Lord. 5

56. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

கற்பினின்றும் வழுவாமல் தன்னைக் காப்பாற்றிக் கொண்டு, தன்னைக் கொண்டவனையும் உண்டி முதலானவற்றால் உபசரித்து, தம் இருவரிடத்தும் நன்மை அமைந்த புகழை நீங்காமல் காப்பாற்றி, நற்குண நற்செய்கைகளை மறவாதவளே பெண்ணாவாள்.

She is a wife who, keeping watch over herself, tends her husband with loving kindness and jealously guards the honour of her home. 6

57. சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

பெண்டிரைச் சிறையினாலே தலைவர் காக்கும் காவலானது என்ன நன்மையை யுண்டாக்கும்? அவர்கள் தமது நிறையால் தம்மைக் காத்துக் கொள்ளும் காவலே முதன்மையான காவல் ஆகும்.

Of what avail is your ceaseless watching and guarding ?; the surest armour of a woman is her own chastity. 7

58. பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

மகளிர் தம்மை விவாகஞ் செய்துகொண்ட கணவனைப் பூசிக்கும் பாக்கியத்தைப் பெற்றால், தேவர்கள் வாழ்தற்கு இடமாகிய உலகத்திலே, தேவரால் வணங்கப்படும் பெருஞ் சிறப்படைவர்.

In the world of the gods will be sung the glory of the lovely one who is true to him that has gained her as his bride. 8

59. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.

கற்பென்னும் கீர்த்தியை விரும்பிய மனைவியை இல்லாதவர்க்குத் தம்மை இகழ்ந்து பேசும் பகைவர் முன்னே ஆண் சிங்கம்போல நடக்கும் பெருமித நடை இல்லை.

Never can a man boast of the lion-like gait before his scornful foes, whose wedded wife leads a shameless life on earth. 9

60. மங்கலம் என்ப மனைமாட்சி: மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

அறிஞர், மனைவியின் நற்குண நற்செய்கைகளை ஒருவனுக்கு நன்மை என்றும், நல்ல புதல்வரைப் பெறுதலை அந்த நற்குண நற்செய்கைகளுக்கு நல்ல ஆபரணம் என்றும் கூறுவர்.

The wise deem the virtuous ways of a wife a blessing, and worthy offspring a good ornament of the home. 10

அதிகாரம்—7

புதல்வரைப் பெறுதல்

CHILDREN

நல்ல மக்களைப் பெறுதலினுடைய பயன்

61. பெறும்அவற்றுள் யாம்அறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே(று) அல்ல பிற.

ஒருவன் பெறும் பேறுகளுள் அறிய வேண்டியவற்றை அறியவல்ல புதல்வரைப் பெறுதலைக் காட்டிலும் சிறந்ததொன்று இருப்பதாக யாம் மதிப்பதில்லை.

Of all the blessings that men yearn for in life, we know not of any greater than that of begetting intelligent children. 1

62. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

பிறரால் பழிக்கப்படாத நற்குணங்களையுடைய புதல்வரை ஒருவன் பெறுவானாயின், அவனை ஊழ்வினையினால் உண்டாகிற எழுவகைப் பிறப்பிலும் துன்பங்கள் அடையமாட்டா.

Evil shadows not a man through all the maze of seven-fold births who is blessed with children of an unsullied name. 2

63. தம்பொருள் என்ப தம் மக்கள்: அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்.

தமது புதல்வரைத் தம்முடைய பொருள்கள் என்று கூறுவர் அறிந்தோர்; அப்புதல்வர் சம்பாதித்த பொருள்கள், தம்மைக் குறித்து அவர் செய்யும் நல்வினையினாலே, தம்பால் வருதலால்.

Verily do the wise look upon their children as their wealth, for, through the good deeds they do unto them, flows their fortune. 3

64. அமிழ்தினும் ஆற்ற இனிதே: தம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.

தம்முடைய மக்களது சிறிய கைகளால் துழாவப்பட்ட சோறானது, அல்லது இழிந்த வுணவாகிய கூழானது சுவையால் மிகுந்த உயர்ந்த அமிர்தத்தினும் மிகவும் இனிமையை யுடையதாகும்.

Sweeter to him than the food of the gods is the frugal soup playfully splashed by the tender hands of one's own children. 4

65. மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம்: மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.

ஒருவனது உடம்புக்கு இன்பமாவது, தம் மக்களது உடம்பைத் தொடுதல்; அவனது காதுக்கு இன்பமாவது, அவரது குதலைச் சொற்களையும் கற்றறிந்து கூறுஞ் சொற்களையும் கேட்டல்.

The touch of children makes us thrill with joy; their prattle sounds music in our ears. 5

66. குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.

தமது குழந்தைகளது மழலைச் சொற்களைக் கேளாதவர்கள், வேய்ங்குழலினது இசை இனியது, வீணையின் இசை இனியது என்று கூறுவர்; (கேட்டார் அங்ஙனங் கூறார்.)

Only to them the voice of the flute and the veena is sweet, who have not heard the lispings of their little ones. 6

67. தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

தந்தை மகனுக்குச் செய்யும் நன்மையாவது, கற்றோரது சபையில் அவரைக் காட்டிலும் மேற்பட்டிருக்கும்படி கல்விப் பயிற்சி செய்வித்தல்.

What duty is there more sacred for a father than to make his son worthy to adorn the highest seat in the council of the learned and the wise? 7

68. தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்(கு) எல்லாம் இனிது.

தம் மக்களது அறிவுடைமை, தந்தையாகிய தனக்குச் செய்யும் இன்பத்தைக் காட்டிலும் இப்பெரிய நிலவுலகத்தில் நிலைபெற்ற உயிர்களுக்கெல்லாம் செய்யும் மகிழ்ச்சி மிகப் பெரிதாகும்.

Far more than the parents doth the world delight in children who are wise. 8

69. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

தன்மகன், கல்வி கேள்விகளால் நிறைந்தவன் என்று அறிவுடையோர் சொல்லக் கேட்ட தாய், தான் அவனைப் பெற்ற காலத்தில் அடைந்த மகிழ்ச்சியினும் மிகுதியான மகிழ்ச்சியை யடைவாள்.

A mother's eyes sparkle with delight at the first cry of her infant son, but far greater is her joy when she hears the world call him wise. 9

70. மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல் எனும் சொல்.

தன்னைக் கல்வியுடையவனாகச் செய்த தனது தந்தைக்கு, மகன் செய்யும் பிரதியுபகாரமாவது, தனது அறிவு ஒழுக்கங்களைக் கண்டவர் 'இவனது தந்தை இவனைப் பெறுதற்கு எத்தகைய தவஞ் செய்தானோ?' என்று சொல்லும் சொல்லைப் பெறுதலாம்.

No deeper debt of gratitude does a son owe to his father than to make the world ring with a joyous cry, "What penance has he done to be blessed with such a worthy son," 10

அதிகாரம்—8

அன்புடைமை

LOVE

தன்னைச் சார்ந்த மனைவி, மக்கள் முதலியோரிடத்து விருப்பம் உடையனாதல்

71. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

அன்பினுக்கும் பிறரறியாமல் அடைத்து வைக்கும் தாழ் உண்டோ? இல்லை. ஏனெனில் தம்பால் அன்பு செய்யப் பெற்றவரது துன்பங் கண்ட போது அன்புடையாரது கண்கள் பொழிகின்ற அற்பமான கண்ணீரே உள்ளே இருக்கின்ற அன்பினை எல்லாரும் அறியக் காட்டும்.

Is there a bolt to fasten the gates of love? The tender tear-drops of the affectionate will proclaim to the world the love within. 1

72. அன்பிலார் எல்லாம் தமக்குரியர்: அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

அன்பில்லாதவர், தமது பொருள்களைப் பிறர்க்கு உதவாமல் தமக்கே பயன்படும்படி செய்துகொள்வர்; அன்புடையவரோ அப்பொருள்களையே யன்றித் தமது உடம்பையும் பிறர்க்கு உரியனவாகச் செய்வர்.

Full of themselves do the loveless tread on earth, but even his very bones the lover brings to the altar of service. 2

73. அன்போ(டு) இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ(டு) இயைந்த தொடர்பு.

பெறுதற்கரிய மக்கள் உயிர்க்கு, உடலோடு உண்டாகிய சம்பந்தம் எதற்கெனில், அன்பு செய்தற் பொருட்டேயாம் என்று அறிஞர் கூறுவார்கள்.

Only to weave an eternal bond of love and affection does the soul again and again enter her tabernacle: for has not life's long pilgrimage its fruition in endless love? 3

74. அன்பீனும் ஆர்வம் உடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு.

சுற்றத்தாரிடத்தே செய்யும் அன்பானது பிறரிடத்தும் விருப்பத்தை யுண்டாக்கும். அவ்விருப்பமுடைமை, இவனுக்கு யாவரிடத்தும் பகையும் உதாசீனமும் இல்லாத சிறந்த நட்பினைத் தரும்.

Love of home begets tenderness to all; and tenderness grows into the priceless jewel of the brotherhood of man. 4

75. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்(து)
இன்புற்றார் எய்தும் சிறப்பு.

இவ்வுலகத்திலே இல்வாழ்க்கையில் நின்று இன்பத்தை அநுபவித்தவர், மறுமையில் அடையக்கூடிய பேரின்பமானது, அன்புடையவராய் இல்லறத்தில் ஒழுகிய ஒழுக்கத்தின் பயனேதான் என்று அறிஞர் கூறுவர்.

What are the joys of heaven but the reward of our unbroken love on earth? 5

76. அறத்திற்கே அன்புசார்(பு) என்ப: அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

அறியாதார் சிலர், அன்பானது அறத்திற்கே துணை என்று சொல்லுவர். அவ்வன்பே மறத்தை நீக்குவதற்கும் தக்க துணையாகும்.

Ignorant are they who hold that love is an ally to virtue alone, for even against the evils of the world, it is our only shield and armour.

77. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.

வெயிலானது எலும்பில்லாத உடலையுடைய புழு முதலியவற்றை வருத்துதல்போல, அறக்கடவுள் அன்பில்லாத உயிரை வருத்தும்.

Behold how the sun scorches the worms that yonder creep and crawl; even so the wrath of the God of righteousness comes down upon the unloving. 7

78. அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

மனத்தில் அன்பில்லாத உயிர், இல்லறத்தோடு கூடி வாழ்தல், வன்மையை யுடைய நிலத்தில் பட்டுப்போன மரம் தளிர்த்தது போலும்! (கூடாதென்பதாம்).

And behold a loveless heart dreaming of the blessings of home; it is like the fond dream of a withered tree breaking into leaves on the dry sands of a desert. 8

79. புறத்துறுப்(பு) எல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்(பு) அன்பில் அவர்க்கு.

உடம்பிற்குள்ளே நிற்பதாயும் இல்லறத்திற்கு உறுப்பாகியுமுள்ள அன்பு இல்லாதவர்க்கு, உடம்பின் புறத்தே உள்ள இடம், பொருள், ஏவல் என்னும் உறுப்புக்கள் அவ்வறச் செயலில் என்ன உதவி செய்யும் ?

Of what avail is the rounded perfection of a stately form, if love be not enthroned in the heart. 9

80. அன்பின் வழியது உயிர்நிலை: அஃதிலார்க்(கு)
என்புதோல் போர்த்த உடம்பு.

அன்போடு பொருந்திய உடலே உயிர்நின்ற உடம்பாகும்; அவ்வன் பில்லாதவர்க்குள்ள உடம்புகள் எலும்பைத் தோலினால் மூடப்பெற்ற (உயிரில்லா) உடல்களாம்.

Life throbs only with the warmth of love; verily he is a bundle of bones clad with skin who has not drunk of the springs of love. 10

அதிகாரம்—9

விருந்தோம்பல்

HOSPITALITY

விருந்தினரை உபசரித்தல்

81. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

வனத்திற்குச் செல்லாது, மனைவியோடும் வீட்டிலிருந்து பொருள்களைக் காப்பாற்றி வாழும் செய்கையெல்லாம், வந்த விருந்தினரை உபசரித்து அவர்க்கு உதவிசெய்தற் பொருட்டேயாம்.

What keeps alive the endless toil of the home of the wise? It is the love of the guests and pilgrims that seek shelter under its roof. 1

82. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

உண்ணப்படும் பொருள் அமிர்தமே ஆயினும், தன்னை நோக்கி வந்த விருந்தினரைத் தன் வீட்டின் புறத்தே இருக்கச் செய்துவிட்டு, தான் மாத்திரம் தனியாக அதனை உண்ணுதல் விரும்பப்படும் தருமம் அன்று.

What though our festive board is crowned with the rich wine of the gods when our guests hungrily wait at our doors? 2

83. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

தனது வீட்டிற்கு வரும் விருந்தினரை நாடோறும் உபசரித்து வருபவனது இல்வாழ்க்கையானது, தரித்திரத்தினால் பீடிக்கப்படுவதில்லை. (இறைத்த கிணறு சுரக்கும்).

Is there a home that falls on evil days which is hallowed by the presence of the guests that daily pour in? 3

84. அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்(து) ஓம்புவான் இல்.

முகமலர்ச்சியுடையனாய்த் தக்க விருந்தினரை யுபசரிப்பவனுடைய வீட்டின்கண், திருமகள் மனமகிழ்ச்சியுடன் வாழ்வாள்.

Lovingly the Goddess of wealth ever adorns with her gracious presence the hearths and homes of those, who honour their guests with a countenance decked in smiles. 4

85. வித்தும்இடல் வேண்டுங் கொல்லோ? விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.

தனது வீட்டிற்கு வந்த விருந்தினரை முன்னதாக உண்பித்து, அதன் பின் மிகுந்ததை உண்ணுபவனது விளை நிலத்திற்கு, விதை விதைத்தலும் வேண்டுமோ? வேண்டா! தானே விளையும்.

Even unsown, the fields of him rustle with the rich waves of corn that first regales his guests and then feeds on what remains. 5

86. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

தன்னிடம் வந்த விருந்தினரை உபசரித்து, பின் வரும் விருந்தினரை எதிர்பார்த்துத்தான் அவரோடு உண்ணக் காத்திருப்பவன், மறுபிறப்பில் தேவனாய், தேவர்களுக்கு நல்ல விருந்தாவான்.

Thrice welcome is he unto the gods on high who tending his assembled guests, wistfully waits for more. 6

87. இனைத்துணைத்(து) என்பதொன்(று) இல்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

விருந்தினரை உபசரித்தலாகிய வேள்வியினது பயன், இன்ன அளவினையுடையதென்பதில்லை; அவ்விருந்தினரின் தகுதியளவே அதற்கும் அளவாம்.

Vainly does man measure the fruit of kindly acts done. Behold it is the worth of the guest that is the touchstone of our sacrifice; (for who knows we may be entertaining angels unawares?) 7

88. பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

நிலையில்லாத பொருளைக்கொண்டு விருந்தினரை உபசரித்தலாகிய வேள்வியைச் செய்து பின், அதன் நிலையுள்ள பயனை யடையும் பேறு இல்லாதவர்கள், 'அப்பொருளை வருந்திக் காத்திருந்தும் அதன் பயனையடையாது இழந்துவிட்டோமே' என்று வருந்துவார்கள்.

"Oh! I am undone and forsaken; would to God I had spent my all on acts of kindness and of love to strangers that crossed my doors" is the remorseful cry of an unloving heart. 8

89. உடைமையுள் இன்மை விருந்தோம்பல்; ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.

செல்வத்துள் வறுமையாவது, விருந்தினரை உபசரியாது இகழும் பேதைமையே. அப்பேதைமை அறிந்தோரிடத்து இராமல் அறிவில்லாதவரிடத்தே உளதாம்.

Verily there is indigence in the midst of the opulence of a fool who is not alive to the charities of home. 9

90. மோப்பக் குழையும் அனிச்சம்; முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

அனிச்சமலர் மோந்தபின்பே வாடிப்போகும். விருந்தினரோ தம்மை உபசரிப்பவர் முகம் வேறுபட்டு நோக்கிய வுடனே வாட்டம் அடைவர்.

The anicha flower fades and faints before the breath of man; even so does a heart sink within itself that meets the cold unwelcome look of the host. 10

அதிகாரம்—10

இனியவை கூறல்

ON KIND WORDS

மனத்திலுள்ள மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் இனிய சொற்களைச் சொல்லுதல்

91. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார் வாய்ச் சொல்.

இனிய சொற்களாவன, அன்பை வெளிப்படுத்துவனவாயும், வஞ்சனை யில்லாதனவாயும் அறத்தினை யுணர்ந்தவரது வாயினின்றும் தோன்றும் சொற்களாம்.

What are sweet words but the guileless utterance of the love of a mighty heart that has seen the light of truth? 1

92. அகன்அமர்ந்(து) ஈதலின் நன்றே முகனமர்ந்(து)
இன்சொலன் ஆகப் பெறின்.

கண்டவுடனே முகமலர்ந்து இனிய சொற்களைச் சொல்லும் தன்மையை உடையவனாகப் பெற்றால், அது மனமகிழ்ந்து ஒருவருக்கு வேண்டிய பொருளைக் கொடுப்பதினும் சிறந்ததாம்.

Lovelier than the gift flowing out of the fulness of heart is a kind word that graces the lips of a cheerful one. 2

93. முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்.

தன்னை நோக்கி வருபவரைக் கண்டபொழுதே முகத்தால் விரும்பி, இனிதாக நோக்கிப் பின் நெருங்கிய விடத்து வஞ்சனையில்லாத மனமொன்றிய இனியசொற்களைச் சொல்லுதலி னிடத்தே யுள்ளது, அறமாம்.

Where there is a gracious smile, a kindly look, and a sweet word gushing out from a heart sincere, there righteousness has its solemn throne. 3

94. துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொல் அவர்க்கு.

எல்லாரிடத்தும் இன்பத்தை மிகுவிக்கும் இனிய சொற்களைச் சொல்லும் இயல்பை யுடையவர்க்குத் துன்பத்தை விருத்தி செய்யும் வறுமை இல்லையாம்.

Poverty, that aggravates man's woes, never clouds the happiness of one who utters words that breathe gladness to all. 4

95. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்(கு)
அணி: அல்ல மற்றுப் பிற.

ஒருவனுக்கு அணிகலமாவது, பெரியோர்பால் வணக்கமுடையனாய், யாவரிடத்தும் இனியவை கூறுபவனாயும் இருத்தல்; இவ்விரண்டுமன்றி உடம்பில் அணியும் ஆபரணங்கள் அணிகலமாகா.

Humility and sweetness of speech are the twin ornaments a man can boast of on earth. 5

96. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

ஒருவன், பொருளால் பிறர்க்கு நன்மைதரும் சொற்களை மனத்தினால் ஆராய்ந்து இனிமையாகச் சொல்லுவானாயின், அவனுக்குப் பாவங்கள் குறைந்துவரப் புண்ணியம் வளரும்.

In him does the force of evil decline and seeds of God-like virtue grow, who hungering for righteousness sweetly does speak. 6

97. நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

பொருளினால் பிறர்க்கு நன்மையைக் கொடுத்து இனிமைக் குணத்தினின்றும் நீங்காத சொல்லானது, ஒருவனுக்கு இம்மையில் நீதியையும், மறுமையில் அறத்தையும் தரும்.

Do you know what kindles the spark of righteousness in man and lights up the path beyond his grave? It is the kind word that scatters peace and good-will to all mankind. 7

98. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பந் தரும்.

பொருளால் பிறர்க்கு மனவருத்தஞ் செய்யாத இனிய சொற்கள், இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தைத் தரும்.

Blessings await a man both in heaven and on earth from whose lips do tenderly fall artless words. 8

99. இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

பிறர் தன்னிடத்துக் கூறும் இனிய சொற்கள், தனக்கு இன்பந் தருவதை அநுபவமாய் அறிகின்றவன், தான் பிறரிடத்து வன்சொற்களைச் சொல்லுவது எதன் பொருட்டு ?

What would it profit a man to be bitter of tongue who has seen eyes sparkle with delight at the gentle dew-drops of speech? 9

100. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

அறத்தைத் தரும் இனிய சொற்கள் தன்னிடத்து இருக்கையில் அவற்றைக் கூறாது பாவந்தரும் கடுஞ்சொற்களை ஒருவன் கூறுதல், இனிய பழங்கள் தன் கையில் இருக்கையில் அவற்றைத் தின்னுமல், இனிமை இல்லாத காய்களைத் தின்னுவதற்குச் சமானமாகும்.

Behold the man that is harsh of tongue oblivious of the charms of pleasant discourse. He is like one yearning for unripe fruits, while clusters of mellow ones do adorn his cottage wall. 10

அதிகாரம்—11

செய்ந்நன்றி யறிதல்

GRATITUDE

தனக்குப் பிறர்செய்த நன்றியை மறவாமை

101. செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

தான் முன்பு ஓர் உதவியும் செய்யாதிருக்கத், தனக்கு மற்றொருவன் செய்த உதவிக்கு, மண்ணுலகமும் விண்ணுலகமும் கைம்மாருகக் கொடுத்தாலும் ஈடாகாது.

All the riches of the sky and the earth are too poor a recompense for an act of kindness from an unknown hand. 1

102. காலத்தினுற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

ஒருவனுக்கு ஆபத்து வந்த காலத்தில், ஒருவன் செய்த உதவிப் பொருள் சிறியதாய் இருந்தாலும், காலத்தை நோக்கும்போது அப்பொருள் நிலவுலகத்தினும் மிகப் பெரிதாம்.

A gleam of favour, however little, dawning on us in the hour of need transcends the glory of the world. 2

103. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

பிரதியுபகாரத்தை விரும்பாமல் ஒருவர் செய்த உபகாரத்தின் அன்பை ஆராயின் அவ்வன்பின் நன்மையானது கடலினும் பெரிதேயாம்.

A benefit conferred without any thought of reward outweighs the treasures of the deep. 3

104. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

தமக்குத் தினையளவாகிய உபகாரத்தை ஒருவன் செய்தாலும், அதனைச் சிறிதாக எண்ணுமல் பனையளவினதாகக் கொள்வர், அக்கருத்தின் (உதவியின்) பயனை யறிந்த பெரியோர்.

In the eyes of the discerning, the gift small as a mustardseed, looms large like a stately palm. 4

105. உதவி வரைத்தன்(று) உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

கைம்மாருகச் செய்யும் உதவி, காரணம், பொருள், காலம் என்னும் மூவகையானும் முன்செய்த உதவியின் அளவினது அன்று; ஆனுல் அவ்வுதவி செய்யப் பெற்றுக் கொண்டவரது தகுதியின் அளவாகும்.

Rarely does the kindly act rendered a measure of its own worth prove; it is the nobility of the soul of the receiver that fathoms it. 5

106. மறவற்க மாசற்ருர் கேண்மை: துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.

அறிவு, ஒழுக்கங்களில் குற்றமில்லாதவரது சிநேகத்தை ஒருவன் மறவாதிருக்கக்கடவன்; அங்ஙனமே துன்பக்காலத்திலே தனக்கு உதவி செய்தவரது நட்பையும் விடாதிருக்கக் கடவன்.

Seek the fellowship of the holy ones; forsake not those who have clung to you in the days of your affliction. 6

107. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு.

நல்லோர், தமக்கு உண்டாகிய துன்பத்தை உதவி செய்து நீக்கினவரது நட்பை, வினையால் வரும் எழுவகைப் பிறப்பின் எழு தலைமுறைகளிலும் மறக்கமாட்டார்கள்.

Through all their wanderings from birth to birth do the wise carry the sacred memory of those who have wiped out their sorrows on earth. 7

108. நன்றி மறப்பது நன்றன்று: நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று.

பிறன், தனக்குச் செய்த நன்மையை மறப்பது ஒருவனுக்குத் தருமம் அன்று; ஆனால் அவன் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிடுதல் அறமாகும்.

It is good to chase away at once the rankling thought of an injury received, but to forget an act of kindness is ignoble. 8

109. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.

தனக்கு முன்பு ஒரு நன்மை செய்தவர், பின்பு கொலைக்குச் சமானமாகிய தீமைகளைச் செய்தாலும், அவை யாவும் அவர் செய்த நன்மை ஒன்றினையும் நினைக்க இல்லையாகும்.

The sting of the deadliest harm done is gone when the soul lovingly recollects one former act of grace of the miscreant. 9

110. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்: உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

எவ்வகைப்பட்ட பெரிய அறங்களை அழித்தவர்க்கும், அவ்வழிவினால் உண்டாகும் பாவத்திற்குப் பரிகாரம் உண்டு; தனக்கு ஒருவன் செய்த உபகாரத்தை மறந்தவனுக்கு, அப்பாவத்தை நீக்கிக்கொள்ள வழி இல்லை.

There is still hope left for men guilty of every other crime, but the ungrateful are past redemption. 10

அதிகாரம்—12

நடுவு நிலைமை

EQUITY

பகைவர், அயலார், நட்பினர் ஆகிய மூவகையோரிடத்தும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமை.

111. தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட் டொழுகப் பெறின்.

பகைவர், நண்பர், அயலார் என்னும் மூவகையோரிடத்தும் முறைமை தவறாது ஒழுகுவானாயின், நடுவு நிலைமை என்னும் அறம் ஒன்றே நலந் தருவதாம்.

The crown of a man's virtue is the uprightness of his unbiassed soul. 1

112. செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற்(கு) ஏமாப் புடைத்து

நடுவு நிலைமை உடையவனது செல்வம், பிறர் செல்வம் அழிதல் போல அழியாது, அவன் சந்ததியார்க்கும் சேமத்தைத் தரும்.

It is only the wealth of the just that undiminishingly flows down to generations yet unborn. 2

113. நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

தீமையைத் தராமல் நன்மையையே தருவதாயினும், நடுவு நிலைமை ஒழிதலால் வரும் செல்வத்தை அப்பொழுதே நீக்கி விடுக.

Spurn ill-gotten gains, though nothing but profit may accrue from them. 3

114. தக்கார் தகவிலர் என்ப(து) அவர்அவர்
எச்சத்தால் காணப் படும்.

இவர் நடுவு நிலைமையை யுடையவர், இவர் அஃதில்லாதவர் என்னும் வேறு பாட்டினை, அவரவர்க்கு நன்மக்கள் இருத்தலானும், இல்லாமையா லும் அறியத்தகும்.

The noble and the wicked are known by their progeny. 4

115. கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்(கு) அணி.

கேடும், ஆக்கமும் யாவர்க்கும் வருதற்குக் காரணம் பழவினையே; (பட்சபாதத்தைக் கொள்வதனுல் கேடுவராமல் தவிர்தலாவது, பெருக்கத் தைப் பெறுதலாவது உண்டாகா என்பதை அறிந்து) அவை காரணமாக மனத்தில் பட்சபாதமில்லாதிருத்தல், நிறைந்த அறிவையுடையோர்க்கு அழ காகும்.

Loss and gain are common unto the race, but a constant heart is the glory of the wise. 5

116. கேடுவல் யான்என்ப தறிக: தன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்.

ஒருவன், தன் மனம் நடுநிலை நீங்கப்பெற்று நடுவு நிலைமையல்லாத வற்றைச் செய்ய நினைப்பானாயின், அந்நினைவே தான் கெடுதற்கு அறிகுறி என்று உணரக்கடவன்.

The creeping thought of iniquity portends the ruin of a soul. 6

117. கெடுவாக வையா(து) உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

நடுவு நிலைமையில் நின்று, தருமவழியில் நிலைபெற்றவனது வறுமையை, வறுமையென்று, எண்ணார் உயர்ந்தோர்.

Poverty of the just is no badge of disgrace to the wise. 7

118. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்(கு) அணி.

முன்னே தான் சமனாக நின்று, பின்பு தன்னிடத்தில் வைத்த பொருளின் அளவை எடுத்துக்காட்டுகின்ற தராசைப்போல, தமக்குரிய லக்ஷணங்கள் நிறைந்து, பின் ஒரு பக்கத்தில் சாயாமலிருப்பதே அறிவுடையார்க்கு அழகாகும்.

The boast of the wise is a mind steady as the well-poised pair of scales. 8

119. சொற்கோட்டம் இல்லது செப்பம்: ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்.

ஒருவன், தன் மனத்தினிடத்தே பக்ஷபாதம் இல்லாமையை உண்மையாக அடையப்பெற்றால் அதுவே சொல்லினிடத்தும் நடுவு நிலைமையின் இருப்பைக் காட்டும்.

Where does justice reside, but in measured words springing from an upright heart within ? 9

120. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்.

பிறர் பொருளையும் தம் பொருள்போலவே கருதிப் பிறர்க்கும் நஷ்டமுண்டாக்காமல் தாமும் சிறிது லாபம் பெறுமாறு செய்வதே வர்த்தகமாம்.

He is a thriving trader among his tribe, who jealously guards others interests as his own. 10

அதிகாரம்—13

அடக்கமுடைமை

SELF-CONTROL

மனம், மொழி, மெய்கள் என்ற மூன்றும் தீயவழியிற் செல்லாமல் அடங்குதலுடையவனாதல்.

121. அடக்கம் அமரருள் உய்க்கும்: அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

ஒருவனை, அடக்கமாகிய தருமம், மறுமையில் தேவருலகத்தில் செலுத்தும்; அடங்காமையாகிய பாவம், தங்குதற்கு முடியாத இருளாகிய நரகத்தில் செலுத்திவிடும்.

Self-control leads to sovereign power and makes the son of man one with the immortals, but an ill-governed passion hurls him down into the shades of endless gloom. 1

122. காக்க பொருளா வடக்கத்தை யாக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு

மக்களுயிர்க்கு, அடக்கத்தைக் காட்டிலும் சிறந்த செல்வப் பொருள் வேறில்லை; ஆதலால் அவ்வடக்கத்தை நன்மைதரும் பொருளாகக்கொண்டு அழியாமற் காக்கவேண்டும்.

Guard as your very treasure the power of self-control; life has no greater gain on earth. 2

123. செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்(து)
ஆற்றின் அடங்கப் பெறின்

அடங்குவதே நமக்கு அறிவாவது என்று உணர்ந்து, திரிகரணத்தாலும் ஒருவன் அடங்கி நிற்கப் பெறுவானானால், அந்த அடக்கம் நல்லோரால் அறியப்பட்டு, அவனுக்குப் புகழை உண்டாக்கும்.

Endless glory unto the man who knows that self-control leads to wisdom and practises it in the manner of the prophets of old. 3

124. நிலையிற் றிரியா(து) அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

இல்வாழ்க்கையாகிய தனக்குரிய நிலைமையினின்று மாறுபடாமலிருந்தே அடங்கினவனது உயர்ச்சி, மலையினுயர்ச்சியை விட மிகப் பெரிது.

More imposing than the grandeur of a mountain is the bearing of a soul, that swerving not from the path of duty, subdues its rebellious senses. 4

125. எல்லார்க்கும் நன்றாம் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

செருக்கில்லாமல் அடங்கியிருப்பது எல்லார்க்கும் (கல்வி, குடிப்பிறப்பு, செல்வம் என்ற இவற்றையுடைய மூவகையார்க்கும்) பொதுவாக நல்லதாயிருப்பினும், மற்ற இருவரினும் செல்வரிடத்தே அப்பணிவு மற்றொரு செல்வம்போன்று சிறந்து விளங்கும்.

There is a goodness and a grace in our humility, but it crowns anew fortune men. 5

126. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு டைத்து.

ஆமை, தன் ஐந்து உறுப்புக்களையும் துன்பம் நேராமல் அடக்கிக்கொள்வதுபோல ஒருவன், ஒரு பிறப்பிலே ஐம்பொறிகளையும் பாவம் நேராதபடி அடக்க வல்லனாயின், அஃது அவனுக்கு எழு பிறப்பின் கண்ணும் துன்பந் தராமல் பாதுகாத்து இன்பந்தரும்.

The heroic heart that, like a tortoise, stills the tumult of the senses in the vast silence of its being, carries, through all its round of births, a shield against the slings and arrows of fortune. 6

127. யாகாவா ராயினும் நாகாக்க: காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

தம்மால் அடக்குதற்குரிய எல்லாவற்றையும் அடக்க முடியாதவராயினும், நா ஒன்றனையேனும் அடக்கக் கடவர். அதனை அடக்காவிட்டால் சொற் குற்றத்திலே அகப்பட்டுத் தாமே துன்புறுவர்.

You may keep open all the other doors of the senses, but beware of an unbridled tongue ; for through its very slip remorse enters the soul. 7

128. ஒன்றானும் தீச்சொற் பொருட்பய னுண்டாயின்
நன்று ஆகா தாகி விடும்.

தீயவாகிய சொற்களின் பொருள்களால் பிறர்க்கு வரும் துன்பம் ஒன்றாயினும் அது, ஒருவனிடத்து உண்டாவதாயின், அவனுக்குப் பிற அறங்களாலுண்டான நன்மை யனைத்தும் தீயனவாய்விடும்.

Even all the good deeds of a soul turn into a hideous mass of sin before the breath of an unpleasant word that pains the hearts of men. 8

129. தீயினால் சுட்டபுண் உள்ளாறும்: ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

ஒருவனை வேறொருவன் நெருப்பினால் சுட்ட புண், உடம்பிலே இருந்தாலும் மனத்தினிடத்தே அப்பொழுதே ஆறிப்போய்விடும்; அவ்வாறன்றி, கொடுஞ் சொற்களையுடைய நாவைக்கொண்டு சுட்டதனால் தோன்றிய வடு, மனத்தின்கண் எப்போதும் ஆறாமல் நிலைத்து நிற்கும்.

A blister by burning, time may heal, but the sting of a cruel word ever rankles in the human heart. 9

130. கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.

மனத்திற்றோன்றும் கோபத்தைத் தடுத்துத் தனது கல்வி யறிவினால் அடங்க வல்லவனைத், தான் அடைய வேண்டுமென்று கருதி, அறக்கடவுள் அதற்குரிய வழியிலே நின்று, அவனிடம் சேருஞ் சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்.

Of its own accord does the path of righteousness open before a wise man that keeps watch over the kingdom of his soul against the giant passions of pride and anger. 10

அதிகாரம்—14

ஒழுக்கமுடைமை

PURITY OF CONDUCT

தத்தம் வருணத்துக்கும் நிலைக்கும் உரிய ஒழுக்கத்தை யுடையவராதல்.

131. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

ஒழுக்கம் யாவர்க்கும் மேன்மையைத் தருதலால், அவ்வொழுக்கத்தை உயிரினும் மேற்பட்டதாகக் கருதிப் பாதுகாக்க வேண்டும்.

Purity of conduct leads to honour, and therefore is it priced more precious than life. 1

132. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம்: தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.

பல அறங்களையும் ஆராய்ந்து, அவற்றுள் இம்மை மறுமைகளுக்குத் துணையாவது எதுவென்று மனத்தில் நிதானித்து அறிந்தாலும், துணையாய் முடிவது அவ்வொழுக்கமே ஆகும்; ஆதலால் ஒழுக்கத்தைச் சிறிதும் அழிவு உண்டாகாமல் வருந்தியும் விரும்பிக் காத்தல் வேண்டும்.

Keep an anxious vigil over your conduct; it is the only ally the sage in deep meditation has found for the heavenward march of the soul. 2

133. ஒழுக்க முடைமை குடிமை: இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

எல்லார்க்கும் தத்தம் வருணத்துக் கேற்ற ஒழுக்கமுடைமையே அவரவரது குலத்திற்கு மேன்மையாகும். அவ்வொழுக்கத்தினின்றும் தவறுதலே அக்குலத்தைத் தாழ்ந்ததாக்கி விடும்.

True nobility is of the very stuff of right conduct; but an evil course drags a man down to the rank of the lowliest, and the lost. 3

134. மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.

அந்தணன் தான் கற்ற வேதத்தை மறந்து விட்டாலும், வருணங் கெடாமையினால், பின்னும் அந்த வேதத்தை ஓதிக் கற்றுக் கொள்ளலாம். அவனது உயர்ந்த வருணம், ஒழுக்கம் குறைந்தால் கெட்டுப் போய் விடும்.

The Vedas which have grown shadowy and vague beyond recollection, a Brahmin can learn anew; but his birth-right he never can regain when once fallen from his high estate. 4

135. அறுக்கா றுடையான்கண் ஆக்கம் போன் றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

பொறாமை யுடையவனிடத்திலே செல்வம் இல்லாமல் போய்விடுதல் போல, ஒழுக்கமில்லாதவனிடத்திலே உயர்வு இல்லாமற் போகும்.

Wealth is not for the envious. The grace and dignity of life are not for men of ignoble conduct. 5

136. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக்(கு) அறிந்து.

ஒழுக்கம் தவறுதலால் தமக்கு இழிகுலமாகிய குற்றம் உண்டாகும் என்பதை அறிந்து, மனவுறுதி யுடையவர், செய்வதற்கு அரிதாகிய அவ்வொழுக்கத்தினின்றும் குறையார்.

Men of heroic mould never turn or shrink from the narrow mountain path of their right conduct dreading the abyss of humiliation yawning below. 6

137. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை: இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

எல்லோரும் ஒழுக்கத்தால் சிறப்பை அடைவார்கள்; அவ்வொழுக்கத்தினின்றுந் தவறுதலாலே, தாம் அடையத்தகாத பழியையும் அடைவர்.

All honour to the shining host of men of noble conduct, but dreadful ignominy to the fallen. 7

138. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் : தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

ஒருவனுக்கு நல்லொழுக்கம், இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தைத் தரும்: தீயவொழுக்கம் பாவத்திற்குக் காரணமாய் இருமையினும் துன்பத்தையே கொடுக்கும்.

Right conduct is the seed of virtue; but an evil one is the mother of endless woes. 8

139. ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

மறந்தும் தீய சொற்களைத் தம்வாயாற் சொல்லுந் தொழில்கள் ஒழுக்க முடையவர்க்கு முடியா.

Even in the unguarded moments of their lives, never do evil words slip out of the tongues of men of unblemished conduct. 9

140. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

உலக நடைக்கேற்ப, உயர்ந்தோர் ஒழுகிய வழியை யறிந்து அதில் நடவாதவர், பலநூல்களையும் நன்றாய்க் கற்றறிந்த போதிலும் அறிவில்லாதவரே.

Of what avail is the vast learning of a man, if he does not dwell in harmony with the world. 10

அதிகாரம்—15

பிறனில் விழையாமை

NOT COVETING ANOTHER'S WIFE

காம மயக்கத்தினாலே பிறன்மனையாளை விரும்பாமை.

141. பிறன் பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல்.

பிறர் மனைவியை விரும்புதற்குக் காரணமான பேதைமை உலகத்தில் அறநூலையும், பொருள் நூலையும் ஆராய்ந் தறிந்தவரிடத்திலே இல்லை.

A man alive to the glory of wealth and virtue commits not the folly of dangling after a woman, who, by the right of wedlock, is the joy of another. 1

142. அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையார் இல்.

காமம் காரணமாகப் பாவ வழியில் செல்வார் எல்லாருள்ளும் பிறன் மனைவியை விரும்பி, அவனது வீட்டு வாயிலிற் சென்று நிற்பாரைப் போல அறிவீனர் இல்லை.

Among the fallen, there is no greater fool than he that creeps to a neighbour's door with a lustful heart. 2

143. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரின்
தீமை புரிந்தொழுகு வார்.

சந்தேகங் கொள்ளாமல் தம்மை நல்லவரென்று நம்பினவரது மனைவி யினிடத்தில், காமங் காரணமாகத் தீமை செய்பவர் உயிருடையவரா யிருந் தாலும், (அறம் பொருள் இன்பங்களை யடையாமையால்) அவர் இறந்தவ ராகவே எண்ணப்படுவார்,

Dead, though alive, is the soul of a villain that invades the home of a confiding friend. 3

144. எனைத்துணைய ராயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல்.

காம மயக்கத்தினால் தம் பிழையைத் தினையளவும் (சிறிதும்) அறிந்து கொள்ளாமல் பிறன் மனைவியை விரும்பியடைதல், எவ்வளவு பெருமை யுடையவராயினும் ஒருவர்க்கு இழிவை யன்றி வேறெதைத் தரும் ?

What avails the pomp of the greatness of a man of renown, if he commits adultery, not a whit mindful of the infamy in store for him ? 4

145. எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

இல்லை யடைதல் எளிதென்று கருதி, பின்விளையும் தீமையை நினை யாமல் பிறன் மனையாளிடம் வரம்பு கடந்து செல்பவன், என்றும் அழியாத குடிப் பழிப்பினை அடைவான்.

A scorn for ages is a heartless villain who in his conquests' ease intrigues with a married woman. 5

146. பகை பாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்.

பகை, பாவம், அச்சம், பழி என்னும் நான்கு தீக்குணங்களும், நெறி கடந்து பிறன் மனையின்கண் செல்பவனிடத்தினின்றும் ஒருபோதும் நீங்காவாம்.

Hatred, sin, dread, and infamy ever dog the steps of an adulterer. 6

147. அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.

அறமாகிய இயல்போடு கூடி இல்வாழ்வான் என்று சொல்லப்படுபவன், பிறனுக்கு உரிமை பூண்டு அவனுடைய இயல்பினிடத்தே நிற்பவளது பெண் தன்மையை விரும்பாதவனே.

He is a virtuous householder that lusts not after a woman who belongs to another. 7

148. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு.

பிறன் மனைவியை மனத்திலும் நினையாத பெரிய ஆண் தன்மையானது, அறிவால் நிறைந்தோர்க்கு அறமும் ஆகும்; நிறைந்த ஒழுக்கமுமாம்.

The heroic manhood that turns away from the charms of the wife of another is not mere virtue ; it is the very soul of perfection. 8

149. நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பில்
பிறற்குரியாள் தோள் தோயா தார்.

அச்சந்தரும் கடலாற் சூழப்பட்ட இவ்வுலகத்தில் எல்லா நன்மைகளையும் பெறுதற்கு உரியவர் யாரென்றால், பிறனுக்கு உரிமையானவளது தோள்களை விரும்பி யடையாதவர்களே.

All the good things of the earth encircled by the dread sea, verily belong unto the noble one who clasps not the arms of the spouse of his neighbour. 9

150. அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

ஒருவன், அறத்தைத் தனக்குரியதாகக் கொள்ளாதவனாகிப் பாவங்களையே செய்தாலும், பிறன் எல்லையிலே நிற்பவளது பெண் தன்மையை விரும்பாத நற்குணம் உண்டாயின் அது நல்லது.

In the teeth of every other sin and transgression of virtue, it were well for the soul, if it is free from the taint of adultery. 10

அதிகாரம்—16

பொறையுடைமை

FORBEARANCE

காரணம் பற்றியாவது, அறியாமையினாலாவது ஒருவன், தமக்குத் தீங்கு செய்த வழி, தாமும் அவனுக்குப் பதில் தீங்கு செய்யாது அதனைப் பொறுத்துக் கொள்ளுதல்.

151. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

தன்னைத் தோண்டுவோரை வீழாமல் தாங்கிக்கொள்கின்ற பூமிபோலத் தம்மை அவமதிப்பவரைப் பிரதி செய்யாமல் பொறுத்துக் கொள்ளுதல் தலைமையான தருமம் ஆகும்.

Behold the earth holding in her lap the very man who delves deep into her; even so do the great bear with those who revile them; for is not forbearance the kingliest of virtues? 1

152. பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று.

ஒருவன் செய்த குற்றத்திற்காக அவனைத் தானே தண்டிக்கக்கூடிய நிலையிலிருந்தாலும் அதனைப் பொறுத்துக் கொள்ளக் கடவன்; அதனைக் குற்றமாகக் கொள்ளாமல் அப்பொழுதே மறந்து விடுவானாயின் அது அப் பொறுமையினும் மிகச் சிறந்ததாகும்.

To forgive an insult out of strength is noble; nobler still is to forget it. 2

153. இன்மையுள் இன்மை விருந்தொரால்: வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

ஒருவனுக்கு வறுமையுள் வறுமையாவது, விருந்தினரை உபசரியாமல் நீக்குதலே. அது போல வலிமையுள் வலிமையாவது, அறியாமையினாலே தீங்கு செய்தவரது குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளல்.

There is a poverty within poverty; it is the poverty of the soul that shuts its doors against a stranger. There is a strength within strength; it is the strength of those who forgive the folly of the ignorant. 3

154. நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும்.

எல்லா நற்குணங்களிலும் நிறைந்திருத்தலைத் தன்னிடத்தினின்று நீங்காதிருக்க ஒருவன் விரும்பினால், அவன் தன்னிடமுள்ள பொறுமையை நீங்காமல் காத்துக் கொள்ளவேண்டும்.

It is the unbending spirit of patience that guards the soul of our being. 4

155. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.

பிறர், தமக்குத் தீங்கு செய்தவிடத்து அதனைப் பொறுத்துக் கொள்ளாமல், அவரைத் தண்டித்தவரை அறிவுடையோர் ஒரு பொருளாக மனத்துள் கொள்ளமாட்டார்கள்; அதனைப் பொறுத்தவரைத் தமது நிறைகுணத்தால் பொன்னைப் போலக் கருதிப் பாதுகாத்துக் கொள்வார்கள்.

Mere chaff among men are the unforgiving; but pure gold is the soul that harbours no thoughts of revenge. 5

156. ஒறுத்தார்க்(கு) ஒருநாளை இன்பம்: பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

தமக்குத் தீங்கு செய்தவனைத் தண்டித்தவர்க்கு உண்டாவது, அவ்வொருநாளை இன்பமே; அதனைப் பொறுத்தவர்க்கோ உலகம் அழியும் அளவும் புகழ் உண்டாகி நிலைத்து நிற்கும்.

The joy of the lust of revenge is for a day; but glory eternal to the man who has the patience of the gods on high. 6

157. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்(து)
அறனல்ல செய்யாமை நன்று.

செய்யத் தகாத கொடியவற்றைத் தன்னிடத்துப் பிறர் செய்தாலும், அவர்க்கு அதனால் நேரிடும் துன்பத்துக்காகத் தான் வருந்தி, அறமல்லாத செயல்களை அவரிடத்துச் செய்யாதிருத்தலே நன்று.

Avenge not the wrongs ever so great for the well-being of your soul; but bless them that curse you; for they know not what they do. 7

158. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

மனச் செருக்கினால் தம்மிடத்துத் தீமை செய்தவரை, அறிவுடையோர், தமது பொறுமையினாலே வென்றுவிடக் கடவர்.

Conquer by the nobility of your being those who have taunted you in their insolent pride. 8

159. துறந்தாரின் தூய்மை யுடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்.

நெறிகடந்தவரது வாயினின்று தோன்றுவனவாய் வெறுக்கப்படும் தீய சொற்களைப் பொறுத்துக் கொள்பவர், இல்வாழ்க்கையிலே இருந்தும், துறவிகளைப் போலப் பரிசுத்த குணத்தை யுடையவராவர்.

Even holier than the ascetics are those that bear with the slanderous tongue of their detractors. 9

160. உண்ணாது நோற்பார் பெரியர்: பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரிற் பின்.

விரதங்களினாலே உணவைத் துறந்துவிட்டுத் தம்மை அடைந்த பசி நோயைப் பொறுத்துக் கொள்பவர் எல்லாரினும் பெரியராவர்; அப்பெரிய வரும் பிறர் சொல்லும் தீய சொற்களைப் பொறுப்பவர்க்குப் பின்னாவர்.

Great is the sage in his sack cloth and ashes ; greater still is the patient heart that forgives the calumny of men. 10

அதிகாரம்—17

அழுக்காறாமை

NON-ENVYING

பிறர் செல்வ முதலானவை கண்டவிடத்து பொறாமைப் படாமை.

161. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்(து)
அழுக்கா(று) இலாத இயல்பு.

ஒருவன், தன் மனத்தின்கண் பொறாமையின்மையாகிய நல்லியல்பினையே தனக்குரிய ஒழுக்க நெறியாகக் கொள்ளக் கடவன்.

Be on your guard against creeping envious thoughts ; verily freedom from envy is one of the laws of your moral being. 1

162. விழுப்பேற்றின் அஃதொப்ப தில்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின்.

யாவரிடத்திலும் பொறாமையில்லாமையாகிய நற்குணத்தை ஒருவன் அடையப் பெற்றால், அவன் பெறும் மேலான பேறுகளுள் அதற்கு சமான மானது வேறில்லை.

What blessing is greater on earth than freedom from envy ? 2

163. அறனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்
பேணா(து) அழுக்கறுப் பான்.

மறுமைக்கு அறமும் இம்மைக்குச் செல்வமும் தனக்கு வேண்டாம் என்று கருதுபவனே பிறர் செல்வத்தைக் கண்டு மகிழாமல் பொறாமைப் படுவான்.

Can an envious heart ever dream of honour or wealth ? 3

164. அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக்(கு) அறிந்து.

தீய வழியால் தமக்கு இருமையினும் துன்பம் வருதலை அறிந்தே, பொறாமை காரணமாகத் தீய காரியங்களைச் செய்யார் அறிவுடையார்.

The wise commit not evil out of envy ; for envy is the deadliest of sins. 4

165. அழுக்கா றுடையார்க்(கு) அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது.

பொறாமை ஒன்றே பகைவர் செய்யும் கேட்டிற்கு அதிகமாகத் துன்பஞ் செய்யும்; ஆதலால் பொறாமையுடையவர் அழிவதற்குப் பகைவர் வேண்டுவதில்லை; அதுவே போதும்.

Envy is in itself a dread enemy to undo the soul. 5

166. கொடுப்ப(து) அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்.

ஈவதை விலக்கும் துர்க்குணமாகிய பொறாமையுடையவனது சுற்றம், உடையும் உணவும் இல்லாமல் அழியும்.

Be not envious of the charities done unto others, lest your children should be sent adrift, shivering and starving, on the world. 6

167. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்.

பிறர் செல்வத்தைக் கண்டு பொறாமைப் படுபவனிடத்துத் திருமகள் தானும் பொறாமை கொண்டு, அவனைத் தனது தமக்கையாகிய மூதேவிக்குக் காட்டிவிட்டு நீங்குவாள்.

Not wealth but poverty awaits the doors of the envious. 7

168. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்.

அழுக்காறு என்று சொல்லப்பட்ட ஒப்பற்ற பாவி, தன்னையுடையவனை இம்மையில் செல்வத்தைக் கெடுத்து, வறுமையில் நரகத்தில் செலுத்தி விடும்.

It is envy that paves the way to a man's ruin and plunges him into the fires of hell. 8

169. அவ்வியம் நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்.

பொறாமையால் மனக் கோணலை யுடையவனிடத்துச் செல்வமும், அஃதில்லாத நற்குண முடையவனிடத்து வறுமையும் இருக்கக் கண்டால், அதற்குக் காரணம் பழவினை யென்றே ஆராய்ந்து அறியவேண்டும்.

The riches of the envious and the poverty of the righteous passeth one's understanding. 9

170. அழுக்கற்(று) அகன்றாரும் இல்லை: அஃதிலார்
பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்.

பொறாமைப்பட்டு அதனால் பெருமையடைந்தாரும் இல்லை ; பொறாமைப் படாதவர் பெருக்கத்தினின்று நீங்கினதும் இல்லை.

Glory is not for the envious ; nor a fall to those free from envy. 10

அதிகாரம்—18

வெஃகாமை

NON-COVETING

பிறர் பொருளைக் கவர்ந்துகொள்ள நினையாமை.

171. நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்.

பிறர் பொருளைக் கொள்ளுதல் தமக்கு அறமல்ல வென்னும் நடுவு நிலைமை யில்லாமல் ஒருவன், பிறரது நல்ல பொருளைக் கவர விரும்பினால், அவ்விருப்பம் அவனது குடியைக் கெடுத்துப் பலவித குற்றங்களையும் அப்பொழுதே கொடுக்கும்.

Behold the man who strays away from a righteous course and covets with an evil heart another man's well-earned riches ; he falls a prey to endless evils and spoils his home. 1

172. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

பக்ஷபாதமா யிருப்பதற்குப் பயப்படுபவர், பிறர் பொருளை அபகரித்து அதனால் பயனடைய விரும்பிப் பழித்தற்குரிய செயல்களைச் செய்யமாட்டார்கள்.

Through lust of gain they covet not who blush at an unjust act. 2

173. சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

அறத்தினால் உண்டாகும் நிலையான இன்பத்தை விரும்புபவர், பிறர் இடத்தினின்று அபகரிக்கப்பட்ட பொருளினாலே நிலையில்லாத அற்ப வின்பத்தை யடைய விரும்பித் தீய செயல்களை அவரிடத்தே செய்யமாட்டார்கள்.

They commit not evil for the trifling joys of the earth who aspire to the kingdom of heaven: 3

174. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

ஐம்புலன்களையும் வென்ற, குற்றமில்லாத அறிவையுடையவர்கள், தாம் வறிஞர் என்று நினைத்து, அது தீர்தற்பொருட்டுப் பிறர் பொருளை அபகரிக்க விரும்பார்.

Out of poverty they lust not after another's possessions who have a God-like vision born of the conquest of the senses. 4

175. அஃகி அகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

பிறர் பொருளை அபகரித்தல் காரணமாக யாவரிடத்திலும் அறிவில்லாத செயல்களை அறிஞர் செய்வாராயின், அவர் எல்லா நூல்களையும் நுட்பமாய் ஆராய்ந்து பெற்ற விரிந்த அறிவினால் உண்டாம் பயன் யாது?

Of what avail is a subtle mind that has drunk deep of the fountain of knowledge, if it slips into shameless acts through blind coveting of another's possessions ? 5

176. அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.

அருளாகிய அறத்தை விரும்பி இல்லற வழியில் நிற்பவன், பிறர் பொருளை விரும்பி அதனால் வரும் குற்றமான வழியில் செல்ல எண்ணுவானாயின், அவ்விரண்டு அறங்களையும் ஒருங்கே இழந்து கெடுவான்.

Behold the man who walks in virtue hungering for grace; he too shall perish if he plots against another through covetousness. 6

177. வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற்(கு) அரிதாம் பயன்.

பிறர் பொருளை விரும்பி அதனால் அடையும் செல்வத்தை ஒருவன் விரும்பாதிருக்கக் கடவன்; பின் அனுபவிக்கப்படும்போது அச்செல்வம் அவனுக்கு நன்மையைக் கொடாதாதலின்.

Desire not another man's possession ; for no good comes of ill-gotten wealth. 7

178. அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

குறையுந் தன்மையை யுடைய செல்வம், குறையாது இருத்தற்குக் காரணம் எதுவென்று ஒருவன் ஆராயின், அது பிறன் கைப்பொருளைத் தான் அடைய விரும்பாமையே ஆகும்.

Behold the man who is free from covetousness ; he knows not the instability of fortune. 8

179. அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறனறிந்(து) ஆங்கே திரு.

இது அறனென்றறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவுடையாரைத் திருமகள் தான் அடைதற்கு ஆகும் வழியை அறிந்து அவ்வழியாலே சென்று சேர்வாள்.

Only on him does fortune smile who, schooled in virtue, guards his soul against covetousness. 9

180. இறலீனும் எண்ணாது வெஃகின்: விறலீனும்
வேண்டாமை யென்னும் செருக்கு.

ஒருவன், பின்விளையும் கேட்டினை நினையாமல், பிறர்பொருளை விரும்புவானாயின், அவ்விருப்பம் அவனுக்கு அழிவையே தரும்; வெஃகாமை யென்னும் செருக்கு அவனுக்கு வெற்றியைக் கொடுக்கும்.

The blind greed of a man spells his ruin ; but the soul that is free from it, triumphs over all that wallows in the swamps of desires. 10

அதிகாரம்—19

புறங் கூறாமை

REFRAINING FROM BACK-BITING

காணாத இடத்தே பிறரை இகழ்ந்து பேசாமை.

181. அறன்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறன்கூறான் என்றல் இனிது.

ஒருவன், அறமென்று வாயினாலும் சொல்லாது பாவங்களைச் செய்வானாயினும், 'இவன் பிறனைப் புறங்கூற மாட்டான்' என்று உலகத்தாரால் சொல்லப்படுதல் நன்று.

Behold the man who is guilty of every other evil and knows not righteousness ; it were well, if it be said of him that he back-bites not. 1

182. அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறனழீஇ பொய்த்து நகை.

தருமம் என்பது ஒன்றில்லை என்று அழித்துப் பேசுவதுமன்றி, பாவங்களைச் செய்வதைக் காட்டிலும், ஒருவனைக் காணாஇடத்து இகழ்ந்துரைத்து, கண்ட இடத்து அவனோடு பொய்யுரை கூறி மகிழ்தல் தீதேயாகும்.

More hideous than the heart of a sinner is the deceitful smile of a slanderer. 2

183. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்.

ஒருவனைக் காணாதபோது இகழ்ந்து பேசி, கண்டபோது அவனைப் புகழ்ந்து ஒருவன் உயிர் வாழ்வதைக் காட்டிலும், அவ்வாறு செய்யாமல் இறத்தல் அவனுக்கு அறநூல்களில் கூறப்பட்ட பயனைத் தரும்.

Prefer death to a life of deceit and slander ; it is the only course open unto you for the welfare of your soul. 3

184. கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

ஒருவனை எதிரில் நின்று தாக்ஷிண்ணியமில்லாது இகழ்ந்து பேசினாலும் பேசலாம்; அவனைப் புறத்தில் பழித்துப் பேசாமை நன்று.

Talk your bitterest to one's face, but back-bite not ; for slander is the source of all evils. 4

185. அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் நன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்.

புறங்கூறுபவன், அறத்தைத் தன் வாயினால் நன்றென்று சொன்னாலும், அது உண்மையன்று என்பது அவன் புறங்கூறுதற்குக் காரணமான மனத்தின் இழிவினாலேயே அறியப்படும்.

Back-biting betrays the littleness of a sweet-tongued slanderer. 5

186. பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்.

பிறனைப் புறத்தில் பழிகூறுவான், தனது பழிகளில் கேட்டவுடனே மனம் வருந்தி இறக்கத்தக்க பழிகள் தெரிந்தெடுக்கப்பட்டுத் தனக்கெதிரில் அவனால் சொல்லப்படுவான்.

Beware of slandering lest your faults should be exposed to the scorn of the world. 6

187. பகச்சொல்லி கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்.

பலரும் மகிழும்படி இனிய சொற்களைக் கூறி, நட்புக் கொள்ளுதலைத் தமக்கு உறுதியென அறியாதவர், ஒற்றுமைகெடப் பிரியும்படி புறங்கூறித் தமது சுற்றத்தாரையும் பிரியும்படி செய்வர்.

Behold the vile slanderer who sows the seeds of discord among men ; he knows not the sweet joys of friendship. 7

188. துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு.

தம்மொடு நெருங்கிய நட்பினரது குற்றத்தையும், அவர்க்குப் புறத்தே பலர் அறியத்தூற்றும் தன்மையுடையவர் அயலாரது குற்றத்தைத் தூற்றாது இருப்பரோ ?

Will a slanderer that proclaims to the world the faults of his kith and kin ever spare the enemy ? 8

189. அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை.

பிறர் தன்னைவிட்டு நீங்கினதைக் கண்டு, அவரைப் பழிப்பவனது உடற்பாரத்தை நிலம், 'கொடிய பாரத்தைப் பொறுத்தலே தனக்குத் தருமம்' என்று நினைத்து, பொறுத்துக்கொண்டிருக்கிறது போலும்!

Is it out of infinite grace that mother earth bears on her bosom the tread of a slanderer ? 9

190. ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

அயலார் தம்மைப் புறங்கூறின் தாம் அவரிடத்துக் குற்றங்காணுதல் போலப் புறங்கூறுதலாகிய தமது குற்றத்தையும் ஆராய்ந்து அறிய வல்லாராயின், அவரது நிலைபெற்ற உயிர்க்குத் துன்பம் எவ்வாறு வரும்.

Do ever evils befall a heart that judges not lest it should be judged ? 10

அதிகாரம்—20

பயனில சொல்லாமை

REFRAINING FROM IDLE TALK

தமக்கும் பிறர்க்கும், அறம்பொருள் இன்பமாகிய பயன்களுள் ஒன்றும் பயவாத சொற்களைச் சொல்லாமை.

191. பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.

அறிவுடையோர் பலரும் கேட்டு வெறுக்கும்படி பயனில்லாத சொற்களைச் சொல்பவன், எல்லாராலும் இகழப்படுவான்.

Despised among men is one who indulges in idle talk to the disgust of all. 1

192. பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
நட்டார்கண் செய்தலிற் றீது.

அறிஞர் பலர் முன்னே பயனில்லாத சொற்களை ஒருவன் சொல்லுதல்; தன் நண்பரிடத்தில் வெறுக்கத்தக்க செயல்களைச் செய்தலினும் தீயதாம்.

More repugnant than unkind acts to friends is the vain boast of a fool. 2

193. நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை.

பயனில்லாத பொருள்களை விரித்துரைக்கும் ஒருவனது சொல்லே, அவன் நீதியில்லாதவன் என்பதை அறிவிக்கும்.

Useless words are but the froth of an empty vessel. 3

194. நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லார் அகத்து.

பயனற்றனவாய் குணமில்லாத சொற்களை யொருவன், பலரிடத்திலும் சொல்லுவானாயின், அச்சொற்கள், அவர்களால் அநீதியெனக் கருதப்படுவதுமன்றி, அவனை நற்குணங்களினின்று நீங்கவும் செய்யும்.

Neither grace, nor pleasure, nor profit is there for a soul that utters vain words in an assembly of the learned. 4

195. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

பயனில்லாத சொற்களை நற்குணமுடையோர் சொல்வாராயின், அவர்களது மேன்மையும் அதனால் வரும் நன்கு மதிப்பும் உடனே நீங்கும்.

Shorn of their honour and respect do even the great become if they yield to futile talk. 5

196. பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்.

பயனில்லாத சொற்களைப் பலதரமும் சொல்லுபவனை, மனித வர்க்கத்துள் சேர்ந்தவனென்று சொல்லாதே ; அவனை மனித வர்க்கத்துள் பதரென்று சொல்லுக.

A lover of profitless words is but chaff among men. 6

197. நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

அறிவுடையோர், நீதியொடு பொருந்தாத சொற்களைச் சொன்னாலுஞ் சொல்லலாம்; பயனில்லாத சொற்களைச் சொல்லாதிருத்தல் நன்று.

Let the wise burst into harsh words ; but let them beware of a bootless speech. 7

198. அரும்பயன் ஆயும் அறிவினர் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்.

வீடு பேறு முதலிய அறிதற்கரிய பயனை ஆராயும் அறிஞர், மிக்க பயனில்லாத சொற்களைச் சொல்லமாட்டார்கள்.

Do the heavenward thoughts of a great soul ever descend to a light and trivial discourse ? 8

199. போருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்.

மயக்கத்தினின்றும் நீங்கிய பரிசுத்தமான உண்மை அறிவினையுடையவர், பயனில்லாத சொற்களை மறந்தும் சொல்லமாட்டார்கள்.

Rarely do the wise who are full of the pure light of wisdom fall into trivial talk even in their thoughtless mood. 9

200. சோல்லுக சொல்லிற் பயனுடைய : சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

ஒருவன் ஏதேனும் ஒன்றைச் சொல்ல விரும்பின் பயனுடைய சொல்லையே சொல்லக்கடவன்; பயனில்லாத சொற்களைச் சிறிதும் சொல்லாதிருக்கக் கடவன்.

Let words of wisdom adorn your lips, but refrain from vain and fruitless speech. 10

அதிகாரம்—21

தீவினையச்சம்

DREAD OF EVIL DEEDS

பாவத்தைத் தரும்படியான கொடுந்தொழில்களைச் செய்தற்கு அஞ்சுதல்.

201. தீவினையார் அஞ்சார்: விழுமியார் அஞ்சுவர்:
தீவினை யென்னுஞ் செருக்கு.

தீவினை யென்று சொல்லப்படும் மயக்கத்தைக் குறித்து, முன் செய்த தீவினை யுடையோர் பயப்படார் : அது இல்லாத மேலோர் பயப்படுவர்.

Hardened into sin, the wicked fear not the dark forces of evil; but the noble flee away from them. 1

202. தீபவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

தனக்கு இன்பம் பயத்தலைக் கருதிச் செய்யும் தீவினைகள், பின் அஃது ஒழியத் துன்பமே தருதலால், அப்படிப்பட்ட தீவினைகளை யொருவன் தீயினும் அதிகமாக அஞ்ச வேண்டும்.

Evil breeds evil ; therefore is it dreaded more than scorching fires. 2

203. அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்

தமது பகைவரிடத்திலும் தீவினைகளைச் செய்யாமல் விடுதல், தமக்கு உறுதி பயக்கும் அறிவுகள் எல்லாவற்றுள்ளும் மேலான அறிவென்று நற்குண முடையோர் சொல்லுவர்.

It is the height of wisdom to resist not evil. 3

204. மறந்தும் பிறன்கேடு சூழற்க : சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.

ஒருவன், பிறனுக்குக் கெடுதியைத் தரும் தீத்தொழிலை மறந்தும் எண்ணுதிருக்கக் கடவன் ; எண்ணுவானுயின், அவனுக்குத் தீங்கு செய்யத் தரும தேவதை உடனே நினைக்கும்.

Design not the ruin of another in an unwary moment, lest the god of justice should compass your own. 4

205. இலனென்று தீயவை செய்யற்க: செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து.

ஒருவன், தான் வறியவன் என்று எண்ணி, வறுமை தீர்தற் பொருட்டுத் தீவினைகளைப் பிறர்க்குச் செய்யா தொழிக; செய்வானாயின் பிறவி தோறும் வறுமையை யுடையவனாவான்.

Let poverty be no plea for committing evil, for evil deeds make you poorer still. 5

206. தீப்பால தான்பிறர்கண் செய்யற்க: நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான்.

பலவகைத் துன்பங்களைச் செய்யும் பாவங்கள் தன்னைப் பின் வந்து வருத்துதலை விரும்பாதவன், தீய தன்மையையுடைய வினைகளைத் தான் பிறரிடத்தில் செய்யாதிருக்கக் கடவன்.

Commit not evil, lest your own doors should be darkened by it. 6

207. எனைப்பகை உற்றாரும் உய்வர்: வினைப்பகை
வீயாது பின்சென்(று) அடும்.

எவ்வளவு பெரிய பகையை யுடையவரும் அப்பகையினின்று ஒருவாற்றால் தப்புவர்: அவ்வாறன்றி, தீவினையாகிய பகையோ ஒருவனை விடாது பின்தொடர்ந்து சென்று கொல்லும்.

There is a way of escape from the wrath of every other foe; but the evil deeds of a wicked man relentlessly pursue him down to utter ruin. 7

208. தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயா(து) அடியுறைந் தற்று.

பிறர்க்குத் தீவினைகளைச் செய்தவர்கள், தாம் கெடுதல் எவ்வாறெனின், ஒருவனது நிழல், அவன் எவ்வளவு தூரம் சென்றாலும் அவனை விடாமல் தானும் வந்து, அவன் அடிக்கீழ்த் தங்குதல் தவறாதது போலாம்.

Like a shadow do evils dog the steps of an injurer. 8

209. தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்.

ஒருவன், தனக்குச் சிறிதும் துன்பம் வாராமல் இன்பமே வந்தடைய விரும்புவானாயின், பிறர்க்குச் சிறிதும் தீமை செய்யாமல் இருக்கக் கடவன்.

For the well-being of your self, which you hold so dear, raise not your guilty arm against another. 9

210. அருங்கேடன் என்பது அறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின்.

ஒருவன், நன்னெறியினின்று விலகி, பிறர்மாட்டுத் தீயவினை செய்யானாயின், அவனை அரிதாகிய கேட்டை யுடையவன் என்று அறிக. (தீவினை செய்யானாயின் அவனுக்குக் கேடு வருதல் அரிதாம்.)

He rests secure from the ills of life who does not stray away from the straight path to stain his hands with wicked deeds. 10

அதிகாரம்—22

ஒப்புரவறிதல்

BENEVOLENCE.

உலகத்திலுள்ள மார்தாது நடத்தையின் இயற்கையை அறிந்து நடத்தல்.

211. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்(டு)
என்னாற்றுங் கொல்லோ உலகு.

உயிர்கள், தமக்கு நீரை உதவுகின்ற மேகங்களுக்கு என்ன பிரதியுபகாரம் செய்கின்றன ? ஒன்றுஞ் செய்வதில்லை. ஆதலால், அம் மேகங்களைப் போன்ற பெரியார் செய்யும் உதவிகளும் பிரதியுபகாரத்தை யெதிர்பார்ப்பனவல்ல.

The spirit of benevolence looks for no return ; what do men give back to the clouds that delight the earth with their gentle refreshing showers ? 1

212. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

தகுதியுடையவருக்கு (யோக்கியர்க்கு) உதவுவது ஆனால், தாம், முயன்று தேடிய பொருளெல்லாம் தக்கார்க்கு ஒப்புரவு செய்தற் பொருட்டே ஆம்.

Only for the benefit of humanity do the noble gather wealth in the sweat of their brow. 2

213. புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

ஒருவனுக்குத் தேவருலகத்திலும் இவ்வுலகத்திலும் பிறர்க்கு உதவி செய்தலைப் போல நன்மையைத் தரும் செயல் வேறில்லை.

A lovelier and a better thing than a benevolent heart can scarcely be seen either in the world of men or in the land of the gods. 3

214. ஒத்த தறிவான் உயிர்வாழ்வான்; மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

உலகநடை அறிந்து ஒழுகுபவனே உயிர்வாழ்பவன் ஆவான்; அவ்வாறு நடவாதவன் இறந்தவருள் ஒருவனாகக் கருதப்படுவான்.

He alone breathes who is alive to the crying needs of the world; but "Oh death in life," the heart that is blind to them. 4

215. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

உலக நடையை விரும்பிச் செய்யும் பேரறிஞரிடத்துள்ள செல்வம், ஓரிலுள்ளார் யாவராலும் உண்ணுதற்குரியதொரு நீர் நிலையினிடத்து நீர் நிறைந்தாற் போலும்!

Behold how the waters lap on the lovely shores of a lake to the delight of the villager: like unto it are the riches of the wise that love all mankind. 5

216. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்.

செல்வமானது பிறர்க்கு உதவி செய்பவனிடத்தில் இருக்குமானால் அவ்வாறு இருப்பது ஓர் ஊர் நடுவில் பலர்க்கும் பயன்படும் மரம் ஒன்று பழுத்தாற்போலும்.

The wealth of a generous being is like a shady tree that bends low with the weight of its fruit in the heart of a hamlet. 6

217. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

ஒப்புரவு செய்யும் பெருந்தகையாளனிடத்தே உண்டாகும் செல்வம், இலை, பூ, காய், முதலிய எல்லா உறுப்புக்களாலும் ஒருவனுக்குப் பயனை யளிக்கும் மரத்திற்குச் சமானமாகும்.

The possessions of a large and noble heart are like an unfailing tree which breathes out from every leaf a healing balm to all that gather round it. 7

218. இடனில் பருவத்தும் ஒப்புரவிற்(கு) ஒல்கார்
கடனறி காட்சி யவர்.

தாம் செய்யத் தகுவனவற்றை அறிந்த இயற்கையறிவுடையவர், செல்வம் குறைந்த காலத்தும் ஒப்புரவு செய்தற்குப் பின்னிடார்.

Men of stern sense of duty never fail in their offices of tenderness even when fortune is at her lowest ebb.

219. நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயுநீர
செய்யா(து) அமைகலா வாறு.

ஒப்புரவு செய்தலையுடையவனுக்கு எது வறுமை யென்றால், 'தான் அனுபவிக்கும் பொருளில்லாமை அல்ல; தவறாமல் செய்யவேண்டிய கடமைகளைச் செய்ய முடியவில்லையே' என்று வருந்தும் தன்மையே யாகும்.

The poverty of a generous soul is nothing but the sense of regret of its inability to extend the hand of fellowship in the hour of need. 9

220. ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க(து) உடைத்து.

உலக நடையை யறிந்து ஒழுகுவதனால் ஒருவனுக்குப் பொருளழிவு நேரிடுமாயின், தன்னை விலையாகக் கொடுத்தாயினும் அவன் அப்பொருளழிவைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

The ruin that springs from benevolence is a jewel of such rare device that it shall be purchased even by going into the very bonds of slavery. 10

அதிகாரம்—23

ஈகை

Charity

வறுமையடைந்து யாசிப்பவர்க்கு இல்லை என்று சொல்லாமலும்,
பிரதியுபகாரத்தை விரும்பாமலும் கொடுத்தல்.

221. வறியார்க்(கு)ஒன் றீவதே ஈகை; மற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர(து) உடைத்து.

ஒரு பொருளும் இல்லாதவர்க்கு அவர் வேண்டியதொரு பொருளைக் கொடுப்பதே ஈகை யாகும்; அவ்வாறல்லாத கொடைகளெல்லாம் ஒரு பிரயோசனத்தை எதிர்பார்த்துக்கொடுக்கும் தன்மையனவாம்.

Giving alms to the needy and the poor is charity; but all other forms of gifts are in the spirit of barter. 1

222. நல்லா றெனினும் கொளல்தீது: மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.

யாசித்தல், முத்தியுலகத்தை யடைதற்குரிய நல்வழி என்று சிலர் கூறினும் அது தீதேயாம்; ஈதல் மோக்ஷத்தைக் கொடாது என்றாலும் அதுவே நல்லதாம். (எற்பதிகழ்ச்சி.)

To beg is heinous though it may lead to heaven; to give is noble though heaven be denied you. 2

223. இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள.

யான் தரித்திரன் என்று, யாசிப்பவன் சொல்லும் இழிவைத் தான் பிறரிடத்தில் சொல்லாமையும், அவ்விழிவான சொல்லைத் தன்னிடத்தில் சொன்னவர்க்குத் தவறாமல் கொடுத்தலும் ஆகிய இரண்டும் உயர்குடிப் பிறந்தவரிடத்திலேயே உண்டாம்.

('இலனென்னும் எவ்வமுரையாமை' என்னும் தொடர்க்கு இன்னும் பலபொருள் கூறப்படும்.)

The noble beg not at other men's doors, crying " I have nought"; nor do they shut their gates against the indigent. 3

224. இன்னா திரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகங் காணும் அளவு.

இரப்பவர், கொடுப்பவரிடம் தாம் வேண்டிய பொருளைப் பெற்று முகமலர்ச்சி யடைதலைக் காணும் வரையில், கொடுப்பவர் வருந்துவர்.

To hear the tale of woe of a beggar is wretchedness itself; and the bountiful heart knows no gladness until it sees the joy of content sparkle in the eyes of the suppliant. 4

225. ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்; அப்பசியை
மாற்றுவார் ஆற்றலிற் பின்.

தவ வலிமையுடையவர்க்கு வலிமையாவது, தமக்கு உண்டான பசியைப் பொறுத்துக் கொள்ளுதல்; அவ்வலிமையும், அங்ஙனம் பொறுத்தற் கரிய பசியைத் தமது ஈகையினால் ஒழிப்பவரது வலிமைக்குப் பிற்பட்டதேயாம்.

The greatest conquest of a saint is his conquest over the pangs of hunger, but mightier than the saint is he who appeseso the hunger of another. 5

226. அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

இதுதான் சிறந்த தருமம் என்று எண்ணி, ஒருவன் வறியவரது கொடும்பசியை நீக்கவேண்டும்; பொருளைப் பெற்றவன் அப்பொருளைத் தனக்குப் பயன்படும்படி சேர்த்துவைக்கும் இடம் அதுவே.

To relieve the consuming hunger of the abject poor is itself sufficient riches that you can proudly garner up for the safety of your soul. 6

227. பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.

தான் தேடிய பொருளை எப்பொழுதும் தன்னிடத்து வரும் வறியவர்க்குப் பங்கிட்டுக் கொடுத்துத் தானும் உண்ணும் இயல்புடையவனைப் பசி என்று சொல்லப்படும் கொடிய நோய் அணுகி வருத்தாது.

Deadly hunger touches not him that always shares his bread with others. 7

228. ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

தம்முடைய பொருளை ஈயாது வைத்துப், பின்பு இழந்துபோகின்றவராகிய அருளில்லாதவர், வறிஞர் முதலாயினோர்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து அவர்கள் மனமகிழ்வதைக் கண்டு அருளுடையார் அடையும் இன்பத்தினைத் தாம் கண்டறியார் போலும்.

Behold the unfeeling heart that greedily piles up its wealth and perishes in the dust; it knows not the sweet joy of relieving the wretchedness of the poor. 8

229. இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்.

தேடிய பொருள் போதாதென்று கருதி மேன்மேலும் சேர்க்க நினைத்து, வறியார்க்குக் கொடாமல் தாமே தனியாக உண்ணுதல், பிறரிடத்துச் சென்று யாசித்தலால் ஒருவன் உண்மையாக அடையும் துன்பத்தினும் மிக்க துன்பத்தைத் தரும்.

Bitterer than the crumbs of bread gathered at other men's doors is the frugal food of the miser eating alone with his heart panting for wealth ever more. 9

230. சாதலின் இன்னாத தில்லை; இனிதுஅதூஉம்
ஈதல் இயையாக் கடை.

ஒருவனுக்கு மரணத்தைப் போலத் துன்பந் தருவது வேறொன்று இல்லை; அப்படிப்பட்ட மரணமும், வறியார்க்கு ஒரு பொருளைக் கொடுக்க முடியாதபோது, இன்பந் தருவதாகும். (பிறர்க்குக் கொடாமை மரணத்தினுங் கொடியதாம்.)

More poignant than death is the pang of a heart that fails in the tender acts of charity. 10

அதிகாரம்—24

புகழ்

IN PRAISE OF GLORY

இல்வாழ்க்கை முதல் ஈகை ஈறுகக் கூறப்பட்ட இல்லற ஒழுக்கத்தில் தவறாமல் நடந்தவர்க்கு இப்பிறப்பில் அடையும் பயனாகி, இவ்வுலகில் பரவி என்றும் அழியாமலிருக்கிற கீர்த்தி.

231. ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதியம் இல்லை உயிர்க்கு.

மக்கள் உயிர்க்குப் பயன், புகழல்லது வேறொன்று இல்லை ; ஆதலால் ஒருவன் வறியவர்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து அதனால் உண்டாகும் புகழோடும் வாழ்க.

Give unto the poor ; live in glory ; there is no greater gain on earth. 1

232. உரைப்பார் உரைப்பவை யெல்லாம் இரப்பார்க்(கு) ஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்.

உலகத்தில் ஒன்றை எடுத்துக் கூறுபவர், உயர்வாகச் சொல்லும் சொல்லெல்லாம், வறுமையால் இரப்பவர்க்கு அவர் வேண்டியதொன்றைக் கொடுப்பவரிடத்து நிற்கும் புகழே யன்றி, வேறில்லை.

The theme of all ages is the one song of praise of the glory of those who help the needy and the poor. 2

233. ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்.

தனக்கு ஒப்பற்றதாக உயர்ந்த புகழையன்றி உலகத்தில் அழியாது நிற்பது வேறொன்றில்லை.

All things bloom and fade on earth ; but the peerless renown of one stands for ever. 3

234. நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.

ஒருவன், இவ்வுலகில் அழியாது நிற்கும் புகழைப் பெறுவானாயின், தேவலோகம் அவனையல்லது தன்னிடத்திலுள்ள ஞானிகளை விரும்பி நன்கு மதியாது.

In the abode of the gods, more honoured than the saints are those that have won lasting fame on earth. 4

235. நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க்(கு) அல்லால் அரிது.

தமது கீர்த்தி விருத்தியடைதற்குக் காரணமான செல்வச் செலவும் கீர்த்தி நிலைத்திருக்கத் தாம் மரணம் அடைதலும், நிலையில்லாத பொருள்களால் நிலையுள்ள பொருளை யடையும் திறமையுள்ளவர்க்கன்றி மற்றவர்க்கு அரிதாகும்.

Out of the ruins and death of their selves, it is only the wise that fashion out a name for themselves. 5

236. தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

மக்களாய்ப் பிறந்தால், புகழுக்குக் காரணமாகிய குணத்தொடு பிறக்க வேண்டும். அக்குணமில்லாதவர், மக்களாய்ப் பிறப்பதைவிட விலங்காய்ப் பிறத்தல் நல்லது.

Better to be born covered with glory on earth than never to be born at all. 6

237. புகழ்பட வாழாதார் தம்நோவார்; தம்மை
இகழ்வாரை நோவ தெவன் ?

தமக்குப் புகழுண்டாகும்படி வாழமாட்டாதவர், அதுபற்றித் தம்மைத் தாமே யிகழ்ந்து கொள்வதை விட்டுவிட்டுத் தம்மை யிகழும் பிறரை என் வெறுக்க வேண்டும்.

Bemoan your own sloth that stands in your way to glory : why fret about the insults that others hurl at you ? 7

238. வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்.

தமக்குப் பின் நிற்கும் புகழ் என்னும் சந்ததியைப் பெறவேண்டியிருக்க அதனைப் பெறாவிட்டால், அதுவே உலகத்திலுள்ளவர்க்கெல்லாம் நிந்தையாகும் என்று அறிவுடையார் சொல்வர்.

Verily do the wise cry shame on those that leave no foot-prints on the sands of time, when there is glory to be sought and won in the world of men. 8

239. வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

புகழில்லாத உடம்பைச் சுமந்த நிலம், பழிப்பில்லாத வளப்பத்தை யுடைய விளைவு குறையப் பெறும்.

The glory and the freshness of the earth shrivel into nothingness, before the unholy tread of an inglorious band of men. 9

240. வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

தம்மிடத்து வசை யுண்டாகாமல் வாழ்வாரே உயிர்வாழ்பவராவர்; தம்மிடத்துப் புகழ் உண்டாகாமல் வாழ்வாரே இறந்தவர்க்குச் சமானமாவர்.

Alive is the soul that is free from reproach: but dead is the heart that lives without a name. 10

இல்லறவியல் முற்றிற்று.

---

3. துறவறவியல்

இல்லறம் துறவறம் என முன்னே சொல்லி நிறுத்திய கிரமத்தின் படியே துறவறங் கூறத் தொடங்கினர். துறவறமாவது - மேற்கூறிய இல்லறத்தில் வழுவாது ஒழுகி, அறிவுடையராய்ப் பிறவிக்குப் பயந்து, முத்தியை யடையும் பொருட்டுத் துறந்தவர்க்குரிய அறமாம்.

விரதம்

விரதங்களாவன - இன்ன அறம் செய்வேன் எனவும், இன்ன பாவம் நீங்குவேன் எனவும் தத்தமது சக்திக்குத் தக்கபடி ஏற்படுத்திக்கொள்பவை.

அதிகாரம்—25

அருளுடைமை

MERCY

ஒரு சம்பந்தமும் இல்லாமல் இயல்பாகவே எல்லா உயிர்களிடத்தும் உண்டாகும் கருணை.

241. அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்: பொருட்-
பூரியார் கண்ணும் உள. [செல்வம்

செல்வங்கள் பலவற்றுள்ளும் தேர்ந்தெடுக்கப்பட்ட செல்வம், அருளால் வரும் செல்வமே ஆகும்; அவ்வருள் நீங்கிய பொருளால் வரும் செல்வங்கள் கீழ் மக்களிடத்தும் உள்ளன, ஆதலால்.

A tender and merciful heart is the loveliest and the most precious of all our possessions; for are not the riches of this earth found among the vilest of men?

242. நல்லாற்றான் நாடி அருளாள்க; பல்லாற்றால்
தேரினும் அஃதே துணை.

ஒருவன், நல்ல நெறியிலே நின்று, காட்சிப் பிரமாணத்தாலும், அனுமிதிப் பிரமாணத்தாலும் ஆகமப் பிரமாணத்தாலும் தனக்குத் துணையாக உதவும் அறம் எதுவென்று ஆராய்ந்து, அருளுடையனாகக் கடவன்; பல வழியால் ஆராய்ந்து பார்த்தாலும் ஒருவனுக்குத் துணையாக நிற்பது அருளேயாம்.

Search within yourself and seek in mercy a tower of strength ; for do not all the tenets of the world proclaim that she is the surest and safest guide in your journey to the unknown ? 2

243. அருள்சேர்ந்த நெஞ்சினார்க்(கு) இல்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.

அருள் நிறைந்த மனமுடையவர், இருள் நிறைந்ததாய மிக்க துன்பத்தைத் தரும் நரகத்தில் செல்லார்.

They enter not the dark and dreadful valley of the shadow of death whose heart glows with the tender light of mercy. 3

244. மன்னுயிர் ஓம்பி அருள்ஆள்வாற் கில்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.

நிலைபெற்ற உயிர்களைப் பாதுகாத்து அவற்றினிடத்தே அருளுடையவனாக இருப்பவனுக்குத் தன்னுயிர் அஞ்சுதற்குக் காரணமாகிய பாவங்கள் உண்டாகமாட்டா.

The shoals and sand-banks that a heart dreads in its voyage to the promised land beyond the clouds are not for the soul which loves all that lives on earth. 4

245. அல்லல் அருளாள்வார்க்(கு) இல்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலங் கரி.

அருளுடையவர்க்கு இம்மையிலும் ஒரு துன்பம் உண்டாகாது; அதற்கு, காற்றுலாவுகின்ற வளம் பொருந்திய இந்நிலவுலகத்தில் வாழ்வாரே, சாட்சியாவர்.

Sorrow never afflicts a merciful soul : and to this, the vast teeming earth, round which the wanton winds do merrily blow, is a mighty witness. 5

246. பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார்.

பிராணிகளிடத்துச் செய்யவேண்டும் அருளை நீக்கிவிட்டு, கொடுந் தொழிலைச் செய்தொழுகுவாரை, முற்பிறப்பிலும் உறுதிப்பொருளைத் தேடிச் செய்யாமையால் தாம் இப்பிறப்பில் துன்பப்படுகிறோம் என்பதை மறந்தவர் என்று சொல்லுவர் நல்லோர்.

Behold an unloving heart that is blind to mercy, and doth iniquity: the wise say of him that he has forgotten the bitter lesson, which he learnt in his former birth, in the school of affliction. 6

247. அருளில்லார்க்(கு)அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்(கு)
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

பொருளில்லாதவர் எங்ஙனம் இவ்வுலக இன்பத்தை யடையமாட்டாரோ அவ்வாறே, உயிர்களிடத்து அருளில்லாதவர் முத்தி உலகத்தின்பத்தையும் அடையமாட்டார்.

The kingdom of heaven is not for the soul devoid of mercy, even as the joys of this earth are not for those sunk in the very depths of poverty. 7

248. பொருளற்றார் பூப்பர் ஒருகால்; அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது.

ஊழ்வினையினால் வறுமையடைந்தவர், ஒரு காலத்தில் வறுமை நீங்கிச் செல்வமுடையவராய் விளங்குவர்; அருளில்லாதவரோ பாவம் நீங்காமையால் அழிந்தவரே யாவர்; பின்னொரு காலத்திலும் விருத்தியடைதல் இல்லை.

Some day fortune may smile on the ragged poor; but only endless gloom awaits a loveless heart. 8

249. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்.

உயிர்களிடத்தில் அருளில்லாதவன் செய்யும் அறத்தை ஆராய்ந்து பார்த்தால், மெய்ஞ்ஞானமில்லாதவன் தத்துவ சாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட உண்மையான விஷயங்களை உணர்ந்தாற் போலும்! (உணரமாட்டான்.)

A merciless being striving to walk in virtue is like a bewildered one catching the glimpse of truth. 9

250. வலியார்முன் தன்னை நினைக்க: தான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து.

அருளில்லாதவன், தன்னைக் காட்டிலும் எளியாரைத் தான் வருத்துதற்குச் செல்லும்போது, தன்னைக் காட்டிலும் வலியவர் தன்னை வருத்து

தற்கு வரும்போது, தான் அவர்களுக்கு எதிரில் பயந்து நிற்கும் நிலையை நினைக்கக் கடவன்.

Knit not your brows against the weak in your insolent might, but remember the day when your own cheeks turned pale with fear in the presence of a mightier foe. 10

அதிகாரம்—26

புலால் மறுத்தல்

REFRAINING FROM EATING FLESH

மாமிச போசனத்தை விலக்குதல்.

251. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்.

தன்னுடைய உடம்பை வளர்த்தற் பொருட்டுத், தான் மற்றோர் உயிரின் உடம்பைத் தின்பவன், அருளை எவ்வாறு மேற்கொள்வான் ?

Will a heart that battens on the flesh of other creatures ever feel the tender dew drops of mercy ? 1

252. பொருளாட்சி போற்றாதார்க்(கு) இல்லை : அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.

பொருளால் பயனை அடைதல், அப்பொருளைக் காப்பாற்றாதவர்களுக்கு இல்லை. அதுபோல, அருளால் பயனை அடைதல் மாமிச போசனஞ் செய்பவர்க்கு இல்லை.

The treasures of the world are not for the thriftless and the improvident; even so all the joys and blessings of mercy are not unto them that feed on flesh. 2

253. படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றாக்கா(து) ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம்.

கொலைக்கருவியாகிய ஆயுதத்தைத் தங்கையிலே கொண்டவரது மனம், கொலை செய்தலை நோக்குமே யன்றி அருளை நோக்காதவாறுபோல, தன்னின் வேறாகிய ஓருயிரினது உடலை இனிய உருசி உண்டாகும்படி உண்பவரது மனம், அவ்வூனையே கருதுவதன்றி அருளை நினைத்தலும் செய்யாது.

A pitiless flesh-eater hungers evermore for the delights of tasting flesh even as an assassin armed revels ever more in thoughts of murder. 3

254. அருளல்லது யாதெனின் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல்.

அருள் யாதெனில் கொல்லாமையே; அருளில்லாதது யாதெனில் கொல்லுதலாம்: ஆதலால், தருமமல்லாதது யாதெனில் அக்கொல்லுதலால் வந்த மாமிசத்தைத் தின்னுதலே.

Not to kill is mercy ; to slaughter is cruel ; and to taste flesh is to sin. 4

255. உண்ணாமை உள்ளது உயிர்நிலை; ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யா(து) அளறு.

மனிதன், ஊனை உண்ணாமலிருந்தால் சிலவகை உயிர்கள் அவ்வவ்வுடம்புகளிலே தங்கியிருக்கும்; அங்ஙனம் உயிர் உடலில் நிற்றல் அழியும்படி அவ்வுடம்பை உண்பானாயின் அவனை விழுங்கிய நரகம் பின்பு அவனை வெளிவிடுதற்கு வாய் திறவாது.

The spirit of non-killing keeps secure the precious life of a being. And the merciless flesh eater who stifles the life-breath of an animal is for ever hurled into the very jaws of hell. 5

256. தினற்பொருட்டால் கொல்லா(து) உலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.

(அறியாமைபற்றிக் கொன்றால் கொன்றதல்லது) மாமிசபோசனத்திற்காக உலகத்திலுள்ளோர் பல உயிர்களைக் கொலை செய்யாரானால், விலையாகக் கொடுக்கும் திரவியத்திற்காக ஊனை ஒருவரும் விற்கமாட்டார்கள்.

If the world were to forswear flesh, no longer would it be held up for sale. 6

257. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண(து) உணர்வார்ப் பெறின்.

இறைச்சியானது பிறிதோருடம்பின் புண் ஆகும்; அவ்விறைச்சி சுத்தமுடையதல்ல என்னும் உண்மையை அறிந்தால் ஒருவரும் அதனை உண்ணமாட்டார்.

Be not a riotous flesh eater ; for what is flesh but the festering ulcer of an animal. 7

258. செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன்.

ஐயம், திரிபு, அறியாமை என்னும் மூன்று குற்றங்களினின்றும் நீங்கிய பரிசுத்தமான அறிவினையுடையவர், மற்றொரு உயிரினின்று நீங்கிய பிணமாகிய ஊனை உண்ணமாட்டார்.

Behold the men who have emerged from the bonds of ignorance : they taste not the flesh of a creature from which life has taken flight. 8

259. அவிசொரிந்(து) ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்(து) உண்ணாமை நன்று.

நெருப்பிலே நெய் முதலிய மந்திரபூர்வமாகத் தேவர்க்கு இடும் உணவுகளைப் பெய்து பல யாகங்களைச் செய்தலினால் வரும் பயனைக் காட்டிலும், ஒரு விலங்கின் உயிரைப் போக்கி அதன் ஊனைத் தின்னாமை என்னும் விரதத்தினால் வரும் பயன் பெரிதாகும்.

Far better and holier than a thousand oblations on the sacrificial fires is the one sacred act of abstaining from the flesh of a slaughtered animal. 9

260. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

ஓர் உயிரையும் கொல்லாதவனுமாய்ப் புலாலையும் உண்ணாதவனுமாகிய பேரருளுடையவனை, எல்லா உயிர்களும் கைகுவித்து வணங்கும்.

Verily on its bended knees, does the whole creation pay its reverence to the great heart that abjures flesh and holds all life tender and sacred. 10

அதிகாரம்—27

தவம்

PENANCE

மனத்தை யடக்கும்பொருட்டு, விரதங்களால் உணவைச் சுருக்கித், தன்னுயிர்க்கு வரும் துன்பத்தைப் பொறுத்துப் பிறவுயிர்களைக் காத்தல்.

261. உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்(கு) உரு.

தவத்திற்கு உருவமாவது, உண்டி சுருக்குதல் முதலியவற்றால் தன்னுயிர்க்கு வரும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுதலும், பிற உயிர்களுக்குத்தான் துன்பஞ் செய்யாதிருத்தலும் ஆகிய அவ்வளவினை யுடையதே யாகும்.

Penance is marked by god-like endurance of the ills of life and extreme tenderness of heart. 1

262. தவமும் தவமுடையார்க் காகும்; அவம் அதனை
அஃதிலார் மேற்கொள் வது.

பயனை அல்லாமல், அத்தவமும் இடையூறில்லாமல் நிறைவேறுவதும் முற்பிறப்பிற் செய்த தவத்தை யுடையவர்க்கு மாத்திரமே ஆகும்; ஆதலால், முற்பிறப்பில் தவஞ் செய்யாதவர்க்கு இப்பிறப்பில் தவத்தைத் தொடங்கி முடிப்பது முடியாததாகும்.

Austerities are only for a heart that is already chastened and subdued; but they become a mere farce in the hands of those who affect them. 2

263. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்.

விரும்பிய பயனைத் தரவல்ல தவத்தை யாவருமே செய்தற்கு உரியவராயிருக்க, இல்லறத்தார் அதனைச் செய்ய மறந்ததற்குக் காரணம், இருவகைப் பற்றுக்களையும் விட்டுத் துறந்தவர்க்கு உணவும், மருந்தும், இருப்பிடமும் கொடுத்து உதவ விரும்புவதனாற் போலும்.

Is it out of extreme solicitude for the welfare of the ascetics that a householder has forgotten, to our wonder and surprise, all about his own penance? 3

264. ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்.

தமது அறத்திற்கு விரோதமாகத் தடை செய்தாரைக் கெடுத்தலும், அதனை விரும்பினவரை உயர்த்தலும் ஆகிய இரண்டையும் தவஞ் செய்வோர் நினைத்தால் அவரது தவ வலியால் அந்த சாப அநுக்கிரக திறமை அவர்க்கு உண்டாம்.

Behold the miraculous powers of a man of severe penance: his very breath hurls his foes down into the abyss of ruin, and exalts his friends to the summits of power and renown. 4

265. வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

ஒருவன் தவத்தைத் தொடங்கிச் செய்தால், மறுமைக்கண் விரும்பிய பயன்களை விரும்பியபடியே அடையலாம்; ஆதலால், செய்யப்படுவதாகிய தவம், இம்மைக்கண் அறிவுடையோரால் முயன்று செய்யப்படும். (மீண்டும் என்னும் பாடத்துக்கு, மேன்மேலும் என்பது பொருள்.)

Spend your days in ceaseless penance; for is it not penance that fulfils whatsoever your heart desires? 5

266. தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்;மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு.

துறவினையடைந்து தவஞ் செய்வாரே தமக்குரிய கருமத்தைச் செய்பவராவார்; தவஞ்செய்யாதவர், மற்றைப் பொருளின்பங்களைக் குறித்த முயற்சிகளையெல்லாம் மிகச் செய்து ஆசையாகிய வலையுளகப்பட்டுத் தமக்குத் தாமே கெடுதி செய்து கொள்பவராவர்.

True to himself he dwells in the joy of the spirit who does tapas in the midst of the fever and the fret of life: but the rest, caught in the very snares of desires, perish in the dust. 6

267. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

தீயில் உருக்கிப் புடம் வைக்கப்படுகிற பொன்னுக்கு, அத்தீ மேன்மேல் சுடுந்தோறும் தன்னொடு கலந்திருந்த மாசு நீங்கி ஒளி மிகுவதுபோல, தவஞ் செய்யும் வல்லமையுடையவர்க்கு, உண்டி சுருக்கல் முதலியவற்றால் வருந் துன்பம் வருத்த வருத்த தம்மொடு கலந்திருந்த பாவம் நீங்கி ஞானவொளி மிகும்.

Behold how gold glows brighter and brighter in yon furnace to the ceaseless breath of the bellows; even so, from the fiery ordeals of penance does a man of stern austerities victoriously emerge with a wiser and more chastened outlook on life. 7

268. தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்.

தன்னுயிரைத் தனக்கு உரியதாகப் (தவமாகிய தன் கருமஞ் செய்யப்) பெற்றவனை அவ்வாறு பெறாத மற்றைய உயிர்களெல்லாம் வணங்கி நிற்கும்.

Verily does the whole world fall at the feet of a great conqueror who has regained the lost kingdom of his soul. 8

269. கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு.

தவத்தில் தலைமை பெற்றவர்க்கு யாவராலும் கடக்கமுடியாத யமனையும் வெல்லுந் திறமை உண்டாகும். (மார்க்கண்டேயனிடத்திலறிக.)

It is death that is dead before the might of him who has subdued his self. 9

270. இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

உலகத்தில் செல்வமுடையவர் சிலராக, வறுமையாளர் பலராதற்குக் காரணம் யாதெனில் தவஞ் செய்பவர் சிலர், தவஞ் செய்யாதவர் பலர்.

Only a few blessed souls walk amidst the squalor and dirt of the world ; for is it not true, that there is only one in a million that does severe penance far away from the ignoble strifes of men ? 10

அதிகாரம்—28

கூடா ஒழுக்கம்

IMPOSTURE

தாம் நீக்கிய காம இன்பத்தை மனவுறுதி யில்லாமையினால் மீண்டும் விரும்பி அவ்வழியில் ஒழுகும் தீய வொழுக்கம்.

271. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.

வஞ்சனை பொருந்திய மனத்தை யுடையவனது, கள்ள நடத்தையைப் பிறர் அறியாமற் போயினும், உடம்பாய் அவனோடு கலந்து நிற்கின்ற பஞ்ச பூதங்களும் கண்டு, பிறர் அறியாவகை தமக்குள்ளே பரிகசித்துச் சிரிக்கும்.

All the five hidden forces that watch the silent workings of a man's soul, scornfully smile within at his own deception. 1

272. வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றப் படின்.

ஒருவனுக்குத் தான் குற்றமென்று அறிந்த ஒழுக்கத்தில், தன் மனம் தங்குமாயின், ஆகாயம்போல உயர்ச்சிபெற்ற தவத்துக்குரிய வேஷம் என்ன பயனைச் செய்யும் ?

Of what avail is the heavenly look of a dissembler with a guilty conscience within ? 2

273. வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

மனத்தை அடக்கும் வலிமையில்லாதவன், அவ்வலிமையுடையவரது தவ வேடத்தைப் பூண்டு, மனம்போன வழியிலே நடத்தல், காவலாளிகள் தன்னை அதட்டி ஓட்டாதிருக்கும்படி பசு, புலித்தோலைப் போர்த்துக் கொண்டு பயிரை மேய்ந்தது போலாகும்.

A sanctimonious humbug who is a veritable thrall to his vile passions is like a cow that, in a tiger's skin, grazes on other men's meadows. 3

274. தவம்மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று.

மனமடங்காதவன், தவவேடத்தில் மறைந்துநின்று பாவத்தொழில்களைச் செய்தல், வேடன் புதரிலே மறைந்திருந்து பறவைகளைப் பிடித்தாற் போலும்.

A hypocrite who affects piety is like a heartless hunter skulking near a bush to catch the birds that merrily sing among the neighbouring branches. 4

275. பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்(று)
ஏதம் பலவும் தரும்.

தம்மைப் பிறர் கௌரவித்தற் பொருட்டு, ஆசைகளை முழுதும் நீக்கி விட்டோம் என்று சொல்வாரது கள்ள நடத்தை, அப்பொழுது இனிது போலத் தோன்றினும், பின்னர் 'என் செய்தோம்! என் செய்தோம்!' என்று தாமே அநுதாபப்படும்படி பல துன்பங்களையும் கொடுக்கும்.

The pricking conscience of a villain, who has deceived the world in the garb of an ascetic, makes him in the end cry out, in the bitterness of the heart, "what folly have I wrought, what folly have I wrought." 5

276. நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்.

மனத்தினால் பற்றுக்களைத் துறவாராகித் தம்மைத் துறந்தவர்போலப் பாவித்துத் தமக்குத் தானஞ் செய்பவரை வஞ்சித்து வாழ்கின்றவர்களைப் போலக் கொடியவர்கள், உலகத்தில் இல்லை.

The vilest and the most heartless among men is a miscreant who assumes the mask of piety and passes for an honest soul among the men of the world. 6

277. புறங்குன்றி கண்டனையர் ஏனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து.

குன்றிமணியின் மேற்புறம்போல வெளிக்குச் செம்மையுடையவராய்த் தோற்றி, அதன் மூக்குக் கறுத்திருப்பதுபோல மனத்திற் கறுப்புடையவர் (குற்றமுடையவர்) உலகத்தில் உண்டு.

Beware of the villains that skulk among you : fair and graceful are they in their saffron robes like the outerform of a kunri seed ; but like the tip of the nose of that berry is their heart dark as hell. 7

278. மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

உள்ளத்தில் அழுக்கிருக்க, அதனை யொழிக்கக் கருதாமல், மறைக்கும் பொருட்டு, உடலழுக்கைக் கழுவி வெளி வேஷம் கொள்ளும் சந்நியாசிகள் பலர் ஆவர்.

Many there are that bathe in sacred streams and pass for pious men in the eyes of the world: Oh! beware of such men; for verily they are foul of heart and live the lives of hidden shame. 8

279. கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங் கன்ன
வினைபடு பாலால் கொளல்.

அம்பு உருவத்தினால் கோணலில்லாமல் ஒழுங்குபெற விருப்பினும் செயலால் கொலை செய்யத்தக்க கொடுமையுடையதாம். வீணை, உருவத்தால் வளைந்ததாயினும் செயலால் பிறர்க்கு இன்பந்தருவது; அவ்வாறே, கொடுமையுடையராதலும், செம்மையுடையராதலும், ஆகியவற்றை உருவத்தால் துணியாது அவரவர்களுடைய செயல்களைக் கொண்டே அறிய வேண்டும்.

Build not your faith in mere appearances; for appearances are deceitful: behold how straight and well-shaped does yonder arrow look; yet it is deadly keen and pierces men to death: but, oh! hear and listen how a misshapen and crooked veena enraptures the souls of men. 9

280. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த(து) ஒழித்து விடின்.

தவத்திற்கு ஆகாது என்று, உயர்ந்தோரால் குற்றமாகச் செய்யப்பட்ட காமத்தைத், தவஞ்செய்வோர் நீக்கிவிடுவாராயின், அவருக்குத் தலைமயிரைச் சிரைத்து நீக்குதலும், அதனைச் சடையாக்கலும் ஆகிய வேடம் வேண்டுவதில்லை.

Is there any need for matted locks, and a shaven crown, if the heart is tender and pure and shuns what all the world condemns as wrong? 10

அதிகாரம்—29

கள்ளாமை

ABSENCE OF FRAUD

பிறர் உடைமையாயிருக்கும் எந்தப் பொருளையும் அவரை வஞ்சித்துக் கொள்ள நினையாமை.

281. எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு.

முத்தி யுலகத்தை இகழாது விரும்புவான் இவன் என்று தவஞ்செய்வோரால் நன்கு மதிக்கப்பட வேண்டுமானால், அவன் பிறரது எந்தப் பொருளையேனும் வஞ்சித்துக் கொள்ளக் கருதாதபடி தனது மனத்தை அடக்கக் கடவன்.

Guard yourself against every dark thought of fraud, lest you should become the scorn of the world. 1

282. உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

குற்றங்களைத் தம் மனத்தால் கருதுதலும் துறந்தார்க்குப் பாவமாம்; ஆதலால் பிறர்க்குரிய பொருளை அவர் அறியாதபடி வஞ்சித்துக்கொள்வோம் என்று எண்ணுதொழிக.

The very thought of stealing others' riches is sin ; for, if you lust after the possessions of another, you have committed theft already in your heart. 2

283. களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்(து)
ஆவது போலக் கெடும்.

பிறரை வஞ்சித்தலால் வந்த செல்வம், வளர்வது போலத் தோன்றி அழியும்பொழுது பாவத்தையும் பழியையும் அவனிடம் உண்டாக்கி நிறுத்தி விட்டு, முன் செய்துள்ள அறத்தையும் உடன்கொண்டு போகும்.

Behold the fortune that is built up by fraud; verily it decays even in the midst of its smiling plenty. 3

284. களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும்.

ஒருவன் பிறர் பொருளை வஞ்சித்துக்கொள்வதில் மிக்க ஆசை கொண்டால், அவ்வாசை அப்பொழுது இனிது போலத் தோன்றித், தான் பயனைக் கொடுக்கும்போது நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

The insatiable thirst for plunder brings in the long run endless grief. 4

285. அருள்கருதி அன்புடையர் ஆதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.

பிறர் பொருளை வஞ்சித்துக்கொள்ளக் கருதி அவர் மறந்திருக்கும் சமயத்தை எதிர்பார்த்திருப்பவரிடத்தே அருளினது மேன்மையை யறிந்து, அவ்வருளின்மேல் அன்புடையராயிருத்தல் இல்லை.

Does the villain who lies in wait to rob another of his wealth in his unguarded moment ever know the acts of tenderness which spring out of a benevolent heart ? 5

286. அளவின்கண் நின்றுஒழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர்.

உயிர்களின் தன்மை முதலியவற்றைப் பிரமாணங்களால் ஆராய்ந்து அறிந்து அவ்வழியிலே நின்று அதற்குத் தக்கபடி நடக்கமாட்டாதவர் யாரென்றால், வஞ்சனையினால் பிறர் பொருளைக் கவர்ந்துகொள்ள ஆசைப் படுபவர்.

He walks not in the path of rectitude who is full of the consuming thoughts of plunder. 6

287. களவென்னும் கார்அறி(வு) ஆண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்.

களவு என்று சொல்லப்படுகிற அஞ்ஞானத்தை, யுடையவராயிருத்தல், உயிர் முதலியவற்றை மேற்சொல்லியவாறு ஆராய்ந்தறிதல் என்ற வல்லமையை விரும்பியவரிடத்தில் இல்லை.

The dark forces of fraud and deceit do not invade a devout heart that hungers for the joy which comes of righteousness. 7

288. அளவறிந்தார் நெஞ்சத்(து) அறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

தத்துவ ஆராய்ச்சியிற் பயின்றவரது மனத்தில் துறவறம் மாறுபடாமல் நிற்பதுபோலக், களவையே பயின்றவரது நெஞ்சில் வஞ்சனை நீங்காது நிலை பெறும்.

Righteousness for ever dwells in the heart of him that treads the path of virtue : even so does the soul of a robber become the haunt of foul thoughts of deceit. 8

289. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்.

களவைத் தவிர மற்றைய நல்வழிகளை யறியாதவர், அந்தத் தருமத் தியானம் நீங்க, வழி, பயன் முதலிய அந்தக் களவின் உபாயம் ஆகிய தீய நினைவுகளை நினைத்து அப்பொழுதே அழிவர்.

Behold the man who thinks on nothing but fraud and deceit ; he straightway perishes in the dust. 9

290. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

களவினைப் பயின்றவர்களுக்குத் தம்மோடு கூடிநின்ற உடம்பும் தவறிப் போய்விடும்; களவினிற் பயிலாதவர்க்குத் தம்மின் வேறுபட்டு வெகு தூரத்திலிருக்கிற தேவலோகம் பெறுதலும் தவறாது கிடைக்கும்.

Even his body is not his own who practises deceit on the world: but heaven awaits the soul which is free from it. 10

அதிகாரம்—30

வாய்மை

TRUTHFULNESS

மெய்யினது தன்மை.

291. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்.

வாய்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது எதுவென்றால், பிறர்க்கு நன்மை பயத்தற்கு உரிய நிகழ்ந்தது கூறலும், தீங்குதராத நிகழாததைச் சொல்லுதலுமேயாம்.

What is truthfulness? It is the utterance of such words that smack not of even the slightest taint of evil. 1

292. பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.

பழிபாவங்களைத் தராத தருமத்தைக் கொடுக்குமானால், பொய்ம் மொழிகளும் மெய்ம்மொழிகளிற் சேர்ந்தனவேயாகும்.

Even falsehood carries with it the very stamp and ring of truth, if unmixed good springs from it. 2

293. தன்னெஞ்(சு) அறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

ஒருவன், தனது மனம் அறிந்த ஒன்றைப் பிறர் அறிந்திலர் என்று மறைத்துப் பொய் சொல்லாமல் இருக்கக் கடவன்; அங்ஙனம் பொய் சொன்னால், அதனை அறிந்த தன்னுடைய மனமே அப்பாவத்துக்குச் சாட்சியாய் நின்று தன்னை அதன் பயனாகிய துன்பத்தை அடையும்படி செய்யும்.

Speak not a word which you know in the innermost core of your being as false, lest your own conscience should smite you. 3

294. உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

ஒருவன், தன் மனத்துக்கு ஏற்பப், பொய் சொல்லாது நடப்பானு யின், அவன், உயர்ந்தோர் யாவராலும் மதிக்கப்படுவான்.

Behold the man who is true to the very marrow of his bones ; he lives enshrined in the hearts of all. 4

295. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை.

ஒருவன், தன் மனத்திற்கு ஒத்த உண்மையையே சொல்லுவானுயின், அவன் தவமும், தானமும், ஒருங்கு செய்வாரைக் காட்டிலும் சிறப்புடையவனுவன்.

More glorions than a benefactor and an ascetic is a sincere heart from whose depths words of truth gush out. 5

296. பொய்யாமை யன்ன புகழில்லை; எய்யாமை
எல்லா அறமும் தரும்.

ஒருவனுக்கு, இம்மை மறுமைப்பயன்களாகிய புகழையும் அறத்தையும் முறையே வருந்தாமல் அளிக்கவல்லது பொய்பேசாமை ஒன்றேயாம்.

There is no other renown greater than that which comes of truthfulness ; for it easily unlocks the treasures of every other virtue. 6

297. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

பிற அறங்களை யெல்லாம் தரும் பயனைத் தானொன்றே கொடுக்குந் திறமையுடையதாதலின், பொய் கூறுமையாகிய அறத்தையே ஒருவன் தவறுமல் மேற்கொண்டொழுகக் கடவன்.

Every other penance is superfluous to him that dwells in the light of truth. 7

298. புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

ஒருவனுக்கு, உடம்பு பரிசுத்தமாகுதல் நீரால் உண்டாகும்; அதுபோல மனம் பரிசுத்தப்படுதல் உண்மை பேசுதலால் உண்டாகும்.

Water cleanses the body ; truth cleanses the soul. 8

299. எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

வெளியிருளைப் போக்குகின்ற, சூரியன், சந்திரன் அக்கினியாகிய விளக்குகளெல்லாம் சிறந்த விளக்குகள் ஆகாவாம்; துறவற வொழுக்கத்தால் மிக்கவர்க்குச் சிறந்த விளக்காவது, அஞ்ஞானத்தைப் போக்குகின்ற பொய்யாமையாகிய விளக்கே ஆம்.

All the lights that shine in the realm of nature are not lights in the eyes of the sages; for to them, the lamp of truth, which chases away the hidden darkness of their soul, is the only light. 9

300. யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

யாம் மெய்ந்நூலாகக் கண்ட நூல்களுள், எவ்விதத்தாலும் உண்மையினும் உயர்வாகிய தருமம் வேறு கண்டதில்லை.

In all my ceaseless wanderings in the world of thought and imagination, I have found nothing worthier than truthfulness. 10

அதிகாரம்—31

வெகுளாமை

ABSTAINING FROM ANGER

கோபங் கொள்ளுவதற்குக் காரணம் ஒருவனிடத்து இருந்தாலும் கோபங் கொள்ளாமை.

301. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்; அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கால் என்.

தன் கோபம் பலிக்குமிடத்துச், செலுத்தாமல் தடுப்பவனே, அருளால் தடுப்பவனாவன்; அது பலியாத மற்றை இடத்து அதனைத் தடுத்தாலென்ன? தடுக்காவிட்டாலென்ன?

Only in him does the true spirit of forbearance dwell who has the power to strike, but withholds; but of what avail is the forbearance of the weak? 1

302. செல்லா இடத்துச் சினந்தீது; செல்லிடத்தும்
இல்லதனின் தீய பிற.

ஒருவன், தனது கோபத்தைத் தன்னினும் வலியவர்மேல் செலுத்துவானாயின், அப்பொழுதே அது தனக்குத் தீங்கைத் தரும்; தன்னினும் எளியவர்மேல் செலுத்தினால் அது இம்மையிற் பழியும் மறுமையிற் பாவமும் தருதலின் அதனைப் பார்க்கிலும் தீயவை வேறில்லை.

Impotent fury against a foe mightier than one doth breed harm unto ourselves. And the wrath turned against the weak is wrought with greater disaster. 2

303. மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்.

யாவர்மீதும் கோபங்கொள்ளுதலை மறக்கவேண்டும்; ஏனென்றால் தீமையுடையனவெல்லாம் ஒருவர்க்கு உண்டாதல் அக்கோபத்தினாலேயே யாதலால்.

Whosoever your offender may be, forget your wrath ; for out of it does spring a host of evils. 3

304. நகையும் உவகையும் கொல்லுஞ் சினத்தின்
பகையும் உளவோ பிற.

அருளால் உண்டாகிய முகமலர்ச்சியும், மனத்தினிடத்து உண்டாகிய மகிழ்ச்சியையும் கெடுத்து எழுகின்ற கோபத்தைப் பார்க்கினும், துறந்தார்க்கு வேறு கொடிய பகைகளும் உண்டோ? இல்லை.

Anger slays our smiles and takes away the cheer of our hearts: is there a foe deadlier than wrath ? 4

305. தன்னைத்தான் காக்கின் சினங்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்.

துன்பம் அடையாமல், தன்னைக் காக்க ஒருவன் நினைப்பானாயின், தன் மனத்திலே கோபம் வராமல் தடுக்கக்கடவன்; அவ்வாறு தடுக்காவிட்டால் கோபமானது அவனையே கெடுக்கவல்ல கடுந்துன்பங்களை அடைவிக்கும்.

Guard yourself against blind anger, lest it should destroy your soul. 5

306. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்.

கோபமாகிய நெருப்பானது, தான் தோன்றுதற்கிடமா யிருந்தவரை மாத்திரமே யல்லாமல், அவருக்கினமாகிய இதோபதேசஞ் செய்கின்ற மரக்கலம் போன்ற மற்றையோரையும் கெடுத் தொழிக்கும்.

Wild wrath is a flaming fire that consumes even the blessed hearts who are the very canoes of our souls in our voyage to the unknown. 6

307. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

தன் வல்லமையைக் காட்டும் சிறந்தகுணம் இதுவேயென்று கோபத்தை விரும்பி மேற்கொண்டவன், அவ்வல்லமையைத் தவருது இழத்தல், பூமியின் மீது ஓங்கி அறைந்த ஒருவனது கை, அப்பூமியில் தவருது படுதல் போலாகும்.

Pain awaits the hand that strikes against a stony ground. Ruin awaits the soul that seeks its strength in deadly wrath. 7

308. இணரெரி தோய்வன்ன இன்னு செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

பல சுடர்களினுல் ஜ்வலிக்கின்ற பெருநெருப்பைப் போன்று, துன்பந் தருவனவற்றைத் தனக்கு ஒருவன் செய்தாலும், அவன்மீது கோபங் கொள்ளாதிருத்தல் ஒருவனுக்கு முடியுமாயின் அது மிகவும் நல்லதாம்.

It were well for you if you abstain from wrath even against the loveless being whose injuries are as painful as the touch of a thousand-tongued flame of fire. 8

309. உள்ளிய எல்லாம் உடனெய்துட் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்.

தவஞ் செய்வோன், தனது அருள் நிரம்பிய மனத்தால் கோபத்தை ஒருகாலும் நினையானுயின், தான் கருதிய எல்லாப்பேறுகளையும் ஒருங்கே பெறுவான்.

All the longings of your soul become fulfilled, if you banish anger from your heart. 9

310. இறந்தார் இறந்தார் அனையர்; சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

அளவில்லாத கோபத்தையுடையவர், உயிருடையவராயிருந்தாலும் இறந்தவரோடு ஒப்பாவர்; அக்கோபத்தை ஒழித்தவர், தமது உடல் அழியும் தன்மையுடையவராயினும் வீடுபெற்றுரோடு ஒப்பாவர்.

Dead is the heart which is blinded by wrath; but he that is free from it is one with the immortals. 10

அதிகாரம்—32

இன்னுசெய்யாமை

NON-INJURING

எந்தக் காரணத்தினுலும் எவ்வுயிர்க்கும் துன்பஞ் செய்யாமை

311. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னு
செய்யாமை மாசற்ருர் கோள்.

பிறர்க்குத் துன்பஞ் செய்வதனால், யோகமாகிய சிறப்பினால் அடையக் கூடிய அணிமா முதலிய செல்வங்களை ஒருவன் பெறுவதாயிருந்தாலும், அத்தகைய துன்பத்தைச் செய்யாதிருத்தலே குற்றமற்ற மனத்தை யுடையோரது கொள்கையாம்.

Non-injuring is the religion of the pure in heart. They injure not for all the glory and wealth of the world. 1

312. கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

தம்மேல் பகைகொண்டு ஒருவன், துன்பந்தருவனவற்றைச் செய்தாலும், அத்துன்பந்தருவனவற்றைத் தாமும் அவனுக்குத் திரும்பச் செய்யாமையே குற்றமற்ற பெரியோர் துணிவாகும்.

Behold the blessed souls that walk in truth : they return not evil for evil done out of malice; for that is their way. 2

313. செய்யாமற் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமந் தரும்.

துறவறத்தான், தான் முன்பு ஒரு துன்பமும் செய்யாதிருக்க, தன் மேல் பகை கொண்டவர்க்கும் துன்பத்தைச் செய்யின் பின்பு அச்செய்கை கடத்தற்கரிய துன்பத்தைக் கொடுக்கும்.

Retaliation even for unprovoked injuries brings in its train endless woes. 3

314. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

துறந்தோர், தமக்குத் துன்பஞ் செய்தவரைத் தண்டிக்கும் விதம் எதுவெனில், துன்பஞ் செய்த அவர்கள் வெட்கமடையும்படி அவர்களுக்கு நன்மை தருவனவற்றைச் செய்து, அவர்கள் செய்த தீமையையும், தாம் செய்த நன்மையையும் மறந்துவிடுதலேயாம்.

The noblest revenge is to put the wrong-doer to the blush by doing him a good turn for the harm done to you. 4

315. அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை.

பிறிதோருயிருக்கு வரும் துன்பங்களைத் தமக்கு வந்தன போலப் பாவித்து முன்னதாக அறிந்து அவ்வுயிர்களைக் காப்பாற்றாமற் போனால், உயிர் முதலியவற்றை உள்ளபடி அறிந்த தமது அறிவினால் துறவறத்தார்க்கு உண்டாம் பயன் யாது ?

Of what avail is your knowledge of men and things, if you treat not others alike and shield them not from sorrow and pain? 5

316. இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல்.

இவை மனிதர்க்குத் துன்பந்தருவன வென்று தான் அனுமானப் பிரமாணத்தினால் அறிந்தவற்றைத் துறவி, பிறரிடத்துச் செய்யக் கருதாமை வேண்டும்.

Refrain from what your heart has conceived as injurious to mankind. 6

317. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்
மாணாசெய் யாமை தலை.

மனமறிந்து செய்யுந் துன்பங்களை எக்காலத்தும், யாவர்க்கும் எவ்வளவு சிறிதானாலும் செய்யாதிருத்தல், முதன்மையான அறமாகும்.

It is the height of perfection not to injure any one in the least at any time of your life. 7

318. தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்.

பிறர் செய்யும் தீமை தனக்குத் துன்பஞ் செய்வதைத் தான் அநுபவித்தறிகின்றவன், பிறவுயிர்களுக்குத் துன்பந்தரும் தீமையைத் தான் செய்தல் யாது காரணத்தாலோ ?

It baffles our mind why a soul that has felt the bitter smart of wrong should inflict it on others. 8

319. பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.

ஒருவன், பிறர்க்குத் துன்பந்தரும் தீமையை முற்பகலில் செய்யின், அச்செயல், பிற்பகலில் அவனுக்குத் தீமை பிறர் செய்யாமலே தானே துன்பத்தைத் தரும். பகல்-முகூர்த்தம்.

Evil pursues the wrong-doer close on his heals as even-tide follows dew-washed morn. 9

320 நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம்; நோய் செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

ஒருவர்க்குத் துன்பம் வருதல் பிறவுயிர்க்குத் துன்பஞ் செய்ததனாலேயன்றி வேறில்லை; ஆதலால், தாம் துன்பமடைய விரும்பாதவர் பிறவுயிர்க்கு ஒரு துன்பமுஞ் செய்யாதிருத்தல் வேண்டும்.

Evil recoils on him that doth evil; therefore shuns he evil who seeks freedom from the ills of life. 10

அதிகாரம்—33

கொல்லாமை

NON-KILLING

பிராணிகளைக் கொலை செய்யாமை.

321. அறவினை யாதெனில் கொல்லாமை; கோறல்

பிறவினை யெல்லாம் தரும்.

உயிர்களைக் கொல்லுதல் பாவச் செயல்கள் எல்லாவற்றையும் தரும்; ஆதலால் ஓர் உயிரையும் கொல்லாமையே எல்லா அறங்களின் பயனையும் தரும்.

Not to kill is the very cream of all virtues; but killing leads to every other sin. 1

322. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

தான் உண்ணும் உணவைப் பசித்த உயிர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துத் தானும் உண்டு, ஐவகை உயிர்களையும் வருந்தாதபடி காப்பாற்றுதல், அறநூலுடையார் துறந்தார்க்கு எடுத்துச் சொல்லிய அறங்கள் எல்லாவற்றிலும் சிறந்த அறமாகும்.

Share your bread with the needy, love all that breathes on earth : this is the greatest of all commandments of the prophets of old. 2

323. ஒன்றாக நல்லது கொல்லாமை ; மற்றதன்

பின்சாரப் பொய்யாமை நன்று.

நூலோர் கூறிய அறங்களுள், தனக்குச்சமானம் இல்லாத நல்ல அறம் கொல்லாமையே; பொய் சொல்லாமை என்னும் அறமோ கொல்லாமைக்குப் பிற்பட்டதேயாம்.

The scriptures of the world sing the glories of truthfulness, but far greater than truthfulness is non-killing. 3

324. நல்லா றெனப்படுவ(து) யாதெனின் யாதொன்றும்

கொல்லாமை சூழும் நெறி.

முத்தியையும் மேற்கதியையும் அடைவதற்குரிய நல்ல வழியென்று மதித்துச் சொல்லப்படுவது யாதென்றால், யாதோர் உயிரையும் கொல்லாமையாகிய அறத்தினைக் காக்கக் கருதும் நெறியே.

Only through non-killing of even the very worm that crawls beneath, does lie the sacred path to the far-off shrine of truth. 4

325. நிலையஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.

பிறப்பின் தொடர்ச்சியை யஞ்சி, அப்பிறவியை ஒழித்தற் பொருட்டு இல்வாழ்க்கையை நீக்கித் துறந்தவர் யாவரினும், கொலைப்பாவத்திற்குப் பயந்து கொல்லாமையாகிய அறத்தை மறவாதவனே, சிறந்தோனாவன்.

Of all those that dread the ceaseless cycle of births and deaths, the greatest is he, who, fearing the crime of slaughter, slays not. 5

326. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லா(து) உயிருண்ணுங் கூற்று.

கொல்லாமையை விரதமாக மேற்கொண்டு நடப்பவனது வாழ்நாளின் மீது எல்லா உயிரையுங் கொண்டு செல்லும் கூற்று செல்லாது.

Even death, which devours all, spares the life of him that upholds with all his might the divine commandment "Thou shall not kill." 6

327. தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

ஒருவன், தன்னுயிரைக் காத்துக்கொள்ளும் பொருட்டு, தன்னைக் கொல்ல வரும் பிராணியையும், கொல்லுதல் கூடாது.

Kill not any being, though it be to rescue your own from the very jaws of death. 7

328. நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை.

தேவர் பொருட்டு வேள்வியில் ஓர் உயிரைக் கொலை செய்தலால், ஒருவனுக்கு இன்பத்தை மிகுதியாகத் தருகிற செல்வம் உண்டாகுமென்று இல்லறத்தார்க்குக் கூறப்பட்டதாயினும், துறவறத்தார்க்கு ஓர் உயிரைக் கொல்வதனால் வரும் செல்வம் கடைப்பட்டதேயாம்.

Men say that animal sacrifices in honour of the gods crown a man with countless blessings; but the fortune that is raised on such sacrifices is an abomination to the pure of heart. 8

329. கொலைவினையர் ஆகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவார் அகத்து.

கொலைத்தொழிலை யுடையவராகிய மாந்தர், அத்தொழிலின் இழிவை அறியாத மனத்தையுடையாராயினும், அறிந்தவருடைய மனத்தில் இழிந்த புலைத்தொழிலை யுடையராகவே காணப்படுவர்.

In the eyes of the discerning, the scum and refuse of mankind are they who delight in slaughter. 9

330 உயிருடம்பின் நீக்கியார் என்பர் செயிருடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

கண்டு சகிக்க முடியாத நோயுடம்புடனே வறுமை மிகுந்த இழி தொழில் வாழ்க்கை யுடையவரை, இவர் முற்பிறப்பின்கண் உயிர்களைக் கொன்றவர் என்று பெரியோர் சொல்லுவர்.

Behold the loathsome leper of a beggar crouching in a street corner to the disgust of all: the wise say of him "Lo! there sits yonder an evil one that has taken in a former birth the life of another." 10

ஞானம்

ஞானமாவது, வீடு பெறுதற்குக் காரணமாகிய உணர்வு.

அதிகாரம்—34

நிலையாமை

THE INSTABILITY OF ALL THINGS

உற்பத்தியுள்ள பொருள்களெல்லாவற்றுக்கும் ஒரு காலத்து அழிவு உண்டெனல்.

331. நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

நிலையில்லாத பொருள்களை நிலையுடையனவாக நினைக்கிற அற்ப அறிவினையுடைமை துறந்தார்க்கு இழிவு ஆகும்.

Is there any folly greater than the infatuation of a man who builds his faith in the passing empty shows, as though they were beyond the pale of the ravages of time? 1

332. கூத்தாட்(டு) அவைக்குழாத் தற்றே; பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.

ஒருவனிடத்து மிக்க செல்வம் வந்தடைதல், நாடக சாலைக்குக் காண்பவர் கூட்டம் வந்து சேர்ந்தாற்போலும்; அச்செல்வம் அவனை விட்டு நீங்குதலும், கூத்து முடிந்தவுடன் அக்கூட்டம் அவ்விடத்தினின்று நீங்கியதுபோலும்!

The eager crowd that gathers round to witness a village show stands as the symbol of the incoming tide of fortune; but its ebb is

like the melting away of the self-same crowd after the singing and dancing are over. 2

333. அற்கா இயல்பிற்றுச் செல்வம்; அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.

செல்வம் நிலையில்லாத தன்மையை யுடையது; ஆதலால் அதனைப் பெற்றால் அதனாற் செய்யப்படும் அழிவற்ற அறங்களை அதனைப் பெற்ற பொழுதே செய்யவேண்டும்.

Fickle is fortune; therefore, if you come by a windfall, delay not to do acts that are of lasting good. 3

334. நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாள(து) உணர்வார்ப் பெறின்.

உயிரானது, நாள் என்று அளவு செய்யப்படுவதாகிய ஒரு கால அளவு போலத் தன்னைக் காட்டி, அறுத்துச் செல்லுகின்ற வாளாயுதத்தின் வாயில் உள்ளது; ஆராயும் அறிவினையுடையோர்க்கன்றி இது ஏனையோர்க்குப் புலப்படாது.

Time seems all smiles and laughter, but verily it is a saw that ceaselessly saws away the life of man. 4

335. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

இறக்குந் தறுவாயில், பேச முடியாதபடி நாவை யடக்கி விக்கல் எழுவதற்கு முன்பே, முத்திக்குக் காரணமான தருமங்களை விரைந்து செய்யவேண்டும்.

Ere the tongue lies powerless amidst your death-rattle, make your life all compact with the numberless acts of kindness and of love. 5

336. நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு.

நேற்று இருந்தவன் இன்றைக்கு இல்லை என்று சொல்லும் நிலையாமை யாகிய பெருமையை யுடையது இவ்வுலகு.

Yesterday he was; and to-day he is not; such is the glory of this wondrous earth! 6

337. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பல.

ஒரு கணப்பொழுதளவும் தம் உடம்பும் உயிரும் சேர்ந்து இருத்தலைத் தெளியமாட்டாதவர், கோடி என்னும் அளவோடு நில்லாமல் அதற்கும் மேற்பட்ட பல நினைவுகளை நினைப்பார்கள். (அறிவிலாதார்).

Man knows not what awaits him at the next hour: yet he is a prey to a thousand and one dreams and fancies. 7

338. குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்பொ(டு) உயிரிடை நட்பு.

உடம்பிற்கும் உயிர்க்கும் உளதாய தொடர்பு, முன் தனிமையாயில்லாத முட்டை, பின்னர்த் தனித்துக் கிடக்கும்படி, அதனுள் இருந்த பறவை, பருவம் வந்தவுடன் பறந்துபோகும் தன்மையுடையது போலும்!

The new-fledged bird abandons its own broken shell of egg and flies away into the dreamy blue; that is the mark and symbol of the union that exists between the soul and the body. 8

339. உறங்குவது போலும் சாக்காடு: உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

ஒருவனுக்கு மரணம் நேரிடுதல், தூக்கம் வருவதைப் போலாம்; பிறப்பு வருதல் தூக்கம் நீங்கி விழிப்பதைப் போலாகும்.

Death is kin to sleep; but life is just the waking-from that sleep. 9

340. புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு.

வாதம், பித்தம், சிலேத்தும முதலாகிய நோய்களுக்கு இருப்பிடமாகிய உடம்புகளுள் நிலைத்திராது நீங்கும் உயிர்களுக்கு, எப்பொழுதும் நீங்காமல் இருத்தற்குரிய வீடு இதுவரையில் அமையவில்லை போலும்!

The soul takes shelter in a fragile and decaying body; is it because she has not a home that she can claim as her own? 10

அதிகாரம்—35

துறவு

RENUNCIATION

புறமாகிய செல்வத்திலும் அகமாகிய உடம்பிலும் உள்ள பற்றை, அவற்றின் நிலைமையை நோக்கித் துறத்தல்.

341. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

ஒருவன், எந்த எந்தப் பொருளின் விஷயமான அவாவை நீக்குகிறானோ அவன், அந்த அந்தப் பொருளினால் வரும் துன்பத்தை யடைவான்.

Freedom from all thraldoms of desire is alone real freedom from all shapes of grief that arise from desire. 1.

342. வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல.

எப்பொருளையும் பற்றறத் துறந்தால், ஒருவனுக்கு இம்மையிலேயே யடைதற்குரிய இன்பங்கள் பலவாகும்;அவ்வின்பங்களைப் பெறவிரும்பினால் தக்க காலத்திலே அப் பொருள்களின் பற்றுக்களைத் துறக்கக் கடவன்.

If you want to realize the joy within you, become a sanyasin bold even in the bright season of your youth: for out of renunciation streams out endless delight here below. 2

343. அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை; விடல்வேண்டும்
வேண்டிய வெல்லாம் ஒருங்கு.

முத்தியை யடைவார்க்கு, செவி முதலிய ஐம்பொறிகளுக்குரிய வாய ஓசை முதலிய ஐம்புலன்களையும் நீக்கிவிடுதல் வேண்டும்; நீக்கும்பொழுது அப்புலன்களை அனுபவித்தற் பொருட்டுத் தாம் சேர்த்து வைத்த பொருள் முழுவதையும் ஒருங்கே விட்டுவிடல் வேண்டும்.

Oh ye who seek truth, show no quarter, trample under your heels all the desires of the senses and renounce all that have been a possession and a passion unto you. 3

344. இயல்பாகும் நோன்பிற்(கு)ஒன் றின்மை ; உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து.

அவா வைத்தற்குரிய ஒரு பொருளும் இல்லாதிருத்தலே, தவஞ் செய்வார்க்கு இயல்பாம் ; அவ்வாறன்றி ஒரு பொருளையேனும் வைத்திருத்தலால் அப்பொருள் அத்தவத்தைக் கெடுத்துவிடும். அதனால் மீண்டும் மயங்குதற்கு ஏதுவாகும்.

To be rid of all belongings is the law of the order of monks: for even the vestige of a wordly possession drags back the unfettered spirit into very dust and delusion. 4

345. மற்றும் தொடர்ப்பா(டு) எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்(கு) உடம்பும் மிகை.

பிறப்பை யொழிக்க முயல்வார்க்கு, அதற்குக் கருவியாகிய உடம்பே தடையானால், யாதொரு சம்பந்தமுமில்லாத மற்றைய பொருள்கள் தடையென்பதைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ ?

Even the body is an encumbrance to a great heart that desires to lay the axe at the root of endless births, not to talk of the trappings and other bonds of life. 5

346. யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த வுலகம் புகும்.

தானல்லாத உடம்பை யான் என்றும், தன்னோடு சம்பந்தமில்லாத பொருளை எனது என்றும் நினைத்து, அவற்றினிடத்துப் பற்று வைத்தற்கு ஏதுவாகிய அஞ்ஞானத்தை (மயக்கத்தை), குரு உபதேசத்தால் ஒழித்தவன், தேவர்களுக்கும் அடைதற்கரியதாகிய முத்தியுலகத்தை யடைவான்.

He enters a region greater than the world of the gods who shatters the feelings of 'I' and 'Mine' which spring from overweening pride and vanity. 6

347. பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

இருவகைப் பற்றுக்களையும் இறுகப்பிடித்துக்கொண்டு விடமாட்டாதவரைப் பிறவித் துன்பங்கள் இறுகப் பற்றிக்கொண்டு அவரைவிட்டு நீங்காவாம்.

Sorrow seizes the heart that does not shake off its attachments to the world. 7

348. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

முற்றத் துறந்தவரே முத்தியை யடைந்தவராவர்; அப்படித் துறவாத மற்றவர்களே மயங்கிப் பிறப்பாகிய வலையில் அகப்பட்டவர்களாவர்.

He enters the far-off shining city of God, who abandons all ; but the rest pine away caught in the noose of endless births and deaths. 8

349. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும்.

ஒருவனுக்கு இருவகைப் பற்றும் அற்றபோதே அப்பற்றறுதி, அவனது பிறவித் துன்பத்தை ஒழித்து விடும்; இருவகைப் பற்றும் நீங்காவிடத்து, அவற்றால் பிறந்தும் இறந்தும் வருகிற நிலையாமையே அவனிடத்துக் காணப்படும். (அழியாத வீட்டுலகம் காணப்படாது.)

Man cleaves asunder the bonds of life, the moment he forsakes the world ; but others are whirled about from age to age in the purposeless eddies of life. 9

350. பற்றுக பற்றற்றான் பற்றினை ; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

ஒருவன், விடாது வந்த தனது பற்றை நீக்குதற்கு, எல்லாப் பொருளையும் பற்றி நின்றே அவற்றில் பற்று நீங்கிய இறைவன் அருளிய முத்திவழியை இதுவே தனக்கு நல்லவழியென்று மனத்திற்கொண்டு, அதனை யடைதற்குத் தியான சமாதிகளைச்செய்ய வேண்டும்.

Take refuge in the unfetterred indwelling spirit of the Lord and hold fast to it with hoops of steel in order that your own fetters may be hacked to pieces. 10

அதிகாரம்—36

மெய்யுணர்தல்

REALIZATION

பந்த மோக்ஷங்களையும், அவற்றின் காரணங்களையும் சந்தேக விபரீதங்களற உண்மையாய் அறிதல்.

351. பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு.

மெய்ப்பொருள் அல்லாதவற்றை மெய்ப்பொருள்களென்று உணர்கிற விபரீத ஞானத்தினால் இன்பமில்லாத பிறப்பு உண்டாகிறது.

Man comes by a life of sorrow only through delusion which makes him mistake a booth of the Vanity Fair for the very Temple of Truth. 1

352. இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

அவித்தையினின்று நீங்கிக் குற்றமற்ற தத்துவஞானமுடையவர்க்கு, அம் மெய்யறிவானது, பிறவியை நீக்கி முத்தியின்பத்தைக் கொடுக்கும்.

Darkness dies away, and joy dances in the heart of him who, from all delusion free, catches with an un-dimmed vision, the splendour of the soul within. 2

353. ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய(து) உடைத்து.

ஐயத்தினின்று நீங்கி, மெய்ப்பொருளை யுணர்ந்தார்க்கு, தாம் இருக்கும் இந்த நிலவுலகத்தினும் அடையக்கடவதாகிய முத்தியுலகம் சமீபத்திலுள்ளதாகும்.

Nearer than the earth is heaven to a sage from whose heart doubts have vanished and mists of error have rolled away. 3

354. ஐயுணர்வு எய்திக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு.

உண்மைப் பொருளை யறியாதவர்க்கு ஐம்புலன்களைத் தம்து வசமாகச் செய்தும் அதனால் பயன் இல்லை.

Of what avail is the perception of your senses, if you are not endowed with the vision and the faculty divine? 4

355. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

எந்தப் பொருள் எந்த இயல்பையுடையதாய்க் காணப்பட்டாலும், அத் தோற்றத்தைக் கண்டு மயங்காமல், அப்பொருளின் தோற்றத்தை நீக்கி, மெய்ப்பொருளைக் காண்பதே அறிவாகும்.

Go behind the veil of whatever things you may come across in life and track the spirit of truth to its subtlest retreats. Therein lies wisdom. 5

356. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

இம்மையிலே உபதேச மொழிகளைத் தக்க அனுபவமுடைய ஞானாசிரியரிடத்தே கேட்டறிந்து, அதனால் உண்மைப் பொருளை யுணர்ந்தவர், மீண்டும் பிறப்பின்கண் வாராத நெறியாகிய முத்தியை யடைவர். [வீட்டிற்கு நிமித்த காரணமாகிய முதற்பொருளை யுணர்தற்கு உபாயம் மூன்று. அவை கேள்வி, விமரிசம், பாவனை என்பன.] (இது கேள்வி.)

Behold the man who has fathomed the depths of his soul and stumbled upon reality ; he shall enter the path that leads not again into the darkness of the world. 6

357. ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

அங்ஙனம் கேட்ட உபதேசப் பொருள்களை, ஒருவனது உள்ளம் தெளியுமாறு பிரமாணங்களாலும், யுக்தியினாலும் ஆராய்ந்து, அதனால் முதற்பொருளை அறிவானானால் அவனுக்கு மீண்டும் பிறப்பு உண்டென நினைக்கவேண்டுவதில்லை. (இது விமரிசம்.)

In life's voyaging, there is no more need to sail from harbour to harbour for one, who is lost in ceaseless meditation and becomes one with the Maker. 7

358. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு.

பிறப்பிற்கு முதற் காரணமாகிய அஞ்ஞானங் கெட, மோக்ஷத்திற்கு நிமித்த காரணமாகிய மெய்ப்பொருளைக் காண்பதே, ஒருவனுக்கு மெய்யுணர்வாகும். (இது பாவனை.)

It is true wisdom to know the supremely Good and the Adorable, to emerge from the folly and delusion of life and death. 8

359. சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய்.

ஒருவன், எல்லாப் பொருள்களுக்கும் சார்பாகிய பரம்பொருளை யுணர்ந்து, தனது இருவகைப் பற்றுக்களும் கெடும்படி ஒழுகவல்லனாயின், முன் அவனைச் சார்தற்குரியனவாய் நின்ற துன்பங்கள், அவ்வுணர்வையும் ஒழுக்கத்தையும் கெடுத்துப் பின் ஞானயோகங்களின் முதிர்ச்சியையுடைய அவனிடத்துச் சேராவாம்.

Life's sorrows that afflict the whole creation cling not to the soul which has sought shelter under the wings of the Mighty Being that sustains all. 9

360. காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமங் கெடக்கெடு நோய்.

ஞானயோகிகளுக்கு, விருப்பு, வெறுப்பு, அஞ்ஞானம் என்னும் மூன்று குற்றங்களின் பெயருங்கூடக் கெடுதலால், அவற்றால் வரும் துன்பங்கள் உண்டாகமாட்டா.

All the ills of life vanish into nothingness, when our heart is rid of the triple tyranny of lust, wrath and delusion. 10

அதிகாரம்—37

அவா வறுத்தல்

THE SLAYING OF DESIRE

பிறவிக்கு வித்தாகிய ஆசையினை இடைவிடாத மெய்ப்பொருள் உணர்வால் அறுத்தல்.

361. அவாவென்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

எல்லா உயிர்களுக்கும் எக்காலத்திலும் ஒழியாது வருகின்ற பிறப்பை உண்டாக்கும் வித்து, யாது எனில் அவாவே ஆகும் என்று கூறுவர் நூலோர்.

Desire, the wise say, is the seed that always yields a never-failing crop of births to every soul that walks on earth. 1

362. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை ; மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

பிறப்பே துன்பத்திற்குக் காரணம் என்று அறிந்தவன், ஒரு பொருளை விரும்பினால் பிறவாமையாகிய பொருளையே விரும்பவேண்டும்; அப்பிறவாமை தான், ஒரு பொருளையும் விரும்பாதிருத்தலாலே அவனுக்குத் தானே உண்டாகும்.

If you long for anything in life, yearn for the cessation of the round of births; and freedom from births comes of the slaying of desire. 2

363. வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை;
யாண்டும் அஃதொப்ப தில்.

ஒரு பொருளையும் விரும்பாதிருத்தலுக்குச் சமானமான சிறந்த செல்வம், பிரத்தியக்ஷ பிரமாணத்தால் அறியக்கூடிய இவ்வுலகத்தில் இல்லை; இனி அவ்வளவே அல்ல ; சப்தபிரமாணத்தால் அறியப்படுகின்ற தேவலோகத்திலும் அதற்குச் சமானமானது இல்லை.

Either in the land of the living or in the region of the gods, there is no wealth more precious than freedom from the fetters of desire. 3

364. தூஉய்மை என்ப(து) அவா இன்மை ; மற்றது
வா அய்மை வேண்ட வரும்.

ஒருவனுக்கு பரிசுத்தத் தன்மையையுடைய மோக்ஷம் என்று சொல்லப்படுவது, அவா இல்லாமையே; அவ் அவா இல்லாமையானது, மெய்ப் பொருளை இடைவிடாது பாவிக்கத் தானே உண்டாகும்.

Purity of heart springs from desirelessness : verily freedom from desire flows from the yearning of the soul that stretches its arms towards perfection. 4

365. அற்றவர் என்பார் அவா அற்றார் ; மற்றையார்
அற்றாக அற்ற திலர்.

பிறப்பற்றவர் என்று சொல்லப்படுபவர், அதற்கு நேரே காரணமாகிய அவாவை அற்றவரே; பிற காரணங்கள் அற்று அவ் அவா ஒன்றை நீக்காதவர், அவற்றால் சில துன்பங்கள் ஒழிந்தவராவதன்றி அவர்போல் பிறவியற்றவர் ஆக மாட்டார்.

The liberated ones are they who have wrought their freedom from the bonds of desire ; the rest enjoy not such light of freedom. 5

366. அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா.

மெய்யுணர்தல் முதலிய காரணங்கள் எல்லாவற்றையும் பெற்று, அவற்றால் வீட்டை அடைதற்குரிய ஒருவனிடத்து, மயக்க வழியால் புகுந்து பின்னும் பிறப்பினிடத்து விழும்படி செய்து, அவனைக் கெடுக்கவல்லது ஆசையே; ஆதலால் அந்த ஆசையை, பயந்து காப்பதே துறவறம் ஆகும். (அவா அறுத்தலே துறவறத்தின் பயனும்.)

Guard against creeping desires, lest they should steal into your heart and smother the light of your soul. 6

367. அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும்.

ஒருவன் ஆசைக்கு அஞ்சி, அடியோடு அதனை ஒழிக்க வல்லவனானால், அவன் பிறவித் துன்பத்துளகப்பட்டுக் கெடாமைக்குக் காரணமாகிய வினை (துறவறங்கள்) தான் விரும்பும் வழியினாலேயே (துறவறத்தாலேயே) உண்டாகும்.

Immortality is at the command of the man who has banished all desires from the heart. 7

368. அவா இல்லார்க்(கு) இல்லாகும் துன்பம்; அஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்.

ஆசையற்றவர்க்கு யாதொரு துன்பமும் இல்லையாகும்; பிறகாரணங்களெல்லாம் இல்லாதிருந்தும் ஆசைமட்டும் இருந்தால், அதனால் துன்பங்கள் யாவும் ஒழியாது மேன்மேல் வந்து கொண்டிருக்கும்.

He has no grief who has no desires; but sorrow upon sorrow descends on the heart which is a prey to them. 8

369. இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின்.

அவாவென்று சொல்லப்படுகின்ற மிக்க துன்பம், ஒருவனுக்கு நீங்குமானால், அவன், முத்திபெற்ற இடத்தில் மாத்திரமே யல்லாமல் உடம்போடு கூடியிருந்த இடத்தும், இடையறாத இன்பத்தை அடைவான். (இதனை ஜீவன் முக்திநிலை என்ப.)

Even here in this world of strife, man is crowned with everlasting joy, if he slays the cruel monster of desire. 9

370. ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்.

ஒருகாலும் நிரம்பாத இயல்பினையுடைய ஆசையை ஒருவன் நீக்குவானாயின், அந்நீத்த நிலையே, அவனுக்கு அப்பொழுதே எக்காலத்தும், மாறாத இயல்பையுடைய பேரின்பத்தைக் கொடுக்கும்.

Be not blindly searching for immortality : she is on your very palm, the moment you have conquered the insatiable hunger of the heart. 10

அதிகாரம்—38

ஊழ்

DESTINY

இருவினைப் பயன்களும், செய்தவனையே சென்றடைதற்குக் காரணமாகிய முறைமை. (நியதி)

371. ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்;
போகூழால் தோன்றும் மடி.

ஒருவனுக்குப் பொருள் சேர்தற்குக் காரணமாகிய ஊழ் வினையால் முயற்சி உண்டாகும்; அப்பொருள் அழிதற்குக் காரணமாகிய ஊழால் சோம்பல் உண்டாகும்.

Man launches on a stream of endless activity, when the tide of fortune sets in ; but an incurable indolence creeps on him when it ebbs away. 1

372. பேதைப் படுக்கும் இழவூழ்; அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை.

ஒருவனுக்கு எல்லா அறிவும் இருந்தாலும், கைப்பொருளை இழத்தற்கு ஏதுவாகிய ஊழ் வந்தபொழுது, அவ்வூழ், அவனது அறிவை அறிவின்மையாக்கி விடும்; அவ்வாறே அவனுக்கு அறிவு சுருங்கி யிருந்தாலும், கைப்பொருள் உண்டாவதற்கு ஏதுவாகிய ஊழ் வந்தபொழுது, அவ்வூழ் அவனது அறிவை விசாலப்படுத்தும்.

An adverse fate dulls the keen intelligence of a man of wisdom ; but even the foggy and fumbling intellect of a fool brightens up with the sweet smiles of fortune. 2

373. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்.

அறிவுசுருங்குதற்குக் காரணமாகிய ஊழினை யுடையவன், நுட்பமான பொருள்களை உணர்த்தும் நூல் பலவற்றையும் கற்றானாயினும், அது அக்கல்

விப் பயிற்சியைப் பயனறச்செய்து விட்டு அவனது ஊழினலாகிய பேதைமை யையே வளரச் செய்யும்.

Of what avail is the wealth of our mighty wisdom and learning ?; it is fate that overrules us all. 3

374. இருவே(று) உலகத் தியற்கை; திருவேறு;
தெள்ளியர் ஆதலும் வேறு.

உலகத்தில் ஊழினலாகிய தன்மை இருவகைப்படும்: ஆதலால், செல்வமுடையவராக இருத்தற்குரிய ஊழ் வேறு; அறிவுடையவராக இருத்தற்குரிய ஊழ் வேறு.

Behold two different types of men inhabiting this bewildering world of ours ;—the poor wise and the foolish rich. Verily inscrutable are the ways of destiny. 4

375. நல்லவை எல்லாஅம் தீயவாம்; தீயவும்
நல்லவாம் செல்வஞ் செயற்கு.

ஊழ் வினையானது, செல்வத்தை உண்டாக்குதற்குத் தக்க நல்ல சாதனங்களை யெல்லாம் தீயனவாகச் செய்யும்; அதுவும் அல்லாமல், தகாத தீய சாதனங்களை யெல்லாம் நன்மையுடையனவாகவும் செய்யும்

All things, good and promising, end in smoke in an ill-starred moment ; but out of evil flows good when your lucky and lustrous star is in the ascendant. 5

376. பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம.

ஊழினல், தம்மிடத்து நிற்றற்குரியன வல்லாத பொருள்களை, ஒருவன் வருந்திக் காப்பாற்றினலும், அவை தம்பால் நிற்காமல் ஒழிந்துபோம்; அவ்வூழினலேயே, தம்மிடத்து நிற்றற்குரிய பொருள்களைப் புறத்திற் கொண்டுபோய் எறிந்துவிட்டாலும் அவை தம்மை விட்டு நீங்காமல் வந்து சேரும். (வருந்தி யழைத்தாலும்......தொழில்.)

Guard jealously you may what destiny has not decreed unto you, and it slips out of your hands. Scatter your precious pearls in the thick of a jostling crowd ; and they remain untouched as though kept in a close-locked chest ; for are they not yours by fortune secured ? 6

377. வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

தமது அனுபவத்திற்காகப் பொருள்களைக் கோடிக் கணக்காக (மிகுதியாக) வருந்திச் சேர்த்தவர்க்கும், அவற்றைத் தமது ஊழ்வினைப்படியே அனுபவிக்க நேரிடுமே யன்றித் தாம் விரும்புமாறு அனுபவித்தல் இயலாது.

A millionaire cannot enjoy even a moiety of his immense fortune except as the disposer of all things has ordained it. 7

378. துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின்.

ஊழ்வினை, தனது வலிமையால் ஒருவனுக்குத் துன்பஞ் செய்யாம லிருந்தால், தரித்திரர் துறவறத்தில் சேருங் கருத்துடையவர் ஆவர்.

It is not a far cry from a beggar in tattered rags to an ascetic in saffron robes, if fate has not reserved for the poor the cup of misery as their portion. 8

379. நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்.

நல்வினை, தன் பயனாகிய இன்பங்களைக் கொடுக்க வரும்போது அவ் வின்பங்களை நீக்குதற்குரிய வழி தேடாமல், அவற்றை நல்லவையாகக் கொண்டு அநுபவிப்பவர்கள், மற்றைய தீவினை, துன்பங்களைக் கொடுக்க வரும்போது அத்துன்பங்களையும் அவ்விதமே அநுபவியாது, அவற்றை நீக்குதற்குரிய வழியைத் தேடித் துன்பப்படுவது என்ன நினைத்தோ ?

Why should he that sits on the crest of the full tide of fortune fret about his fall ? : for everything comes of the strange and inexorable workings of fate. 9

380. ஊழிற் பெருவலி யாவுள ; மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்.

ஊழானது, தன்னை விலக்கும் பொருட்டுத் தனக்கு விரோதமாகிய ஒரு உபாயத்தை யொருவர் ஆராய்ந்தாலும், அவ்வுபாயத்தை யாவது மற்றொன்றையாவது வழியாகக்கொண்டு, அவ்வாராய்ச்சிக்கு இடங்கொடாது முற் பட்டு வந்து நிற்கும்; ஆதலால், ஊழ்போல மிக்க வல்லமை யுடையவை எவை இருக்கின்றன ? எவையுமில.

Is there anything mightier than fate? : she weaves a strange magic web of her own in the inner shrine of your being, even before you forge an armour against her. 10

அறத்துப்பால் முற்றிற்று.

இரண்டாவது

பொருட் பால்

இரண்டாவது

பொருட் பால்

1. அரசியல்

இனி, இல்லறத்தின் வழியில் சேர்வனவாகிய பொருள் இன்பம் என்னும் இரண்டு புருஷார்த்தங்களுள் இம்மை மறுமை யென்னும் இரண்டையுந் தருவதான பொருளை யுணர்த்தும் பகுப்பைச் சொல்ல எடுத்துக் கொண்டார். பொருட் பால்:—பொருளையுணர்த்தும் பாகம். அது, செல்வத்தின் துணைக்காரணமாகிய ராஜதருமத்தைக் கூறுதலால் விளங்கும். அரச னீதியாவது - குடிகளைக் காக்குந் தொழிலை நடத்தும் முறைமை. அதனை, அரசியல், அங்க வியல், ஒழிபியல் என்று மூவகைப் படுத்துப.

அரசியல் - அரசனது தன்மையைக் கூறும் பாகம்.

அதிகாரம்—39

இறைமாட்சி

THE GREATNESS OF A KING

நற்குண நற் செய்கைகளால் அரசனுக்கு உண்டாகும் பெருமை.

381. படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

சேனையும், நாடும், செல்வமும், அமைச்சும், நட்பும், அரணும் ஆகிய ஆறு அங்கங்களை யுடையவன் அரசருக்குள் ஆண் சிங்கம் போலச் சிறந்தவனுவான். (ஆறு அங்கங்களோடு உடையவனையுஞ் சேர்த்து வடநூலார் ஸப்தாங்க மென்பர்)

He is a lion among kings who has a powerful army, a loyal subject, infinite resources, far-seeing ministers, good friends and impregnable fortifications. 1

382. அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்(கு) இயல்பு.

அரசனுக்கு இயல்பாவது, அஞ்சாத நெஞ்சு படைத்தலும், (மனவுறுதியும) கொடையும, அறிவும், உற்சாகமும் ஆகிய இந்நான்கு குணங்களும் எப்பொழுதும் குறையாது நிற்றல் வேண்டும்.

Unflinching courage, extreme liberality, infinite wisdom, an inexhaustible energy are traits native to a highborn sovereign. 2

383. தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு.

பூமியை அரசாளும் செல்வத்தையுடைய அரசனுக்கு, ராஜாங்கத் தொழில்களில் விரைவுடைமையும், அக்காரியங்களை அறிதற்கு ஏற்ற கல்வியுடைமையும், தைரிய முடைமையும் ஆகிய மூன்று குணங்களும் ஒருகாலும் அவனை விட்டு நீங்கா.

Thr rulers of the earth must be endowed with a sleepless vigilance, a great fund of learning, and an indomitable will. 3

384. அறனிழுக்கா(து) அல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய(து) அரசு.

தனக்குக் கூறப்பட்ட தருமவழியில், தவறாது நடந்து, கொலை, களவு முதலிய அதருமங்களைத் தன் நாட்டின் கண்ணும் நடவாதபடி நீக்கி, தனது வீரத்தில் குறையாத தாழ்வின்மையை யுடையவன் அரசனாவன்.

Behold a good and wise monarch who does not betray his trust, but banishes all ills from his land. He is the very soul of honour. 4

385. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

தனக்குப் பொருள்கள் வரும் வழிகளை மேன்மேல் உண்டாக்கிக் கொள்ளுதலும், அவ்வாறு வந்த பொருள்களை ஒருங்கு சேர்த்து வைத்தலும், சேர்க்கப்பட்ட பொருளைப் பிறர் கொண்டுபோகாமல் காத்து, அவற்றை அறம், பொருள், இன்பங்களின் பொருட்டுச் செலவு செய்தலும் வல்லவனே, அரசனாவான்.

A true and wise lord is he who develops the resources of his kingdom, enriches his exchequer, jealously guards it and allows it to flow into useful channels. 5

386. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.

அரசன், முறையிட விரும்பி வந்தவர்க்கும், குறையிரப்பவர்க்கும் எளிதிற் காணத்தக்கவனாய், எவரிடத்தும் கடுமையான சொற் சொல்லாதவனுமாய் இருப்பானேயாயின் அவனது இராச்சியத்தை மற்றைய எல்லா இராச்சியங்களினும் மேம்படுத்திக் கூறுவர் உலகத்தோர்.

The glory of his kingdom is in the mouths of all who is easy of access and never guilty of a harsh word. 6

387. இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண்ட அனைத்(து) இவ் வுலகு.

இனிய சொல்லுடனே வேண்டுவோர்க்கு வேண்டியவற்றைக் கொடுத்துக் காக்கவல்ல அரசனுக்கு, இவ்வுலகம் தன் புகழோடு பொருந்தித், தான் நினைத்த பொருள்களை யெல்லாம் சுரந்து கொடுக்கும்.

The prince, who gives with grace, and rules with love, commands the homage of the world. 7

388. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்.

தனக்குரிய நீதியை நடத்தி, பிறர் வருத்தாமல் குடிகளைக் காக்கும் அரசன், பிறப்பினால் மனிதனே யானாலும் தொழிலால் மனிதர்க்குக் கடவுளென்று தனியே சிறப்பித்து மதிக்கப்படுவான்.

He is a god among men who rules with perfect justice and shields the interests of his people. 8

389. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக் கீழ்த் தங்கும் உலகு.

தன்னை நெருக்கித் தனக்கு அறிவுகூறும் துணைவரான அமைச்சர், புரோகிதர் முதலியவர் சொல்லும் சொற்களைத் தன் செவி கேட்கச் சகியாதிருந்தாலும், அவற்றின் நற்பயனை நோக்கிக் கேட்டுப் பொறுத்துக்கொள்ளும் நற்குணமுள்ள அரசனது, அரசாட்சியின்கீழ் உலகமுழுவதும் தங்கும்.

The whole world shall be under the extensive sway of the sovereign who does not turn away from the bitter-sweet counsels of his loyal ministers. 9

390. கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்(கு) ஒளி.

வேண்டுவோர்க்கு வேண்டுவன கொடுத்தலும், மிக்க அன்பும், நீதி தவறாது ஆளுகை செலுத்தலும், தளர்ந்த குடிகளை விரும்பிப் பாது காத்தலும் ஆகிய இந்நான்கு நற்செயலையும் உடையவன், அரச சாதி முழுவதையும் விளக்கும் விளக்குப் போல்வான்.

Most dazzling among the brilliant galaxy of kings is he who is liberal of heart, gracious of demeanour, just in his dealings and merciful to his subjects. 10

அதிகாரம்—40

கல்வி

LEARNING

அரசன், தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல்.

391. கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக.

ஒருவன் கற்கவேண்டிய நூல்களைக் குற்றமில்லாமல் படிக்கக்கடவன்; அப்படிக் கற்றபின், அக்கல்வி அறிவிற்குப் பொருந்த அந்நூல்கள் சொல்லுகின்ற நல்லவழியில் நிற்கக்கடவன்.

Let your learning be perfect and your life be a noble commentary on it. 1

392. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

அறியாதாரால் எண் என்றும் எழுத்து என்றும் சொல்லப்படும் கலைகள் இரண்டினையும், அறிந்தோர், மக்களுள் சிறந்த அறிவுடையவர்க்குக் கண் என்று கூறுவர்.

Precious as eyes to living mortals are the science of numbers and the art of letters. 2

393. கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

எல்லாவிடத்துப் பொருள்களையும், எல்லாக் காலத்திலுள்ளவற்றையும் அறியும் கற்றோரே கண்ணுடையரென்று சிறப்பித்துச் சொல்லப்படுவார்; அஃதின்றி, நோய் முதலியவற்றால் துன்பஞ் செய்யும் இரண்டு ஊனக் கண்களையுமுடைய கல்லாதவர், முகத்திலே இரண்டு புண்களையுடையவராகக் கருதப்படுவர்.

Only the lettered are said to possess eyes: but the eyes of the unlettered are not eyes but sores. 3

394. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

யாவரையும் அவர்கள் மகிழும்படி அவர்களோடு கலந்து அளவளாவி, இவர் நம்மை விட்டுப் பிரிந்தால், 'இனி இவரை நாம் எவ்விடத்தில் எப்பொழுது காண்போம்' என்று அவர்கள் நினைக்கும்படி வருந்தி நீங்குதலாகிய அவ்வளவினதே கற்றறிந்தவரது தொழில்.

A true scholar scatters joy wherever he goes and fills the hearts of his hearers with longings infinite for the feast of soul and the flow of reason. 4

395. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்;
கடையரே கல்லா தவர்.

செல்வர்முன் வறியவர் தாழ்ந்து நிற்பதுபோல, தாமும் ஆசிரியர்முன் விரும்பிக் கீழ்ப்படிந்து நின்று, வழிபாடு செய்து கற்றவர்களே, உயர்ந்தோராவர்; வழிபாடு செய்யும் நிலைமைக்கு வெட்கமுற்றுக் கல்லாதவர் எப்பொழுதும் இழிந்தவரே ஆவர்.

He alone acquires learning who, in humility, stands, like a beggar at a rich man's door, and learns at the feet of his master; but the unlearned are the lowest among men. 5

396. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

மணலினிடத்து ஊற்று, தோண்டிய அளவுக்கேற்ப, நீர் சுரக்கும்; அதுபோல, மனிதர்க்கு அறிவானது, படித்த அளவுக்கேற்ப வளரும்.

The deeper you delve, the greater the springs you come upon. The more you learn, the freer does flow the pure stream of wisdom. 6

397. யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

கற்றவனுக்குத் தன்னாடும் தன் ஊருமே சொந்தமாயிருப்பதன்றி, மற்றைய நாடு ஊர் ஆகிய யாவும் தனக்குச் சொந்த ஊரும் இடமுமே ஆகும்; இப்படியிருக்க, ஒருவன் தான் சாகிற வரையிலும் படியாமல் காலங் கழிப்பது யாது கருதி?

Behold a scholar who is a mine of wisdom; there is not a land which is not his own; there is not a country which is not his own; wherefore ye men should abandon learning unto the last close of life's taper? 7

398. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

ஒருவனுக்குத் தான் ஒரு பிறப்பில் கற்ற கல்வியானது, ஒரு சன்மத்தில் செய்த கருமம், பின் ஏழு சன்மம் வரையிலும் ஒருவனுயிரைத் தொடர்தல் போல, அவனுக்கு ஏழு பிறப்பினிடத்தும் சென்று உதவி செய்யும்.

The knowledge gathered in one birth is a beacon that lights you across the seas of your sevenfold birth. 8

399. தாம்இன் புறுவ(து) உல(கு)இன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

தமது மனத்தை மகிழ்விக்கும் கல்வியைத் தாம் கற்றதைக் குறித்து உலகத்தார் மகிழும் சிறப்பை உணர்ந்து, கற்றறிந்தார் அக்கல்வியை மேன் மேலும் கற்க விரும்புவர்.

Out of the joy and delight of his listeners doth ever grow the infinite knowledge of a lover of wisdom. 9

400. கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மா(டு)அல்ல மற்றை யவை.

ஒருவனுக்கு, அழிவில்லாத சிறப்புடைய செல்வமாவது, கல்வியே; அது ஒழிந்த மணி, பொன், நெல் முதலியவை செல்வம் அல்ல.

Knowledge is wealth; the rest are mere dross. 10

அதிகாரம்—41

கல்லாமை

THE NEGLECT OF LEARNING

படித்தற்குரிய நூல்களைப் படியாமையினால் ஆகிய இழிவு.

401. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

தன் அறிவு நிரம்புவதற்கு ஏதுவாகிய நூல்களைக் கல்லாமல் ஒருவன், சபையிலே ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்லுதல், வட்டு விளையாடுவோர், உருட்டப் படுங்காய் சென்று நிற்றற்குரிய அறைகளை, வகுத்துக்கொள்ளாமல் விளையாடினாற் போலும்! (பயன்படாதாகும்)

Venturing to discourse in an assembly of the learned without any wealth of knowledge is like the playing of dice without the chequered chess-board. 1

402. கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று.

படிப்புச் சிறிதும் இல்லாதவன், சபையினிடத்து ஒரு விஷயத்தைப் பேச விரும்புதல், இயல்பாகவே முலை இரண்டும் சிறிதும் இல்லாதவளொருத்தி, பெண் தன்மையை விரும்பினாற் போலும்!

The yearning of an ignorant man to shine in the company of the wise is like the yearning of a damsel for the beauty of womanhood without the charms of heaving breasts. 2

403. கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்.

கல்லாதவரும், தமது நிலைமையைத் தாமேயறிந்து, படித்தவர் சபையில் யாதொன்றையும் சொல்லாது மௌனமாயிருக்கக் கூடுமாயின், மிக நல்லவராவர்.

Even a blockhead will be deemed wise, if he remains tongue-tied before the council of the learned. 3

404. கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார்.

நூல்களைக் கல்லாதவனது அறிவுடைமை, ஒரோவிடத்து மிக நன்றாயிருப்பினும், அவனுடைய அறிவுடைமை நிலையில்லாததாதலின் கற்றறிந்தோர், அதனை ஒரு பொருளாக மதிக்கமாட்டார்.

The occasional flashes of mother-wit of an illiterate never pass for real strokes of wisdom in the eyes of the wise. 4

405. கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

நூல்களைப் படியாத ஒருவன், தான் அறிவுடையவன் என்று தன்னைத் தானே மதித்துக் கொள்ளும் மதிப்பு, தன்னைக் கண்ட அறிவுடையவனொருவனோடு தான் ஏதாவது ஒரு வார்த்தை சொல்லும் வரையிலுமே நிற்கும். பின்பு கெட்டழியும்.

The false pride of learning of an ignorant man is shattered to pieces, the moment he addresses an assembly of the learned and the wise. 5

406. உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

கல்லாதவர், உலகத்தில் வடிவத்தோடு காணப்பட்டாலும் தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால், விளைவுக்கு ஏற்றதல்லாத களர் நிலத்திற்குச் சமானமாவர்.

Like a barren wasteland, that yields no fruit, are men devoid of learning ; people say of them, 'They do not live but merely exist'. 6

407. நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில் நலம்
மண்மாண் புனைபாவை யற்று.

நுட்பமாய்ச் சிறப்பும் பெற்றுப் பல நூல்களில் விரைந்து செல்லும் அறிவு இல்லாதவனுடைய உடம்பின் வளர்ச்சியும், அழகும், சுண்ணச் சாந்

திறைல் சிறப்புப் பொருந்த அலங்கரித்துச் செய்யப்பட்ட சித்திரப் பாவையி னுடைய தோற்றமும் அழகும் போல்வனவாகும்.

The beauty and grace of a fool, who knows not the charms of learning, born of deep devotion to study, are like those of a painted doll of clay. 7

408. நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு.

படித்தவரிடத்தில் ஏற்பட்ட தரித்திரத்தன்மையைக் காட்டிலும் மிக்க துன்பந் தருவது, கல்லாதவரிடத்தில் உண்டாகிய செல்வமேயாம்.

The wealth in the hands of the ignorant brings more ills in its trail than the poverty of the wise. 8

409 மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு.

கல்லாதார் உயர்குலத்தில் பிறந்தவரா யிருந்தாலும், தாழ்ந்த குலத்தில் பிறந்திருந்தாலும், கற்றவரது பெருமை அவ்வளவு பெருமை யுடையவர் அல்லர்.

Men of learning, though born of a low descent, command more reverence than a high-born fool. 9

410. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

அறிவு விளங்குதற்குக் காரணமாகிய நூல்களைக் கற்றவர்க்கும், அவற் றைக் கல்லாதவர்க்கும் உள்ள வேறுபாடு மக்களுக்கும் விலங்கிற்கும் உள்ள வேறுபாட்டை ஒக்கும்.

Beasts are lower than men in the scale of creation: even so are the fools before those who have delved deep in the mines of knowledge. 10

அதிகாரம்—42

கேள்வி

Listening to the Wise

கேட்கத்தக்க நூல்களின் சாரமான விஷயங்களைக் கற்றறிந்தவர் சொல்லக் கேட்டல்.

411. செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

ஒருவனுக்குச் செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்த செல்வம், யாது என்றால், நிலை பேறுடையதும் இன்பம் விளைப்பதுமாகிய கேள்விச் செல்வமே; அச்செல்வம், பிற செல்வங்கள் எல்லாவற்றிலும் மேலானதாகும்.

There is no wealth greater than the wealth of wisdom acquired by listening to the wise. 1

412. செவிக்குண(வு) இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

காதினால் உட்கொள்ளப்படுவதாகிய கேள்வியாகிய உணவு இல்லாத பொழுதே, வயிற்றுக்குச் சிறிது உணவு கொடுக்கப்படும்.

Just satisfy a bit the cravings of your hunger, when there is no more charming discourse to feed the listening ear. 2

413. செவியுணவின் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்றாரோ(டு) ஒப்பர் நிலத்து.

செவியுணவாகிய கேள்வியினை யுடையவர், பூலோகத்தில் உள்ளவ ராயினும், யாகத் தீயில் கொடுக்கப்படும் அவி உணவை யுடைய தேவர்க் குச் சமானமாவர்.

He is a god among men who has drunk in the charms of a sweet discourse. 3

414. கற்றிலன் ஆயினும் கேட்க; அஃதொருவற்(கு)
ஒற்கத்தின் ஊற்றாம் துணை.

உயிர்க்கு உறுதி பயக்கும் நூல்களை ஒருவன் படியாதவனாயிருந்தாலும் அவற்றின் பொருள்களைக் கற்றறிந்தார் சொல்லக் கேட்கக் கடவன்; அவ் வாறு கேட்பது, அவனுக்கு மனத்தளர்ச்சி வந்தவிடத்து அதனை நீக்க ஊன்றுகோல் போலத் துணையாகும்.

Ignorant though you be, listen to the wise and fill your mind with lofty thoughts, for they will help you in adversity. 4

415. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.

சறுக்குதலை யுடைய சேற்று நிலத்தில் நடப்பவர்க்கு ஊன்றுகோல் எவ்வாறு உதவுமோ! அவ்வாறே உலகத்தைக் காக்கும் அரசர்க்கு, நல்லொ ழுக்க முடையவர்களது வாயிலிருந்து வரும் சொற்கள் உதவி செய்யும்.

Like a steady staff on a treacherous slide, are the words of the pure and the good. 5

416. எனைத்தானும் நல்லவை கேட்க ; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

தான் கேட்கும் உறுதிப் பொருள் எவ்வளவு சிறியதா யிருந்தாலும், ஒருவன் அதனைக் கேட்கக் கடவன் ; அக்கேள்வி, அவ்வளவு சிறியதா யிருந்தாலும் மழைத் துளிபோலப் பெருகி நிறைந்த பெருமையைத் தரும்.

Listen to a moiety of the great one's discourse, for even that will redound to the glory of your soul. 6

417. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்[ந்து
ஈண்டிய கேள்வி யவர்.

நூற்பொருள்களை நுட்பமாக ஆராய்ந்தறிந்து, அதனோடு பல வழிகளாலும் நிரம்பிய கேள்வியை யுடையவர், தாமதகுணத்தால் ஒன்றை மற்றொன்றாக அறிந்த பொழுதும் தமக்கு அறிவின்மையைக் கொடுக்கும் சொற்களைச் சொல்லமாட்டார்.

Men who have dwelt in the company of the discerning and the wise, slip not into errors even in unwary moments. 7

418. கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி.

தமது உணர்ச்சியாகிய ஓசையை மாத்திரம் கேட்குமாயினும், நூற்பொருள்கள் தடையின்றி நன்றாய் நுழையப்படாத செவிகள், செவிடாந் தன்மையை யுடையனவேயாகும். (செவிபடைத்தற்குப் பயன் நூற்பொருள் கேட்டலே.)

Deaf is the ear which has not caught the true accents of the great. 8

419. நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது.

நுட்பமாகிய கேள்வி யறிவில்லாதவர், வணக்கத்தைத் தெரிவிக்கிற மொழியை யுடையவராதல் அரிது.

Words of grace and humility never fall from the lips of men whose ears are alien to the utterance of master-minds. 9

420. செவியின் சுவைஉணரா வாய்உணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.

காதினால் கேட்டு அனுபவிக்கப்படும் சொற்சுவை, பொருட் சுவைகளை உணராது, வாயினால் உண்ணப்படும் பொருள்களின் சுவைகளை மாத்

திரமே அறியும் மாந்தர், இறந்தாலும், வாழ்ந்தாலும் அவற்றால் உலகத்திற்கு வரும் பயன் யாது ?

What does it matter whether a man lives or dies, if he merely satisfies his palate and neglects instruction ? 10

அதிகாரம்—43

அறிவுடைமை

KNOWLEDGE OR WISDOM

கல்வி கேள்விகளினாலாகிய அறிவோடு உண்மையறிவு (விவேகம்) உடையனாதல்.

421. அறிவு அற்றம் காக்கும் கருவி; செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்.

அரசர்க்கு அறிவு என்பது தமக்கு அழிவு வாராமல் பாதுகாக்கும் கருவியாகும்; அதுவு மல்லாமல், பகைவர் உள்ளே பிரவேசித்து அழிக்க முடியாத உட்கோட்டையும் ஆகும்.

Wisdom is a mighty armour against the blind force of destruction : verily it is a citadel that laughs to scorn the assaults of the enemy. 1

422. சென்ற இடத்தால் செலவிடாத் தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

மனத்தை அதுசென்ற ஒளி, ஓசை முதலிய ஐம்புல வழிகளிலே செல்ல விடாது, அவ்விஷயங்களின் நன்மை தீமைகளை ஆராய்ந்து, தீமையினின்று நீக்கி நன்மையினிடத்துச் செலுத்தலே அறிவு ஆகும்.

Let not the mind roam at will ; it is a part of wisdom to curb its wayward course and direct it to useful ways. 2

423. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

யாதொரு பொருளை எவரெவர் சொல்லக் கேட்டாலும் அவரை நோக்காது அப்பொருளின் மெய்ப்பயனை ஆராய்ந்து அறியவல்லது அறிவு.

Bolt it to the bran whatever discourse you may come across—that is true wisdom. 3

424. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

தான் சொல்லும் சொற்கள், அறிதற்கு அருமையான விஷயங்களை யுடையவையானாலும், கேட்பவர்க்கு எளிய பொருளனவாக, அவர் மனம் அறிந்துகொள்ளும்படி தெளியச் சொல்லி, பிறர் வாயினின்று கேட்குஞ் சொற்களின் நுண்ணிய பொருளைக் காண்பது அரிதாயினும் அதனை எளிதில் ஆராய்ந்தறியவல்லது சிறந்த அறிவாம்.

The subtlest of subtle things wisdom illumines; the hardest of hard truth wisdom understands. 4

425. உலகந் தழீஇயது ஒட்பம்; மலர்தலும்
கூம்பலும் இல்ல(து) அறிவு.

உயர்ந்தோரை நட்பாக்குவது, ஒருவனுக்கு அறிவுடைமையாம்; அந் நட்பினிடத்தே ஒரு கால் முகமலர்தலும், ஒருகால் முகங்குவிதலு மில்லாமல் எப்போதும் ஒரே நிலைமையை யுடையவனாயிருத்தலுக்குங் காரணம் அறிவேயாம்.

Wisdom makes all the world kin; unlike the lotus flower that fades and blooms, it knows no decay. 5

426. எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

உலகம் எந்த வழியை அனுசரித்து ஒழுகுமோ! அவ்வுலகத்தோடு ஒத்துத் தானும் அவ்வழியில் ஒழுகுவது அரசனுக்கு அறிவாகும்.

To dwell in harmony of the world is wisdom. 6

427. அறிவுடையார் ஆவது அறிவார்; அறிவிலார்
அஃதறி கல்லா தவர்.

பின் வரப்போவதை முன்னதாக ஆராய்ந்தறிய வல்லவரே அறிவுடையவராவர்; அவ்வாறு அதனை அறிய மாட்டாதவரே அறிவில்லாதவராவர்.

Wisdom prophesies the future; folly knows not the coming events. 7

428. அஞ்சுவ(து) அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்.

பயப்படத்தக்க விஷயத்திற்குப் பயப்படாதிருத்தல் அறிவின்மையாகும்; பயப்படத்தக்கவைகளுக்குப் பயப்படுதல் விவேகிகளது செய்கையாகும்.

It is folly to tread where men fear to tread; but it is wisdom to shrink from what portends evil. 8

429. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

இனி வர இருக்குந் தீங்கை முன் அறிந்து வாராதபடி தடுத்து, அதனினின்றும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவல்ல அறிவுடையவர்க்கு, அவர்கள் நடுங்கும்படி வருவதாகிய துன்பம் ஒன்றுமில்லை.

No frightful event is in store for the far-seeing soul that guards itself against coming evils. 9

430. அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

அறிவுடையார், அறிவொழிந்த பிறபொருள்களுள் ஒன்றையும் உடையவர் அல்லராயினும் எல்லாப் பொருள்களையும் உடையராவர்; அறிவில்லாதார், செல்வங்கள் யாவும் பொருந்தி யிருந்தாலும் அவற்றைக் காக்க வல்ல அறிவொன்று இலராயின் யாதொன்றும் இல்லாதவராவர்.

Poor is the fool in the midst of his riches; but the wise are blessed with all. 10

அதிகாரம்—44

குற்றங் கடிதல்

ESCHEWING OF FAULTS

காமம், கோபம், ஆசை, மானம், உவகை, மதம் என்ற ஆறு குற்றங்களையும் நீக்குதல்.

431. செருக்குஞ் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

தன்மதமும், கோபமும், காமமும் ஆகிய குற்றங்கள் நீங்கிய அரசரது செல்வம், கம்பீரமான தன்மையை யுடையதாம்.

There is a grace about the riches of the king who is free from pride, anger and lust. 1

432. இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு.

அவசியம் கொடுக்கவேண்டிய இடத்தில் கொடாத உலோப குணமும், அந்தணர் முதலியோரை வணங்காமையும், தகாத காரியங்களைத் துணிந்து முடித்தலும், முதலிய செயல்களுக்குக் காரணமாகிய அளவுக்கு விஞ்சின தாக்ஷிணியமும் அரசனுக்குக் குற்றங்களாகும்.

Niggardliness, overweening pride, and sensuality are grievous faults in a king. 2

433. தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

தமக்கு நிந்தனை நேருமே என்று பயப்படுபவர், தம்மிடத்துத் தினையளவாகிய குற்றம் நேர்ந்தாலும், அதனை மிகச்சிறிதாகக் கொள்ளாமல், பனையளவு பெரிதாகக் கருதி, அதனைத் தம்மிடத்து வாராதபடி காத்துக் கொள்வர்.

Faults, small as a millet seed, loom as big as a giant palm in the eyes of those who are jealous of their reputation. 3

434. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை.

தனக்குத் தீங்கை விளைக்கும் பகை குற்றமே ; ஆதலால், அக்குற்றம் இல்லாதிருத்தலே பெருங் குணமுடைமையாம் என்று கருதி, அதனைக் காக்கவேண்டும்.

Beware of your faults, for they are a deadly enemy. 4

435. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

குற்றம் வருவதற்கு முந்தியே, அதனை அறிந்து பரிகரித்தல் செய்யாத அரசனது உயிர் வாழ்க்கை, குற்றம் வந்தால் நெருப்பின்முன் பட்ட வைக்கோலின் போர்போல அழிந்து விடும்.

Behold the man who does not nobly plan out the future and protect himself against coming evils ; he perishes like a heap of straw before a consuming fire. 5

436. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.

முன்னதாகத் தன்னுடைய குற்றத்தைக் கண்டு ஒழித்து, பின்னர்ப் பிறர் குற்றம் அறிந்து ஒழிக்க வல்லவனானால், அரசனுக்கு வரக்கடவதான குற்றம் யாது ?

He is a perfect king, who, blameless himself, scans the faults of others. 6

437. செயற்பால செய்யா(து) இவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும்.

செல்வத்தைக் கொண்டு, தனக்குச் செய்துகொள்ள வேண்டிய அறம் பொருள் இன்பங்களைச் செய்து கொள்ளாது, அதனிடத்து உலோபஞ்

செய்தவனது செல்வம், பின்பு இருக்கும் தன்மையுடையதல்லாமல் அப்பொழுதே பயனின்றிக் கெடும்.

Close-fisted parsimony, which is blind to its welfare, goes to rack and ruin. 7

438. பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன்(று) அன்று.

பொருளைச் செலவிடுதற்கு அவசியமான இடத்திலும் செலவு செய்யாமல் அதனை மிகவிரும்பி இறுகப்பிடித்தற்கு ஏதுவாகிய உலோபகுணமானது, மற்றைய குற்றங்களைப் போலச் சாதாரண குற்றமன்று. எல்லாக் குற்றங்களினும் மிகப் பெரியதாம்.

Miserliness is the darkest of all faults and stands out in sinister isolation. 8

439. வியவற்க எஞ்ஞான்றும் தன்னை; நயவற்க
நன்றி பயவா வினை.

யாவரினும் தான் மேம்பட்ட காலத்தும், மதத்தால் தன்னைத் தானே பெருமைப் படுத்திக் கொள்ளாதிருக்கக் கடவன்; தனக்கு நன்மையைத் தாராத காரியங்களை மானத்தால் துணிந்து செய்ய விரும்பாதிருக்கக் கடவன்.

Allow not the spirit of self-complacency to get the better of you; embark not on vain enterprises. 9

440. காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்.

தான் விரும்பின விஷயங்களைப் பகைவர் முதலியோர், அறியவொண்ணாதபடி அநுபவிக்க வல்லனாயின், பகைவர் தன்னை வஞ்சித்தற்கு எண்ணும் எண்ணம் பயன்படாமல் வீணாகும்.

Let your heart's desires be hidden from your enemy, lest you should fall a prey to their machinations. 10

அதிகாரம்—45

பெரியாரைத் துணைக்கோடல்

SEEKING THE COUNSEL OF THE GREAT

தீய வழியிற் செல்லாதபடி விலக்கி, நல்ல வழியிற் செலுத்தும் சிறந்த புத்தியுடையவரைத் துணையாகக் கொள்ளுதல்.

441. அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

தருமத்தினது சூட்சுமத்தை அறிந்து, தன்னைப் பார்க்கிலும் மேம்பட்ட அறிவுடையவரது சிநேகத்தை அரசன், அப்படிப்பட்ட பெரியவர் சிநேகம் கிடைப்பதற்கு அருமையென்று அறிந்து, பெறும் வழி அறிந்து பெறுக.

Weigh the worth of the men of ripe wisdom and seek their fellowship. 1

442. உற்றநோய் நீக்கி உறாஅமை முன்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

தெய்வத்தாலாவது, மனிதராலாவது தனக்கு வந்த துன்பங்களை, ஒழிக்கும் வழி யறிந்து ஒழித்து, பின்பு அவ்வகைப்பட்ட தீமைகள் வாராதபடி அவை வருதற்கு முன்பே அறிந்து காக்கவல்ல தன்மையினை யுடையாரை அரசன், அவர் விரும்பி மகிழத்தக்க காரியங்களைச் செய்து துணையாகக் கொள்ளவேண்டும்.

Cherish with ardour the friendship of those who remedy your present ills and guard you against future ones. 2

443. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

பெரியாரை, அவர் உவப்பன அறிந்து செய்து, தமக்குச் சிறந்த துணைவராகக் கொள்ளுதல், அரசர்க்குக் கிடைத்தற்கு அருமையான பேறுகள் எல்லாவற்றுள்ளும் மிக அருமையானதாகும்.

Cling to men of heroic mould and make them your kin ; verily there is no greater blessing to you on earth. 3

444. தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை.

அறிவு முதலியவற்றால் தம்மைக் காட்டிலும் மேம்பட்டவரைச் சிறந்த துணைவராகக் கொண்டு, அவர் கூறிய நல்வழியில் நடந்து நிற்றல், அரசர்க்கு வலிமையுடைய பொருள்கள் எல்லாவற்றினும் மேலானதாகும்.

Is there any force mightier to the sovereign than the alliance of the men of superior wisdom ? 4

445. சூழ்வார் கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

அரசன், தனது இராச்சிய பாரத்தை, அமைச்சரைக் கண்ணாகக் கொண்டு நடத்துதலால், தனக்கு இன்றியமையாத அப்படிப்பட்ட மந்திரிகளை ஆராய்ந்து, தனக்குத் துணையாகக் கொள்ளல் வேண்டும்.

Ministers are the eyes of the monarchs : let them be chosen with jealous care. 5

446. தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த(து) இல்.

அறிவு ஒழுக்கங்களால் தகுதியுடையவராகிய துணைவரை யுடைய வனாய்த் தானும் அறநீதிகளின் முறைமை தவறாமல் நடக்கவல்லவனுமாகிய அரசனைப் பகைவர் செய்யக்கூடிய துன்பம் ஒன்றும் அணுகாது.

The wise king, whose court is adorned with men of wisdom, need not fear his foes. 6

447. இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.

பாவமும் நீதியல்லனவுமாகிய செயல்கள், அரசனிடத்து உள்ளனவாக அறிந்தால், நெருங்கி வந்து அவற்றை யொழிக்கும்படி வற்புறுத்திக் கூறும் தன்மையுள்ள பெரியாரை, 'இவர் நமக்குச் சிறந்த துணைவர்' என்று தமக்கு வேண்டியவராகக் கொள்ளும் அரசரைக் கெடுக்க வல்ல பகைவர் எவருமில்லை.

Is there an enemy that can work evil to a wise ruler who turns not away from the wholesome taunts and reproaches of his far - seeing ministers ? 7

448. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.

நெருக்கி உறுதிச் சொல் உரைக்கத் தக்க பெரியோரைத் தனக்குத் துணையாகக் கொள்ளாமையால், தன்னைக் காவல் செய்பவரில்லாத அரசன், தன்னைக் கெடுக்கும் பகைவர் இல்லையாயினும் தானே அழிவான்.

Kings, bereft of the bitter-sweet advice of their counsellors, perish by themselves : they need no foe from without. 8

449. முதலிலார்க்(கு) ஊதியம் இல்லை ; மதலையாம்
சார்பிலார்க்(கு) இல்லை நிலை.

மூலதனம் இல்லாத வணிகர்க்கு அதினால் வரும் இலாபம் இல்லை ; அதுபோல, தம்மைத் தாங்கும் துணைவரில்லாத அரசர்க்கு, அத்துணை வலி யால் உண்டாகும் உறுதிப்பாடு இல்லை.

Profit is built on capital : the stability of a sovereign rests on the wise counsel of his ministers. 9

450. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

அரசன் பெரியாரது துணையை யிழந்துவிடுதல், தான், துணை யொருவரும் இல்லாமல் தனிப்பட்டவனாய்ப் பலரோடும் பகைகொள்ளுதலைப் பார்க்கிலும் பத்துப் பங்கு அதிகமான தீமையையுடையது ஆகும்.

To abandon the fellowship of the great is, ten times more injurious to the king, than to incur the hatred of the many. 10

அதிகாரம்—46

சிற்றினஞ் சேராமை

ON AVOIDING LOW COMPANY

நல்லதாயுள்ள பொருளின் நன்மையையும், தீயதாயுள்ள பொருளின் தீமையையும், இல்லையென்போராகிய அற்பரது சகவாசஞ் செய்யாமை.

451. சிற்றினம் அஞ்சும் பெருமை; சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

பெரியோரியல்பு, சிறிய இனத்தைக் கண்டால் அஞ்சும்; மற்றைய சிறியோர் இயல்போ! அச் சிறிய இனம் தன்னொடு சேர்ந்தபொழுதே அதனைத் தனக்குச் சுற்றமாகக் கருதி ஏற்றுக்கொள்ளும்.

The great shrink from vulgar company : the low revel in it.

452. நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும்; மாந்தர்க்(கு)
இனத்தியல்பு அதுஆகும் அறிவு.

மேகத்தில் தன் தன்மை திரியாத நீர், நிலத்தில் சேர்ந்த பொழுது தன் தன்மை மாறி, அந்நிலத்தின் தன்மையை யடைவதுபோல, மனிதருக்கு அறிவு, ஒருவரோடும் சேராமல் தனித்திருக்கும்போது தன் தன்மை திரியாது, பிற இனத்தோடு சேர்ந்தபொழுது தன் தன்மை மாறி அவ்வினத்தின் தன்மையை யடையும்.

Water is racy of the soil through which it flows ; the mind of man takes the mould and hue of its associations. 2

453. மனத்தானாம் மாந்தர்க்(கு) உணர்ச்சி; இனத்தானாம்
இன்னான் எனப்படும் சொல்.

மனிதர்க்கு இயற்கையறிவு, அவரவர் மனத்தின் நிலைக்குத் தக்கவாறு உண்டாகும்; இவன், இத்தன்மையுடையவனென்று உலகத்தார் சொல்லும் சொல், தான் சேர்ந்துள்ள இனத்தினால் உண்டாகும்.

A man's understanding is known by the vigour of the mind; but his reputation is known by the company he keeps. 3

454. மனத்துளது போலக் காட்டி ஒருவற்(கு)
இனத்துள(து) ஆகும் அறிவு.

ஒருவனுக்குச் செயற்கை அறிவு, மனத்தினிடத்தில் உண்டாவது போல வெளித் தோன்றினும், அது அவன் சேர்ந்த இனத்திலேயே உண்டாகும்.

Wisdom seems to be the offspring of a man's mind; but it is of a piece with the company he delights in. 4

455. மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்.

மனம் பரிசுத்தமாகும் தன்மையும், செய்யும் தொழிலின் பரிசுத்தமாகும் தன்மையும் ஆகிய இரண்டும் ஒருவனுக்கு நல்ல சேர்க்கையையுடையவனாயிருத்தலால் உண்டாகும்.

Only on noble company does depend the purity of thought and deed. 5

456. மனம்தூயார்க்(கு) எச்சம்நன் றாகும்; இனம்தூயார்க்(கு)
இல்லைநன் றாகா வினை.

நல்மனமுடையோர்க்கு நற்குண நற்செய்கையுள்ள மக்கட் பேறு உண்டாகும்; தூய இனமுடையோர்க்கு நல்லனவாகவே முடியாத காரியம் யாதொன்றும் இல்லை.

The pure of heart shall have worthy descendants: those, who cultivate the company of the pure and the good, shall know no evil. 6

457. மனநலம் மன்னுயிர்க்(கு) ஆக்கம்; இனநலம்
எல்லாப் புகழும் தரும்.

மனிதர்க்கு மனத்தினது நன்மை, செல்வத்தைக் கொடுக்கும்; இனத்தினது நன்மையோ செல்வத்தோடு எல்லாப் புகழையும் தரும்.

All riches unto the man who is pure of mind: all honour and glory unto the man who seeks good fellowship. 7

458. மனநலம் நன்குடைய ராயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப் புடைத்து.

பூர்வ சன்மத்திற் செய்த புண்ணியத்தால் மனம் பரிசுத்தமுடையவராயிருந்தாலும் அறிவிற் சிறந்தார்க்கு இனநலம், அம் மன நலத்துக்கு உறுதி தருவதாதலை யுடையது.

The companionship of the great strengthens the native vigour of one's mind. 8

459. மனநலத்தின் ஆகும் மறுமை;மற் றஃதும்
இனநலத்தின் ஏமாப்பு உடைத்து.

ஒருவனுக்கு மன நன்மையினாலே மறுமை இன்பம் உண்டாகும்; அம் மனநலத்திற்கு மறுமை யின்பம் பயக்கும் சிறப்பும், இனநன்மையால் உறுதிப்படும்.

Good fellowship leads to virtue, and virtue lights up the path to heaven. 9

460. நல்லினத்தின் ஊங்குந் துணையில்லை; தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல்.

ஒருவனுக்கு நல்லினத்தைக் காட்டிலும் சிறந்த துணையும் இல்லை; தீய இனத்தைக் காட்டிலும் துன்பப்படுத்தும் பகையும் இல்லை.

There is nothing so good as good company : there is nothing so ruinous as evil company. 10

அதிகாரம்—47

தெரிந்து செயல்வகை

ON ACTING WITH FORE-THOUGHT

அரசன், தான் செய்யும் தொழில்களை ஆராய்ந்து செய்யும் திறம்.

461. அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமுஞ் சூழ்ந்து செயல்.

ஒரு தொழிலைச் செய்யத் தொடங்குகையில், அச்செயலால் முதலில் உண்டாகும் செலவையும், செலவு செய்தபின் உண்டாகும் வரவையும், அப்படி வரவாய் நின்று பிற்காலத்து அச்செயல் கொடுக்கும் இலாபத்தையும் ஒப்பிட்டு ஆராய்ந்து, தக்கதாயின் செய்ய வேண்டும்.

Take stock of the expenditure, return, and profit of any enterprise ; then embark on it. 1

462. தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்.

தம்மால் ஆராய்ந்து சேர்த்துக் கொள்ளப்பட்ட நல்லினத்துடனே செய்யத்தக்க தொழிலை ஆராய்ந்து, பின்பு தாம் தனித்தும் ஆலோசனை செய்து, ஒரு காரியத்தைச் செய்து முடிக்கவல்ல அரசர்க்குப் பெறுதற்குக் கூடாத பொருள் யாதொன்றும் இல்லை.

Nothing is impossible to the sovereign who has foresight and wisdom and acts on the counsel of his ministers. 2

463. ஆக்கங் கருதி முதல் இழக்குஞ் செய்வினை
ஊக்கார் அறிவுடையார்.

இனி வரக்கூடியதான இலாபத்தை எதிர்பார்த்து, முன்னே தன்னிடம் பொருந்தியிருந்த முதற்பொருளையும் இழந்து விடுதற்குக் காரணமாகிய தொழிலை, அறிவுடையோர் தொடங்கிச் செய்யமாட்டார்கள்.

The wise embark not on such vain, alluring enterprises that swallow up their own capital. 3

464. தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பாடு அஞ்சு பவர்.

இனத்தோடும் தனித்தும் ஆராய்ந்து நிச்சயிக்கப்படாத ஒரு காரியத்தைத் தொடங்கார், தமக்கு அவமானமாகிய குற்றம் வந்துவிடுமோ என்று அஞ்சுபவர்.

The great do not take a leap in the dark, lest they should be ridiculed by others. 4

465. வகையறச் சூழாது எழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோர் ஆறு.

தான் பகைவர் மேல் வெல்லுதற்குச் சென்றால், அதனால் உண்டாகும் விதங்கள் எல்லாவற்றையும் முழுவதும் ஆலோசியாமல், சில விதங்களை மாத்திரமே ஆலோசித்து அவ்வளவோடு அரசன், பகைவர்மீது செல்லுதல், பகைவரை வளரும் இடத்திலே நிலைபெற்று நிற்கச் செய்யும் ஓர் வழியாகும்.

For a king to wage war without planning out the details, is to pave the way to the success of the enemy. 5

466. செய்தக்க அல்ல செயக் கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

அரசன், தன் காரியங்களுள் செய்யத் தகாத காரியங்களைச் செய்தலாலும் கெடுவான்; செய்யத்தக்க காரியங்களைச் செய்யாது நீக்கினாலும் கெடுவான்.

A king, guilty of wrongful deeds and neglect of duties, brings about his own ruin. 6

467. எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

செய்யத்தக்க காரியமாயினும் அது முடியும் உபாயத்தை ஆராய்ந்தறிந்தே தொடங்க வேண்டும்; தொடங்கிய பின்பு ஆராய்ந்து கொள்வோம் என்று விட்டு விடுதல் குற்றமாகும்.

Chalk out a course of action after great deliberation. It is folly to think of the consequences after having hastily launched out into action. 7

468. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

ஒரு தொழிலை நிறைவேறும் உபாயத்தால் முயலாத முயற்சி, துணைவர் பலர் உடனின்று கெடுதி யுண்டாகாதபடி பாதுகாத்தாலும் குற்றமடையும்.

Any enterprise without design will go to pieces, though many have joined it. 8

469. நன்றாற்ற லுள்ளுந் தவறுண்(டு); அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

அவரவர் குணங்களை ஆராய்ந்தறிந்து அக்குணங்களுக்குத் தக்கபடி செய்யாவிட்டால் பகையரசரிடத்து நல்ல உபாயஞ் செய்தவிடத்தும் குற்றம் உண்டாகும்.

Even a good act is marred, if it is done without a knowledge of the dispositions of men. 9

470. எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும்; தம்மொடு
கொள்ளாத கொள்ளா(து) உலகு.

அரசர், தமது காரியம் முடிதற்பொருட்டுத் தமது நிலையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்வாராலுல் உலகம் அவ்வரசரைப் பழிக்கும்; ஆதலால், உலகத்தாரால் இகழப்படாத உபாயங்களை ஆராய்ந்தறிந்து செய்ய வேண்டும்.

Let not your acts be unworthy of a king ; let them be above the reproach of men. 10

அதிகாரம்—48

வலி யறிதல்

ON JUDGING OF STRENGTH

அரசன், நால்வகை வலிமைகளையும் வரையறை செய்து அறிதல்.

471. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

அரசன் தான் செய்யக்கருதிய தொழிலினது வலிமையையும், அதனைச் செய்து முடிக்கும் தனது ஆற்றலையும், அதனை நீக்கவரும் பகைவனது திறத்தையும், தனக்கும் பகைவனுக்கும் துணையாவாரது வலிமைகளையும் மதிப்பிட்டுப் பார்த்துத் தனது ஆற்றல் அதிகமானபொழுது, பகைவர்மேல் வெல்லுதற்குச் செல்லுதல் முதலிய தனது தொழிலைச் செய்யக்கடவன்.

Consider the hardships of the expedition, your strength, the strength of the enemy, the strength also of your allies, and then go to war. 1

472. ஒல்வது அறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்.

தமக்குச் செய்யத்தக்க காரியத்தையும், அக்காரியத்திற்கு அறியவேண்டிய துணை வலிமையையும், அறிந்து எப்பொழுதும் மனமொழி மெய்களை அந்நால்வகை வலியின்மேல் செலுத்திப் பகைவர்மேல் செல்லும் அரசர்க்கு முடியாத காரியம் இல்லை.

The king who understands the nature of his enterprise, weighs his strength, and is ever intent on it, knows no defeat. 2

473. உடைத்தம் வலிஅறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்.

தம்முடைய வலிமையின் அளவை ஆராய்ந்தறியாமலே, உற்சாகத்தால் தம்மின் வலியாரோடு எதிர்த்துப் போர் செய்யத் தொடங்கி, அவ்வலிய பகைவர்கள் முரிய அடிப்பதனால், தாம் தொடங்கிய போர்த்தொழிலைச் செய்து முடிக்கக்கூடாமல், தொடங்கியதை முடிப்பதற்கு முன்னமே அழிவடைந்த அரசர், உலகத்தில் பலராவர்.

Many a monarch, who has not gauged the strength of his powerful enemy, has been humbled in the midst of the battle. 3

474. அமைந்தாங்கு ஒழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

பிற அரசர்களுடன் சமாதானமாய் இருத்தலும் செய்யாது, தனது வலிமையின் எல்லையையும் ஆராய்ந்து அறியாது, மற்றைய அரசர்களிலும் தன்னையே மேம்பட்டவனாக மதித்து, அயலரசரோடு விரோதங் கொண்ட வேந்தன், விரைவிலே அழிவான்.

Destruction swift overtakes the king who is ignorant of his resources, boastful of his greatness and does not live in harmony with the neighbouring princes. 4

475. பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

மெல்லிய மயிற்றோகைகளை நிரம்ப ஏற்றப்பெற்ற வண்டியும், அச்சு முறியும்; அத் தோகைகளை எவ்வளவு ஏற்றினால் அவ்வண்டி சுமக்கக் கூடுமோ! அவ்வளவு அல்லாமல் அதனினும் மிகுதியாக ஏற்றினால்.

What if it is a cart-load of light peacock feathers?: the last feather will break it. 5

476. நுனிக் கொம்பர் ஏறினார் அஃதுஇறந்து ஊக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும்.

ஒரு மரத்தின் கிளையினது நுனியிலே ஏறி நின்றவர், தம் உள்ளக் கிளர்ச்சியினால் அவ்வளவைக் கடந்து மேன்மேலும் ஏறுதற்குத் தைரியங் கொள்வாரானால், அத்தைரியம் அவர் உயிர்க்கு அழிவைச் செய்வதாய் முடியும்.

Vaulting ambition, which overreaches itself, spells the ruin of a sovereign. 6

477. ஆற்றின் அளவறிந்து ஈக; அதுபொருள்
போற்றி வழங்கு நெறி.

கொடுக்கவேண்டும் வழியாலே, தமக்குள்ள பொருளின் அளவினை அறிந்து, அந்த அளவுக் கேற்பக்கொடுக்கக் கடவன்; அவ்வாறு கொடுப்பதே செல்வத்தைப் பாதுகாத்துக்கொண்டு நடக்கும் வழியாகும்.

Let your charity be proportionate to your wealth. That is the way to preserve it. 7

478. ஆகுஆறு அளவுஇட்டிது ஆயினும் கேடில்லை
போகுஆறு அகலாக் கடை.

அரசர்க்குச் செல்வம் செலவாகிற வழி, பொருள் வரும் வழியினும் அதிகப்படாதானால் செல்வம் வருதற்குக் காரணமாயுள்ள வழி, அளவில் சிறியதாயிருந்தாலும் அதனால் தீங்கில்லை.

No evil befalls the king whose expenditure does not outrun his income. 8

479. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

தனக்குள்ள பொருளின் அளவினை அறிந்து, அவ்வளவிற்கு ஏற்றபடி பிறர்க்குக் கொடுத்தும் தான் அனுபவித்தும் வாழத் திறமையில்லாதவனது வாழ்க்கை, உள்ளது போலத் தோன்றி, உண்மையாக நோக்குமிடத்து இல்லையாகி, பின்பு அத்தோற்றமும் இல்லாமல் கெட்டுப்போகும்.

Behold the monarch who lavishes his wealth beyond his resources: he appears to be prosperous, but he only treads the downward path to destruction. 9

480. உளவரை தூக்காத ஒப்புரவு ஆண்மை
வளவரை வல்லைக் கெடும்.

தனக்கு இருக்கிற செல்வத்தின் அளவை ஆராய்ந்து நோக்காமைக்குக் காரணமான பிறர்க்கு உபகாரம் மிகுதியாகச் செய்யும் தன்மையால், ஒருவனது செல்வத்தின் அளவு விரைவில் குறைந்துபோகும்.

Extravagance, which is blind to its resources, perishes. 10

அதிகாரம்—49

காலம் அறிதல்

ON SEIZING THE OPPORTUNE MOMENT

பகைவர்மேல் செல்லத் தொடங்கின அரசன், அங்ஙனம் (பகைவர் மேல்) செல்லுதற்குத் தக்க காலத்தை அறிதல்.

481. பகல்வெல்லும் கூகையைக் காக்கை; இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

தன்னைக் காட்டிலும் மிகுந்த வலிமையுடைய கோட்டானைப் பகற் காலத்திலே காக்கை வென்றுவிடும்; ஆதலால் பகைவருடைய மாறுபாட்டை வெல்ல நினைக்கும் அரசர்க்கு, அவ்வெற்றிக்குத் தக்க காலம் இல்லாமல் முடியாது.

Even a crow overcomes an owl by day : likewise the king must seize the right hour to strike a blow at his enemy. 1

482. பருவத்தோ(டு) ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்குங் கயிறு.

அரசன், காலத்தோடு பொருந்தத் தொழிலைச்செய்து நடப்பது, ஒருவரிடத்திலும் நிலையில்லாது நீங்கும் தன்மையதாகிய செல்வத்தைத் தன்னிடத்தினின்றும் நீங்காதபடி கட்டி வைக்கும் கயிறாகும்.

Strike at the right moment. That is the string which binds fickle fortune to your triumphant chariot wheels. 2

483. அருவினை என்ப உளவோ கருவியால்
காலம் அறிந்து செயின்.

அரசரால் செய்தற்கு முடியாத காரியங்கள் என்று சொல்லப்படுவன உளவோ? இல்லை. அக்காரியங்களை நிறை வேற்றுதற்கு ஏற்றவையாய் அமைந்த கருவிகளுடனே செய்தற்குத் தக்க காலத்தையும் அறிந்து செய்வாராயின்.

No enterprise is difficult to a king who is well equipped and avails himself of the opportune moment. 3

484. ஞாலங் கருத்தினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்.

ஒருவன், உலக முழுவதையும் தானே ஆள நினைத்தாலும், அந்நில வுலகம் தவறாது அவன் கைவசப்பட்டதாகும்; அங்ஙனம் ஆளுதற்குச் செய்ய வேண்டிய தொழிலைக் காலமறிந்து அதற்கேற்ற இடத்தோடு பொருந்தச் செய்வானாயின்.

Even your ambition to be the sovereign of the world will be achieved, if the right hour and the proper place be chosen. 4

485. காலங் கருதி இருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்.

தவறாமல் பூமி முழுவதையும் கைக்கொள்ள நினைக்கும் அரசர், தமது வலிமை மிகுந்திருந்தாலும் அதனை முக்கியமாக நினையாமல், ஞாலங் கொள்ளுதற்குத் தக்க காலத்தையே கருதி அந்தக்காலம் வருமளவும் பகை மேற் செல்லாது காத்திருப்பர்.

Mighty conquerors, who aspire to the sovereignty of the world, must also wait, unruffled, for the fitting moment. 5

486. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து.

மிகுந்த வலிமையையுடைய அரசன், பகைவர்மீது போர்க்குச் செல்லாமல் காலம் பார்த்து ஒடுங்கி இருப்பது, சண்டை செய்கின்ற ஆட்டுக் கடா, தனக்குப் பகையாயிருக்கும் மற்றொன்று அழியும்படி பாய்தற் பொருட்டுப் பின்னே கால் வாங்குவது போலும்!

The wise inaction of a man of energy is like the drawing back of a fierce, battling ram. 6

487. பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம் பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.

அறிவுடைய அரசர், பகைவர் குற்றஞ் செய்தவுடனே அவர் அறிய வெளியிற் கோபங் காட்டார்; தாம் அவரை வெல்லுதற்கு ஏற்ற காலத்தை யெதிர்பார்த்திருந்து அது வரும் வரையிலும் மனத்திலேயே கோபத்தை அடக்கி வைத்திருப்பர்.

The prudent king does not fly into a fit of passion at the insult of his enemy; but smothers his wrath to allow it to burst into a greater fury at the right moment. 7

488. செறுநரைக் காணின் சுமக்க; இறுவரை
காணின் கிழக்காம் தலை.

தாம் வெல்லக் கருதிய அரசர், பகைவர்க்கு ஒடுங்குதற்கேற்ற சமயம் வருமளவும் அவரைக் கண்டால் மிகவும் தாழ்ந்திருக்கக் கடவர்; அங்ஙனம் தாழ்ந்திருக்கவே அவ்வழிவுகாலம் நேரும்பொழுது அப்பகைவர் தடையில்லாமல் அழிவர்.

Be humble towards your adversary, bide your time, strike the blow at the right hour and then lay low the enemy. 8

489. எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்.

பகைவரை வெல்லக் கருதும் அரசர், தம்மால் எய்தற்கு அரிய காலம் வந்தபொழுது, அக்காலம் கழிவதற்கு முன்பே, அக்காலம் வந்துகூடாத பொழுது தம்மால் செய்து முடித்தற்குக் கூடாத காரியங்களைச் செய்து முடிக்கவேண்டும்.

When you stumble upon a lucky chance, seize it and achieve the impossible. 9

490. கொக்கொக்க கூம்பும் பருவத்து; மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து.

ஒரு தொழிலைத் தொடங்காதிருக்கவேண்டிய காலத்திலே, கொக்கு இருப்பது போல அடங்கியிருக்கவேண்டும்; தகுந்த சமயங் கிடைத்த பொழுது அக்கொக்கு, தன் குத்தினால் தவறாது மீனைப் பிடிப்பதுபோலக் காரியத்தைத் தவறாமல் செய்து முடிக்கவேண்டும்.

When the tide is against you, feign inaction like the heron that waits with folded wings: but when the tide is on, launch out with all the celerity of the crane in seizing its prey. 10

அதிகாரம்—50

இடன் அறிதல்

ON CHOOSING THE RIGHT PLACE

வலிமையும், காலமும் அறிந்து பகைவர்மேல் செல்லும் அரசன், தான் வெல்லுதற்கேற்ற இடத்தையும் அறிதல்.

491. தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்அல் லது.

பகைவரை வளைத்து முற்றுகை செய்தற்குத் தக்கதோர் இடத்தைப் பெறுதற்கு முன்பு, அவரிடத்து எத்தொழிலையும் தொடங்காதிருக்க வேண்டும்; அவரை வலிமையிற் குறைந்தவர் என்று இகழாமலும் இருக்கவேண்டும்.

Declare no war, despise not the enemy, until you have gained the vantage ground. 1

492. முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்
ஆக்கம் பலவும் தரும்.

பிற அரசரோடு விரோதிக்குந் திறமையும், அவரினும் தாம் அதிக வலிமை யுடைமையும் ஆகிய இவற்றை உடைய அரசர்க்கும், தக்க காவலுள்ள இடத்தைத் தாம் அடைதலால் உண்டாகிற ஆக்கம், பல பயன்களையும் கொடுக்கும்.

It is a great advantage even to mighty and brave warriors to give battle from impregnable mountain fastnesses. 2

493. ஆற்றாரும் ஆற்றி அடுப; இடன்அறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின்.

வலிமை யில்லாதவரும், பகைவரை வெல்லுதற்கு ஏற்ற இடமறிந்து தமக்குக் கெடுதி வாராமல் காத்துக்கொண்டு, பகைவரிடத்துப் போர் செய்வாரானால், வலிமையுடையராய்ப் பகைவரை அழித்து வெற்றி பெறுவர்.

Even the weak can maintain their strength and triumph over the enemy, if they spy out a suitable field of action. 3

494. எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

போர் செய்தற் கேற்ற இடத்தை யறிந்து பகைமேற் சென்ற அரசர், தாம் தக்க பாதுகாப்புள்ள இடத்தை அடைந்திருந்து, அவ்வினையைச் செய்வாரானால், அவரை வெல்லக் கருதிய பகைவர், தம் எண்ணத்தை இழந்து தோல்வியடைவர்.

All the stratagems of the enemy will be baffled, if the king fortifies himself in a well-built stronghold. 4

495. நெடும்புனலுள் வெல்லும் முதலை; அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற.

முதலை, ஆழமுள்ள நீரிலே தான் இருந்தால், பிற பிராணிகளை யெல்லாம் (எளிதாக) வென்றுவிடும்; அந்த ஆழமுள்ள நீரினின்றும் அது நீங்குமாயின், அதனை மற்றைப் பிராணிகள் யாவும் (எளிதில்) வென்றுவிடும். [எல்லாரும் தம்தம் நிலத்து வலியர் என்றபடி.]

In the depths of a mighty river, the crocodile is all powerful; on the shore it is a plaything in the hands of its foes. 5

496. கடலோடா கால்வல் நெடுந்தேர்; கடலோடு
நாவாயும் ஓடா நிலத்து.

சக்கரங்கள் வலியனவாகப் பெற்று நிலத்தின்மீது ஓடும் பெரிய தேர்கள், கடலின்கண் ஓடமாட்டா; இனி, அக்கடலினிடத்து ஓடும் மரக்கலங்களும் நிலத்தின்கண் செல்லமாட்டா.

The mighty car, that thunders with its huge wheels on the stony pavement, sails not on the ocean-streams, nor does the ship that cleaves the waters sail on dry land. 6

497. அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தான் செயின்.

பகைவரிடத்துத் தொழில் வகைகளை யெல்லாம் விடாமல் ஆலோசித்து, அவற்றை அரசர் இடத்தோடு பொருந்தச் செய்வாராயின், அச்செயலுக்குப், பகைவருக்கு அஞ்சாத தமது மனவுறுதியல்லால் வேறு துணை வேண்டுவதில்லை.

Behold the prince who makes his bold stand on a well-garrisoned fortress. Does he need any other aid than his own fearless valour to quell the foe? 7

498. சிறுபடையான் செல்இடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்.

பெரும்படையையுடைய அரசன், சிறிய சேனையையுடைய அரசனை அழிக்கக் கருதி அவனிருக்கும் இடஞ் சென்று சேர்வானாயின் தக்க இடம் இன்மையால் தன் பெருமை கெட்டு அழிவான்.

A weak army in a safe retreat brings to nought the glory of even a mighty phalanx. 8

499. சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர்
உறைநிலத்தோடு ஒட்டல் அரிது.

அழிக்க முடியாத காவலையும், மிக்க வலிமையையும் இல்லாதவராயினும் போர் முதலிய தொழில் செய்தற்குரிய அரசர்களை, அவர்கள் தங்குகிற இடத்திற் சென்று தாக்குதல் கூடாது.

It is hazardous to measure your strength with the enemy on his own ground, however feeble he may be without even the vestige of a good fortress. 9

500. காலாழ் களரின் நரிஅடும் கண்அஞ்சா
வேலாள் முகத்த களிறு.

பாகர்க்கும் அடங்காதனவாய், வேலாயுதத்தை ஏந்திய வீரர்களைத் தந்தத்தால் குத்தித் தூக்குவனவுமாகிய யானைகள், கால்கள் அழுந்திப் போகும் தன்மையதான சேற்று நிலத்தில் அகப்பட்டுக்கொண்டால், நரி அவற்றைக் கொல்லும்.

Even a jackal will vanquish an unruly elephant that has borne the brunt of many a lance and transfixed the armed men, when he gets stuck up into a treacherous, marshy swamp. 10

அதிகாரம்—51

தெரிந்துதெளிதல்

SELECTING TRUSTWORTHY MINISTERS

பிறப்பு, குணம், அறிவு முதலியவற்றைக், காட்சி முதலிய பிரமாணங்களினால் ஆராய்ந்து, அமைச்சர் முதலாயினாரைத் தெளிதல். தெளிதல் - நம்புதல்.

501. அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறம்தெரிந்து தேறப் படும்.

அறம், பொருள், இன்பம், தன்னுயிர் விஷயமாக உண்டாகும் பயம் என்னும் நால்வகைச் சோதனையிலும், ஒருவன் மனம் மாறுபடாதவனாயிருந்தால், பின்பு அவனை அரசன் தெளியக் கடவன்.

Let a king watch whether a minister has love of right conduct, love of money, love of women, and love of life and then choose him. 1

502. குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு.

உயர்ந்த குடியிற் பிறந்து, குற்றங்களில்லாதவனுய் 'நமக்குப் பழி வருமோ ?' என்று அஞ்சுகிற வெட்கமுடையவனிடத்தில் மாத்திரம் இருத்தற்கு உரியது அரசனது நம்பிக்கை.

The king's choice should fall on him who is come of a noble lineage, is blameless, and is afraid of sullying his fair name. 2

503. அரியகற்(று) ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு.

கற்பதற்கு அருமையான நூல்களைக் கற்று, யாதொரு குற்றமும் இல்லாதவரிடத்திலும் நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால், அறியாமை இல்லாதிருத்தல் அருமையே.

Put a man of vast learning and of unblemished character to a severe test. He too will display ignorance. 3

504. குணநாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

குணங் குற்றங்களுள் ஒன்றே யுடையார் உலகத்தில் இல்லாமையினுல், ஒருவனது குணங்களையும் குற்றங்களையும் ஆராய்ந்து, அவற்றுள் மிக்கவற்றைத் தெரிந்து, குணங்களின் மிக்கவனைக் கொள்ளவேண்டும், குற்றங்களில் மிக்கவனைத் தள்ளவேண்டும்.

In the tangled obscurities of life, weigh the good and the evil of men and judge them according to their leanings. 4

505. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

குடிப்பிறப்பு, குணம், அறிவு என்பவற்றுல் மனிதர் அடையும் பெருமைக்கும், சிறுமைக்கும் அவரவர் செய்யும் தொழிலே பொன்னின் குணத்தை யுணர்த்தும் உரைகல் போலாகும்.

Men's deeds are the touchstone of their greatness or their littleness. 5

506. அற்றாரைத் தேறுதல் ஓம்புக; மற்றவர்
பற்றிலர் நாணார் பழி.

சுற்றமில்லாதாரை அரசன் நம்பாதிருக்க வேண்டும்; அவர் உலகத்தோடு சம்பந்தம் இல்லாதவரா யிருப்பராதலால், பழிக்கு அஞ்சமாட்டார்.

Choose not ministers who know no ties of kinship. Such men are hard of heart and devoid of shame. 6

507. காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாந் தரும்.

அறிய வேண்டுவனவற்றை அறியாதாரை, அன்புடைமை காரணமாக அரசன் நம்புதல், அவனுக்கு எல்லா அறியாமையையும் கொடுக்கும்.

It is the height of folly to choose, through nepotism, fools as your ministers. 7

508. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்.

தன்னொடு யாதொரு சம்பந்தமும் இல்லாதவனைக் குடிப்பிறப்பு, குணம், அறிவு என்பவற்றாலும், செயலாலும் ஆராயாது நம்பின அரசனுக்கு, அவ்வாறு நம்பினமை அவனுக்கு மாத்திரமன்றி அவன் சந்ததி முழுமைக்கும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

Reposing confidence in a minister without studying him, breeds millions of mischiefs even to generations of kings yet unborn. 8

509. தேறற்க யாரையும் தேராது: தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்.

யாரையும் ஆராயாது நம்பக்கூடாது; ஆராய்ந்தபின், தெளியப்படும் பொருள்களில் சந்தேகப்படாமலிருக்கக் கடவன்.

Weigh the merits of a minister, choose him and then assign him his proper sphere of work. 9

510. தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.

அரசன், ஒருவனை ஆராயாது தெளிதலும், ஆராய்ந்து தெளியப்பட்டவனிடத்தில் சந்தேகப்படுதலும் ஆகிய இரண்டும் அவ்வரசனுக்கு நீங்காத துன்பத்தைத் தரும்.

He becomes a prey to a multitude of evils who has not exercised his discretion in the choice of his ministers and is ever suspicious of his chosen men. 10

அதிகாரம்—52

தெரிந்துவினையாடல்

On Selecting and Employing Men

தெரிந்தெடுத்துக் கொள்ளப்பட்டவரை, அவர் செய்யவல்ல தொழில்களை அறிந்து, அத்தொழில்களிலே செலுத்துதல்.

511. நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்.

அரசன், முதலில் ஒரு தொழிலைத் தன்னிடத்தில் கொடுத்தால் அத் தொழிலில் நன்மை தருவனவற்றையும் தீமை தருவனவற்றையும் ஆராய்ந்து, நன்மை தருவனவற்றையே விரும்பக் கூடியவனைப் பின்பு சிறந்த தொழில்களில் செலுத்தவேண்டும்.

The king chooses him who distinguishes the good from the evil and leans to virtue. 1

512. வாரி பெருக்கி வளம்படுத்(து) உற்றவை
ஆராய்வான் செய்க வினை.

திரவியம் வரும் வழிகளை அதிகப்படுத்தி, அப்பொருளாலேயே பொருளின்பங்களை வளர்த்து அவற்றுக்கு வரும் இடையூறுகளை நாடோறும் ஆராய்ந்து நீக்கவல்லவனே, அரசனுக்குத் தொழில் செய்ய வேண்டும்.

He should be employed in the service of the state who develops her resources and removes all her ills. 2

513. அன்பறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு.

அரசனிடத்து அன்பும், அவனுக்கு அநுகூலமானவற்றை அறியும் அறிவும், அவற்றைச் செய்யுமிடத்து மனங் கலங்காமையும், அவற்றால் பொருள் கையில் அகப்பட்ட பொழுது அப்பொருள் மேல் ஆசை இன்மையும் ஆகிய இந்நான்கு குணங்களையும் உடையவனையே அரசன் நம்பவேண்டும்.

Let a monarch put trust in him who has loyalty, wisdom, a clear vision and is free from avarice. 3

514. எனைவகையால் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர்.

எல்லா வகையாலும் ஆராய்ந்து தெளிந்து ஒரு தொழிலில் வைக்கப் பட்ட பின்னும் அத்தொழிலின் தன்மையினால் மனமொழி மெய்களிலே வேறுபடுகின்ற மனிதர் உலகத்திலே பலராவர்.

Many a well-tried and worthy minister has turned traitor to the king. 4

515. அறிந்தாற்றிச் செய்கிற்பாற்(கு) அல்லால் வினைதான்
சிறந்தானென்(று) ஏவற்பாற் றன்று.

செய்யும் உபாயங்களை அறிந்து, செயலாலும் இடையூறுகளாலும் வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு, ஒரு தொழிலை நிறைவேற்ற வல்லவனையன்றி, மற்றொருவனை இவன் நம்மிடத்து அன்புடையவன் என்பது மாத்திரமே கருதி ஒரு தொழிலில் செலுத்தக்கூடாது.

Let not favouritism prevail. Let men be chosen for their probity and heroic endurance. 5

516. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்.

ஒரு தொழிலைச் செய்பவனது லக்ஷணத்தை முன்னதாக ஆராய்ந்து, பின்னர்ச் செய்யப்படும் தொழிலின் இயல்பையும் ஆராய்ந்து, அதன்பின் அவனையும் அவ்வினையையும் காலத்துடனே சேர்த்துப் பொருந்த அறிந்து, அவனை அத்தொழிலில் ஏவுதல் வேண்டும்.

Choose an expert, outline his sphere of work, watch for the ripe hour and then set him to it. 6

517. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்(து)
அதனை அவன்கண் விடல்.

இத்தொழிலை இக்கருவியைக் கொண்டு இவன் முடிக்க வல்லன் என்று பகுத்து ஆராய்ந்து, செய்பவன், தொழில், கருவி ஆகிய இம்மூன்றும் தமக்குள் மாறுபாடின்றிக் கூடியபொழுது, அவ்வினையை அவனிடம் விட வேண்டும்.

Gauge the capacity of the servant, measure the work for which he is competent, saddle him with that work. 7

518. வினைக்(கு) உரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல்.

ஒருவனை அரசன், தன்தொழில் செய்வதற்குரியனாக ஆராய்ந்து துணிந்த பின்பு, அவனை அத்தொழில் செய்வதற்கு உரியவனாகச் செய்வதோடு, அத்தொழிலுக்கேற்ற அதிகாரத்தையும் கொடுக்க வேண்டும்.

Let the king consider for what work he is fit and then assign it to him. 8

519. வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்கும் திரு.

எப்பொழுதும் தன் தொழிலினிடத்தே முயற்சி செய்தலை யுடையவன், அவ்வுரிமையால் தனக்கு அந்தரங்கனாய் நடக்கும் தன்மையைப், பொறாமை கொண்டு கலகஞ் செய்பவரது சொற்கேட்டு அரசன் மாறுபட நினைப்பானானால், திருமகள் அவனைவிட்டு நீங்குவாள்.

Ruin seizes the king that trusts not his wise counsellors, who are discharging their duties with conscientious devotion. 9

520. நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா(து) உலகு.

தொழில் செய்பவன், எண்ணம், சொல் செயல்களில் மாறுபடாதிருந்தால் உலகத்தார் இயல்பு மாறுபடாதிருக்கும்; ஆதலால் அரசன் தினந்தோறும் அந்த வினை செய்வான் செயலை ஆராய்ந்து ஒழுகக் கடவன்.

Let the king watch his ministers, for on their conduct does the well-being of the state rest. 10

அதிகாரம்—53

சுற்றந்தழால்

On Cherishing One's Kith and Kin

அரசன், தனது உறவினரைத் தன்னிடத்தினின்றும் நீங்காதபடி தழுவிக் கொள்ளுதல்.

521. பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள.

ஒருவன், செல்வம் தொலைந்து தரித்திரனான போதும் விடாது, தம்மோடு அவனுக்கு இருந்த பழைய சம்பந்தத்தை எடுத்துக் கொண்டாடும் தன்மை, உறவினரிடத்தே உண்டு.

Constancy of love belongs only to our kindred, even in the days of our gloom. 1

522. விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவுந் தரும்.

அன்பு நீங்காத சுற்றம் ஒருவனுக்குக் கிடைக்குமானால் அது, அவனுக்குப் பலவாறு செழித்து வளரும் செல்வங்கள் பலவற்றையும் கொடுக்கும்.

Fortune ever smiles on him who has never-failing relatives. 2

523. அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று.

சுற்றத்தோடு மனங் கலந்து யோக க்ஷேமங்களைக் கேட்டு விசாரித்தறிதல் இல்லாதவனது வாழ்க்கைக்குக் காரணமான செல்வம், விசாலமான குளத்தில் கரையின்றி நீர் நிறையப் பெற்றாற் போலும்! (கரையின்மையின் நீர் நிறையாது என்பதாம்)

Like the waters of a bundless lake, does the fortune of a man ebb away who rejoices not in the sweet concord of friendship with his kith and kin. 3

524. சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்.

ஒருவனுக்குச் செல்வத்தைப் பெற்றதனாலாகிய பயன் யாதெனில், தன் சுற்றம் தன்னைச் சூழ்ந்திருக்கும்படி அதனை ஆதரித்து நடத்தலாம்.

To form a happy circle of relatives around our hearth is the only happiness that wealth can bestow. 4

525. கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும்.

சுற்றத்தார்க்கு வேண்டுவன கொடுத்தலும், இன்சொற் சொல்லுதலும், ஒருவன் செய்யவல்லனானால், தமக்குள் உறவு முறைமையால் ஒன்றையொன்று தொடர்தலையுடைய பலவகைச் சுற்றத்தாலும் சூழப்படுவான்.

There is a ceaseless stream of relatives in the happy home of him who has a sweet voice and a loving and a generous heart. 5

526. பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத்(து) இல்.

ஒருவன், மிக்க கொடையாளியாயும், கோபித்தலை விரும்பாதவனாயும் இருந்தால், அவனைப் போலப் பக்கங்களில் சூழ்ந்து நிற்கும் உறவினரையுடையவர் இவ்வுலகத்தில் இரார்.

Innumerable are they who claim kinship with him who is a mine of bounty and knows no wrath. 6

527. காக்கை கரவாக் கரைந்துண்ணும்; ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள.

காக்கைகள், தமக்கு இரையாயுள்ளவற்றைப் பார்த்தபொழுது, ஒளிக்காமல் தம் இனமாகிய பிற காக்கைகளை அழைத்து அவற்றோடு சேர்ந்து உண்ணும்; உறவினரால் வரும் நன்மைகள், தாம் நுகரத்தக்க பொருள்கள் நேர்ந்தவிடத்து ஒளிக்காமற் சுற்றத்தவரை அழைத்து அவரோடுங் கூட நுகர்பவர்க்கே உண்டாகும்.

The crow beckons to its kind to share a common prey. Only with men of such disposition does fortune abide. 7

528. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்.

எல்லாரையும் ஒரு தன்மையராக நோக்காமல் அவரவரது யோக்கியதைக்குத் தக்கபடி அரசன் உபசரித்து ஒழுகுவானாயின், அச்சிறப்பு நோக்கி அவனைவிடாது வாழும் சுற்றத்தார் பலராவர்.

Relatives flock unto the kings who respect their ranks and lineage. 8

529. தமராகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும்.

முன்பு, தன்னை அடுத்த சுற்றத்தவராயிருந்து, தன்னொடு மனங்கலந்திராமல் ஏதேனும் ஒரு காரணத்தால் தன்னைவிட்டுப் பிரிந்து போனவர்கள், அங்ஙனம் அவர்கள் தன்னோடு கலவாமற் பிரிந்து சென்றதற்குக் காரணமாகவுள்ள குற்றம் தன்னைவிட்டு நீங்கிவிட்டால், மீண்டும் அவர் சுற்றத்தாராகவே வந்து சேர்வர்.

Close the rift in the lute: kinsmen, who have grown cold and sullen towards you, will gather round you again. 9

530. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந்(து) எண்ணிக் கொளல்.

அரசன், தன் கருத்தை நிறைவேற்ற இருந்தும், அவனிடத்து அன்பில்லாமல் பிரிந்து போனவன், போனவிடத்துத் தன்கருத்து நிறைவேறாததனால் திரும்பித் தன்னிடத்து வரின் அவன் கருத்தைப் பூர்த்திசெய்து, அவனை ஆராய்ந்து தழுவிக்கொள்ளக் கடவன்.

Let the king welcome back into his fold the deserter who returns to him; but let him be wary of him. 10

அதிகாரம்—54

பொச்சாவாமை

AGAINST FORGETFULNESS

வடிவழகு, செல்வம், வலிமை முதலியவற்றால் மகிழ்ந்து, தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுதலிலும், பகைவரை யழித்தல் முதலிய காரியங்களிலும் மறவாதிருத்தல். (அஜாக்கிரதைப் படாமை.)

531. இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியின் சோர்வு.

அளவு கடந்த மகிழ்ச்சியின் மதத்தால் வரும் மறதி, வரம்பு கடந்த கோபத்தான் வரும் கொடுமையினும் பெரிதாம்.

Luxurious indolence, born of excessive self-complacency and forgetfulness, is worse than blind wrath. 1

532. பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.

ஒருவனது அறிவை, நித்திய தரித்திரம் கெடுப்பது போலப் புகழை அவனது மறதியானது கெடுத்துவிடும்.

Poverty freezes the genial current of the soul. Forgetfulness blights its glory. 2

533. பொச்சாப்பார்க்(கு) இல்லை புகழ்மை; அதுஉலகத்து
எப்பால்நூ லோர்க்குந் துணிவு.

மறதியுடையார்க்குப் புகழுடைமை இல்லை; அவர்கட்குப் புகழில்லையென்பது அரசநீதி நூலுடையார்க்கே யன்றி எந்த நூல் உடையார்க்கும் ஒப்பமுடிந்த விஷயம்.

All the scriptures and wisdom of the world have declared that the thoughtless know no fame. 3

534. அச்சம் உடையார்க்(கு) அரணில்லை; ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

காடு, மலை, முதலிய அரண்களுக்குள்ளே இருந்தாலும், மனத்தில் அச்சமுடையவர்க்கு அவற்றால் பயனில்லை; அதுபோல, செல்வமெல்லாம் உடையவராயிருந்தாலும் மறதியுடையவர்க்கு அவைகளால் பயனில்லை.

Cowards quake with fear even in well-garrisoned fortresses. The heedless know no joy of wealth even in the abundance of their riches. 4

535. முன்னுறக் காவா(து) இழுக்கியான் தன்பிழை
பின்னூ(று) இரங்கி விடும்.

தன்னால் காக்கப்படவேண்டிய துன்பங்களை, அவை வருதற்கு முன்னதாகவே அறிந்து காவாமல், மறந்திருந்தவன், பின் துன்பங்கள் நேர்ந்த காலத்தில் அவற்றைத் தடுக்க முடியாமையால் தன்னுடைய பிழையை நினைந்து நிச்சயமாக அநுதாபப்படுவான்.

Remorse enters the heart which, in its forgetful ease, guards not against impending evils. 5

536. இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயின் அதுஒப்ப தில்.

அரசர்க்கு மறவாமையானது, எல்லா விஷயத்திலும் எக்காலத்திலும் தவறாது வாய்க்குமானால் அதற்கு நிகரான நன்மை வேறொன்றில்லை.

There is nothing like ceaseless and searching vigilance to the king. 6

537. அரியஎன் றாகாத இல்லை பொச்சாவாக்
கருவியால் போற்றிச் செயின்.

அரசன், தனது மறவாத மனத்தினால் எண்ணிக் காரியங்களைச் செய்ய வல்லனாயின், அவனுக்குச் செய்தற்கு அரியனவென்று சொல்லப்படும் காரியங்களும் உண்டோ? இல்லை.

Nothing is impossible to the monarch who is all eyes and ears about his work. 7

538. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும்; செய்யா(து)
இகழ்ந்தார்க்(கு) எழுமையும் இல்.

நீதி நூலுடையார் இவை அரசர்க்கு உரியனவென்று உயர்வாகக் கூறும் செயல்களை, மறவாமல் உறுதியாகப் பிடித்துச் செய்யவேண்டும்; அங்ஙனஞ் செய்யாது மறந்தவர்க்கு எழுபிறப்பிலும் நன்மை உண்டாகாது.

Criminal neglect of what is praiseworthy, brings in its train countless ills through all our sevenfold births. 8

539. இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

அரசர், தமது செல்வம் முதலியவற்றாலாகிய உவகைக் களிப்பில் தாம் மிக்கு நிற்கும் காலத்திலே, முற்காலத்தில் அம்மகிழ்ச்சியால் உண்டாகிய மறதியால் கெட்டொழிந்தவர்களை நினைக்கவேண்டும்.

In your self-intoxication of joy, remember those monarchs who, in their thoughtless mirth, have ruined themselves. 9

540. உள்ளிய(து) எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

அரசனுக்குத் தான் அடைய நினைத்த பொருளை நினைத்தபடியே அடைதல் எளிதாகும்; பின்னும் அப்பொருளையே மறதியில்லாமல் அடையுமாறு முயற்சி செய்தால்.

All the yearnings of a king become fulfilled, if he keeps them constantly in his mind. 10

அதிகாரம்—55

செங்கோன்மை

ON WIELDING THE SCEPTRE

வளைவில்லாமல் செவ்விய கோல்போன்று அரசனால் செய்யப்படும் நீதி முறையான ஆட்சி.

541. ஓர்ந்துகண் ணோடா(து) இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை.

அரசன், தன்கீழ் வாழுங் குடிகள் குற்றஞ்செய்தால், அக்குற்றத்தை ஆராய்ந்தறிந்து எப்படிப்பட்டவரிடத்தும் தாக்ஷிணியமில்லாமல் பக்ஷபாதமில்லாத தன்மையனாய், அக்குற்றத்திற்குச் சொல்லிய தண்டனையை, நீதி நூல்கற்றாரோடு ஆராய்ந்து தக்கபடி விதிப்பதே நீதியாகும்.

Go into the details of a crime, view things impartially without being swayed by any motive, consult the wise men of the realm : that is the way to administer even-handed justice. 1

542. வானோக்கி வாழும் உலகெல்லாம்; மன்னவன்
கோனோக்கி வாழும் குடி.

உலகத்துப் பிராணிகள் எல்லாம் மழைபெய்யின் உயிர் வாழும்; அரசன் கீழ், குடிகள் அவனது செங்கோலை நோக்கியே வாழும்.

Our earth is beholden unto the clouds for her prosperity. The subjects look to the sceptre for their protection. 2

543. அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்.

அந்தணர்க்கு உரித்தாகிய வேதமும், அவ்வேதத்தில் சொல்லப்பட்ட அறமும், ஆகிய இரண்டும் நிலைபெறுதற்கு அரசனால் செலுத்தப்படுகின்ற செங்கோலே காரணமாக நிற்கும்.

Learning and righteousness flourish under the benevolent sway of a monarch. 3

544. குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

தன் குடிகளை அன்போடு ஆதரித்தும் செங்கோலையும் செலுத்தும் பெரிய இராச்சியத்து அரசனது பாதங்களைத் தழுவி, உலகத்தார், அவனிடத்தில் நீங்காத அன்பினராய் வாழ்வர்.

The whole world is at the feet of the monarch who, with loving care, wields the sceptre. 4

545. இயல்புளிக் கோலோச்சு மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு.

காலந் தவறாது பெய்கிற மழையும், குறையாத விளைவும் ஒருங்குகூடி, நூல்களில் சொல்லிய முறைப்படி செங்கோலைச் செலுத்தும் அரசனது நாட்டில் உள்ளனவாம்.

Smiling plenty and seasonal showers gladden the land of the sovereign who rules with perfect justice. 5

546. வேலன்று வென்றி தருவது; மன்னவன்
கோலதூஉம் கோடா(து) எனின்.

மன்னவனுக்குப் போரில் வெற்றியைத் தருவது அவன் எறியும் வேல் அன்று; அவனது செங்கோல்: அச்செங்கோலும் கோணா திருக்குமானால்.

It is not the javelin but the sceptre swayed with equity, that brings glory unto the king. 6

547. இறைகாக்கும் வையகம் எல்லாம்; அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்.

உலகத்தை யெல்லாம் அரசன் காவல் செய்வான்; அவ்வரசனை அவனது செங்கோலே காக்கும்; தடைபட நேர்ந்தவிடத்தும் தடைபடாதபடி அதனைச் செலுத்துவானாயின்.

The armour of his subjects is the king. The armour of the king is his equity. 7

548. எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தன்பதத்தால் தானே கெடும்.

முறையிட விரும்பி வந்தவர்க்கு, எளிதில் காட்சி கொடுக்கும் சமயத்தை யுடையவனாய், அவர்கள் சொல்லியவற்றை அமைச்சர் முதலியோருடன் ஆராய்ந்து, அவர்கள் சொல்லியவற்றில் உள்ள உண்மைக்கு ஏற்றபடி நீதி நடத்தாத அரசன், தாழ்ந்த நிலையில் இழிந்து, தானே அழிவான்.

The sovereign perishes by himself, who is not easy of access and does not lend a patient and listening ear to the grievances of his subjects. 8

549. குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்.

குடிகளைப் பகைவர் முதலியோர் வருத்தாமற் காத்தலும், தானும் வரி முதலியவற்றால் வருத்தாது அன்புகொண்டு அவர்களை ஆதரித்தலும் அவர்களிடத்துக் குற்றம் உண்டானால் அதனைத் தண்டனையால் ஒழித்தலும் வேந்தனுக்குப் பழியல்ல; கடமையே யாகும்.

To stem the tide of invasion from without and to punish the wicked to preserve the peace and happiness of the land, is no reproach to the king; but it is a duty legitimate assigned to him. 9

550. கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல், பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.

அரசன், கொடியவர்களைக் கொலை செய்தலாகிய தண்டனை விதித்து ஒழித்து, காத்தற்குத் தகுதியுடைய குடிகளைக் காத்தல், உழுது பயிர்

செய்பவன், பயிர்க்குத் தடையாகிற புல் பூண்டுகளைக் களைந்து பயிரைக் காப்பதற்கு நிகராகும்.

Punishing the wicked is like removing the noxious weeds that choke the healthy growth of a sturdy plant. 10

அதிகாரம்—56

கொடுங்கோன்மை

TYRANNY

அரசன், தனது ஆட்சி முறையினின்றும் கோணுதலின் தன்மை.

551. கொலைமேற் கொண்டாரில் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து.

செல்வத்தைப் பெருக்க விரும்பி, தன் கீழ் வாழுங் குடிகளை வருத்த ஒருப்பட்டு நீதியல்லவற்றை, அவரிடத்துச் செய்தொழுகும் அரசன், பகைமை தோன்றும் காலத்து மாத்திரம் கொல்லுதற்றொழிலை ஏற்றுக்கொண்டு நடக்கும் கொலையாளிகளினும் கொடியனாவான்.

Worse than an assasin is the cruel prince who harasses his subjects and does grievous wrong. 1

552. வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு.

வருத்துதலாகிய தண்டத்தொழிலை யுடைய அரசன், குடிகளிடம் வரிப்பொருளல்லாத வேறு பொருளை வேண்டிப் பெறுதல், வேலாயுதத்தைக் கையிற் கொண்டு வழிபறிக்கும் பொருட்டுத் தனியே நின்ற கள்வன், வழிப்போக்கனை நோக்கி, நின் கைப்பொருளைத் தாவென்று நயந்து வேண்டுதல் போலாகும்.

The king, who extorts money at the point of the bayonet, is like a highway man, who waylays the benighted traveller, with his threatening cry " stand and deliver." 2

553. நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்.

தன் நாட்டில் நிகழும் தீமைகளை நாடோறும் ஆராய்ந்து, அவ்வாராய்ச்சிக்கு ஏற்றபடி நீதியைச் செய்யாத அரசன், பயன் எய்தாமல் தினந்தோறும் தனது நாடு கெடப் பெறுவான்.

The power of the king who does not redress the grievances of his subjects wanes away. 3

554. கூழுங் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு.

இனி வரும் பயனை ஆராய்ந்து அறியாமல், ஆட்சி முறைமை கெடும்படி ஆளும் இறைவன், அச்செயலால் முன் சேர்த்து வைத்த பொருளையும் பின் அப்பொருளைச் சேர்ப்பதற்குக் காரணமாகிய குடிகளையும் ஒருங்கே இழந்து விடுவான்.

An improvident and a foolish king who prostitutes justice for his private ends will not only lose his fortune but also his kingdom. 4

555. அல்லற்பட்(டு) ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

அரசனது கொடுங்கோன்மையினால் வரும் துன்பத்தைப் பொறுக்க மாட்டாது குடிகள் அழுதலால் வந்த அவர்களது கண்ணீர் அல்லவா? அவனது செல்வத்தைக் குறைக்கும் கருவியாகும்.

It is the tears of the oppressed and the down-trodden, who groan under the tyrannous yoke of a prince, that wear away his fortune. 5

556. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை; அஃதின்றேல்
மன்னாவாம் மன்னர்க்கு ஒளி.

அரசர்க்குப் புகழ்கள் நிலைபெறுதல் செங்கோன்மையினாலேயாம்; அத்தகைய நீதிமுறைமை இல்லையானால் அவ்வரசர்க்குப் புகழ்கள் உண்டாகி நிலைபெறா.

Glory eternal springs from an upright government. But there is no halo about the king who does not rightly wield the sceptre. 6

557. துளிஇன்மை ஞாலத்திற்(கு) எற்றற்றே வேந்தன்
அளிஇன்மை வாழும் உயிர்க்கு.

மழையில்லாமை உலகத்துயிர்களுக்கு எவ்வகைத் துன்பந் தருமோ! அவ்வகைத் துன்பத்தைத் தரும் அரசன் தனது குடிகளிடத்துக் குளிர்ந்த கருணையில்லாதிருத்தல்.

Ill fares the land where rain drops not from the heavens ; ill fare the subjects who chafe under the tyranny of a ruthless king. 7

558. இன்மையின் இன்னா(து) உடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்.

நீதியைச் செலுத்தாத அரசனுடைய கொடுங்கோலின்கீழ் அகப்பட்டு வாழ்ந்தால், யாவர்க்கும் வறுமையினும் செல்வமுடைமை துன்பந் தருவதாகும்.

More galling than the plight of the poor is the lot of the opulent under the iron rule of a tyrant prince. 8

559. முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்.

அரசன், அநீதியாகத் தொழிலைச் செய்வானாயின், அவன் நாட்டில் காலந்தவறாத பருவ மழை இல்லையாம்படி மேகம் பொழிதலைச் செய்யாது.

Seasons alter, heavens withold their showers, in the realm of the monarch who swerves from justice. 9

560. ஆபயன் குன்றும்; அறுதொழிலோர் நூல்மறப்பர்;
காவலன் காவான் எனின்.

காத்தற்குரிய அரசன், உயிர்களைக் காவானாயின், நீதியற்ற அவனது நாட்டில் பசுக்களும் பால் கொடுப்பதில் சுருங்கும்; ஆறு தொழிலையுடைய அந்தணரும் தாம் கற்றற்குரிய வேத சாஸ்திரங்கள் ஓதுதலை மறந்துவிடுவார்கள்.

No longer do the Brahmins chant their Vedas, no longer do the cows yield their plenteous milk in a land where injustice reigns. 10

அதிகாரம்—57

வெருவந்த செய்யாமை

AGAINST THE REIGN OF TERROR

அரசன், தனது குடிகள், மந்திரி முதலியோர் அஞ்சத்தக்க தொழில்களைச் செய்யாமை.

561. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்(கு) ஒறுப்பது வேந்து.

ஒருவன் தன்னைக் காட்டிலும் எளியவர்மேற் சென்று வருத்திய பொழுது, அக் குற்றத்தைப் பக்ஷபாதமில்லாமல் நின்று ஆராய்ந்து, மறுபடியும் அவன் அக்குற்றத்தைச் செய்யாதிருத்தற்காக அவனை அக் குற்றத்திற்குத் தக்கபடி தண்டிப்பவனே அரசனாவான்.

He alone is a king who impartially investigates a crime, judges it according to the nature of its guilt, and awards such punishment as will act as a deterrent. 1

562. கடிதோச்சி மெல்ல எறிக; நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்.

செல்வம் முதலிய நன்மைகள் தம்மிடத்து நெடுங்காலம் நிற்றலை விரும்பும் அரசர், குடிகளைக் குற்றத்திற்கு ஏற்கத் தண்டிக்கத் தொடங்கும்

பொழுது, அளவு கடந்து தண்டனை செய்பவர் போலக் காட்டி, பின்பு அளவு கடவாமல் செய்யவேண்டும்.

He enjoys a long and glorious reign who, as a judge, looks stern and severe, but really seasons justice with mercy. 2

563. வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.

குடிகள் அஞ்சும்படியான செயல்களைச் செய்து நடக்கும் கொடுங் கோன்மையை யுடையவனாயின், அவ்வரசன் நிச்சயமாக விரைவில் கெடுவான்.

Swift and sure is the ruin of the monarch whose rule is a regular reign of terror. 3

564. இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்.

குடிகளால் நம் அரசன் கொடியன் என்று சொல்லப்படும் இன்னாமை தரும் பழிச்சொல்லுக்குக் காரணமான அரசன், வாழ்நாளும் குறைந்து, செல்வத்தையும் விரைவில் இழந்து விடுவான்.

The days of a tyrant, on whose head do fall the curses of his subjects, are numbered and he perishes. 4

565. அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ் செல்வம்
பேஎய்கண்(டு) அன்ன(து) உடைத்து.

தன்னைக்காண வருபவர்க்குப் பார்க்கச் சமயம் கொடாதவனாய், கண்டால் வெறுப்புக் காட்டுகிற முகத்தை யுடையவனாயுமிருக்கும் அரசனது பெருஞ் செல்வம், பேயினால் கைக்கொள்ளப்பட்ட பொருள் போலப் பயன்படாதொழியும்.

Like the hoarded wealth jealously guarded by a sleepless monster, is the wealth of the king, who is hard of access and grim and fierce in his looks. 5

566. கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும்.

கடுஞ்சொல்லை யுடையவனாயும், தாக்ஷிணியமும் இல்லாதவனாயுமுள்ள அரசனது பெருஞ் செல்வம், நெடுங்காலம் நிலைநிற்றலின்றி அப்பொழுதே அழிந்து போகும்.

Even the boundless riches of a monarch run to decay who is harsh-tongued and unforgiving. 6

18

567. கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்.

கடுமையான சொல்லும், வரம்பு கடந்த தண்டனையும் பகையை வெல்லுதற்கேற்ற அரசனது வலிமையாகிய இரும்பினைக் குறைக்கும் அரமாம்.

Bitter words and heavy punishments, like the keen edge of a saw, wear away the conquering might of a sovereign. 7

568. இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறின் சிறுகும் திரு.

தான் செய்யவேண்டிய காரியத்தைப்பற்றி வந்த ஆலோசனையைத் தன் இனமாகிய அமைச்சரோடு கலந்து, ஆலோசித்துச் செய்யாத அரசன், அந்தக் குற்றத்தினால், தன் காரியம் தவறியபோது தன்னைச் சினத்துக்கு ஆளாக்கி, மந்திரிகளைக் கோபிப்பானானால் அவனது செல்வம் நாடோறும் சுருங்கும்.

The prosperity of a king, who acts not in the counsel of his ministers, but frets and fumes against them for the failure of his projects, dwindles into nothingness. 8

569. செருவந்த போழ்தின் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்.

போர் வருவதற்குமுன்னே தனக்குப் பாதுகாப்பாகச்சென்று சேரத் தக்கதோர் கோட்டையைக் கட்டிக்கொள்ளாத அரசன், அப்போர் வந்த போது பாதுகாப்பு இன்மையால் பகைவர்க்கு அஞ்சி விரைவில் கெடுவான்.

The king, who has not built for himself a safe stronghold of defence, will, in times of war, tremble with fear and swiftly perish. 9

570. கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல்; அதுவல்ல(து)
இல்லை நிலக்குப் பொறை.

கொடுங்கோலாகிய அரசன், நீதிநூல் முதலியவற்றைப் படியாதவரைத் தனக்குத் துணைவராகச் சேர்த்துக்கொள்வான்; ஆயின், அவ்வாறு சேர்த்துக்கொள்வதே, எல்லாப் பாரங்களையும் பொறுக்கும் இயல்புடைய பூமிக்கு, பொறுத்தற்கரிய பாரமன்றி வேறில்லை.

The very earth groans under the tread of a cruel sovereign, who gathers around him ignorant and wicked counsellers. 10

அதிகாரம்—58

கண்ணோட்டம்

BENIGNITY

தன்னோடு முன்பு பழகியவரைக் கண்டால் அவர் கூறியவற்றை மறுக்க மாட்டாமை.

571. கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு.

கண்ணோட்டம் என்று சொல்லப்படுகிற உயிரினது மிகச் சிறந்த அழகை, அரசன் உடையவனாயிருத்தலாலேயே, இவ்வுலகத்துக் குடிகள் வாழ்வு பெறுவர்.

The glory of the world lives in the mild and the magnificient look of a sovereign. 1

572. கண்ணோட்டத்(து) உள்ளது உலகியல்; அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை.

பிறரைப் பாதுகாத்தல் முதலிய உலகத்தாரது நடத்தை, கண்ணோட்டத்தினிடத்தே உள்ளது; ஆதலால், கண்ணோட்ட மில்லாதவர்கள் உலகத்திலிருத்தல், பூமிக்குப் பாரமாவதற்கே யன்றி வேறொன்றுக்கு அல்ல.

All the graces and charms of life spring from a noble demeanour. But verily they are a burden unto the earth who are devoid of it. 2

573. பண்என்ஆம் பாடற்(கு) இயைபு இன்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

பாடலோடு பொருத்தமில்லாதாயின் இசை என்ன பயனையுடையதாகும்; அதுபோல, தாக்ஷிண்யத்தோடு பொருந்தாதவிடத்து கண் என்ன பயனையுடையதாகும்.

Of what avail is the song that does not touch the hidden soul of harmony ? Of what avail is the eye that shines not with the tender light of grace ? 3

574. உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்.

கண்டார்க்கு முகத்தினிடத்து உள்ளன போலத் தோன்றுவதல்லது வேறு என்ன பயனைச் செய்யும்? வரம்பு கடவாத கண்ணோட்டத்தையுடையவல்லாத கண்கள்.

Of what avail is the vacant look of a man whose eyes sparkle not with charming tenderness ? 4

575. கண்ணிற்(கு) அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப் படும்.

ஒருவன் கண்ணிற்கு ஆபரணமாவது கண்ணோட்டமே; அவ்வாபரணம் இல்லையானால் அறிவுடையார், அந்தக் கண்ணைப் புலன் உணர்ச்சியிருந்தாலும் நோயால் பீடிக்கப்படுதலின், புண் என்றே கூறுவர்.

The grace of the eye lies in its tender looks. Void of it, eyes are 5
but mere sores.

576. மண்ணோ(டு) இயைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்துகண் ணோடா தவர்.

தாக்ஷிணியங் கொள்ளுதற்கு உரிய கண்ணோடு கூடியிருந்தும் தாக்ஷிணியங் கொள்ளாதவர், சஞ்சரிக்கிறவராயினும் நிலத்தில் முளைத்து இடம் விட்டுப் பெயராது நிற்கின்ற மரத்திற்குச் சமானமாவர்.

They are but stocks and stones whose eyes dance not with kind- 6
ness.

577. கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர்; கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல்.

கண்ணோட்டமில்லாதவர், கண்ணிருந்தும் பயனின்மையால் கண்ணுடையரெனக் கருதப்படார்; தன்னோடு பழகியவரைக் கண்டபொழுதே கண்ணோட்டமுண்டாதலால் கண்ணுடையவர் தாக்ஷிணியமில்லாமலிருக்கவும் முடியாது.

They are blind who look not with tenderness. They have eyes 7
who have a divine grace in their looks.

578. கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்(கு)
உரிமை யுடைத்திவ் வுலகு.

நீதி நடத்துதலாகிய தமது தொழிலுக்கு அழிவு வாராதபடி கண்ணோட்டஞ் செய்யவல்ல அரசர்க்கே இவ்வுலகம் உரியதாகும்.

He inherits the earth in whom justice and tenderness happily 8
meet and mingle.

579. ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

தம்மை வருத்தும் இயல்புடையவரிடத்தும் கண்ணோட்டமுடையவராய், அவர் செய்யும் அக்குற்றத்தைப் பொறுக்கும் இயல்பே அரசர்க்கு உத்தமமான குணமாகும்.

Forbear and show tenderness to those who have offended you. 9
That is true nobility.

580. பெயக்கண்டு நஞ்சுண்(டு) அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

யாவராலும் விரும்பத்தக்க கண்ணோட்டத்தை விரும்புவோர், பழகிய வர் தமக்கு விஷத்தைக் கொடுத்ததை யறிந்தும், மறுக்காமல் தாக்ஷிணியத் தால் உண்டு, பின்னும் அவரோடு பழகுவர்.

It is the pink and pattern of courtesy to accept from your comrades even a poisoned bowl with a smiling grace. 10

அதிகாரம்—59

ஒற்றாடல்

THE EMPLOYMENT OF SPIES

பகைவர், சிநேகிதர், பகைவரும் சிநேகிதருமல்லாத பிறர் (உதாசீனர்) ஆகிய இம்மூவரிடத்தும் நடந்த செயல்களை அறிதற்கு ஒற்றரை உபயோகித்தல். ஒற்றர் - வேவுகாரர்.

581. ஒற்றும் உரைசான்ற நூலும் இவைஇரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்.

ஒற்றும், புகழ்நிறைந்த நீதிநூலும் ஆகிய இரண்டும், அரசன் தனக்கு இரண்டு கண்கள் என்றே தெளிவாகக் கொள்ள வேண்டும்.

Precious as his eyes to the sovereign are his code of laws and his band of spies. 1

582. எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்.

யாவரிடத்தும் நிகழ்கின்ற எல்லாவற்றையும் தினந்தோறும் ஒற்றரால் விரைவாகத் தெரிந்து கொள்ளுதல் அரசனுக்குரிய தொழிலாம்.

Through a regular system of espionage, the king learns betimes all the minute affairs of his realm. 2

583. ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்கிடந்தது இல்.

ஒற்றராலே எல்லாரிடத்தும் நிகழ்ந்தவற்றை உள்ளபடி அறிந்து வரச் செய்து, அவற்றால் வரும் பயனை ஆராயாத அரசனுக்கு வெற்றியடைவதற்குக் காரணமான வழியேயில்லை.

Victory is not for the monarch who never knows, through spies, what brews in his land. 3

584. வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு
அனைவரையும் ஆராய்வ(து) ஒற்று.

அரசனது காரியஞ் செய்யும் மந்திரிகள் முதலியோர், அரசனது சுற்றத்தார், பகைவர் என்று சொல்லப்பட்ட அனைவரையும் அவரவரது சொல்லையும் செயலையுங் கொண்டு ஆராய்பவனே ஒற்றனாவான்.

He is a spy who worms himself into the secrets of the king's officers, his relatives and his enemies. 4

585. கடாஅ உருவொடு கண்ணஞ்சா தியாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று.

பிறர் தன்னைக் கண்டு சந்தேகியாத வேடத்தையுடைய வடிவத்தோடு பொருந்தி அவர் ஒருகால் சந்தேகித்துத் தன்னை ஒற்றனென்று அறிந்து வெகுண்டு நோக்கின், அவர் கண்ணிற்கு அஞ்சாதவனாய் நின்று, நான்கு உபாயங்களும் செய்தாலும் தன் மனத்துட் கொண்டவற்றை வெளிப்படுத்தாதிருக்க வல்லவனே ஒற்றனாவான்.

A trusty spy has no suspicious air about him, defies a searching glance and has his secrets locked up in his bosom. 5

586. துறந்தார் படிவத்தர் ஆகி இறந்தாராய்ந்(து)
என்செயினும் சோர்வில(து) ஒற்று.

சந்நியாசிகள், விரதாநுட்டான முடையவர் முதலியோரது வேடம் பூண்டு, புகமுடியாத இடங்களிலெல்லாஞ் சென்று, ஆராய வேண்டுவன வற்றை ஆராய்ந்தறிந்து, அங்குள்ளவர் ஐயுற்றுப் பிடித்து, எவ்வகைத் துன்பஞ் செய்து கேட்டாலும் தன்னை இன்னானென்று வெளிப்படுத்தாதவனே ஒற்றனாவான்.

The secret emissary goes about in the garb of an ascetic through the nooks and corners of the king's realm, pries into all secrets, and never throws off his mask even under the worst of tortures. 6

587. மறைந்தவை கேட்கவற்றாகி அறிந்தவை
ஐயப்பா(டு) இல்லதே ஒற்று.

மறைவாகப் பிறர் செய்த செயல்களை அவர்களுக்கு அந்தரங்கமானவர்களால் கேட்டு அறியவல்லனாய்த் தான்கேட்டு அறிந்த செயல்களினாலே சந்தேகமில்லாமல் ஒன்றை நிச்சயிக்க வல்லவனே ஒற்றனாம்.

Behold the man who can draw out hidden secrets and whose information is precise, clear and unconfused; he is a man born for the work of intelligence. 7

588. ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்.

அரசன், ஒற்றனையாளுமிடத்து ஒரு ஒற்றன் அறிந்துவந்து அறிவித்த காரியத்தையும், மற்றொரு ஒற்றனாலும் அறிந்துவரச்செய்து, இருவர் கூறுவதும் ஒத்திருக்குமானால் அதனைக் கைக்கொள்ள வேண்டும்.

To spy upon a spy is to get at the correct information. 8

589. ஒற்றொற்(று) உணராமை ஆள்க ; உடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும்.

அரசன், ஒற்றரை ஆளுமிடத்து ஒருவன் மற்றோர் ஒற்றனை அறியாத படி ஆளவேண்டும்; அங்ஙனம் உபயோகிக்கப்பட்ட ஒற்றர்கள் மூவரையும் ஒரு காரியத்தின்மேல் தனித்தனி அனுப்பினால், அம்மூவருடைய சொற்களும் பயனால் ஒத்திருக்குமாயின், அது மெய்யென்று தெளியப்படும்.

Let not one spy know the other. Let the king receive it as truth if three men tell the same tale. 9

590. சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க ; செய்யின்
புறப்படுத்தான் ஆகும் மறை.

அரசன், இரகசியங்களை அறிந்து வந்து தன்னிடம் சொல்லிய ஒற்றனுக்குச் செய்யும் வெகுமானத்தைப் பிறர் அறியும்படி செய்யக்கூடாது ; பிறர் அறியச் செய்தால் மனத்தில் அடக்கி வைக்கவேண்டிய இரகசியத்தைத் தானே வெளியிட்டவனாவான்.

Let no emissary be honoured in the open court, lest you should divulge your own secret. 10

அதிகாரம்—60

ஊக்க முடைமை

Unflagging Energy

தொழில் செய்தற்கண் மனத்தளர்ச்சியின்றி உற்சாகத்தோடு எழுதல்.

591. உடையர் எனப்படுவது ஊக்கம்; அஃதில்லார்
உடையது உடையரோ மற்று.

ஒருவரை உடையவர் என்று சொல்லுவதற்குச் சிறந்த காரணமாய் நிற்பது ஊக்கமே; அவ்வூக்கமில்லாதவர், மற்று அவர்கள் முன்பு தாங்கள் உடையராயுள்ள செல்வத்தையும் உடையராவரோ ? ஆகார் (இழப்பர் என்பதாம்)

Unflagging industry marks out the prosperous. But poor indeed are the idle rich. 1

592. உள்ளம் உடைமை உடைமை; பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

ஊக்க முடைமையே ஒருவனுக்கு நிலைபெற்ற செல்வமாகும்; மற்றைப் பொருளுடைமையோ! நிலைபெறாது நீங்கிப்போம்.

The wealth that flows from the restless energy of the soul is the only possession that lasts for ever. All other possessions fade and crumble away. 2

593. ஆக்கம் இழந்தேம் என்(று) அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார்.

நிலைபெற்ற ஊக்கத்தைக் கைப்பொருளாக உடையவர், செல்வத்தை இழந்தாலும், அதனை இழந்து விட்டோமே என்று மனங் கலங்கார்.

Despair seizes not the heart of the man of unconquerable will even when poverty stares him in the face. 3

594. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை.

இடுக்கண் முதலியவற்றால் தளர்தலில்லாத ஊக்கத்தை யுடையவனிடத்துச் செல்வம், வழி கேட்டறிந்து சேர்வார் போலத் தானே சென்று அடையும்.

Of her own accord does fortune open her door to the man of sleepless endeavour. 4

595. வெள்ளத்(து) அனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத்(து) அனையது உயர்வு.

நீர்நிலையில் நின்ற நீரின் அளவினவாகும், நீர்ப்பூக்களின் தாளினது (நாளத்தினுடைய) நீளங்கள்; அதுபோல, மனிதருடைய உயர்வு அவர்களது ஊக்கத்தின் அளவினதாகும்.

The stem of the lotus-plant is of the depths of the waters. The dignity of man is of the stature of his soul. 5

596. உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்; மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

அரசர், எப்பொழுதும் தமது உயர்ச்சியையே கருதவேண்டும்; அவ்வுயர்ச்சி விதிவசத்தால் கைகூடாமற் போனாலும், தாம் உயரவேண்டுமென்ற அவ்வெண்ணம், ஒழிக்கப்படாத தன்மையுடையது. (நீக்கக் கூடாததாம் 'பொறியின்மையார்க்கும் பழியன்று' ஆதலின்)

Behold the man before whose mind float high ideals and lofty visions. There is a touch of grandeur even in the midst of the ruins of his shattered dreams. 6

597. சிதைவிடத்து ஒல்கார் உரவோர்; புதைஅம்பின்
பட்டுப்பாடு ஊன்றுங் களிறு.

யானை, புதையாகிய அம்பால் புண்பட்ட இடத்தும் தளராது, தன் பெருமையை நிலைநிறுத்தும்; அதுபோல, ஊக்கமுடையார் தாம் கருதிய உயர்ச்சிக்குக் கேடு வந்தவிடத்தும் தளராது, தம் பெருமையை நிலை நிறுத்துவர்.

The mighty elephant quails not and its lofty mien retains amidst a shower of deadly arrows. Men of undaunted courage never let their spirits droop even in dire affliction. 7

598. உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு.

ஊக்கமில்லாத அரசர், இவ்வுலகத்தாருள் யாம் ஈகைக்குணம் (வண்மை) யுடையோம் என்று தம்மைத் தாம் மதித்தலைப் பெறமாட்டார்.

The pride and glory of a generous heart are not for the sovereign sunk in indolent ease. 8

599. பரியது கூர்ங்கோட்ட(து) ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

எல்லா விலங்குகளினும் தான் பெரிய உடம்பை உடைமையோடு, கூர்மையான தந்தங்களையுடையதாயினும் யானை, தன்னைப் புலி எதிர்த்துத் தாக்கினால் ஊக்கமின்மையால் அதற்குப் பயப்படும்.

The huge elephant, with his pointed tusks, skulks before the fierce attack of the tiger. 9

600. உரமொருவற்கு உள்ள வெறுக்கை; அஃதில்லார்
மரம்; மக்கள் ஆதலே வேறு.

ஒருவனுக்கு வலிய அறிவானது ஊக்கமிகுதியே யாகும்; அவ்வூக்க மிகுதியில்லாதவர், மனிதராகார் மரங்களாவார்; சாதாரண மரங்களுக்கும் ஊக்கமில்லாதவர்க்கும் உள்ள வேறுபாடு உருவமாத்திரமே யல்லாமல் வேறில்லை.

Inexhaustible fund of energy is man's strength. Lacking it, he is one with the stocks and stones. 10

அதிகாரம்—61

மடியின்மை

ABSTENTION FROM SLOTH

செய்ய நினைத்த காரியங்களைச் செய்யுங்கால் சோம்புதலில்லாமை.

601. குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும்.

தான் பிறந்த குடியாகிய ஒளி மழுங்காத விளக்கானது, ஒருவனுக்கு அவனது சோம்பலாகிய இருள் நெருங்குதலால் முன்னர் மழுங்கிவந்து பின்பு அழியும்.

The undying flame of the glory of our home sinks in its sockets and dies before the gathering gloom of indolence. 1

602. மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.

தாம் பிறந்த குடியை மேன்மேலுயர்ந்து நல்ல குடியாகுமாறு செய்ய விரும்புபவர், சோம்பலைச் சோம்பலாகவே நினைத்து அதனை நீக்க முயல வேண்டும்.

Guard against the invasion of idleness; preserve the dignity and holy traditions of your home. 2

603. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து.

விடத்தகுவதாகிய சோம்பலைத் தன் மடிமீது ஏற்றிக்கொண்டு அதை வளர்க்கும் பேதையானவன் பிறந்த குடி, அக்குடியைக் காப்பவனாகிய அவனிறப்பதற்கு முன்பே அழியும்.

Behold the fool who nourishes the viper of a deadly sloth: the very roots of his family decay and perish ere his death. 3

604. குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றி லவர்க்கு.

சோம்பலில் அழுந்தியதனால் சீர்திருத்தமான முயற்சியில்லாதவர்க்கு, குடியும் கெட்டொழிந்து குற்றங்களும் மிகுதியாக உண்டாம்.

Out of idleness spring the ruin of a home and a host of evils. 4

605. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்.

சோம்பல், காலதாமதம், மறத்தல், தூக்கம் ஆகிய இந்நான்கும், இறக்கும் இயல்பினையுடையார் விரும்பியேறும் மரக்கலங்களாம்.

Men sailing in the frail canoes of forgetfulness, procrastination, sloth and sleep get wrecked in trackless waters. 5

606. படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்தல் அரிது.

பூமி முழுவதையும் அரசாட்சிசெய்த சக்கரவர்த்திகளது செல்வம் தானே வந்து சேர்ந்தாலும், சோம்பலுடையவர் அச்செல்வத்தால் சிறந்த பயனை யடைவதில்லை.

Of what avail is the pomp and pageantry of all the monarchs of the world to one who is sunk in slothful ease? 6

607. இடிபுரிந்(து) எள்ளுஞ்சொல் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்(று)இ லவர்.

சோம்பலை விரும்புதலால், சிறந்த முயற்சியில்லாதவர், சிநேகிதர் இடித்துக்கூறும் புத்திமதிகள் பயன்பெறுமையால், பின் அவர்களால் நிந்திக்கப்படுவர்.

Reproaches and rebukes are the fruits of idleness which deters noble enterprises. 7

608. மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும்.

தன் குடியை உயரச்செய்யும் அரசனிடத்தே, சோம்பல் தன்மை தங்குமாயின், அது அவனை அவனது பகைவர்க்குக் கீழ்ப்பட்டு நடக்கும்படி செய்துவிடும்.

Idleness rusts the soul of a noble king and forges the very bonds of slavery. 8

609. குடிஆண்மை உள்வந்த குற்றம் ஒருவன்
மடிஆண்மை மாற்றக் கெடும்.

ஒருவன், சோம்பலுடையவனாகும் இயல்பை நீக்கி விடுவானாயின், அவனது குடியினிடத்தும், ஆண்மையிடத்தும் வந்த குற்றங்கள் நீங்கும்.

Remove the canker of sloth; sound the death-knell of the guilt that has tarnished you and your home. 9

610. மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு.

தனது காலினளவைக்கொண்டு எல்லா உலகத்தையும் அளந்த திரிவிக்கிரம மூர்த்தியாகிய இறைவன், கடந்து சென்ற விசாலமான இடமுழு

வதையும், சோம்பலில்லாத மன்னன், முறையானன்றி ஒருங்கே அடைவான்.

All the lordly possessions of heaven and earth measured by our Lord Thiruvikrama in days of yore are unto the king who knows no sloth. 10

அதிகாரம்—62

ஆள்வினை யுடைமை

MANLY EFFORT

இடைவிடாத மெய்ம்முயற்சி யுடையனாகுதல்.

611. அருமை உடைத்தென்(று) அசாவாமை வேண்டும்;
பெருமை முயற்சி தரும்.

செல்வம், துணை, படை முதலியவற்றாலாகும் தமது சிறுமை நோக்கி, 'நாம் இத்தொழிலை நிறைவேற்றுதல் அரிது,' என்று நினைத்துத் தளர்ச்சி யடையாதிருக்க வேண்டும். ஏனெனில், அத்தொழிலை முடித்தற் கேற்ற பெருமையைத் தமது விடாமுயற்சியே தமக்குக் கொடுக்கும்.

Yield not to despair and cry out in deep distress. " It is difficult". Put forth your manly efforts ; they will rouse your slumbering courage to achieve the most arduous tasks of life. 1

612. வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.

செய்ய வேண்டிய தொழிலைச் செய்யாது குறையாக விட்டவரை, உலகத்தார் ஏற்றுக்கொள்ளாது நீக்குவர்; ஆதலால், செய்யத்தக்க தொழிலைத் தளர்ச்சியின்றிச் செய்து முடிக்கவேண்டும்.

Leave no work unfinished, lest the world should turn her back upon you. 2

613. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு.

யாவர்க்கும் உதவி செய்தல் என்னும் மேம்பாடு, முயற்சி என்று சொல்லப்படுகிற உயர்ந்த குணத்தினிடத்தே நிலைபெற்றுள்ளது.

The noble pride of a benevolent heart belongs unto him who shrinks not from manly exertion. 3

614. தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.

முயற்சியில்லாதவன், பிறர்க்கு உபகாரியாகுந் தன்மை, பகைவரது சேனையைக் கண்டு பயப்படும் பேடி, தன் கையில் வாளிருந்தும் உபயோகப் படுத்த முடியாமை போலப் பயன்படாமற்போம்.

Like unto a sword in the hands of a coward, who dreads the clang of arms of the enemy, are the ineffectual pious intentions of an indolent man. 4

615. இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பந் துடைத்(து)ஊன்றும் தூண்.

தனது இன்பத்தை விரும்பாதவனாய்த் தொழில் முடித்தலையே விரும்புபவன், தன் சுற்றத்தார், நண்பர் முதலாயினரது துன்பத்தினை நீக்கி, அவர்களைத் தாங்கும் தூணாவான்.

The man, who scorns delights and lives laborious days, wipes out the tears of his kith and kin and stands as a tower of strength to them. 5

616. முயற்சி திருவினை யாக்கும்: முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

அரசரிடத்தில் உண்டாகிய முயற்சி, அறுவகை அங்கங்களாகிய அவரது செல்வத்தை வளரச்செய்யும்; அம்முயற்சி இல்லாதிருத்தல் அவரை வறுமையில் ஆழ்த்திவிடும்.

Industry brings wealth ; sloth poverty. 6

617. மடியுளாள் மாமுகடி யென்ப: மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்.

கருநிறமுடைய மூதேவி, ஒருவனது சோம்பலினிடத்தே தங்குவாள்; திருமகள் சோம்பலில்லாதவனுடைய முயற்சியினிடத்தே தங்குவாள் என்று அறிந்தோர் கூறுவர்.

The goddess of wealth smiles on a home that knows no sloth. The demon of poverty haunts the dwellings of the indolent. 7

618. பொறியின்மை யார்க்கும் பழியன்(று) அறிவறிந்(து)
ஆள்வினை இன்மை பழி.

பயனைத் தருவதாகிய விதியில்லாமை ஒருவர்க்கும் பழியாகாது; அறியவேண்டியவற்றை அறிந்து இடைவிடாது முயற்சி செய்யாமையே, பழியாகும்.

To have fought and lost through malignant fate is no disgrace. To sit idle, oblivious of one's task, is vile reproach. 8

619. தெய்வத்தான் ஆகா(து) எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

ஒருவன், முயன்ற காரியம் விதிவசத்தால் தான் கருதிய பயனைத் தாராதாயினும், செய்த முயற்சி தனக்கிடமாகிய உடம்பு வருந்திய வருத்தத் திற்குத்தக்க அளவு பயனைத் தரும்; முற்றும் பாழாகாது.

Verily labour is its own reward, though the tide is against us. 9

620. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா(து) உஞற்று பவர்.

பயனை விலக்கக்கூடிய கொடிய விதியையும் தோல்வியடையச்செய் வர், அவ்வூழ்வினையால் வரும் இடையூறுகளுக்குத் தளர்ச்சி யடையாமல் மேன்மேல் முயல்பவர்.

Dauntless courage and untiring energy victoriously battle their way even against the inexorable and all-contending fate. 10

அதிகாரம்—63

இடுக்கணழியாமை

COURAGE IN THE HOUR OF GLOOM

தொழில் செய்வோன் இடையே வரும் இடையூறுகளுக்கு மனங்கலங் காமை.

621. இடுக்கண் வருங்கால் நகுக: அதனை
அடுத்தூர்வ(து) அஃதொப்ப தில்.

ஒருவன், தனக்குத் துன்பம் விதியினால் வந்தால் அதற்கு மனங்கலங் காமல் மனமகிழ வேண்டும்: ஏனெனில் அத்துன்பத்தை மேன்மேல் நெருக்கியழிக்கவல்லது அம் மகிழ்ச்சியைப் போல்வது வேறில்லை.

Smile scornfully at the frowns of fortune. That is the only way to chase away leaden-eyed despair. 1

622. வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்.

வெள்ளம்போலக் கரையில்லாது வந்த துன்பங்களெல்லாவற்றையும், இவை மனத்தின் கோட்பாடுகளேயன்றி வேறில்லையென்றறிந்து, அவ் வறிவில் தளர்ச்சியடையாதவனுடைய மனோதைரியத்தால் அவ்விடும்பைக்கு மாறான ஒரு பொருளை நினைத்தவளவிலே நீங்கும்.

Put courage in your drooping heart; a whole sea of troubles will vanish into nothingness. 2

623. இடும்பைக்(கு) இடும்பை படுப்பர் இடும்பைக்(கு)
இடும்பை படாஅ தவர்.

தொழில் செய்யுங்காலத்து அதற்கு இடையில் வந்த துன்பத்திற்கு வருந்தாதவர், அத்துன்பத்திற்குத்தாமே துன்பம் உண்டாக்குவர்.

Defy misfortune and rob her of her venomous sting. 3

624. மடுத்தவாய் எல்லாம் பகடுஅன் னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா(டு) உடைத்து.

இனிது செல்லத்தகாத வழிகளும் உட்பட எல்லாவிடத்தும் வண்டியை இழுத்துச் செல்லும் எருதுபோல, முயற்சியைவிடாது நடத்தவல்லவனை அடைந்த இடையூறு, தானே துன்பப்படுதலை யுடையதாம்.

No longer will troubles assail you, if, like an untiring bull that struggles its way through ups and downs of this rugged earth, you pull through thick and thin, come hail, come storm. 4

625. அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கண் படும்.

இடைவிடாது மேன்மேல் வந்தாலும் மனவுறுதி நீங்காதவனை அடைந்த துன்பம் தானே அழிந்துவிடும்.

In vain do the never-ending waves of trouble beat against the stout heart of a man of unflagging courage and iron will. 5

626. அற்றேம் என்(று) அல்லற் படுபவோ பெற்றேமென்(று)
ஓம்புதல் தேற்றா தவர்.

வறுமைக் காலத்து யாம் செல்வமில்லோம் என்று மனத்தால் துன்பத்தை யனுபவிப்பரோ! செல்வம் பெற்ற காலத்து, இது பெற்றோம் என்று மிகு ஆசைகொண்டு லோபஞ்செய்தல் அறியாதவர்.

Behold the heroic souls who have kept the equanimity of their hearts in days of power and prosperity. Will they ever fret when fallen on evil days? 6

627. இலக்கம் உடம்பு இடும்பைக்(கு) என்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல்.

நால்வகைப் பிறப்பிலுமுள்ள உடம்புகள் இடும்பை என்னும் வாளுக்கு இலக்கு என்று நிச்சயமாக அறிந்து, தமக்குவந்த துன்பத்தைத் துன்பமாகக் கொள்ளார், அறிவுடையார்.

It is the wise that maintain a divine composure, for they know that the body is but a target for the missiles of fortune. 7

628. இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்.

தன் உடம்பிற்கு இன்பமானவைகளை விரும்பாது, ஊழ்வினையால் துன்பம் எய்துதல் இயல்பென்று தெளிந்திருப்பவன், தன் முயற்சியால் துன்பத்தை யடையமாட்டான்.

They remain unbruised by the trials and tribulations of life, who seek no joy and know that man is to sorrow born. 8

629. இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்.

வினையால் தனக்கு இன்பம்வந்த இடத்து அதனை அனுபவித்துக் கொண்டே மனத்தால் விரும்பாதவன், துன்பம் வந்த இடத்தும் அதனை அனுபவித்தாலும் மனத்தால் வருத்தப்படமாட்டான். (இரண்டையும் சமமாகப் பாவித்தலால்.)

Unruffled are the wise ones who take the sorrows and joys of life alike. 9

630. இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு.

ஒருவன் தொழில் செய்யுமிடத்து முயற்சியால் வரும் துன்பத்தையே தனக்கு இன்பமாகப் பாவித்துக் கொள்வானாயின், அதனால் தன் பகைவர் கௌரவித்தற்கு ஏதுவாகிய உயர்ச்சி அவனுக்குத் தானே உண்டாகும்.

Behold the mighty heart that finds joy in the very stress and strain of work. Even his foes will gloriously sing his praise. 10

---

2. அங்கவியல்

அரசனது அங்கங்களைப்பற்றிக் கூறும் பிரிவு.

அதிகாரம்—64

அமைச்சு

THE MINISTERS OF THE STATE

மந்திரியினது குணங்களும் செயல்களும்.

631. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட(து) அமைச்சு.

போர் முதலிய தொழில் செய்யும்போது, அதற்கு வேண்டும் சாதனங்களும், அதற்கேற்ற காலமும், அது செய்யும் உபாயமும், அவ்வழியில் செய்

யப்படும் அரிய தொழில்களும், அவற்றை இடையூறு நீக்கி நிறைவேற்றுதலு மாகிய இவ்வைந்தனையும் ஆராய்ந்து செய்து முடிக்க வல்லவனே, மந்திரியா வான்.

A minister maps out the details of a project beforehand, finds the ways and means of achieving it, seizes the right moment and then commences the operations. 1

632. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ(டு)
ஐந்துடன் மாண்ட(து) அமைச்சு.

ஒரு தொழிலைச் செய்தலில் தளராமையும், குடிகளைக் காத்தலும், நீதி நூல்களைக் கற்றுச் செய்யத் தக்கவற்றையும், விலக்கத் தக்கவற்றையும் அறிந்து கொள்ளுதலும், முயற்சியும், மேற்கூறிய அவ்வங்கங்கள் ஐந்துடனே செவ்வையாக அமையப்பெற்றவனே அமைச்சனாவான்.

Sturdy resolution, loving care of the subjects, a knowledge of the laws of the land, untiring zeal—these four virtues, with the former five combined, form the chief traits of a good minister. 2

633. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல(து) அமைச்சு.

போர் நேரிட்டபோது பகைவர்க்குத் துணையாயுள்ளவரை (அப்பகைவரிடத்தினின்றும்) அவரை விட்டுப் பிரிக்கவேண்டுமானால் பிரித்தலும், தமக்குத் துணையாகுமவரைத் தம்மைவிட்டுப் பிரியாதபடி வேண்டிய பொருள் கொடுத்து, இனிய சொற்களால் விரும்பிப் பாதுகாத்துக் கொள்ளுதலும், முன்னே தம்மையும் தம்மவரையும் விட்டுப்பிரிந்தாரை, மறுபடியும் சேர்க்கவேண்டியிருந்தால் சேர்த்தலும் செய்யவல்லவனே, மந்திரியாவான்.

A minister divides enemies, cherishes old friends, and cements the loving ones, who have fallen out. 3

634. தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல(து) அமைச்சு.

ஒரு காரியத்தின் தொழில் பலவிதமாகத் தோன்றினாலும் அவற்றுள் செய்யத்தக்கதை ஆராய்ந்து அறிதலும், அத்தொழிலைச் செய்யும்போது கைகூடும் விதத்தை ஆலோசித்துச் செய்தலும், சிலரைப் பிரித்தல் சேர்த்தல் செய்தலில் அவர்க்கு இன்னார் திறத்தில் இன்னதுதான் செய்யத்தக்கது என்று சந்தேகமில்லாமல் நிச்சயமுண்டாகும்படி சொல்லுதலும் வல்லவனே அமைச்சனாவான்.

A far-seeing minister goes into the pros and cons of a matter, does it to perfection, and is authoritative and definite in his opinion. 4

635. அறனறிந்(து) ஆன்றமைந்த சொல்லான்எஞ் ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை.

அரசனாலே செய்யப்படும் தருமங்களைத் தெரிந்துகொண்டு, தனக் கேற்ற கல்வியறிவால் நிறைந்து, அடக்கமான சொல்லையுடையவனாய், எக் காலத்துங் காரியங்களைச் செய்யும் வகையை யறிந்தவனே அரசனுக்கு ஆலோசனைக்கேற்ற துணையாவான்.

He is a helpful minister to the king who knows the laws of the state, is full of wisdom and wise counsel and is ever ready with devices and plans meet for the welfare of his realm. 5

636. மதிநுட்பம் நூலோ(டு) உடையார்க்(கு) அதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை.

இயற்கையாகிய நுட்ப அறிவும் அதனோடு செயற்கையாகிய நூலறிவும் உடையவர்க்குமுன், அதிக நுட்பத்தை யுடையனவாய்த் தமக்குத் தடை யாய் எதிர் நிற்கும் தந்திரங்கள் எவையுள? எவையுமில்லை.

What forces can baffle the subtle, native wit of a minister, who combines a learning profound ? 6

637. செயற்கை யறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை யறிந்து செயல்.

நீதி நூல்களிற் கூறியபடியே காரியஞ் செய்யும் திறத்தை அறிந்திருந் தாலும், அக்காலத்திலுள்ள உலக இயற்கையையும் தெரிந்துகொண்டு அதற்கேற்பச் செய்ய வேண்டும்.

Let not the minister be content with a mere knowledge of books; let him watch the affairs of the world and act. 7

638. அறிகொன்(று) அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்.

அரசன், அறிந்து சொன்னவருடைய அறிவையும் கேளாமல் அலட் சியஞ் செய்து, தானும் அறியாதவனாயிருந்தாலும், அக்குற்றத்தைப் பார்த்து அவ்வரசனை விட்டு விடாமல், அவனுக்கு நன்மை தரும் வார்த்தைகளைக் கூறுதல் மந்திரியின் கடமையாகும்.

Let not a minister turn away in utter disgust from a foolish king, who persists in his folly: let him continually advise him. 8

639. பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும்.

அரசனது அருகிலிருந்து, தீங்கு செய்ய நினைக்கும் மந்திரியொருவனைப் பார்க்கிலும், அரசனுக்கு எதிரில் நிற்கும் எழுபது கோடி பகைவர் நல்லவராவர்.

Worse than a host of enemies is a vile minister, who plots the ruin of his king. 9

640. முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்:
திறப்பா(டு) இலா அ தவர்.

செய்ய வேண்டுந் தொழில்களை முன்பு முறையாக ஆலோசித்திருந்தும் செய்யுங்கால் அவை முடிவிலவாகவே செய்வர், செய்து முடிக்கும் திறமை யில்லாதவர்.

Even a well-designed project ends in utter failure in the hands of a minister who has not the tact to accomplish it. 10

அதிகாரம்—65

சொல்வன்மை

ELOQUENCE

தான் நினைத்த காரியம் முடியுமாறு சொற்களைச்சொல்ல வல்லவனாதல்.

641. நாநலம் என்னும் நலன்உடைமை; அந்நலம்
யாநலத்(து) உள்ளதூஉம் அன்று.

மந்திரிகளுக்கு அவசியம் இருக்கவேண்டிய குணமாவது, நாவினாற் பேசிக் காரியத்தை முடிக்குந் திறமையென்று பலராலும் சிறப்பித்துச் சொல்லப்படும் நலமுடைமை; அந்நலம் அமைச்சரல்லாத பிறர்க்கும், மற்றைய நலங்களெல்லாவற்றிலும் அடங்காமல் அவற்றினும் சிறந்ததாம்.

The thing most indispensable to a minister is the spell of his tongue; for is there not something unique about the charming gift of persuasive eloquence ? 1

642. ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு.

தம் அரசனுக்கும் அங்கங்களுக்கும் நன்மையும் தீமையும் தமது சொல்லாலேயே வருமாதலால், மந்திரிகள் அத்தன்மையதாகிய சொற்சோர்வு தம்மிடத்து உண்டாகாதபடி கவனித்துக் காக்கவேண்டும்.

Let the councillor at the helm of the state guard against careless slips in his speech, for on his very tongue doth rest the fortune or the ruin of his sovereign. 2

643. கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

நட்பினரைத் தம்மைவிட்டு நீங்காதபடி வசப்படுத்துகிற குணங்களை மேன்மேலுங் கொள்ள விரும்பி, தமக்குப் பகையாய்த் தம் சொல்லை யேற்றுக் கொள்ளாதவரும் பின்னர் அப்பகைமை ஒழிந்து நட்பினை விரும்பும் வண்ணஞ் சொல்லப்படுவதே, மந்திரிகளுக்குச் சிறந்த சொல்லாகும்.

It is true eloquence that has a double sway. It holds captive the listening ear and makes spell-bound even the rebellious hearts of your detractors. 3

644. திறனறிந்து சொல்லுக சொல்லை; அறனும்
பொருளும் அதனின்ஊங்(கு) இல்.

மந்திரிகள், முந்தின குறளிற் சொன்ன தன்மையையுடைய சொல்லை, தம்முடைய திறமையையும் தெரிந்து, அந்தந்த நிலைமைக்குத் தக்கபடி சொல்லவேண்டும்: அவ்வாறு சொல்லுவதைக் காட்டிலும் மேம்பட்ட அறமும் பொருளும் வேறு இல்லை.

Is there any virtue greater or a gain more bounteous than a well-seasoned speech fashioned to the varied levels of the intelligence of men? 4

645. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை யறிந்து.

அமைச்சர், தாம் சொல்லக்கருதிய சொல்லை, மாற்றுரறாது மறுதலைச் சொல் வெல்லாமலிருக்கும்படி தெரிந்து, அத்தகைய சொல்லைச் சொல்ல வேண்டும்.

Search for the most perfect and unique word, and then fall into an unsurpassing strain of thought and speech. 5

646. வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்.

பிறர், மேன்மேலும் விரும்பிக் கேட்கும்படி தாம் பேசி, அவர், தம்முடன் பேசும்பொழுது அப்பேச்சின் பொருளை மாத்திரம் கிரகித்துக் கொண்டு, சொற் குற்றத்தைப் பாராட்டாமல் விடுதல், குற்றமற்ற அமைச்சரது துணிபாகும்.

The role of a born statesman is to make the hearts of his listeners hunger for his speech evermore and to sift in an instant the words of those whom he hears with rapt attention. 6

647. சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

தாம் எண்ணிய காரியங்கள், கேட்பவர்க்கு அனுவசியமாயினும் அவற்றை அவர் ஒப்புக்கொள்ளும்படி சொல்ல வல்லவனாய், அத்தொழில்கள் மிகப் பலவாக இருந்தபோதிலும் ஒன்றிலும் தான் சோர்வடையாமல் பேசுபவனாகியும், அவைக்கு அஞ்சாதவனுமாகி நிற்பவன் எவனோ! அவனைச் சொற்போரில் வெல்லுதல் ஒருவர்க்கும் இயலாது.

None can vanquish, in dialectical skill, a bold and fearless debator, who has all the resources of his tongue ever at his command. 7

648. விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

சொல்லப்படும் காரியங்களை வரிசைப்படத் தொடுத்து இனிதாகச் சொல்ல வல்லவரைப் பெற்றால், உலகத்தார் அக்காரியங்களை விரைந்து ஏற்றுக்கொள்வர்.

Men of mighty words take the world by storm by the irresistible eloquence of their charming discourse. 8

649. பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்.

குற்றமற்றனவாய்ச் சில வார்த்தைகளையேனும் கீழ்க்கூறிய வகையால் சொல்லத் தெரியாதவர், பல வார்த்தைகளைத் தொடுத்துரைக்க விரும்புவர். (விரும்பினும் பயன்படாதொழியும்)

They indulge in a rigmarole, who know not that brevity is the soul of wit. 9

650. இணர்ஊழ்த்தும் நாறா மலரனையர் கற்ற(து)
உணர விரித்துரையா தார்.

தாம் கற்றுள்ள நூற்பொருளைப் பிறர் அறிந்துகொள்ளுமாறு ஒழுங்காகச் சொல்லத் திறமற்றவர், கொத்தில் மலர்ந்திருந்தும் மணம் வீசாத பூவை ஒப்பர்.

Men of knowledge, who have their vast learning locked up in themselves and are denied the graceful gift of the tongue, are like unto a bunch of gaudy flowers, that vainly bloom on a stem and yield no fragrance sweet. 10

அதிகாரம்—66

வினைத்தூய்மை

PURITY OF ACTION

செய்யப்படுந் தொழில்கள் பொருளோடு, அறத்தையும் புகழையும் உண்டாக்கி நல்லனவாதல்.

651. துணைநலம் ஆக்கம் தரூஉம்: வினைநலம்
வேண்டிய வெல்லாந் தரும்.

ஒருவனுக்குத் துணைவர் நல்லவரா யிருத்தல், செல்வம் ஒன்று மாத்திரங் கொடுக்கும்: தொழிலினது நன்மையோ! அவ்வளவோடு நில்லாமல் விரும்பிய இம்மை மறுமைப் பயன்களை யெல்லாங் கொடுக்கும்.

On the anvil of the fostering care of your ally, your worldly fortune is wrought; but on the purity of your action do rest all the blessings of your life. 1

652. என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

தம் அரசனுக்கு இம்மையில் புகழையும், மறுமையில் புண்ணியத்தையும் உண்டாக்காத காரியத்தை எக்காலத்தும் மந்திரிகள் நீக்கவேண்டும்.

Let the minister scorn shameless deeds that promise neither earthly fame nor the distant prospect of heaven. 2

653. ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னும் அவர்.

மேன்மையடைய வேண்டுமென்று நினைப்பவர், தம் கௌரவம் கெடுதற்குக் காரணமாகிய செய்கைகளை ஒழித்தல் வேண்டும்.

Ye men that long to shine in the eyes of the world, beware of wicked deeds that dim the light of your glory. 3

654. இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

சஞ்சலமில்லாத தெளிந்த அறிவினையுடையவர், தாம் துன்பத்திலே அகப்படும்படி நேரிட்டாலும், அது தீர்தற் பொருட்டு அத்துன்பத்தைச் செய்தவர்க்கு இழிவான காரியங்களைச் செய்யமாட்டார்.

Men of clear insight never stoop to a base act even under the stress of life. 4

655. எற்றென்(று) இரங்குவ செய்யற்க: செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.

தான் செய்தது எப்படிப் பட்டதென்று, பச்சாத்தாபப்படும்படியான செயல்களை ஒருபோதும் செய்யக் கூடாது; ஒருகால், மனந்தடுமாறி அத்தகைய செயல்களைச் செய்துவிட்டானேயானால், அவற்றைக் குறித்துக் கழிவிரக்கங் கொள்ளாதிருத்தல் நலம்.

Let not you be guilty of acts that make you feel the sting of remorse. Let not you fall into vain regrettings over what you have done in a thoughtless mood; for it is good to allow the past to bury itself and you sin no more. 5

656. ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

தன்னைப்பெற்ற தாயினது பசியை (வறுமையால்) கண்டு வருந்துந் தன்மையனாயினும், அத்துன்பங்காரணமாக அறிவுடையாரால் பழிக்கப் படுந் தொழில்களை ஒருவன் செய்யக்கூடாது.

Even it be to save your own beloved mother from starvation, let not your hands be defiled with what the sages have condemned as a heinous wrong. 6

657. பழிமலைந் தெய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை.

அறிவில்லாதார், தீயதொழிலைச் செய்து அதனால் பழியைத் தம்மேற் கொண்டு பெற்ற செல்வத்தைக் காட்டிலும், பழிப்பற்ற சான்றோர் அநுபவிக்கும் மிக்க வறுமையே மேலானதாம்.

Prefer the sore but the blessed poverty of the righteous to the ill-gotten riches of the wicked. 7

658. கடிந்த கடிந்தொரார் செய்தார்க்(கு) அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்.

நூலறிவுடையோர் செய்யலாகாதென்று விலக்கிய தொழில்களைத் தாமும் இகழ்ந்து விலக்காது, செல்வ வருவாயை நோக்கி அத்தொழில்களைச் செய்த அமைச்சர்க்கு, அவை தூயவையல்லவாதலின் முற்றுப்பெறா; ஒருகால் முடிந்தாலும் பின்னர்த் துன்பத்தையே கொடுக்கும்.

Success achieved by foul and forbidden methods ends only in the bitter anguish of the soul. 8

659. அழக்கொண்ட வெல்லாம் அழப்போம்: இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை.

ஒருவன் தீயவினைகளைச் செய்து, பிறர் வருந்தும்படி தான் கவர்ந்து கொண்ட பொருள்களெல்லாம், இம்மையிலே அவன் தானும் அவரைப்

போல வருந்தும்படி அழியும். மற்றை நல்வினையால் வந்த பொருள்களோ! முன் இழக்கப்பட்டாலும் பின்னர் வந்து பயன் கொடுக்கும்.

Wealth wrung out of men's tears ere long passes away amidst the wailings of the vile extortioner; but out of the decay and the loss that good deeds entail in the beginning grow the harvests of the blessings of the righteous. 9

660. சலத்தாற் பொருள்செய்(து) ஏமார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று.

அமைச்சன், தீவினைகளால் செல்வஞ் சம்பாதித்து அதனால் அரசனைக் காத்தல், பச்சை மண்பாத்திரத்தில் நீரை ஊற்றி அதனைக் காத்தற்குச் சமானமாகும்.

Behold a deceitful minister trying to maintain through guile the peace and prosperity of the king's land. Verily it is like preserving water in a pitcher of unbaked clay. 10

அதிகாரம்—67

வினைத்திட்பம்

FIRMNESS OF ACTION

மேற்கூறிய தூயவினைக்கு வேண்டிய மனவுறுதி.

661. வினைத்திட்பம் என்ப(து), ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

ஒரு தொழிலைச் செய்யுமிடத்து வலிமையென்று சொல்லப்படுவது, தொடங்கிய காரியத்தை முடிக்க வேண்டியவனது மனத்திட்பமே; மற்றைச் சேனை, அரண் முதலியவை அவ்வினை முடித்தற்குரிய திட்பமாகமாட்டா.

Firmness of action is but the rectitude of the mind. All other things fall not within its pale. 1

662. ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.

நீதி நூல்களை முன்னரே ஆராய்ந்த அமைச்சரது துணிபு, பழுதுபடுந் தொழில்களைச் செய்யாமையும், செய்யும் தொழில்கள் விதிவசத்தால் இடையூறடைந்த காலத்து, அதற்கு மனந்தளராமையும் ஆகிய இவ்விரண்டின் வழியதாக உள்ளதென்பர் நூலோர்.

To refrain from all actions that come in conflict with the sound policy of the previous line of ministers, and to lose no heart at the

failure of a project—these are the two guiding principles of the wise. 2

663. கடைக்கொட்கச் செய்தக்க(து) ஆண்மை இடைக்கொட்
எற்றா விழுமம் தரும். [கின்

செய்யப்படுந்தொழிலைக் காரியம் முடிந்த பின்பே, பிறர் அறியும்படி மறைத்துச், செய்வதே திறமையாம்: அங்ஙனமின்றி, இடையிலே வெளிப்படுமாயின், அதுதொழில் செய்பவனுக்கு நீங்காத துன்பத்தைக்கொடுக்கும்.

Reveal not your plans until success is achieved, lest an untimely disclosure should bring insurmountable obstacles. 3

664. சொல்லுதல் யார்க்கும் எளிது: அரியவாம்
சொல்லிய வண்ணஞ் செயல்.

யாம் இத்தொழிலை இன்ன விதமாய்ச்செய்வோம் என்று ஒழுங்காகச் சொல்லுதல் யாவர்க்கும் எளியதாம்: அதனைச் சொல்லியபடியே செய்து முடித்தல் யாவர்க்கும் அருமையாகும்.

To break into noble maxims and sage counsels is easy ; to act up to them is difficult. 4

665. வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும்.

மனம், மொழி, மெய் என்னும் திரிகரணங்களாலும் சுத்தரான மந்திரிகளது தொழில் வலிமை, அரசனிடத்தில் நன்மையைத்தருதலால் யாவராலும் நன்கு மதிக்கப்படும்.

Men renowned for their firmness of action gain the good-will of the king and command the homage of the world. 5

666. எண்ணிய எண்ணியாங்(கு) எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

தாம் அடைய நினைத்த பொருள்கள் எல்லாவற்றையும், அந்நினைத்த படியேயடைவர்; நினைத்தவர், அவற்றிற்கு வழியாகிய காரியத்தில் மனங் கலங்காத உறுதியையுடையவராகப்பெற்றால்.

All the projects you have nobly planned are achieved, if you have strength of will and firmness of mind. 6

667. உருவுகண்டு எள்ளாமை வேண்டும்: உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

உருண்டு செல்கிற தேர்க்கு அச்சினிடத்துள்ள ஆணி போலத் தொழில் செய்தலில் வலிமையுடையவர்களை இவ்வுலகம் உடையது; ஆதலால் அவரது வடிவத்தின் சிறுமை நோக்கியே அவரை இகழ்தல் கூடாது.

The axle-pin, trivial as it is, sets the mighty car a-rolling. Men of modest bearing, plain as they are, shape and wield the destinies of nations. 7

668. கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்.

மனந்தெளிந்து செய்வதாகத் துணிந்த வினையைத் தொடங்கிய பின், மனஞ்சலியாமல் காலதாமதஞ் செய்தலை யொழித்து, விரைந்து செய்ய வேண்டும்.

Let there be no vacillation in a course of action which, with a clear mind, you have resolved on. 8

669. துன்பம் உறவரினும் செய்க, துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை.

முதலில், மெய்ம் முயற்சியால் தமக்குத் துன்பம் மிகுதியாக நேரிடுவதானாலும், அதனால் மனந்தளராமல், முடிவில் இன்பந்தரும் வினையை உறுதியுடையவராய்ச் செய்யவேண்டும்.

Be not awed by the difficulties and dangers that lie in the way. Pursue the right course of action that brings, in the end, joy and happiness. 9

670. எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா(து) உலகு.

தொழிலின் வலிமையே தமக்குச் சிறந்ததென்று கொள்ளாத மந்திரிகளை, வேறு படை முதலிய திட்பங்களையெல்லாம் உடையவராயிருந்தாலும் உலகத்தார் நன்கு மதிக்கமாட்டார்.

Behold the minister who possesses all other virtues except firmness of action. He is not esteemed by the wise men of the world. 10

அதிகாரம்—68

வினைசெயல் வகை

METHOD OF ACTION

மனவுறுதியுடைய மந்திரி, அக்காரியத்தைச் செய்யுந் திறமை.

671. சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

ஆலோசனைக்கு எல்லையாவது, ஆலோசிக்கின்றவன், இனி இக்காரியம் தப்பாதென்னும் துணிவைப் பெறுமளவே; அவ்வாறு துணியப்பட்ட காரி

யத்தை விரைந்து செய்து முடிக்காமல் கால தாமதஞ் செய்தல் குற்றமாகும்.

Deep deliberation leads to a final decision. Delay after decision is wrought with danger. 1

672. தூங்குக தூங்கிச் செயற்பால: தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

தாமதித்துச் செய்யவேண்டிய தொழில்களைத் தாமதித்தே செய்ய வேண்டும்: காலதாமதஞ் செய்யாமல் விரைந்து செய்ய வேண்டிய தொழில்களை விரைந்தே செய்யவேண்டும்.

Let things lie over that demand no immediate attention. Let not things be put off that clamour for ready and prompt action. 2

673. ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே; ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

காரியத்தைச் செய்யும்போது சாத்தியப்படும் இடத்தெல்லாம் போரினுற் செய்து முடித்தல் நல்லதே; அத்தொழில் செய்து முடிக்க முடியாவிடத்து, சாம, தான, பேதம் என்னும் மற்றைய மூன்று உபாயங்களுள் அத்தொழில் முடிவதோர் உபாயத்தைச் செய்து முடிக்கவேண்டும்.

Nobly fight out your foe wherever you can. Wherever you cannot, adopt some other method of warfare to vanquish your foe. 3

674. வினைபகை யென்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்.

செய்யத் தொடங்கிய தொழிலும், முழுதும் அழிக்கத் தொடங்கிய பகையும் ஆகிய இரண்டினது மிச்சம் (சேடம்) ஆராயுமிடத்து, தீயினது சேஷத்தைப்போலப், பின்னர் வளர்ந்து கெடுதி செய்யும்.

Leave no work unfinished and leave no foe unsubdued out of over-confidence. Like the embers of a smouldering fire that suddenly blaze out into a great conflagration, they sweep us away into utter ruin. 4

675. பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.

ஒரு காரியத்தைச் செய்யுமிடத்து, பொருளும், கருவியும், காலமும், வினையும், இடமும் ஆகிய ஐந்தையும் மயக்கமற ஆராய்ந்து செய்ய வேண்டும்.

The sinews of war, the engines of destruction, the nature of the action, the fitting time, and the proper theatre of operation—these five must be thought on before plunging into war. 5

676. முடிவும் இடையூறும் முற்றியாங்(கு) எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

ஒரு தொழில் செய்யுமிடத்து, அது முடிதற்குக்காரணமாகிய முயற்சியையும், அதற்கு வரும் இடையூற்றின் அளவையும், தடையின்றி முடிந்தால் உண்டாகக்கூடிய பெரும் பயனையும் சீர்தூக்கிப் பார்த்துச் செய்ய வேண்டும்.

Weigh well the efforts necessary, the obstacles in the way and the profits that may accrue and then undertake an enterprise. 6

677. செய்வினை செய்வான் செயல் முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளங் கொளல்.

அவ்வழியால் செய்யப்படும் தொழிலைத் தொடங்கினவன், செய்யும் முறை யாதெனில், அத்தொழிலின் உண்மை நிலையை (மருமத்தை) முன்பு அறிந்து நடத்தியவனது கொள்கையைத் தான் அறிதலாம்.

The secret of success of an undertaking depends on our seeking the aid of the expert. 7

678. வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

தான் செய்கின்ற தொழிலாலே, அது போன்றதாகிய வேறொரு தொழிலை முடித்துக்கொள்ளவேண்டும்: அவ்வாறு முடித்துக்கொள்வது, மதத்தால் நனைந்த கன்னத்தையுடைய யானையாலே, அப்படிப்பட்ட வேறொரு யானையைப் பிடித்துக் கட்டியதை யொக்கும்.

To make one enterprise lead on to the success of another, is like using one elephant to decoy another wild elephant. 8

679. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை யொட்டிக் கொளல்.

தன்து சிநேகிதர்க்கு இனியவற்றைச் செய்வதைப் பார்க்கிலும், தன் பகைவரோடு சேராதவரைத் தனக்கு நட்பாக்கிக் கொள்ளுதல் விரைந்து செயற்பாலதாகும்.

Hasten to make the foes of your bitter enemy your allies rather than cherish your friends at home. 9

680. உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து.

ஆளும் இடம் சிறியராகிய அமைச்சர், தம்மினும் வலிமை மிகுந்த அரசர் தம்மை எதிர்த்தவிடத்து, தமது சேனை முதலிய அங்கங்கள், நடுங்கி விடுமேயென்று பயந்து, அப்பொழுதை நிலைமைக்குச் சமாதானம் ஆகிய

மானதாயும், சேர்வதாகவும் இருந்தால் வலியராய பகைவரைத் தாழ்ந்து சந்தியை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

Behold a weak state that is in constant dread of the inroads of a mightier foe. It is better for her ruler to accept the olive branch graciously offered by the latter. 10

அதிகாரம்—69

தூது

The Ambassador

சந்தி விக்கிரகங்கட்கு வேற்றரசரிடத்துச் செல்லும் தூதரது தன்மை.

681. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

தன் சுற்றத்தார் மாட்டு அன்புடைமையும், சிறந்த குடிப் பிறப்பும் அரசரால் விரும்பப்படும் குணமுடைமையும் தூது போய்ச் சொல்வானது இலக்கணமாம்.

A loving heart, a noble lineage and winning manners mark out a true ambassador. 1

682. அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று.

தம் அரசனிடத்து அன்பும், அவனுக்கு அனுகூலமானவற்றை அறியும் அறிவும், அவற்றை வேற்றரசரிடத்துச் சொல்லும்போது ஆராய்ந்து சொல்லும் திறமையும், தூது சொல்ல உரியவர்க்கு இன்றியமையாத மூன்று குணங்களாகும்.

Indispensable to a born ambassador are the three traits—love, wisdom and persuasive eloquence. 2

683. நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.

வேலையுடைய வேற்றரசரிடத்துச் சென்று, தன் அரசன் வெற்றி பெறுமாறு தூதுவார்த்தைகளை உரைப்போனுக்குரிய இலக்கணமாவது, நீதி நூலை அறிந்த மந்திரிகளிடத்துத் தானே அந்நூலைக்கற்று வல்லனாகுதலாம்.

Behold an envoy who brings glory to his sovereign by his successful embassies to neighbouring kings renowned for their battle-arms. He must be a stateman among statesmen. 3

684. அறிவுருவு ஆராய்ந்த கல்வி இம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு.

இயற்கை அறிவும், கண்டோர் விரும்பும் தோற்றப்பொலிவும், பலரோடும் பலகாலும் ஆராய்ந்து பழகிய கல்வியும் என எல்லாராலும் நன்கு மதித்தற் கேதுவாகிய இம்மூன்றும் உடையவனே, தூதனாய்ச் செல்லக் கடவன்.

Let him go on an embassy who has a keen, native intelligence, a commanding personality and a profound learning. 4

685. தொகச் சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது.

வேற்றரசரிடத்துப் பல காரியங்களைச் சொல்லுகையில், காரண வகையால் தொகுத்துச் சொல்லியும், துன்பந்தருகிற காரியங்களைச் சொல்லுமிடத்துக் கொடுஞ் சொற்களை நீக்கி இனிய சொற்களால் அவர் மனம் மகிழும்படி சொல்லியும், அதனால் தன் அரசனுக்கு நன்மையை உண்டாக்குபவனே தூதனாவன்.

A successful ambassador is he who is sweet and brief, avoids all jolts and jars in his discourse, and captivates the hearts of the alien kings by the witchery of his tongue. 5

686. கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்க(து) அறிவதாம் தூது.

நீதி நூல்களைக் கற்றவனாய்த், தான் நிறைவேற்றுமாறு உத்தேசித்துப்போன காரியத்தைப் பகையரசர் மனத்திற் பதியும்படி சொல்லி, அவர் கோபித்துப் பார்த்தால் அப்பார்வைக்குப் பயப்படாது, அக்காலத்துக்கு ஏற்றபடி அக்காரியத்தை முடிக்கத்தக்க உபாயத்தை அறிபவனே தூதனாவன்.

A true ambassador carries conviction home by his persuasive eloquence, has an unperturbed mind and has a just instinct for what is meet for each occasion. 6

687. கடனறிந்து காலங்கருதி இடனறிந்(து)
எண்ணி உரைப்பான் தலை.

வேற்றரசரிடத்துத் தான் செய்யும் முறைமையைத் தெரிந்து, அவரது சமயம் பார்த்துச், சென்ற காரியம் சொல்லுவதற்குரிய இடத்தையும் அறிந்து, சொல்ல வேண்டும் விதத்தை முன்னமே ஆலோசித்துச் சொல்ல வல்லவனே தூதரிற் சிறந்தவனாவன்.

He is a prince among ambassador who knows the decorum of the court, seizes the fitting moment, chooses the proper place and delivers his well-thought out message. 7

688. தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியு ரைப்பான் பண்பு.

தன்னரசன் வார்த்தையை அவன் சொல்லியவாறே வேற்றரசரிடஞ் சென்று சொல்லும் தூதனது இலக்கணமாவது, செல்வ விஷயத்திலாவது, சிற்றின்ப விஷயத்திலாவது தாக்ஷணியப் படாமல், தனக்கு அப்பகைவரது அமைச்சர் துணையாகுமாறு கொள்ளுதலும், தைரியமுடைமையும் ஆகிய இம்மூன்றுடன் கூடிய மெய்ம்மையுமாம்.

A trusty ambassador is he who is truthful, pure and undefiled, who seeks the aid of the ministers of alien courts and who is bold and fearless. 8

689. விடுமாற்றம் வேந்தர்க்(கு) உரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்.

தன் அரசன் சொல்லி அனுப்பிய வார்த்தையை வேற்றரசர்க்குச் சொல்லுதற்கு உரியவன் யாரெனில், தனக்கு வரும் தீங்கிற்குப் பயந்து, தன் அரசனுக்குத் தாழ்வு வரும் வார்த்தையை வாய்தவறியும் சொல்லாத உறுதியை யுடையவனே.

Behold the undaunted ambassador that will never let fall, even under the dread of torture, words from his lips that disgrace his sovereign. He shall be entrusted to carry out, at foreign courts, embassies of his noble sire. 9

690. இறுதி பயப்பினும் எஞ்சா(து) இறைவற்(கு)
உறுதி பயப்பதாம் தூது.

வேற்றரசரிடத்துச் சென்று சொல்லும் அவ்வார்த்தை, தனக்கு அழிவு விளைப்பதாயினும், அதற்குப் பயந்துவிடாமல் தன் அரசன் சொல்லியவாறே அவனுக்குள்ள சிறப்பை வேற்றரசரிடத்துச் சொல்லுவானே தூதனுவான்.

Life he scorns and death defies the trusty ambassador who has the well-being of his monarch in his heart and boldly proclaims the mandates of the king. 10

அதிகாரம்—70

மன்னரைச்சேர்ந்தொழுகல்

CONDUCT AND SERVICE UNDER THE SOVEREIGN

அமைச்சர் அரசரோடு பொருந்தி ஒழுகும் விதம்.

691. அகலா(து) அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

அடிக்கடி மாறுந் தன்மையுள்ள அரசரைச் சேர்ந்து ஒழுகும் அமைச்சர், அவரிடம் அதிகமாக நீங்குவதும், அதிகமாக நெருங்குவதும் இல்லாமல் நெருப்பிலே குளிர் காய்பவர்போல், இடை நிலத்திலே நிற்கக் கடவர்.

Behold the men who warm themselves before a crackling fire. They neither approach too near the scorching flame, nor do they stand too far away in the shivering cold. Likewise should a minister be neither too familiar with the sovereign nor stand too aloof from him. 1

692. மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய ஆக்கந் தரும்.

தம் அரசர் விரும்புவனவற்றைத் தாம் விரும்பாதிருத்தல், அமைச்சர்க்கு, அவ்வரசர்களாலேயே நிலைபெற்ற செல்வத்தைக் கொடுக்கும்.

Let not a minister be a rival unto the king in the pursuit of pleasures. That is the way to bask in the sunshine of his favour and gain endless riches. 2

693. போற்றின் அரியவை போற்றல்; கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது.

அமைச்சர், தம்மைக் காத்துக்கொள்ள நினைத்தால், பொறுத்தற்கரிய பிழைகள் தம்மிடத்து வராதபடி காத்துக்கொள்ள வேண்டும்; அவற்றை வந்தனவாகக் கேட்டு அரசர், தம்மீது சந்தேகங்கொண்டால், அவரைப் பின் தெளிவித்தல் யாவராலும் முடியாது.

Let the minister beware of faults. Let him not give room for suspicious thoughts; for once they are aroused, it is difficult to banish them from the mind of the sovereign. 3

694. செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியார் அகத்து.

பெருமை நிறைந்த அரசரது சமீபத்தில் தாமிருக்கும்போது, அவ்வரசர்க்கெதிரில் வேறொருத்தனது காதிலே இரகசியமாகப் பேசுதலும், ஒருவன் முகத்தைப் பார்த்துச் சிரித்தலும் செய்யாதிருக்கவேண்டும்.

Let the minister be grave and solemn in the presence of his sovereign; let him not be whispering or exchanging smiles. 4

695. எப்பொருளும் ஓரார் தொடரார்மற்(று) அப்பொருளை
விட்டக்கால் கேட்க மறை.

அரசன், பிறரோடு இரகசியமாய்ப் பேசும்பொழுது, அவர் பேசும் எப்பொருளையும் செவிகொடுத்துக் கேளாமலும், அவரிடம் விரைந்து சென்று தாமே வினவாமலும், அந்த இரகசியத்தை, அவனே ஒளிக்காது சொல்லி விட்டால் அதனைக் கேட்டலும்வேண்டும்.

Let not a minister play the eavesdropper. Let him not hasten to pry into the secrets of the sovereign. Let him await the sweet will and pleasure of the king. 5

696. குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல்.

அரசனிடம் ஒரு காரியத்தைச் சொல்லுங்கால், அவன் மனக் குறிப்பினை அறிந்து, சொல்லுதற் கேற்ற காலத்தையும் நோக்கி, வெறுப்பைத் தாராதனவும் விரும்பப்படுவனவாயும் உள்ள காரியங்களை, அவன் விரும்பிக் கேட்குமாறு சொல்லுக.

Watch the changing humour of the prince and sweetly address him in a fitting hour, on the crying needs of the state. 6

697. வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினுஞ் சொல்லா விடல்.

பெரும் பயனுடையனவாய், அரசன் விரும்புவனவாயும் உள்ள காரியங்களை, அவன் கேளாதிருந்தாலும் சொல்லி எப்பொழுதும் பயனில்லாதவற்றைத் தானே கேட்டாலும் சொல்லாதிருத்தல் வேண்டும்.

Utter what is pleasant and most imperative to the king; but refrain from what is unprofitable and trifling, though the king desires it. 7

698. இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப் படும்.

இவர் நமக்குப் பிராயத்தில் சிறியவர் என்றும், இன்ன உறவு முறைமை உடையவர் என்றும், அரசரை அவமதியாது அவரது பதவிக்குத் தக்கபடி பணிவாய் நடந்துகொள்ள வேண்டும்.

Trifle not with your sovereign though he be younger or a kinsman; but pay your homage to him who has an eternal glory of his own. 8

699. கோளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர்.

நிலைபெற்ற அறிவினையுடையார், அரசனால் நாம் நன்கு மதிக்கப்பட்டிருக்கிறோம் என்று நினைத்து, அவன் விரும்பாதவற்றைச் செய்யார்.

Though favoured of the king, men of clear vision commit not what is revolting to him. 9

700. பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்.

அரசரிடம் யாம் வெகுநாளைப் பழக்கம் உள்ளோம் எனக்கருதி, தகாதவற்றைச் செய்யும் உரிமை அமைச்சர்க்குக் கேட்டினைத் தரும்.

The foolish acts, which a minitter does through familiarity with the king, cause his own downfall. 10

அதிகாரம்—71

குறிப்பறிதல்

DIVINING THE SOVEREIGN'S MIND

அரசர் நினைத்த விஷயத்தை அவர் கூறுமுன்னரே குறிப்பினால் அறிதல்.

701. கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்(கு) அணி.

அரசனால் நினைக்கப்பட்ட தொழிலை, அவன் சொல்லாமலே அவனது முகத்தையாவது கண்ணையாவது பார்த்து அறியும் அமைச்சன், எந்நாளும் வற்றாத கடலால் சூழப்பட்ட நிலவுலகத்தில் உள்ளார்க்கு ஓர் அணியாவான்.

Behold the man who fathoms the mind of the sovereign even before he delivers himself. In this world, encircled by the ever-rolling boundless ocean, he is a jewel among mankind. 1

702. ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோ(டு) ஒப்பக் கொளல்.

ஒருவனது மனத்தில் பொருந்திய எண்ணத்தைச் சந்தேகப்படாமல் நிச்சயமாக அறியவல்லவன், அவன் மனிதனாகவே யிருந்தாலும் தெய்வத்துக்குச் சமானமாகக் கௌரவித்துக் கொண்டாடத் தக்கவனாவான்.

He is a god among men, who unerringly divines the intentions of another. 2

703. குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்.

தமது குறிப்பு நடக்கும் விதத்தை அறிந்து, அதனால் பிறர் குறிப்பை அறியவல்ல மந்திரிகளை, அரசர் தமக்கு அங்கமான செல்வம், நாடு முதலிய வற்றுள் அவர் வேண்டுவனவற்றைக் கொடுத்துத் தமக்குத் துணையாகக் கொள்ளவேண்டும்.

Let the king, even at great personal sacrifice, appoint him as a councillor who reads the thoughts of another. 3

704. குறித்தது கூறாமைக் கொள்வாரோ(டு) ஏனை
உறுப்போர் அனையரால் வேறு.

ஒருவன் மனத்தில் நினைத்ததை அவன் கூறாமலே அறியவல்லாரும், அவ்வாறே குறிப்பறியமாட்டாதவரும், வடிவத்தால் ஒத்திருந்தாலும் அறிவினால் வேறாவர்.

Unique among men are those who get at the secret thoughts of another by their very looks. 4

705. குறிப்பின் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்.

பார்க்கும்படி உத்தேசிக்கப்பட்ட பொருளைப் பார்த்தற்கு வல்ல தமது பார்வையால், பிறர் குறிப்பினை உணரமுடியாவிட்டால் ஒருவன் உறுப்புக்களுள் சிறந்த கண்களால் யாது பயன் ?

Eyes are of no use if they catch not the inner workings of the heart by outward signs. 5

706. அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

தன்னை அடுத்த பொருளின் தன்மையைத் தான் கொண்டு காட்டும் பளிங்கு போல, ஒருவன் மனத்தில் மிக்க குணத்தை அவன் முகம் தானே கொண்டு காட்டும்.

Like the crystal clear that reflects the varied hues of objects around, the face mirrors the passing shadows of the mind. 6

707. முகத்தின் முதுக்குறைந்த(து) உண்டோ உவப்பினும்
காயினுந் தான்முந் துறும்.

உயிர் ஒருவனை விரும்புதலையாவது வெறுத்தலையாவது அடைந்தால், முகந்தான், அவ்விருப்பு வெறுப்புக்களை வெளியிடுதலில் அவ்வுயிரினும் முற்பட்டு நிற்கும்; ஆதலால், முகம் போல அறிவு மிக்கது வேறொன்று உண்டோ? இல்லை.

Is there any surer index than the face to reveal all the joys and sorrows of the heart ? 7

708. முகநோக்கி நிற்க அமையும் அகநோக்கி
உற்ற(து) உணர்வார்ப் பெறின்.

ஒருவரிடத்துக் குறை வேண்டுபவன், தன் மனத்தைக் குறிப்பால் அறிந்து அக்குறையைத் தீர்ப்பாரைப் பெற்றால், அவர் தன் முகத்தைப் பார்க்கும்படி, அவர் முகத்திற்கு எதிராக நின்றாற் போதும்.

Enough you go with a wistful look to a subtle one; he looks straight into the recesses of your heart and reads all the thoughts that slumber there. 8

709. பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை யுணர்வார்ப் பெறின்.

வேந்தர், தமது பார்வை, விருப்பு வெறுப்புக் காலங்களில் மாறுபடுந் தன்மையை அறியவல்ல மந்திரிகளைப் பெற்றால், அம்மந்திரிகளுக்கு, வேற்றரசர் மனத்திற் பொருந்தியுள்ள பகைமையும் சிநேகத்தன்மையும் அவர் சொல்லாமலேயே அவர்களது கண்களே வெளியிடும்.

Eyes alone will do to speak out the love or hatred within to one who knows all their changing viles and tricks. 9

710. நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்ல(து) இல்லை பிற.

யாம் நுண்ணறிவுடையோம் என்றிருக்கும் மந்திரிகள், அரசர் கருத்தினை அளக்கும் அளவு கோலாவது, ஆராயுங்கால் அவர்களது கண்ணே யல்லாமல் வேறில்லை.

To know the secrets of the sovereign, is there any surer measure than the eyes to a minister of acute intellect? 10

அதிகாரம்—72

அவை யறிதல்

FEELING THE PULSE OF THE KING'S COUNCILCHAMBER

அரசனோடிருந்த சபையிலுள்ளாரது தன்மையை அறிதல்.

711. அவையறிந்(து) ஆராய்ந்து சொல்லுக: சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.

சொற்களின் வகைகளை அறிவதுமன்றி, அவற்றால் தமக்கு ஆனவற்றைக் கொள்ளும் தூய அறிவினையுடையவர், தாமொன்று சொல்லும்போது அச்சமயத்திலுள்ள சபையாரது தன்மையை யறிந்து ஆராய்ந்தே பேச வேண்டும்.

Ye men of wisdom that know the witchery of words and the wizardry of eloquence, frame your speech to the humour of the audience. 1

712. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்.

சொற்களின் நடையை (போக்கை) ஆராய்ந்தறிந்த நல்லறிவுடையார், சபையின்கண் ஒன்று சொல்லும்போது உரிய சமயத்தையறிந்து, யாதொரு தோஷமும் உண்டாகாதபடி மிகத்தெளிந்து சொல்ல வேண்டும்.

Let the great, who know all the charms and graces of rhetoric, watch the mood of the assembly and then deliver, their well-thought-out discourse. 2

713. அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார்; வல்லதூஉம் இல்.

சபையின் இயல்பை அறியாதவராய், ஒன்றைப் பேசத்தொடங்குபவர், சொல்லுந் திறம் அறியாதவரே யாவர்; அவருடைய கல்வி அறிவும் அவருக்குப் பயன்படுவதில்லை.

He knows not the art of speaking and is devoid of the gift of learning and understanding who begins to address an assembly without first feeling its pulse. 3

714. ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல்: வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல்.

அறிவினால் சிறப்பை யடைந்தவராது சபையில் தாமும் நன்றாகப் பேசி வெளிப்பட்டு விளங்குபவராகுக: மற்றை, அறிவில்லார் அவைக்கண், வெண்ணிறமான சுண்ணாம்பின் தன்மையைக் கொண்டிருக்கக் கடவர். (அறியாமையை மேற்கொள்ளக் கடவர்.)

Play the wise in a council of the learned but affect the fool in an assemblage of fools. 4

715. நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு.

ஒருவர்க்கு, இது நல்லதென்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட குணங்களெல்லாவற்றுள்ளும் நல்லதெதுவெனின், தம்மினும் அறிவில் மிகுந்தவருடைய சபையில், அவர் பேசுதற்கு முன் தாம் ஒன்றனையும் சொல்லாது அடங்கியிருத்தலேயாம்.

Rarest of all virtues is the sweet modesty that prevents a man from arrogating to himself the lead in the council of his elders. 5

716. ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு.

பரந்த நூற் பொருளைக் கற்றறிந்து அவற்றின் உண்மையான கருத்தை யாராயும் அறிஞர் அவைக்கண், வல்லவனொருவன் சொற் குற்றப்படுதல், முத்தி பெறுவதற்காகச் சன்மார்க்கத்தில் நின்ற ஒருவன், தனது உறுதிநிலை சோர்ந்து தவறினாற் போலும்!

Oh! how like the fall of a soul from virtue is the colossal failure of a man in his speech before the council chamber of the wise! 6

717. கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொற்றெரிதல் வல்லார் அகத்து.

தவறாமல் சொற்களை ஆராய்ந்து சொல்ல வல்லவரது சபையில், எடுத்துச் சொல்லின் பல நூல்களையும் கற்று அவற்றாலாகிய பயனை அறிந்தாரது கல்வி, யாவரும் அறியும்படி விளங்கித் தோன்றும்.

A scholar rises to the full stature of his wisdom only in the assembly of the art critics. 7

718. உணர்வ(து) உடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று.

பிறர் அறிவித்தலின்றி விஷயங்களைத் தாமே உணரவல்ல அறிவினையுடையாரது அவையினிடத்துக், கற்றறிந்தார் ஒன்றனைச் சொல்லுதல், தானே வளர்வதொரு பயிர்நின்ற பாத்தியில் நீரைப் பாய்ச்சியது போலும்!

Addressing men who have a native genius of their own, is like watering the plants which, by themselves, can burst into blossoms and leaves. 8

719. புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார்.

நல்லறிவாளர் கூடியிருந்த அவையினிடத்து, நல்ல பொருள்களை அவர் அங்கீகரிக்கும்படி சொல்லுதற்குரியவர், நற்பொருளை யறியாத அறிவில்லார் கூடியுள்ள அவையில் மறந்தும் நல்விஷயங்களைச் சொல்லக் கூடாது.

Ye men that ever charm the ears of the learned by your thoughtful and delightful discourse, beware of casting pearls before swine. 9

720. அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல்.

நல்லறிவுடையார், தம்மோடு ஒத்த நல்லவர் இல்லாத சபையில், யாதொன்றையும் சொல்லாதிருக்க வேண்டும். சொன்னால் அச்சொல்

பரிசுத்தமில்லாத முற்றத்தில் சிந்தின அமிர்தத்தை யொக்கும். (பயனில தாகும்.)

To utter words of wisdom before the unworthy is like spilling ambrosia on filthy ground. 10

அதிகாரம்—73

அவை யஞ்சாமை

FEARLESSNESS BEFORE THE COUNCIL

சபையினது தன்மையை முன்பு அறிந்து, பின்பு அதில் பேசும் பொழுது அதற்குப் பயப்படாமை.

721. வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.

பலவகைச் சொற்களின் தன்மைகளை யெல்லாம் அறிந்த நல்லறிவுடையவர், 'கற்றவர் சபை இது, அல்லார் சபை இது' என்று அவையின் வகைகளை யறிந்து, தமக்கு ஏற்ற கற்றறிந்தவரது சபையில் ஒன்று சொல்லுங்கால் அச்சத்தால் சொல்வழுப்படார்.

A trained speaker, who knows the trick of words and studies the humours of the council, falters not through fear in his speech. 1

722. கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்.

பல நூல்களைக் கற்றோர் கூடிய சபையில், தாம் கற்ற நூற்பொருள்களை அவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி அஞ்சாது சொல்லவல்லவரே, கற்றவரெல்லாரைக் காட்டிலும் அவரே நன்றாகக் கற்றவரென்று உலகத்தாரால் சொல்லப்படுவாராவர்.

He is reckoned a scholar among scholars who can, by the gift of his eloquence, drive home all his thoughts to the learned men in the assembly. 2

723. பகையகத்துச் சாவார் எளியர்; அரியர்
அவையகத்து அஞ்சா தவர்.

பகைவர் கூட்டத்தின் நடுவில், அஞ்சாது சென்று போர் செய்து இறக்கவல்லவர் உலகத்தில் பலராவர்; கற்றவர் குழாத்தினிடையில் புக்கு அஞ்சாது பேசவல்லவர் சிலரேயாவர்.

Many there are that brave death on a field of battle; but there are only a few that can, without trembling, face an audience. 3

724. கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்.

பல நூல்களையும் கற்றுணர்ந்தவர் கூடிய அவையில், தாம் கற்ற நூற்பொருளை, அவர் கிரகிக்கும் விதமாகச் சொல்லித், தாம் படித்தறியாத மற்றை நூற்பொருளை அதிகமாகக் கற்றறிந்தாரிடமிருந்து அறிந்து கொள்ளவேண்டும்.

Freely descant on what you have learnt and gather instruction with a humble mind from men of superior wisdom. 4

725. ஆற்றின் அளவறிந்து கற்க: அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு.

அயலரசர் சபையில் சென்று பயப்படாமல், அவர் சொல்லிய சொல்லுக்கு மறுமொழி சொல்லும் பொருட்டு, சொல்லிலக்கண வழியால், அளவை நூலையும் மனம் இணங்கி அமைச்சர் கற்றல் வேண்டும்.

To become an adept in the art of fencing, learn to perfection logic and rhetoric. 5

726. வாளொ(டு)என் வன்கண்ணர் அல்லார்க்கு? நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு.

அஞ்சத்தக்கவற்றைக் கண்டவிடத்தும் அஞ்சாத நெஞ்சுறுதி இல்லாதவர்க்கு, வாளாயுதத்தோடு என்ன சம்பந்த மிருக்கிறது ? அதுபோல, நுட்பமான அறிவுடையவர்களது அவைக்கு அஞ்சுபவர்க்கு, நூலோடுள்ள பொருத்தம் யாது ?

Of what avail is a sword to one who is without valour ? Of what avail is learning to one who plays the coward and keeps mum in a learned council ? 6

727. பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து.
அஞ்சு மவன் கற்ற நூல்.

பேசுவதற்குரிய சபை நடுவில் அச்சபைக்குப் பயப்படுகிறவன், கற்றறிந்த நூலானது, வாள் முதலிய ஆயுதங்களை வீசிப் போர் செய்தற்குரிய பகைவரது நடுவில், அப்பகைவர்க்கு அஞ்சுகின்ற பேடி, கையிற் பிடித்த கூர்மையுள்ள வாளைப் போலும் !

Ineffectual as the battle-axe in the hands of a poltroon in the thick of the fray is the futile learning of a scholar, who shrinks from an assembly. 7

728. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார்.

அறியவல்லாரிருந்த அவைக்கண், அவர் ஏற்குமாறு நல்ல சொற்பொருளை அச்சத்தால் சொல்லமாட்டாதவர், பல நூல்களைக் கற்றுணர்ந்தாராயினும் உலகத்துக்குப் பயனற்றவரே யாவர்.

Vain, vain is the vast and varied learning of one who knows not the art of selection and stumbles in his speech. 8

729. கல்லாத வரின் கடையென்ப கற்றறிந்து
நல்லார் அவையஞ்சு வார்.

நூல்களைக் கற்றிருந்தும், அவற்றின் பயனை அறிந்திருந்தும், நல்லாரிருந்த அவைக்கு அஞ்சி, அவ்விடத்தில் ஒன்றையும் சொல்லாதவரை, உலகத்தார் கல்வியறிவில்லாத மூடரினும் இழிந்தவரென்று சொல்லுவர்.

More base than the unlettered is a learned man who dreads an assembly of scholars. 9

730. உளரெனினும் இல்லாரொடு ஒப்பர் களன்அஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.

சபையினிடத்துள்ளாரைக் கண்டு அஞ்சித் தாம் கற்றவற்றை அச்சபைக்கு ஏற்பப் பேசமாட்டாதவர், ஜீவித்திருந்தும் இறந்தவர்க்குச் சமானமாவர்.

Dead, though alive, is the man whose heart sinks within himself, before the learned council of the wise. 10

அதிகாரம்—74

நாடு

THE LAND

அரசர் முதலியோரால் ஆளுதற்குரியதாய் மற்றை அங்கங்கட்கு முக்கியமானதாயுள்ள நாட்டின் தன்மை.

731. தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

என்றும் குறையாத பயிர் விளைச்சலைச் செய்யும் குடிகளும், தருமமார்க்கத்தில் நடப்பவரும், அழிவற்ற செல்வமுடைய வணிகரும், ஒருங்குகூடி வாழ்வதற்கு இடமாவதே நாடு எனப்படும்.

That is the happy land where a bold peasantry with their never-failing plenty and the mighty sages of wisdom and the men of abundant wealth live in sweet concord and amity. 1

732. பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு.

வரம்பு இல்லாத பொருள்களை யுடைத்தாயிருத்தலால், பிறதேயத்தாராலும் விரும்பத்தக்கதாய்க், குற்றமில்லாமல் மிகுதியாக விளையுந் தன்மையை யுடையதே, நாடாகும்.

A flourishing country, which is free from the ravages of all pests, becomes the wonder and delight of other nations, by her boundless wealth. 2

733. பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறையொருங்கு நேர்வது நாடு.

பல காரணங்களால், பிற நாட்டினின்று பிராணிவர்க்கம் தன் மீது வந்து நெருங்கினபொழுதும் அதனைத் தாங்கிக் காத்தலோடு, தன் அரசனுக்குச் செலுத்தவேண்டிய இறைப்பொருளையும் எளிதில் வருந்தாது அளிக்கவல்லதே, நாடாகும்.

That is the prosperous country which, in spite of drain upon drain on her resources, rises to the occasion to meet the pressing demands of the hour and ungrudgingly pays her taxes to the king. 3

734. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா(து) இயல்வது நாடு.

உழவாது முயற்சியால் மிகுபசியின்மையும், நீங்காத நோயும், வெளியிலிருந்து வந்து அழிவு செய்யும் பகைவரும் இல்லாமல், உள்ளதே நாடெனப்படும்.

Blessed is the realm that knows no famine or pestilence and is free from invasions from without. 4

735. பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு.

சாதிபற்றியும், சமயம் பற்றியும் மாறுபட்டுக் கூடும் பல கூட்டத்தாரும், கூடவசித்துக்கொண்டிருந்தே அழியச் செய்கின்ற கள்ளர், கொடிய விலங்கு முதலிய உட்பகைகளும், சமயம் நேர்ந்தால் அரசனை வருத்துகிற கொலைத்தொழிற் குறுநில மன்னரும் (சிற்றரசரும்) இல்லாமலிருப்பதே நாடு என்ப.

Renowned is the land that is not divided into warring sects, and torn with internal dissensions, and does not nourish in her bosom murderous traitors. 5

736. கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை.

பகைவரால் எப்பொழுதும் அழிவடையாததும், அருமையாக ஓர் காலத்து அழிவடைந்தாலும் வளங்குறையாததுமான நாட்டை, எல்லா நாடுகளிலும் சிறந்ததாகக் கூறுவர் அறிவுடையோர்.

Behold the happy country which is free from the assaults of the enemy and enjoys abundance even when harassed by foes. She is a pendant in the necklace of worlds. 6

737. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்(கு) உறுப்பு.

கிணறு குளங்களாகிய கீழ் நீரும், ஏரி ஆறுகளாகியமேல் நீரும் ஆகிய இருவகை நீர்நிலைகளும், பலவகை இடம் வாய்ந்த மலையும், அதனினின்று வரும் நீரும், அழியாக் கோட்டையும் ஆகிய இவை நாட்டிக்கு அங்கமாம்.

Inexhaustible well-springs, broad-bosomed lakes, copious waters obtained from timely rains, well-situated mountains from which flow many rills, and impregnable fortresses—these are the salient features of a thriving country. 7

738. பிணியின்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்(கு)இவ் வைந்து.

நோயில்லாமை, செல்வமுடைமை, பயிர்விளைவுடைமை, இன்பமுடைமை, காப்புடைமை ஆகிய இவ்வைந்தும் நாட்டிற்கு, அழகாகும்.

Five are the blessings that crown a gifted realm—immunity from disease, boundless wealth, smiling plenty, unmixed happiness, and a sure defence. 8

739. நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
நாட வளந்தரு நாடு.

தம்மிடத்து வாழ்வோர் தேடி வருந்தாமல், அவர்களிடத்துத் தானே எளிதில் அடையும் செல்வத்தை உடையவற்றையே நாடென்று நூலோர் சொல்லுவர். ஆதலால் தேடி வருந்தச் செல்வம் அடைவிக்கும் நாடுகள் நாடாகா.

Happy is that land where men neither toil nor spin, but live on her rich natural resources. Poor is that land where men have to toil incessantly to earn their frugal bread. 9

740. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை இல்லாத நாடு.

அரசனுக்கும் குடிகளுக்கும் ஒற்றுமை இல்லாவிட்டால், மேற்சொல்லிய குணங்கள் யாவும் நிறைந்துள்ள நாடாயினும், அவற்றால் ஒரு பயனும் உடையதாகாது.

Though blessed with all the above excellences, a country will never prosper, if there is no harmony between the ruler and the ruled. 10

அதிகாரம்—75

அரண்

FORTRESSES

பகைவரால் அழிவு நேரிடும்பொழுது நாட்டிற்கும் அரசனுக்கும் பாது காப்பாதலாகிய சிறப்புடைய கோட்டை இதுவெனல்.

741. ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தன்
போற்று பவர்க்கும் பொருள்.

அறிவு, ஆண்மை, பெருமை என்னும் மூவகை வலிமையுமுடையராய், பகைவர்மேல் எதிர்த்துச் செல்பவர்க்கும் கோட்டை, இன்றி யமையாததே: அவ்வாற்றல்கள் இல்லாமல் தம்மை எதிர்த்துவரும் பகைவர்க்குப் பயந்து உள்தங்குபவர்க்கும் கோட்டை சிறந்ததே.

A fortress is invaluable to a king who goes on an expedition. She is also a place of refuge and defence to the weak, when hotly pursued by the enemy. 1

742. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடைய(து) அரண்.

மணிபோலும் நிறத்தையுடைய வற்றாத நீரும், நீர் நிழலற்ற வெள்ளிடை நிலமும், மலையும், மரங்களடர்ந்த குளிர்ந்த நிழலையுடைய காடும், ஆகிய இவற்றைச் சுற்றிலும் பெறுதலே அரணாகும்.

That is an impregnable stronghold which has a never-drying moat, a sandy desert, precipitous rocks around and thickly - wooded jungles. 2

743. உயர்(வு) அகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமை(வு) அரண் என்றுரைக்கும் நூல்.

மிக்க உயர்ச்சியும், பரப்பும், வலிமையும், பிறர் நணுகுதற்கு அருமையும் ஆகிய நான்கும் பொருந்துவதே, கோட்டைமதிலுக்கு நல்லிலக்கணமாகும் என்ப நூலோர்.

A fastness must be imposing in its height, massive in its breadth, strong and inaccessible to the foe. 3

744. சிறுகாப்பின் பேரிடத்த தாகி உறுபகை
ஊக்கம் அழிப்பது அரண்.

பாதுகாக்கப்படவேண்டிய இடம் சிறியதாய், எவ்வளவு பேர் தங்க வேண்டுமாயினும் தங்கும்படி விசாலமான உள்ளிடம் உடையதாய், தன்னை வந்து முற்றுகை செய்த பகைவரது உற்சாகத்தைக் கெடுத்து, அவர்களுக்கு அச்சந்தரவல்லதே அரணாகும்.

A fortress which has a natural defence of its own and which needs but few places to be guarded, scorns the assaults of the foe and chills his frantic rage. 4

745. கோளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்
நிலைக்(கு) எளிதாம் நீரது அரண்.

புறத்துள்ள பகைவரால் தம் வசப்படுத்திக் கொள்ளுதற்கு அரியதாய், அகத்தார் உண்ணுதற்கு வேண்டிய பொருள்களையுடையதாய், அகத்தார் போர்செய்யும் நிலைமைக்கு ஏற்ற இடவமைதியையும் உடைத்தாயிருத்தலே அரணாகும்.

A fort is that which cannot be easily stormed, which is well-provisioned and which affords facilities of defence for the people within. 5

746. எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்
நல்ஆள் உடைய(து) அரண்.

தன்னுள் இருப்பார்க்கு வேண்டிய எல்லாப் பொருளும் நிறையப் பெற்றதாய், பகைவரால் அபாயம் நேரும் அளவில், அது நேரிடாதபடி உதவி செய்து காக்கும் நல்ல வீரரையும் உடையதே அரணாம்.

That is a real fortress which is well-stored with victuals of all kinds and which is filled with brave hearts to make a heroic defence. 6

747. முற்றியும் முற்று(து) எறிந்தும் அறைப்படுத்தும்
பற்றற்(கு) அரியது அரண்.

உள்ளே செல்லுதலும் வெளியே போதலும் கூடாதபடி எங்குஞ் சூழ்ந்து கொண்டும், அவ்விதம் சூழாமல் காவல் தளர்ந்த இடம் நோக்கி, அதனையே முக்கியமாகக் கொண்டு, ஓரிடத்திலேயே வந்து நெருங்கிப் போர் செய்தும், அகத்தோரை அவர்கள் நம்பும்படியானவர்களைக் கொண்டு வஞ்சித்து மாறுபடுத்தியும், பகைவரால் எவ்விதத்தாலும் கைப்பற்ற முடியாதபடி இருப்பதே அரணாகும்.

A veritable stronghold is that which baffles the stratagems of the enemy, who may either lay siege to it or take it by storm or undermine it. 7

748. முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வது அரண்?

தமது சேனை மிகுதியால் வலிமையுடையராய் வந்து சூழ்ந்த பகைவரையும், தன்னை இடமாகக் கொண்ட அகத்தோர், தாம் கொண்ட இடத்தை விட்டு விடாமல் நின்று போர் செய்து வெல்ல இடமாவதே கோட்டையாகும்.

That is a mighty and well-garrisoned fortress which defies the onslaught of the overwhelming might of the besiegers. 8

749. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட(து) அரண்.

போர் தொடங்கின காலத்திலே, பகைவர் அழிந்தோடும்படி தன் அகத்துள்ளோர் செய்யும் பலவகைப் போர்த் திறங்களால் சிறப்புப் பெற்று மற்றும் வேண்டும் பெருமையை யுடையதே நல்லரணும்.

That is a great fortress which gives ample scope to its garrison for endless stratagems of war, which dismay the enemy even at the outset. 9

750. எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்ல(து) அரண்.

அரண், முன் சொல்லப்பட்ட பல மாட்சிமைகளைப் பெற்றிருந்தாலும், போர் முதலிய வெல்லும் உபாய வகைகளைச் செய்தலில் திறமையில்லாதவர் களிடத்திலே, அம்மாட்சிமை யாவும் பயனில்லாதனவாகும்.

Of what avail are all the strong barriers of defence of a fortress, if she is devoid of men of valour? 10

அதிகாரம்—76

பொருள் செயல் வகை

THE ACQUISITION OF WEALTH

நாட்டினாலும் அரணாலும் முறையே ஆக்கவும் காக்கவும் படுவதாகிய செல்வத்தைச் சம்பாதித்தலின் வகை.

751. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல(து) இல்லை பொருள்.

ஒரு வஸ்துவாக மதிக்கப்படாதவரையும் நன்கு மதிக்கப்படுபவராகச் செய்யவல்ல செல்வத்தைத் தவிர, ஒருவனுக்குப் பாராட்டிச் சம்பாதிக்கத் தக்க பொருள் வேறில்லை.

There is nothing so potent as wealth to raise men of insignificance to power and prominence. 1

752. இல்லாரை எல்லாரும் எள்ளுவர்: செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு.

எல்லா நற்குணமுடையராயினும், பொருளில்லாதவரை யாவரும் இகழ்வர்: எல்லாத் துர்க்குணமுடையராயினும், பொருளுடையவரை யாவரும் மேம்படுத்துவர்.

The poor are for ever held in contempt; the rich are always belauded. 2

753. பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று.

பொருளென்று யாவராலும் சிறப்பிக்கப்படும் தூண்ட வேண்டாத சுடர்ப்பிழம்பானது, தன்னைச் சம்பாதித்தவர்க்கு, அவர் நினைத்த தேயங்களி லெல்லாஞ் சென்று, பகையென்னும் இருளை யொழிக்கும்.

Like the ever-burning lamp, the undying splendour of wealth spreads to every land and dispels the dark forces of evil. 3

754. அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

சம்பாதிக்கும் வகையறிந்து, அரசன், நீதி தவறாதவனாயிருத்தலினால் உண்டாகிய செல்வம், அவனுக்கு அறத்தையும் இன்பத்தையும் கொடுக்கும்.

Out of a fortune built up by fair means flow joy and virtue. 4

755. அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.

அரசர், தம் குடிகளிடத்துச் செய்யும் அருளோடும், அக்குடிகள் தம் மிடத்துச் செய்யும் அன்போடும் கூடிவாராத செல்வச் சம்பாதிப்பை, அரசர் ஏற்றுக்கொள்ளாமல் நீக்கிவிடவேண்டும்.

Let the king spurn the wealth that is not reared on the bedrock of everlasting love and mercy. 5

756. உறுபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.

உடையவ ரில்லாமையால் தானே வந்து அடைந்த பொருளும், தீர்வைப் பொருளும், பகைவரை வென்று திறையாகக் கொள்ளும் பொருளும் அரசன் நீதிவழியிற் பெறும் பொருள்களாகும்.

Heirless estates, all the taxes of the realm, and the tributes got from vanquished princes—these go to build up the king's revenue. 6

757. அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு.

அன்பினால் பெறப்பட்ட அருளென்னும் குழவி, பொருளென்று சிறப்பித்துக் கூறப்படும் செல்வத்தையுடைய செவிலித்தாயால் வளரும்.

What is compassion but the offspring of love? What is wealth but the kindly nurse of compassion? 7

758. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை.

தன் கையிற் பொருளையுடையவன், தான் எடுத்துக்கொண்ட ஒரு தொழிலைச் செய்து முடித்தல், ஒருவன் மலைமேல் ஏறி நின்று, யானைகள் ஒன்றோடொன்று செய்யும் போரைக் கண்டாற் போலும் !

Like one, who joyously witnesses an elephant fight, from a secure hill-top, far away from the turmoil of life, the wealthy man has his projects and ambitions fulfilled. 8

759. செய்க பொருளைச் ; செறுநர் செருக்கறுக்கும்
எஃ(கு); அதனின் கூரிய(து) இல்.

தமக்கு ஒரு நன்மை உண்டாக நினைப்பவர், பொருளைச் சம்பாதிக்க வேண்டும்: அது, தம் பகைவர் செருக்கை அறுக்கவல்ல போர்க் கருவியாகும் : பகைவர் செருக்கை அறுத்தற்கு, அச்செல்வம்போலக் கூர்மையுள்ள ஆயுதம் வேறில்லை.

Amass wealth, for there is no greater weapon than gold to humble the pride of your foe. 9

760. ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்(கு) எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு.

நல்ல வழியால் வரும் பொருளை மிக அதிகமாகச் சம்பாதித்தவர்களுக்கு, மற்றை அறப்பயனும், இன்பப் பயனும் ஒருங்கே எளிதிற் கைகூடும்.

Acquire a great fortune by noble and honourable means: the other two paths of virtue and joy are open unto you. 10

அதிகாரம்—77

படை மாட்சி

IN PRAISE OF THE ARMY

படையினது தன்மை.

761. உறுப்பமைந்து ஊறுஅஞ்சா வெல்படை, வேந்தன்
வெறுக்கையுள் எல்லாந் தலை.

யானை, தேர், குதிரை, காலாள் என்னும் நால்வகை அங்கங்களோடு பொருந்திப், போரில் பகைவரால் புண்படுதற்கு அஞ்சாது நிலைத்து நின்று, பகையை வெல்ல வல்லதுமாகிய சேனை, அரசனது செல்வங்கள் எல்லாவற்றினும் முதன்மையான செல்வமாகும்.

A well-disciplined army that can bear the brunt of the armed attacks of the foe is the pride and boast of a sovereign. 1

762. உலைவிடத்து ஊறுஅஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக்(கு) அல்லால் அரிது.

பகைவரால் அழிக்கப்பட்டுத் தான் சுருங்கியவிடத்தும், தனது போரினிடத்து அழிவு நேரிட்டால் பகைவரால் தன்மீது உண்டாகும் காயத்துக்கு அஞ்சாது நின்று தாங்கவல்ல வீரமானது, அவ்வரசனது தாதை முதலிய பரம்பரையாரைத் தொடங்கி வரும் மூலப்படைக்கே யுரியனவாம்: பிற படைகளுக்கு உண்டாகாது.

The heroic valour of rallying round the banner of the king, in an adverse hour, belongs only to the band of the veterans and heroes of the field. 2

763. ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்.

எலிகளாகிய பகை ஒன்றுகூடிக் கடல்போல ஆரவாரித்தலினால், நாகத்துக்கு என்ன தீங்கு நேரிடும்! ஒரு தீங்கும் வாராது. அந்தப் பாம்பு, மூச்சு விட்ட அளவிலேயே அவ்வெலிப்பகை, கெட்டொழியும்.

The hiss of the hooded serpent stills for ever the noise of an army of rats which comes like the roar and rush of the sea. Before a staunch and dauntless hero, hosts of cowards tremble and die. 3

764. அழிவின்(று) அறைபோகா தாகி வழிவந்த
வன்கண் அதுவே படை.

போரில் அழிந்து பின்னிடாமையும், பகைவர்க்கு வசப்பட்டுத் தன் அரசனை வஞ்சித்தொழுகாமையும் உடையதாய்ப், பரம்பரையாய் வருந் தறுகண்மையை யுடையதே அரசனது மூலப்படையாகும்.

That is a mighty phalanx which has suffered no defeat, which does not play into the hands of the enemy even against odds and which has, for ages, a reputation for valour. 4

765. கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்றல் அதுவே படை.

யமனே கோபங்கொண்டு தன்மீது எதிர்த்து வந்தாலும், அதற்கு அஞ்சிப் பின்னிடாது, மனமொத்து எதிர்த்துத் தாங்கும் வலிமையையுடையதே, படையாகும்.

That is a valiant army which gathers up courage and gives battle even to the grim-visaged God of Death. 5

766. மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு.

பராக்கிரமமும், மானமும், முன்னிருந்த வீரர்கள் சென்ற நெறியில் செல்லுதலும், அரசனால் நம்பப்படுதலும் ஆகிய நான்கு குணங்களுமே சேனைக்குக் காவலாகும்.

Valour, honour, an acquaintance with the old, glorious traditions of the army, loyalty to the king—these preserve the strength and union of the national militia. 6

767. தார்தாங்கிச் செல்வது தானை; தலைவந்த
போர்தாங்குந் தன்மை அறிந்து.

பகைவரால் அணிவகுக்கப்பட்டுத் தன்மேல் வந்த சேனையின் போரைத் தடுக்கும் விதத்தை யறிந்து, தானும் அதற்குரியபடி அணிவகுத்துக்கொண்டு, அவரது தூசிப்படையைத் தன்மேல் வராமல் தடுத்துத், தான் அதன்மேல் செல்லவல்லதே சிறந்த சேனையாம்.

That is a well-disciplined army which knows the art of steering clear of the serried ranks of the foes, and marches on them skilfully parrying off their lance-attacks. 7

768. அடல்தகையும் ஆற்றலும் இல்லெனினும் தானை
படைத்தகையால் பாடு பெறும்.

சேனை, பகைமேல் தான்சென்று அழிக்கும் வன்மையும், பகைவர் சேனை தன்மேல் வந்தால் அதனை விலக்கும் ஆற்றலும், இல்லாவிட்டாலும், தனது காட்சியின் அழகினாலேயே பெருமை யடையும்.

An army well-accoutred in all the pomp and splendour of the habiliments of war, though lacking in dash or steadiness, strikes terror into the hearts of the enemy. 8

769. சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை.

தான் குறைந்து சிறிதாகலும், தன் அரசனிடத்து வெறுப்புடைமையும், வறுமைப்படுதலும் இல்லையானால், அப்படை பகையை வெல்லும்.

An army can triumph over the foe which has neither dwindled, nor grown mutinous, nor discontented, nor ill-paid. 9

770. நிலைமக்கள் சால உடைத்தெனினுந் தானை
தலைமக்கள் இல்வழி இல்.

போரில் பிற்படாது, முன் நிற்கும் தன்மையுள்ள வீரர்களை மிகுதியாக உடையதாயினும், தனக்குத் தலைவராகிய சேனாதிபதிகள் இல்லாமற் போனால், சேனை நிலைபெறாது.

Of what avail are the forces ready for war, if there be no chieftain bold to lead them on to victory? 10

அதிகாரம்—78

படைச் செருக்கு

THE HEIGHT OF VALOUR

படைகளின் மிக்க பராக்கிரமத்தாலாகிய கர்வம்.

771. என்ஐமுன் நில்லன்மின் தெவ்விர்! பலரென்ஐ
முன்னின்று கல்நின் றவர்.

பகைவர்களே! எனது தலைவன் எதிரில் போரில் நின்று, அவனது வேலினால் இறந்து கல்லினிடத்தே நின்ற வீரர் பலர்; ஆதலால், நீங்கள் உயிரோடிருக்க விரும்புவீராயின் எனது தலைவன் எதிரில் போர்க்கு நில்லாது நீங்கிச் செல்லுங்கள்.

Ye foes! flee away from the field of battle and dare not face my noble chief, for many a one who has challenged him has fallen and is lying low in his stone-marked grave. 1

772. கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்த வேல் ஏந்தல் இனிது.

காட்டில் ஓடுகிற முயலைத் தவறாமல் எய்த அம்பைக் கையில் ஏந்துதலைப் பார்க்கினும், போர்க்களத்திலே யானைமேல் எய்து தவறின வேலைக் கையிலே ஏந்துதல் சிறந்தது.

The javelin aimed at a lordly elephant, though it has missed its mark, brings greater glory in its wake than the unerring arrow which has hit a tiny woodland hare. Failure in great projects brings greater renown than success in small strivings. 2

773. பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு.

பகைவரிடத்துத் தாக்ஷிணியமில்லாமல் செய்யும் வீரத்தை, நூலோர் உயர்ந்த ஆண்மையென்று கூறுவர்; பகைவர்க்கு ஒரு தாழ்வு வந்ததாயின், அதனை அவர்கள் தீர்த்துக்கொள்ளுதற்காகத் தாக்ஷிணியம் வைத்து உதவி செய்தலை, அவ்வாண் தன்மைக்குக் கூர்மை (விளக்கம்) என்று அறிஞர் கூறுவர்.

To fight the foe courageously is valour; to be chivalrously generous to the fallen, defenceless foe, is indeed the very crown of valour. 3

774. கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

தன் கையிலுள்ள வேலினைத் தன்மேல் எதிர்த்துவந்த யானையின்மேல் செலுத்தியதால் இழந்துவிட்டு, பின்னும் தன்மேல் எதிர்த்து வருகின்ற

யானையின்மீது எறிய வேலைத்தேடித் திரிபவன், பகைவரால் தன் உடம்பில் செலுத்தப்பட்டுத் தைத்துள்ள வேலைக்கண்டு மகிழ்ந்து, அதனைப் பிடுங்கி அவ்யானைமீது எறிவான்.

The brave hero, drunk with valour, sends an arrow swift at a rushing elephant and when pressed for weapon new, joyously plucks out the javelin from his wounded breast and hurls it again. 4

775. விழித்தகண் வேல்கொண்(டு) எறிய அழித்து இமைப்பின்
ஓட்(டு) அன்றோ வன்கண வர்க்கு.

பகைவரைச் சினந்து நோக்கிய கண், அப்பகைவர் வேலினால் வீச, அவ்வேலெறிதலைப் பார்த்துப் பொறுக்கமாட்டாமல், அக்கோபப் பார்வையை மாற்றி இமைக்குமானால், அதுவும் வீரர்க்குத் தோல்விக் குறியாகும்.

To allow the eyes to quiver even for a moment, when the arrows of the enemy whizz past, is dire disgrace and defeat to a born warrior, who has a stern and fierce look of his own. 5

776. விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளை யெடுத்து.

வீரன், தன்னுடைய ஆயுளில் கழிந்த தினங்களை யெல்லாம் கணக்கிட்டு, அந்நாள்களுள் சிறந்த புண், முகத்திலும் மார்பிலும் படாத நாட்களை யெல்லாம், வீணே கழிந்த நாள்களாக எண்ணி வருந்துவான்.

A true soldier deems that day spent in vain that has not seen a battle-wound on his brave breast. 6

777. சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

வீர சுவர்க்கமடைகிற தம்மோடு வந்திடாமல், நிலவுலக முழுவதும் பரவி நிலைபெறுகிற புகழையே விரும்பி, உயிர் வாழ்க்கையை விரும்பாத வீரர் காலில் அணிகிற கழலே, அணிகலமென்று நன்கு மதிக்கத்தக்கது.

The ringing anklet adds a grace to a mighty warrior who, for world-wide renown, joyously lays down his life, in the thick of the fray. 7

778. உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினுஞ்சீர் குன்றல் இலர்.

போரைப் பெற்றால், தம் உயிரைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டுப் பகைக்கு அஞ்சுந் தன்மை சிறிது மில்லாத வீரர், தன் அரசன் அப்போர் வேண்டாமென்று கோபித்துத் தடுக்கினும், தமது வீர மிகுதியில் குறையார்.

The ardour and valour of a hero who seeks the very jaws of death, never cools down even against the remonstrances and dissuasions of his sovereign liege. 8

779. இழைத்த(து) இகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த(து) ஒறுக்கிற் பவர்.

தாம் செய்த சபதம், தவறாது முடியும் பொருட்டுப் போர்க்குச் சென்ற வீரர், பகைவரால் இறக்க நேர்ந்தால், அவரைச் சபதம் தவறியவரென்று கூறி, எவரும் இகழமாட்டார்.

Does any one dare reproach a dauntless hero with failure, who has sealed his vows with his very death ? 9

780. புரந்தார்கண் நீர்மல்கச் சாகற்பின் சாக்கா(டு)
இரந்துகோள் தக்க(து) உடைத்து.

தமக்குப் படைவீரர் முன்பு செய்த உபகாரங்களை யெண்ணித், தமக்குத் தலைவரான அரசர் கண்களில் நீர் பெருகும்படி, போரில் வீரர் இறக்க நேர்ந்தால், அத்தகைய மரணம் யாசித்தாயினும் கொள்ளத்தக்கது.

Ye warriors ! seek such a glorious death that draws tears from your chieftain's eyes. 10

அதிகாரம்—79

நட்பு

FRIENDSHIP

அரசனுக்கு ஆட்சி நடத்தும் தொழிலில் படைபோல உதவும் சிநேகத்தின் தன்மை.

781. செயற்கரிய யாவுள நட்பின்; அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

சிநேகத்தைப்போலச் சம்பாதித்துக் கொள்ளுதற்கு அருமையான பொருள்கள் எவை யுள்ளன ? சம்பாதித்துக்கொண்டால், அதுபோலப் பகைவர் செய்யும் இடையூற்றுக்கு இடையூறாகவுள்ள காப்புக்கள் வேறு எவை யுள்ளன ?

Friendship is a rare possession and is not easily acquired. When acquired, is there any surer armour than that to withstand the evil designs of the foe ? 1

782. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

அறிவுடையாரோடு செய்த சிநேகம், வளர்பிறைச் சந்திரன்போல முதலில் சிறிதாயிருந்து வரவர வளர்ந்து நிறையும் தன்மையுடையது; அறிவில்லாரோடு செய்த நட்பு, தேய்பிறைச் சந்திரன்போல முதலிற் பெரிதாயிருந்து, வரவரக் குறைந்துவிடும் தன்மையுடையது.

Like the crescent, the friendship of the worthy grows. Like the waning moon, the alliance of the fools dwindles away. 2

783. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

நற்குணமுள்ள மனிதர், தம்முள் செய்துகொள்ளுஞ் சிநேகம், பழகப் பழக அவர்க்கு இன்பந்தருவது, நூலின் பொருள் கற்குந்தோறும் கற்றவர்க்கு இன்பந்தருதல் போலாம்.

Newer gems of thought and wisdom we unearth as we delve in the mines of knowledge evermore. Fresher joys and newer harmonies we find in the mellowing fellowship of the great ones. 3

784. நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்(று) இடித்தற் பொருட்டு.

ஒருவரோடு ஒருவர் சிநேகஞ் செய்வது, தங்களுக்குள் சிரித்து மகிழ்தற்கு ஏற்றவற்றைச் சொல்லி, மகிழ்தற்காக அன்று; தம்மில் ஒருவரிடத்து விரும்பத்தகாத தீச்செய்கை உண்டாகும்பொழுது, முற்பட்டு அதனைக் கண்டித்துப் புத்தி சொல்லுதற் பொருட்டேயாம்.

Friendship is not mere smiles and laughter. It is of a tougher fibre and is full of stern counsels to the erring. 4

785. புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்.

ஒருவரோடு ஒருவர், நட்பாதற்குத் தேய ஒற்றுமையும், பழக்கமும் ஆகிய காரணங்கள் வேண்டியதில்லை; இருவர்க்கும் அறிவு ஒத்திருத்தலே சிநேக சம்பந்தத்தை யுண்டாக்கும்.

It is neither mere constant companionship, nor mere tokens of affection but the kinship of the souls and the harmony of the hearts that make the loving bond of friendship. 5

786. முகநக நட்பது நட்பன்று: நெஞ்சத்(து)
அகநக நட்பது நட்பு.

ஒருவரை யொருவர் காணும்பொழுது, மனம் மகிழாமல், முகம் மாத்திரமே மலரும்படி சிநேகிப்பது சிநேகமாகாது; அன்பால் மனமும் மலரும்படி சிநேகிப்பதே, உண்மையான சிநேகமாகும்.

The glory of friendship is not in mere affected nods and smiles hypocritical but in feeling the very joy of the inner spirit. 6

787. அழிவின் அவைநீக்கி ஆறுஉய்த்(து) அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு.

தீமை விளைக்கத்தக்க தீய வழிகளிற் செல்லும்பொழுது, அவற்றில் செல்லவொட்டாது விலக்கியும், நன்மை விளைக்கத்தக்க நல்வழிகளிற் செல்லாத பொழுது அவற்றில் செலுத்தியும், விதிவசத்தால் ஏதேனும் தீங்கு நேர்ந்த இடத்து அது விலக்கக் கூடாததாயிருந்தால், அத் துன்பத்தைத் தானும் கூடவே இருந்து அனுபவிப்பதே, சிநேக தருமமாகும்.

He is a true friend who leads you from darkness to light and shares your misfortune. 7

788. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

சபையினிடத்தில் ஆடை நெகிழப் பெற்றவனுக்கு, அப்பொழுதே அவன்கை சென்று உதவி, அந்த அவமானத்தை நீக்குதல் போல, நண்பனுக்குத் துன்பம் வந்தபொழுது உடனே உதவிசெய்து அத்துன்பத்தைத் தீர்ப்பதே சிநேகமாகும்.

In an assembly of men, how quickly do your hands hasten to clutch at the garment that suddenly slips away from you. Even so does a friend rush to your aid in an hour of need. 8

789. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்புஇன்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.

நட்புக்கு அரசிருக்கை (மிக மேம்பட்ட நிலைமை) யாதென்றால், அந் நட்பு, எப்பொழுதும் மாறுபடாமல் கூடிய இடங்களிலெல்லாம், ஒருவனுக்கு அறம் பொருள்களில் தளர்ச்சி வாராமல் நன்றாக உதவும் வலிமையேயாம்.

Where does the seat of perfect friendship lie but in hearts closely attuned to each other and in minds that swerve not, in all circumstances, from the path of duty and virtue ? 9

790. 'இனையர் இவர்எமக்(கு); இன்னம்யாம்' என்று
புனையினும் புல்லென்னும் நட்பு.

'இவர் நமக்கு இவ்வளவு அன்புடையவர்; நாம் இவர்க்கு இவ்வளவு அன்புடையேம்' என்று ஒருவரை யொருவர் புகழ்ந்து சிறப்பித்துக் கூறினாலும், நட்பானது அற்பத் தன்மையை யுடையதாகும்.

Base indeed is the friendship that boasts of its loving union, for true friends, whose minds and hearts are one, never flatter each other nor brag of their fellowship. 10

அதிகாரம்—80

நட்பாராய்தல்

SEARCHING FOR TRUE FRIENDSHIP

நட்புக்கு உரிய சிறந்த இலக்கணமுடையாரை இன்னாரென்று ஆராயும் விதத்தைக் கூறுதல்.

791. நாடாது நட்டலிற் கேடில்லை; நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

சிநேகத்தை விரும்பிப் பாராட்டுபவர்களுக்கு, ஒருவனோடு சிநேகஞ் செய்தபின், அவனை விட்டுவிடுதல் முடியாது; ஆதலால், ஆராயாது சிநேகஞ் செய்வதைப்போல, மிகத் தீங்கு தருவது வேறில்லை.

There is no greater calamity than want of discretion in the choice of friends, for once friendship is made, there can be no parting of the ways to one who knows the charms and dignity of friendship. 1

792. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரம் தரும்.

குணமும் செய்கையும் நல்லன் என்பதும், தீயன் என்பதும் பலதரம் பல விதத்தால் ஆராய்ந்து நட்புக்கொள்ளாதவன், முடிவில் தான்சாதற்கு ஏதுவாகிய துன்பத்தைத் தன் பகைவர் உண்டாக்க வேண்டாமலே, தானே உண்டாக்கிக் கொள்வான்.

A friendship indiscreetly made results in disastrous ruin. 2

793. குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்து யாக்க நட்பு.

ஒருவன் குணத்தையும், குடிப்பிறப்பையும், குற்றத்தையும், குறைவில்லாத உறவினரையும் ஆராய்ந்தறிந்து அவனோடு சிநேகஞ் செய்ய வேண்டும்.

First ascertain a man's character, his lineage, his kith and kin and his weaknesses and then be friends with him. 3

794. குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டும் நட்பு.

உயர்ந்த குடியிற் பிறந்து, தன்னிடத்து உலகத்தார் சொல்லும் பழிக்கு அஞ்சுபவனை, அவன் விரும்பும் பொருள்கள் சிலவற்றைக் கொடுத்தாயினும் நட்புக் கொள்ளல் வேண்டும்.

Even at a heavy price, acquire the friendship of one who comes of a noble family and dreads a blot on his escutcheon. 4

795. அழச்சொல்லி அல்ல(து) இடித்து வழக்கறிய
வல்லார்நட்(பு) ஆய்ந்து கொளல்.

தாம் உலக வழக்கல்லாத தொழிலைச் செய்யக் கருதினால், மனவருத்தம் உண்டாகும்படி கூறி அதனை விலக்கியும், செய்துவிட்டால் பின்னும் செய்யாதபடி கண்டித்தும், அவ்வுலக வழக்கத்தோடு ஒத்த தொழிலைச் செய்யாவிட்டால் செய்விக்கவும் வல்ல திறமையுடையாரது சிநேகத்தை ஆராய்ந்து கொள்ளவேண்டும்.

Make them your chosen friends who know the way of the wise, who make you repent a crime and who chastise and reprove when you go astray. 5

796. கேட்டினும் உண்டோர் உறுதி; கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்.

ஒருவனுக்குக் கேடு என்பது, தன் சிநேகிதராகிய நிலங்களை, மிச்சமில்லாமல் அளக்கும் ஓர் அளவுகோலாகும்; ஆதலால், அந்தக் கேட்டினிடத்தும் அவனால் பெறப்படும் ஓர் நல்லறிவு உண்டு.

Sweet are the uses of adversity, for it is a touchstone that gauges the genuineness of friendship. 6

797. ஊதியம் என்ப(து) ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்.

ஒருவனுக்கு இலாபம் என்று சொல்லப்படுவது எதுவென்றால், அறிவில்லாரோடு ஆராயாது ஒருகால் சிநேகம் கொண்டிருந்தால், அந்நட்பை ஒழித்து, அவரைவிட்டுப் பிரிதலேயாம்.

It is a blessing to relinquish the company of fools. 7

798. உள்ளற்க உள்ளம் சிறுகுவ: கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.

தம் மனவெழுச்சி, குறைதற்குக் காரணமாகிய தொழில்களைச் செய்ய நினையாதிருக்கவேண்டும்; அதுபோல, தமக்குத் துன்பம் வந்தபொழுது கைவிடுபவரது நட்பை ஏற்றுக்கொள்ளாதிருக்கவேண்டும்.

Allow not your thoughts to run on deeds that depress your spirits; nor make friends with those who fall off in adversity. 8

799. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளஞ் சுடும்.

ஆபத்துக் காலத்து, தனக்கு உதவி செய்யாது நீங்கினவரது நட்பு, மரண காலத்தில் நினைப்பினும் மிக்க துன்பத்தை விளைக்கும்.

The mere thought of your friend who has betrayed you, in an hour of need, rankles in your heart, even at the very last gasp of your life. 9

800. மருவுக மாசற்றார் கேண்மை; ஒன்று ஈத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

உலகத்தோடு ஒத்தலும் குற்றமின்மையும் உடையாரது சிநேகத்தையே ஏற்றுக்கொண்டு பழகவேண்டும்; உலகத்தாரோடு மாறுபட்டவரது சிநேகத்தை ஆராயாது கொண்டிருந்தால், அவர் வேண்டிய பொருளைக் கொடுத்தாயினும் வலிய ஒழித்துவிடவேண்டும்.

Embrace the fellowship of the flawless ones; discard the alliance of evil men even at some sacrifice. 10

அதிகாரம்—81

பழைமை

Close and Fast Friendship

நண்பரது பழையராந் தன்மைபற்றி, அவர்கள் செய்த பிழைகளைப் பொறுத்தல்.

801. பழைமை யெனப்படுவ(து) யாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

பழமை எனப்படுவது யாதென்று கேட்டால், அது பழைய நண்பர் உரிமையாற் செய்வனவற்றைச் சிறிதும் விலக்காமல், அவற்றிற்குச் சம்மதித்து இருக்கின்ற நட்பே யாகும்.

Perfect fellowship lovingly submits to all the liberties and freedoms which its loving ones take. 1

802. நட்பிற்(கு) உறுப்புக் கெழுதகைமை; மற்றதற்கு
உப்புஆதல் சான்றோர் கடன்.

நட்பிற்கு அவயவமாவன, நண்பர் உரிமையாற் செய்யும் செயல்களே; அதனால் அவ்வுரிமைக்கு இனியராதலே பெரியோர்க்குக் கடமையாகும்.

The salt and savour of friendship is perfect freedom. Such a freedom only friends know. 2

803. பழகிய நட்பெவன் செய்யும் கெழுதகைமை
செய்தாங்(கு) அமையாக் கடை.

தாம் சம்மதியாத காரியங்களாயிருந்தாலும், சிநேகிதர் உரிமையாற் செய்த செயல்களுக்குத் தாமே அக்காரியங்களைச் செய்ததுபோல பாவிக்க,

அதற்கு உடம்படாராகுல் அவரோடு பழமையாய் வந்த சிநேகம், என்ன பயனைத் தரும்?

Of what avail is close friendship when hearts respond not to familiar acts done in its name ? 3

804. விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையால்
கேளாது நட்டார் செயின்.

சிநேகிதர், உரிமையால் தம்மைக் கேளாமல் செய்த தம் செயல்களுக்காக, அச்செயல்களின் விரும்பப்படும் தன்மைபற்றி, அவற்றை விரும்புவர் அறிவுடையார்.

Friends delight in all the familiar and unbidden acts of their close associates. 4

805. பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.

தாம் வெறுக்கத்தக்க செயல்களைச் சிநேகிதர் செய்தாராயின், அவ்வாறு செய்தற்குக் காரணம், அறியாமை என்றாவது, மிக்க உரிமை பாராட்டுதல் என்றாவது அறிந்துகொள்ளவேண்டும்.

Deem the sting caused by friends to be born of not folly merely, but of easy familiarity. 5

806. எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.

நட்புவரம்பு கடவாமல் அதன்கண்ணே நின்றவர், தம்மோடு பழமையினின்றும் வேறுபடாமல் இருந்தவரது நட்பை, அவரால் கேடு நேர்ந்தவிடத்தும் கைவிடார்.

Friends may cause ruin: but the true and perfect ones never abandon them. 6

807. அழிவந்த செய்யினும் அன்புஅறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

அன்போடு பழகிய நட்பினையுடையவர், தம் நண்பர் தமக்குக் கெடுதியானவற்றைச் செய்தவிடத்தும், அவரிடத்து அன்பு நீங்கார்.

Friends linked together from childhood, even when betrayed, cling on to each other. 7

808. கேள்இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாள்இழுக்கம் நட்டார் செயின்.

நண்பர் செய்த பிழையைத் தாமாகவேயன்றிப் பிறர் சொன்னாலும் மனத்தில் கொள்ளாத உரிமை அறியவல்லவர்க்கு, அந்நண்பர் பிழை செய்வாராயின், அந்நாளே வாழ்நாள்களிற் பயன்பட்ட நாளாம்.

Behold the loving hearts who are blind to the faults of their friends and who listen not to whispering tongues. Even the day their friends offend, comes to them with a smiling grace of its own. 8

809. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு.

உரிமை நீங்காமல் பழமையாய்வந்த நட்பையுடையவரது நட்பினை, அவர்செய்த பிழையைநோக்கி விடாதவரை, உலகத்தார் அனைவரும் விரும்பி சிநேகிப்பர்.

He lives in the hearts of all who holds on to his friend of old, through thick and thin. 9

810. விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார்.

பழைய சிநேகிதர், பிழைசெய்தபோதும், அவரிடத்தில் பிழை பொறுத்தலாகிய தமது குணத்தினின்றும் மாறுபடாதவர், தம் பகைவராலும் விரும்பப்படுவர்.

Even foes long for them who are constant in their affections to their erring friends. 10

அதிகாரம்—82

தீ நட்பு

Evil Company

தீக்குணத்தாரோடு உண்டாகிய நட்பு.

811. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலின் குன்றல் இனிது.

தீக்குண முடையவர், மிக்க அன்பு காட்டி, அன்பின் மிகுதியால் விழுங்குவார்போலிருப்பினும், அவரது சிநேகம் வளர்தலைக் காட்டிலும் குறைதல் நன்று.

Let the seeming, devouring kindness of the wicked rather die away than grow. 1

812. உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்.

தமக்குப் பயன் உளதாம்பொழுது நட்புச் செய்து, பயன் இலதாம் பொழுது தம்மை விட்டு விலகும் ஒற்றுமை யில்லாதவரது நட்பைப் பெற்றால் வரும் இலாபம் யாது? இழந்தால் நேரும் நஷ்டம் யாது. (இரண்டும் சமமே.)

What matters it whether you gain or lose the brittle friendship of those who crowd round you in days of prosperity and fall off in days of adversity? 2

813. உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்.

சிநேகத்தின் அளவை முக்கியமாகக் கொள்ளாது, அதனால் வரும் பயன் அளவையே கருதி சிநேகிப்பவரும், கொடுப்பாரை உள்ளன்புடன் ஏற்றுக்கொள்ளாது பொருளையே முக்கியமாகக் கொள்ளும் பொதுமகளிரும், பிறர் நஷ்டத்தைப்பற்றிச் சிந்தியாமல் அவர் அஜாக்கிரதைப்பட்டு நிற்கின்ற சமயத்தையே எதிர் பார்க்கின்ற திருடரும் தம்முள் சமானமாவர்.

Friends having an eye on their profits, harlots bent on their gains, robbers lying in wait for plunder, are of the same ilk. 3

814. அமர்அகத்(து) ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை.

போர் வருவதற்கு முன்னெல்லாம் தாங்குவது போலிருந்து, யுத்தம் நேர்ந்தபொழுது போர்க்களத்தில் தள்ளிவிட்டுப் போகின்ற பயிற்சியில்லாத குதிரையைப்போல்வாரது, நட்பைக் காட்டிலும் தனித்திருத்தலே உத்தமமாகும்.

Better solitude than the company of wicked men who are like the unbroken steed that fails a warrior in the thick of the battle. 4

815. செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று.

சிநேகம் செய்து வைத்தாலும், ஆபத்துக்காலத்தில் பாதுகாவலாகாத கீழ்மக்களது தீய நட்பு, ஒருவர்க்கு உண்டாவதைப் பார்க்கிலும் உண்டாகாமலிருத்தலே நல்லது.

Better abandon than contract the friendship of the wicked who forsake you in the hour of danger. 5

816. பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும்.

அறிவில்லாதவனது மிக நெருங்கிய நட்பைப் பார்க்கிலும், அறிவுடையாரது பகைமை கோடி மடங்கு நல்லது.

Better far to incur the wrath and hate of the great than to court the close alliance of the vile. 6

817. நகைவகையர் ஆகிய நட்பின் பகைவரால்
பத்தடுத்த கோடி உறும்.

தாம் அறிவுடையாராதற்கு ஏதுவல்லாமல், பரிகாசவகைக்கு உரியவர் களோடு செய்யும் சிநேகத்தினால் வரும் இன்பங்களைப் பார்க்கிலும், பகைவரால் வரும் துன்பங்கள், பத்துக்கோடி மடங்கு நல்லனவாம்.

Infinitely better than the empty laughter of your foolish companions is the wild frown of your foes. 7

818. ஒல்லும் கருமம் உடற்றுபவர் கேண்மை
சொல்லாடார் சோர விடல்.

தம்மால் முடியுங் காரியத்தை முடியாததுபோல் வெளிக்குக்காட்டி, அதனைச் செய்யாது விடுபவரது நட்பை, அதனைக் கண்டவுடனே அவரறியச், சொல்லாமலே தளர விடவேண்டும்.

Let the friendship of those who chill your enthusiasm and make your work grievously long, wear and wither away. 8

819. கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

செயலும், சொல்லும் ஒத்திராது மாறுபட்டிருப்பவரது நட்பானது, பிரதியக்ஷத்தில் மாத்திரமே யன்றிச் சொப்பனத்தில் காணப்பட்டாலும் வருத்தந் தரும்.

It is bitter to conjure up even in dreams the fellowship of those whose tongues belie their hearts. 9

820. எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு.

தனியே வீட்டில் இருந்தபொழுது சிநேகம் பாராட்டி, பலரோடு சபையில் இருக்கும்பொழுது பழிப்பவரது நட்பை, எவ்வளவு சிறிதாயினும் தம்மைச் சேராதபடி கவனித்து ஒழிக்கவேண்டும்.

Keep them at arm's length who lovingly embrace you when alone, but hold you up to scorn and ridicule in an assembly. 10

அதிகாரம்—83

கூடா நட்பு

FALSE FRIENDSHIP

மனத்தில் நட்பில்லாமலிருந்துகொண்டே, தமக்குத் தீங்கு செய்ய வாய்க்குஞ் சமயம் பெறுமளவும் வெளியிலே கூடி யொழுகுவாரது நட்பின் தன்மை.

821. சீரிடங் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

உள்ளே பகைமை கொண்டு வெளிக்குச் சிநேகிதர்போல் இருப்பவரது நட்பு, சமயம் நேர்ந்த விடத்துத் தாங்காமல், பொன் முதலியவற்றை வேறு கருவிகள் நன்றாக வெட்டுதற்குத் துணையாகின்ற பட்டடை யென்னும் கருவிபோலும்.

The false friendship of the wicked is but a mask and a pretext to stab you from behind in an unwary moment. 1

822. இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.

தமக்கு வேண்டியவர்போல நடித்து, உண்மையில் வேண்டாதவரா யிருப்பவருடைய நட்பு, சமயம் நேருமிடத்து, மகளிர் மனம்போல மாறுபடும்.

Changeful and varying as the heart of a woman is the friendship of a treacherous one. 2

823. பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லர்
ஆகுதல் மாணார்க்(கு) அரிது.

நல்ல நூல்கள் பலவற்றைக் கற்றாராயினும், அதனால் மனந்திருந்தி உண்மை நண்பராதல், கூடாநட்பினர்க்கு இல்லை.

The unkind heart of the enemy never mellows with learning. 3

824. முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும்.

கண்டபொழுது முகமலர்ச்சி காட்டி நகைத்து, எப்பொழுதும் மனத்தால் இனியரல்லாதவரான வஞ்சகருக்கு அஞ்சவேண்டும்.

Beware of men who may smile and smile, and be villains. 4

825. மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்
சொல்லினால் தேறற்பாற்(று) அன்று.

மனத்தால் தம்மொடு பொருந்தாதவரை, யாதொரு காரியத்திலும் அவரது சொற்களைக் கொண்டு நம்பக்கூடாது.

Put no trust in the alluring words of the deceitful ones. 5

826. நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை யுணரப் படும்.

சிநேகிதர்போன்று நன்மையைத் தரும் சொற்களைச் சொன்னாராயினும், பகைவர் சொற்கள் நன்மையை விளைக்காமை, விரைவில் அறியப்படும்.

One can see through the wicked who, under the mask of friendship, offer sage counsels. 6

827. சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்.

வில்லினது வணக்கம், எதிர்த்தவர்க்குத் தீமை செய்தலைக் குறித்தலால், பகைவரது சொல்லின் வணக்கமும் தமக்கு நன்மை செய்தலைக் குறித்ததென்று நம்பாதிருக்கக் கடவர்.

The graceful bend of the bow portends evil; the humble speech of the enemy is fraught with disaster. 7

828. தொழுதகை யுள்ளும் படையொடுங்கும்; ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து.

பகைவர் அஞ்சலிசெய்த கைகளினுள்ளும் ஆயுதம் மறைந்திருக்கும்; அவர், அழுத கண்ணீரும் அவ்வாறே அவ்வாயுதம் மறைந்திருத்தற்கு இடமாகும்.

The wicked foes carry daggers in their praying hands and destruction dire in their tearful eyes. 8

829. மிகச்செய்து தம்எள் ளுவாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பாற்று.

வெளிக்கு அதிக சிநேகங்காட்டி, உள்ளே தம்மை இகழ்ந்தொழுகும் பகைவரைத் தாமும் அவ்வாறு சிநேகித்தொழுகி, அவர் மகிழும்படிசெய்து, அகத்தில் அம்மகிழ்ச்சி அழியும்படி பொருந்துந் தன்மை யுடையது, அரசநீதி.

It is perfect kingcraft to affect love to pretenders and to plot their ruin under the false guise of friendship. 9

830. பகைநட்பு ஆம் காலம் வருங்கால் முகம் நட்(டு)
அகநட்பு ஒரீஇ விடல்.

தம் பகைவர், தமக்குச் சிநேகிதர் போன்று ஒழுகுங் காலம் வந்தால், தாமும் அவரோடு முகத்தால் நட்புச்செய்து, மனத்தால் அச்சிநேகத்தை விட்டுப் பின்னர் முகநட்பையும் கூடியவரையிலும் நீக்கவேண்டும்.

Hide in your smiles your hostile heart to the foe, who affects friendship. 10

அதிகாரம்—84

பேதைமை

Folly

செய்வன தவிர்வன அறியாமை.

831. பேதைமை என்பதொன்(று) யாதெனின் ஏதங்கொண்டு
ஊதியம் போக விடல்.

பேதைமையாவது, ஒருவனுக்கு மற்றைக் குற்றங்களெல்லாவற்றினும் மிக்கதொரு குற்றமாம்; அதுதான் எதுவென்றால், தனக்குத் தீமை தருமவற்றைக் கைக்கொண்டு, தனக்கு நன்மை தருமவற்றைக் கைவிடுதலேயாம்.

Folly clings to what is harmful; but shuns what is good and profitable. 1

832. பேதைமை யுள்எல்லாம் பேதைமை காதன்மை
கைஅல்ல தன்கண் செயல்.

அறியாமையிலும் பெரிய அறியாமையாவது எதுவெனில், கூடாதென்று நூலோர் விலக்கிய காரியங்களை விரும்பிச் செய்தல்.

It is the height of folly to delight in what is sinful. 2

833. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

நாணுதற்குரிய பழிபாவங்களுக்கு நாணாமையும், ஆராயவேண்டிய விதி விலக்குக்களை ஆராயாமையும், யாவரிடத்தும் அன்பின்றி மாறுபட்ட சொல்லும் செயலும் உடைமையும், விரும்பிக் காத்தற்குரியவற்றில் விருப்பம் இன்மையும் ஆகிய இவை அறிவிலானது தொழில்களாம்.

A fool is dead to all shame, reckless of ideals, callous of heart, harsh and bitter of tongue and scorns what is good and noble in life. 3

834. ஓதி யுணர்ந்தும் பிறர்க்(கு) உரைத்தும் தான்அடங்காப்
பேதையின் பேதையார் இல்.

மனமொழி மெய்களாகிய திரிகரணங்களும், அடங்குதற்குக் காரணமாகிய நூல்களைக் கற்றும், அவ்வடக்கத்தால் வரும் பயனை யறிந்தும், அதனைப் பிறரறியும்படி உரைத்தும், அவை அடங்கி நடவாத மூடனாகிய தன்னைப் போல் பெரிய மூடர் உலகத்தில் இல்லை.

No greater fool treads on earth than he who chants scriptures, cons scriptures, quotes scriptures and yet is a thrall to his senses. 4

835. ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக்(கு) அழுந்தும் அளறு.

மூடனானவன், இனி வரும் பிறப்புக்களிலெல்லாம், தான் அனுபவிக்கும் துன்பத்தை இவ்வொரு பிறப்பிலேயே செய்துகொள்ள வல்லனாவன்.

Folly reaps all the harvests of an age-long misery in one short span of life. 5

836. பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.

ஒன்றைச் செய்யும் முறையறியாத மூடன், ஒரு தொழிலைத் தான் செய்வதாக ஏற்றுக்கொண்டு தொடங்கினுல், அத்தொழில் கெட்டுவிடுதல் மாத்திரமேயன்றித் தானும் விலங்கிற் பூணுவான்.

Folly renders all its projects futile and paves the way to its own ruin. 6

837. ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர், பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை.

அறிவீனன், விதிவசத்தால் பெருஞ்செல்வத்தை யடைந்தபொழுது, தன்னுடன் யாதொரு சம்பந்தமும் இல்லாதவர், அச்செல்வத்தைப்பெற்று அனுபவித்துத் திருப்தியடைய, எல்லா உரிமையுமுள்ள அவன் சுற்றத்தார் ஒன்றும் பெறுமல் பசியால் மிக வருந்துவர்.

Strangers feast and thrive on a fool's fortune, while his kith and kin starve and die. 7

838. மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன்று உடைமை பெறின்.

அறிவில்லாதவன், தன் கையிலே பொருள் கிடைக்கப்பெற்றுல், அப்பேதை மயங்குதல், முன்னமே பித்தம் பிடித்த ஒருவன் அதன்மேல் கள்ளையும் குடித்தாற்போலும். (மிக மயங்கி, ஒழுங்குகெடத் தொழில் செய்வான்.)

As riotous as a madman in his drunken glee, is a fool who comes by a windfall. 8

839. பெரிதினிது பேதையார் கேண்மை; பிரிவின்கண்
பீழை தருவதொன்(று) இல்.

மூடரது சிநேகம் மிக நல்லது; ஏனெனில், பின் பிரியுங் காலத்து, அப்பிரிவு இருவருக்கும் யாதொரு துன்பமும் தராதாதலால்.

The friendship of fools rings hollow and leaves no regret or fond recollection behind. 9

840. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால், சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.

பெரியோர் கூடிய சபையில் மூடன் பிரவேசித்தல், அசுத்தமானவற்றை மிதித்த காலை, இன்பந்தரும் மெத்தையில் வைத்தாற் போலும்.

As revolting as unwashed feet on a bed of roses, is the intrusion of a fool in an assembly of the wise. 10

அதிகாரம்—85

புல்லறி வாண்மை

IGNORANCE

சிற்றறிவுடைய ஒருவன், தன்னைப் பேரறிவுடையவனாக மதித்துப் பெரியோர் கூறும் உறுதி மொழியைக் கேளாமை.

841. *அறிவின்மை இன்மையுள் இன்மை: பிறிதின்மை*
இன்மையா வையா(து) உலகு.

ஒருவனுக்கு வறுமை பலவற்றுள்ளும் மிகுந்த வறுமையாவது, அறிவில்லாமையே ; மற்றைப் பொருளில்லாமையோ எனின், அதனை உலகத்தார் அப்படிப்பட்ட இழிந்த இல்லாமையாகக் கொள்ளமாட்டார்.

There is no other poverty in the world than the dire poverty of thought and mind. 1

842. *அறிவிலான் நெஞ்சுஉவந்(து) ஈதல் பிறிதியாதும்*
இல்லை: பெறுவான் தவம்.

புல்லறிவாளன், மனமகிழ்ந்து ஒருவனுக்கு ஒரு பொருளைக் கொடுத்தல் நேருமாயின், அதற்குக் காரணம் பெறுகின்றவனது தவமேயன்றிக் கொடுப்பவனது குணம் காரணம் அன்று.

The occasional benevolence of a fool is nothing but fortune's gift to the receiver. 2

843. *அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை*
செறுவார்க்குஞ் செய்தல் அரிது.

புல்லறிவுடையவர், தாமே தமக்குச் செய்துகொள்ளும் வருத்தமானது, அதனைச் செய்தற்குரிய பகைவர்க்குஞ் செய்ய முடியாததாகும்.

Folly inflicts on itsself more injuries than enemies can contrive. 3

844. *வெண்மை யெனப்படுவ(து) யாதெனின் ஒண்மை*
உடையம்யாம் என்னும் செருக்கு.

புல்லறிவுடைமை யென்று சொல்லப்படுவது யாதென்றால், 'தம்மைத் தாமே நல்லறிவுடையோம்' என்று நன்கு மதித்(துக்கொள்ளு)தற்குக் காரணமான மயக்கமே.

Where does folly reside but in self-conceit ? 4

845. *கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற*
வல்லதூஉம் ஐயந் தரும்.

புல்லறிவாளர், தாம் கல்லாத நூல்களையும் கற்றனவாக மதித்துக் கொண்டு ஒழுகும், ஒழுக்கம், தாம் முன்பு குற்றமறப் படித்ததொரு நூலிருந்தால், அதனிடத்தும் சந்தேகத்தைப் பிறர்க்கு விளைக்கும்.

The pretensions of a fool to knowledge beget suspicion in his own real worth. 5

846. அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி.

புல்லறிவாளர், தம்மிடத்து உண்டாகும் குற்றங்களை யறிந்து, அவற்றை ஒழிக்காமற் போவாராகில், மறைக்கத்தக்க தமது அவயவத்தை ஆடையால் மறைத்தவராகத் தம்மை நினைத்தலும், புல்லறிவாம்.

What availeth a fool to cover his nakedness while the deformities of his mind stand exposed to the world?

847. அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.

பெறுதற்கரிய உபதேசப்பொருளைப் பெற்றாலும், அதனை உட்கொண்டு காத்துக் கொள்ளாமல், வெளிப்படுத்தும் புல்லறிவாளன், அவ்வுபதேசப் பொருள், தனக்கு நன்மை செய்யாமையே யன்றித் தீமையையும் விளைத்தலால், மிகுந்த துன்பத்தைத் தனக்குத் தானே செய்து கொள்ளுபவனாவான்.

A fool, though blessed with sage counsels, sows the seeds of his own ruin. 7

848. ஏவவும் செய்கலான்: தான்தேறான் : அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய்.

அறிவில்லாதவன், தனக்கு உறுதியானவைகளை, அறிவுடையோர் சொன்னாலும் அவற்றை ஏற்றுக்கொண்டு, செய்யமாட்டான்; தானும், இவை நமக்கு நன்மை செய்யக் கூடியவையென்று அறியான்; அத்தகைய மனிதனது உயிர், உடம்பைவிட்டுப் போமளவும், அது பூமிக்குப் பொறுத்தற்கரியதொரு வியாதியாகும்.

Deaf to the counsels of the wise, and with no light of his own, a fool, to the last moment of his life, is a veritable pest of the earth. 8

849. காணாதான் காட்டுவான் தான்காணான்: காணாதான்
கண்டானாம் தான்கண்ட ஆறு.

தன்னை எல்லாம் அறிந்தவனாக மதித்துக் கொள்ளுதலால், பிறர் சொல்லும் விஷயத்தை அறியுந்தன்மை இல்லாத புல்லறிவாளனுக்கு, ஒன்றைச் சொல்லுபவன் அவனால் பழிக்கப்பட்டுத் தான் அறியாதவனாவான்; இனி, அவ் அறிவிலி, தான் கொண்டது விடாமையால், பிறர் அறிவித்தவற்றையும் தன் கருத்தின்படியே அறிந்தவனாவான்.

He who strives to teach a fool but befools himself; for the fool, in his self-conceit, always deems himself wise. 9

850. உலகத்தார் உண்டென்ப(து) இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்.

உயர்ந்தோர் பலரும் உண்டென்று சொல்லும் பொருளைத், தனது புல்லறிவால் இல்லை யென்று மறுப்பவன், உலகத்தாரால் மனிதனாக மதிக்கப்படான்; இப்பூமியிலே காணப்படுவதோர் பேயென்றே கருதப்படுவான்.

A fool, who forswears all that the world holds dear, is not of man born, but a veritable demon that stalks on earth. 10

அதிகாரம்—86

இகல்

ENMITY

இருவர் தம்முள்ளே போர்செய்து வலி குறைதற்குக் காரணமாகிய மனத்தின் மாறுபாடு.

851. இகல்என்ப, எல்லா உயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய்.

உயிரனைத்தும் பிறவுயிரோடு சேர்ந்து வாழாமைக்குக் காரணமாகிய தீக்குணத்தை வளர்க்கும் குற்றத்தையே, இகலென்று நூலோர் கூறுவர்.

What is hatred but a plague that breeds discord among men? 1

852. பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி
இன்னாசெய் யாமை தலை.

தம்மோடு சேர்ந்து வாழாமையை நினைத்து, வெறுக்கத்தக்க காரியங்களை ஒருவன் செய்தாலும், அவனோடு பகைமை கொள்ளக்கருதித் துன்பந் தருந் தொழில்களைத் தாம் அவனுக்குச் செய்யாதிருத்தலே சிறந்தது.

It is height of wisdom not to retaliate evil which springs from hostility. 2

853. இகலென்னும் எவ்வநோய் நீக்கின் தவலில்லாத்
தாவில் விளக்கந் தரும்.

ஒருவன், பகைமை யென்று சொல்லப்படுகிற துன்பத்தைச் செய்யும் நோயைத், தன் மனத்தைவிட்டு நீக்குவானாயின், அவ்வாறு நீக்குதல், எந்நாளும் அழிவில்லாமைக்கு ஏதுவாகிய குற்றமற்ற புகழை அவனுக்குக் கொடுக்கும்.

Eternal glory unto the man who banishes from his mind all enmity. 3

854. இன்பத்துள் இன்பம் பயக்கும், இகலென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின்.

பகைமையே யென்று சொல்லப்படுகின்ற துன்பங்கள் பலவற்றினும் மிக்க துன்பமானது, ஒருவனுக்கு இல்லையானால், அவ்வில்லாமை, இன்பங்கள் பலவற்றினும் மிக்க இன்பத்தை அவனுக்குக் கொடுக்கும்.

Where deadliest hate finds its grave, there springs joy ineffable. 4

855. இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்கும் தன்மை யவர்.

தம்மனத்துள் மாறுபாடு தோன்றியவிடத்து, அதற்கு இடங்கொடாமல் அதனை நீக்கி நடக்க வல்லவரை வெல்ல நினைப்பவர் யார்? ஒருவரும் இலர்.

Who dares conquer him that desists from hatred? 5

856. இகலின் மிகலினி(து) என்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து.

பிறரோடு பகைமை கொள்ளுதலே தனக்கு இனியதென்று செய்பவனது வாழ்க்கை, குறைதலும் முற்றக்கெடுதலும் விரைவில் உண்டாகும்.

One who delights in discord is within the shadow of ruin and death. 6

857. மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகன்மேவல்
இன்னா அறிவி னவர்.

பகைமையோடு சேர்ந்த தீய அறிவினை யுடையவர், வெற்றி தரும் நீதி நூற் பொருளை யறியமாட்டார்.

Spiteful by nature, blinded by hate, men know not the triumphant light of truth. 7

858. இகலிற்(கு) எதிர் சாய்தல் ஆக்கம்: அதனை
மிகலூக்கின் ஊக்குமாங் கேடு.

தன்னுள்ளத்தில் மாறுபாடு தோன்றியபோது, அதனை ஏற்றுக் கொள்ளாது ஒழித்தல், ஒருவனுக்கு ஆக்கமாம்; அவ்வாறு செய்யாமல், அம் மாறுபாட்டை மிகுதியாக மேற்கொண்டால், அது அவனுக்கு அழிவைத் தரும்.

To be rid of hatred is to build one's fortune; to feed fat one's grudge is to court one's ruin. 8

859. இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணும் கேடு தரற்கு.

ஒருவன், தன்னிடத்துச் செல்வம் வரும்போது காரணமிருந்தாலும் மாறுபாட்டை நினையான்; தனக்குக் கேடு வரும்போது காரணமில்லா திருந்தாலும் மிகுதியும் அதனை நினைப்பான்.

In fortune's smiling hour, no thoughts of enmity creep in. In ruin's fateful hour, all thoughts of hatred crowd in. 9

860. இகலான்ஆம் இன்னாத எல்லாம்: நகலான்ஆம்
நன்னயம் என்னுஞ் செருக்கு.

ஒருவனுக்கு மாறுபாடு ஒன்றினாலேயே, துன்பங்கள் அனைத்தும் உண்டாகும்; நட்பு ஒன்றினாலேயே நல்ல நீதியென்னும் பெருஞ் செல்வம் உண்டாகும்.

Out of enmity spring evils; out of love flow peace and good-will. 10

அதிகாரம்—87

பகைமாட்சி

HATRED OF THE ENEMY

அறிவில்லாமை முதலிய குற்றங்கள் உடைமையால் பகைவரைப், பெருமைப் படுத்தல்.

861. வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக: ஓம்பா
மெலியார்மேல் மேக பகை.

எவ்விதத்தானும், தம்மைக் காட்டிலும் மிகுந்த வலிமையை யுடையாரிடத்துப் பகை கொள்ளலாகாது; தம்மைவிடக் குறைந்த வலிமையை யுடையாரிடத்துப் பகைமையை நீக்காது கொள்ளல் வேண்டும்.

Measure not your strength with the powerful foe; strike, strike, with all your might, at the weaker one. 1

862. அன்பிலன்: ஆன்ற துணையிலன்: தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு.

தன் சுற்றத்தார்மேல் அன்பிலனாகியும், வலிமையையுடைய துணையில்லாதவனாகியும், தானும் வலிமை குறைந்தவனாயும் இருக்கின்ற ஒருவன், தன்மேல் வந்த பகைவனது வலிமையை வளர்ப்பானேயன்றி அதை எப்படி நீக்குவான் ?

Behold the prince who is unloving, void of powerful allies, and is weak in himself; can he ever withstand the incursions of the enemy? 2

863. அஞ்சும்: அறியான்: அமைவிலன்: ஈகலான்:
தஞ்சம் எளியன் பகைக்கு.

அஞ்ச வேண்டாதவைகளுக்கு அஞ்சுபவனும்,அறிய வேண்டுமவற்றை யறியாதவனாகியும், பிறரோடு பொருத்தம் இல்லாதவனும், இவற்றுடன் உலோப குணமுடையவனும் இருப்பவன், பகைவரால் வெல்லப்படுதற்கு மிக எளியனாவான்.

He, who is frightfully timid, foolishly ignorant, revoltingly unsocial, and woefully niggardly, is the scorn and contempt of the foe. 3

864. நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது.

கோபத்தினின்று நீங்காதவனும்த், தன்னிடத்து நிறையுடையனல்லனு மாகிய ஒருவனை, எந்நாளும் எவ்விடத்தும் பொருது வெல்லுதல் யாவர்க்கும் எளிது.

Neither free from wrath, nor skilled in hiding a secret, a king falls an easy prey to the enemy. 4

865. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க்(கு) இனிது.

நீதி நூல்களைக் கற்றறியானாயினும், அவைகளில் கூறப்பட்ட தொழில்களைச் செய்யாதவனும், தனக்கு வரக்கூடிய பழியைப் பாராதவனும், நற்குண மில்லாதவனு முள்ளவனோடுகொண்ட பகையானது, பகைவர்க்கு மிகவும் இனிதாம்.

Unversed in wisdom's ways, scornful of their precepts, reckless of honour, a foolish sovereign becomes a veritable mockery to his scornful foes. 5

866. காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும்.

பகுத்தறிவு இல்லாமைக்குக் காரணமாகிய கோபத்தை யுடையனும், அளவற்ற காமத்தை யுடையனும் இருப்பவனது பகைமை, விரும்பிக் கொள்ளப்படும்.

The hatred of a prince, who is blind in his wrath and most licentious in his desires, delighteth his enemy. 6

867. கொடுத்துங் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை.

ஒரு தொழிலைத் தொடங்கி அதற்குத் தகாதவைகளைச் செய்பவனது பகைமையைச், சில பொருளைக் கொடுத்தாயினும் நிச்சயமாகக் கொள்ள வேண்டும்.

Behold a foolish prince who undertakes an enterprise but allow his efforts to run counter to his projected plans. His enemy, even at a price, welcomes such a one's hatred. 7

868. குணனிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்கு
இனனிலனாம் ஏமாப் புடைத்து.

ஒருவன் நற்குணமில்லாதவனாய்ப், பல குற்றங்களையும் உடையவனாயிருந்தால் அவன், பகைவர்க்குச் சிறந்த துணையாவான்.

Foes exult over a prince who is void of virtue, is a bundle of faults and is friendless. 8

869. செறுவார்க்குச் சேணிகவா இன்பம் அறிவிலா
அஞ்சும் பகைவர்ப் பெறின்.

நீதியை யறியாதவனாய், அச்சத்தையும் உடையவனாயின், அவனால் பகைவர்க்குச் சிறந்த இன்பங்கள் உண்டாகும்.

A timid and ignorant prince is an object of derisive laughter to his foes. 9

870. கல்லான் வெகுளுஞ் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லா(து) ஒளி.

நீதிநூலைக் கல்லாதவனோடு பகை கொள்ளுதலினால் எளிதில் வரும் பொருளை அடையாதவனை, எப்போதும் புகழ் அடையமாட்டாது.

Glory is not for the prince, who does not take advantage of a weak and ignorant foe. 10

அதிகாரம்—88

பகைத் திறந்தெரிதல்

THE NATURE OF ENMITY

பகையை ஆக்குதல், களைதல், நட்பாக்குதல் முதலியவற்றைத் தெரிந்து ஆராய்தல்.

871. பகையென்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற்(று) அன்று.

தீமையையே தரும் பகையென்னும் குணத்தை, விளையாட்டினிடத்தும் ஒருவன் விரும்பத்தக்கதன்று, என்று நீதிநூல் தெரிவிக்கும்.

Even in jest give no room to deadly hate. 1

872. வில்லேர் உழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

வில்லே, ஏர்க்கருவியாகவுடைய உழவரோடு (வீரருடன்) பகைகொண்டாலும் கொள்ளலாம்; சொல்லே ஏராகவுடைய உழவரோடு (அமைச்சரோடு) விரோதங் கொள்ளக் கூடாது.

Rather incur the hatred of a warrior with well-strung bows than incur the displeasure of the men of mighty words, for is not the pen mightier than the sword ? 2

873. ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன்.

தான் துணையில்லாதவனாயிருந்துகொண்டு, துணையோடு கூடிய பலரோடும் பகை கொள்வானாயின் அவன், பித்தங்கொண்டவரினும் அறிவற்றவனாவான்.

Worse than a mad man is a forlorn wretch who wilfully stands aloof and incurs the wrath of many. 3

874. பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளன்
தகைமைக்கண் தங்கிற்(று) உலகு.

அரசன், தனது பகைவரை வேண்டியபோது வேறுபடுத்திச் சிநேகமாகச் செய்துகொண்டு நடக்கும் குணமுடையவனா யிருந்தால், அவனது பெருமையுள் உலகம் அடங்கியிருக்கும்.

The whole world is under the sway of the prince, who takes the sting out of hate and turns the frowns of foes into smiles. 4

875. தன்துணை இன்றால்: பகைஇரண்டால்: தான்ஒருவன்
இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று.

தனக்கு உதவி செய்யக்கூடிய துணையுமில்லை; தன்னைப் பீடிக்கும் பகைவரோ! இருவர் ஆவர்; இவ்வாறு இருக்கையில், தனியனாகியதான், அப்பகைவர் இருவரில் ஒருவனைத் தனக்கு நட்பினனாக அக்காலத்துக்குரிய துணையாகும்படி கொள்ளவேண்டும்.

When alone, contend not against two foes at a time ; but make one of them your agreeable ally. 5

876. தேறினும் தேறா விடினும் அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல்.

அரசன், தனது பகைவனைத் தெளிந்திருந்தாலும், தெளியாதிருந்தாலும் தனக்கு வேறொரு தொழிலால் தாழ்வு வந்த இடத்து, அப் பகைவனைத் தன்னை விட்டு நீங்காமலும், தன்னொடு சேர்த்துக் கொள்ளாமலும் உதாசீனமாக இருக்கவேண்டும்.

Whether you trust your neighbour or not, when your fortune is at its lowest ebb, neither be a foe nor a friend but be a neutral. 6

877. நோவற்க நொந்த(து) அறியார்க்கு; மேவற்க
மென்மை பகைவர் அகத்து.

அரசன், தான் அடைந்த வருத்தத்தைத் தாமாகவே அறியாத சிநேகிதரிடத்தில் அதனைச் சொல்லாதிருக்க வேண்டும்; தனது வலியின்மையைப் பகைவரிடம் காட்டாதிருத்தல் வேண்டும்.

Reveal not thy sorrows to friends who cannot divine them: nor expose thy weaknesses to thy enemies. 7

878. வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு.

அரசன், தனக்குரிய தொழிலை முறைப்படி செய்து முடிக்கும் பொருட்டு, படை, பொருள் முதலியவற்றைப் பெருக்கி, மறதி வாரா வண்ணம் தன்னைக் காப்பாற்றிக் கொண்டால், அவனது பகைவரிடத்துள்ள களிப்பு கெட்டொழியும்.

Contrive well your plan, pool your resources, and carefully fortify yourself. The joy and pride of your enemy is at an end. 8

879. இளைதாக முள்மரங் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

களையவேண்டிய முள்ளையுடைய மரத்தை இளையதாக இருக்கும் பொழுதே களைந்துவிட வேண்டும்; அவ்வாறன்றி, அது முதிர்ந்துவிட்ட பிறகு, அதனைக் களையத் தொடங்கினால் களைவார் கையை, அது களைந்துவிடும்.

Weed out brambles and briers when young, lest they should grow into tangled bushes and bruise the hand that clears them. Nip in the bud the hatred of thine enemy, lest it should grow apace. 9

880. உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார்.

அரசர், தமது பகைவரது கர்வத்தை யொழிக்கவேண்டி யிருக்க, இகழ்ச்சியால் அதனைச் செய்யாது விட்டால், பின்னர் மூச்சு விடுவதற்குள் நிச்சயமாகத் தாமே அழிவர்.

They speedily dig their own graves who humble not the pride of the foe that defies them. 10

அதிகாரம்—89

உட்பகை

HIDDEN HATE

வெளிப்படையாயுள்ள பகைவர்க்கு, இடமுண்டாக்கிக் கொடுத்து அப்பகைவர் வெல்லுமளவும் நட்பாய் நிற்கும் பகை.

881. நிழல்நீரும் இன்னாத இன்னா; தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின்.

ஒருவனுக்கு இன்பந் செய்தற்குரிய நிழலும் நீரும் முன் இன்பத்தைச் செய்து பின் துன்ப (த்தைச் செய்வனவாயின்,)ந் தருவதாயின் அவை தீயனவாகக் கருதப்படும்; அதுபோல, தழுவிக்கொள்ளவேண்டிய சுற்றத்தார் குணங்களும் முன்பு இனியனவாயினும் பின்னர் துன்பந்தருமாயின் இன்னாதனவாகவே கருதப்படும்.

Shady groves and running brooks unwholesome prove, if they breed pestilence dire. Kinsmen true an abomination prove who lay snares and plot our ruin sure. 1

882. வாள்போல் பகைவரை அஞ்சற்க: அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

வாள் முதலிய கருவிகள்போல வெட்டுவோம் என்று எதிர்க்கும் பகைவர்க்கு அஞ்சவேண்டியதில்லை; ஆனால், எதிர்நில்லாது உறவினர்போல நடித்து, மறைந்துநின்று கொல்லக் கருதும் பகைவர் தொடர்புக்கு மிகவும் அஞ்ச வேண்டும்.

Brave the unsheathed sword of your vengeful foe; beware of the enemy who comes in the guise of a friend. 2

883. உட்பகை யஞ்சித்தற் காக்க; உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்.

உட்பகை யுடையவரைக் கண்டால், அவர்க்குப் பயந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்; ஏனெனில், தனக்கோர் தளர்ச்சி வந்தவிடத்து, அவர் குயவனது மட்கலத்தை அறுக்கும் கருவிபோலத் தவறாமல் கெடுத்து விடுவர்.

Guard yourself against traitors in your camp, lest their hidden poniards, in an evil hour, should cleave you in twain like the steel of the potter at his wheel. 3

884. மனம்மாணா உட்பகை தோன்றின் இனம்மாணா
ஏதம் பலவுந் தரும்.

வெளியில் நண்பனைப் போலத் தோன்றி, அகத்தில் பகைமை கொண்ட ஒருவன், அரசனுக்கு இருந்தால், அது, அவ்வரசனுக்குத் தன் சுற்றத்தார் வசப்படாமைக்குரிய பல குற்றங்களையுந் தரும்.

An enemy, who assumes the mask of friendship, creates discord among kith and kin and brings on a multitude of evils. 4

885. உறன்முறையான் உட்பகை தோன்றின் இறன்முறை-
ஏதம் பலவுந் தரும். [யான்

வெளிக்குச் சுற்றம்போலத் தோன்றி, அகத்தில் பகைமை கொண்ட ஒருவன், அரசனுக்கு உண்டாயின், அது அவ்வரசனுக்கு மரணத்தைத் தரும் குற்றம் பலவற்றையும் கொடுக்கும்.

Were a kinsmen to play the traitor, the king's life would be at stake and endless troubles would follow. 5

886. ஒன்றாமை ஒன்றியார் கண்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது.

பகைமை, அரசனுக்குத் தன் இனத்தாரிடத்து ஏற்படுமாயின், அவன் இறவாதிருத்தல் எந்நாளும் இல்லை.

Smouldering hate among kinsmen brings certain death to the sovereign. 6

887. செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி.

உட்பகையுள்ள குடியிலுள்ளோர், செப்பின் மூடி போல் புறத்தில் சேர்ந்திருப்பாராயினும், அகத்தில் பொருந்தி இரார்.

How the casket and the lid appear as one and yet they are never one! The house divided against itself appears as one yet it is never a harmonious whole. 7

888. அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை உற்ற குடி.

முன் வளர்ந்து வந்ததாயினும் உட்பகையுள்ள குடி, அரத்தினால் தேய்க்கப்பட்ட இரும்புபோல, வலிமை குறைந்தொழியும். (பொன்-கரும் பொன் = இரும்பு.)

Like a piece of iron that wears out before the keen edge of a file, a house, where hidden hate has its sway, crumbles into ruins. 8

889. எட்பக வன்ன சிறுமைத்தே யாயினும்
உட்பகை உள்ளதாங் கேடு.

அரசனது உட்பகை, எள்ளின் பிளவைப்போல மிகச் சிறியதா யிருப்பினும் அச்சிறுமை, அரசனது பெருமையையெல்லாம் ஒழித்துவிடும் கேட்டைத் தன்னிடத்தே யுடையதாம்.

Slight as the shred of a sesame seed as it is, hidden hatred brings utter ruin to the sovereign. 9

890. உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று.

மனப்பொருத்த மில்லாதவரோடு கூடி வாழும் வாழ்வு, ஒரு குடிசையினுள் பாம்போடு கூட வசித்தாற்போலும்!

Living with men of hidden hate, is like dwelling in a hut where a deadly cobra has its abode. 10

அதிகாரம்—90

பெரியாரைப் பிழையாமை

NOT OFFENDING THE GREAT

பெரியாரை அவமதித்து நடவாமை.

891. ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாந் தலை.

தாம் தொடங்கிய தொழில்கள் அனைத்தையும் நிறைவேற்ற வல்லாருடைய வல்லமைகளைக் குறித்து இகழாதிருத்தல், தமக்கு யாதொரு தீங்கும் வாராமற் காத்துக்கொள்பவருடைய காவல்களுள் சிறந்ததாம்.

Let thy prime care be not to offend the great, who can work their mighty will with wondrous art. 1

892. பெரியாரைப் பேணு(து) ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும்.

அரசன், மிகுந்த வலிமையுடைய பெரியவர்களிடத்து, நன்கு மதிப்பில்லாமல் அவமதிப்புடன் நடந்துகொண்டால், அப்பெரியவர்களாலேயே எப்பொழுதும் நீங்காத துன்பங்களை யடைவான்.

Insult to the great brings in its train irremediable ills. 2

893. கெடல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்
ஆற்று பவர்கண் இழுக்கு.

அரசன், தான் கேடு அடைய விரும்பினால், நீதிநூல் கூறும் முறைகளைத் தழுவாமல் வேற்றரசரை எளிதில் அழிக்கவல்ல அரசரிடத்து ஓர் பிழையைச் செய்யவேண்டும்.

Dost thou covet thy ruin ? Then be deaf to sage counsel and incur the wrath of the mighty ones who can humble you if they list. 3

894. கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல்.

மூவகை யாற்றலும் உடையவரிடம், அவ்வாற்றலில்லாதவர், தீயதொழில்களை முற்பட்டுச் செய்தல், தானே உயிரைக் கொண்டுபோக வரும் தன்மையனாகிய யமனைத், தன்னிடம் விரைந்து வரும்படி கைகாட்டி அழைப்பது போலாகும்.

A dwarf contending against a giant is like one courting death. 4

895. யாண்டுச்சென்(று) யாண்டும் உளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர்.

பகைவரை யழிக்கும் கொடிய வலிமையையுடைய அரசனாற் கோபிக்கப்பட்ட அரசர், அவனைவிட்டு நீங்கி எங்குப் போய் பிழைப்பர்? பிழையார்.

Where can men find shelter and refuge from the wrath of a cruel, mighty potentate, whom they have grievously offended? 5

896. எரியால் சுடப்படினும் உய்வுண்டாம்: உய்யார்
பெரியார் பிழைத்தொழுகு வார்.

காட்டிற் சென்ற ஒருவன், அங்குள்ள தீயினாற் சுடப்பட்டாலும், பரிகாரஞ் செய்தால் பிழைக்கக்கூடும்; தவத்திற் பெரியாரிடத்தில் பிழை செய்பவர் எவ்வழியாலும் பிழையார்.

There is escape from death, though scorched by the flaming fires of the forest. But can ever men escape the wild wrath of the men of might ? 6

897. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்
தகைமாண்ட தக்கார் செறின்.

சாபத்துக்கும் அனுக்கிரகத்துக்கும் காரணமாகிய பெருமை மிகுந்த தவத்தையுடைய முனிவர், அரசனைக் கோபிப்பாராயின், அவ்வரசனது அரசாட்சியும் பெருஞ் செல்வமும் விரைவில் அழியாதிரா.

All the glory and the fabulous wealth of a sovereign fade into nothingness before the frown of the sages, who dwell in the strength of their spirit. 7

898. குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து.

வெயில், மழை முதலியவற்றைப் பொறுத்தலும், சலியாமையுமுடைய மலைக்குச் சமானமான முனிவர், பிறரால் கோபமூட்டப்பட்டுச் சபித்தால், சிறந்த செல்வமுள்ளவரும் தமது குடியோடும் கெட்டொழிவர்.

The tornado of the fury of the sages, majestic as the hoary hills, shakes to the very foundation even the well-wrought fortune of a sovereign and sweeps him and his kinsmen away. 8

899. ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

காத்தற்கு அருமையான உயர்ந்த விரதங்களை யுடைய முனிவர், தமது ஆற்றலால் பிறரைக் கோபிக்கின், தேவராசனுகும் இந்திரனும் தன் பதவியை இழந்து கெடுவான்.

If men of stern austerities were to frown, even the king of the gods would tumble down from the summit of his glory. 9

900. இறந்தமைந்த சார்புடையார் ஆயினும் உய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின்.

ஆற்றலனைத்தையும் பெற்ற அருந்தவர் சினங்கொண்டு, பிறரைச் சபித்தால், அச்சினத்துக்குக் காரணமா யிருந்தவர், மிக்க வலியமைந்த துணையையுடையராயினும் அத்துணையால் சிறிதும் பயன் பெறுர்.

Though blessed with numberless allies, a sovereign perishes by the wrath of the men of severe penance. 10

அதிகாரம்—91

பெண்வழிச் சேறல்

SUBMISSION TO ONE'S WIFE

ஒருவன், தன் விருப்பத்தின் வழியே நடக்கவேண்டிய மனையாளது வழியில் தான் நடத்தல்.

901. மனைவிழைவார் மாண்பயன் எய்தார்: வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது.

காம இன்பங் காரணமாகத் தம் மனைவியை விரும்பி, அவள் சொல்லிய வழியிலே நடப்பவர், தமது இன்பத்துக்குக் காரணமாகிய அறத்தை யடையமாட்டார்; பொருளைத் தேடி யடைதற்கு முயல்பவர், அதற்கு இடையூறெனக் கருதி இகழும் பொருளும் அவ்வின்பமே யாம்.

Infatuation for a wedded wife beguiles a man from the path of virtue. Men of lofty designs shun it as a great evil. 1

902. பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும்.

ஒருவன், தனது ஆண்மையை விரும்பாமல், தன் மனைவியினது பெண்மையை விரும்பினால், அவனது செல்வம், இவ்வுலகத்திலுள்ள ஆண்பாலார்க்கெல்லாம் மிக்கதொரு வெட்கம் உண்டாகும்படி செய்து, அதன் வழியே தனக்கும் நாணத்தை உண்டாக்கும்.

Behold a wealthy man who dotes on his wife to distraction. His riches bring him nothing but mockery, and he is an object of derision. 2

903. இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும்.

ஒருவன், தனது மனையாளிடத்துத் தாழ்தற்குக் காரணமாகிய அச்சம், அவ்வச்சமில்லாத நல்லாரிடத்துச் செல்லும்போது, நாணத்தை அவனுக்குக் கொடுக்கும்.

The coward, who dreads his wife and humbles himself before her, is, to the wise, an object of eternal shame. 3

904. மனையாளை யஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்தல் இன்று.

ஒருவன், தனது மனைவிக்குப் பயந்து நடக்கின்றமையால் மறுமைப் பயனில்லாதவனாகிறான்; அவன், எதேனும் ஒரு தொழிலைச் செய்யத் தொடங்கினாலும், அதனை நல்லோர் கொண்டாடாமல் பழிப்பர்.

Behold the man who quails before his wife and is denied the prospect of heaven. Even his noble endeavours will be held in contempt. 4

905. இல்லாளை யஞ்சுவான் அஞ்சும் மற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல்.

தன் மனையாளுக்குப் பயந்து நடப்பவன், தானே தேடிய பொருளாயினும், அப்பொருளை நல்லவர் விஷயத்தில் உபயோகிப்பதற்கு எப்போதும் பயப்படுவான்.

A husband under the sway of his wife knows no charities. 5

906. இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்
அமையார்தோள் அஞ்சு பவர்.

வேய்போலுந் தோள்களையுடைய தம் இல்லாளுக்கு அஞ்சி நடப்பவர், தமது வீரத்தாலே சுவர்க்கமடையும் தேவர் போல, இவ்வுலகத்தில் வாழ்ந்தாலும் ஆண்மையிலராவர்.

Though they reign like gods on earth, they are cowards who are thralls to the beauteous limbs of their cruel, domineering shrews. 6

907. பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து.

நாணுஞ் சிறிதுமின்றித், தன் இல்லாளது ஏவற்றொழிலைச் செய்து திரிகின்ற ஒருவனது ஆண்மையைக் காட்டிலும், நாணத்தையே தனக்கு இயல்பாகவுடைய அவளது பெண் தன்மையே சிறந்ததாம்.

More graceful than the shamefaced manliness that obeys the behests of a wife, is the dignity of modest womanhood. 7

908. நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங்(கு) ஒழுகு பவர்.

தாம் விரும்பியபடி யல்லாமல், நல்ல நெற்றியையுடைய தமது மனைவியின் விருப்பத்தின் வழியே நடப்பவர், தமது நட்பினரது வேண்டுகோளை அவர் விரும்பியவாறு முடிக்கமாட்டார்; அதுவுமல்லாமல், தமது மறுமைக்குத் துணையாகிய அறத்தையும் செய்யமாட்டார்.

Those that are slaves to the beauteous brow of their dear ones aid not their friends in distress: nor do they do acts of kindness that lead to heaven. 8

909. அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்கண் இல்.

அறத்தைச் செய்தலும், அதனை முடித்தற்குக் காரணமாகிய பொருளைச் சேர்த்தலும், அவ்விரண்டினும் வேறாகிய இன்பச் செயல்களும், தம் மனையாள் ஏவல்படியே செய்பவர்க்கு இல்லை.

Neither virtue, nor wealth, nor joy dwells in him, who is tied to the apron-strings of his wife. 9

910. எண்சேர்ந்த நெஞ்சத்(து) இடன் உடையார்க்(கு) எஞ்ஞான்றும்
பெண் சேர்ந்(து) ஆம் பேதைமை இல்.

தமது கடமையைச் செய்யக் கருதும் மனத்தினையும், அதனாலாகிய செல்வத்தையும் உடையவர்களுக்குத் தம் மனையாளது விருப்பத்தின் வழியே யொழுகும் அறிவின்மை, எக்காலத்தும் உண்டாகாது.

They commit not the folly of doting on their wives who set their hearts on great projects and are favoured of fortune. 10

அதிகாரம்—92

வரைவின் மகளிர்

WANTON WOMEN

தம் நலத்தை ஆராயாமல் பொருளுக்காகத் தமது இன்பத்தை விற்கும் தன்மையையுடைய வரம்புகடந்த மகளிரது இயல்பு.

911. *அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்*
இன்சொல் இழுக்குத் தரும்.

ஒருவனை அன்புகாரணமாக விரும்பாமல், பொருள்காரணமாக விரும்பும் ஆய்ந்தணிந்த வளையையுடைய மகளிர், அப்பொருள் கைவருமளவும், அன்புகாரணமாகவே அவரைத் தாம் விரும்புவதாகப் பேசும் இனிய நயமான சொல், பின்னர், துன்பத்தை அவனுக்குக் கொடுக்கும்.

The alluring words of a deceitful concubine, with shining bracelets fair, who clasps you not for love but for gold, will cause you bitterness and sorrow. 1

912. *பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்*
நயன்தூக்கி நள்ளா விடல்.

ஒருவனுக்கு உள்ள பொருளை அளந்து அறிந்து, அது கிடைக்கும் வரையில் தமது குணத்தை நயமாகச் சொல்லும் குணமில்லாத பெண்டிரது நடத்தையை ஆராய்ந்து தெளிந்து, அவரோடு சேராமல் நீக்கிவிட வேண்டும்.

Keep aloof from wanton women who, for gold, fill your ears with honeyed words. 2

913. *பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்*
ஏதில் பிணம்தழீஇ அற்று.

பொருள் கொடுப்பவரை விரும்பாது, பொருளையே விரும்பும் பொது மாதரது, மனமொன்றாது பொய்யாகப் புணரும் புணர்ச்சி, பிணங்களைச் சுமந்து செல்வதனால் கிடைக்கும் ஊதியத்தைப் பெறுபவர், இருள் அடைந்த தொரு வீட்டில், செல்லுகையில், தாமெடுத்துச் சென்ற பிணம் தவறிக் கீழேவிழ, ஆங்குத் தம்மால் அறியப்படாத முன்னமே வீழ்ந்து கிடந்த ஓர் பிணத்தைத் தழுவி யெடுத்தலை யொக்கும்.

A greedy harlot, who embraces you, feels within herself like one clasping a strange corpse in a dark room. 3

914. *பொருட்பொருளார் புன்னலந் தோயார் அருட்பொருள்*
ஆயும் அறிவி னவர்.

அன்போடு கூடிய இன்பமாகிய பொருளை இகழ்ந்து, பொருளாகிய பொருளையே விரும்பும் மகளிரது அற்ப இன்பத்தை, அருளோடு கூடிய பொருளை ஆராய்ந்து தேடியடையும் அறிவையுடையவர் தீண்டமாட்டார் கள்.

Those who seek the grace of heaven defile not themselves with the touch of prostitutes. 4

915. பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதி நலத்தின்
மாண்ட அறிவி னவர்.

இயற்கையாகிய மதியின் நலத்தினால் மாட்சிமைப்பட்ட செயற்கை அறிவையுடையவர், பொருள் கொடுப்பவர் யாவரிடத்தும் கொண்ட பொது வாகியஆசையினையுடைய பொதுமாதரது அற்ப சுகத்தைத் தீண்டமாட்டார்.

They, who adorn their understanding with learning, fall not a prey to the overtures of harlots. 5

916. தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்.

ஆடல், பாடல், அழகு என்னும் இவைகளால் களித்துச் செருக்கித் தம் அற்ப சுகத்தை, விலை கொடுப்பவர். யாவரிடத்தும் பரவச் செய்யும் பொது மாதருடைய தோளை, அறிவு ஒழுக்கங்களாலாகிய தமது புகழை உலகத்தில் பரப்புதற்குரிய பெரியோர் சேரார்.

Men, aspiring to fame, turn away from the vile ones, who for gold sell themselves. 6

917. நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சின்
பேணிப் புணர்பவர் தோள்.

மனத்தினால் பிற பொருளை விரும்பி, அதைக் கொடுப்பவரை, அது காரணமாக மெய்யினால் தழுவும் பெண்டிரது தோள்களை, நிறையற்ற நெஞ்சமுடையார் சேர்வர்.

Only men of wanton ways yield to the charms of the treacherous ones, who are all smiles but false of heart. 7

918. ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கென்ப
மாய மகளிர் முயக்கு.

உருவத்தாலும், சொல்லினாலும், செயலினாலும் வஞ்சித்தலில் திறமை யுடைய பொதுமகளிரது புணர்ச்சியை, அவ்வஞ்சனையை ஆராய்ந்து அறி யும் அறிவுடையவரில்லாதவர், தம்மை வருத்திக் கொல்ல வருகின்ற ஒரு தெய்வமகளது (மோகினியது) புணர்ச்சியென்றே கருதவேண்டும்.

To those who are devoid of wisdom, the seductive charms of harlots will prove as fatal as those of the sirens of the woods. 8

919. வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு.

உயர்ந்தோர், இழிந்தோர் என்று நினையாது, விலை கொடுப்பவர் யாவரையும் கூடித் தழுவும் சிறந்த அணிகளையுடைய விலைமாதரது மெல்லிய தோள்கள், அக் குற்றங்களை அறியும் அறிவில்லாத கீழ்மக்கள் புகுந்து அழுந்தும் நரகமேயாம்.

Where is hell for degraded and abject souls but in the bedecked arms of the deceitful ones ? 9

920. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

ஒற்றுமையில்லாத இரண்டுபட்ட மனத்தையுடைய பொதுமகளிரும், கள்ளும், சூதும் ஆகிய இவை மூன்றும் திருமகளால் துறக்கப்பட்டவர்க்கு நட்புப் பொருள்களாம்.

Wanton women, drink and gambling become the delights of men, when fortune abandons them. 10

அதிகாரம்—93

கள்ளுண்ணாமை

AGAINST DRUNKENNESS

ஒழுக்கத்தையும் அறிவையும் அழித்தலில் வேசையரோடு ஒப்பதாகிய கள்ளையுண்ணாமை.

921. உட்கப் படாஅர் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார்.

கள்ளுண்டலையே தமக்கு மிகுந்த விருப்பத்தைத் தரும் தொழிலென்று கொண்டு ஒழுகுகின்ற அரசர், எப்போதும் பகைவரால் அஞ்சப்படார்; அதுவேயுமன்றி, அவ்வரசர், தாம் முன்பு பெற்றுள்ள புகழையும் இழந்துவிடுவர்.

A king who is a drunkard is not dreaded by his foes and the light of his glory fades away. 1

922. உண்ணற்க கள்ளை; உணில்உண்க சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார்.

அறிவுடையராயினோர், அவ்வறிவு கெடுதற்குக் காரணமாகிய கள்ளை உண்ணாதிருக்கக்கடவர்; நல்லோர் நம்மை நன்குமதிக்க வேண்டாமென்று கருதுபவர், அக்கள்ளை உட்கொள்ளலாம்.

Let no one take to drink, lest he should sink in the estimation of the worthy. 2

923. ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்; என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.

(ஒருவன்,) எந்தத் தீயசெயல்களைச் செய்தாலும் அவற்றைப்பொறுத்துக்கொண்டு மகிழும் தனது தாய்க்கு எதிரில், தன்மகன் கள்ளுண்டு களிப்பதைக் கண்டு, அத்தகைய தாயே வெறுப்படைந்து வருந்துவாளானால், யாதொரு குற்றத்தையும் பொறாத பெரியார்க்கு எதிரில், அவன் கள்ளுண்டு களிப்படைந்து நிற்றல் அவர்க்கு மிகுதியும் வெறுப்பைத் தரும் என்பதில் சந்தேகமென்ன?

The joy of a drunkard is sorrow even to a loving mother's forgiving heart. No wonder he is despised of men of sterner mould. 3

924. நாணென்னும் நல்லாள் புறங்கொடுக்கும், கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.

கள்ளுண்ணல் என்று சொல்லப்படுவதாய் யாவராலும் இகழத்தக்க பெருங் குற்றத்தைச் செய்பவரை, நாணமென்னும் நல்ல பெண், பார்ப்பதற்கும் அஞ்சி, அவர்க்கு எதிரில் நில்லாது நீங்குவாள்.

A man addicted to sinful drinking is dead to all sense of modesty and shame. 4

925. கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்.

ஒருவன், விலைப்பொருளைக் கொடுத்து, கள்ளுண்டலாலே தனக்குத் தானே மெய்ம்மறந்து விடுதலை விரும்பி அதனை ஏற்றுக்கொள்ளுதலுக்குக் காரணம், அவன் முன் செய்துள்ள பழ வினைக்குக் காரணமாகிய விவேக மில்லாமையேயன்றி வேறல்ல.

Folly makes a drunkard spend on drink and forget himself. 5

926. துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்; எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

உறங்கினவரும், இறந்தவரும் ஒருவருக்கொருவர் சமமாவர்; ஏனெனில், உறங்குங் காலத்தும் இறந்த காலத்தும் அறிவில்லாதிருக்கிறபடியால்: அதுபோல, கள்ளுண்பவரும், நஞ்சுண்பவரும் ஒருவர்க்கொருவர் சமமாவர்; கள்ளுண்ணுங் காலத்தும் நஞ்சுண்ணுங் காலத்தும் அறிவில்லாமையினால்.

Wine-bibbers and hemlock-drinkers are one, even as the sleeping and the dead are one. 6

927. உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்.

கள்ளைப் பிறரறியாமல் மறைத்துக் குடித்து அதனாலுண்டாகும் களிப்பினால் மனந்தளர்பவரை, அவ்வூரில் வாழும் அறிவுடையவர், அவரது கள்ளுண்ட தன்மையைக் குறிப்பினால் அறிந்து, எப்பொழுதும் பரிகாசஞ் செய்வார்.

Behold the man who drinks in silence and the dark, and drops down with drowsy eye-lids. Soon he is discovered and held up to scorn and ridicule. 7

928. களித்தறியேன் என்பது கைவிடுக; நெஞ்சத்(து)
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்.

ஒருவன், பிறர் அறியாமல் கள்ளைக் குடித்துவிட்டுக் கள்ளுண்ணாத காலத்தில், 'நான் கள்ளுண் டறியேன்' என்று தன்னை நன்கு மதித்துக் கூறுதலை அடியோடு விட்டுவிடக் கடவன்; ஏனெனில், அவ்வாறு கள்ளுண்டலைப் பிறர் அறிந்தால் தனக்குக் குற்றம் நேரிடுமே யென்று மனத்தில் ஒளித்திருக்கும் குற்றமும், முன்னைய குற்றத்தின் அளவைக் கடந்து அதிகமாக வெளிப்பட்டுத் தோன்றும்.

Let not a drunkard in his sober moments say 'I have never drunk,' for the moment he drinks, he betrays himself. 8

929. களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ அற்று.

கள்ளுண்டு களிப்புற்ற ஒருவனை நோக்கி, 'நீ இத்தொழிலைச் செய்தல் நியாயமல்ல' என்று மற்றொருவன் அதற்குரிய காரணங் காட்டித் தெளிவித்தல், தண்ணீர்க்குள் மூழ்கிக் கிடக்கின்ற ஒருவனை வேறொருவன் விளக்குக் கொண்டு தேடியறிதல் போலும்! (பயனிலதாகும்)

To reason a drunkard back to his senses is like lighting up a torch under water in search of a drowned man. 9

930. கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு.

கள்ளுண்பா னொருவன், தான் குடியாத சமயத்தில், கள்ளுண்டு அறிவிழந்து மயங்கி நிற்கும் மற்றொருவனைக் காணுங்கால், தான் அதனைக் குடித்த பொழுது அநுபவமாக அறிந்த தனது மயக்கத்தைக் கள்ளுண்ட பிறனைக் கண்ட போதாவது அறிந்து கொள்ளமாட்டானோ?

Cannot a drunkard, who, in his sober moments, observes another reeling under drink, picture to himself his own sad state and abandon it? 10

சூது

GAMBLING

அறம், பொருள், இன்பங்களுக்கு இடையூறாகிய சூதாட்டம்.

931. வேண்டற்க வென்றிடினும் சூதினை; வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

சூதாட்டத்தில், தான் பிறரை வெல்லும் திறமையுடையவனா யிருந்தாலும், சூதினை விரும்பாதிருக்க வேண்டும்; வென்றால் பொருளைப் பெறலாமே என்றால், அவ்வெற்றியால் கிடைத்த பொருளும், இரையால் மறைக்கப்பட்ட தூண்டில் இரும்பினை இரையெனக் கருதி மீன் விழுங்கித் துன்பமடைதல்போலத், தனக்குத் துன்பத்தைத் தரும்.

Gamble not even if success attends thee, for success, at a gaming table, is like the baited hook that the fish joyously clutch at. 1

932. ஒன்றெய்தி நூறிழுக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு.

அத்தூண்டில் இரும்புபோன்ற ஒரு பொருளை இலாபமாகப் பெற்றமையாலேயே இன்னும் அதிகமாகப் பொருளைப் பெறுதல் எளிதென்று கருதி, பின்னர் நூறு பொருள்களை இழந்து வறியராய்விடும் சூதாடுவோர்க்கும், அப்பொருளால் அறமும் இன்பமும் அடைந்து வாழும் மார்க்கம் உண்டாகுமோ? உண்டாகாது.

Can gamblers who stake a hundred but to gain one, ever dream of a life of bliss and joy? 2

933. உருளாயம் ஓவாது கூறின் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்.

அரசன், உருளும் கவற்றினால் கிடைத்த வரும்படியைப்பற்றி, மிகுதியாக அடிக்கடி சிறப்பித்துச் சொல்லிக்கொண்டு சூதாடுவானானால், அவன் சம்பாதித்த பொருளும், அவன் பொருள் வருவாயும் அவனை விட்டு நீங்கிப் பகைவரிடத்தே சேர்ந்துவிடும்.

Were a king to gamble always and take pride in it, all his wealth would pass into the hands of the enemy. 3

934. சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன்(று) இல்.

சூது, தன்னை விரும்பினவருக்கு, முன்னில்லாத துன்பங்கள் பலவற்றையுந் தந்து, அவரிடத்துள்ள புகழையும் கெடுத்துவிடும்; ஆதலால், அதுபோல வறுமையைக் கொடுக்கவல்லது வேறொன்றில்லை.

Griping poverty springs from nothing else than gambling. And gambling leads to endless woes and blights one's reputation. 4

935. கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார்.

முற்காலத்திலே, உடம்போடு கூடியிருந்தே பொருளில்லாதவராகிக் கெட்டழிந்தவர் யாவரெனில், சூதினையும், சூதாடும் இடத்தினையும் அஃதாடுதற்கு வேண்டும் கைத்தொழிலினையும் மேற்கொண்டு கைவிடாமற் பற்றிய அரசரேயாம்.

Many a monarch who has flourished of old has come to grief by frequenting the gambling hall and playing at dice even with skill. 5

936. அகடூஆரார் அல்லல் உழப்பர்சூ(து) என்னும்
முகடியால் மூடப்பட் டார்.

சூதென்று வேறு பெயரால் சொல்லப்படுகிற மூதேவியால் பிடிக்கப் பட்டவர், இம்மையிலே தம் வயிறு நிரம்ப உண்ணும்படி உணவு கிடைக்கவும் பெறார்; அதுவுமன்றி, மறுமையிலே நரகத் துன்பத்தையும் அனுபவிப்பர்.

Misfortune! thy name is gambling. Thou bringest all the pangs of poverty and the bitternesses of hell. 6

937. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

அரசன், அறம் பொருள் இன்பங்களுக்காக ஏற்படுத்திய காலத்தைச், சூதாட்டத்தால் கழிப்பானாயின், அக்காலக்கழிவு, நெடுநாளாய்ப் பரம்பரையாக வந்த அவன் செல்வத்தையும், நற்குணங்களையும் ஒழித்துவிடும்.

All the noble heritage and glory of a sovereign fade and wither when he fritters away his time at a gaming table. 7

938. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்து
அல்லல் உழப்பிக்குஞ் சூது.

சூது, தன்னைப் பழகினவனது பொருளைக் கெடுத்துப், பொய் சொல்லுதலையே விரதமாகக் கொள்ளும்படி செய்து, மனத்தில் நிகழ்கின்ற ஜீவகாருணியத்தைக் கெடுத்து, இவ்வாறாக அவனை இருமையிலும் துன்பத்துக்குள்ளாக்கும்.

Gambling ruins your fortune, corrupts your soul, leads you to falsehood, hardens your heart and lands you in misery. 8

939. உடைசெல்வம் ஊண்ஒளி கல்வியென் றைந்தும்
அடையாவாம் ஆயங் கொளின்.

அரசன், சூதாட்டத்தைத் தனக்குப் பொழுதுபோக்குந் தொழிலாக விரும்பிச் செய்வானாயின், கீர்த்தியும், கல்வியும், செல்வமும், ஊணும், உடையும் ஆகிய ஐந்தும் அவனை விட்டு நீங்கிவிடும்.

Glory, wealth, learning and even food and raiment are denied those who set their hearts on gambling. 9

940. இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்(று) உயிர்.

சூதாட்டத்தால், இம்மை மறுமைப் பயன்களை இழக்குந்தோறும் அதை நீக்க நினையாமல் அதனையே விரும்பும் சூதனைப் போல, உடம்பால் வாத முதலிய மூவகைத் துன்பங்களை அனுபவிக்குந் தோறும் அவ்வுடம்பினை நீக்க நினையாமல் அதனையே விரும்புந் தன்மையை யுடையது உயிர்.

(உவமை கவனிக்கத் தக்கது)

The thirst for gambling never dies out despite heavy losses. The clinging to life never wears out despite the ills of life. 10

அதிகாரம்—95

மருந்து

MEDICINE

பழவினையல்லாத மற்றை உணவு செயல்களால் வரும் நோய்களை மருந்தினால் தீர்க்கும் திறங்கூறல்.

941. மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று.

உணவும் செயல்களும் ஒருவனது தேக நிலைமைக்குத் தக்கபடி கொள்ளாமல் மிகுதியாகவாவது குறைவாகவாவது உபயோகப்படுத்தினால், மருத்துவ நூலோரால் வகுத்துக் கூறப்படும் வாதம், பித்தம், சிலேட்டுமம் ஆகிய மூன்றும் அவனுக்குத் துன்பத்தைத் தரும்.

Authorities on medicine hold that undue strain, and food, excessive or deficient, upset the three humours—flatulence, phlegm and bile of the body and bring about disease. 1

942. மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய(து)
அற்றது போற்றி உணின்.

ஒருவன், தான் உட்கொண்ட உணவு, சீரணமடைந்ததைக் குறிகளால் நன்றாய்த் தெளிய அறிந்து, அதற்குப் பின்பு உணவை உட்கொள்ளுவானாயின், அவனுடம்பிற்கு மருந்தென்று வேறொன்று வேண்டுவதில்லை,

Digest your food well; eat when you have a keen appetite. And you need no medicine. 2

943. அற்றால் அளவறிந்(து) உண்க; அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு.

ஒருவன், தான் உண்டது சீரணிக்கப் பெற்றால், அதன்பின்பு தான் உண்ணவேண்டிய உணவை, சீரணத்தின் அளவை அறிந்து அதற்குத் தக்கபடி உண்ணவேண்டும்; ஏனெனில் நல்வினைப் பயனாலன்றி அடைதற்கரிய இம்மனித சரீரத்தைப்பெற்றவன், நெடுங்காலம் அழியாதபடி அதனை உபயோகப்படுத்தும் வழி அதுவேயாதலால்.

Digest your food and eat with moderation. That is the way to prolong life. 3

944. அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

ஒருவன், தான் உண்ட உணவு நன்றாய் சீரணித்ததை அறிந்து, பின் மிகப் பசித்து உண்ணும்போது, மாறுகொள்ளாத உணவுகளை ஆராய்ந்தறிந்து உட்கொள்ள வேண்டும்.

Never fail to take wholesome food when you feel the pinch of hunger. 4

945. மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபா(டு) இல்லை உயிர்க்கு.

காலத்தாலும், வாத பித்த கபங்களாலும், பதார்த்தங்கள் ஒன்றோடொன்று கலப்பதனாலும் மாறுபாடில்லாத உணவுகளை அவாவிக்கொண்டு மிகுதியாக உண்ணாமல், நோய் உண்டாகாதபடி வேண்டிய அளவு உண்டால், அவ்வாறு உண்ணும் உயிர்க்குப் பிணிகளால் துன்பம் உண்டாகாது.

He is free from disease who eats with moderation what is agreeable to him. 5

946. இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்.

குறைவாக உண்ணுதலையே நல்லதென்றறிந்து அவ்வாறு உணவு கொள்பவனுக்கு இன்பம் நீங்காது நிற்பதுபோல, (இழிந்த பிராணிகள் பெரிய இரைகளை விழுங்குவதுபோல) மிகுதியாக உண்பவனிடம் நோய் எப்பொழுதும் நிலைத்திருக்கும்.

Temperance brings joy ; gluttony pain. 6

947. தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்.

தன் உடம்பின் நிலையையும், அதற்கேற்ற உணவையும், காலத்தையும் ஆராயாது, வேண்டிய உணவை வேண்டியதோர் காலத்து, வயிற்றுத்தீ (உதராக்கினி) அளவுக்கு அதிகமாக ஒருவன் உண்பானாயின், அவனிடத்து நோய்களும் அளவில்லாமல் வளரும்.

Numberless diseases prey on a glutton who eats beyond measure, ignorant of the laws of health. 7

948. *நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

வைத்தியன், நோயாளியினிடத்து உண்டாயிருக்கும் நோயை, அதன் அடையாளங்களால் இன்னதென்று துணிந்து, அந்நோய் உண்டான காரணத்தை ஆராய்ந்து, அதைத் தீர்க்கும் உபாயத்தை யறிந்து அதனைப் பிழைபடாமற் செய்யவேண்டும்.

Diagnose the disease, know the proper remedies and then skilfully treat it. 8

949. *உற்றான் அளவும் பிணியளவும் காலமும்*
கற்றான் கருதிச் செயல்.

ஆயுள் வேதத்தினைக் கற்ற வைத்தியன், வைத்தியஞ் செய்யும்போது, நோயாளியின் நிலையையும், நோயின் அளவையும், வைத்தியம் செய்தற் கேற்ற காலத்தையும், அந்நூலிற் கூறியபடி ஆராய்ந்து பார்த்து அவற்றிற் கூறியபடியே செய்யவேண்டும்.

Let the learned physician study the condition of the patient, the nature of the ailment, the seasons of the year and then commence his treatment. 9

950. *உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்(று)*
அப்பால்நாற் கூற்றே மருந்து.

வியாதிக்கு மருந்தாவது, அதனை அடைந்தவன், அதனைத் தீர்க்கும் வைத்தியன், அவனுக்குக் கருவியாகிய மருந்து, அதனைத் தவறாதபடி செய்பவன் என்று சொல்லப்பட்ட நான்கு பகுப்புடைய நான்கு திறத்தையுடையது.

The science of medicine deals with the patient, the physician, the medicine and the compounder. 10

3. ஒழிபியல்

மேற்கூறிய அரசியலிலும் அங்கவியலிலும் அடங்காதவற்றைப் பற்றிக் கூறும் இயல்.

அதிகாரம்—96

குடிமை

THE NOBILITY OF BIRTH

உயர்ந்த குடியில் பிறந்தவரது தன்மை.

951. இற்பிறந்தார் கண்ணல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு.

கருத்து, சொல், செயல் என்ற மூன்றும் மாறுபடாதிருத்தலாகிய செம்மைக் குணமும், பழி பாவங்களுக்கு அஞ்சுதலாகிய நாணமும் ஆகிய இவை ஒரு சேர உயர்குடிப் பிறந்தவரிடத்தல்லாமல் மற்றவரிடத்து இயற்கையாக உண்டாகா.

A nobility of bearing and a dread of what is sinful are inborn to men of noble lineage. 1

952. ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்.

உயர்குடியில் பிறந்தவர், தமக்குரிய தருமங்களை அனுஷ்டித்தலும், உண்மையே பேசுதலும், தகாதவற்றில் உள்ளம் ஒடுங்குதலாகிய நாணமும் ஆகிய இம்மூன்று விஷயங்களிலும் தவறுதிருத்தற்குத் தமது கல்வி யறிவொன்றே காரணமன்று, தமது குடிப்பிறப்பின் இயற்கையே காரணமாம்.

Men of birth never play false to their innate sense of modesty, their rectitude and their truthfulness. 2

953. நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு.

எக்காலத்தும் வேறுபடாத உயர்ந்த குடியிற் பிறந்தவர்க்கு, யாசகரைக் கண்டால் முகமலர்ச்சியும், உள்ள பொருளை ஒளிக்காமல் கொடுத்தலும், இனிய சொல்லைச்சொல்லுதலும், யாசகரை இகழாமையும் ஆகிய நான்கும் உரியவையாகும்.

Souls that have come of a noble race, possess a happy face, a liberal hand, a pleasant tongue and a sweet disposition. 3

954. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

பலகோடிப் பொருளைப் பெற்றாலும் உயர் குடியிற் பிறந்தவர், தம் ஒழுக்கம் குன்றும் செயல்களைச் செய்யமாட்டார்.

Men of noble traditions, even at the height of their fortune stoop not to unrighteous deeds. 4

955. வழங்குவ(து) உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரிதல் இன்று.

தொன்றுதொட்டு வருகின்ற குடியிலே பிறந்தவர், தாம் பிறர்க்குக் கொடுக்கும் பொருள் முன்னையளவினும் சுருங்கிய இடத்தும், தமது ஈகைக் குணத்தினின்றும் நீங்கார்.

Hearts that have sprung of a mighty line, never fail in their offices of tenderness even when fortune has forsaken them. 5

956. சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்தும்என் பார்.

குற்றமற்று வருகின்ற தம் குடியின் முறைமையோடு மாறுபடாமல் வாழக்கடவேம் என்று நினைத்து, அவ்வாறு வாழ்பவர், வறுமையடைந்த காலத்தும் வஞ்சனையைப் பொருந்தித் தகாத செயல்களைச் செய்யமாட்டார்.

Those who are jealous of the honour and renown of their house never practise deceit nor descend to ignoble deeds. 6

957. குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து.

உயர்குடியிற் பிறந்தாரிடத்தே யுண்டாகும் குற்றம், தான் சிறியதாயிருந்தாலும் ஆகாயத்தில் சந்திரனிடத்திலுள்ள களங்கம்போல உயர்ந்து வெளிப்பட்டுத் தோன்றும்.

Even as the dark spots on the face of the bright moon, that shines on high with resplendent beauty, fault in men of high birth, small speck as it is, looms large in the eyes of the world. 7

958. நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.

நல்ல குலத்தில் பிறந்தவனிடத்து, அன்பில்லாமை காணப்படுமாயின், அவன் பிறந்த குலத்தைப்பற்றி உலகத்தார் சந்தேகப்படுவர்.

The world will suspect the noble descent of him who is not generous of heart. 8

959. நிலத்தில் கிடந்தமை கால்காட்டும்: காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.

நிலத்தின் இயல்பை அதனிடத்தே உண்டாகிய முளை காட்டும்; அது போலக், குலத்தின் தன்மையை அக்குலத்தில் பிறந்தார் வாய்ச்சொல் விளக்கும்.

Sprouting plants mark the soil; words of wisdom reveal men of noble lineage. 9

960. நலம்வேண்டின் நாணுடைமைவேண்டும்: குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு.

ஒருவன் தனக்கு நலமுடைமையை விரும்புவானாயின் நாணுடைய வனுதலைக் கைக்கொள்ளவேண்டும்; குலமுடைமையை விரும்புவானாயின் வணங்கத் தக்கார் யாவரிடத்தும் தான் வணக்கத்தை விரும்புக.

Out of modesty doth spring one's greatness; out of one's reverence doth spring the undying renown of a house of ancient memory. 10

அதிகாரம்—97

மானம்

HONOUR

எப்போதும் தமது நிலையினின்று தாழாமையும், ஊழ்வலியால் தாழ்வு நேர்ந்ததாயின் உயிர் வாழாமையுமாம்.

961. இன்றி அமையாச் சிறப்பின வாயினும்
குன்ற வருப விடல்.

மிக அவசியமான சிறப்பைத் தருவனவாயினும் அவை, தம் குடிப் பிறப்புக்குத் தாழ்வுதரும் செயல்களாயின் ஒருவன் அவற்றைச் செய்யாது நீக்கிவிடவேண்டும்.

Rather go without the very things that nourish and sustain your life and die than lead a life of dishonour which brings disgrace to your home. 1

962. சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்.

தம் புகழையும் மானத்தையும் நிலை நிறுத்த விரும்புகின்றவர்கள், புகழை மேன்மேல் சேர்க்க நினைத்தபோதும் தம் குடிக்குத் தகுதியல்லாத தாழ்ந்த செயல்களைச் செய்யமாட்டார்.

Even in their thirst for fame, men who aspire to a life of glory with honour, never stain their hands with ignoble deeds. 2

963. பெருக்கத்து வேண்டும் பணிதல்: சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.

உயர்ந்த குடிப் பிறந்தார்க்கு நிறைந்த செல்வம் உண்டானபோது, எல்லாரிடத்தும் பணிவுடைமை வேண்டும்; சிறுமைக்குக் காரணமாகிய வறுமை உண்டான காலத்துப் பணியாதிருத்தல் வேண்டும்.

Let modesty adorn thy riches; let dignity crown thy poverty. 3

964. தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.

நற்குடியிற் பிறந்த மனிதர், தம்முடைய நிலைமை விட்டுத் தாழ்வு அடைந்தபோது, தலையைவிட்டு நீங்கிய மயிரினை ஒப்பாவர்.

Men of honour sink in inglorious obscurity when fallen from their high estate. Beautiful locks of hair, that were once the pride of the possessor, when they fall, lie neglected. 4

965. குன்றின் அனையாரும் குன்றுவர், குன்றுவ
குன்றி அனைய செயின்.

குடிப்பிறப்பால் மலைபோல உயர்ந்தவரும், தாம் தாழ்தற்கு ஏதுவாகிய செயல்களில் ஒரு குன்றிமணி அளவாயினும் செய்வாராயின் உடனே தாழ்ந்த நிலையை யடைவர்.

An ignoble deed, trifle as it is like a kunri seed, makes even men, majestic as a mountain, look small in the eyes of the world. 5

966. புகழ்இன்றால் புத்தேள்நாட் டுய்யாதால் என்மற்(று)
இகழ்வார்பின் சென்று நிலை.

ஒருவன், தனது மானத்தை விட்டுத் தன்னை அவமதிப்பவர் பின்னே போய் நிற்கும் நிலையானது, இவ்வுலகத்தில் அவனுக்குப் புகழையும் தராது; மறுமையில் தேவலோகத்தும் செலுத்தாது; இனி, அவனுக்கு அது செய்வது யாது. (மானத்தைக் கெடுப்பதன்றி வேறொன்றுமில்லை.)

Neither fame, nor honour, nor the sweet prospect of heaven awaits the man who fawns on one that reviles him. 6

967. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று.

தன்னை இகழ்பவர் பின்னே சென்று பொருள்பெற்று அதனால் ஒருவன் உயிர்வாழ்வதைப் பார்க்கினும், தந்நிலையிலேயே நின்று இறந்தான் என்று சொல்லப்படுதல் அவனுக்கு நல்லது.

Prefer death in poverty to a life of ignominy at the hands of a heartless villain who uses thee ill. 7

968. மருந்தோமற்(று) ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து.

உயர்குடிப் பிறந்தவன், தனக்கு உறுதியாகிய மானம் அழியும்படி நேர்ந்தபோது இறவாது, பயனில்லாத தனது உடம்பைக் காப்பாற்றுகின்ற வாழ்க்கையானது, அதன்பின் இறவாமலிருத்தற்கு மருந்தாகுமோ? (ஆகாது)

Can the life, that you fondly cling to even at the cost of your honour, make you escape the jaws of death? 8

969. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.

தன் மயிர்த் தொகுதியில் ஒருமயிர் நீங்கினாலும் தனது உயிரை விடுகின்ற கவரிமான் போன்ற இயல்புடையவர்கள், தம் உயிரை விடுவதால் மானம் நிலைக்குமென ஏற்படின் உயிரை விட்டு விடுவர்.

Like the kavarima of old which sickens and dies when bereft of even a single curl of hair, men of heroic mould, honour at stake, would rather die than live on earth. 9

970. இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழு(து) ஏத்தும் உலகு.

தமக்கு அவமானம் வந்தபோது அதனைப் பொறுத்துக் கொண்டு உயிர் வாழாமல், உயிரை விட்டு விடுகின்ற மானிகளின் புகழ் வடிவை உலகத்தார் எப்பொழுதும் வணங்கித் துதிப்பர்.

The world sings the glory and fame of the great ones who choose death to a life of dishonour. 10

அதிகாரம்—98

பெருமை

GREATNESS

நற்குணங்களால் மேன்மை பெற்றவரது தன்மை.

971. ஒளியொருவற் குள்ள வெறுக்கை; இளியொருவற்(கு)
அஃதிறந்து வாழ்தும் எனல்.

ஒருவனுக்கு மதிப்பாவது, செய்தற்கு அருமையானவற்றைச் செய்வேம் என்று கருதும் ஊக்கமிகுதியே; ஒருவனுக்கு அவமதிப்பாவது, அவ்வாறு நினைக்கும் மனவெழுச்சி யொழிந்து உயிர் வாழக் கடவேம் என்று நினைத்தல்.

The glory of life is in the titanic energy of the soul to achieve the impossible. The poverty of life is the poverty of the spirit which is content with a mere dung-hill existence. 1

972. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

எல்லா மக்கள் உயிர்களுக்கும் பிறப்பியல்பு ஒத்திருக்கும் என்றாலும், அவ்வுயிர்கள் செய்யும் தொழில் வேறுபாட்டினால் பெருமை சிறுமை எனப்பட்ட சிறப்பியல்புகள் ஒப்பாகமாட்டா.

All men are of woman-born and come naked into the world; but their actions vary and are a measure of their greatness or meanness. 2

973. மேலிருந்தும் மேல்அல்லார் மேலல்லர்; கீழிருந்தும்
கீழல்லார் கீழ்அல் லவர்.

செய்தற்கரியவற்றைச் செய்யாமையால் சிறியவராயினர், உயர்ந்த ஆசனத்திலிருந்தாலும் பெரியவராகார்; செய்தற்கரியவற்றைச் செய்தலால் மேம்பட்டவர், தாழ்ந்த வெற்றிடத்திலிருந்தாலும் கீழ்ப்பட்டவராகார்.

Birth never determines the nobility or littleness of a soul. 3

974. ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு.

கணவன் ஒருவனிடத்திலேயே செல்லும் மனத்தையுடைய பெண்டிர், கற்பில் வழுவாது தம்மைக் காத்துக்கொண்டு நடக்குமாறு போல, ஒருவன் நிறையினின்று தவறாது, தன்னைத் தான் காத்துக்கொண்டு நடப்பானாயின் அவனிடத்துப் பெருமைக்குணம் உண்டாம்.

Like a woman who jealously guards the rich jewel of her honour, be true to thyself. Therein lies greatness. 4

975. பெருமை உடையவர் ஆற்றுவார், ஆற்றின்
அருமை உடைய செயல்.

அவ்வாறு பெருமையை யுடையவர்கள், தாம் வறுமை அடைந்த காலத்தும் பிறரால் செய்தற்கரியவையாகிய தம் செயல்களை விடாமல் அவை செய்யும் வழியால் முடிவுபெறச் செய்ய வல்லவராவர்.

Greatness, in a laudable manner, achieves the impossible. 5

976. சிறியார் உணர்ச்சியுள் இல்லைப் பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு.

அத்தகைய பெரியோரை வழிபட்டு அவரது இயல்புகளை நாம் மேற்கொள்வோம் என்று நினைக்கிற எண்ணம், மற்றைச் சிறியோரின் மனத்தினிடத்து உண்டாகாது.

Little minds never reverence great souls. 6

977. இறப்பே புரிந்த தொழிற்றாம், சிறப்புந்தான்
சீர்அல் லவர்கண் படின்.

பெரியோர்க்கு அடக்கத்தை உண்டாக்குவதான குடிமை, செல்வம், கல்வி என்ற இவைகளினாலாகிய மேன்மையும், நற்குணமில்லாத சிறியா

ரிடத்துச் சேருமாயின் அடக்கத்தை உண்டாக்காமல் செருக்கை மிகுவிக்கும்.

The rank and riches of the base breed but insolence in them. 7

978. பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.

பெருமை யுடையார், செல்வம், கல்வி முதலிய சிறப்பு உண்டாகிய காலத்தும், கர்வங் கொள்ளாமல் அடங்கி நடப்பர்; சிறுமையுடையாரோ, குடிமை முதலிய சிறப்பு இல்லாதபோதிலும் தம்மைத்தாமே வியந்து பெருமை பாராட்டுவர்.

Greatness is all humility and knows no haughtiness. Littleness is all insolence and is ever puffed up with pride. 8

979. பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்.

ஒருவர்க்குப் பெருமைக் குணமாவது, கர்வப்படுதற்குக் காரணம் மிகுதியாக உண்டாகிய விடத்தும், அது இயல்பாதலை யறிந்து, செருக்கில்லாதிருத்தலாம்; சிறுமைக்குணமாவது, காரணம் இல்லாதபோதிலும் அளவு கடந்து கர்வங்கொள்ளுதல்.

Greatness is free from pride ; meanness is rooted in insolence. 9

980. அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

பெருமையுடையார், பிறரது குணத்தை யெடுத்துச் சொல்லிக், குற்றத்தை மறைத்து விடுவர்; சிறுமையுடையவரோ! பிறர் குணத்தை மறைத்து, அவரது குற்றத்தைச் சொல்லுவர்.

Greatness is all praise ; littleness is all scandal. 10

அதிகாரம்—99

சான்றாண்மை

PERFECTION

ஒருவனிடத்துப் பல குணங்களும் நிறைந்திருக்க, அவன் அவற்றை ஆளுந்தன்மை.

981. கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

நமக்குத் தக்கது இது என்று அறிந்து, உயர்வாகிய குணத்தை மேற்கொள்பவர்க்கு, நல்ல குணங்களெல்லாம் பிறரறிவியாமலே இயல்பாக அவரிடத்து இருக்குமென்று நூலோர் சொல்லுவர்.

Conscious of the high values of life, the perfect ones are affined to all that is noble and beautiful. 1

982. குணநலம் சான்றோர் நலனே ; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉம் அன்று.

சான்றோர்க்கு நலமாவது, குணங்களாலாகிய நன்மையே; அது நீங்கிய மற்றைக் கைகால் முதலிய உறுப்புக்களினுலாகிய நலம் ஒரு நலத்திலும் சேர்ந்ததாகாது.

Wherein lies the perfection of the spotless ones but in their character ? Nothing else delights them. 2

983. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

சுற்றத்தாரிடத்து மாத்திரமேயன்றிப் பிறர் மேலும் உண்டாகிய அன்பும், பழி பாவங்களில் நாணுதலும், யாவர்க்கும் உபகாரஞ் செய்தலும், பழகியவரிடத்துத் தாட்சிணியப்படுதலும், எவ்விடத்திலும் உண்மை கூறுதலும் ஆகிய ஐந்தும் சால்பு என்னும் பாரத்தைச் சுமக்கும் தூண்களாம்.

On the stately pillars of affection, dread of sin, benevolence, benignity and truth is raised the noble edifice of character. 3

984. கொல்லா நலத்தது நோன்மை ; பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

தவத்திற்குக் கொல்லா அறம் சிறந்ததுபோலச் சால்பிற்குப், பிறர் குற்றம் சொல்லாத குணம், சிறந்ததாகும்.

Penance kills not ; nobility scandals not. 4

985. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் ; அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.

ஒரு காரியத்தைச் செய்து முடிப்பவர்க்கு வலிமையாவது, அக்காரியத்துக்குத் துணையாவாரைப் பணிந்து தம்மோடு சேர்த்துக்கொள்ளுதல்; இனி சால்புடையவர்க்குத் தமது பகைவரது பகையை யொழிக்கச் சாதனமாயிருப்பதும் அப்பணிவேயாம்.

The strength of the noble ones lies in the humility that wins the hearts of the allies and disarms the foes. 5

986. சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி
துலை அல்லார் கண்ணும் கொளல்.

சால்பாகிய பொன்னின் மாற்றை யறிதற்கு உரை கல்லாகிய செயல் எதுவென்றால், தம்மினும் உயர்ந்தாரிடத்துக் கொள்ளும் தோல்வியைத் தமக்குத் தாழ்ந்தவரிடத்தும் கொள்ளுதலாம்.

What is the touchstone that measures the nobility of a soul? It is the reverential homage paid to the worth of even the humble and the low. 6

987. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

சால்புடையவர், தமக்குத் துன்பந் தருவனவற்றைச் செய்தவர்க்கும் இன்பந் தருபவைகளையே செய்யாவிட்டால், அவரிடத்துள்ள அச்சால்பானது வேறு என்ன பயனையுடையது ?

Of what avail is perfection of virtue if it repays not with kindness acts of injury done? 7

988. இன்மை ஒருவர்க்(கு) இளிவன்று, சால்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.

சால்பு என்று சொல்லப்படும் வலிமை, ஒருவர்க்கு உண்டாகப்பெற்றால், அவர்க்கு வறுமையானது இழிவை உண்டாக்குவதாகாது.

Poverty is no disgrace to the high-souled ones. 8

989. ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)
ஆழி யெனப்படு வார்.

சால்புடைமையாகிய கடலுக்குக் கரைபோன்றவராயினும் கடல், சில காலத்தில் கரைகடந்து நிற்கும்; சால்புடையாரோ! காலம் வேறுபட்டாலும் தாம் தம் நிலையினின்றும் மாறுபடார்.

They are the summits of honour and the sea of glory who stand steadfast as a rock even in the wild welter of a cyclic deluge. 9

990. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலம்தான்
தாங்காது மன்னோ பொறை.

பல குணங்களாலும் நிறைந்த பெரியோர், தமது சான்றாண்மைக் குணத்தினின்றும் குறைவாராயின் பெரிய பூமியானது தம் பாரத்தைத் தாங்கமாட்டாததாய் முடியும்.

Even patient mother-earth would groan were the perfect ones to fall from virtue. 10

அதிகாரம்—100

பண்புடைமை

COURTESY

உலக இயல்புகளை யறிந்து அவற்றிற்கு ஒத்து நடத்தல்.

991. எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

குணங்களால் நிறைந்து யாவரும் நெருங்கித் தம்மிடம் சேர்தற்குத் தக்கபடி எளியராயுமிருத்தலால், அரியதாகிய பண்புடைமை என்று சொல்லப்படுகின்ற நல்வழியை அடைதல் எளிதென்று அறிஞர் கூறுவர்.

Out of affability doth spring courtesy. 1

992. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

பிறர்மேல் அன்புடையனாதலும், உலகத்தோடு ஒத்துவருகின்ற குடியிற் பிறத்தலும் ஆகிய இரண்டும், ஒருவனுக்குப் பண்புடைமை யென்று உலகத்தார் சொல்லும் நல்வழியாகும்.

Courtesy cometh of kindness and good-breeding. 2

993. உறுப்பொத்தல் மக்களொப் பன்றால்; வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.

உடம்பால் ஒத்திருத்தல், ஒருவனுக்கு நன்மக்களோடு ஒத்திருக்க முடியாததலால், பண்பினால் ஒத்திருத்தலே பொருந்துவதாகிய ஒப்பாகும்.

True affinity is not in mere lineaments but in the harmony of the souls within. 3

994. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.

நீதியையும் அறத்தையும் விரும்புதலால், பிறர்க்கும் தமக்கும் பயன் படுதலுடையவரது குணத்தினை, உலகத்தவர் கொண்டாடுவர்.

Behold the man who delights in virtue and charity. His character compels the admiration of the world. 4

995. நகையுள்ளும் இன்னா(து) இகழ்ச்சி ; பகைஉள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

தன்னை இகழ்ந்து பேசுதல் ஒருவனுக்கு விளையாட்டிலும் துன்பந் தருவதாகும் ; ஆகையால் பிறருடைய இயல்புகளை அறிந்து நடப்பவரி

டத்தே, பகைமையுள்ளபோதும் இகழ்தலென்பது உண்டாகாமல் இனிமையான குணங்களே விளங்கும்.

Taunting even in jest pains. Therefore men who are the soul of courtesy are not discourteous to their foes. 5

996. பண்புடையார்ப் பட்டுண் டுலகம்; அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

உலகியலானது பண்புடையாரிடத்தே தங்கியிருத்தலால், எந்நாளும் நடைபெறுகின்றது; அவ்வாறு தங்குதல் இல்லையாயின், அவ்வுலகவியல் மண்ணிலே புகுந்து மாய்ந்தொழியும்.

The harmony of the world rests on the blessed souls that walk on earth. But for them, it would have been a mere heap of dust and ashes. 6

997. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கள்பண் பில்லா தவர்.

நன்மக்கட்கே உரிய பண்பு என்னும் குணமில்லாதவர், அரத்தின் கூர்மையைப்போன்ற கூர்மையாகிய அறிவையுடையரே ஆயினும், ஓரறிவினையுடைய மரத்தை யொப்பவராவர்.

Even men of acute intellect are but mere wood, if they lack courtesy divine. 7

998. நண்பாற்றார் ஆகி நயம்இல செய்வார்க்கும்
பண்பாற்றார் ஆதல் கடை.

தம்மோடு நட்பினைச் செய்யாதவராகிப் பகைமையைச் செய்பவரிடத்தும் தாம் பண்பு உடையராய் ஒழுகாமை அறிவுடையார்க்கு இழுக்காகும்.

It is a blot on the wise to fail in courtesy even to those who blaspheme them. 8

999. நகல்வல்லர் அல்லார்க்கு மாஇரு ஞாலம்
பகலும்பால் பட்டன்(று) இருள்.

யாவரோடும் கலந்து மனத்தில் மகிழ்ச்சியடையும் திறமை யில்லாதவர்க்கு, மிகப் பெரிய பூமியானது, இருளில்லாத பகற்காலத்திலும் இருளினிடத்துக் கிடந்ததாகும்.

Even the sun-lit day doth look dark, dreary and dim to them who know not the sweet charm of a hearty smile. 9

1000. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று.

பண்பில்லாதவன் முற்பிறப்பில் செய்திருந்த நல்வினையால், இப்பிறப்பிலே பெருஞ் செல்வத்தை யடைந்திருந்தும், அது ஒருவர்க்கும் பயன்படாமல் கெடும். அவ்வாறு கெடுதல், நல்ல பசுவின் பால் அது வைக்கப்பட்ட பாத்திரத்தின் குற்றத்தால் இன்சுவையை யுடையதாகாமல் கெட்டுப்போவது போலும்.

Like nectar milk soured and spoilt when poured in a filthy vessel, are the unsunned heaps of a churlish miser. 10

அதிகாரம்—101

நன்றியில் செல்வம்

PROFITLESS RICHES

சம்பாதித்தவருக்கும் பிறர்க்கும் பயன்படுதலில்லாத செல்வத்தின் இயல்பு.

1001. வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் ; செயக்கிடந்த(து) இல்.

தன்வீடு நிறைதற்குக் காரணமாகிய மிக்க பொருளைச் சம்பாதித்துச் சேர்த்து வைத்து, உலோப குணத்தால் அப்பொருளை அனுபவியாதவன், உயிரோடிருப்பினும் செத்தவனே யாவன் ; ஏனெனில் பொருள் விஷயத்தில் அவனாற் செய்யக்கூடிய உரிமை யாதுமில்லை.

A rich miser, who enjoys not his hoarded wealth, is one among the dead ; for no benefit comes of him. 1

1002. பொருளான்ஆம் எல்லாம் என்(று) ஈயாது இவறும்
மருளான்ஆம் மாணாப் பிறப்பு.

பொருளொன்று இருக்குமாகில், அதனால் எல்லா இன்பங்களும் உண்டாம் என்று அறிந்து, அதனைச் சம்பாதித்து வைத்துப் பின்பு பிறர்க்குக் கொடாது, அதனிடத்துப் பற்று வைக்கும் மயக்கத்தினால், ஒருவனுக்குப் பசியினால் வருந்தத்தக்க பேய்ப்பிறவி யுண்டாகும்.

Behold a niggard who, in pursuit of gold as an end in itself, is oblivious of all the blessings that flow from it. He will be a demon born. 2

1003. ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை.

பிறரைக்காட்டிலும் நாம் மிகுதியாகச் சம்பாதிப்போம் என்று நினைத்துப் பொருள் தேடுதலையே விரும்பி, அதன் பயனாகிய புகழை விரும்பாத மனிதருடைய பிறவி, பூமிக்குப் பாரமே யன்றி வேறில்லை.

He is a burden unto the earth whose greed for wealth blinds him to fame. 3

1004. எச்சம் என்(று)என்எண்ணும் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன்.

ஒரு பொருளையும் கொடுத்தறியாமையால், ஒருவராலும் விரும்பப்படாதவன், தான் இறந்தபின் இவ்வுலகத்தில் எஞ்சியிருப்பதாக எதை நினைப்பானோ ! தெரியவில்லை.

Abandoned of men and with no fame, what does a loveless miser hope to carry with him when he is dead ? 4

1005. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்(கு) அடுக்கிய
கோடி உண் டாயினும் இல்.

பிறர்க்குக் கொடுத்தலும் தான் அனுபவித்தலும் ஆகிய இரண்டு செய்கையும் இல்லாதவர்க்குப், பலகோடிப் பொருள் இருந்தாலும் அதனால் ஒரு பயனும் இல்லை.

Profitless are the accumulated millions of a miser who knows neither charity nor happiness. 5

1006. ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன்(று)
ஈதல் இயல்பிலா தான்.

தானும் அனுபவியாது, தக்கவர்க்கு அவர் வேண்டியதொரு பொருளைக் கொடுத்தலாகிய தன்மையும் இல்லாதவன், அவ்விரண்டும் செய்தற்கு இடனாகிய பெருஞ் செல்வத்திற்குத் தான் ஒரு நோயாவான்.

He, whose wealth is neither for himself, nor for others but who merely hoards and guards, drinks the cup of misery. 6

1007. அற்றார்க்(கு) ஒன் றாற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று.

வறியவர்க்கு, அவர் வேண்டிய தொன்றைக் கொடாதவனது செல்வம் வீணாகுதல், உருவத்திலும் குணத்திலும் சிறந்தவளாகிய ஒரு பெண், தன்னை ஒருவர்க்குக் கொடுப்பாரில்லாமையினால் கணவனைப் பெறாமல் தனியேயிருந்து மூப்படைந்தது போலும் !

Wealth in the hands of a miser, who is dead to charity, is like the fading bloom on the cheeks of a fair, lonely one. 7

1008. நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று.

வறியவர்க்கு அருகில் இருப்பவனுயிருந்தும் கொடுக்கும் குணமில்லா மையால் அவரால் விரும்பப்படாத ஒருவன், செல்வத்தை யடைவது, ஊர் நடுவிலே நிற்பதொரு நச்சுமரம் பழுத்தாற்போலும் !

The riches of a churlish miser are like the fruits of a poisonous tree in the heart of a viliage. 8

1009. அன்பொரீஇத் தற்செற்(று) அறம்நோக்கா தீட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்.

உலோபகுணத்தால் சுற்றத்தாரிடத்தில் அன்பில்லாதவனுய், தன்னை யும் அனுபவமில்லாமல் வருத்தி, வறியவர்க்குக் கொடுத்தல் முதலிய அறத் தைச் செய்யவும் நினையாமல், சம்பாதித்த நல்ல பொருளைக், கொண்டுபோய் அநுபவிப்பவர், அயலாராவர்.

Only strangers will inherit the riches of a heartless miser who knows neither love nor righteousness nor joy. 9

1010. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து.

புகழோடுகூடிய செல்வத்தினை யுடையவர், சிறிது காலம் வறுமை யடைந்திருத்தல், உலகத்தையெல்லாம் நிலைநிறுத்துகிற மேகம் சிறிது காலம் பெய்யாமல் வற்றியிருத்தலைப் போலும்.

Behold a rich and generous heart enduring poverty for a while only to blossom into munificence again. It is like unto a heavy-laden cloud that empties itself on a parched-up land below, only to suck up fresh waters from the deep. 10

அதிகாரம்—102

நாணுடைமை

TRUE MODESTY

சால்பு, பண்பு முதலிய குணங்களாலுயர்ந்தவர், தமக்குத் தகாத காரி யங்களில் நாணுதலுடையராந் தன்மை.

1011. கருமத்தால் நாணுதல் நாணுத், திருநுதல்
நல்லவர் நாணுப் பிற.

நன்மக்களுடைய நாணுவது, இழிந்த செயல் காரணமாக உள்ளம் ஒடுங்குதல் ; மனம், மொழி, மெய்களின் ஒடுக்கத்தால் வரும் நாணங்கள் அழகிய நெற்றியையுடைய குலமகளிரின் நாணங்களாகும்.

True modesty blushes at unworthy deeds. All other modesty is of the bright-browed women, womanly. 1

1012. ஊண்உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல :
நாண்உடைமை மாந்தர் சிறப்பு.

உணவு, ஆடை அவை யொழிந்தனவும் மக்கள் உயிர்க்கெல்லாம் பொதுவாகும் ; நன்மக்கட்குச் சிறப்புத்தருவது நாணமுடைமையே; உணவு முதலியன அல்ல.

Such things as food and raiment are common unto the human race. But it is modesty that marks off the worthy from the common multitude. 2

1013. ஊனைக் குறித்த உயிர்எல்லாம்; நாண் என்னும்
நன்மை குறித்தது சால்பு.

எல்லா உயிர்களும் உடம்பைத் தமக்கு இருப்பிடமாகக் கொண்டு அதனை விடாவாம்; அதுபோலச் சால்பு என்னும் நிறைகுணம், நாண் என்ற நற்குணத்தைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்டு, அதனை விடாது.

Where does life throb but in her fleshy abode ? Where does perfection shine but in modesty ? 3

1014. அணிஅன்றோ நாணுடைமை சான்றோர்க்(கு) அஃதின்
பிணிஅன்றோ பீடு நடை. [றேல்

சான்றோர்க்கு நாண் உடைமை சிறந்த ஆபரணமாம் ; அவ்வாபரணம் இல்லாமற்போனால் அவரது பெருமிதத்தோடு கூடிய நடை, கண்டவர்க்கு நோயாம்.

Modesty is the ornament of the wise ; but the impudence that struts with a proud gait is piteous to behold. 4

1015. பிறர்பழியும் தம்பழியும் நாணுவார், நாணுக்(கு)
உறைபதி என்னும் உலகு.

பிறர்க்கு வரும் பழியையும், தமக்கு வரும் பழியையும் ஒரு சமமாகக் கருதி நாணங் கொள்பவரை, உலகத்தார் நாணத்திற்கு இருப்பிடமென்று கூறுவர்.

True modesty has for her home the hearts of those who feel for other's guilt as for their own. 5

1016. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்.

உயர்ந்தோர், தமக்குக் காவலாக நாணத்தைக் கொள்வரே யல்லாமல், பெரிய பூமியை வேலியாகக் கொள்ளார்.

In blessed modesty the worthy find a tower of strength. For such a rare jewel, they hold the world well lost. 6

1017. நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர்.

நாணின் சிறப்பை யறிந்து அதனைவிடாது மேற்கொள்பவர், நாண் உயிர் என்ற இரண்டனுள் ஏதாவது ஒன்றைமாத்திரம் கொள்ள நேர்ந்த விடத்து, நாண் சிதையாமலிருக்கும் பொருட்டுத் தம்முயிரையே விட்டுவிடுவர். உயிரை வைத்துக்கொள்ளும்பொருட்டு நாணத்தைக் கைவிடார்.

The noble would rather die than lead a life of shame; they would rather retain their modesty than piteously cling to life. 7

1018. பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்க துடைத்து.

கேட்டாரும் கண்டாரும் நாணத்தக்க பழியை, ஒருவன் நாணாது செய்வானாயின், அந்நாணாமை, அவனைத் தருமத்தினின்று நீக்கத்தக்க குற்றத்தினை யுடையதாம்.

He falls from virtue who is guilty of acts others blush at. 8

1019. குலம்சுடும் கொள்கை பிழைப்பின்; நலம்சுடும்
நாண்இன்மை நின்றக் கடை.

ஒழுக்கந் தவறுமாயின் அது, ஒருவனது குடிப்பிறப்பு ஒன்றை மாத்திரம் கெடுக்கும். நாணில்லாமையோ, அவனது பிறப்பு, கல்வி, குணம், செயல் முதலிய எல்லாவற்றையும் கெடுக்கும்.

Lack of decorum disgraces a home; lack of modesty taints a soul. 9

1020. நாண்அகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று.

தம் மனத்தில் நாணில்லாத மக்கள் உயிருடையார்போன்று சஞ்சரிக்கின்ற தன்மை, மரத்தினால் செய்த பாவை, இயந்திரக் கயிற்றினாலாகிய தன் சஞ்சாரத்தினால் உயிருடையதாக மயக்கினாற் போலும்!

Dead to modesty, the shameless ones tread on earth like marionettes set to life by strings pulled from behind the screen. 10

அதிகாரம்—103

குடிசெயல்வகை

ADDING TO THE GLORY OF THE FAMILY

ஒருவன், தான் பிறந்த குடியை மேம்படச்செய்யும் விதம்.

1021. கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடைய(து) இல்.

தன் குடியை மேம்படச் செய்யும் பொருட்டுத் தொடங்கிய காரியம் முடியாமையால், 'அக்காரியத்தை நான் கைவிடமாட்டேன்' என்கிற முயற்சியின் பெருமைபோல மேம்பாடுடைய பெருமை ஒருவனுக்கு வேறில்லை.

Nothing brings greater renown to man than his untiring zeal to add to the glory of his house. 1

1022. ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி.

முயற்சியும் நிறைந்த அறிவும் ஆகிய இரண்டினையுமுடைய ஓய்வில்லாத கருமச் செயலால், ஒருவன் பிறந்த குடி உயர்வை அடையும்.

Effort manly and wisdom ripe exalt a home. 2

1023. குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.

'என் குடியை உயரச் செய்யக் கடவேன்' என்று கருதி, அதற்கேற்ற காரியங்களில் முயல்கின்ற ஒருவனுக்குத், தெய்வமானது தனது ஆடையை இறுகக் கட்டிக்கொண்டு உதவிசெய்ய முற்பட்டு நிற்கும்.

Even gods will gird up their loins to share the toil of those who raise the fortune of their family. 3

1024. சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழா(து) உஞற்று பவர்க்கு.

தாம் பிறந்த குடி உயர்வதற்குக் காரணமாகிய வினையை விரைவாகச் செய்ய முயல்பவருக்கு அதனை முடிக்கும் திறம் ஆலோசிக்க வேண்டாமல் தானே உண்டாகும்.

Success, of its own accord, attends those who caselessly toil for the renown of their race. 4

1025. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

அறம், நீதி ஆகிய இவற்றுக்கு விரோதமான செயல்களைச் செய்யாதவனாய்த் தன் குடியை உயரச்செய்து வாழ்வானை, தமக்குச் சுற்றமாக விரும்பி உலகத்தார் தாமே சென்று அவனைச் சூழ்வர்.

The whole world claims the kinship of the perfect ones, who, with unsullied hands, glorify the home of their fathers. 5

1026. நல்ஆண்மை என்ப(து) ஒருவர்க்குத் தான்பிறந்த
இல்ஆண்மை ஆக்கிக் கொளல்.

ஒருவனுக்கு நல்ல ஆண்மை யென்று சொல்லப்படுவது யாதெனில், தான் பிறந்த குடியை ஆளுந்தன்மையைத் தனக்கு உண்டாக்கிக் கொள்ளுதலாம்.

True manliness is in elevating the dignity of your home. 6

1027. அமர்அகத்து வன்கண்ணர் போலத் தமர்அகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை.

போர்க்களத்தினிடத்தில் பலர் சென்றாராயினும், போரைத் தாங்கும் வலிமை, சுத்த வீரரிடத்தானாற்போல, ஒரு குடியிற் பிறந்தவர், அக்குடியின் பாரத்தைப் பொறுத்தல், பொறுக்கத்தக்க வல்லமையுடையா ரிடத்ததே யாம்.

The brunt of the attack falls heaviest on the chosen few of the field. The burden of the family falls heaviest on the strong one of the house. 7

1028. குடிசெய்வார்க்(கு) இல்லைப் பருவம் ; மடிசெய்து
மானம் கருதக் கெடும்.

குடியினை உயரச்செய்பவர், அச்செயலை நோக்காது காலத்தை நோக்கிக்கொண்டு சோம்பலாயிருந்து, மானத்தையும் கருதினால் அவரது குடி கெட்டுப்போம் ; ஆதலால் அவர்க்குக் கால நியதி யில்லை.

Indolence and false dignity bring destruction to a family. Strive, strive, through storm and sudshine, to exalt its fame. 8

1029. இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு.

மூவகைத் துன்பங்களும் தன் குடியை அடையாமல் காக்க முயல்பவனுடைய உடம்பு, அம்முயற்சித் துன்பத்திற்கே பாத்திரந்தானோ ? (இன்பத்திற்கு இருப்பிடமாத வில்லையோ ?)

Is it not for shielding our home against the ills of the world that our body has become the vessel of strifes and sorrows ? 9

1030. இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி.

தான் விழும்போது நெருங்கித் தாங்கவல்ல நல்ல ஆண்மகன் பிறவாத குடியாகிய மரம், துன்பமாகிய கோடரி புகுந்து தன் அடியை வெட்டிச் சாய்க்க ஆதாரமில்லாமல் வீழ்ந்துவிடும்.

When troubles assail a home without a buttress, it will rock to its foundations and crumble into ruins. 10

அதிகாரம்—104

உழவு

HUSBANDRY

சிறுபான்மை வணிகர்க்கும் பெரும்பான்மை வேளாளர்க்கும் உரித்தாகிய தொழில்.

1031. சுழன்றும்ஏர்ப் பின்ன(து) உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை.

உழவுத்தொழிலால் நேரிடும் உடல் வருத்தத்தினின்றும் நீங்கும் பொருட்டு, உலகத்தார் பிறதொழில்களைச் செய்துகொண்டு திரிந்தாலும், முடிவிலே ஏருடையார் வழியாகிய பயிர்த் தொழிலிலேயே வந்து சேர்வர்; ஆதலால் எல்லா வருத்தங்களையும் தருவதாயினும் உலகத்தில் உழவுத் தொழிலே முதன்மையானது.

You may pursue other walks of life; but ultimately you must come back to the plough; for there is no nobler calling than husbandry. 1

1032. உழுவார் உலகத்தார்க்(கு) ஆணிஅஃ தாற்றா(து)
எழுவாரை எல்லாம் பொறுத்து.

உழுதல் தொழிலில் சிறந்த திறமையை யுடையவர், அவ்வுழவுத் தொழிலைச் செய்யமாட்டாமல் பிறதொழில்களை விரும்பி, அவற்றைச் செய்யத் தொடங்குவாரனைவர்க்கும் உதவி செய்து அவரைத் தாங்குதலால் உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணியைப் போல்பவராவர்.

Husbandmen are the sheet-anchor of the world, for on their labour doth rest the prosperity of the weak ones who toil otherwise. 2

1033. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்;மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

பயிர்த்தொழிலைச் செய்து அதனால் அனைவரையும் வாழ்விப்பதுடன், தாமும் பிறருதவியின்றி வாழ்கின்றவரே சுதந்திரமாக வாழ்கின்றவராவர்; அவ்வாறு வாழாதவரெல்லாம் பிறரைத் தொழுது அதனால் தாம் புசித்து அவ்வுழுவாரைப் பின்பற்றிச் செல்கின்றவராவர்.

The ploughmen alone live as the freemen of the soil; the rest are mere slaves that subsist on their toil. 3

1034. பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்.

தமது உழுதற் றொழிலினால், கதிரோடுகூடிய நெல் முதலிய தானிய வளமுடையவராய் இனிய அருட் குணத்தையுடைய உழவர், பல வேந்தரின் குடை நிழலிலுள்ளதாகிய பூமி முழுவதையும் தம் வேந்தரின் குடைக் கீழ் அடங்கி இருக்குமாறு செய்வார்கள்.

The bold and proud peasantry whose fields rustle with rich waves of corn, make their king the proud sovereign of the world. 4

1035. இரவார்; இரப்பார்க்(கு)ஒன் றீவர்; கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

தமது கையினால் உழுதலைச் செய்து பிறர் உதவியின்றி உண்பதைத் தமக்கு இயல்பான சுவாதீனமாகவுடையவர், பிறரிடத்துச் சென்று தாம் இரத்தற் றொழிலைச் செய்யமாட்டார்; தம்மிடத்து வந்து யாசிப்பவர்க்கு அவர் வேண்டியதொரு பொருளை ஒளியாமல் கொடுப்பர்.

A peasant, who toils in the sweat of his brow, begs not at other men's doors; but ungrudgingly shares his bread with those that beg for alms. 5

1036. உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை.

உழவுத் தொழிலையுடையாரது கை, அத்தொழிலைச் செய்யாது சோம்பி நிற்குமானால், யாவரும் விரும்புகின்ற உணவையும், யாம் துறந்து விட்டோம் என்ற துறவிகட்கு, அத்துறவறத்தில் நிற்பதும் உளவாகாது.

Even saints who have forsaken the world needs must cease from penance, were farmers to crouch idle with folded arms. 6

1037. தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

ஒரு நிலத்தினை உழுதவன், ஒரு பலம் நிறையுள்ள புழுதியைக் காற் பலம் நிறையுள்ளதாகக் காய விடுவானானால், அந்நிலத்திடத்துச் செய்த பயிர் ஒரு பிடியளவு எருவும் இடவேண்டாமலே நன்றாக விளையும்.

Behold the land that is allowed to dry, until an ounce of earth crumbles into a quarter ounce of dust. She needs no manure and her harvest would be rich and abundant. 7

1038. ஏரினும் நன்றால் எருவிடுதல்; கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.

மேற்கூறிய பயிர்க்கு, ஏர்கொண்டு உழுவது நல்லதாகும்; எருப் போடுதல் அதனினும் நன்று; அவ்விரண்டினுக்கும் சிறந்தது களைபறித்தல்; அதனினுஞ் சிறந்தது நீர் பாய்ச்சுதல்; அதனினும் சிறந்தது அப்பயிரைக் காப்பதாம். (இவ்வைந்தும் வேண்டுமென்பதாம்.)

A land needs more manuring than ploughing. A weeded field needs more guarding than watering. 8

1039. செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்(து)
இல்லாளின் ஊடி விடும்.

நிலத்துக்கு உரியவன், அந்நிலத்தினிடம் நாடோறும் போய்ப் பார்த்து, அதற்குச் செய்யவேண்டியவற்றைச்செய்யாதவனாய்ச் சோம்பியிருந்தால், அந்நிலம், அவன் மனைவிபோலத் தன்னுள்ளே வெறுப்படைந்து, பின்பு அவனோடு பிணங்கிப் பயன் தராது ஒழிந்துவிடும்.

As sulky and sullen as a woman abandoned of her lord is the land abandoned of her owner. 9

1040. இலம்என் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும்.

'யாம் பொருளில்லாதவராக இருக்கின்றோம்' என்று சொல்லிச், சோம்பலினால் பயிர்த்தொழில் செய்யாதிருப்பாரைக் கண்டால், நிலம் என்னும் நல்லாள் (பூமிதேவி) இகழ்ந்து சிரிப்பாள்.

Dame earth seems to smile regretfully at the idle sons of the soil who plough not but plead poverty. 10

அதிகாரம்—105

நல்குரவு

POVERTY

அநுபவிக்கத் தக்க பொருள்கள் யாவும் இல்லாமை. (வறுமை)

1041. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.

ஒருவனுக்கு வறுமையைப்போலத் துன்பந் தருவது யாதென்றால் வறுமையைப்போலத் துன்பந் தருவது வறுமையேயாகும். (வறுமையை யொப்பது வேறில்லை).

Nothing is more dreadfully painful than poverty. 1

1042. இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்.

வறுமை என்று சொல்லப்படுவதாகிய ஒருபாவி, ஒருவனிடத்துச் சென்று சேர்ந்தால் அவன் அடைதற்குரிய மறுமை இன்பமும், இம்மை இன்பமும் அவன் அடையாதபடி செய்துவிடும்.

Infernal poverty blasts the joys of the earth and of heaven. 2

1043. தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குர(வு) என்னும் நசை.

தரித்திரமெனப்படுகிற ஆசை, தன்னாலே கொள்ளப்பட்டவருடைய பழைய குடிப்பிறப்பையும், அதற்கேற்ற சொல்லினையும் ஒருசேர ஒழித்து விடும்.

Griping poverty robs a man of the lofty nobility of his descent and the golden eloquence of his tongue. 3

1044. இல்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொல்பிறக்கும் சோர்வு தரும்.

இழிவான சொற்பிறவாத உயர்குடிப் பிறந்தவரிடத்தும், இழிவு தருஞ் சொல் உண்டாதற்கு ஏதுவாகிய சோர்வினை, வறுமையானது உண்டாக்கும்.

Chill penury benumbs one's noble feelings and makes one speak the language of a slave. 4

1045. நல்குர(வு) என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

வறுமை என்று சொல்லப்படும் துன்பம் ஒன்றனுள்ளே பலவகைப் பட்ட துன்பங்களும் வந்து விளையும். (குரை - இசைநிறை.)

Cursed poverty is a nest of evils. 5

1046. நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

உண்மையான நூற்பொருளை நன்றாக அறிந்து சொன்னாராயினும், வறியவர் சொல்லும் சொற்கள் பொருளிற் சோர்வுபடுதலை யடையும். (பயனற்றவையாகும்.)

The wise sayings and dignified utterances of the indigent are held as the mere babble of a fool. 6

1047. அறஞ்சாரா நல்குர(வு) ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

தர்மத்தோடு சம்பந்தமில்லாத வறுமையையுடையவன், பெற்றதாயினாலும் அயலானைப் போலப் பார்க்கப்படுவான்.

Hideous and wicked poverty estranges even the tender heart of a mother. 7

1048. இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு.

நேற்றும் கொன்றது போன்று எனக்குத் துன்பமானவற்றைச் செய்த வறுமையானது, இன்றும் என்னிடத்து வரக்கடவதோ? ('வந்தால் இனி யாது செய்வேன் !').

"The grief of my want has eaten away my very soul. Am I to taste the bitterness of it again and again?" is the piteous cry of one who is in constant dread of poverty. 8

1049. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்; நிரப்பினுள்
யாதொன்றும் கண்பா(டு) அரிது.

தீயினிடையே கிடந்து உறங்குவதும், ஒருவனுக்கு மந்திர வலிமையினாலும் மருந்து வலிமையினாலும் கூடும்; தரித்திரம் வந்தபோது எந்த வகையினாலும் உறக்கமானது இல்லை.

Even in the midst of flames you may slumber; but the tearful eyes of the poor know no sleep. 9

1050. துப்புர(வு) இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று.

தமது அனுபவத்திற்குரிய பொருள்களைப் பெறாத வறியவர், தம்மாற் செய்யக்கூடியது, முழுவதையும் துறந்து விடுதலேயாக இருக்கவும், அவ்வாறு முழுதும் துறவாமலிருப்பது, அயலார் வீட்டிலுள்ள உப்புக்கும் புளித்த காடிக்கும் யமனும். (அயலகத்துச் சென்று, உப்பையும் பழங்காடியையும் இரந்து பெற்றுத் தனது பசியை நீக்குதல்.)

The deliverance of the poor and the needy is in renunciation. Otherwise they must batten on othermen's salt and soup. 10

அதிகாரம்—106

இரவு

BEGGING

யாசித்தல்.

1051. இரக்க இரத்தக்கார் காணின்; கரப்பின்
அவர்பழி; தம்பழி அன்று.

வறுமையுற்றவர், கேட்பதற்கு முன்னமே அறிந்துகொடுக்கும் இயல்புடையவரைக் கண்டால், அவரிடத்தே யாசித்தல் நலம்; கொடுப்பவர், தம்மிடத்திலுள்ள பொருளைக் கொடாது ஒளிப்பாரானால், அவ்வாறு ஒளிப்பது, அவர்க்குப் பழியுண்டாக்குமே யன்றி, இரப்பவர்க்கு உண்டாக்காது.

Knock at rich men's doors. If they relieve not your wretchedness, the sin is theirs and not thine. 1

1052. இன்பம் ஒருவற்(கு) இரத்தல் இரந்தவை
துன்பம் உறாஅ வரின்.

ஒருவனுக்குத், தான் யாசித்த பொருள்கள், கொடுப்பவரது அறிவினுலும் குணத்தினுலும் யாதொரு தடையுமில்லாமல் வருமாயின், இரத்தலும் இன்பத்திற்கு ஏதுவாகும்.

Even begging is sweet when you obtain without humiliation what you yearn for. 2

1053. கரப்பிலா நெஞ்சின் கடன் அறிவார் முன்நின்று
இரப்பும்ஓர் ஏஎர் உடைத்து.

கேட்ட பொருளை ஒளியாது உதவும் மனத்தையுடைய மாணிகளுக்கு எதிரில் நின்று, அவரிடம் ஒரு பொருளை யாசித்தலும் வறியவர்க்கு ஓர் அழகை உண்டாக்குவதாகும்.

Behold the generous ones that divine your wants and is bountiful. Begging at such men's doors is not without its charms. 3

1054. இரத்தலும் ஈதலே போலும், கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு.

தம்மிடத்துள்ள பொருளைக் கொடாது மறைத்தலைக் கனவிலும் அறியாத ஜீவகாருணிய முடையவரிடத்தில் இரத்தலும், வறியவர்க்குக் கொடுத்தலேபோலும்.

To beg of them that deny not even in their dreams is as sweet as to bestow. 4

1055. கரப்பிலார் வையகத்(து) உண்மையால் கண்நின்(று)
இரப்பவர் மேல்கொள் வது.

தமது இரத்தலைச் சொல்லாமல் எதிரில் நின்றமாத்திரத்தால் அவர்க்குத் தம்மிடத்துள்ள பொருளை ஒளிக்காமல் கொடுப்பவர், உலகத்திலிருப்பதனுலன்றே! இரப்பவர் தமது உயிரைக் காத்துக்கொள்ளுதற்குத் துணிகின்றனர்; கொடுப்பவரில்லையாயின் ஏற்பவர் உடனே உயிரை விட்டுவிடுவர். (இரப்பவர் இறவாது இருத்தற்குக் காரணம், கரவாது கொடுப்பவருளராதலின்.)

Mendicancy subsists on charity. 5

1056. கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும்.

தமக்குள்ளதை ஒளித்தலாகிய நோயில்லாதவரைக் கண்டால், மானம் விடாமல் யாசிப்பவர்க்கு வறுமையினுல் உண்டாகும் துன்பங்களெல்லாம் ஒருங்கு கெட்டொழியும்.

O Poverty, where is thy sting before men of abundant charity? 6

1057. இகழ்ந்தெள்ளா(து) ஈவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளும் உவப்ப துடைத்து.

தம்மை அவமதித்து இழித்துக் கூறாமல், பொருளை ஒளிக்காது கொடுப்பவரைக் கண்டால், யாசிப்பவருடைய மனம், மிக்க சந்தோஷத்தை யடையும்.

Joy wells up in the bosom of a beggar who beholds a generous donor. 7

1058. இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண் மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று.

வறுமைத் துன்பத்தை யடைந்து யாசிப்பவர் இல்லையானால், குளிர்ந்த இடத்தையுடைய பெரிய உலகத்தார் வருகையும் செல்கையும், உயிரில்லாத மரப்பாவை, யந்திரக் கயிற்றினாலே இங்கும் அங்கும் ஆடித்திரிந்தாற் போலாகும்.

Even the beautiful earth becomes an empty puppet show, if the noble mendicancy, that stirs all the well-springs of pity, dies out and is for ever banished the land. 8

1059. ஈவார்கண் என்உண்டாம் தோற்றம் இரந்துகோள்
மேவார் இலாஅக் கடை.

கொடுப்பவரிடத்துச் சென்று ஒரு பொருளை யாசிக்க விரும்புவர், இல்லையானால், கொடுப்பவராகிய அவரிடத்து என்ன புகழ் உண்டாகும்?

In a land where beggars wander not, no glory awaits the man of bounty. 9

1060.. இரப்பான் வெகுளாமை வேண்டும்: நிரப்பிடும்பை
தானேயும் சாலும் கரி.

கொடுப்பவனுக்கு, ஒரு சமயம் பொருள் கையில் இல்லாதிருந்தால், இரப்பவன், அவனைக் கொடாத லோபி என்று சொல்லிக் கோபித்துக் கொள்ளுதல் கூடாது; ஏனெனில், வேண்டிய பொருள் எல்லாச் சமயத்தி லும் கையிலிருக்கும் என்பது அருமையாகும்; கையில் இராது என்பதற்கு இரப்பவனது வறுமைத் துன்பமே சான்றாகும்.

Scowl not at them who give no charity; for, who knows, they may be, at that moment, as poor and helpless as you. 10

இரவச்சம்

THE DREAD OF BEGGING

இரத்தலால் உண்டாகும் அவமானத்துக்கு அஞ்சுதல்.

1061. கரவா(து) உவந்தீயும் கண்அன்னார் கண்ணும்
இரவாமை கோடி உறும்.

தம்மிடமுள்ள பொருளை ஒளிக்காமல் இவர் யாசகத்திற்கு நம்மிடம் வரப்பெற்றேமென்று மனமகிழ்ந்து கொடுக்கும், கண்போற் சிறந்தவரா யிருந்தாலும், வறியனொருவன், அவரிடம் சென்று யாசியாமல், வறுமைத் துன்பத்தை யனுபவித்திருத்தல், இரந்து பொருள் பெற்று அடையும் இன்பத்தினும் கோடி மடங்கு நன்மை தரும்.

To be poor is infinitely better than to beg even of the precious ones who give in the fulness of their heart. 1

1062. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.

இவ்வுலகத்தைப் படைத்தவனாகிய பிரமன், இதனிடம் வாழ்வார்க்கு, முயற்சியால் உண்டாகும் பயனால் ஜீவனஞ் செய்தலையன்றி, யாசகஞ் செய்தும் உயிர்வாழ்தலை விரும்பிச் சிருட்டித்தானாயின், தீயவனாகிய அப்பிரமன் தானும் அவர்போல, எவ்விடத்தும் திரிந்து வருந்திக் கெடுவானாக.

"May the creator of the universe who has decreed that we should beg at other men's doors go a-begging and perish" is the cry of anguish of an enraged soul. 2

1063. இன்மை இடும்பை இரந்துதீர் வாம்என்னும்
வன்மையின் வன்பாட்ட(து) இல்.

தரித்திரத்தால் வரும் துன்பத்தை, முயற்சியால் நீக்கக்கடவோம் என்று நினையாது, இரத்தலைச் செய்து தீர்ப்போம் என்று எண்ணுகின்ற வலிமையைப்போல முரணானது வேறு யாதும் இல்லை.

It is the height of folly to redress the ills of poverty by begging. 3

1064. இடம்எல்லாம் கொள்ளாத் தகைத்தே இடம்இல்லாக்
காலும் இரவொல்லாச் சால்பு.

அநுபவிக்கவேண்டிய பொருளில்லாமல், வறுமையை அடைந்திருந்த விடத்தும், பிறரிடஞ் சென்று யாசித்தலுக்கு இடங்கொடாத தீர்மானம், உலகமெல்லாவற்றையும் ஒருங்கு சேர்த்துத் தனக்குள் அடக்கிக்கொள்ள

வேண்டுமென்று எண்ணி அடக்கிக்கொண்டாலும், அடங்காத பெருமையை யுடையதாகும்.

The noble dignity that stoops not to base beggary, even in dire want, surpasses the glory and loveliness of the earth. 4

1065. தெள்நீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்த(து)
உண்ணலின் ஊங்கினிய(து) இல்.

ஒருவனுக்கு, தனது முயற்சியால் தேடிச் சம்பாதித்த உணவுப் பொருள், தெளிந்த நீர்போலச் சமைத்த அற்ப உணவான கூழாக இருந்தாலும், அது செய்யும் இன்பத்தைப் போலச்செய்ய வல்லது பிறிதில்லை.

The thin gruel tastes as sweet as ambrosia to him who has earned it in the sweat of his brow. 5

1066. ஆவிற்கு நீர்என்(று) இரப்பினும் நாவிற்(கு)
இரவின் இளிவந்த தில்.

தண்ணீர் பெறாது இறந்துபடும் நிலைமையிலிருந்தாலும், தருமத்தை நோக்கி, "இப்பசுவிற்குத் தண்ணீர் தரல் வேண்டும்" என்று ஒருவரிடம் சென்று யாசித்துக் கேட்கும்போதும் அவ்விரத்தல்போல, ஒருவன் நாவிற்கு அவமானம் தருவது வேறொன்றில்லை.

It is most heinous to beg for a bucketful of water even to quench the feverish thirst of a sinking cow. 6

1067. இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று.

யாசகம் செய்பவரிடத்திலெல்லாம் சென்று அவரை நோக்கி, 'நீங்கள், தம்மிடத்திலுள்ள பொருளைக் கொடாமல் ஒளிப்பவரிடஞ் சென்று, யாசகஞ் செய்யாதீர்கள்' என்று கூறி, யான் இரந்து வேண்டிக் கொள்ளுகிறேன்.

Ye beggars, mark ye this—"Knock not at unwilling doors." 7

1068. இரவென்னும் ஏமாப்பில்தோணி, கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

இவ்வறுமையாகிய கடலை, இதனைக் கருவியாகக்கொண்டு நீந்திக் கடந்து விடுவோம் என்று எண்ணி, ஒருவன் ஏறிச்செல்லும் யாசகமாகிய காவலற்ற மரக்கலம், அக்கடலில் ஓடுகையில் ஈவார் தமது பொருளைக் கொடாது மறுத்தல் என்னும் வலிய நிலத்தொடு மோதுமானால் உடைந்தொழியும்.

On denial's cruel rock, beggary, the mendicant's life-boat, gets wrecked. 8

1069. இரவுள்ள உள்ளம் உருகும்; கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும்.

செல்வமுடையவரெதிரில், செல்வமில்லாத வறியவர் சென்று அவ மதிக்கப்பட்டு நிற்கின்ற கொடுமையை நினைத்தால், எமது மனம் கலங்கி உருகி வருந்தி நிற்கும் ; அவ்வாறு இரந்து நிற்பார்க்கு, ஒரு பொருளையும் கொடாது இல்லையென்று சொல்லுங் கொடுமையை நினைத்தாலோ அவ் வுருகுமளவு தானுமின்றி உடனே கெட்டொழியும்.

How my heart doth melt with pity at beholding the poor forlorn ones crying for alms! How my heart doth break at the stern rebuffs they receive from the unfeeling, insolent ones! 9

1070. கரப்பவர்க்(கு) யாங்கொளிக்குங் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்.

தம்மிடத்துள்ள பொருளைக் கொடாது ஒளிப்பவர், இல்லை யென்று சொன்னவுடனே, அச்சொல்லைக்கேட்ட இரப்பார்க்கு இனிச்செய்வதென்ன வென்று வருத்தமுண்டாதலால், உயிர் போய்விடும்; இல்லையென்ற கொடுஞ் சொற் கேட்டவர்க்கே உயிர் நீங்குமானால், அக்கொடிய சொல்லைச் சொன்ன வர்க்கு உயிர் நீங்காதிருத்தலுக்குக் காரணம் யாதோ ? தெரியவில்லையே !

A cold rebuff kills a beggar. But can the denier ever escape the jaws of death? 10

அதிகாரம்—108

கயமை

BASENESS

நற்குணங்கள் ஒரு சிறிதுமில்லாத கீழ் மக்களது தன்மை.

1071. மக்களே போல்வர் கயவர்; அவர்அன்ன
ஒப்பாரி யாங்கண்ட(து) இல்.

கயவர், கை கால் முதலிய அவயவங்களோடு கூடிய உருவத்தால் முழுதும் மக்களையே (மனிதரையே) ஒத்திருப்பர்; அக்கயவர் மக்களை ஒத் திருத்தல் போன்ற ஒப்புமை, அம்மக்கட் சாதி, கயச் சாதியாகிய இரண்டி டத்தும் நாம் பார்த்ததில்லை.

The degraded souls are a class apart, though they are of us. 1

1072. நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத்(து) அவலம் இலர்.

தமக்கு உறுதியைப் பயக்கும் புகழையும், அறத்தையும், ஞானத்தை யும் அறியும் மேன்மக்களைக் காட்டிலும் அவற்றை அறியாத கீழ்மக்கள் நன்மை யுடையராவர்; எப்படியெனில், புகழ், அறம், ஞானங்களை அறிந் தொழுகும்போது மேன்மக்கள் அடையும் கவலை, கீழ்மக்களுக்கு இல்லை யாதலின்.

How gay and happy do the despicable ones look, for they know not the pricks of conscience that trouble the great! 2

1073. தேவர் அனையர் கயவர்; அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.

தேவரும் கயவரும் ஒரு தன்மையர் ஆவர்; ஏதனாலெனின், அத்தேவரும் தம்மை நியமிப்பாரின்றித் தாம் விரும்பிய செயல்களைச் செய்வர்; கயவரும் தம்மை நியமிப்பாரில்லாமல் தாம் விரும்பிய செயல்களையே செய்தொழுகுவா ராதலின்.

How like the lawless gods do the shameless ones behave ! 3

1074. அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்.

கீழ்மகன், தன்னில் குறைந்தவராய்க் கள்ள ஒழுக்கத்தையு முடையவரைக் கண்டால், அக்கெட்ட ஒழுக்கத்தில், அவரைக் காட்டிலும் தான் மேம்பட்டு, அதனால் தனது பெருமையைக் காட்டிச் செருக்கடைவான்.

The base ones plume themselves upon surpassing the acts of meaner ones. 4

1075. அச்சமே கீழ்களது ஆசாரம்; எச்சம்
அவாஉண்டேல் உண்டாம் சிறிது.

கயவராகிய கீழ்மக்களிடத்தில் ஆசாரம் ஏதேனும் கண்டால் அதற்குக் காரணம், அரசனது தண்டனைக்கு அஞ்சும் அச்சமே ஆகும்; அஃதன்றித், தம்மால் விரும்பப்பட்ட பொருள் கிடைக்குமாயின், அதனாலும் அந்த ஆசாரம் சிறிது உண்டாகும்.

Fear or love of gain fashions the seemingly virtuous conduct of the vile. 5

1076. அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்(கு) உய்த்துரைக்க லான்.

கீழ்மக்கள் தாங்கேட்டறிந்த இரகசிய விஷயங்களை மனத்தில் தாங்கிக்கொண்டு சென்று, பிறரிடத்தில் சொல்லும் இயல்பினராதலின், அவர்கள் அடித்துத் தெரிவிக்கும் பறைக்குச் சமானமாவர்.

The base trumpet out other men's secrets. 6

1077. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு.

கீழோர், தமது கன்னத்தில் அடித்து நெரிக்கும் பொருட்டு வரும் வளைந்த கையினை யுடையார்க்கே யன்றிப், பிறர்க்குத், தாம் உண்டு அலம்

பின கையைத் தெறிக்கவேண்டுமென்று யாசித்தலும் தெறிக்கமாட்டார். (எச்சிற்கையால் காக்கை ஓட்டார்.)

Not even a crumb of bread will the ignoble ones yield, unless you extort it with clenched fists. 7

1078. சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்
கொல்லப் பயன்படுங் கீழ்.

மேலோர், தம்மிடம் வந்து எளியவர் கூறிய குறைகளைக் கேட்ட வுடனே இரக்கங் கொண்டு, அவருக்கு வேண்டிய தொன்றைக் கொடுத்துப் பிரயோசனப்படுவர்; கீழோரோ! தம்மிடம் வந்து யாசித்தவர் தம்மைக் கரும்பு போல் நசுக்கிப் பிழிந்து வருத்தினோர்க்கே யன்றி மற்றையோர்க்கு ஒன்றுங் கொடார்.

The worthy readily warm unto the suppliant. But pity must be wrung out of the contemptible ones even as the juice of the sugarcane from some slow crushing mill. 8

1079. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ்.

கீழ்மகன், பிறர் பட்டும், துகிலும் உடுத்தலையும், பாலுடன் சோறுண்ணுதலையும் கண்டால், பொறாமை யடைந்து அத்தகைய பிறர்மேல், யாதொரு குற்றமும் இல்லாதிருந்தாலும் அவரிடத்துக் குற்றங் கூற வல்லவனாவான்.

Eaten up with envy of even other men's food and raiment, the malicious ones slander them. 9

1080. எற்றிற்(கு) உரியர் கயவர்? ஒன்(று) உற்றக்கால்
விற்றற்(கு) உரியர் விரைந்து.

கீழ்மக்கள், தாம் ஒரு துன்பமடைந்தபொழுது அத்துன்பத்தை நீக்கிக் கொள்ளும் பொருட்டு, விரைந்து தம்மைப் பிறர்க்கு விலைப்படுத்த நினைப்பர்; அதுவல்லாமல் வேறு எதைச் செய்தற்கு உரியவராவர்?

What else do the degenerate ones know except to fly into ignoble exile and base servitude before the brewing storm of life's trouble? 10

இரண்டாவது

பொருட்பால் முற்றிற்று

மூன்றாவது

காமத்துப்பால்

மூன்றாவது

காமத்துப்பால்

1. களவியல்

THE SECRET UNION

ஒரே காலத்தில் ஒரு பொருளால் ஐம்புலன்களும் ஐம்பொறிகளாலும் அனுபவித்தற்குரிய சிறப்புடையதாகிய காம இன்பத்தைக் கூறும் பாகம். இது களவியல், கற்பியல் என்றிருவகைப்படும். களவாவது பிணி, மூப்பு, இறப்புக்களில்லாமல் எந்தக் காலத்தும் ஒரு தன்மையராய் உருவும், திருவும், பருவமும், குலமும், குணமும், அன்பும் முதலியவற்றால் தம்முள் சமானமுடையவராகிய தலைமகனும் தலைமகளும் பிறர் கொடுத்தலும் அடுத்தலும் இல்லாமல் ஊழ்வசத்தால் தாமே எதிர்ப்பட்டுப் புணர்ந்து வருவது.

அதிகாரம்—109

தகையணங்குறுத்தல்

THE ACHING OF THE HEART

தலைமகன், தலைமகளினது அழகு தன்னை வருத்துவதைப் பற்றிக் கூறுதல்.

தலைமகள் உருவு முதலியவற்றைக் கண்டு, தலைமகன் ஐயுறல்

1081. அணங்குகொல்? ஆய்மயில் கொல்லோ? கனங்குழை
மாதர்கொல்? மாலுமென் னெஞ்சு.

கனத்த குழையையுடைய இவள், ஒரு தெய்வப் பெண்ணோ? அல்லது படைப்புக் கடவுளால் ஆராய்ந்து படைக்கப்பட்ட சிறந்த ஒருவகை மயிலோ? அல்லது ஒரு மானிட மங்கையோ? இவளை இன்னளென்று துணியமாட்டாமல் என் மனம் ஐயுற்று நின்றது.

O lovely form with thy pendants rare! Art thou a goddess of this sylvan scene, or a proud peacock, rare of its kind, that dances in this charming grove, or a mortal maid in beauty adorned. Wild is my heart; I cry out baffled; I know not what to tell. 1

மானிடமகளெனத் தெளிந்த தலைமகன், அவள் நோக்கு,
தன்னை வருத்தியதைப்பற்றிக் கூறுதல்

1082. நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து.

இத்தகைய அழகினையுடையாள் என் நோக்கிற்கு எதிர் நோக்குதல், துணையில்லாமல் தானே தாக்கி வருத்துந் தன்மையுள்ள ஒரு தெய்வப் பெண் மோகினி, தாக்குதற்குச் சேனையாகிய துணையையும் உடன்கொண்டு வந்தாற்போலும் தன்மையை யுடையது.

The charming one returns my eager glance. Her glance is like the piercing looks of a siren of the woods marching with a train of damsels
fair to assail my poor and bewildered heart. 2

1083. பண்டறியேன் கூற்றென் பதனை; இனி அறிந்தேன்
பெண்தகையால் பேர்அமர்க் கட்டு.

கூற்று என்று நூலோர் சொல்வதனை முன் கேள்விப்பட்டேனே யன்றி, நேரிற் கண்டிலேன்; இப்பொழுது கண்டறிந்தேன்; அது எத்தகையது எனின், பெண் தன்மையோடு கூடிப் பெரியனவாய்ப் போர்த் தொழில் செய்யும் கண்களை யுடையது.

Death! I knew not thee before. Art thou in the guise of this
cruel damsel with her large and battling looks? 3

1084. கண்டார் உயிர்உண்ணும் தோற்றத்தால் பெண்தகைப்
பேதைக்(கு) அமர்த்தன கண்.

பெண்தன்மையோடு கூடிய இப்பேதையின் கண்கள், தம்மைக் கண்டவரது உயிரை உண்ணும் தோற்றத்துடனே கூடி, மாறுபட்டு மிகக் கொடியனவாயிருந்தன.

Simple and gracious is my beloved. But her eyes, that belie her form, death-dealing blows do inflict and drink the lives of those
that fondly gaze on her. 4

1085. கூற்றமோ? கண்ணோ? பிணையோ? மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து.

என்னை வருத்துவதனால் யமனோ? என்மீது கண்ணோட்டத்துடன் நோக்குதலால் கண்ணோ? இயல்பாக மருண்டு நோக்குதலால் பெண் மானோ? இன்னதென அறியேன்; இப்பெண்ணினது கண்களின் நோக்கம் இம்மூன்று தன்மைகளையும் உடையதா யிருக்கின்றது. (இன்பத்தையும் துன்பத்தையும் ஒருங்கு செய்கின்றது.)

How sweetly doth yon maiden fair look on me! Is her glance the dart of Death, or the tremulous look of an artless one, or the shy
glance of an antelope? Or do these stream into one tender gaze? 5

1086. கொடும் புருவம் கோடா மறைப்பின் நடுங்(கு)அஞர்
செய்யல மன்இவள் கண்.

நீங்காத நட்பினையுடைய வளைந்த புருவங்கள், தாம் நடுவு நிலைமையில் நின்று விலக்கினால், அவற்றைக் கடந்து இவளது கண்கள் எனக்கு நடுங்குதற்குக் காரணமாகிய துயரைச் செய்யமாட்டா.

I dread the cruel glances of her eye. How I wish they were made captive in her arched and pencilled eye-brows ! 6

அவளது தனங்களாலாகிய வருத்தங் கூறல்

1087. கடாஅக் களிற்றின்மேல் கண்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்.

இப்பெண், சாயாத தனது தனங்களின்மேல் அணிந்த கச்சானது, அத்தனங்கள் என்னைக் கொல்லாதபடி காத்தலின், மதங்கொண்ட யானையின் மேலிட்ட முகபடாத்தை யொக்கும்.

Blest be the veil that shields me from her cruel-creamy breast! The beauteous garment that veils the ample swell of her bosom is like the many-coloured vesture that adorns the forehead of a wild and stately elephant. 7

நெற்றியாலாகிய வருத்தத்தைக் கூறுதல்

1088. ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும்என் பீடு.

போர்க்களத்து வந்து எதிர்க்க நேராத பகைவரும், எதிர்த்துத் தோல்வியடைந்தவர் கூறக் கேட்டு, அஞ்சுதற்குக் காரணமாகிய எனது வலிமை இப்பெண்ணினுடைய ஒளி பொருந்திய நெற்றியொன்றினைக் கண்டதுமே அழிந்துவிட்டது.

Ah, woe is me! My strength that has humbled many a foeman worthy of his steel, far on the ringing plains of battle grim, quails and lies vanquished before the might of the beauteous brow of my beloved. 8

அணி நலத்தாலாகிய வருத்தங் கூறல்

1089. பிணைஏர் மடநோக்கும் நாணும் உடையாட்(கு)
அணிஎவனோ ஏதில தந்து.

புறத்தில் பெண் மான்போன்ற மருண்ட நோக்கினையும், அகத்தில் நாணத்தையும் உடையவளாகிய இவளுக்கு, பொருத்தமுடைய இவ்வணிகளே போதுமானவையாயிருக்கும். இவற்றுக்கு வேறாகிய அணிகளைப் பெற்று அணிதல் என்ன பயனைக் குறித்தோ? (பயனின்று, பாரமாம்.)

My love with the guileless look of the fawn ! I behold thee in the vesture of modesty adorned. What needest thou of other jewels rare ? 9

தலைமகளின் குறிப்பறிந்துகொண்ட தலைமகன் கூறியது

1090. உண்டார்கண் அல்ல(து) அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று.

காய்ச்சப்பட்ட மதுவானது, தன்னை உண்டவரிடத்தே மகிழ்ச்சியை விளைவிக்குமே அல்லாது காமம் போலத் தன்னைக் கண்டவரிடத்து மகிழ்ச்சியை யுண்டாக்காது. (மகிழ்வித்தலில் கள்ளினும் காமஞ் சிறந்தது.)

The foaming cup of delicious wine, only when quaffed, doth make one wild with joy. But the very look of my loving one inebriates my soul. 10

அதிகாரம்—110

குறிப்பறிதல்

ON READING THE SIGNS OF LOVE

தலைமகன், தலைமகளது குறிப்பினை யறிதலும், தோழியின் குறிப்பினை அறிதலும், அத்தோழி அவ்விருவர் குறிப்பினையும் அறிதலுமாம்.

தலைவன், தலைவியின் உள்ளக்குறிப்பை அவள்நோக்கினால் அறிதல்

1091. இருநோக்(கு) இவள் உண்கண் உள்ள(து); ஒருநோக்கு
நோய்நோக்(கு); ஒன்(று) அந்நோய் மருந்து.

இவளுடைய மையுண்ட கண்களில் இருக்கின்ற பார்வையானது இப்பொழுது என்மீது இரண்டு பார்வையை யுடையதாயிற்று; அவ்விரண்டுள் ஒரு பார்வை, என்னிடத்து நோயை யுண்டாக்கும் பார்வையாகும்; மற்றொரு பார்வையோ! அந்நோயை நீக்குதற்குரிய மருந்தாகிய பார்வையாகும்.

Oh the witchery of her dark and melting eyes! Out of them dart two arrow-like glances; one slayeth my heart, the other healeth. 1

1092. கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று; பெரிது.

இவள் கண்கள், நான் காணாமல் என்னைப் பார்க்கின்ற அருகிய பார்வையானது, எனது விருப்பத்திற் கொத்த பாதி அளவு மாத்திரம் அன்று; அதனிலும் மிகும்.

How my heart pants for the fawn-like stolen glance of my beloved! More delicious than true love's embrace is the furtive look of my cunning one. 2

நோக்கினாலும் நாணினாலும் அறிதல்

1093. நோக்கினாள்; நோக்கி இறைஞ்சினாள்; அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர்.

நான் பாராதபோது அவள் தானாகவே அன்போடு என்னைப் பார்த்தாள்; பார்த்து ஒன்றை நினைத்து நாணித் தலை குனிந்தாள்; அச் செய்கைக்குக் காரணமாகிய குறிப்பானது, எம்மிருவரிடத்தும் தோன்றிய அன்பாகிய பயிர் வளர, வார்த்த நீராயிற்று.

Behold my lovely dear! How slyly doth she look on me and quickly turn aside in maiden coyness! In her tender look is nurtured the young plant of love that has sprung between us. 3

நாணினாலும் மகிழ்ச்சியினாலும் அறிதல்

1094. யான்நோக்குங் காலை நிலன்நோக்கும்; நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.

நான் அவளைப் பார்த்தபோது, அவள் என்னைப் பாராமல் நாணித் தலை குனிந்து நிலத்தை நோக்கி நிற்பாள்; அதையறிந்து நான் அவளைப் பாராத போது, அவள் என்னைப் பார்த்துத் தன்னுள்ளே மெல்ல மகிழ்வாள்.

How beguiling and baffling are the looks of my fair one! When I look on her, she bends her gaze down. When I turn away, she looks on me and breaks into a tender and artful smile. 4

1095. குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும்.

நேரே குறித்துப் பாராமை மாத்திரமேயல்லாமல், ஒரு கண்ணைச் சுருக்கினவள்போல என்னைப் பார்த்துத் தன்னுள்ளே பின்னர் மகிழ்ச்சியடைகின்றாள்.

How artful and shy is my maiden sweet! Rarely does her glance fall full on me; but she casts her side-long looks of love and lovingly smiles. 5

தலைவன் தன்னுள்ளே சொல்லியது

1096. உறாஅ தவர்போல் சொலினும் செறாஅர்சொல்
ஒல்லை உணரப் படும்.

புறத்தில் அயலார்போலக் கடுஞ்சொல் சொன்னாலும், மனத்தினுள் விரோதமில்லாதவரது சொல், பின்னர் அநுகூலப்படுதல், குறையுற்றவரால் விரைவில் அறியப்படும்.

TO HIMSELF (SOLILOQUIZSES)

Seemingly bitter are the words of the loving ones. But do they not in a moment's flash reveal the hidden spring of love? 6

1097. செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன்(று) உற்றார் குறிப்பு.

பின்பு இனிமை பயப்பதாய், முன்பு தீமையைத் தருவது போன்ற சொல்லும், மனத்துள் பகை கொள்ளாமலிருந்தே, புறத்தில் பகைத்தவர் போலப் பார்க்கின்ற பார்வையும், அயலார் போலிருந்து நட்பாயினவர்க்கு ஒரு குறிப்புப்பற்றி வருவனவாம்.

How bitter yet how sweet their words! How hateful yet how tender their looks! Verily, strange are the ways of the dear ones. 7

தன்னை நோக்கி மகிழ்ச்சியடைந்த தலைவியைக் கண்டு
தலைவன் கூறல்

1098. அசையியற்(கு) உண்டாண்(டு)ஓர் ஏஎர்; யான் நோக்கப்
பசையினள் பைய நகும்.

தோழி, என்னைக் கடிந்து நீக்குகின்ற சொல்லுக்கு ஆற்றமாட்டாமல், யான் வருந்தி இரந்து நோக்கியபோது, அதனை அறிந்து இரக்கங் கொண்டவளாகி, தனக்குள்ளே மெல்லச் சிரிப்பாள்; அதனால் மென்மையான சாயலையுடைய அவளுக்கு அச்சிரிப்பினிடத்தே ஒரு நன்மைக் குறிப்புண்டு.

Sweet and compassionate is my slender one. Charmingly does she return my imploring look and gently smile. How assuring are the looks and wreathed smiles of my gracious one! 8

தோழி தன்னுள்ளே சொல்லியது

1099. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள.

முன்னறியாதவர் போல ஒருவரை ஒருவர் பொதுப் பார்வையாகப் பார்த்தல், காதலையுடைய தலைவன் தலைவியாகிய இருவரிடத்தும் உண்டாகின்றன.

THE MAID OF THE BELOVED (ASIDE)

How like strangers do the lovers meet and part! The seeming indifference of their glance but bespeaks the fulness and warmth of the love within. 9

1100. கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல.

காம விருப்பத்திற்குரிய இருவருள், ஒருவர் கண்களோடு ஒருவர் கண்கள் கருத்தொருமிக்கும் பார்வையால் ஒத்திருக்குமானால், வெளிப்படையாக அவர்கள் சொல்லும் வாய்ச்சொற்கள் ஒரு பயனுமுடையன ஆகா.

Vain and unprofitable are words when eyes beckon unto eyes, and send their speechless messages of love. 10

அதிகாரம்—111

புணர்ச்சி மகிழ்தல்

Love's Embrace

குறிப்பறிந்து கூடிய தலைமகன், அப்புணர்ச்சியினை மகிழ்ந்து கூறுதல்.

இது, இயற்கைப் புணர்ச்சியின் இறுதியில் தலைவன் கூறியது

1101. கண்டுகேட்(டு) உண்டுயிர்த்(து) உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள.

கண்ணாற் கண்டும், காதாற் கேட்டும், நாவால் உண்டும், மூக்கால் மோந்தும், உடம்பால் தொட்டும் அநுபவிக்கப்படும் ஐம்புலனும், ஒளிபொருந்திய வளையலை யணிந்த இவளிடத்தே உண்டாயிருக்கின்றன.

How the shining one, with her bracelets fair, enraptures my heart! All the joys and delights of the sweet senses flow from her. 1

தலைவன், தலைவியைத் தனியாய் எதிர்ப்பட்ட இடத்தில் கூறியது

1102. பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து.

வாத முதலாகிய நோய்களுக்கு மருந்து, அவைகள் உண்டாவதற்குக் காரணமானவைகளன்றி, அவற்றுக்கு வேறாகும் குணத்தையுடையவையாகும்; ஆனால் அழகிய ஆபரணங்களை யணிந்த இவள் தன்னாலாகிய நோய்க்குத் தானே மருந்துமாயிருக்கின்றாள்.

How doth the fair-jewelled one bruise and bless my bleeding soul! Ills and remedies are but contending forces, always with each other at feud. But my beloved is at once the malady and the cure for all the pangs of my love-lorn heart. 2

பாங்கனை நோக்கித் தலைவன் கூறியது

1103. தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு?

ஐம்புலன்களால் ஒருமிக்க அநுபவிக்கக்கூடிய இன்பத்தை விரும்புபவர்க்குத் தாம் விரும்பும் மகளிரது மெல்லிய தோளிடத்தே துயிலும் துயிலைப்போல, அவற்றைத் துறந்த தவயோகிகள் அடையும் செங்கண்மாலுலகம் வருந்தாமல் எளிதாகவும் சுகமாகவும் அடையக் கூடியதாகுமோ?

Friend of my heart, mockest thou my love-sick folly! Oh! tell me, can all the delights of the heavenly kingdom of our lotus-eyed Lord ever excel the divine raptures of my sweet love's embrace? 3

1104. நீங்கின் தெறூஉம்; குறுகுங்கால் தண்என்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்?

தலைவன், தோழனை விட்டுப் பிரியும்போது கூறியது

தன்னை விட்டு நீங்கும்பொழுது சுடும்; நெருங்கும்போது குளிரும்; இப்படிப்பட்ட அபூர்வமான தீயை எனக்குத் தரவேண்டி இவள் எவ்வுலகத்திலே பெற்றாள் ?

Cruel-fair, when I turn away from thee, with passionate fires doth my heart burn. When I clasp thee, how refreshingly cool and sweet art thou! From what strange land hast thou stolen thy magic fire ? 4

பாங்கியினது கூட்டத்து முடிவில் தலைவன் கூறியது

1105. *வேட்ட பொழுதின் அவைஅவை போலுமே*
தோட்டார் கதுப்பினாள் தோள்.

இடைவிடாது பெற்றுக் கூடினும் மலரால் நிறைந்த கூந்தலையுடைய இவளது தோள்கள், ஒருவன் தனக்கு இன்பத்தைச் செய்யக்கூடிய பொருள்கள் தன்னாலடையப் படாதனவா யிருந்தாலும் அவற்றை யடைய விரும்பினால் அப்பொருள்களே அவன் மனத்திலிருந்து இன்பம் செய்யுமாறு போல இன்பத்தைச் செய்யும்.

Sweet-shouldered one with thy dark flowing tresses with flowers adorned ! I find in thee whatever sweets of life my heart fancies and desires. 5

1106. *உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்(கு)*
அமிழ்தின் இயன்றன தோள்.

தன்னைப் பெறாது வாடிய என் உயிர், பெற்று அடையுந்தோறும் தளிர்க்கும்படி தீண்டுதலால், இம்மங்கைக்கு, தோள்கள், உண்ணப்படும் அமுதம் போலல்லாமல் தீண்டப்படுவதோர் அமிழ்தத்தாற் செய்யப்பட்டன போலும்!

My artless one, when thou art away, pale and wan I grow. But at the sweet and warm touch of thy fair limbs, I live again and feel all the joyous thrill of life; is it because thy shoulders are of ambrosia made ? 6

இவளை மணந்துகொண்டு இல்லறத்திலிருந்து துறவறம் அடைவாரி
என்ற தோழிக்குத் தலைவன் கூறியது

1107. *தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்*
அம்மா அரிவை முயக்கு.

அழகிய பொன்னிறத்தையுடைய மங்கையினிடத்து நேரும் புணர்ச்சி, எப்படிப்பட்டதெனில் உலகோர், தமது சொந்த வீட்டிலிருந்து தமது முயற்சியால் வந்த பொருளைத் தென்புலத்தார் முதலாகிய ஐவர்க்கும் பகுத்

துக் கொடுத்துத், தமது பங்கை உண்ணும்போது எத்தகைய இன்பத்தைச் செய்யுமோ! அத்தகைய இன்பத்தைச் செய்யும்.

What a sweet and divine content do I find in the arms of my bewitching beloved! Ah! this reminds me of the sweet and angelic content of a loving householder alive to all the tender charities of home. 7

1108. வீழும் இருவர்க்(கு) இனிதே வளிஇடை
போழப் படாஅ முயக்கு.

நீ சொல்லுகின்றது நியாயந்தான், ஒரு பொழுதும் நீங்காமையால் காற்றால் இடையறுக்கப்படாத புணர்ச்சி, ஒருவரையொருவர் விரும்புகிற இருவர்க்கும் இனியதேயாம்.

When I cling close to my gentle one with my arms lovingly locked in hers, not even a breath of wind dare come between us. Is there any thing more delicious than such a sweet and rapturous embrace? 8

1109. ஊடல் உணர்தல் புணர்தல் இவை காமம்
கூடியார் பெற்ற பயன்.

புணர்ச்சி இனிதாதற் பொருட்டு வேண்டுவதாகிய ஊடலும், அவ் ஊடலைஅளவறிந்து நீக்குதலும், பின்னர்க் கூடுதலும் என்கிற, இவையன்றே! காதலால் இடைவிடாது அநுபவிப்பவர் பெற்ற பயன்கள்.

Trusty maid, thou chidest me for my bickerings with my love. Dost thou not know that our little jealousies and petty love-strifes and all the joys of reconciliations and reunions sweet are of constant love born? 9

தலைமகன் தன்னுள்ளே கூறல்

1110. அறிதோ(று) அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு.

சிவந்த பொன் மயமான அணிகளையுடைய இவளை, இடைவிடாது சேருந்தோறும் இவளிடத்து உண்டாகும் காதல், நூல்களாலும் நுட்ப அறிவாலும் பொருள்களை மேன்மேல் அறிய அறிய, அறியுந்தோறும் முன்னைய அறியாமை விளங்குதல் போலக் காணப்படுகின்றது.

SOLILOQUIZES

Whatever I have learnt and hugged with joy and pride, for ever grows stale and outworn the moment fresh fields of endless knowledge sweep into my ken. But can anything stale or wither the cloyless charms of my love's delight? Oh! how she makes me hunger for her more, when most she satisfies! 10

நலம் புனைந்துரைத்தல்

IN PRAISE OF HER BEAUTY

தலைவன் தலைவியின் பரிச நலத்தை வியந்து கூறியது.

தலைவன் தலைவியினது நலத்தை வருணித்துக் கூறுதல்

1111. *நன்னீரை வாழி; அனிச்சமே! நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்.*

அனிச்சப்பூவே! நீ எல்லாப் பூவினும் மென்மையான நல்ல தன்மையை யுடையாய்; நீ வாழ்வாயாக! அவ்வாறு இருந்தாலும் எம்மால் விரும்பப் பட்டவள் நின்னைப் பார்க்கிலும் மிருதுவான தன்மையை யுடையவள். (நின் செருக்கை ஒழிப்பாயாக)

O anicha, mayest thou be clad in beauty eternal, for thou art the most tender and delicate of all flowers! But dost thou not know that my beloved is tenderer and more charming than thou? 1

தலைவன், தலைவியின் கண்களின் நலத்தை வியந்து கூறல்

1112. *மலர்காணின் மையாத்தி நெஞ்சே! இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று.*

நெஞ்சே! என்றால் காணப்பட்ட இவளுடைய கண்கள் பலராலும் காணப்படும், தாமரை, குவளை, நீலோற்பலம் முதலிய பூக்களைப்போலு மென்று எண்ணி அவைகளைக் கண்டால் மயங்குகின்றாய்; உனது அறிவு இங்ஙனம் இருந்த தென்ன?

O heart, whenever thou seest flowers in bloom, thou mistakest them for the laughing eyes of thine beloved. I know thou art mad and distraught with love. 2

தோழனுக்குத் தலைவியின் இயல்பைக் கூறுதல்

1113. *முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோள் அவட்கு.*

மூங்கில் போலும் தோளினையுடைய இப்பெண்ணிற்கு, உடல் நிறம், மாந்தளிர் போலிருக்கும்; பற்கள் முத்துப்போலிருக்கும்; இவளது மெய்யின் இயற்கைமணம் நல்ல வாசனையாயிருக்கும்; மையுண்ட கண்கள் வேல் போலிருக்கும்.

Who can paint the beauty of my radiant one? There is a lovely curve like that of a bent bamboo about her shoulders fair. Her colour is the golden hue of a new-sprung, tender shoot. Her teeth are like orient pearls. There is a delicious fragrance in her breath. And her

dark, liquid eyes fling forth darts of love. How she enraptures my heart! 3

தலைவன், தலைவியினது கண்களின் அழகை அன்பின் மிகுதியால் மீண்டும் கூறல்

1114. *காணின் குவளை கவிழ்ந்து நிலன் நோக்கும்*
மாண் இழை கண்ஒவ்வேம் என்று.

குவளை மலர்கள், பிற பொருள்களைக் காணும் திறத்தினை யுடையனவா யிருந்தால், சிறந்த ஆபரணங்களையுடைய இவளது கண்களுக்கு ஒப்பாக மாட்டோம் என்று, வெட்கப்பட்டுத் தலைகவிழ்ந்து நிலத்தை நோக்கும். (காணுதலும் நாணுதலும் இல்லாமையால் மேல் நோக்கி நிற்கின்றன)

Look, how yon blue water-lilies flaunt their heads in the flush of their pride! They would droop down for very shame were they but to behold my loving, bejewelled one; for, sweet comrade mine, do not the bewitching eyes of my beloved beggar the lovely looks of the lilies fair? 4

பூவணி கண்டு சொல்லியது

1115. *அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு*
நல்ல படாஅ பறை.

இவள், தனது இடையின் மென்மையைக் கருதாமலே, அனிச்ச மலரின் தாள்களைக் களைந்து நீக்காமல், அவற்றைத் தனது சென்னியிற் சூட்டிக் கொண்டாள்; இனி அவற்றின் பாரம் பொறாது இடை முறியுமாதலின் இவள் இறந்துபடுவாள்; அதன் பொருட்டுப் பறைகள் நன்னிமித்தமாக ஒலியா.

How thoughtlessly has my fragile one adorned herself with anicha, with all the stalks and stems unnipped. Does she not know that her waist, slenderer than the tender anicha, will break? Look, how she faints and falls beneath their weight; and on my fancy's ear doth fall the muffled note of her funeral drum. 5

சந்திரனைக் கண்டு கூறியது

1116. *மதியும் மடந்தை முகனும் அறியா*
பதியின் கலங்கிய மீன்.

வானத்திலுள்ள நக்ஷத்திரங்கள், சந்திரனுக்கும் எமது தலைவியின் முகத்துக்கும் வேறுபாடு மிக இருக்கவும் 'இது சந்திரன், இது மாதின் முகம்' என்று அறியமாட்டாது, தமது நிலையினின்றும் கலங்கித் திரிகின்றன.

How the very stars of the heavens look bewildered and shoot away from their spheres celestial! Is it because that my fair one doth shine like the happy face of the resplendent moon? 6

1117. அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து.

அந் நக்ஷத்திரங்கள் அவ்வாறு கலங்குவதற்குக் காரணம் யாது? முன் குறைந்த கலை வந்து நிரம்பியே விளங்குகின்ற சந்திரனிடத்தில் மறு உள்ளதுபோல இம்மாதர் முகத்தில் களங்கம் உண்டோ? இல்லையே!

But do the capricious and mad stars know that spotless is my beloved unlike the spotted moon which doth but wax and wane? 7

1118. மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை; வாழி; மதி.

சந்திரனே, நீ வாழ்வாயாக! இம்மாதருடைய முகம்போல நான் மகிழுமாறு நீ ஒளி வீசவில்லையாயின், நீயும் என்னால் விரும்பப்படுதற்கு உரிமை யாவாய்.

Blest be thou O Moon! If only thou wert to shine as fair as my precious one, my heart would take wing and fly to thee. 8

1119. மலரன்ன கண்ணாள் முகமொத்தி ஆயின்
பலர்காணத் தோன்றல் மதி.

மதியே! கருங்குவளை மலர்போலுங் கண்களையுடைய இவளது முகத்திற்குச் சமானமாயிருக்க விரும்புவாயாகில், இம்முகத்தைப்போல் யான் மட்டும் காணத் தோன்றுவாய்? பலர் காணும்படி தோன்றாதே?

O Moon! desirest thou to vie with my beauteous beloved whose eyes are as flowers? Then scorn other men's gaze and shine on me and me alone. 9

உடன் போக்குரைத்த தோழிக்குத் தலைவன் மறுத்துக் கூறியது

1120. அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

உலகத்தாரால் மென்மைப் பொருளுக்கு உதாரணமாகக் கூறப்படும் அனிச்ச மலரும், அன்னப் பறவையின் இறகும், இம்மாதரது பாதத்திற்கு, பழுத்த நெருஞ்சியின் கூரிய முள்ளைப் போலத் துன்பஞ் செய்யும்.

Even the tender-soft petals of the sweet anicha and the soft down-feather of the swan are tormenting nettles to the slender feet of my loving one. 10

காதற் சிறப்புரைத்தல்

THE GLORY OF LOVE

தலைமகனும் தலைமகளும் தத்தம் காதல் மிகுதியை யுரைத்தல்.

தலைவன், தன் காதலைக் கூறியது

1121. *பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி*
வாலெயி(று) ஊறிய நீர்.

இன்பமுண்டாகப் பேசும் மொழியினையுடைய இவளது வெண்மை யான பற்களிடத்து ஊறிய நீர், பாலோடு தேன் கலந்தது போலும்! (இத் தன்மையதென அறிந்துணர்த்த முடியாததாயுளது.)

How beautifully doth my loving one shine in her snow-white teeth and her soft mellow voice! Sweet as honey-drops mingled in milk is the manna-dew of her lips. 1

பிரிவிலுண்டாகிய அச்சங் கூறியது

1122. *உடம்பொ(டு) உயிரிடை என்னமற் றன்ன*
மடந்தையொ(டு) எம்மிடை நட்பு.

இம்மங்கையோடு எமக்குள்ள நட்புக்கள், உடம்பினிடத்து உயிர்க்கு உண்டாகிய நட்புகளைப் போன்றனவாகும்.

My tender one, why dost thou look so pale and wan with thy tearful eyes downcast? Fearest thou that I would part from thee? Dost thou not know, that wheresoever we be, we are one as body and soul? 2

இடந்தலைப்பாட்டில் தலைமகள் நீங்கும்போது தலைமகன் கூறியது

1123. *கருமணியில் பாவாய்! நீ போதாய்; யாம் வீழும்*
திருநுதற்(கு) இல்லை இடம்.

என் கண்ணில் கருமணியிடத்து இருக்கின்ற பாவையே! நீ அவ்விடத் தைவிட்டு நீங்குவாயாக; நீங்காதிருப்பாயாகில், எம்மால் விரும்பப்படுகின்ற அழகிய நெற்றியையுடைய இவளுக்கு இருக்க வேறிடமில்லை.

O lovely image in the pupil of mine eye! Where shall I enthrone my bright-browed one, if thou be not gone? 3

பகற் குறிக்கண் புணர்ந்து நீங்குந் தலைவன் கூறியது

1124. *வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை; சாதல்*
அதற்கன்னள் நீங்கும் இடத்து.

தெரிந்தெடுக்கப்பட்ட சிறந்த ஆபரணங்களை யணிந்த இவள் கூடுங் காலத்து எனக்கு, உயிர்க்கு உடம்போடு கூடி வாழ்தல் எத்தகைய இன்பத்தைச் செய்யுமோ அத்தன்மையளாகின்றாள்; பிரியுங் காலத்து, அவ்வுயிர் உடம்பைவிட்டு நீங்கினாற்போல எனக்குத் துன்பந் தருபவளுமாகின்றாள்.

When I lovingly clasp thee, my fair-jewelled one, all the bloom and glow and warmth of life do I feel; but away from the sight of thee, my heart knows no respite and is smitten with all the bitter throes and agonies of death. 4

தோழிக்குத் தலைவன் கூறியது

1125. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம்.

ஒளிமிக்க, போர் செய்கின்ற கண்களையுடைய இவளது குணங்களை யான் மறந்தேனாயின், நினைப்பேன்; ஒருபொழுதும் மறத்தலை அறியேன்; ஆதலால் நினைத்தலையும் அறியேன்.

My fair maid, thou askest me whether I have ever, in my lone exile, thought of my love with her bright and battling looks. Thou knowest that men call to remembrance what they forget. But I know neither oblivion nor wakefulness, for my love is all my thought and dream. 5

தலைவி, தன்னுள்ளே கூறியது

1126. கண் உள்ளில் போகார்; இமைப்பின் பருவரார்;
நுண்ணியர்;எம் காத லவர்.

எம் தலைவரைக் காணாதவர், தூரதேசத்துப் போயினாரென்று நினைத்தால் நினைக்கட்டும்; எமது காதலர் எமது கண்ணினுள் நின்றும் நீங்கார்; அறியாமையால் கண்களை இமைத்தேனாயினும் அவர் வருத்தமு மடையார்; ஆதலால் காணப்படாத மிக நுண்ணியாரவர்.

SHE

Alas! falsely does the world believe that my beloved has betrayed me. Does it know that my subtle one has slowly slid into my soul and for ever dwells in mine eyes? He so fills my waking and dreaming hours that he neither abandons me nor feels vexed even when my drowsy eyelids nod and droop. 6

1127. கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்(கு) அறிந்து.

காதலர், எப்பொழுதும் எம் கண்ணின் உள்ளார்; ஆதலால் மையணியும் அவ்வளவு காலத்திற்குள் அவர் மறைந்து விடுவாரோ என்பது கருதிக், கண்களை அஞ்சனத்தால் எழுதுவதும் செய்யேம்.

Dost thou know, taunting maid, why I hav'nt beautified my eyes with collyrium dark? Dost thou know that my fond one lives in mine eyes and I paint them not lest, that moment, I should lose his vision beatific? 7

1128. நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்(கு) அறிந்து.

காதலர், எம் நெஞ்சினுள்ளாராதலால் உண்ணும்பொழுது அவரைச் சுடுமென்று நினைத்துச், சூடுள்ள உணவை உட்கொள்ள அஞ்சுகிறோம்.

My lover sits enthroned in my heart. I dare not quaff anything hot or pungent, lest it should bruise and burn my delicate one. 8

தோழி, தலைவனை இயற்பழித்த வழி தலைவி,
தலைவனை உயர்த்திக் கூறியது

1129. இமைப்பின் கரப்பாக் கறிவல்; அனைத்திற்கே
ஏதிலர் என்னும்இவ் வூர்.

எனது கண் சிறிது இமைக்குமாயின் உள்ளிருக்கும் காதலர் மறைந்து விடுவரோ என்று அஞ்சி இமைத்தலைச் செய்யேன்; அவ்வளவிற்கே இவ் வூரார், 'அவரென்னைத் தூங்கவொட்டாது தடைசெய்தார், அன்பிலர்' என்று அவரைக் குறை கூறுவர்.

I close not my eyes for fear I should lose my dear one's vision that fills every pore of my being. Strange! slanderous rumour has gone abroad that he has left me all alone. 9

1130. உவந்துறைவர் உள்ளத்துள் என்றும்; இகந்துறைவர்;
ஏதிலர்; என்னும்இவ் வூர்.

தலைவர் எனது மனத்தில் எப்பொழுதும் மகிழ்ந்து உறைகின்றார்; அதனையறியாது இவ்வூரார், 'அவரென்னை விட்டுப் பிரிந்து விட்டார்; அன்பில்லாதவராயிருக்கிறார்' என்று நிந்திப்பர்.

How lovingly does my lover dwell in my inmost heart! And villainous is the world that calls him heartless and cruel. 10

அதிகாரம்—114

நாணுத்துற வுரைத்தல்

THE WILD MADNESS OF LOVE

பிரிவு நீடித்தவிடத்துத் தலைவனும் தலைவியும் தமது நாணைத் துறந்தமையைக் கூறுதல்.

தலைவன், தலைவியின் பிரிவாற்றமையால் கூறல்

1131. காமம் உழந்து வருந்தினார்க்(கு) ஏமம்
மடலல்ல(து) இல்லை வலி.

கிடைத்தற்கரிய மகளிரோடு காமஇன்பத்தை அநுபவித்து, பின் அது பெறாது வருந்தின ஆடவர்க்கு அவ்வருத்தம் நீங்கக், காவலாகத் தக்கது மடலூர்தலல்லது வலியை யுடையது வேறில்லை.

HE

Once have I tasted bliss beyond dreams and now am torn from the loving arms of my beloved. Where can I, a fond and forlorn lover, find ease for the anguish of my heart, unless it be to sicken and die on a horse of palmyra leaves in a crowded street corner. 1

மடலூர்தல் உமக்கு முடியாதேன விலக்கிய
தோழிக்குத் தலைவன் கூறியது

1132. நோனா உடம்பும் உயிரும் மடலேறும்
நாணினை நீக்கி நிறுத்து.

பிரிதலாலுண்டான அவ்வருத்தத்தைத் தாங்க முடியாத உடம்பும், உயிரும் நாணத்தை ஒழித்துவிட்டு அதற்குப் பாதுகாப்பாகிய மடல்மாவினையூரத் துணிகின்றன.

No longer can my body and soul endure the cruel pangs of separation from my fair one. All the barriers of reserve, my tumultuous passion hath swept away. And from on the horse of palm leaves, I must needs proclaim unto the world my maddening love. 2

1133. நாணொடு நல்லாண்மை பண்டுடையேன்; இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல்.

முன்பு, நாணத்தையும் நல்ல ஆண்மையையும் உடையனாயிருந்தேன்; இப்பொழுதோ! காமம் மிக்கவர் ஏறுதற்குரிய மடலினையுடையவனாயிருக்கின்றேன்.

Modesty and manliness, once my boast, have thawed and melted away before the devouring flame of my love. And now where can I seek solace but in the time-worn toy-horse of palm whereon lovers, pale and spectre-thin, are wont to ride. 3

1134. காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை.

காமத்தைக் கடப்பதற்குக் கருவியாகக் கொண்ட நாணமும், நல்லாண்மையும் ஆகிய புணைகளை என்னைவிட்டுப் பிரித்து, விரைந்து செல்லுகின்ற காமமாகிய வெள்ளம் இழுத்துச் சென்றது.

What a storm rages in my heart! And the wild waves of my giant passion have swept away the raft of my heroic manhood and heavenly delicacy. 4

1135. தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்கும் துயர்.

மாலைப்பொழுதில் அநுபவிக்கும் துன்பத்தினையும் அதனை நீக்கு மருந்தாகிய மடலூர்தலையும் முன் அறிந்திலேன்; இப்பொழுது மாலைபோலத் தொடுத்த சிறு வளையலையுடைய இத்தலைவி எனக்குக் கொடுத்தாள்.

Dost thou know, my maid, what mantle has my beloved, with her bracelets like a wreath entwined, bequethed unto me, the forlorn one ? - only the palm-horse and the even-tide anguish. 5

1136. மடல்ஊர்தல் யாமத்தும் உள்ளுவேன்; மன்ற
படல்ஒல்லா பேதைக்கென் கண்.

தோழியே! நின் பேதை காரணமாக என் கண்கள் ஒருபொழுதும் தூக்கத்தைப் பொருந்தமாட்டா; அதனால் எல்லாரும் தூங்குகிற நடுவிரவிலும் மடலூர்தலையே எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

Dewy sleep hath never visited these poor eyelids of mine since banished from thy sight. And in the witching hour of the night, when the wide world is wrapped in slumber, I think of pining alone on the palm-leaf horse. 6

1137.* கடல்அன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்
பெண்ணில் பெருந்தக்க தில்.

கடல்போலக் கரையற்ற காமநோயை அநுபவிக்கும்பொழுதும், மடலூர்தலைச் செய்யாமல் பொறுத்துக் கொண்டிருக்கும் பெண் சன்மத்தைப் போல, சிறந்த தகுதியுடைய பிறப்பு வேறில்லை.

Most blessed is the heart of a woman who desires not to languish and die on the palmyra - horse, though surging passions of love sweep through her like the ocean-tides under a stormy sky. 7

தலைவி, தன்னியல்பைத் தோழிக்குக் கூறல்

1138. நிறைஅரியர் மன்அளியர் என்னாது காமம்
மறைஇறந்து மன்று படும்.

இவர், தம்மிடத்திலுள்ள நிறையென்னுங் குணத்தால், 'நாம் இவர்களைத் துன்புறுத்தல் கூடாதென்று அஞ்சாமலும், பேதைமை யுடையவராதலால் இரங்கத்தக்கார் இவரென்று இரக்கங் கொள்ளாமலும்' மகளிர் காமமானது, அவர் மறைத்து வைத்தலைக் கடந்து, தந்தை தமையன்மார் கூடிய கூட்டத்தில் வெளிப்படுவதாக இருந்தது.

SHE

Trusty maid, how cruel is my consuming passion! How it scorns my maiden modesty! How it rends the veil of my hidden love! And how it betrays me! 8

1139. அறிகிலார் எல்லாரும் என்றேஎன் காமம்
மறுகில் மறுகும் மருண்டு.

'நான் இதற்கு முன்னர் அடங்கியிருந்தமையால் என்னை எல்லாரும் அறிந்திலர்; இனி, நானே வெளிப்பட்டு எல்லாருக்கும் அறிவிப்பேன்' என்று என் காமம், இவ்வூர்த் தெருவினிடத்தே மயங்கிச் சுழல்கின்றது. (அம்பலும் அலருமாயிற்று. (இனி அறத்தொடு நிற்றல் வேண்டும்.)

Out of my heart hath the once-hidden, subdued passion of myself taken flight and its murmurs are heard in every whispering breeze that blows on this village of mine. 9

தோழியோடு பிணங்கித் தலைவி தன்னுள்ளே கூறியது

1140. யாம்கண்ணின் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா ஆறு.

யாம், பிறர் சொல்லக்கேட்பதன்றி, நேரில் கண்ணுற் காணும்படி, அறிவிலார், எம்மைக் குறித்துச் சிரிக்கின்றனர்; அவர் அவ்விதஞ் செய்வதற்குக் காரணம் யாம் அடைந்த துன்பத்தைத் தாம் அடையாமையாலேயே.

The foolish village folk giggle, laugh and mock me and my pallid cheeks as they pass. What do they, poor ones, know of the bitter torments and pangs I feel? 10

அதிகாரம்—115

அலரறிவுறுத்தல்

ON RUMOURS AFLOAT

பிறர் கூறும் பழிச்சொல் தனக்கு நன்மையைத் தருகின்றதெனத் தலைவன் தோழிக்கு அறிவுறுத்தலும், தோழியும் தலைவியும் தாம் அடைந்த அவற்றை அவனுக்குச் சொல்லுதலுமாம்.

ஊரார் பழிச்சொற்களைக் கூறிய தோழிக்குத் தலைவன் கூறியது

1141. அலர்எழ ஆர்உயிர் நிற்கும்; அதனைப்
பலர்அறியார் பாக்கியத் தால்.

இம்மடந்தையோடு எமக்குண்டாகிய நட்பானது, ஊரினிடத்துப் பழிச்சொல்லாய் எழுதலால், அவளைப் பெறாது வருந்துகின்ற எனது அரிய உயிரானது, அவளைக் கண்டதுபோல நிலைத்தது, அவ்விதம் நிலைபெற்றதை நல்வினைப்பயனால் யானே அறிவேனல்லாமல், தூற்றுகின்ற பலரும் அறிய மாட்டார்.

HE

Wild rumours of my secret union with my beloved have been set afloat by wagging, slanderous tongues. How they sweeten and sustain my sinking heart ! And blest be my star ! Little do the village folk know what blessings these rumours have wafted unto me. 1

1142. மலர்அன்ன கண்ணாள் அருமை அறியாது
அலர் எமக்(கு) ஈந்ததிவ் வூர்.

குவளைமலர்போலும் கண்ணையுடையாள், யாவராலும் பெறுதற்கு அரியளென்பதை அறியாமல், இவ்வூரிலுள்ளார் அவளை எளியவளாக்கி, அவள் மேல் கூறும் பழிச்சொல்லை எமக்குக் கொடுத்துதவினர்.

How my heart delights in and welcomes the village rumour that has linked me to my inaccessible, precious pearl, with eyes bright as laughing flowers. 2

1143. உறாஅதோ ஊர்அறிந்த கௌவை? அதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து.

எங்களுக்குள் உள்ள சேர்க்கையை இவ்வூரவர் அறிதலால் உண்டாகும் பழிச்சொல் எனக்குப் பொருந்துவது ஒன்று அன்றோ? எவ்வாறு எனில், அப் பழிச் சொல்லைக்கேட்ட என் மனம் அச்சேர்க்கையைப் பெறுமலிருக்கும்போதே பெற்றாற்போன்ற இன்பம் பயக்கும் தன்மையது ஆதலால்.

What a heavenly joy does the gossip of the village bring unto my love-lorn heart ! I feel as though I were in the ambrosial arms of my beloved. 3

1144. கவ்வையால் கவ்விது காமம்; அதுஇன்றேல்
தவ்வென்னும் தன்மை இழந்து.

என்னுடைய காமம் இவ்வூரார் தூற்றும் பழிச் சொல்லாலேயே மேல் மேலும் மலர்ச்சியை யுடையதாயிற்று; அப்பழிச்சொல் இல்லாமற்போனால் தன்னியல்பாகிய இன்பந்தருதலை இகழ்ந்து சுருங்கிவிடும்.

The village talk has made my love to my fair one flower into a bloom; but for it, my love would have wasted and withered away. 4

1145. களித்தொறும் கள்உண்டல் வேட்டற்றால்; காமம்
வெளிப்படும் தோறும் இனிது.

கள்ளுண்பார்க்குக் களிக்குந்தோறும் கள்ளுண்டல் இனிதாகுமாறு போல, எனக்குக் காமம், அவரால் வெளிப்படுந்தோறும் இன்பம் பயக்கின்றது.

Every cup quaffed by the greedy drunkard but makes him thirst for evermore. How every breath of the village rumour doth but sweeten and swell the tide of my passion to my precious one! 5

அலரையறிவித்துத் தலைவி தோழியை வினவியது

1146. கண்டது மன்னும் ஒருநாள்; அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று.

யான் என் காதலரைக் காணப்பெற்றது ஒரு நாளேயாகும்; அதனால் உண்டாகிய பழிச்சொல்லோ அவ்வளவினதாக இல்லாமல், சந்திரனைப் பாம்புகொண்ட அலர்போன்று உலகெங்கும் பரவிற்று.

SHE

I have but once, in a lovely grove, met my languishing lover. And what a tumultuous cry have the village folk raised as they would, were they to behold the moon darkened and devoured by the far-famed Rahu, the wily serpent of the skies! 6

தோழிக்குத் தலைவி பதில் கூறியது

1147. ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய்.

இக் காமநோயாகிய பயிர், இவ்வூரிலுள்ள பெண்கள் தூற்றுகின்ற வசைச் சொற்களையே எருவாகவும், அது கேட்டு என் தாய் கோபித்துச் சொல்லுகின்ற கொடுஞ் சொற்களையே நீராகவும் பெற்று வளர்கின்றது.

How can I bear the bitter anguish of my love-sick heart! Like a plant that is manured and watered, the light gossip of the neighbouring women doth but feed and fuel the ever-burning passion of my love; and my mother's wrath only stirs and sets it ablaze. 7

1148. நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல்.

எதிலார் தூற்றுகின்ற பழிச் சொற்களைக் கேட்டு, 'நாம் காமத்தை ஒழித்து விடுவோம்' என்று எண்ணுதல், நெய்யினால் நெருப்பை அவித்து விடுவோம் என்று கருதுவதோடு ஒக்கும்.

How foolishly do the village folk try to smother my surging passion! They but remind me of the foolish heart that strives to stifle a burning fire with ghee. Little do they know that their tales and gossips but feed the flame of my inordinate love. 8

1149. அலர்நாண ஒல்வதோ அஞ்சலோம் பென்றார்
பலர்நாண நீத்தக் கடை.

தம்மைக் கண்ட காலத்து, 'உன்னை விட்டுப் பிரியேன், அஞ்சுதலை ஒழிக,' என்று உறுதி கூறிய தலைவர், தாமே, இன்று கண்டார் பலரும் நாணும்படி நம்மை நீங்கிய பிறகு, நாம் அந்நியர் சொல்லும் பழிச் சொற்களுக்கு நாணுதல் கூடுமோ? கூடாது.

Alas! my dear one, who said, "Fear not", hath abandoned me to the scorn and scandal of the world. Can a greater shame befall me, the lonely wretch? Why need I dread the tittle-tattle of the village folk? 9

தோழி தலைவிக்குக் கூறியது

1150. தாம் வேண்டின் நல்குவர் காதலர்; யாம்வேண்டும்
கௌவை எடுக்கும்இவ் வூர்.

யாம் தலைவருடன் போதற்குக் காரணமாவதைப்பற்றி நாம் முன்னரே விரும்புவதாகிய அலரை இவ்வூரார் தாமே தூற்றா நின்றனர்; இனி காதலர் நாம் விரும்பினால் உடன் போக்கினை இனிமையாக அளிப்பர்; ஆதலால் இப்பழிச் சொல் நமக்கு நன்மை செய்யவே வாய்த்தது.

What a blessing has the village rumour wrought for me and my fond one! What my poor heart hath long yearned for, it hath fulfilled. And now I can, if I like, steal away with my beloved. 10

2. கற்பியல்

Wedded Love

மணஞ் செய்துகொண்டபின் தலைமகன் அறம், பொருள், இன்பங்களின் பொருட்டுத் தலைவியைப் பிரிந்த காலத்துப் பலவிதத் துன்பங்களைப் பொறுத்திருந்து, தலைமகன் வந்த பின்னர் முன்னிலும் இன்பம் அநுபவித்திருத்தல்.

அதிகாரம்—116

பிரிவாற்றாமை

The Pangs of Separation

தலைமகன் தலைமகளைப் பிரிந்து செல்லும் நாளில், அப்பிரிவைத் தலைவி, சகியாளாந் தன்மை.

தலைவனுக்குத் தோழி கூறியது

1151. செல்லாமை உண்டேல் எனக்குரை; மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

நீ எம்மைவிட்டுப் பிரியாமை உண்டாயின், அதனை எனக்குச் சொல், பிரிந்துபோய் விரைந்து வருதலை நீ சொல்லுவையாயின் அதனை, அப்பொழுது உயிர் வைத்துக் கொண்டிருப்பார்க்குச் சொல்.

SHE

My dear one, how strange are thy looks ! how words falter and die on thy lips ! I know not what they mean. Oh joy if thou stayest. But if thou talkest of parting and swift return, hence ! tell it to such as may survive the shock. 1

பிரிவு தலைமகன் குறிப்பான் அறிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது

1152. இன்கண் உடைத்தவர் பார்வல்; பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தால் புணர்வு.

தழையும் மாலையும் கொண்டு பின்னின்ற நாளில் அவரது பார்வையானது புணர்ச்சிக் குறிப்புக் காட்டியதனால் நமக்கு இன்பமுடையதாயிருந்தது; இன்று, அப்புணர்ச்சி நிகழா நிற்கவும் அது பிரிவென்ற அச்சத்தினையுடையதாயிற்று. (அவர் அன்பின் நிலை இது)

Once to look on his face was very heaven, But now, my maid, how the slow-creeping fear of parting from him chills my heart and robs even every loving embrace of his of its sweetness ! 2

1153. அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவோர் இடத்துண்மை யான்.

பிரியேன் என்ற சொல்லையும் நம் பிரிவாற்றாமையும் அறிந்துள்ள காதலரிடத்தும் ஒரோவழிப் பிரிவு நிகழ்தலால், அவரது சொல்லையும் தலையளியையும்பற்றி ஆலோசித்தால் நம்மீது அன்புடையரென்று தெளியும் தெளிவு கடினமா யிருக்கின்றது.

My soverign liege did promise never to part from me. And he knows what bitterness I should feel, were he to part. Netheless he would leave me all alone, promising quick return. How dare I, my companion sweet, believe him who has broken his vow ? Woe is me! 3

1154. அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க்(கு) உண்டோ தவறு.

எதிர்ப்பட்ட போதே பேரன்பு செய்து உன்னை விட்டுப் பிரியேன், அஞ்சாதிரு, என்றவர் தாமே பின்னர்ப் பிரிவாராயின், அவர்க்கன்றி அவரால் சொல்லப்பட்ட சொல்லை மெய்யென்று நம்பினவளாகிய என்னிடத்தில் குற்றமுண்டோ ?

"Fear not; be of good cheer; I shall never abandon thee"- thus said my lord. But his very solemn vows he himself now breaks. Blame be on him and not on me who hath believed him and his words. 4

1155. ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பல்; மற்றவர்
நீங்கின் அரிதால் புணர்வு.

என்னுயிரைப் போக வொட்டாமற் பாதுகாப்பாயானால் அதனை ஆளுதற்கு அமைந்தவரது பிரிவைத் தடுத்து விடுவாயாக; தடுப்பாரின்றி, அவர் சென்று விடுவாரானால், ஆளப்பட்ட எனது உயிரும் செல்லும்; பின்பு அவரைக் கூடுதல் எனக்கு அரிதாம்.

Trusty maid, have compassion on me and dissuade my lord, the life of my life, from deserting me. If he parts, I shall no longer meet him and I shall sicken and die. 5

தலைவன் பிரிவு அறிவுறுத்தவாறு வந்து சொல்லிய
தோழிக்குத் தலைவி கூறியது

1156. பிரிவுரைக்கும் வன்கண்ணர் ஆயின் அரிதவர்
நல்குவர் என்னும் நசை.

நமது பிரிவாற்றுமை யறிந்த அத்தலைவர் தாமே, நமக்கெதிர் நின்றும் தம் பிரிவை அறிவிக்கும் அருளில்லாமையை யுடையராயின், அவ் வன் கண்ணர் (கொடியர்) பின்பு நமது பிரிவாற்றுமையை அறிந்து வந்து தலையளி செய்வாரென்ற ஆசைநீக்கத் தகுவதாம்.

What a hardness of heart my lover betrays! Parting is always on his lips. Can I dream that such a one would ever return and chase away the sorrow and gloom of my lone heart and fill it with joy ineffable? 6

1157. துறைவன் துறந்தமை தூற்றுகொல் முன்கை
இறைஇறவா நின்ற வளை.

தலைவன், என்னைப் பிரியலுற்றமையை அவன் அறிவிக்காமல் தாமே அறிந்து எனது முன்கையின் இறையினின்றும் கழலாநின்ற வளையல்கள் எனக்கு அறிவியாவோ? அவன் அறிவிக்க அறிந்து வந்து நீ அறிவித்தல் வேண்டுமோ?

No need for thee, maid, to break the tidings of my fond lover's farewell. My very bracelets, which now do slip down my slender arms, proclaim the parting of my peerless prince. 7

1158. இன்னா(து) இனன்இல்ஊர் வாழ்தல்; அதனினும்
இன்னா(து) இனியார்ப் பிரிவு.

மகளிர்க்குத் தங்குறிப்பறியும் தோழியரில்லாத வேற்றாரினிடத்து வாழ்தல் துன்பஞ் செய்வதாகும்; அதன்மேலும் தம் காதலரைப் பிரிதல் அவ்வாழ்தலைக் காட்டிலும் மிக்க துன்பந் தருவதாகும்.

How bitter it is to dwell all alone, companionless, in a far-off, forlorn village! But bitterer still is the painful parting from my precious one. 8

1159. தொடிற்சுடின் அல்லது காமநோய்போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ.

நெருப்புத் தன்னைத் தொட்டால் சுடுமேயன்றிக், காமநோய் போலத், தன்னைவிட்டு நீங்கினால் தப்பாது சுடுதலைச் செய்யவல்லதாகுமோ? ஆகாது.

Thou sayest, maid, that I must needs endure the pangs of love which burn like fire. But dost thou know that, unlike the fire that bruises only when touched, the fiery flame of love scorches even hearts ar removed? 9

தலைவியர் பலரும் பிரிவாற்றியிருப்பர் நீ அவ்வாறு ஏன் செய்யவில்லையென்ற தோழிக்குச் சொல்லியது

1160. அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின் இருந்து வாழ்வார் பலர்.

தோழியே! நீ சொல்வது ஒக்கும்; பிரிவை அறிவித்தபோது அதற்கு உடம்பட்டுப் பிரியும்போது உண்டாகிற துன்ப நோயையும் நீக்கிப் பிரிந்தால், அப்பிரிவையும் பொறுத்துப் பின்னும் இருந்து உயிர்வாழும் மகளிர் உலகத்தில் பலர்போலும்!

How you talk! As though there are many in this weary world who can sustain in sorrow and bear the smart of separation from their loved ones and yet survive! 10

அதிகாரம்—117

படர்மெலிந் திரங்கல்

WAILING IN SORROW

தலைமகள், தலைமகன் தன்னைவிட்டுப் பிரிந்தமைக்கு ஆற்றாளாய் அவனை நினைந்து மெலிந்து வருந்துதல்.

தோழிக்குத் தலைவி கூறியது

1161. மறைப்பேன்மன் யான் இஃதோ நோயை இறைப்பவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும்.

யான் இந்நோயைப் பிறரறிந்து விடுவாரோ என்று வெட்கப்பட்டு மறைக்கின்றேன்; இந்நோயோ மறைந்து அடங்காமல், நீர் வேண்டுமென்று இறைப்பவர்க்கு ஊற்றுநீர் மிகுமாறுபோல் பெருகா நின்றது.

SHE

In vain do I strive to smother the sorrow of my soul. But, how it surges up like the ever-welling, bubbling spring! 1

1162. கரத்தலும் ஆற்றேன்இந் நோயை நோய் செய்தார்க்(கு)
உரைத்தலும் நாணுத் தரும்.

இக்காம நோயை இவ்விடத்திருப்பவர் அறியாதபடி மறைக்கவும் திறனில்லேன்; இல்லாக்கால் நோய் செய்தார்க்குச் சொல்லென்று கூறுவா யெனின் அவ்வாறு அதனைச் சொல்லுதலும் எனக்கு நாணத்தைக் கொடுக்கின்றது. (அதனால் இனி என் செய்வேன்).

Never can I hide my passion that wholly consumes me. And how can I reveal it to my fond one, who hath caused me this anguish? Have not I once vowed unto him that I would die the moment he had parted from me? For shame, I dare not pour out my heart unto him. 2

1163. காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும் என்
நோனா உடம்பின் அகத்து.

காமநோயும், அந்நோய் செய்த தலைவருக்கு இவ்வாறு என் செய்தீரென்று கேட்கவியலாத நாணமும் ஆகிய இரண்டையும் சுமக்கமாட்டாத என்னுடம்பினகத்துள்ள உயிரானது, சுமக்கும் ஒரு காவடித் தண்டாக அதன் இரு முனையிலும் தொங்குகின்றன. (யான் அவற்றின் ஒன்றில் நிற்கமாட்டாமையால் இந்தக் காவடித் தண்டு முறிந்தே விடும்.)

How I groan under the double sway of sorrow and shame which weigh down my love-stricken heart! 3

தலைவியர் காமக்கடலுளகப்படார் படினும் அதனை ஏற்ற புணையால் நீந்திக் கடப்பரென்ற தோழிக்குச் சொல்லியது

1164. காமக் கடல்மன்னும் உண்டே; அது நீந்தும்
ஏமப் புணைமன்னும் இல்.

எல்லாருக்கும் உள்ளனவாகிய காமம், நாணம் என்னும் இரண்டினுள் எனக்கு உண்டாயிருப்பது காமக் கடலொன்றே, அக்கடலை நீந்திக் கடக்கும் அரணாகிய புணை யாதும் என்னிடத்தில் இல்லை.

Before me surges up the sea of my endless passion. As far as my weary eyes can wander, there is not a single sail that can waft my storm-swept soul to some haven of bliss and joy. 4

தலைமகள், தோழியுடன் பிணங்கிக் கூறியது

1165. துப்பின் எவனாவர் மன்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர்.

இன்பஞ் செய்தற்குரிய நட்பினிடத்தே துன்பம் வரும்படி செய்ய வல்லவர்கள், துன்பஞ் செய்தற்குரிய பகையினிடத்தே என்ன தான் செய்யமாட்டார். (எல்லாம் செய்வர்)

Cruel maid, thou art friends with me and yet thou allayest not the anguish of my heart. What wouldst thou not do, wert thou mine enemy ? 5

காமத்தால் இன்பமுற்றதற்கு அதனால் துன்பமும் வருமென்று தோழிக்குத் தலைவி கூறியது

1166. இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனில் பெரிது.

காமம், புணர்ச்சியால் இன்பம் செய்யுங்கால் அவ்வின்பம் கடல் போலப் பெரியதாம்; இனி, காதலர் பிரிவினால் அது துன்புறுத்துங்கால் அக்கடலைக் காட்டினும் பெரியதாகும்.

What an ocean of joy floweth into my soul when my lord is nigh ! But vaster than the briny deep doth the grief of my heart grow when he is gone. 6

1167. காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன்.

காமமாகிய கடலை நீந்தியும் அதற்குக் கரைகாண்கின்றிலேன்; அக் காணாமைக் காலந்தான் எல்லாரும் துயிலும் நள்ளிரவாயிற்று; அந்நள்ளிரவிலும் அதற்கு ஒரு துணையில்லாமல் யானே யாயினேன்; ஆகியும் இறந்து பட்டுப் பிழைத்துப் போகாமல் இன்னும் இருக்கின்றேன். (இஃதொரு தீவினைப்பயன் இருந்தவாறென்னே !)

I am tossed about in an endless sea of agony and despair. And in the dark, weary watches of the night, I am all alone. 7

தலைவி, இரவின் கொடுமையைச் சொல்லி வருந்தியது

1168. மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா
என்அல்ல தில்லை துணை.

இரவானது, இவ்வுலகத்து நிலைபெற்ற எல்லா உயிர்களையும் தூங்கச் செய்தலால் அன்புடையதாயிருந்தது; தானே தூங்கச் செய்தலால் என்னைத் தவிர வேறு துணை அவ்விரவுக்கு உடையதாயிற்றில்லை.

Night, kindly nurse, gently rocks the world asleep and in me, the despised one, she finds her lone companion. 8

1169. கொடியார் கொடுமையில் தாம்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா.

நாம் காதலரோடு இன்புற்ற முன்னாளில் குறியனவாயிருந்து, அவர் பிரிவாற்றாமையால் வருந்தும் இக்காலத்திலே நெடியனவாய்க் கழிகின்ற இவ்விரவுகள், பிரிந்துபோன கொடியவரது கொடுமையைப் பார்க்கினும் அதிக கொடுமையுடையனவா யிருக்கின்றன.

How the slow-footed, heavy hours of the night drearily drag along! How they seem more cruel than my cruel one ! 9

அழாதிரு என்ற தோழிக்குத் தலைவி கூறியது

1170. உள்ளம்போன்(று) உள்வழிச் செல்கிற்பின் வெள்ளம்நீர்
நீந்தல மன்னோஎன் கண்.

மனம்போல, என் கண்கள் என் காதலர் இருக்கின்ற நாட்டிற்குக் கடிதில் செல்லக் கூடியனவாயிருப்பின், எனது கண்கள் இவ்வாறு வெள்ளமாகிய நீரில் நீந்திக்கொண்டிரா.

How quick is my eager heart in reaching out my beloved in distant shores ! If only my poor moist eyes can outrun its speedy flight, they need not now be swimming through a flood of tears. 10

அதிகாரம்—118

கண் விதுப்பழிதல்

LACK-LUSTRE EYES

கண்கள் தலைமகனைக் காணுதற்கு விரைந்து வருந்துதல்.

நீ பொறுக்க வேண்டுமெனக் கூறிய தோழிக்குத் தலைவி சொல்லியது

1171. கண்தாம் கலுழ்வ(து) எவன்கொலோ தண்டாநோய்
தாம்காட்ட யாம்கண் டது.

தீராத இந்தக் காமநோயை யாம் அறிந்து கொண்டதற்குக் காரணம் தாமே காதலரை எமக்குக் காட்டுவதனால் அன்றோ; அவ்வாறு நமக்கு நோய் செய்த கண்கள் இன்றுஅவரைக் காட்டச்சொல்லிஅழுவது எதன்பொருட்டு?

(SHE ADDRSSES HER EYE)

Thou once showed me my beloved. And now thou weepest and wailest for him. Why complainest thou ? Are thou not the cause of thine own grief and of mine ? 1

1172. தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்ப(து) எவன்?

மேல் விளைவதனை ஆராய்ந்து அறியாது, அன்று தலைவரை நோக்கி நின்ற மையுண்ட கண்கள், இன்று இத்துன்பம் நம்மால் வந்தபடியால் பொறுத்தல் வேண்டுமென்று பகுத்தறியாமல் துயரப்படுவது எதன் பொருட்டு ?

How foolishly didst thou, that fatal day, delight in my lord forgetful of the woes in store for thee! Why grievest thou now? Thou must needs bear patiently what thine own folly hath wrought. 2

1173. கதும்எனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து.

இக்கண்கள் அன்றைக்குத் தாமே விரைந்து காதலரை நோக்கிவிட்டு, இன்றைக்குத் தாமே இருந்து அழுகின்றன; இச்செய்கையானது நம்மாலே சிரித்து இகழத்தக்க இயல்பினை யுடையது.

How fondly didst thou seek my dear one who hath betrayed you! And now thou criest. Such folly but provokes my smile. 3

1174. பெயல்ஆற்றா நீர்உலந்த உண்கண் உயல்ஆற்றா
உய்வில்நோய் என்கண் நிறுத்து.

இந்த மையுண்ட கண்களானவை, அன்று நான் பிழைக்கமாட்டாமைக்குக் காரணமாகிய ஒழிவில்லாது வருந்துகின்ற காமநோயை என்னிடத்தே நிறுத்தி வைத்து விட்டுத் தாமும் அழுது அழுது இனியழ முடியாது நீர்வற்றி விட்டன.

Thou canst weep no more—thou that hast caused me insupportable grief—; for have not all the well-springs of thy tears gone dry? 4

1175. படல்ஆற்றா பைதல் உழக்கும் கடல்ஆற்றாக்
காமநோய் செய்தஎன் கண்.

எனக்குக் கடலும் சிறிதாகும்படி பெரியதாகிய காமநோயைச் செய்த என் கண்கள், அத் தீவினையாலே தாமும் துயிலாதனவாகித் துன்பத்தை அநுபவித்து வருந்துகின்றன.

Thou hast plunged me into a passion vaster than the fell and hungry sea. Therefore hath sleep deserted thee and left thee to languish alone. 5

1176. ஓஓ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதன்பட் டது.

எமக்கு இந்நோயைச் செய்த கண்கள் தாமும் உறங்காது இவ்வாறு அழுதலாலே இந்நோயுள் அகப்பட்டது மிகவும் இனிதாயிற்று.

How it delighteth my heart to see thee waste away in dumb despair! Thou deservest this revenge, for hast thou not wrought irremediable woe unto me? 6

1177. உழந்துழந்(து) உள்நீர் அறுக விழைந்திழைந்து
வேண்டி அவர்க்கண்ட கண்.

விரும்பி மனங்குழைந்து இடைவிடாது அன்று அத்தலைவரைக் கண்ட கண்கள், இன்று தூங்காமல் அழுது அத்துன்பத்தை மிகுதியும் மேற்கொண்டு அவற்றின்கண் உள்ள நீர் அற்றுப்போகட்டும்.

How greedily didst thou with a longing, lingering look gaze on my beloved! Now I curse thee. May you pine and pine! And let thy streams of tears run dry! 7

அவரைக் காணுமளவும் நீ பொறுத்தல் வேண்டுமென்ற
தோழிக்குத் தலைவி கூறியது

1178. பேணாது பெட்டார் உளர்மன்னோ? மற்றவர்க்கு
காணா(து) அமைவில கண்.

'மனத்தால் விரும்பாது இருந்தும் சொல்லால் மட்டும் விருப்பங் காட்டிய காதலர் இங்கே இருக்கின்றார்;' என்ற தோழியே! அவர் இங்கிருத்தலால் பயனென்ன? கண்கள் அவரைக் காணாமல் பொறுக்கின்றனவில்லை.

What folly! My sleepless eyes seek for him whose honeyed tongue hath belied his heart. 8

1179. வாராக்கால் துஞ்சா; வரின்துஞ்சா; ஆயிடை
ஆர்அஞர் உற்றன கண்.

காதலர் வராதபோது அவர் வரவை எதிர்பார்த்து என் கண்கள் தூங்க மாட்டா; அவர் வந்த போதோ! அவர் பிரிந்துபோய் விடுவரோ என்று அஞ்சித் தூங்கமாட்டா; ஆதலால் அவ்விருவகையிலும் என் கண்கள் மிகுந்த துன்பத்தையே உற்றன.

What a hard lot is thine! When my lord is away, thou knowest no repose. And when he is come, thou must needs be sleepless. 9

1180. மறைபெறல் ஊரார்க்(கு) அரிதன்றால் எம்போல்
அறைபறை கண்ணார் அகத்து.

எம்மைப் போலும் அறைபறையாகிய கண்ணினையுடையவர், தமது உள்ளத்திலேயுள்ள இரகசியத்தை யறிதல் இவ்வூரிலுள்ளார்க்கு மிக எளிது.

Thou biddest me, maid, shroud my sorrow. My lack-lustre, tell-tale eyes trumpet out the hidden griefs of my heart. 10

அதிகாரம்—119

பசப்புறு பருவரல்

THE PALLOR OF LOVE

தலைவனைப் பிரிதலால் வந்த நிறவேறுபாட்டினால் தலைவிக்கு உண்டாகிய வருத்தம்.

பசப்புநிற மடைந்த தலைவி தன்னுள்ளே கூறியது

1181. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன்; பசந்தஎன்
பண்பியார்க் குரைக்கோ பிற.

என்னை விரும்பிய தலைவர் என்னைவிட்டுப் பிரிந்தமைக்கு அப்பொழுது உடன்பட்ட நான், அதனை ஆற்றியிராது இப்பொழுது பசப்பு நிறமடைந்த என் இயல்பை யார்க்குச் சொல்வேன்.

I nodded assent to his parting; to whom shall I now complain of the deathless pallor that spreads over me? 1

கவலையுற்ற தோழிக்குத் தலைவி பொறுப்பேன் என்னும் பொருள் தோன்றக் கூறியது

1182. அவர் தந்தார் என்னும் தகையால் இவர்தந்தென்
மேனிமேல் ஊரும் பசப்பு.

தலைவரது பிரிவை யான் பொறுத்துக்கொண்டிருக்கவும், இப்பசலை நிறம், அவர் தன்னை யுண்டாக்கினர் என்னும் செருக்கால் என் மேனி முற்றும் பரவா நின்றது.

How proudly the sickly hue of love legacied unto me by my dear one lords it over me! 2

1183. சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையும் தந்து.

தலைவர் பிரிகின்ற பொழுதே இக் காம நோயையும், பசலையையும் எனக்குப் பிரதியாகக் கொடுத்துவிட்டு, என் மேனியின் அழகையும் நாணத்தையும் (அவர்) கைக்கொண்டு போயினர்.

My precious one hath robbed me of my looks and my modesty. And in their stead, he hath left me but torments of the heart and the pallor of love. 3

1184. உள்ளுவன் மன்யான்; உரைப்ப(து) அவர்திறமால்
கள்ளம் பிறவோ பசப்பு.

நான் அவர் சொல்லிய சொற்களை மனத்தால் நினைக்கின்றேன்; வாயால் பேசுவதும் அவரது நல்ல குணங்களையே; அவ்வாறு இருந்தும் பசலை நிறம் வந்துவிட்டது; இது ஓர் வஞ்சனையாக இருக்கின்றது.

My fair one hath been the one image of my heart and the one theme of my song hath been his praise. Yet the pale hue of love slowly steals on me. 4

1185. உவக்காண்எம் காதலர் செல்வார் இவக்காண்என்
மேனி பசப்பூர் வது.

பண்டும் எம் காதலர் பிரிந்து சமீபத்தில் செல்வாராக, எனது மேனி பசலை நிறம் அடைவது இங்கே அன்றோ? அத்தன்மையை யுடையது இன்று வேறொன்றாகுமோ?

The moment my fond lover left me, a livid hue hath crept over me. 5

1186. விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.

விளக்கினது ஒளியின் சோர்வை எதிர்பார்த்து நெருங்கி வருகிற இருளே போல, தலைவன் என்னைவிட்டுப் பிரியும் சமயம் எப்பொழுது வருமோ என்று பார்த்துப் பசலையானது படர நெருங்கி வருகின்றது.

As darkness doth lie in wait to overtake a waning light, a sickly pallor lies in wait to overshadow me when my lord is away. 6

1187. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன்; அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு.

முன்னொரு நாள் என் காதலரைத் தழுவிப் படுத்திருந்த நான் சிறிது விலகினேன்; அச்சிறிது விலகிய அளவிலேயே பசலை நிறமானது கையால் வாரிக் கொள்ளும் பொருள்போல என்மீது வந்து படர்ந்தது.

There was a time when I lay, close-locked, intertwined, in my lover's arms; and I turned but a while, when lo! a dense pallor swallowed me up, as it were. 7

தோழியோடு தலைவி புலந்து சொல்லியது

1188. பசந்தாள் இவள்என்ப(து) அல்லால் இவளைத்
துறந்தார் அவர்என்பார் இல்.

இவள் ஆற்றியிராது பசப்படைந்தாள் என்று என்னைப் பழிகூறுவதல்லாமல், இவளை அவர் துறந்து போயினார் என்று அவரைப் பழித்துக் கூறுவார் ஒருவரும் இல்லை.

They reproach me with my pallid looks; and not the cruel one that hath abandoned me. 8

1189. பசக்கமன் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலையர் ஆவ ரெனின்.

இப்பிரிவுக்கு உடம்படாத யானே சம்மதிக்கும்படி சொல்லிச் செய்த தலைவர், தோழீ! இப்பொழுது நீ அவரை நல்லவரென்று நினைத்தாயாயின் என் தேகம் எவ்வாறு கெட்டாலும் கெட்டுப் பசலை நிறம் வந்து சேரட்டும்.

Let me be afflicted with all the ghastly paleness of love—I reck not. Give me but a least chance to hope that my beloved would return as he once vowed. 9

தலைவி, தலைவனது இயல்பைப் புகழ்ந்து கூறியது

1190. பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றார் எனின்.

என்னை அவர் விட்டுப் பிரியும் நாளில் எனது பிரிவை யான் உடம்படும்படி இனிது கூறித் துறந்தவர், தான் சொல்லியபடியே வராமையை யறிந்து சிநேகிதர்கள் அவர்மீது குறை கூறித் தூற்றாதிருப்பாராயின், பசப்புற்றாளென வேற்றுமையாலன்றிப் பசலை நிறமே தானாயினாளென்று ஒற்றுமைப்படச் சொல்லும் அப்பெயரினைப் பெறுதலும் எனக்கு நன்றாகும்.

I can bear the brunt of the upbraidings of those who twit and taunt me with my sallow looks, if only they accuse not my beloved of cruelty. 10

அதிகாரம்—120

தனிப்படர் மிகுதி

The Anguish of a Lone Heart

தனித்திருத்தலால் உண்டான துன்ப மிகுதி.

தலைவர், பிரிவாற்றாது விரைந்துவருவர் 'அவரோடு நீ பேரின்பமடைவாய்' என்ற தோழிக்குத் தலைவி கூறியது

1191. தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி.

தம்மால் விரும்பப்படுங் கணவர், தம்மை விரும்பி மதிக்கப்பெற்ற மாதரே, வித்தில்லாத காமநுகர்ச்சியாகிய கனியைப் பெற்றவராவர்.

Lo, I am wretched, despised of my lord. They alone taste of the full-juiced mellow fruit of love who find their love returned. 1

1192. வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி.

அறமும் பொருளும் நோக்கிப் பிரிந்தால் தம்மை விட்டிருக்க முடியாத மகளிர்க்கு, அவரை விட்டிருக்கமாட்டாத காதலர் அளவறிந்து வந்து செய்கின்ற அளியாகிய இன்பம் நுகர்தல், தன்னையே நோக்கி உயிர்வாழ் வார்க்கு மேகம் காலமறிந்து வந்து மழையைத் தருவது போலும். (அத் தலையளி பெருமையால் இறந்துபடுதலே நமக்குரியது.)

How like the seasonal showers that gladden and revive the parched-up earth do true lovers, that wander abroad, return to their expectant ones at the appointed hour ! But my heart is withered and woe-begone ; my lover comes not. 2

1193. வீழுநர் வீழப் படுவார்க்(கு) அமையுமே
வாழுநம் என்னும் செருக்கு.

தாம் விரும்பும் கணவரால் விரும்பப்படுகின்ற மாதருக்குக் காதலர் பிரிந்தாராயினும் நம்மை நினைந்து கடிதில் வருவார், வந்தால் நாம் இன் புற்று வாழ்வோம் என்னும் செருக்குப் பொருத்தமுடையது. (நம்மை அவர் விரும்பாமையால் அச்செருக்குப் பயனற்றது).

The proud boast of meeting their parted lovers some day is theirs who love and are loved in return. But abandoned and deserted am I. And despair seizes my heart. 3.

1194 வீழப் படுவார் கெழீஇஇலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅர் எனின்.

கற்புடைய மகளிரால் நன்கு மதிக்கப்படுவாரும், தாம் விரும்பும் கண வரால் விரும்பப்படாராயின் தீவினையுடையவராவர். (தீவினையுடையேனாகிய எனக்கு அந் நன்கு மதிப்பாற் பயனில்லை.)

Of what avail is others praise of me and of my virtues rare, if my dear lord loves not me ? 4

1195. நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாம்காதல் கொள்ளாக் கடை.

நம்மால் காதலிக்கப்பட்டவர், நம்மிடத்துக் காதல் செய்யாதபோது, அவர் நமக்கு என்ன இன்பத்தைச் செய்தல் கூடும். (ஒன்றுஞ் செய்யார்.)

I love him and he returns not my love. Can I dream of any happiness from him ? 5

1196. ஒருதலையான் இன்னாது காமம்; காப் போல
இருதலை யானும் இனிது.

மகளிர், ஆடவர் என்னும் இருவரிடத்தும் உண்டாவதாகிய காமம், ஒருவரிடத்து மாத்திரம் இருந்தால் துன்பந் தருவதாகும்; காவடியின்

பாரம் போல இருவரிடத்தும் ஒத்திருந்தால் அது இன்பம் பயப்பதாகும். (என்னிடத் துண்டாகிய வேட்கை அவரிடத்து முண்டாயின் யான் இத்தகைய துன்பம் அடைவேனோ ?)

Unrequited love but gnaws the heart ; love that sways level, like the well-poised beam, in the hearts of the lover and the loved enhances their rapture, But luckless am I and feel all the hellish pangs of unreturned love. 6

1197. பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்
ஒருவர்கண் நின்றொழுகு வான்?

காமம் அநுபவித்தற்குரிய இருவரிடத்திலும் சமமாக இருத்தலையொழித்து, ஒருவரிடத்து மாத்திரமே நின்று போர் செய்கின்ற காமக் கடவுளாகிய மன்மதன் அங்ஙனம் செய்தலால் உண்டாகும் பசப்பு வருத்தத்தையும், தனிமைத் துன்பத்தினையும் அறியானோ ?

The God of love aims his deadly quiver of arrows on me and me alone. Is it because he is blind to my sorrows and sufferings ? 7

தலைவனது தூதுவரக் காணாத தலைவி தோழிக்குக் கூறியது

1198. வீழ்வாரின் இன்சொல் பெறாஅ(து) உலகத்து
வாழ்வாரின் வன்கணார் இல்.

தம்மால் விரும்பப்படும் காதலரிடத்திருந்து தூதாக ஓர் இனிய சொல்லேனும் வரப்பெறாமல், பிரிவினைப் பொறுத்து உயிர் வாழ்கின்ற மகளிர்போலக் கொடியவர் உலகத்திலே வேறில்லை.

How can a woman bear to live in this world when she hears not from her sweet one ? Can there be a heart more cruel ? And what hardness of heart in me to still cling on to life ! 8

1199. நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்(டு)
இசையும் இனிய செவிக்கு.

என்னால் விரும்பப்பட்ட தலைவர் என்னிடத்து அன்பில்லாதவராயிருந்தாலும், அவரிடத்திலிருந்து வரும் ஏதாயினுமொரு சொல் (வரமாட்டேன் என்னும் கொடிய சொல்) ஆயினும் கேட்கப்பெற்றால், அது என் செவிகளுக்கு இன்பம் தரும். (அதுவும் பெற்றிலேன்.)

My beloved cares not for me, yet any stray message regarding him delighteth my ears. 9

தூதுவிட எண்ணிய தலைவி தன்னெஞ்சோடு கூறியது

1200. உறாஅர்க்(கு) உறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅஅய்; வாழிய நெஞ்சு.

உன்னோடு வந்து பொருந்தாதவர்க்கு உனது மிகுந்த நோயைச் சொல்லத்தொடங்கிய நெஞ்சே! 'நீ பொருயாயினும் அரிதாகிய அதனையொழிந்து உனக்குத் துன்பத்தைச் செய்கின்ற கடலைத் தூர்க்க முயல்வாயாக.' அது வெகு எளிது.

O heart ! thou strivest to pour out thy grief to my beloved, to bring him back that loves thee not. Thou mayest as well try to dam up my surging sea of sorrow. But blest be thou, for thou attempteth the impossible. 10

அதிகாரம்—121

நினைந்தவர் புலம்பல்

SIGHING FOR THE ABSENT ONE

முன் அநுபவித்த இன்பத்தை நினைந்து பலவாறு கூறுதல்.

தோழனுக்குத் தலைவன் பலவாறு கூறுதல்

1201. உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது.

முன் அநுபவித்த இன்பத்தைப் பிரிந்த காலத்து நினைத்தாலும், அப்பொழுது பெற்றாற்போன்று நீங்காத பெரு மகிழ்ச்சியைத் தருதலால், உண்டபோது மாத்திரம் மகிழ்ச்சியைச் செய்யும் கள்ளைப் பார்க்கிலும் காமம் மிக இனிமையுடையது.

He

Wine, only when drunk, gladdens the heart. But the very remembrance of my love intoxicates my soul. Verily love is sweeter than wine. 1

1202. எனைத்தொன்(று) இனிதேகாண் காமம்;தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன்(று) இல்.

தம்மால் விரும்பப்படுகின்றவரைப் பிரிவினிடத்து நினைத்தால் அங்ஙனம் நினைத்தவர்க்கு அப்பிரிவால் துன்பம் ஒன்றும் தோன்றுவதில்லை; எவ்வளவினதாயினும் காமம் இன்பம் ஒன்றினையே பயக்கும்.

How lovingly sweet is love in its infinite and varied appeal ! How it sweetens even solitude, when I think of my dear one ! 2

தலைவனை நினைந்து வருந்துகின்ற தலைவி தோழிக்குக் கூறியது

1203. நினைப்பவர் போன்று நினையார்கொல்; தும்மல்
சினைப்பது போன்று கெடும்.

எனக்குத் தும்மல் எழுவது போலத் தோன்றிப் பின்பு வராது கெடுகின்றது; ஆதலால் காதலர் என்னை நினைப்பவர் போன்று இருந்து நினையாதவராக இருத்தல் வேண்டும்.

She

I feel like sneezing and I do not. Perchance my fond one begins to dream of me and lo! the vision is gone. 3

1204. யாமும் உளேம்கொல் அவர்நெஞ்சத்(து) எம்நெஞ்சத்(து)
ஓஒ உளரே அவர்.

எமது மனத்தில் அவர் எப்பொழுதும் உள்ளவராகவே இருக்கின்றார்; அவ்வாறே அவரது நெஞ்சில் யாமும் உளமாகின்றேமோ ? அறியேம்.

He ever resides in my heart ; do I dwell in his ? 4

1205. தம்நெஞ்சத்(து) எம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்
எம்நெஞ்சத்(து) ஓவா வரல்.

தமது மனத்தினிடத்து யாம் ஒரு தரமாயினும் புகுந்து சேரவொட்டாமல் எம்மைக் காவல் கொண்டு தடுத்து நின்ற காதலர், எனது உள்ளத்தினிடத்துத் தாம் வருவதற்கு வெட்கம் கொள்ளார் போலும் !

Is my fond one so dead to shame that he ever steals into my heart banishing me from his ? 5

தோழிக்குத் தலைவி கூறியது

1206. மற்றியான் என்உளேன் மன்னோ? அவரொடியான்
உற்றநாள் உள்ள உளேன்.

யான் அத்தலைவருடன் சேர்ந்திருந்த காலத்து இன்பத்தை நினைப்பதனால் இத்துன்ப வெள்ளத்திலும் உயிர் வாழ்கின்றேன்; அது இல்லையாயின் யான் வேறு எவற்றால் உயிர் வாழ்வேன்.

The sweet recollection of my loving union sustains me. Or else how could I have lived through sorrow so long ? 6

1207. மறப்பின் எவன்ஆவன் மன்கொல்? மறப்பறியேன்
உள்ளினும் உள்ளம் சுடும்.

அவ்வின்பத்தை மறத்தலறியேனாய் இன்று நினைக்கவும் என் உள்ளத்தை அப்பிரிவானது சுடுகின்றது; அவ்வாறு அவர் பிரிவினைப் பொறாத நான் அதனை மறந்துவிட்டால் எதனால் இறவாதிருப்பேன்.

I am full of tender memories of my beloved. And yet his parting burns and bruises my heart. What then will be my unblest fate if I forget him ? 7

1208. எனைத்து நினைப்பினும் காயார்; அனைத்தன்றோ
காதலர் செய்யும் சிறப்பு.

எவ்வளவு மிகுதியாக நான் அவரை நினைத்தாலும் காதலரானவர் அதற்குக் கோபித்துக் கொள்ளார்; அவர் எனக்குச் செய்யும் இன்பமாவது, தாம் சினங்கொள்ளாதிருக்கும் அவ்வளவே யல்லவா ?

Many a time and oft do I summon him up to the sweet sessions of my silent thoughts and dreams. And he shows no wrath. What a heavenly favour ; he comes and ever comes. 8

1209. விளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்
அளிஇன்மை ஆற்ற நினைந்து.

முன்பு எல்லாம் நாமிருவரும் வேறல்லோம் என்று சொன்ன தலைவரது அருள் இல்லாமையை மிகவும் நினைந்து எனது இன்னுயிர் கழிகின்றது.

Once my fond one said we were one as body and soul. And now when I think of his cruelty, my life seems to ebb away. 9

தலைவி, சந்திரனை நோக்கிக் கூறியது

1210. விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்
படாஅதி; வாழி; மதி.

சந்திரனே! எனது நெஞ்சினின்று நீங்காதிருந்தே என்னைவிட்டுப் பிரிந்துபோன தலைவரை என் விழிகளால் கண்டு மகிழ்வுறும்படி நீ மறைந்து போவாய்! அவ்வாறு நீ செய்தால் வாழ்வாயாக!

Blest be thou, O Moon ! mayest thou be for ever flooding me with thy mellow light till mine eyes behold him who dwells in my heart and yet is far away. 10

அதிகாரம்—122

கனவுநிலை யுரைத்தல்

THE DREAMS OF A LOVE-LADEN HEART

தலைவி, தான் கண்ட கனவினது நிலைமையைத் தோழிக்கு உரைத்தல்.

கனவில் தலைவனது தூது வரக்கண்டு, மகிழ்ந்த தலைவி,
தோழிக்குக் கூறியது

1211. காதலர் தூதொடு வந்த கனவினுக்(கு)
யாதுசெய் வேன்கொல் விருந்து.

யான் வருந்துகின்றதை யறிந்து அதனை நீக்கவேண்டுமென்று கருதி, தலைவரது தூதைக் கொண்டு என்னிடத்து வந்த கனவினுக்கு விருந்தாக யாது செய்வேன்?

What sweet recompense shall I offer thee, O fond dream, that hath brought a message of love from my beloved ? 1

தூதுவிடக் கருதிய தலைமகள் கூறியது

1212. *கயல்உண்கண் யான்இரப்பத் துஞ்சின் கலந்தார்க்(கு)*
உயல்உண்மை சாற்றுவேன் மன்.

தூங்காது வருந்துகின்ற எனது கயல்போன்ற மையுண்ட கண்கள் எனது வேண்டுகோளுக் கிணங்கித் தூங்குமானால், கனவிலே எனது தலைவரைக் காண்பேன்; கண்டால், பிரிவை யாற்றியிருக்கும் என் தன்மையை நானே விரிவாக அவர்க்கு எடுத்துச் சொல்வேன்.

How I wish that my dark, fish-shaped, sleepless eyes had been flattered into a slumber ! Then would I fly on the wings of my dreams to my lone one and pour out to him all the flood of my griefs and sorrows I have borne so long. 2

தோழிக்குத் தலைவி கூறியது

1213. *நனவினால் நல்கா தவரைக் கனவினால்*
காண்டலின் உண்டென் உயிர்.

நனவிலே வந்து எனக்கு அருள் செய்யாத தலைவரைக் கனவினிடத் தாவது காணுதலால், என் உயிர் இருக்கின்றது; தோழீ! நீ வருந்தாதே.

I hold fast to this frail life, as my loved one always dwells in my dreams, though he fills not my waking moments. 3

1214. *கனவினான் உண்டாகும் காமம் நனவினான்*
நல்காரை நாடித் தரற்கு.

நனவில் வந்து சேர்ந்து இன்பந்தராத தலைவரை, அவர் போயிருக்கின்ற இடத்தைத் தேடிக் கண்டுபிடித்து, அவரைக் கொண்டு வந்து கொடுத்தலால், அக்கனவினிடத்தே இன்பமானது எனக்கு உண்டாகின்றது.

I delight in dreams for they bring unto me the beatific vision of my lord, which my waking hours can never. 4

1215. *நனவினால் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்*
கண்ட பொழுதே இனிது.

முன்பு நனவிலே அத்தலைவரைக் கண்டு அநுபவித்த இன்பமும், அப்பொழுதே இனிதாயிற்று; அதுபோல, இன்று கனவிலே கண்டு அநுபவித்த இன்பமும் அப்பொழுதே இனிதாயிற்று. ஆதலால் எனக்கு இரண்டு இன்பமும் ஒத்திருக்கின்றன.

I once drank in his sight with joy and now a like joy fills me, when I behold him in my dreams. 5

1216. நனவென ஒன்றில்லை யாயின் கனவினால்
காதலர் நீங்கலர் மன்.

நனவென்று சொல்லப்படுகின்ற ஒரு பாவி இல்லாவிட்டால், கனவினிடத்து வந்து கூடிய காதலர் என்னைப் பிரியமாட்டார்.

Would that my life were all a sweet dream of my dear one and there were no moments of wakefulness! 6

தலைவி கூறியது

1217. நனவினால் நல்காக் கொடியார் கனவினான்
என்எம்மைப் பீழிப் பது.

ஒரு நாளாவது நனவில் வந்து அருள் செய்யாத கொடியவர், நாள் தோறும் கனவில் வந்து எம்மை வருத்துவது எவ்வித உரிமை கருதியோ?

He cheats me of his presence in my waking state and doth no compassion show. Why doth he oft vex me in my dreams? 7

'நீ எனது தலைவனைப் பழியாதே' என்று
தோழிக்குத் தலைவி கூறியது

1218. துஞ்சுங்கால் தோள்மேலர் ஆகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து.

என் மனத்தினிடத்தே நீங்காது உறைகின்ற காதலர், நான் தூங்கும் போது என் தோளின்மீது இருப்பவராகிப், பின் விழிக்கும்போது விரைந்து வந்து நெஞ்சினிடத்திலேயே தங்கியிருப்பர்.

In my dreamful sleep I lovingly embrace him. When I awake, the rapturous vision is gone. Perhaps he has hid himself into my heart. 8

1219. நனவினான் நல்காரை நோவர் கனவினால்
காதலர்க் காணா தவர்.

தமக்கொரு காதலர் இல்லாமையால் கனவிலே அக்காதலரைக் கண்டு அறியாத மகளிர், தாம் அறிந்துகொள்ளும்படி நனவில் வந்து எனக்கு அருள் செய்யாத என்து காதலரை, அன்பிலரென்று நிந்தித்துப் பேசுவர்.

Had the damsels of this hamlet but lovers to cherish in dreams, they would scarce accuse my lord of cruelty for not visiting me in my waking moments. 9

1220. நனவினான் நம்நீத்தார் என்பர் கனவினானே
காணார்கொல் இவ்வூ ரவர்.

இவ்வூரிலுள்ள மகளிர், நனவிலே நம்மைவிட்டு நீங்கினாரென்று எனது தலைவர்மீது குறை கூறுகிற்பர்; ஏனென்றால் கனவினிடத்து அவர் நீங்காது நாடோறும் வருதலைக் கண்டறியாமையினால்தான்.

The village folk think that my beloved has cruelly forsaken me: poor ones, they know not that he oft visits me in my dreams. 10

அதிகாரம்—123

பொழுது கண்டிரங்கல்

SIGHING AT THE APPROACH OF EVEN-TIDE

மாலைப் பொழுது வந்தவிடத்து அதனைக் கண்டு தலைமகள் வருந்துதல்.

தலைவி, மாலைக்காலத்தைக் கண்டு வருந்திக் கூறியது

1221. மாலையோ அல்லை; மணந்தார் உயிர்உண்ணும்
வேலைநீ; வாழி பொழுது.

பொழுதே! நீ வாழக்கடவாய்! முன்னாள்களில் வந்த மாலைக்காலம் நீ அல்லை; இப்பொழுது காதலரைக் கூடிப் பிரிந்த மகளிரது உயிரை உண்ணும் இறுதிக் காலமாயிருக்கின்றாய்.

(She addresses the twilight hour)

O eve! thou wert once radiantly sweet with all the pleasant sounds and murmurs of joyous love. Now thou provest to be the deadly hour that witnesses nothing but languishing and dying hearts. 1

தலைவி தனது வருத்தத்தை மாலைக்காலத்தின்மீது
வைத்துக் கூறியது

1222. புன்கண்ணை; வாழி; மருள்மாலை எம்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை.

பகலுமாகாமல் இரவுமாகாமல் மயங்கிய மாலைப் பொழுதே! வாழக்கடவாய்; நீயும் எம்போல் ஒளியிழந்திருக்கின்றாய்; உனது நாயகனும் எமது கணவரைப் போலவே பிரிந்து வாராதிருக்கும் கொடுமை யுடையவனோ? சொல்வாயாக.

Why art thou sad and tearful? Why art thou pale? Is thine lord too as cruel as mine? 2

பொறுத்துக் கொள்ள வேண்டுமென்ற தோழிக்குத்
தலைவி கூறியது

1223. பனிஅரும்பிப் பைதல்கொள் மாலை துனிஅரும்பித்
துன்பம் வளர வரும்.

காதலர் என்னைக் கூடியிருந்த நாளெல்லாம் என் முன்னே நடுக்க மடைந்து நிறம்வேறுபட்டு நின்ற மாலைக்காலமானது, இந்நாள் எனக்கு உயிர்வாழ்தலில் வெறுப்புண்டாகும்படி செய்து, அதனால் உண்டாகின்ற துன்பம் நாளுக்குநாள் மிகுதியாகும்படி வருகின்றது.

O dew-pearled eve ! thou once gently stole over me and filled me with joy. And now thou bringest with thee only anguish and despair. 3

1224. காதலர் இல்வழி மாலை, கொலைக்களத்(து)
ஏதிலர் போல வரும்.

தலைவர் என்னோடு உடனிருக்கும் பொழுதெல்லாம் என்னுயிர் தளிர்த்து இன்பமடைய வந்த மாலைக் காலமானது, அவர் என்னைவிட்டுப் பிரிந்து போன இந்நாளில் அவ்வாறு வாராதிருத்தலே யன்றி, கொலைக் களத்திலே கொலை செய்பவர்போல என்னுயிரைக் கொண்டு போவதற்கு வருகின்றது.

When my lord was near, thou wert most welcome unto me. When he is away, thou comest with the looks of a hangman, who hies to a bloody field of slaughter. 4

1225. காலைக்குச் செய்தநன் றென்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.

காலைப்பொழுதும் மாலைப்பொழுதும் என் தலைவர் என்னோடு கூடியிருந்த நாளில் வருதல்போல் அல்லாமல், அவர் பிரிந்திருக்கிற காலமாகிய இன்று வெவ்வேறு வகையாக வேறுபட்டு வருகின்றன; அவற்றுள் காலைக்கு நான் செய்த நன்மை யாது ? மாலைக்கு நான் செய்த தீமை என்ன ?

Charming was the twilight hour when I joyed with my lord ; but bitter was the succeeding morn when he was gone. Now the even-tide is deadly cruel and the dappled-dawn doth assuage the endless sorrows of the night. Strange ! what good have I done to the once-bitter morn that now appears my friend and what evil to the once-sweet eve that now appears my foe? 5

1226. மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்த(து) இலேன்.

முன்பு எல்லாம் எனக்கு நட்பாய் இன்பஞ் செய்துவந்த மாலை நேரமானது, இன்று பகையாய்த் துன்பஞ் செய்தலைக் காதலர் பிரிதற்கு முன்னே நான் அறிந்திலேன்.

In sweet dalliance of love with my dear one, I never knew the tortures of even-tide. 6

1227. காலை அரும்பிப் பகல்எல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய்.

இக்காம நோயாகிய பூ, காலைப் பொழுதில் அரும்பாகத் தோன்றிப், பகற்பொழுதெல்லாம் பேரரும்பாய் முதிர்ந்து, மாலைப் பொழுதில் மலர்கின்றது.

Oh, how my malady of love begins, grows and becomes intense, like a flower that is a bud in the morning, that grows all day long and that blows into a blossom towards the close of the eve ! 7

1228. அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை.

முன்னெல்லாம் இனியதாய்த் தோன்றிய இடையரது வேய்ங்குழலின் நாதமானது, இப்பொழுது நெருப்புப் போலச் சுடுகின்ற மாலைப் பொழுதுக்குத் தூதுமாகி, அம்மாலைப் பொழுது வந்து என்னைக் கொல்லும் காலத்துக் கொல்லும் படையாகவும் ஆயிற்று.

When I was with my beloved, meltingly sweet was the shepherd's note that came floating across the hush of the evening. And when he is gone, how it pierces my soul like the deadly arrow of the enemy and heralds in the eve that but burns and torments me ! 8

1229. பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து.

இதற்கு முன்னெல்லாம் யானே மதிமயங்கி நோயால் வருந்தினேன்; இனிக் கண்டாரும் மதிமயங்கும் வண்ணம் மாலைக்காலம் வரும்பொழுது என்னுடன் இவ்வூரில் கண்டாரெல்லாம் மனம் மயங்கிக் காம நோயினால் துன்பம் அடைவர்.

How the gathering shades of the evening creep on me ! How my gnawing grief grows and ever grows ! And I shall soon pass away. Ere long the village will be shrouded in sorrow ; everywhere lamentations and wailings will be heard. 9

1230. பொருள்மாலை ஆளரை உள்ளி மருள்மாலை
மாயும்என் மாயா உயிர்.

காதலரது பிரிவைப் பொறுத்துக்கொண்டு இறந்து படாதிருந்த என் உயிரானது, இன்பத்தைப் பெரிதாக மதியாமல் பொருளின் இயல்பையே தமக்குப் பெரிதாகக் கருதிச்சென்ற அத்தலைவரை நினைந்து மயக்கஞ்செய்யும் மாலையாகிய இக்காலத்தில் மரித்தற்கு இருக்கிறது.

I have held on to life so long. How in the lengthening shadows of the night thoughts of the desertion of my lord, who hath left me all

alone to seek his fortune in distant climes and shores, crowd in upon me and smother my grief-smitten heart ! O for very sorrow, I shall swoon away and die. 10

அதிகாரம்—124

உறுப்பு நலன் அழிதல்

WASTING AWAY

தலைவியின் கண், தோள், நெற்றி முதலிய அவயவங்கள் தலைவனது பிரிவால் அழகு அழிதல்.

ஆற்றாமையால் வேறுபட்ட தலைவிக்குத் தோழி கூறியது

1231. *சிறுமை நமக்கொழியச் சேண்சென்றார் உள்ளி*
நறுமலர் நாணின கண்.

இவ்வாற்றாமை நம்மிடம் இருப்ப, நெடுந்தூரம் சென்ற தலைவரை நினைத்து நீ அழுதலால் உனது விழிகள் ஒளியிழப்பதுமன்றி, அவ்விழிகளுக்குத் தோல்வியடைந்து நின்ற நீலோற்பல முதலிய மலர்களுக்கு, இன்று நின் கண்கள் தோற்று வெட்கத்தை யடைந்தன.

Maid

Thou weepest and wailest over the fond one who hath left us forlorn for far-off shores. Thy lack-lustre eyes, that once triumphed over flowers in bloom, now, for shame, fear to look on them. 1

1232. *நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்*
பசந்து பனிவாரும் கண்.

நிறம் வேறுபட்டு நீர் ஒழுகுகின்ற நின் கண்கள் காதலர் அருள் செய்யாமையைப் பிறர்க்குச் சொல்வன போலத் தோற்றுகின்றன; ஆதலால் நீ பொறுத்தல் வேண்டும்.

Thine eyes have grown lustreless and dim through tears continually streaming adown thy cheeks. And they seem to betray thine lord's cruelty. So thou must needs bury thy grief. 2

1233. *தணந்தமை சால அறிவிப்ப போலும்*
மணந்தநாள் வீங்கிய தோள்.

காதலர் மணந்த காலத்தில் இன்பமிகுதியால் பூரித்த நினது தோள்கள், இன்று அவர் பிரிந்திருப்பதைப் பிறர்க்கு விளங்க அறிவிப்பன போன்று இளைக்கின்றன; இது தகாது.

On thy bridal day how thine shoulders fair swelled with joy and pride! Alas! lank and lean have they grown now. How they proclaim thy sire's indifference to thee! 3

1234. பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.

தலைவர் பிரிந்த அன்று அவராலே பெற்ற செயற்கை அழகேயன்றிப் பழைய இயற்கை யழகையும் இழந்த நினது தோள்கள், இன்று அதற்கு மேலே தம் பெருமையும் இழந்து பசும்பொன் வளைகளும் கழலப்பெற்றன.

My dear one, weep not. Thy fair shoulders, fairer with thine sweet one's embrace, are now grown lean and slender. Look, how thine golden bracelets slip down thine pale and wasted arms! 4

1235. கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்.

'படுக்கையிற் றழுவும் நமது கைகள் சிறிது விலகினும் பொறுக்கமாட்டாத தலைமகள் இத்தகைய நீண்டகாலம் நாம் பிரிந்திருந்தால் எப்படிப் பட்ட வருத்தத்தைத்தான் அடையாதிருப்பாள்' என்று நினையாத தலைவராகிய கொடியவரது கொடுமையை மற்றொருவர் கூறவேண்டுவதில்லை; அவரொடு சேர்ந்து தழுவிய தோள்களும் வளையல்களுமே பிறர்க்குத் தெரிவிக்கின்றன.

Thy shoulders have now lost their wonted grace. Thy bracelets loosely slip down thy withered arms. How these blazon out the cruelty of thy cruel prince! 5

தோழிக்குத் தலைவி கூறியது

1236. தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக்
கொடியர் எனக்கூறல் நொந்து.

கணவர் பிரிந்த வருத்தத்தை நான் பொறுத்திருக்கவும், வளைகள் என் கைவசப்படாமல் நழுவும்படி தோள்கள் வருத்தமடைந்து மெலிந்துபோக, அவற்றைக் கண்டு, நீ அவரைக் கொடியரென்று கூறுதலைப் பொறாது எனக்குள்ளேயே நொந்து வருந்துகின்றேன். (அயலார் அறிந்தால் சிரிப்பர்.)

She

Maid, thou chidest my lord, because the bracelets of my arms have slid down and I have grown pale and thin. The bitter reproaches you heap on him, I can no longer bear. I groan and grieve within myself at thy wanton insults. 6

தலைவன் இயலைப் பழித்தது பொறாமல்
தலைவி தன் மனத்துக்குக் கூறியது

1237. பாடு பெறுதியோ நெஞ்சே! கொடியார்க்(கு) என்
வாடுதோள் பூசல் உரைத்து.

நெஞ்சமே! என்னைவிட்டுப் பிரிந்து போய்க் குறித்த நாளில் வராமல் மறந்த கொடியவராகிய தலைவர் இருக்குமிடத்துக்கு நீசென்று என்னுடைய தோள் வாட்டத்தினால் பிறர் கூறும் பழிமொழிகளை அவர்க்குச் சொல்லி, அதனால் சிறந்த புகழையடைய வல்லையேல் அதற்குச் சமானமானது மற்றொன்று இல்லை.

Soliloquizes

Heart, desirest thou to be crowned with glory? Then speed unto my dear one and tell him how people here reproach him and how my charms have withered and vanished away. 7

தலைவன் முன்நிகழ்ந்தவற்றை நினைந்து
தன்னுள்ளே கூறியது

1238. முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்.

தன்னை இறுகத் தழுவியகைகளைச் சிறிது நெகிழவைத்தவுடன், சிறிய அக்காலத்தையும் சகியாமல் பசிய வளையல்களை அணிந்த மடந்தையின் நெற்றி பசலை நிறமாக மாறியது; அத்தகைய நெற்றி இப்பிரிவிற்கு எவ்வாறாகுமோ ?

He

How my heart thinks of the happy days that are no more! On a lovely night, imparadised in one another's arms we lay; I loosened my close clasp but a while, when my bright-braceleted one became suddenly pale. Oh! how looks now her fair brow these long years of my weary exile in a far-off field of battle! 8

1239. முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்.

அவ்வாறு தழுவுங்காலத்தே கைகளைச் சிறிது நெகிழ விட்டதனால் இடையே சிறிது காற்று நுழைய அதனைப் பொறாது அம்மங்கையின் பெரிய குளிர்ந்த கண்கள் பசலை நிறத்தையடைந்தன. அப்படிப்பட்ட கண்கள் மலை, காடு, நாடு ஆகிய இவ்விடையீடுகளை எல்லாம் எவ்வாறு பொறுத்துள்ளன வோ ?

When I lay nestled in my beloved's ambrosial arms, an envious breath of wind crept in between us. And lo! her eyes, dark-hued as the

rain cloud, grew pale and dim. How endureth she the pangs of my separation, now that cruel fate hath hurled in between us perilous seas and weary wastelands! 9

1240. *கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே*
ஒள்நுதல் செய்தது கண்டு.

இறுகத் தழுவும்போது கைகள் சிறிது விலகக்கண்ட கண்ணின் பசலை நிறமானது துன்பமுற்றது; எதனாலெனில் தனது அருகிலுள்ள ஒளியை யுடைய நெற்றியானது, அடைந்த பசலை நிறத்தைக் கண்டதனால்தான்.

How wan have grown my beauteous one's looks! Is it out of compassion for the pale-grown, bright-brow that her eyes too have become dim and sallow? 10

அதிகாரம்—125

நெஞ்சொடு கிளத்தல்

SOLILOQUY

தலைவன் பிரிவாற்றாமை அதிகரிக்கத் தனக்கு ஓர் பற்றுக்கோடு காணாத தலைவி தன் மனத்தொடு சொல்லுதல்.

தலைவி, தன் ஆற்றாமை தீரும் திறத்தை
நாடியது

1241. *நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே! எனைத்தொன்றும்*
எவ்வம்நோய் தீர்க்கும் மருந்து.

நெஞ்சே! எந்த விதத்தாலும் துன்பஞ் செய்யும் காமநோயினைத் தீர்க்கும் மருந்து எனக்கு அறியமுடியவில்லை; நீ இதனை ஆராய்ந்து பார்த்து எவ்வளவு சிறியதாயிருந்தாலும், ஒரு மருந்து எனக்குச் சொல்வாயாக.

She

Gnawing grief weighs me down. O heart, canst thou minister to a mind smitten with love? 1

தலைமகனைக் காணுதற்கு மிக்க ஆசைகொண்டு
தலைமகள் கூறியது

1242. *காதல் அவர்இலர் ஆகநீ நோவது*
பேதைமை வாழி; என் நெஞ்சு!

என் மனமே! நீ வாழ்வாயாக! நமது தலைவராகிய அவர் நம்மீது ஆசை யற்றிருக்கவும், நீ அவர் வரவினை நோக்கி வருந்துவதற்குக் காரணம் உனது அறியாமையே! வேறில்லை.

My fond heart, what folly is thine that thou thinkest of him, who hath no thought for thee ! 2

1243. இருந்துள்ளி என்பரிதல் ; நெஞ்சே ! பரிந்துள்ளல்
பைதல்நோய் செய்தார்கண் இல்.

நெஞ்சே ! நமது தலைவரிடத்து விரைந்து போவதுஞ் செய்யமாட்டாய், அவர் வந்திலரே என்று இறந்துவிடவும் மாட்டாய்; இவ்விரண்டுஞ் செய்யாமல் அவர் வரவை நினைத்து இங்கிருந்து வருந்துதலால் பயன் யாது ? இந்தத் துன்பத்தைச் செய்யும் அவர் நம்மீது இரக்கங்கொண்டு நம்மிடம் வரமாட்டார்; இதனால் நாம் அவரிடம் செல்லுதலே நியாயம்.

My heart, he hath caused us this woe and he remembers us not. Why mopest thou and sadly complainest in futile grief? 3

1244. கண்ணும் கொளச்சேறி நெஞ்சே ! இவை என்னைத்
தின்னும் அவர்க்காணல் உற்று.

நெஞ்சே ! நீ தலைவரிடத்துச் செல்லுவையாயின், இக்கண்களையும் உடன்கொண்டு செல்வாயாக; அவ்வாறின்றி நீ மாத்திரம் போவாயானால் இக்கண்கள் அவரைக் காணவேணும்என்கிற அவாவின் மிகுதியால், 'அவரை நீ காட்டு' என்று என்னைத் தின்பன போல வருத்தும்.

What a devouring longing do mine eyes betray to behold my lord! Heart, when thou seekest him, take with thee as thy companion my eager eyes too. 4

1245. செற்றார் எனக்கை விடல்உண்டோ நெஞ்சேயாம் !
உற்றால் உறாஅ தவர்.

மனமே! யாம் அவரை விரும்ப, நம்மை விரும்பாத அத்தலைவர் நம்மீது வெறுப்புக் கொண்டவரென்று நினைந்து, அவருடன் ஊடல் கொண்டு அவரைக் கைவிட்டிருக்கும் திறமை நமக்குண்டோ ? இல்லை.

O soul! have I the strength to banish from my heart my adorable one, though he hath used me ill ? 5

மனத்தை நோக்கித் தலைவி கோபித்துக் கூறியது

1246. கலந்துணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்தி; என் நெஞ்சு.

என் மனமே ! எனது புலவியைத் தமது கலவியினாலே போக்கவல்ல திறமையையுடைய தலைவரைக் கண்டால் பொய்யாகவாயினும் அவரோடு புலந்து பின்பு அதனை நீங்கச் செய்யாய் ! அங்ஙனம் செய்ய அறியாத நீ இப்பொழுது அவரைக் கொடியரென்று பொய்யாக நிந்திக்கின்றாய் ; இது தகுதியல்ல ; இனி இக்கருத்தை விட்டு அவரிடம் செல்லத் துணிவாயாக !

How my beloved drowns my fitful wrath in loving embraces of his ! O heart, if thou but beholdest him, thou wouldst dance for joy and fly to him. But now thou feignest anger ; why playest thou such antics with me ? 6

தலைவி தன் னெஞ்சொடு கூறியது

1247. காமம் விடுஒன்றோ நாண்விடு ; நன் னெஞ்சே !
யானோ பொறேன்இவ் விரண்டு.

நல்ல மனமே ! ஒன்று நாணத்தை விடமாட்டாயானால் காம விருப்பத்தை விட்டுவிடு ; அல்லது காம விருப்பத்தை விடமாட்டாயானால் நாணத்தை விட்டுவிடு ; இவ்விரண்டினையும் சகித்துக்கொண்டிருத்தல் உனக்கு முடியுமாயினும் எனக்கு முடியாது.

O my blest heart, thou art swayed between love and shame. O heavy hour ! O insupportable grief ! 7

1248. பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் ; பேதை ; என் னெஞ்சு.

என் னெஞ்சே ! எனது ஆற்றாமையை யறியாராதலின் இரக்கங்கொண்டு வந்து அருள் செய்திலர் என்று நினைந்து எனது துன்பத்தை அறிவிக்கும்பொருட்டு, நம்மைப் பிரிந்துபோன காதலன் பின்னே ஏக்கங்கொண்டு செல்லலுற்ற நீ யாது மறியாத அறிவிலியேயானாய் !

Thou wailest over the unfeeling one. What folly is thine, O heart, still to long for him who hath abandoned thee ? 8

1249. உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ
யாருழைச் சேறிஎன் னெஞ்சு.

என்னுடைய மனமே ! காதலர் உன் அகத்திருப்பவராக முன்பெல்லாம் கண்டிருந்தும், நீ இப்பொழுது புறத்திலே அவரைத் தேடிச் செல்வது யாரிடத்து ?

Wither wanderest thou, O my heart ? Dost thou not know that my love is already enthroned in thee ? 9

1250. துன்னாத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா
இன்னும் இழத்தும் கவின்.

நம்மிடம் மீண்டும் வாராவண்ணம் பிரிந்து சென்ற காதலரை, நாம் நமக்குள்ளே உடைத்தாயிருக்கவும், புறத்தில் தேடிச் சென்றோமானால், முன்பு இழந்த புறத்து அழகேயன்றி, நிறையாகிய அகத்தழகையும் இழந்து விடுவோம்.

How the burning thoughts of my beloved who hath deserted me prey upon my soul ! How my charms are fast fading away ! 10

அதிகாரம்—126

நிறை யழிதல்

THE LOSS OF MAIDEN MODESTY

தலைவி, மனத்தில் அடக்க வேண்டுவனவற்றைக் காதலன் மீதுள்ள விருப்ப மிகுதியால் அடக்கமாட்டாது வாய்விட்டுக் கூறுதல்.

நாணும், நிறையும் அறியாமல் நீ போறுத்துக்
கோள்ள வேண்டுமேன்ற தோழிக்குத் தலைவி கூறியது

1251. காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.

நாணமென்னும் தாழ்க்கோலால் தாழிட்ட நிறையென்னும் கதவினைக், காமம் என்னும் கூந்தாலி (கோடாலி) முறிக்கின்றது.

She

How the doors of my heart bolted and barred with my maiden modesty yield to the ceaseless batter of my surging love ! 1

நேஞ்சின்கண்தோன்றிய காமம் நேஞ்சாலேயே
அடக்கப்படுமேன்ற தோழிக்குத் தலைவி சோல்லியது

1252. காமம் எனஒன்றோ கண்இன்றென் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில்.

யாவரும் தொழிலைவிட்டு உறங்குகின்ற நள்ளிரவிலும் எனது மனத்தைத் தண்டித்து நிறுத்தி ஆளுகின்றது; ஆதலால் காமம் என்னும் குணமொன்று என்னிடத்தில் கண்ணோட்டம் இல்லாமல் இருக்கின்றது.

மகளிர் காமம் மறைக்கப்படுமேன்ற தோழிக்குத்
தலைவி கூறியது

Bitter-cruel is my love ! How it ever assails my poor heart even in the dead hour of the night, when the whole world is rocked in sweet slumber ! 2

1253. மறைப்பேன்மன் காமத்தை யானோ; குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும்.

இக்காமத்தை, யான் எனக்குள்ளே மறைத்துவிடக் கருதுகிறேன்; அதுவோ! நான் நினைத்தபடி எனக்கு அடங்காமல் அடக்கமுடியாத தும்மல் போல வெளிப்பட்டு விடுகின்றது.

I would feign hide my passion; but it would break out like the half-smothered sneeze. 3

1254. நிறையுடையேன் என்பேன்மன் ; யானோஎன் காமம்
மறைஇறந்து மன்று படும்.

இதுவரையிலும் என்னை நிறையுடையவளாகவே நினைத்திருந்தேன்; அவ்விதம் நினைத்திருந்ததால் பயனென்! இப்பொழுது எனது காமம் மறைத்தலைக் கடந்து பலரும் அறியும்படி வெளிப்பட்டுக் கிடக்கின்றது.

I have till now plumed myself on my modesty : but oh, my burning love doth betray me. 4

நம்மை மறந்தவரை நாமும் மறக்க வேண்டுமென்ற
தோழிக்குத் தலைவி கூறியது

1255. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதொன்(று) அன்று.

தம்மை விட்டுப் பிரிந்து சென்ற தலைவரோடு செல்லாது தாமும் நீங்கியிருக்கும் நிறையுடைமையைக் காமநோய் அடையாதார் அறிவரேயன்றி, அடைந்தவர் அறியார்.

Though my cruel prince hath spurned me a thousand times, my fond heart still flies after him. Dost thou not know, my maid, that dignity and decorum are alien to love-stricken hearts ? 5

1256. செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ !
எற்றென்னை உற்ற துயர்.

என்னை விட்டுப் பிரிந்து சென்ற காதலர் பின்னே நான் செல்ல விரும்புதலால் என்னைப் பீடித்த இத்துன்பமானது எத்தன்மைத்து ? யான் சொல்லிக் கேட்பதற்குரியதன்று. (மிகக் கொடியது.)

What solicitude ! what loving-kindness ! The grief of my heart goads me to seek the heartless one that hath abandoned me. 6

பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனோடு நிறையழிந்து கூடிய தலைவி,
'நீ புலவாமைக்குக் காரணம் யாது ? என்ற தோழிக்குக் கூறியது

1257. நாணென ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின்.

நம்மால் விரும்பப்பட்ட தலைவர் பரத்தையிற் பிரிந்து வந்து அன்பின் மிகுதியால் நாம் விரும்பிய கலவி வகைகளைச் செய்யும் அளவில் நாணம் சிறிது மில்லாதிருந்தோம்.

When my sweet one is nigh, I forgive all the injuries and deceits he hath practised on me. My wounded pride melts away, and I willingly yield unto his loving embraces and forget myself. 7

1258. பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோ நம்
பெண்மை உடைக்கும் படை.

நம்முடைய நிறையாகிய அரணைத் தகர்க்கும் ஆயுதம், பொய் பலவற்றையும் பேசுந் திறமை யமைந்த நமது தலைவனாகிய கள்வனது வணக்கமுள்ள இனிய மொழிகளே அன்றோ? அவ்வாறாயின் அவ்வரண் எங்ஙனம் அழியாது நிற்கும்?

How cunningly hath my sweet one lured me! His smooth, wily tongue hath battered away the barriers of my maiden reserve. 8

1259. புலப்பல் எனச் சென்றேன்; புல்லினேன் நெஞ்சம்
கலத்தல் உறுவது கண்டு.

தலைவர் வந்தபொழுது பிணங்குங் கருத்தோடு, அவர் எதிர் நில்லாது வேறொரு இடத்துக்குப் போனேன்; அங்குப் போயும் என் மனம் நிறையின் நில்லாமையால் தளர்ந்துபோய் அவரோடு கலவி செய்யத் தொடங்கியதை அறிந்து இனி பிணங்குதல் முடியாதென்று எண்ணி, அவரைத் தழுவினேன்.

They said that my dear one had come. I went to frown on him but remained feigning anger. What a conflict! And with my heart's sweet surrender I followed and soon was lost in him. 9

1260. நிணம்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல்.

நிணத்தைத் தீயில் இட்டால் அது உருகுவதுபோலத் தமது காதலரைக் கண்டால் நிறையழிந்து உருகும் நெஞ்சினையுடைய மாதருக்கு, அக் காதல் தம்மிடத்து நெருங்கி யருகில் வரும்போது ஊடல் செய்வோம் என்று நினைத்தபடி அந்நிலையிலேயே நிற்க உறுதியுண்டாகுமோ? உண்டாகாது.

Can I quarrel with my beloved and stand aloof from his dear embraces—I who have a heart that doth melt like wax before fire? 10

அதிகாரம்—127

அவர்வயின் விதும்பல்

The Yearning of Lovers

தூரதேசத்தே பிரிந்திருந்த தலைவனும் தலைவியும் ஆசை மிகுதியால் ஒருவரை யொருவர் காணுதற்கு விரைதல்.

தலைவி தலைவனைக் காண விரைந்து கூறியது

1261. வாள் அற்றுப் புற்கென்ற கண்ணும்; அவர்சென்ற
நாள் ஒற்றித் தேய்ந்த விரல்.

என் விரல்கள், தலைவராகிய அவர் நம்மைப் பிரிந்து சென்ற நாட்களை அளவிடுதற்குச் சுவரிலே குறிவைத்துத் தொட்டெண்ணித் தேய்ந்து போயின; அன்றியும் என் கண்கள் அவர் வரும் வழியைப் பார்த்து ஒளி யிழந்து (நுட்பமாகிய பொருள்களை யறியும் திறமை யில்லாமல்) புல்லிய வாயின.

She

With endless wistful gazing, my eyes have grown weary and dim and lustreless. My tender fingers, that have numbered and counted on the wall the days of his return, have worn away. And he comes not. 1

ஆற்றாமை மிகுதியால் அடிக்கடி நீ நினைத்தல் தகுதியல்ல; சிறிது மறக்க வேண்டுமென்ற தோழிக்குத் தலைவி கூறியது

1262. இலங்கிழாய்! இன்று மறப்பின்என் தோள்மேல்
கலங்கழியும் காரிகை நீத்து.

ஒளிவிட்டு விளங்கும் அணிகளையுடைய தோழி! மரித்தற்குரிய இந் நாளில் எனது தலைவரை மறப்பேனாயின் மறுபிறப்பிலும் அழகானது என்னை விட்டு நீங்கும்படி, எனது கைகள் வளையல்கள் கழலப்பெறுவனவுமாம்.

Bright-jewelled maid, were I to forget my lord even for a moment, all my loveliness would fade away, My shoulders would lose their grace and my bracelets would drop down one by one from my wasted arms. And the pangs of my separation would hound me even beyond my grave. 2

1263. உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல் நசைஇ இன்னும் உளேன்.

என்னுடனிருந்து இன்பம் அனுபவிக்க விரும்பாமல், பகைவரை வெல்ல விரும்பி, எனக்குத் துணையாதலை அலட்சியம் செய்துவிட்டுத், தமது ஊக்கமே காரணமாகச் சென்றவர், அவற்றை இகழ்ந்து இங்கு வருதலை விரும்புவதனால் யான் இன்னும் பிழைத்திருக்கின்றேன்.

He went, on victory bent, to far-off fields of battle and left me to desolation and despair. And now only the fond hope of his return sustains the dying spark of my life. 3

1264. கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொண் டேறுமென் நெஞ்சு.

காமம் நீங்கப்பெற்றவராய் நம்மைவிட்டுப் பிரிந்துபோன தலைவர், நினைத்த தொழில் முடிந்தவுடன், முன்னைய காம உணர்ச்சியோடே நம்மிடம் வருதலை எண்ணி, என் மனம் துயர் நீங்கி மேன்மேல் கிளைத்தெழுகின்றது.

Heartless, he left me forlorn. Yet my heart is rid of sorrow and swells with joyous rapture when it feeds on the hope of his home-coming. 4

1265. காண்கமன் கொண்கனைக் கண்ணாரக்; கண்டபின்
நீங்கும்என் மென்தோள் பசப்பு.

எனது கண்கள் நிறையும்படி என் தலைவரை நான் காணவேண்டும்; கண்டபின்னரே என் மெல்லிய தோளில் பரவிய பசப்பு நிறம் நீங்கும்.

Let me but have the fill of my joyous gaze on my beloved and the sallowness of my slender shoulders shall die away. 5

1266. வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட.

இவ்வளவு நாளாக வராமல் மறந்திருந்த கணவன் ஒருநாள் என்னிடத்தில் வருவானாக; வந்தால் துன்பஞ் செய்கின்ற இந்நோய் எல்லாம் நீங்கும்படி அவனோடு சேர்ந்தடையும் இன்பத்தை ஐம்பொறிகளாகிய வாயினால் உண்பேன். (அநுபவிப்பேன்)

Let my dear one but return. I shall drink in with my eyes his sight and in forgetful joy drown all the sorrows and sufferings of my heart. 6

1267. புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்அன்ன கேளிர் வரின்.

என் கண்போன்ற காதலர் வருவராயின், இதுவரையிலும் வராதிருந்தமைக்காக ஊடல் கொள்வேனோ? அல்லது, இதுவரையிலும் பொறுத்துக் கொண்டிருந்த துயரை யொழிக்கும்பொருட்டு, அவரைத் தழுவுவேனோ? ஊடலும் கூடலும் ஆகிய இரண்டையும் கலந்து செய்வேனோ? தெரியவில்லை.

When my sweet lord, dear to me as mine eyes, comes home, shall I wrangle with him or shall I embrace him or shall I frown and fondle him? 7

தலைவன், தலைவியை நினைந்து தனக்குள்ளே கூறியது

1268. வினைகலந்து வென்றீக வேந்தன்; மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து.

வேந்தன் போர் செய்து பகையை வெல்வானாக; வென்றவுடன் யாமும் மனைவியிடம் சென்று அவ்விடத்து வரும் மாலைக்கு விருந்து செய்யக் கடவோம்.

He

Let trumpets blow and war cries be raised. Let victory crown my sovereign liege. I shall hurry home the very evening and spend a festal night with my bonnie bride. 8

1269. ஒருநாள் எழுநாள்போற் செல்லும் சேண் சென்றார்
வருநாள்வைத்(து) ஏங்கு பவர்க்கு.

தூர தேசத்துக்குச் சென்ற தம் காதலர் எப்பொழுது திரும்பி வருவாரென்று அடிக்கடி நினைந்து, அவர் திரும்பி வரும் நாளை மனத்தில் வைத்து ஏங்கியிருக்கும் மகளிர்க்கு ஒருநாள் பல நாளாகத் தோற்றும்.

How anxiously will my beloved be awaiting my return from distant fields ! I must hasten home, for does not a day lengthen out into eternity to the eager-expectant hearts ? 9

1270. பெறின்என்னாம் பெற்றக்கால் என்னாம் உறின்என்னாம்
உள்ளம் உடைந்துக்கக் கால்.

நமது காதலியாகிய தலைமகள் நமது பிரிவினைப் பொறாமல் நெஞ்சங் கெட்டு இறந்து படுமிடத்து நம்மைப் பெறக்கடவளானால் என்ன பயன்? அன்றிப், பெற்றால்தான் பயன் யாது? மெய்யுறக் கலந்தால்தான் யாது பயன்? இம் மூன்றினாலும் ஒரு பயனுமில்லை.

What availeth my home-return, the hour of joyous meeting and the long-wished-for union, if the heart of my beloved lies bleeding torn with grief. Oh ! I must fly unto her, lest she should die of a broken heart and I be bereft of her hearty embraces. 10

அதிகாரம்—128

குறிப்பறிவுறுத்தல்

DIVINING THE THOUGHTS OF EACH OTHER

தலைமகன், தலைமகள், தோழி ஆகிய இம்மூவரும் ஒருவர் குறிப்பினை ஒருவருக்குத் தெரிவித்தல்.

[The lovers have met. They live in bliss. But soon thoughts of separation creep in. The beautiful one is sad. The lover questions her sulky looks.]

தலைவன் தலைவிக்குக் கூறியது

1271. கரப்பினும் கைஇகந்(து) ஒல்லாநின் உண்கண்
உரைக்கல் உறுவதொன்(று) உண்டு.

நீ மறைத்தாயாயினும் அதற்கு உடன்படாமல் உனது கருத்தைக் கடந்து உனது மையுண்ட கண்களே என்னிடம் தெரிவிப்பதற்குரிய ஒரு காரியம் உளது. நீ அதனைத் தெளிவாய் எனக்குச் சொல்லுவாயாக !

He

O dear! why dost thou look sad and concealest from me thy secret thoughts? Thine dark eyes betray thee. Speak thy mind. 1

நாணத்தால் தலைவி, தன் கருத்தைக் கூறதவிடத்து,
தலைவன் தோழிக்குக் கூறியது

1272. கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோள் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது.

என் கண்ணிறைந்த அழகினையும், மூங்கிலையொத்த தோளினையு முடைய நினது தோழிக்குப் பெண் பாலாரிடத்து நிறைந்துள்ள மடமை அவ்வளவிற்கு அதிகமாகவே இருக்கின்றது.

(She is silent. He addresses the maid)

Maid, behold my radiant one who bewitches me with her lovely looks and whose shoulders are curved like the slender bamboo. Oft do I question her and her sulky looks. She replies not. More than a woman's wonted reserve is her maiden bashfulness. 2

1273. மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன்(று) உண்டு.

கோக்கப்பட்ட படிகமணியினுள்ளே உள்ள நூல் வெளியிலேயும் தெரிதல்போல, இம்மங்கையினது அழகினுள் இருந்து வெளியே தோன்றுகின்றதாகிய ஒரு குறிப்பு இருக்கின்றது; அதனை நீ அறிந்து கூறல் வேண்டும்.

How my beloved betrays herself! Her hidden thought gleams out of her radiance like a silken-slender thread that shines through a necklace of crystal beads. 3

1274. முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதொன்(று) உண்டு.

அரும்பினது முகிழ்ப்பினுள் உள்ளதாய் வெளியில் தோன்றாத மணம் போல, நின் மாது என்னோடு நகைக்கக் கருதுகின்ற நகையினது அரும் பினிடத்து உள்ளதாய் வெளியே தோன்றாததோர் குறிப்பு இருக்கின்றது. தோழி, நீ அதனை அறிந்து எனக்குச் சொல்லவேண்டும்.

There is a hidden meaning in her arched smile, as there is fragrance hidden in an unblown bud. 4

1275. செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கும் மருந்தொன்(று) உடைத்து.

நெருங்கிய வளையல்களை அணிந்தவளாகிய தலைவி, என்னிடத்து இல்லாத பிரிவொன்றைத் தானே நினைத்துக் கொண்டு, அது காரணமாக எனக்குத் தெரியாமல் காட்டிப்போன குறிப்பு, என் மிக்க துயரை ஒழிக்கும் மருந்தாவதொன்றனை யுடையது.

Look, how my adorable one decked with many a ringing bracelet, stealthily steals away from us with a meaning in her looks! I can read her heart as in an open book. Hie and tell her that I shall never abandon her for all the world. And in your message lies the solace to my agonised soul. 5

தலைவனது கருத்தை யறிந்த தலைவி, அக்கருத்தைத்
தெளிவிக்கச் சென்றதோழிக்குக் கூறியது

1276. பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல் அரிதாற்றி
அன்பின்மை சூழ்வ(து) உடைத்து.

தலைவர் வந்து, தமது பிரிவாலாகிய துன்பத்தை மிகுதியாக நீங்கச் செய்து நாம் மகிழும் வண்ணம் கூடுகின்ற கலவியானது, மீண்டும் அத்துன்பத்தினை அரிதாகப் பொறுத்திருந்து, அக்காதலரது அன்பில்லாமையை நாம் நினைப்பதற்குரிய தன்மையை யுடையது.

(She addresses the maid)

How full of tender caresses his endearing embraces; yet how full of frightful forebodings! My missgivings come in crowds. I dread his departure. 6

1277. தண்ணம் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை.

குளிர்ந்த துறையையுடைய மருத நிலத்தலைவன், நம்மை மெய்யினால் கூடியிருந்தே மனத்தினாற் பிரிந்தமையை, அவன் குறிப்பால் நாம் அறிவதற்கு முன்னமே நம் வளையல்கள் நம்மினும் அதிகமாக அறிந்துகொண்டன.

Swifter than myself, my bracelets, slipping down my arms, have divined the secret thought of my sweet one, who is the sovereign of yon cool regions by the sounding sea-shore. 7

1278. நெருநற்றுச் சென்றார் எங்காதலர்; யாமும்
எழுநாளேம் மேனி பசந்து.

எமது காதலர் நேற்றைத் தினமே பிரிந்து போயினார்; அப்பிரிவினால் உடம்பு வேறுபட்டுப் பசப்பு நிறமடைந்து எழுநாளாயின.

It was but yesterday my lover left me. But my complexion hath turned sallow long before. 8

தலைவி குறிப்பறிந்த தோழி, அதனைத்
தலைவற்கு உணர்த்தியது

1279. தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண்(டு) அவள்செய் தது.

தலைமகனே நீ பிரியமாட்டாயென்று தலைமகட்குத் தேறுதல் கூறிய விடத்து, அவள் எனது சொல்லால் தேறாமல் தலைவன் பிரிய நான் இவ்விடமிருந்தால் இவை கழன்றுவிடுமென்று தன் வளைகளை நோக்கியும், அதற்குப் பிறகு வளைகள் கழல்வதனால் இவைமெலியுமென்று, அத்தோள்களை நோக்கியும், இவ்விரண்டும் உண்டாகாதபடி அத்தலைவனோடு நடந்து நீங்கள் காக்க வேண்டுமென்று தன் அடிகளை நோக்கியும் அவ்விடத்து அவள் செய்த குறிப்பானது உடன்போக்கைத் தெரிவிக்கிறது.

(The maid addresses the lover)

Alone and silent thine queen stood. She gazed on her lovely bracelets; she looked on her shoulders sheen; she bent down her looks on her tender feet, as though she would follow you. 9

தலைவன், தன் பிரியாமைக் குறிப்பினைத்
தோழிக்குத் தெரிவித்தது

1280. பெண்ணினால் பெண்மை உடைத்தென்ப கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு.

மகளிர், தமது காமநோயைத் தோழியர்க்கு வாயினாற் கூறாது கண்ணினால் சொல்லியும், அதனைத் தீர்த்தல் வேண்டுமென்று அவரைக் கேளாது, உடன்போதல் குறித்துத் தமது பாதங்களை வேண்டுதல், தமக்கு இயல்பாய் அமைந்த பெண்மைக் குணத்திற்கு மிகவும் மேற்பட்டதென்று கற்றறிந்தோர் சொல்லுவர்.

(The lover addresses the maid)

Look, how my joyous one parleys with me with her eyes, revealing to me her inward sorrow and her yearning to follow me. Doth she not surpass herself in womanly delicacy? 10

அதிகாரம்—129

புணர்ச்சி விதும்பல்

THE LONGING FOR EACH OTHER'S EMBRACE

தலைமகனும் தலைமகளும் புணர்ச்சியினிடத்தே விரைதல்.

பிரிய நினைத்த தலைவனோடு நீ புலவாமைக்குக் காரணமேன் என்று
நகைத்த தோழிக்குத் தலைவி கூறியது

1281. உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில்; காமத்திற்(கு) உண்டு.

நினைத்த வளவிலே உணர்வு அழியாது களிப்படைதலும், கண்ட வளவிலே உணர்வழிந்து மகிழ்ச்சியடைதலும் கள்ளுண்டார்க்கு இல்லை; காமமுடையார்க்கு உண்டு.

She

O maid, my soul hath now its absolute content. When I think of my lord, I am in heaven. And in his gracious presence, I am all oblivion. The thought and sight of wine scarce intoxicate a drunkard. But love does. Verily love maddens more than wine. 1

தனது புணர்ச்சி விரைதலைப் பிறர் மேலிட்டுத் தலைவி கூறுதல்

1282 தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின்.

மகளிர்க்குக் காமம், பனையளவைக் காட்டிலும் மிகுதியாக உண்டாயின், அப்பொழுது தம் தலைவரோடு சிறிதும் ஊடல் செய்யாதிருக்கவேண்டும், செய்தால் துன்பம் மிகும்.

How I wish that women, whose giant passions swell palm-high, give themselves up to their fond ones! Let them not show the smallest hint, even to the measure of a millet seed, of their sulkiness. 2

அத்தன்மையுடைய யான் கணவனோடு ஊடல் செய்வது எவ்வாறு என்று தலைவி கூறுதல்

1283. பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணா(து) அமைபல கண்.

எமது தலைவன், நம்மை விரும்பாமல் அவமதித்துத் தான் விரும்பியபடியே செய்தாலும், என் கண்கள் அவனைப் பாராமல் அமைகின்றனவில்லை.

He scorneth me and doth his will. My eyes know no rest and ever seek him. 3

1284. ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதென் நெஞ்சு.

அன்பரைக் காணுதற்கு முன் அவர் செய்த குற்றத்தை எண்ணி அவரோடு புலத்தற்குச் சென்றேன்; அதனை மறந்து எனது நெஞ்சு அவரைக் கண்டவுடன் கலவிக்கண் சென்றது.

I went to chide him but remained to embrace him. How passing strange! 4

1285. எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து.

அஞ்சன மெழுதுங் கோலின் இயல்பை எழுதுவதற்குமுன் நன்றாகக் கண்டிருந்து எழுதும்போது பார்க்கமாட்டாத கண்களைப் போலத் தலைமகனைக் காணாதவிடத்து அவன் குற்றங்கள் அனைத்தையும் கண்டிருந்தும் அவனைக் கண்டவிடத்து அக்குற்றங்களில் ஒரு சிறிதும் கண்டறியேன். (இது ஆசை மிகுதியின் காரியம்).

Forgetful as mine eyes of the pencil that paints them, I am blind to the blemishes of my beloved. 5

1286. காணுங்கால் காணேன் தவறாய; காணாக்கால்
காணேன் தவறல் லவை.

என்னிடம் வந்து சேர்ந்த தலைவனைக் காணும்பொழுது, அவன் முன் செய்துள்ள குற்றங்களில் ஒன்றுகூட எனக்குத் தோன்றவில்லை; அவனைக் காணாதவிடத்து அவன் செய்த குற்றங்களை யல்லாமல் வேறொன்றும் தோன்றவில்லை. (இவ்வாறானமையால் யான் அவனோடு ஊடல் இப்பொழுது செய்திலேன்.)

My dear one is all faults when I see him not. He is all excellence when I behold him. 6

1287. உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்தென் புலந்து.

விரைந்தோடுகின்ற வெள்ளத்தில் வீழ்ந்தால் நம்மை இழுத்துச் செல்லும் என்பதை யறிந்திருந்தும் அந்நீரில் பாய்வார் செய்கைபோல, இப்பொழுது நாம் கணவனுடன் ஊடல் செய்தால், அவ்வூடல் அவாமிகுதியால் நிலைபெறாதென்று அறிந்தும் பிணங்கினால் என்ன பயன் உண்டாகும் ?

What availeth my wrath to my sweet one? I am swept away in a sea of passion like one caught in the maelstrom of a flood. 7

தலைவியினது புணர்ச்சி விழைவினை யறிந்த தோழி,
தலைவனுக்குக் கூறியது

1288. இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வ! நின் மார்பு.

தன்னைக் குடித்து மகிழ்ந்தவர்க்குத் துன்பங்களை மிகுதியாகச் செய்தாலும் அவரால் வெறுக்கப்படாததாய் மேன்மேலும் விரும்பப்படும் கள்ளுக்கு நிகராகும் வஞ்சகத்தையுடைய தலைவனே! நீ எங்களைப் பலவாறு துன்பப் படுத்தினாலும் எங்களால் விரும்பப்படும் உனது மார்பு.

(The maid addresses the lover)

Cunning one, sweet as wine is thy manly breast. Wine makes the drunkard forget all sense of shame; and he longs for more. Thine fair breast makes us sin against our womanly reserve; yet we lose ourselves in it. 8

தலைமகள், தணியாத ஊடலுடையாள் இடத்துத்
தலைமகன் கூறியது

1289. மலரினும் மெல்லிது காமம்; சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்.

காம இன்பம் பூவைக் காட்டிலும் மிக மென்மையுடையதா யிருக்கும்; அவ்வாறு மெல்லியதாய் இருப்பதைப் பக்குவம் அறிந்து அதனைக் காலத்தில் அநுபவிப்பவர் உலகத்தில் சிலரே யாவர்.

He

Tenderer and more soft than a flower is love; only a few its delicate charms know. 9

1290. கண்ணில் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று.

என் காதலி, இதற்கு முன்னொருநாள் புணர்ச்சி அவசரத்தால் நெருங்கிச் சென்ற என்னோடு கண்ணினால் மாத்திரமே பிணங்கிக் கலவியிலே என்னைப் பார்க்கினும் விரைவுடைமையால், கண்மாத்திரத்தால் புலவி செய்ததையும் அப்பொழுதே மறந்துவிட்டு, என்னைக் கூடினாள். ஆனால், நான் இப்பொழுது புணர்ச்சிக்கு அவசரப்பட்டு நிற்கையில் இவள் பிணங்கி நிற்கின்றாள்; ஆதலால் இவள் அவளல்லள்போலும்!

There was a frown on her beauteous brow when first she beheld me. But when I drew nigh, she flew into mine arms. And the warmth of her love surpassed mine own. 10

அதிகாரம்—130

நெஞ்சோடு புலத்தல்

CHIDING THE HEART

காரணம் உண்டாய விடத்தும் பிணங்க நினையாமல் புணர்ச்சியினிடத்தே விரைகின்ற நெஞ்சுடனே தலைவி புலத்தலும், தலைவன் புலத்தலுமாம்.

தலைவனிடத்துக் குற்ற முண்டாகிய இடத்தும் அவனுடன்
பிணங்குதல் நினையாத நெஞ்சிற்குத் தலைவி கூறியது

1291. அவர்நெஞ்(சு) அவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே
நீயெமக்(கு) ஆகா தது.

தலைவரது நெஞ்சம் நம்மை நினையாமல் அவர் வசப்பட்டு நிற்பதைக் கண்டிருந்தும் எனது மனமே, நீ என்வசம் இராமல் அவரை நினைந்து நிற்பதற்குக் காரணம் யாது? சொல்லுவாய்!

(She addresses her heart)

Thou knowest his heart pursues its own fancies. Why canst thou remain still and my behests obey? Why hungerest thou for him? 1

1292. உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்
செறாஅர்எனச் சேறிஎன் நெஞ்சு.

இனிமேலும் நம்மிடத்து அன்புடைய ராகமாட்டாத தலைவரது செயலை உள்ளபடி அறிந்திருந்தும், நம்மைக் கோபியாரென்று நினைத்து நீ அவரிடம் செல்லுகின்றாய்; இதைவிட வேறு அறியாமைத்தன்மை உனக்கு என்ன இருக்கிறது?

He neglecteth me. Why art thou still friends with him ? 2

1293. கெட்டார்க்கு நட்டாரில் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங்(கு) அவர்பின் செலல்.

நெஞ்சே! நீ என்னிடத்து நில்லாமல் நீ விரும்பியபடியே அவரிடத்துச் செல்லுவதற்குக் காரணம், கெட்டவர்க்கு நட்பினர் உலகத்தில் இல்லையென்கிற நினைவினாலோ? அல்லது இயற்கைக் குணத்தினாலோ? சொல்வாய்.

Deserting me, thou oft stealest unto my cruel one. How thine behaviour remindeth me that the fallen, forlorn ones have no friends! 3

1294. இனிஅன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று.

நெஞ்சே! நீஅவரைக் கண்டவுடன் அவரிடத்து இன்பம் அனுபவிக்க நினைக்கின்றனையேயன்றி, அவருடைய குற்றங்களை நோக்கிப் பிணங்கிப் பின் இன்பம் அடைய நினைக்கமாட்டாய்! இத்தகைய நின்னோடு ஊடல்களையும் கூடல்களையும் பற்றி ஆராய்பவர் யாவர்?

Thou knowest not the art of feigning dislike and loving. How can I be in league with you and conspire against my lord? 4

தூதாகச் சென்ற தோழி கேட்பத் தலைவி கூறியது

1295. பெறாஅமை அஞ்சும்; பெறின்பிரி(வு) அஞ்சும்;
அறாஅ இடும்பைத்தென் நெஞ்சு.

காதலரை அடையாத நாளிலும் அவரை யடையவில்லையே என்று என் மனம் பயப்படுகின்றது; அடைந்த நாளிலும் அவர் நம்மை விட்டுப் பிரிந்து விடுவரோ என்று பயப்படுகின்றது; இதனால் என் மனம் தீராத துன்பத்தை யுடையதாக இருக்கின்றது.

When he is away, thou languishest in sorrow. When he is near, thou ever dreadest his departure. Oh, what endless torments are thou subject to ? 5

1296. தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்ததென் நெஞ்சு.

என் நெஞ்சு என்னிடத்தே இருந்ததற்குக் காரணம், கணவரைப் பிரிந்து தனியேயிருந்து அவர் இயற்றிய கொடுமைகளை நான் தன்னோடு கூடி நினைத்தால், நினைத்த அளவறிந்து என்னைக்கொன்று தின்பதுபோன்ற துன்பத்தைச் செய்தற் பொருட்டேயன்றி வேறன்று.

When I am alone, thou consolest me not. I fall a prey to the eating cares of the mind that completely consume me. 6

1297. நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்
மாணா மடநெஞ்சில் பட்டு.

தன்னை மறந்துவிட்ட காதலரைத் தான் மறக்கமாட்டாத மாட்சிமையற்றும் அறிவில்லாததுமான எனது நெஞ்சோடு சேர்ந்து, என் உயிரினுஞ் சிறந்த நாணத்தையும் மறந்துவிட்டேன்.

(She addresses the maid)

Maid, I am dead to all shame for I have fallen under the sway of my shameless, foolish heart. How it still hankerest after him who hath left us! 7

1298. எள்ளின் இளிவாம் என்(று) எண்ணி அவர்திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு.

தலைவரது பிரிவினாலாகிய துன்பத்தால் இறவாது உயிரினிடத்து ஆசையுள்ள எனது மனம், அத்தலைவர் நம்மை இகழ்ந்து பிரிந்துபோயினார் என்று கருதி, நாமும் அவரை இகழுவோமானால் இழிவுண்டாகும் என்று நினைத்து, அவர் திறத்தினையே நினைக்கின்றது.

Maid, my heart is eagerly clinging on to life and delights in his company. It fears to scorn him, lest it should sicken and die like ourselves. 8

தணிக்க முடியாத பிணக்கினிடத்துத் தலைவன் கூறியது

1299. துன்பத்திற்(கு) யாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சம் துணைஅல் வழி.

ஒருவர்க்குத் துன்பம் வந்த காலத்து அதை நீக்குதற்குத் தமக்கே உரியதாகவுள்ள தம்முடைய மனமானது துணையாகாத விடத்து, அவர்க்கு வேறு துணையாவார் யார்? ஒருவருமில்லை.

Where can I seek solace and support for the agony of my soul, if mine own heart betrays me? 9

1300. தஞ்சம் தமரல்லர் ஏதிலார் தாமுடைய
நெஞ்சம் தமர்அல் வழி.

தமக்கே உரிய தமது நெஞ்சம், ஒருவர்க்குத் துன்பம் வந்தபோது உதவி செய்யாதாயின், அயலார் தமக்கு உதவி செய்யாமையைப்பற்றிக் கூறவேண்டுமோ?

No wonder strangers are indifferent, when mine own soul plays the traitor to me, 10

அதிகாரம்—131

புலவி

SULKS

தலைவனும் தலைவியும் ஆகிய இருவரும் புணர்ச்சிக்கு விரையாது ஒருவரோடு ஒருவர் புலத்தல்.

தூதாகச் சென்ற தோழி, தலைவி தூதுக்கு உடன்படுதற் பொருட்டு அவளோடு நகையாடிக் கூறியது

1301. *புல்லா திராஅப் புலத்தை; அவர்உறும்*
அல்லல்நோய் காண்கம் சிறிது.

தலைவியே! நீ இங்ஙனம் புலந்தால் உனது கணவர் அடையும் காமத் துன்பத்தை நாம் சிறிது கவனிப்போம்; நீ அவரிடத்தே விரைந்து சென்று விழாமல் வருந்துவதுபோலக் காட்டிப் பிணங்குவாயாக!

(The maid addresses her mistress)

My dear, kiss him not but frown on him for fun. Let's see how he is vexed over it. 1

ஊடல் நீங்கித் தூதுக்கு உடன்படும் வகை அத்தோழி கூறியது

1302 *உப்பமைந் தற்றால் புலவி; அதுசிறிது*
மிக்கற்றால் நீள விடல்.

ஊடல், புணர்ச்சி இன்பஞ் செய்தற்கு வேண்டும் அளவினைச் செய்தல், உப்பானது உண்ணுங் கறிகளை இன்சுவையாக்குதற்கு வேண்டும் அளவினதாகுதல் போலும்; அவ்வாறன்றி வேண்டிய அளவுக்குச் சிறிது அதிகமாகப் பிணங்கினால் உப்பை வேண்டிய அளவுக்குச் சிறிது அதிகமாகச் சேர்த்தால் உணவுகள் சுவையாகாதவாறுபோலக் கலவி இன்பந் தராததாகும்.

My sweet, feign not anger for long. Sulking is but salt and sauce to the food of love—too much of it makes it only bitter. 2

பரத்தையரிடத்தினின்றும் வந்த தலைவனோடு தலைவி ஊடிக் கூறியது

1303. *அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்*
புலந்தாரைப் புல்லா விடல்.

தம்மைப் பெறாது பிணங்கிய மகளிரைப் பிணக்கு நீக்கித் தழுவாது ஆடவர் செல்லுதல், முன்னரே துன்பமுற்று நொந்தவருக்கு மேன்மேலும் துன்பநோயை உண்டாக்கியது போலாகும்.

(She addresses the lover in jealousy)

Hence, I know thy wonted tricks. Go to, go to thine sweeter mistress, for is it not wounding her anew, if thou fliest not to embrace her whom thou hast left sullen and sulky? 3

1304. ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதல்அரிந் தற்று.

உமது பிரிவைப் பொறுக்க முடியாது வருத்தத்துடனிருந்து உம்மோடு ஊடல் செய்யும் பரத்தையரை அவ்வூடலைத் தீர்த்துக் கூடாமல் நீங்குதல், முன்னமே நீர் பெருமல் வாடிய நீர்ப் பூங்கொடியை அடியிலே அறுத்தாற் போலும் !

Comfort and consolation I can find in my children. Why need I thine ministering ? Hie to thine mistress who is disconsolate and who withers away like a tender plant, with all its roots upturned. 4

தலைவியைப் புலவி நீக்கிக் கூடிய தலைவன் தன்னுள்ளே கூறியது

1305. நலத்தகை நல்லவர்க் கேஎர் புலத்தகை
பூஅன்ன கண்ணார் அகத்து.

நற்குண நற்செய்கைகளால் சிறந்த மேன்மையையுடைய தலைவர்க்கும் அழகாவது, மலர்போன்ற கண்களையுடைய தமது தலைவியரது நெஞ்சத்துண்டாகும் புலவியின் மிகுதியே யன்றே ?

(He soliloquizes after rejoining her)

Spotless and innocent am I. Yet my jealous one mistrusts me. How her petulance becomes her ! How it enthrals me ! 5

1306. துனியும் புலவியும் இல்ஆயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று.

துனி யென்னும் பெரும் பிணக்கும், புலவியென்னும் சிறு பிணக்கும் இல்லாமற்போனால், காமம் பருவமுதிர்ந்து உதிர்ந்து விழும் கனியைப் போல் இனியதாகவும், இளம் பருவத்தையுடைய பக்குவமில்லாத காயைப் போல இனிமையற்றதாகவும் இருக்கும்.

How like a luscious fruit doth love devoid of discord taste ! How like an unripe one is it, when it is not seasoned with petty strifes ! 6

1307. ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ(து) அன்றுகொல் என்று.

புணர்ச்சி, நீட்டிக்குமோ நீட்டியாதோ என்று கருதுவதால் கலவிக்கு மிக அவசியமாக வேண்டிய பிணக்கிலேயும் ஒரு துன்பம் உண்டாகின்றது.

How I hate the bickerings of love? The fear that reconciliation may be deferred maketh my heart sick. 7

தணிப்பதற்கு முடியாத ஊடலில் தலைவன், தலைவியோடு புலந்து கூறியது

1308. நோதல் எவன்மற்று நொந்தாரென்(று) அஃதறியும்
காதலர் இல்லா வழி.

இவர் நமக்காக நொந்து வருந்தினாரென்று அந்த வருத்தத்தை யறிந்து கொள்ளும் அன்புடையவரைப் பெறாதபோது, ஒருவர் வருத்தம் அடைதலால் பயன் என்ன ? ஒன்றுமில்லை.

(He in the hearing of his beloved)

What availeth my sorrow when there is no dear one nigh to pity me? 8

1309. நீரும் நிழல(து) இனிதே; புலவியும்
வீழுநர் கண்ணே இனிது.

நிழலிடத்து இருந்த நீர் குளிர்ச்சி மிக்குத் தாகத்தைத் தணியச் செய்தலின், உண்ணுபவர்க்கு இனியதாகும்; வெய்யிலினிடத்தோ! இன்னாத தாகும்; அதுபோலக் கலவிக்கு இன்றியமையாத புலவியும், தம்மை விரும்பும் அன்புடையாரிடத்ததானால் இனியதாகும்; மற்றையோரிடத்து இனியதாகாது.

As a sparkling spring in a shady bower, petty strifes and frowns sweeten the love of the ardent hearts. 9

1310. ஊடல் உணங்க விடுவாரோ(டு) என்நெஞ்சம்
கூடுவேம் என்ப(து) அவா.

என் மனம், புலவியினிடத்தே துன்புற்றிருக்கவும் அன்பையும் அருளையும் ஒழித்திருப்பவரோடு கூடுவேம் என்று கருதி முயற்சி செய்தற்குக் காரணம், அவர்மீது உண்டான அளவற்ற ஆசையேயன்றி வேறல்ல.

She loves me not. It is but a foolish longing of my heart to yearn for her evermore. 10

அதிகாரம்—132

புலவி நுணுக்கம்

BICKERINGS OVER TRIFLES.

தலைவனும் தலைவியும் கூடியிருந்தபோது, தலைவனிடத்துப் பிணங்குதற்குக் காரணம் இல்லாதிருந்தும், காதல் மிகுதியால் ஏதோ ஒரு நுட்பமாகிய காரணம் இருப்பதாகக் காட்டிப் பிணங்குதல்.

உலாவப் போய் வந்த தலைவன் படுக்கையிடத்து
வந்தபோது தலைவி சொல்லியது

1311. பெண்இயலார் எல்லாரும் கண்ணில் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்த! நின் மார்பு.

பரத்தையிடத்துச் செல்லுந்தன்மையுடைய தலைவனே! வெட்க முதலிய விசேஷ குணமில்லாமல் பொதுவான குணமாத்திரமேயுடைய பரத்தையரெல்லாரும் தமது கண்களால் பொதுவாக நோக்கி உன் மார்பினையனுபவிப்பர். அவர்கள் அனுபவித்த எச்சிற் றன்மையுடைய உனது மார்பினை நான் தழுவச் சம்மதிக்கமாட்டேன்.

(She taunts her Sweet one)

Begone, thou friend of wanton jades. Thine fair breast hath been stained by the lascivious clasps of deceitful women, who have had their fill of thy charms. I loathe to embrace thee. 1

தலைவன் இல்லாத காலத்து, சென்ற தோழிக்குத் தலைவி
படுக்கையிடத்து நிகழ்ந்ததமை கூறியது

1312. ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து.

நாம் தம்மோடு பிணங்கிப் பேசாதிருந்தேமாக, காதலர் தும்மினர்; அப்பிணக்கு நீங்கி, நாம் அவரை நெடுங்காலம் வாழ்க என்று சொல்வோமாக நினைத்து. இதில் புலவி நுணுக்கமாவது, உண்மையாகத் தும்மியதைப் பொய்யாகத் தும்மியதென்று காரணத்தோடு கூறியது.

(She relates to the maid her quarrel with the beloved)

Sullen and sad I seemed when my lord came to caress me. He wantonly sneezed hoping that I would bless him. I remained coldly mute. 2

தலைவியினது புலவிக் குறிப்பினைக் கண்டு நீர் அவளைக் கூடியிருக்கவும் இப்புலவி உண்டாதற்கு ஏது யாதென்ற தோழிக்குத் தலைவன் கூறியது

1313. கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று.

விளைவாகச் செய்யப்பட்ட பூமாலையைக் கொணர்ந்து, தனக்குச் சூட்டினாலும் உனது தோழியாகிய தலைமகள், உம்மால் காதலிக்கப்பட்ட ஒருத்திக்குக் காட்டும்பொருட்டு இவ்வாறு சூட்டினீரென்று என்னைக் கோபிக்கின்றாள்; இப்படிப் பட்டவளுக்கு ஊடுதற்கு ஒரு காரணமும் வேண்டுமோ ?

(He addresses the maid)

I wore a garland of flowers brought from afar. She grew jealous and chid me as a gallant. She fancied I had a mistress in a far-off clime to please whom I had decked myself. 3

1314. யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று.

காமத்தை யநுபவித்தற் குரியவரான அனைவரினும் நாம் இருவரும் மிக்க காதல் உடையேம் என்பது கருதி, யாவரினும் மிக்க காதல் உடையேம் என்று கூறினேன்; கூறுதலும் உன் தோழி அது கருதாது என்னால் விரும்பப்பட்ட மகளிர் பலருள்ளும் உன்னிடத்து மிக்க காதலுடையேன் என்று கூறியதாக நினைத்துக்கொண்டு, யாரைப் பார்க்கிலும், என்பால் காதல் உடையேம் என்று கூறினீர் என்று சொல்லிக்கொண்டே பிணங்கினாள்.

'More than any other I love thee' I said to my jealous one. 'More than whom and more than whom' she tauntingly asked. 4

1315. இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்நிறை நீர்கொண் டனள்.

மிக்க ஆசையினால் இப்பிறப்பில் நாம் இருவரும் பிரியமாட்டோம் என்று கூறினேன்; அப்படியானால் மறுபிறப்பிற் பிரிவேன் என்னும் கருத்துடன் கூறியதாக நினைத்துத் தன் விழிகள் நீர் நிறைந்து பெருகும்படி அழுதாள்.

"I shall never abandon thee for all this world" I vowed to my quarrelsome one.' Would you abandon me in the world next,'she pleadingly asked. 5

1316. உள்ளினேன் என்றேன்;மற் றென்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்.

பிரிந்து இருந்த காலத்து இடைவிடாது நின்னை நினைத்தேன் என்றேன்; அதுகேட்ட தலைவி, யான் தன்னை மறந்துவிட்டுப் பின் நினைத்ததாகக் கருதி என்னை எதனால் மறந்துவிட்டீர் என்று சொல்லி என்னைத் தழுவுவதற்கு வந்தவள் அக்கருத்தை விட்டுவிட்டுத் தழுவாது புலந்தாள்.

Quickly she came to clasp me close. Lovingly I said 'I have ever thought of thee in my lone exile.' 'But didst thou ever forget me' she petulantly questioned. 6

1317. வழுத்தினாள் தும்மினேன் ஆக; அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று.

கூடியிருக்கும்போது நான் தும்மினேன்; தன்னியற்கைக் குணம் பற்றி என்னை உடனே வாழ்த்தினாள்; பின்னர் அக்கருத்தை மாற்றி 'உம்மைப் பிரிந்து வருந்துகிற மகளிருள் யார் உம்மை நினைத்ததனால் தும்மினீர் என்று வினவிப், பிணங்கி அழுதாள்.

[அன்புடையவர் நினைந்தாரானால், அவரால் நினைக்கப்பட்டவர்க்குத் தும்மல் நிகழும் என்பது மகளிர் கூறும் வழக்கம்.]

I sneezed and she blessed me. Quickly the capricious one changed her mind and wept and said ' What provoked thy sneeze ? Is it the thought of some fair one, who dreams of thee ?" 7

1318. தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று.

எனக்குத் தும்மல் தோன்றியபோது எந்த மகளிர் நினைத்தலால் தும்மினீரென்று என்னை வினவிப் பிணங்குவாளே என்று பயந்து அத்தும்மலை வெளிவராமல் அடக்கினேன்; அவ்வாறு அடக்கியதைக் குறித்து அவள் என்னை நோக்கி, 'உம்மால் விரும்பப்பட்ட மாதர் உம்மை நினைத்தலை ஒரு சம்பந்தமுமில்லாத எனக்குத் தெரியாதிருக்கும்படி மறைக்கக் கருதி அடக்கினீரோ?' என்று புலந்து புலம்பினள்.

I stifled my sneeze, lest my sweet one should suspect me. With tearful eyes she came to me and reproachfully said 'I know the meaning of thy half-smothered sneeze. Aye, thou hidest the thoughts of thy fond one far away'. 8

1319. தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று.

பொய்யாகக் காரணங் கற்பித்து என்பால்ஊடல் செய்யுந் தலைவியைப் பன்முறை வணங்கிச் சமாதானஞ் செய்து தேற்றினாலும், ஊடல் தெளியாதவளாய், மற்றைய மகளிர் புலக்கும்பொழுதும் அவரையும் இவ்வாறே பணிந்து ஊடல் தீர்ப்பீர் போலும் என்று கோபித்துக் கொள்வாள்.

I bowed and begged and coaxed her. Nay I bore all the blame she heaped on me. My adamantine one would never yield. She turned and wrathfully replied' How thou dissemblest'. This way, methinks, thou hast deceived other women too.' 9

1320. நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீர் என்று.

என் சொற்களும் செயல்களும் உனது தலைவி, கோபித்தற்கு ஏதுவாயிருத்தலால் அவற்றை நீக்கி ஒன்றுங் கூறாது மௌனமாயிருந்து, அவளது உவமையற்ற சிறந்த அவயவங்களைக் குறித்துப் பார்த்திருந்தாலும், அவள் 'எனது அவயவங்கள் அனைத்தும் எந்த மாதரது அவயவங்களை யொத்திருக்கின்றனவென்று கருதி நோக்கினீர் போலும்' என்று கோபிக்கின்றாள்.

I gazed on my nonpareil mistress and was lost in the splendour of her charms. She slyly asked 'Whither wanderest now thy mind? With whose fair form thou linkest mine?' 10

அதிகாரம்—133

ஊடலுவகை

THE CHARM OF LOVE QUARRELS

மேற் கூறப்பட்ட அத்தன்மையாகிய ஊடலால் தமக்குக் கூடலில் இன்பம் சிறந்தவிடத்து, அச்சிறப்பைத் தரும் புலவியைத் தலைவி மகிழ்ந்து கூறுதலும், தலைவன் மகிழ்ந்து கூறுதலுமாம்.

தலைவி, காரணமின்றிப் புலக்கின்றமை கேட்ட தோழி, அங்ஙனம் நீ புலக்கின்றமைக்குக் காரணம் என்னை என்ற தோழிக்குத் தலைவி கூறியது

1321. இல்லை தவறவர்க்(கு) ஆயினும் ஊடுதல்
வல்ல தவர்அளிக்கும் ஆறு.

குற்றம் அவரிடத்து இல்லையானாலும், நமக்கு அவர் தலையளி செய்கின்றவிதம் அவருடன் ஊடுதலை விளைவிக்க வல்லதாகின்றது.

She

Maid, thou questionest me why I wrangle with my lord. He is spotless and sweetness itself. How his wondrous charms wake in me tormenting jealousies! Oft I grow fitful and petulant. 1

'ஊடல் செய்யாதிருந்தாலும் அவரது பேரன்பு பெறுதலாயிருக்க அதை இழந்து ஊடுதலால் வருந்துவது ஏன்'
என்ற தோழிக்குத் தலைவி கூறியது

1322. ஊடலில் தோன்றும் சிறுதுனி நல்அளி
வாடினும் பாடு பெறும்.

பிணங்குதல் ஏதுவாக நம்மிடத்துத் தோன்றும் சிறிய வருத்தத்தால் தலைவர் செய்கின்ற நல்லருள் சிறிது முன்னர்க் குறையினும் பின்பு பேரின்பம் தரும். (ஆதலால் சிறிது குறைதலால் தோன்றும் துன்பம், துன்பம் ஆகாது, மிக்க இன்பந் தரும்.)

My little love-strifes make my beloved frown a while. How his frowns become him! They are but preludes to his heartier embraces. 2

1323. புலத்தலில் புத்தேள்நா(டு) உண்டோ நிலத்தொடு
நீர்இயைந்(து) அன்னார் அகத்து.

நிலத்தின் குணத்தோடு நீரானது ஒன்றுபட்டுக் கலந்ததுபோல, நம் குணத்தோடு ஒன்றுபட்டுக் கூடிய தலைவரோடு புலத்தலைப் போலும் இன்பந் தருதற்குரிய விண்ணுலகமும் ஒன்று உண்டோ? (இல்லை.)

As water is of the earth through which it flows, our hearts are one. Can paradise be sweeter far than the delights of our love-wrangles? 3

மேற்கூறிய ஊடல் எதனால் நீங்குமென்ற தோழிக்குத் தலைவி கூறியது

1324. புல்லி விடாஅப் புலவியுள் தோன்றுமென்
உள்ளம் உடைக்கும் படை.

அன்பரைத் தழுவிக்கொண்டு பின் விடாதிருப்பதற்குக் காரணமாகிய பிணக்கினுள்ளே உள்ளது, அப்புலவியைச் செய்யச் சென்ற என்னுளத்தைச் சிதைக்கின்ற ஆயுதம்.

Methought I could vex my dear one with my bickerings of love. But oh! those very bickerings betrayed mine heart. And they have played the traitor to me and forged a weapon against mine own self. 4

தலைவியை யூடல் நீக்கக் கூடிய தலைவன், மிக்க மகிழ்ச்சியை
யுடையவனாய்த் தன்னுள்ளே கூறியது

1325. தவறிலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்றோள்
அகறலின் ஆங்கொன் றுடைத்து.

ஆடவர், தம்மிடத்துத் தவறில்லாதவராயினும் தவறுடையார்போலப் பிணங்கப்பட்டுத் தாம் விரும்பும் மகளிரது மெல்லிய தோள்களைக் கூடப் பெறாத சமயத்தில், அவர்க்கு ஊடலாலுண்டாகும் அளவிறந்த இன்பம் ஒன்று உண்டு.

He.

O for the momentary wranglings of love! How they give joy though they sunder me for a while from the loving arms of my fair one! 5

1326. உணலினும் உண்ட தறல்இனிது: காமம்
புணர்தலின் ஊடல் இனிது.

ஒருவனுக்கு இனிமேல் உண்பதைக் காட்டிலும் முன் உண்ட உணவு சீரணித்தல் இன்பந்தரும்; அதுபோலக் காமத்துக்குப் புணர்ச்சியைக்காட்டிலும் புலவியே இன்பந்தரும்.

Blest be our bickerings ! Excess of love, like excess of food, but cloys. And it is the quarrels of love that season and sweeten it. 6

1327. ஊடலில் தோற்றவர் வென்றார்; அதுமன்னும்
கூடலில் காணப் படும்.

காமம் அநுபவித்தற்குரிய இருவரில் ஊடலில் தோற்றவர் வென்றவராவர்; அவ்வெற்றியராதல் அப்பொழுது அறியப்படாதாயினும் பின்னர், புணர்ச்சியிலே அவரால் நன்கு அறியப்படும்.

I quail before her frowns and am humbled. But our reunion sweet proves that I, the vanquished, am the victor and not she, the angry one. 7

1328. ஊடிப் பெருகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு.

இவளது நெற்றி வெயர்வரும்பும்படி கலவி செய்தவிடத்து உண்டாகிய இனிமையை, இன்னுமொருகால் இவள் எம்மோடு ஊடல் செய்யப் பெற்று அதனையடையத் திறமை யுடையோமாவேமோ ?

How my rapturous embraces make my fair one's bright brow sweetly sweat ! O for our wonted love-strifes that add to love a charm and piquancy of their own ! 8

1329. ஊடுக மன்னோ ஒளிஇழை; யாம்இரப்ப
நீடுக மன்னோ இரா.

விளங்குகின்ற ஆபரணங்களை அணிந்துள்ள தலைமகள் இன்னும் எம்மோடு பிணங்குதலைச் செய்வாளாக; அப்படி பிணங்கி நிற்றற்கும் அதனைத் தீர்த்தற் பொருட்டும் யாம் இரந்து நிற்றற்குரிய காலம் மிகுதியாக வேண்டியிருத்தலால், இன்றிரவு விரைவில் விடியாது நீட்டித்தல் வேண்டும்.

May my bright-jewelled one for ever pout and fret ! May I for ever kneel and implore her lips ! May thou, O night, prove endless ! 9

1330. ஊடுதல் காமத்திற்(கு) இன்பம்; அதற்(கு) இன்பம்
கூடி முயங்கப் பெறின்.

காம அநுபவத்திற்கு இன்பமாவது, புலவி செய்வதாம்: அவ்வூடலுக்கு இன்பமாவது, புலவியை நீட்டிக்காமல் அளவறிந்து நீங்கி, ஒத்த அன்பராய் இருவரும் கூடிக் கலந்து ஒருவரோடு ஒருவர் தழுவிப் பெறுதலாகிய இன்பமாகும்.

How love-strifes sweeten love ! And their crowning charm lies in the loving reunion and the rapturous embraces of the lover and the loved. 10

மூன்றாவது காமத்துப்பால் முற்றும்.

திருவள்ளுவர் மூலமும் உரையும் ஆங்கில மொழி பெயர்ப்பும் முற்றுப்பெற்றன.

திருவள்ளுவ மாலை
பொழிப்புரையுடன்

அசரீரி

1. திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ(டு)
உருத்தகு நற்பலகை ஒக்க—இருக்க
உருத்திர சன்ம ரெனஉரைத்து வானில்
ஒருக்கஓ! என்றதோர் சொல்.

அருட் செல்வமும் தெய்வத் தன்மையும் வாய்ந்த திருவள்ளுவரோடு ஒக்க வீற்றிருத்தற்குத் தகுமாறு அமைந்துள்ள சிறந்த சங்கப் பலகையின் மீது உருத்திர சன்மர் கூடியிருக்கக் கடவர் என்று கூறி, விசும்பினின்று ஓரசரீரி ஆங்குள்ள புலவர் கருத்தொன்றுமாறு ஓவென்று விரைந்து ஒலித்தது.

நாமகள்

2. நாடா முதல்நான் மறைநான் முகன்நாவில்
பாடா இடைப்பா ரதம்பகர்ந்தேன்—கூடாரை
எள்ளிய வென்றி இலங்கிலைவேல் மாற! பின்
வள்ளுவன் வாயதென் வாக்கு.

பகைவரைத் தோற்றோடச் செய்து, அவரை இகழ்ந்து விளங்கிய வெற்றியையுடைய இலைபோன்ற அச்ச வடிவாகிய வேலைத் தாங்கிய அரசனே! உலகத்தார் விதிவிலக்குக்களைத் தேடி உணர்ந்துய்ய நான்முகனது நாவிலிருந்து, நான்மறைகளையும் படைப்புக் காலத்தே பாடி, இடைக் காலத்துப் பாரதமாகிய வேதத்தைக் கூறினேன்; அதற்குப் பிற்பட்ட இக்காலத்தில், எனது வாக்கு, திருவள்ளுவர் நாவின்கண்ணதாயிற்று.

இறையனார்

3. என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்—குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போன்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்.

புலவர்க்கரசாகிய வள்ளுவனது வாயினின்று தோன்றிய திருக்குறளானது, எஞ்ஞான்றும் தன் அழகு கெடாது, நீண்ட காலங் கழிந்தும் நிலைத்து மலர்ந்து தேனைச் சொரிகின்ற குணமுடையதாய் விளங்குமாதலின், குறைவுபடாத செய்ய தளிர்களையுடைய கற்பகத் தருவினது தெய்வத்தன்மையுடைய உயர்ந்த மலர்போன்று விளங்கும்.

உக்கிரப் பெருவழுதியார் [தோன்

4. நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த-நூன்முறையை
வந்திக்க சென்னி, வாய் வாழ்த்துக! நன்னெஞ்சம்
சிந்திக்க! கேட்க செவி.

நான்முகன், தனது தெய்வ உருவை மறைத்து மானிட வடிவங் கொண்டு திருவள்ளுவனாய்ப் பிறந்து, நான்கு வேதங்களினுண்மைப் பொருளை, அறம், பொருள், இன்பம் ஆகும் முப்பாற் பொருளாகத் தமிழில் வெளியிட்ட திருக்குறளென்னும் சிறந்த நூலை, எனது தலை வணங்குக, வாய் வாழ்த்துக, நல்ல நெஞ்சம் தியானிக்க, செவி கேட்க.

* கபிலர்

5. தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்—மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட! வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி.

வீடுகளில் வளர்க்கப்படுகின்ற கிளி, புறா முதலிய பறவைப் பேடுகள், மகளிரது உலக்கைப் பாட்டினால் இனிது உறங்குதற்கிடமான வளவிய நாட்டையுடைய அரசனே! திருவள்ளுவரால் அருளிச்செய்யப் பெற்ற குறள் வெண்பாவானது, மிகப்பெரிய பொருளைத் தன்னுட்கொண்டு காட்டுதல், தினையரிசியின் அளவிற்கும் போதாத சிறுபுல்லினது நுனியின் கண் உள்ள பனிநீர் தனது அருகிலுள்ள உயர்ந்த பனையினது பெரிய நிழலைத் தன்னுள் அடக்கிக் காட்டுவது போலாகும்.

பரணர்

6. மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞாலம் முழுதும் நயந்தளந்தான்—வாலறிவன்
வள்ளுவரும் தங்குறள்வெண் பாஅடியால் வையத்தார்
உள்ளுவஎல் லாம்அளந்தார் ஓர்ந்து.

திருமாலும் குறள்வடிவாய்த் தோன்றி வளர்ந்து தனது இரண்டு பெரிய அடிகளால் உலகனைத்தையும் விரும்பி அளந்தான்; மெய்யறிவினையுடைய திருவள்ளுவரும் தம்மிடத்துத் தோன்றி அங்கிலை நிற்கும் குறள் வெண்பாவின் சிறிய இரண்டடிகளால், அவ்வுலகனைத்திலும் உள்ளோர் நினைப்பவை யாவையும் ஆராய்ந்து அளந்தார்.

நக்கீரர்

7. தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்
ஆனா அறமுதலா அந்நான்கும்—ஏனோருக்(கு)
ஊழின் உரைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழியுல(கு) என்ஆற்றும் மற்று.

---

* இது முதல் சங்கப் புலவர் கூறிய செய்யுட்கள்.

மறைப்பொருள் அனைத்தையும் தானே யுணர்ந்து குளிர்ந்த தமிழிற் குறள் வெண்பாக்களால் அழியாத அற முதலிய நான்கு பொருள்களையும் அறியாதார்க்கு எளிதினுணருமாறு ஒழுங்குபெறக் கூறிய திருவள்ளுவருக்கும், ஒள்ளிய நீரைத் தந்த மேகத்திற்கும், இவ்வுலகு யாது கைம்மாறு செய்யும் ? செயற்பாலது ஒன்றுமில்லை. அவரும் அதுவும் வாழ்க !

மாமூலனார்

8. அறம்பொருள் இன்பம்வீ டென்னும்அந் நான்கின்
திறம்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவன் என்பானோர் பேதை அவன்வாய்ச்சொற்
கொள்ளார் அறிவுடை யார்.

அற முதலாகக் கூறப்பட்ட அம்மறைப் பொருளாகிய நான்கினது கூறுபாட்டையும் நன்றாயறிந்து உலகத்தார்க்குச் சொல்லிய புலவனை, மறந்தாயினும் ஒரு மானிடனாகக் கருதி வள்ளுவனென்று சொல்லுதற்கு ஒருவனுளனாயின், அவன் அறிவில்லாதவன் எனப்படுவோன்; அவனது வாய்ச்சொல்லை அறிவுடையார் கொள்ளமாட்டார்.

கல்லாடர்

9. ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார்—நன்றென
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி

அறுவகை மதத்தினருள், ஒரு மதத்தார், தமது நூலில் உலகும் உயிரும் கடவுளுமாகிய யாவும் ஒன்றேயாம் என்னின், மற்றொரு மதத்தார், தமது நூலில் அதனை மறுத்து அவை வேறாம் என்று நாட்டுவர்; அங்ஙனம் வேறென்று தீர்மானிக்கின், பின்னொரு மதத்தர் அதனை அன்றென்று மறுப்பர்; ஆதலால் சமய நூல்கள் யாவும் இவ்வாறு பேதிக்கின்றன. (மறுக்கப் படுகின்றன.) திருவள்ளுவராலே கூறப்பட்ட முப்பால் நூலையோ! எம் மதத்தினரும் நன்றென்று ஒப்புக் கொள்வர்.

சீத்தலைச் சாத்தனார்

10. மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும்—மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேல் தார்அன்றோ
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்.

செய்யுட்களின் முன்பின் முறை தெரிதற்கிடனாய்த் திருவள்ளுவரால் அருளிச் செய்யப்பெற்ற, அறம், பொருள், இன்பமாகிய முப்பால் என்னும் பெயரிய திருக்குறள், கொல்லி, நேரி, பொதியம் என்னும் மும்மலைகளையும்; குடநாடு புனனாடு, தென்னாடு என்னும் மூன்று நாடுகளையும்; கருவூர், உறையூர், மதுரை என்னும் மூன்று நகரங்களையும், மங்கல முரசு, கொடை முரசு, வெற்றி முரசு, என்னும் மூன்று முரசுகளையும்; இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத்தமிழ் என்னும் முத்தமிழையும்; விற்கொடி, புலிக்கொடி, மீன் கொடி என்னும் மூன்று கொடிகளையும்; கனவட்டம், பாடலம், கோரம்

என்னும் மூன்று குதிரைகளையும் முறையாகவுடைய சேர, சோழ, பாண்டியர் எனப்படும் மூவரசருடைய பெரிய முடிகளின்மீது கொள்ளப்பட்ட மாலை போன்றது அன்றோ? (மாலை யெனவே தகும்.)

மருத்துவன் தாமோதரனார்

11. சீந்திநீர்க் கண்டம் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்—காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலால்
தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.

தனக்குப் பகையாகுமெனச் சினந்து மலையைத் தனது கோடுகளா குத்துகின்ற பெருங்களிறுபோன்ற வேந்தனே! சீந்திநீர்ச் சருக்கரை யும், சிதைக்கப்பட்ட சுக்கையும் தேனோடு கலந்து மோந்தபின், தலைக் குத் துடையவருக்கு அந்நோய் நீங்குவது இயல்பாகும்; சீத்தலைச் சாத்தனார்க் கோ! திருக்குறளினாலேயே தலைக்குத்து நீங்கிவிட்டது.

மூன்று சரக்குக்களால் தலைநோய் (மண்டையிடி) நீங்குவதுபோல, முப்பாலால் சாத்தற்குத் தலைக்குத்து நீங்கியது என்பதாம்.

நாகன் தேவனார்

12. தாளார் மலர்ப்பொய்கை தாங்குடைவார் தண்ணீரை
வேளா தொழிதல் வியப்பன்று—வாளாதாம்
அப்பால் ஒருபாவை ஆய்பவோ வள்ளுவனார்
முப்பால் மொழிமூழ்கு வார்.

நாளத்தோடு பொருந்திய தாமரைகளையுடைய ஒரு குளத்து மூழ்குவோர், வேறு தண்ணீரை விரும்பாதிருத்தலில் வியப்பு மில்லை; திருவள்ளுவர் இயற்றிய முப்பால் நூலில் புகுந்து குடைவ அந்நூலையன்றி வீணாகப் பிறநூல்களை விரும்புவரோ? விரும்பார்.

அரிசில் கிழார்

13. பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறும் சேரச்—சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவர்அல் லால்.

மறைகளில் ஒன்றுக்கொன்று மயங்கிக் கிடக்கும் பொருள்களை இவ் வுலகினர் உணரும் பொருட்டு வேறாகப் பிரித்து அவ்வத்துறைகளில் சேரு மாறு சுருங்கிய சொல்லால், பொருள் எளிதில் பரந்து தோன்றும்படி ஒழுங்குபெறச் சொல்வதில் திருவள்ளுவரையன்றி வல்லவர் வேறு யாவர் உளர்? ஒருவருமிலர்.

பொன்முடியார்

14. காநின்ற தொங்கலாய் காசிபனார் தந்ததுமுன்
கூநின்(று) அளந்த குறள்என்ப—நூன்முறையால்
வானின்று மண்ணின்(று) அளந்ததே வள்ளுவனார்
தாநின்று அளந்த குறள்.

நறுமணந் தங்கும் மலர்மாலையை யுடைய பாண்டியனே! முன்னொரு காலத்துக் காசிப முனிவரால் தரப்பட்ட குறளே, உலகத்தை யளந்த குற ளென்று யாவரும் கூறுவர்; தாமாக இங்கு எழுந்தருளிய திருவள்ளுவனு ரால் தரப்பட்ட குறள், நான்முறையோடு கூடி விண்ணின்கணின்றும் மண்ணின்கணின்றும் எழுந்து உலகத்தை யளந்தது.

கோதமனுர்

15. ஆற்றல் அழியுமென்(று) அந்தணர்கள் நான்மறையைப்
போற்றி யுரைத்(து) ஏட்டின் புறத்தெழுதார்-ஏட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனுர் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல்சோர்(வு) இன்று.

அந்தணர்கள், நான்கு வேதங்களையும் வாய்ப்பாடமாக ஓதிக் காப் பாற்றி, ஏட்டினிடத்து எழுதி வைத்தால் தகாதவரும் ஓதத் தொடங்கி அவற்றின் வலிமையைக் குறைப்பரென்று கருதி, அவ்வேட்டில் எழுதாது விட்டனர்; திருவள்ளுவரோ, தமது திருக்குறளாகிய வேதத்தை யேட்டி லெழுதிவைத்து யாவரும் ஓதியறிந்து கொள்ளும்படி செய்தும் அதன் வலிமை குறையவில்லை.

நத்தத்தனுர்

16. ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி ேைடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

பாயிர நான்கதிகாரங்களோடு சேர்ந்து தொகையாகிய அருமை ய ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் வெண்பாக்களையும் ஒருவர் ஓதி ணர்ந்தபின்னர், ஒருவரிடத்துச் சென்று தாமறியாத விஷயங்களைக் கேட்க நூலுள்ளனவோ? இல்லை. ஆனுல் அழியாது நிலைபெற்ற தமிழில் புலமை மிகுந்தோராகிப், பிறர் தம்மிடம் வந்து கேட்டறிந்து கொள்ளுமாறு வீற் றிருக்கலாம்.

முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்

17. உள்ளுதல் உள்ளி உரைத்தல் உரைத்ததனைத்
தெள்ளுதல் அன்றே செயற்பால—வள்ளுவனுர்
முப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வார்
எப்பா வலரினும் இல்.

திருவள்ளுவரினது திருக்குறளுக்கு மேற்பட்ட நூலொன்று உளதெ ன்று கூறவல்லவர், எத்தகைய புலவருள்ளும் இலர்; ஆதலின் நாம் இந்நூ லைக் குறித்துச் செய்தற்குரியன, இதன் பொருளைச் சிந்தித்தலும் பிறர்க்கு அதனைச் சொல்லுதலும், பிறர் கூறிய அதனைத் தெளிதலும் அல்லவா?

ஆசிரியர் நல்லந்துவனுர்

18. சாற்றிய பல்கலையும் தப்பா அருமறையும்
போற்றி யுரைத்த பொருளெல்லாம்—தோற்றவே
முப்பால் மொழிந்த முதற்பா வலர்ஒப்பார்
எப்பா வலரினும் இல்.

அறிவுடையோர் கூறிய பலகலைகளும் தவறாது அரிய வேதங்களும் தம்முள் அடக்கிக்காட்டிய பொருள்கள் யாவும் தம்மிடத்தினின்று விளங் கும்படி திருக்குறளைக் கூறிய திருவள்ளுவரை யொப்பவர் எத்தகைய பாவல ருள்ளும் இல்லை.

கீரந்தையார்

19. தப்பா முதற்பாவால் தாம்மாண்ட பாடலினால்
முப்பாலில் நாற்பால் மொழிந்தவர்—எப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள் ளுவர்.

எவ்விடத்தும் கூர்மை வைத்த வேலைத் தாங்கிய பாண்டியன் மனம் மகிழ எவ்விடத்தும் குற்றமில்லாமல் மாட்சிமை தங்கிய தமது பாடல் தொழிலால், அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பால்களுள் நான்காவதாகிய வீட்டுப் பாலையும் அடக்கித் தலைமை பெற்ற குறள் வெண்பாவாற் கூறியவர், தெய்வத் தன்மையையுடைய திருவள்ளுவ நாய னாரே.

சிறுமேதாவியார்

20. வீடொன்று பாயிர நான்கு விளங்(கு) அறம்
நாடிய முப்பத்து மூன்றொன் றாழ்—கூடுபொருள்
எள்ளில் எழுபது இருபதிற் றைந்(து) இன்பம்
வள்ளுவர் சொன்ன வகை.

திருவள்ளுவராலே கூறப்பட்ட திருக்குறளின் அதிகாரவகை, பாயிரம் நான்கு அதிகாரத்தை யுடையது; அறம் முப்பத்துமூன்று அதிகாரத்தை யுடையது; ஊழ் ஓரதிகாரத்தை யுடையது. பொருள் எழுபது அதிகாரத் தை யுடையது. காமம் இருபத்தைந்து அதிகாரத்தை யுடையது.

நல்கூர் வேள்வியார்

21. உப்பக்க நோக்கி உபகேசி தோள்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு.

அழகிய கூந்தலையுடைய உபகேசி யென்னும் நப்பின்னைப் பிராட்டியி னது தோளை மணந்த கண்ணபிரானை அந்தப் பக்கமிருக்கும் வடமதுரைக்கு ஆதாரமென்று கூறுவர்; மாதாநு பங்கி எனப்படுகின்ற குற்றமற்ற புலமை யாகிய தேனைச் சொரிகின்ற செவ்விய நாவாகிய மலரையுடையவராகிய திருவள்ளுவரை இப்பக்கமுள்ள நீர்வளத்தையுடைய தென் மதுரைக்கு ஆதாரமாகச் சொல்லுவர்.

தொடித்தலை விழுத்தண்டினார்

22. அறநான்(கு) அறிபொருள் ஏழ்ஒன்று காமத்
திறம்மூன் (று) எனப்பகுதி செய்து—பெறலரிய
நாலும் மொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார்
போலும் மொழிந்த பொருள்.

பாயிரம், இல்லறம், துறவறம், ஊழ் என அறத்துப் பாலினுட் பிரிவுகள் நான்கும்; அரசு, அமைச்சு, அரண், கூழ், படை, நட்பு, ஒழிபு என உணரப்பட்ட பொருட் பாலினுட் பிரிவுகள் ஏழும்; ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று, அவ்விருபாற் கூற்று, எனக் காமத்துப் பாலினுட் பிரிவுகள் மூன்றுமாகப் பகுதி செய்து, பெறுதற்கரிய அறம், பொருள், இன்பம், வீடு எனப்படுகின்ற நான்கு பொருள்களையும் சொல்லிய பெருநாவலராகிய திருவள்ளுவரே, அவற்றுள் அடங்காது ஒழிந்த பொருள் உளதாயின் அதனை நன்றாக அறிய வல்லவர் போலும்!

வெள்ளி வீதியார்

23. செய்யா மொழிக்குந் திருவள் ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரியர் அந்தணரே ஆராயின் ஏனை
இதற்குரியர் அல்லாதார் இல்.

எவராலும் செய்யப்படாத மொழியாகிய வேதத்துக்கும் திருவள்ளுவரால் அருளிச்செய்யப்பட்ட தன் வழியில் ஒழுகுவோர்க்குப் பயன் தருதலில் பொய்படாத மொழியாகிய திருக்குறளுக்கும் பொருள் ஒன்றுதான்; ஆராயுங்கால் செய்யப்படாத அந்த வேதம் ஓதுதற்கு உரியவர் அந்தணர் மாத்திரமே; உண்மைப் பொருளுணர்த்தும் இத் திருக்குறளுக்கு உரியரல்லாதவர் இல்லை.

மாங்குடி மருதனார்

24. ஓதற்(கு) எளிதாய் உணர்தற்(கு) அரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்—தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

திருவள்ளுவரது வாயினின்று தோன்றிய திருக்குறளினது மாட்சிமையைப்பற்றிக் கூறுமிடத்து, அந் நூல் ஓதப்படுதற்கு எளிய சொற்களை யுடையதாய், அறியப்படுதற்கரிய கருத்தினை யுடையதாய் வேதத்தில் கூறப்பட்ட பொருளே அமைந்தும், அவ்வேதத்தினும் மிக்க விளக்கமுடையதாய், குற்றமற்றவர்கள் நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் அவர்களுடைய மனத்தை உருக்கச்செய்யும்.

எறிச்சலூர் மலாடனார்

25. பாயிரம் நான்கில் அறம்இருபான் பன்மூன்றே
தூய துறவறம் ஒன்(று) ஊழாக—ஆய
அறத்துப்பால் நால்வகையா ஆய்ந்துரைத்தார் நூலின்
திறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து.

திருவள்ளுவ நாயனார், மறைப்பொருளை யாராய்ந்து, தம்மாலே இயற்றப்பட்ட நூலின் திறத்துக்குத் தக்க நன்மையுடைமையால், இவையே யுரியன வென்று உணர்ந்து, பாயிரம் நான்கு அதிகாரமும், இல்லறவியல் இருபது அதிகாரமும், துறவறவியல் பதின்மூன்று அதிகாரமும், ஊழ் ஒரு அதி-

காரமும் உடையனவாக, இவ்வாறாய அறத்துப்பாலைப் பாயிர முதலிய நால்வகை யுடைத்தாகக் கூறினார்.

போக்கியார்

26. அரசியல் ஐயைந்(து); அமைச்சியல் ஈரைந்(து)
உருவல் அரண்இரண்டொன்(று) ஒண்கூழ்—இருவியல்
திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்(று)
எண்பொருள் ஏழாம் இவை.

அரசியல் இருபத்தைந்து அதிகார முடையது; அமைச்சியல் பத்து அதிகாரம் உடையது; உருத் திட்பஞ்சிறந்த அரணியல் இரண்டதிகார முடையது; பொருளியல் ஓர் அதிகார முடையது; படையியல் இரண்டு அதிகார முடையது; நட்பியல் பதினேழ் அதிகார முடையது; ஒழிபியல் பதின்மூன்று அதிகார முடையது; எண்ணப்பட்ட பொருட்பாலுக்கு இவ்வியல்கள் ஏழாம்.

மோசிகீரனார்

27. ஆண்பாலேழ் ஆறிரண்டு பெண்பால் அடுத்தன்பு
பூண்பால் இருபால்ஓர் ஆறாக—மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு.

ஆண்பாற் கூற்று ஏழு அதிகாரமும், பெண்பாற் கூற்று பன்னிரண்டு அதிகாரமும், ஒருவரை ஒருவர் அடுத்து அன்பைப் பூணுதற் பகுதியுடைய அவ்விருபாற் கூற்று ஆறதிகாரமுமாக மாட்சிமைப்பட்ட காமத்துப் பாலின் இயல்கள் மூன்றாகப், பெயர்பெற்ற திருவள்ளுவர் நன்கு கூறினார்.

காவிரிப்பூம்பட்டினத்து காரிக் கண்ணனார்

28. ஐயாறு நூறும் அதிகார மூன்றுமாம்
மெய்யாய வேதப் பொருள்விளங்கப்—பொய்யாது
தந்தான் உலகிற்குத் தான்வள் ளுவனாகி
அந்தா மரைமேல் அயன்.

மெய்யாகிய வேதப் பொருள் பொய்த்துப் போகாமல் விளங்கும்படி அதனை அழகிய தாமரை மலரின்மேல் வீற்றிருக்கின்ற நான்முகக் கடவுள் தானே திருவள்ளுவராக வந்து, நூற்றுமுப்பத்து மூன்று அதிகாரமாகப் பகுத்து உலகத்தார்க்குத் தமிழில் செய்து தந்தான்.

மதுரைத் தமிழ் நாகனார்

29. எல்லாப் பொருளும் இதன்பால் உள; இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்—சொல்லால்
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை.

பலவகை நூல்களால் சொல்லப்பட்ட சிறந்த விஷயங்களெல்லாம் இந்நூலினிடத்து அடங்கியிருக்கின்றன; இந்நூலினிடத்து அடங்கி இல்லாத யாதொரு சிறந்த பொருளும் எந்நூலிலும் இல்லை; ஆதலால் சொல்

அளவினால் விரிந்துள்ள பல நூல்களினால் பயன் யாது? திருவள்ளுவரால் தரப்பட்ட இந்நூலொன்றே உலகத்தார்க்கெல்லாம் துணையாக அமையும்.

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ, பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ"

என்பதனாலும் அறிக.

பாரதம் பாடிய பெருந்தேவனார்

30. எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாம் செப்பவரு—முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமநுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்.

பாரதம், பழைய சீராம கதையையும், மநுஸ்மிருதி, பழைய வேதத்தையும் ஒத்திருக்கின்றனவாகும்; எவ்வகைப்பட்ட பொருள்களையும் எவ்வகையோரும் அவற்றின் தன்மையோடு அறிய அவர்க்குச் சொல்லும்படிக்குத் திருவள்ளுவர் சொல்லால் வந்த திருக்குறளுக்கு உபமானமாகத்தக்க நூல் ஒன்றும் இல்லை.

உருத்திர சன்ம கண்ணர்

31. மணற்கிளைக்க நீரூறு மைந்தர்கள் வாய்வைத்(து)
உணச்சுரக்குந் தாய்முலை ஒண்பால்—பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பால் மதிப்புலவோர்க்(கு)
ஆய்தொறும் ஊறும் அறிவு.

மணலைத் தோண்டுந்தோறும் நீர்பெருகும்; புதல்வர்கள் வாய்வைத்து உண்ணுந்தோறும் தாயினது முலைக்கண் நல்ல பால் பெருகும்; அவைபோல, வெறுப்படைந்து மாறுபடற்கு இடமில்லாத வாய்மைச் சொல்லையுடைய திருவள்ளுவரது திருக்குறளை ஆராயுந்தோறும் அறிவுடைய புலவர்க்கு அறிவு மேன்மேல் வளரும்.

பெருஞ்சித்திரனார்

32. ஏதமில் வள்ளுவ ரின்குறள்வெண் பாவினால்
ஓதிய ஒண்பொருள் எல்லாம்—உரைத்ததனால்
தாதவிழ் தார்மாற! தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன.

பராகங்களொடு விரிந்த பூமாலையுடைய பாண்டிய ராசனே! குற்றமற்ற திருவள்ளுவனார் இனிய குறள் வெண்பாக்களாலே நான்கு வேதங்களிற் கூறும் ஒள்ளிய பொருள்களையெல்லாம் கூறியதனால், மேம்படுதற்குத் தக்கவை அக்குறள் வெண்பாக்களோ? முதனூலாய் நின்று அவற்றைப் பயந்த வேதங்களோ? நீ கூறுவாயாக!

நரிவெரூஉத் தலையார்

33. இன்பம் பொருள்அறம் வீடென்னும் இந்நான்கும்
முன்பறியச் சொன்ன முதுமொழிநூல்—மன்பதைகட்(கு)
உள்ள அரிதென்(று) அவைவள் ளுவர்உலகங்
கொள்ள மொழிந்தார் குறள்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் இந் நான்கு பொருளியல்புகளையும் மானிட வருக்கத்துக்கு, அக்காலத்தில் அறியும் வண்ணம் கூறப்பட்ட பழைய மொழியாகிய வேதமானது, ஓதியுணர்தற்கு அரியதென்று, திருவள்ளுவர், அந்நால்வகைப் புருஷார்த்தங்களையும் உலகத்தார் எளிதில் உணரும்படி திருக்குறளை இயற்றியருளினர்.

மதுரைத் தமிழாசிரியர், செங்குன்றூர்க் கிழார்

34. புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேல்
சிலவர் புலவரெனச் செப்பல்—நிலவு
பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை மற்றும்
கறங்கிருள்மா லைக்கும் பெயர்.

மண்ணுலகத்திலே திருவள்ளுவர் ஒருவரையே புலவரென்று சொல்லாமல் வேறு சிலரையும் புலவரென்று சொல்லுதலானது, மாலையென்னும் சொல், நிலவினால் விளங்குகின்ற ஒளியையுடைய அந்திக்கும் பெயராக, மற்றும் சூழ்கின்ற இருளையுடைய அந்திக்கும் பெயராகச் சொல்லுதல் போலும்!

மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார்

35. இன்பமும் துன்பமும் என்னும் இவையிரண்டும்
மன்பதைக்(கு) எல்லாம் மனமகிழ—அன்பொழியா(து)
உள்ளி யுணர உரைத்தாரே ஓதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து.

பின் வருதற்குரிய இன்பத்துன்பங்களாகிய இவற்றினுடைய காரணங்களை ஆய்ந்தறியவும், தம்மீது அன்பு நீங்காமல் மனங் களிப்புறவும், மானிடவர்க்கத்துக்கெல்லாம் புகழப்படுஞ் சிறப்பையுடைய திருவள்ளுவர் வாயுறை வாழ்த்தாகத் திருக்குறளைக் கூறினர்.

கவிசாகரப் பெருந்தேவனார்

36. பூவிற்குத் தாமரையே; பொன்னுக்குச் சாம்புநதம்;
ஆவிற்(கு) அருமுனிஆ; யானைக்(கு)—அமரர்உம்பல்;
தேவிற் றிருமால் எனச்சிறந்த(து) என்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா.

மலர்களுக்குள்ளே தாமரை மலரும், பொன்களுக்குள்ளே சாம்புநதப் பொன்னும், பசுக்களுக்குள்ளே, அருமையான வசிஷ்ட முனிவர்க்கு உரியதாகிய காமதேனுவும், யானைகளுக்குள்ளே தேவர்கட்கு உரியதான ஐராவதமும், தேவர்களுக்குள்ளே திருமாலும்போல, நூல்களுக்குள்ளே திருவள்ளுவரது திருக்குறள் சிறந்தது என்று அறிவுடையோர் கூறுவர்.

மதுரைப் பெருமருதனார்

37. அறம்முப்பத் தெட்டுப் பொருள்எழுப தின்பத்
திறம் இருபத் தைந்தாற் றெளிய—முறைமையால்
வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனார்
ஓதவழுக் கற்ற துலகு.

அறத்தின் கூறுபாடு முப்பத்தெட்டு அதிகாரங்களாலும், பொருளின் கூறுபாடு எழுபது அதிகாரங்களாலும், காமத்தின் கூறுபாடு இருபத்தைந்து அதிகாரங்களாலும் தெளிவடையும் பொருட்டுக் காரணகாரிய ஒழுங்கினால் வேதத்திலுள்ள சிறந்த பொருளைக் குறள் வெண்பாக்களாலே, வள்ளுவனார் தெரிவித்தமையால், உலகமானது குற்றம் நீங்கி விளங்குகிறது.

கோவூர்க் கிழார்

38. அறமுதல் நான்கும் அகலிடத்தோர் எல்லாம்
திறமுறத் தேர்ந்து தெளியக்—குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனார் பால்முறைநேர் ஒவ்வாதே
முன்னை முதுவோர் மொழி.

அறமுதலிய நான்கு பொருளையும் உலகத்தோர் வகைப்பட ஆராய்ந்து தெளியுமாறு, குறள் வெண்பாக்களால் இயற்றப்பட்ட திருவள்ளுவரது முப்பால் முறையினிடத்தே, முற்காலத்துள்ள பெரியோரது நூல்களுக்குள் ஒன்றேனும் உவமை நேராது.

உறையூர் முதுகூற்றனார்

39. தேவிற் சிறந்த திருவள் ளுவர் குறள்வெண்
பாவிற் சிறந்திடுமுப் பால்பகரார்—நாவிற்(கு)
உயலில்லை சொற்சுவை யோர்வில்லை மற்றும்
செயலில்லை என்னும் திரு.

தெய்வத்தன்மையாற் சிறந்த திருவள்ளுவரது குறள் வெண்பாக்களோடு கூடிச்சிறந்து தோன்றாநின்றமுப்பால்களையும் ஓதிக்கல்லாதவரது நாவிற்கு இன்சொற்கூறி வாழ்தல் உண்டாகாது; மனத்திற்குச் சொற்களின் சுவையை உணர்தல் உண்டாகாது; இவையன்றியும் சரீரத்திற்கு நல்ல செயல் உண்டாகாது என்று நினைத்துத் திருமகள் அவரிடத்துச் சேரமாட்டாள்.

இழிகட் பெருங்கண்ணனார்

40. இம்மை மறுமை இரண்டும் எழுமைக்கும்
செம்மை நெறியில் தெளிவுபெற—மும்மையின்
வீடவற்றின் நான்கின் விதிவழங்க வள்ளுவனார்
பாடினர் இன்குறள்வெண் பா.

இம்மை மறுமைக்கு ஆவன இரண்டையும் வினைப்பயன் தொடர்தற்குரிய எழு பிறப்பிற்குமாகச் செவ்வையான வழியில் யாவரும் தெளிவு பெறவும், அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால்களுள் அம்முப்பாற் பொருள்களோடு வீடுமாகிய நாற்பொருள்களது விதிகளும் வழங்கவும், திருவள்ளுவ நாயனார் இனிய குறள் வெண்பாவைப் பாடியருளினர்.

செயிர்க்காவிரியார் மகனார் சாத்தனார்

41. ஆவனவும் ஆகா தனவும் அறிவுடையார்
யாவரும் வல்லார் எடுத்தியம்பத்—தேவர்
திருவள் ளுவர்தாமும் செப்பியவே செய்வார்
பொருவில் ஒழுக்கம்பூண் டார்.

மக்களுக்குத் தக்கனவும், தகாதனவுமாகிய இவற்றை அறிவுடையார் யாவரும் இனி இதிலிருந்து எடுத்துச் சொல்லுதற்கு வல்லவராவர்; ஆதலால் தேவராகிய திருவள்ளுவராலே கூறப்பட்டவற்றையே ஒப்பற்ற ஒழுக்கத்தை மேற்கொண்டவர் செய்வார்.

செயலூர்க் கொடுஞ் செங்கண்ணனார்

42. வேதப் பொருளை விரகால் விரித்துலகோர்
ஓதத் தமிழால் உரைசெய்தார்—ஆதலால்
உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் உண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு.

வேதத்தின் பொருளை உலகத்தார் ஓதியுணரும்பொருட்டு உபாயத்தால் விரித்துத் தமிழ் மொழியினாலே கூறியருளினார்; ஆதலால், நினைப்பவர் நினைக்கும் பொருள்களெல்லாம் திருவள்ளுவர் திருவாயில் பிறந்த திருக்குறளினிடத்தே உண்டென்று அறிவுடையோர் கூறுவர்.

வண்ணக்கஞ் சாத்தனார்

43. ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்(து) இதனின்இது
சீரியதென்(று) ஒன்றைச் செப்பரிதால்—ஆரியம்
வேத முடைத்து ; தமிழ், திரு வள்ளுவனார்
ஓது குறட்பா உடைத்து.

வடமொழியையுந் தென்மொழியையும் ஆராய்ந்து இதைக் காட்டிலும் இது சிறந்ததென்று ஒன்றைத் தெரிந்து சொல்லுதல் கூடாது; வடமொழி வேதம் உடைத்து; தமிழ்மொழி திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளையுடையது ஆதலால்.

களத்தூர்க் கிழார்

44. ஒருவர் இருகுறளே முப்பாலின் ஓதும்
தருமம் முதல்நான்கும் சாலும்—அருமறைகள்
ஐந்தும் சமயநூல் ஆறும்நம் வள்ளுவனார்
புந்தி மொழிந்த பொருள்.

இருக்கு முதல் பாரதம் இறுதியாகிய அரிய வேதங்கள் ஐந்தும், அவ்வேதங்களின் வழிப்பட்ட சமய நூல்கள் ஆறும் நம்முடைய திருவள்ளுவரால் உலகத்தார்க்குஅறிவுண்டாகும்படி சொல்லப்பட்ட நூலில் அடங்கும்; ஆதலால் ஒருவர்,ஒருவிகற்பமும் இருவிகற்பமுமாகிய இருவகைக் குறள்களையுமே முப்பால்களில் அத்தியயனஞ் செய்து அறியப்படுகின்ற அறம் முதலிய நாற்பொருள்களும் அவருக்குப் போதும்.

நச்சுமனார்

45. எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுக்கில் வனப்பணி வண்ணம்—இழுக்கின்றி
என்றெவர் செய்தன வெல்லாம் இயம்பின
இன்றிவர் இன்குறள்வெண் பா.

எழுத்து, அசை, சீர், அடி., சொல், பொருள், யாப்பு, அழகு, அலங்காரம், வண்ணம் ஆகிய இப்பத்துள் வழுவுதலில்லாமல், எக்காலத்தில் எவரால் எவை செய்யப்பட்டன அவையெல்லாம், இக்காலத்து இத்திருவள்ளுவராலே செய்யப்பட்ட இவ்வினிய குறள் வெண்பாக்களில் கூறப்பட்டன.

அக்காரக்கனி நச்சுமனார்

46. கலைநிரம்பிக் காண்டற்(கு) இனிதாகிக் கண்ணில்
நிலைநிரம்பு நீர்மைத்(து) எனினும்—தொலைவிலா
வானூர் மதியம் தனக்குண்டோ வள்ளுவர்முப்
பானூல் நயத்தின் பயன்.

திங்களும், முப்பானூலும், பதினாறு கலைகளாலும் அறுபத்து நான்கு கலைகளாலும் நிறைந்து, ஆராய்ச்சி செய்தற்கு இனிதாகி, முகக்கண்ணின் நிலையில் அகக் கண்ணிலையில் நிரம்புகின்ற தன்மையை யுடைத்தாயினும் திருவள்ளுவரது முப்பால் நூலினது நயத்தால் விளையும் பயன், வானிற் செல்லும் மதியத்திற்குண்டோ ? இல்லை.

நப்பாலத்தனார்

47. அறந்தகளி யான்ற பொருள்திரி இன்பு
சிறந்தநெய் செஞ்சொல்தீத் தண்டு—குறும்பாவா
வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு.

தருமம், அகலும் பொருள், திரியும் காமம், நெய்யும் செவ்விய சொல் நெருப்பும், குறட்பாத் தண்டுமாக, திருவள்ளுவ நாயனார், பூமியின் கண் வாழ்வோரது அகத்திருளை ஒழிப்பதாகிய விளக்கை ஏற்றினார்.

குலபதி நாயனார்

48. உள்ளக் கமலம் மலர்த்தி உளத்துள்ள
தள்ளற் கரியஇருள் தள்ளுதலால்—வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரும் ஒக்குமெனக்
கொள்ளத் தகுங்குணத்தைக் கொண்டு.

நெஞ்சமாகிய தாமரை மலரை மலரச்செய்து மக்களது அகத்திலுள்ள பிறிதொன்றினால் நீக்கப்படாத அஞ்ஞான விருளை நீக்குதலால், திருவள்ளுவரது குறள் வெண்பாவும், புறத்துத் தாமரை மலரச் செய்து புறத்திருளை நீக்குகின்ற பரிதியும் அச்செய்கையைக் கொண்டு ஒக்குமென்று கொள்ளத் தகும்.

தேனீக்குடிக் கீரனார்

49. பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே—முப்பாலின்
தெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து.

தெய்வத் தன்மையையுடைய திருவள்ளுவர் அறத்துப் பால், பொருட்பால் காமத்துப்பால் என்னும் மூன்று பால்களையுடைத்தாகச் சொன்ன திருக்குறளைக் கேட்டறிதலால், நிலவுலகத்தில் வாழ்பவருடைய மனத்திலே பொய்யின் பகுப்பிற் சேர்ந்தவையெல்லாம் பொய்யேயாய் ஒழிந்தன;

பொய்ம்மை யல்லாத மெய்யின் பகுப்பிற் சேர்ந்தவையெல்லாம் மெய்யே யாய் விளங்கின.

கோடிஞாழன் மாணிபூதனார்

50. அறன்அறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்
திறன் அறிந்தேம் வீடு தெளிந்தே—மறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயால்
கேளா தனவெல்லாம் கேட்டு.

பகைவரை யெறிந்த வாட்படை தங்கிய பெருமை மிகுந்த பாண்டியனே! திருவள்ளுவ நாயனாரது வாக்கினால் இதற்குமுன் கேட்கப்பட்டில்லாதவையெல்லாம் இப்போது கேட்டு, அறத்தின் திறத்தை யறிந்தேம்; பொருளின் திறத்தை யறிந்தோம் இன்பத்தின் திறத்தை யுணர்ந்தேம் வீட்டின் திறத்தையும் அறிய வழிதெரிந்து கொண்டோம்.

கவுணியனார்

51. சிந்தைக்(கு) இனிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கும் மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண் பா.

முற்பட்டதாகிய சிறந்த நன்மார்க்கங்களை நாம் அறிந்துகொள்ளும்படி நாவில் விளங்கும் புலமையையுடைய திருவள்ளுவர் சொன்ன, இனிய குறள் வெண்பாக்கள், நினைத்தால் இன்பஞ் செய்வன; கேட்டால் காதுகளுக்கு இன்பஞ் செய்வன; ஓதினால் வாய்க்கு இன்பஞ் செய்வன; தொடர்ந்து வருகிற இருவகை வினைகளாகிய நோய்களுக்குச் சிறந்த மருந்துகளாவன.

மதுரைப் பாலா சிரியனார்

52. வெள்ளி வியாழம் விளங்(கு) இரவி வெண்திங்கள்
பொள்ளென நீக்கும் புறவிருளைத்—தெள்ளிய
வள்ளுவர் இன்குறள் வெண்பா அகிலத்தோர்
உள்ளிருள் நீக்கும் ஒளி.

சுக்கிரன், தேவகுரு, இரவி, சந்திரன் என்பன புறத்திருளை விரைவில் நீக்கும் ஒளிகளாம்; முற்றுணர்ந்த திருவள்ளுவ நாயனாரது இனிய குறள் வெண்பா, உலகத்தாரது உள்ளிருளை நீக்கும் ஒளியாகும்.

ஆலங்குடி வங்கனார்

53. வள்ளுவர் பாட்டின் வளம்உரைக்கின் வாய்மடுக்கும்
தெள்ளமுதின் தீஞ்சுவையும் ஒவ்வாதால்--தெள்அமுதம்
உண்டறிவார் தேவர் உலகடைய உண்ணுமால்
வண்டமிழின் முப்பால் மகிழ்ந்து.

திருவள்ளுவரது திருக்குறட் பாட்டினது மதுரமாகிய சுவையைக் குறித்துப் பேசுமிடத்து, உண்ணப்படுகின்ற தெள்ளிய அமுதினது தீஞ்சுவையும் அதற்கு ஒப்பாகாது; அத்தெள்ளிய அமுதினையுண்டு அதன் சுவையை அறிபவர் தேவர்கள், வளம்பொருந்திய தமிழிலுள்ள முப்பாலாகிய அதன் மும்மடி சிறந்த பாலை எல்லா வுலகத்தாரும் மகிழ்ந்து உண்டு அதிலுள்ள சொற்சுவை, பொருட்சுவைகளை யறிவார்.

திருவள்ளுவமாலை, ஆசிரியர், திரு. ராகவாசாரியர் இயற்றிய
பொழிப்புரையுடன் முற்றுப் பெற்றது.

APPENDIX I.

English Translation.

Better Readings etc.,

Verse 9. Eight attributes of the Lord :—(1) Self-existence (2) essential purity (3) intuitive wisdom (4) infinite intelligence (5) essential freedom from all bonds (6) infinite grace (7) omnipotence (8) infinite enjoyment.

or

(1) Eternity (2) wisdom (3) omnipresence (4) happiness (5) power (The King) (6) purity (7) immateriality (8) love.

DR. G. U. POPE.

Verse 13. Substitute—'Should rains fail, famine would ramp and rage over the wide sea-girt earth.'

Verse 72. Substitute—'Full of themselves do the loveless tread on earth; but even their very bones, the loving bring to the altar of service.'

Verse 85. Substitute—'Even unsown, the fields of one rustle with the rich waves of corn that first regales one's guests and then feeds on what remains.'

Verse 356. Substitute—'Behold the man who has taken a heroically bold dive into the depths of his own soul guided by the unerring voice and vision of a master mind and has drunk in the streaming radiance of the all-perfect peerless pearl of the Formless; he shall enter the path that leads not again into the the darkness of the world.'

Verse 386. Substitute—'All sing the glory of the kingdom of a sovereign who is easy of access and never guilty of a harsh word.'

Verse 476. Substitute—'Vaulting ambition which over-reaches itself, spells the ruin of a sovereign and he is like one who takes a leap into the void from on the giddy top of a giant tree.'

APPENDIX II.

Opinions of Western Savants on the Kural.

M. Ariel :—(Journal Asiatique—1848)

"The Kural is the masterpiece of Tamil literature:—one of the highest and purest expressions of human thought."

"That which, above all, is wonderful in the Kural is the fact that its author addresses himself, without regard to castes, peoples or beliefs, to the whole community of the mankind; the fact that he formulates sovereign morality and absolute reason; that he proclaims in their very essence, in their eternal abstractedness, virtue and truth; that he presents, as it were, in one group the highest laws of domestic and social life; that he is equally perfect in thought, in language, and in poetry, in the austere metaphysical contemplation of the great mysteries of their Divine Nature, as in the easy and graceful analysis of the tenderest emotions of the heart."

Dr. Graul (1856).

"No translation can convey an idea of its charming effect. It is truly apple of gold in a net work of silver."

Rev. G. U. Pope, M.A., D.D. 1886.

*

"The Kural owes much of its popularity to its exquisite poetic form. The brevity rendered necessary by the form gives an oracular effect to the utterances of the great Tamil "Master of Sentences." They are the choicest of moral epigrams. Their resemblance to gnomic poetry of Greece is remarkable as to their subjects, their sentiments, and the state of society when they were uttered. Something of the same kind is found in Greek epigrams, in Martial and the Latin elegiac verse. There is a beauty in the periodic character of the Tamil construction in many of these verses that reminds the reader of the happiest efforts of Propertius.

The weaver of Mylapore was undoubtedly one of the *great geniuses of the world.* Complete in itself, the sole work of its author, it (the kural) has come down the stream of ages absolutely uninjured, hardly a single various reading of any importance being found."

"It is undoubtedly a noteworthy fact that from this Mylapore, on which the eyes of Christendom have ever rested as the only sacred spot in India of Apostolic labour, comes the one Oriental book, much of whose teaching is an echo of the 'Sermon on the Mount'. "Tradition declares that Tiruvalluvar composed his Kural at the request of his neighbours, in order that the Tamil people might have a Veda of

their own, and it was doubtless intended to become the abiding authority on all ethical subjects for the Tamil Country. The author must have already possessed a great reputation or this request would not have been made."

"Though in value it outweighs the whole of the remaining Tamil literature, and is one of the select number of great works which have entered into the very soul of a whole people, and which can never die."

"Sir A. Grant says 'Humility, charity and forgiveness of injuries, are not described by Aristotle.' Now these three are everywhere forcibly inculcated by this Tamil Moralist."

Dr. Barth (Religions of India).

"The Kural is that admirable collection of stanzas in the Tamil language, which is instinct with the purest and most elevated religious emotion .... What philosophy he teaches seems to be of the eclectic school as represented by the Bhagavat Geeta."

Frederick Pincott.

"There are two books in India which have taken entire possession of the hearts and minds of the people; the first of these is the *Ramayana of Tulasidas*, which is known to every peer and peasant in Northern India, and the other is the *Kural of Thiruvalluvar* which is equally well-known throughout the South of the Indian Peninsula. The authors of both these works were essentially moralists and monotheists, and their poems have moulded the characters and guided the lives of many generations of their countrymen. It is the pride of both poets that their works are absolutely pure, and it is creditable to the Hindu community that the two works, which are free from even an indelicate allusion have become the most popular books of India, and for hundreds of years have held undisputed sway over the people. Of the two, the Kural is much the older."

Rev. Elijah Hoole, D.D.

"Some of the sayings (of Cural) are probably as old as the earliest writings of the Old Testament."

"The Cural of Tiruvalluvar is a poetic work on morals, of great merit as literary performance. .... The author commences his book with an acknowledgment of God, in a style which in the production of a heathen, we cannot but greatly admire; and throughout the whole he evinces a singular degree of freedom from many of the strong prejudices of the Hindus, although he frequently illustrates his positions by allusions to the mythology and doctrines of the superstition of his country."

Rev. W. H. Drew (1840)

"Called the first of works, from which, whether for thought or language, there is no appeal, the Cural has a strong claim upon our attention as a part of the literature of the country, and as a work of intrinsic excellence."

The Rev, Peter Percival.

"Will be read with pleasure, as affording proof of the existence of the loftiest sentiments, the purest moral rules, and equal power of conception and expression. Nothing certainly in the whole compass of human language can equal the force and terseness of the sententious distichs in which the author conveys the lessons of wisdom he utters."

Mr. Charles E. Gover.

"Men like Thiruvalluvar and Siva Vakyar used their tongues and pens in favour of " Deism and against the ceremonial Polytheism of the Brahmans." "It will seem strange to a Western reader that the Cural of Thiruvalluvar should be the most venerated and popular book south of the Godaveri."

"There is no doubt of the fact that the Cural is as essentially the literary treasure, the poetic mouthpiece, the highest type of verbal and moral excellence among the Tamil people, as ever Homer was among the Greeks. We can only explain it by the principle that the whole aspect of the Dravidian mind is turned towards moral duty. Few persons out of the Madras Presidency can have any idea of the reverence and love that surrounds the Cural. Its sentences are counted as binding as the Ten Commandments on the Jews. Its very language has become the test of literary excellence. It is no exaggeration to say that it is as important in Tamil literature, as influential on the Tamil mind, as Dante's great work on the language and thought of Italy."

Rev. E. J. Robinson :—

"Readers who may be surprised to meet with not a little sacred truth in the heathen writings here unfolded, will remember that wisdom, like the Sun, has travelled from the East. A comparison of Tamil sayings with the precepts and proverbs of Holy Writ would tend to show that the fountain of the water of life has supplied the world, in streams coloured by the ages and countries through which they have flowed."

"We may regard Valluvar.........as Tamil Solomons, Ezras, or Tuppers, who collected and arranged the "proverbial philosophy" of primitive times."

APPENDIX III.

Translations of Thirukural and those relating to the same.

1. Father C. J. Beschi—In Latin—Books I and II. About 1730.

2. Rev. W. H. Drew—2 Vols. 1840 and 1852, 63 chapters only with annotations on the commentary of Parimelalagar by Ramanuja Kavirayar.

3. Dr. Graul—In German and Latin—1856—Incomplete.

4. M. Lamairesse—In French. 1867.

IN ENGLISH

5. F. W. Ellis—Published in Dr. Pope's Edition—A small portion only.

6. Rev. E. J. Robinson—108 chapters only under the heading " The Divine Pariah " forming a part of Tales and Poems of South India.

7. M. Murugesa Mudaliar—with Parimelalagar's commentary and clear exposition in Tamil. 1885, Contains English translation of Rev. Drew for first 63 chapters and of 70 chapters by Dr. J. Lazarus.

8. Dr. G. U. Pope. D. D. ' Sacred Kural '—metrical translation complete. London. 1886.

9. Mrs. Tirunavukkarasu—A gem for each day selected verses 366 only—1915.

10. V. V. S. Ayyar—The maxims of Thiruvalluvar complete, 1916.

11. K. Vadivelu Chettyar—with Parimelalagar's commentary, notes and clear exposition in Tamil. 1919. (English translation is the same as in item 7 above.

12. A. Mathavayya B.A. 400 selected verses. 1925.

13. Rev. H. A. Popley. B.A. The sacred Kural or the Tamil Veda of Tiruvalluvar (the Heritage of India series) selected stanzas about 360 with introduction and notes (Association Press—5 Russell Street, Calcutta) 1932.

14. S. Somasundara Bharathi M.A., B.L., Pasumalai, Madura on Thiruvalluvar being the translation of Tamil lecture delivered under the auspices of the Madras University on 11-3-19.-1928.

15. Prof. M. S. Purnalingam Pillai. B.A., L.T., Critical Studies in Kural—Munnirpallam. P. O. Tinnevelly District, 1929.

16. IN TELUGU—Kanuparthi. Venkatarama Sri Vidyanantha Natha—Trivarga Pradipika—20-7-87.

17. IN HINDI—Kshemananand Rahat—Tamil Veda-Sath Sahityamandal-Ajmere about 1924.

Note :—Sanskrit and Malayalam translations are said to have been published, but particulars of the same are not available.

இதுவரை வெளிவந்துள்ள

திருக்குறள் தமிழ்ப் பதிப்புக்கள்.

பதிப்பித்த ஆண்டு

1. திருத்தணிகை - சரவணப் பெருமாளையர் - பரிமேலழக ருரையைத் தழுவி இயற்றிய பதவுரையும், கருத்துரை யும், விசேட வுரையும். 1840
2. V. சுந்தர முதலியார் - மூலமும் பொழிப்புரையும். 1893
3. T. செல்வ கேசவராய முதலியார் M. A. திருவள்ளுவர். 1904
4. கி. குப்புசாமி முதலியார் - திருக்குறள் விளக்கம் - மாத சஞ்சிகையாய் பிரசுரித்த நூல் -(மூன்றுபாகமாக வெளி யிடப்பட்டுள்ளது.)
5. ஆறுமுக நாவலர் - பரிமேலழகர் உரையுடன். 1919
6. மு. இராகவையங்கார் - பரிமேலழகர் உரையுடன்.
7. வ. அ. சிதம்பரம் பிள்ளை - மணக்குடவருரையுடன் (அறத் துப்பால் மாத்திரம்.)
8. திரு. கா. சுப்பிரமணியப் பிள்ளை M.A. M.L. 'திருக்குறள்' தெளிபொருள் விளக்கம் பொழிப்புரையுடன்.
9. திரு. குருசரணாலயம் - திருக்குறள் வசனம். 1922
10. J. M. நல்லசுவாமி பிள்ளை - திருக்குறள் வீட்டின்பால். 1923
11. M. S. கோவிந்தராஜனார் - திருக்குறள் நாடகம். (இது காமத்துப்பாலுக்கு மாத்திரம்) மைலாப்பூர். 1923
12. M. S. சுப்ரமண்ய ஐயர் - திருக்குறள் விளக்கம், அலையன்ஸ் கம்பெனி, சென்னை.
13. சைவ சித்தாந்தப் பதிப்பு - மூலம் மாத்திரம். 1924
14. K. பொன்னுசாமி நாட்டார் - திருக்குறள் மூலம் மணக்குடவ ருரையுடன் 1925
15. N. கபிலமூர்த்தி பிள்ளை - திருவள்ளுவ நாயனார். 1926

16. R. P. சேது பிள்ளை B.A., B.L. சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலை - திருவள்ளுவர் நூல் நயம். 1927

17. ஸ்ரீமதி ராணி லக்ஷ்மி அம்மணி அம்மாள் - மருங்காபுரி ஜமீன்தாரிணி - திருக்குறள் தீபாலங்காரம் (108 அதிகாரமும் வசனமாயெழுதியுள்ளது) 1928

18. S. சோமசுந்தர பாரதி. M.A., B.L. (பசுமலை, மதுரை) திருவள்ளுவர், மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு. 1929

19. கி. வீரராகவன் - திருக்குறள் மூலமும் பொழிப்புரையும் தமிழ்நூற் பதிப்புக்கழகம், காஞ்சீபுரம். 1929

20. T. P. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, M.A., B.L. வள்ளுவரும் மகளிரும். 1930

21. M. R. அருணாசலக் கவிராயர்-மதுரைத் தமிழ்ச் சங்கம்-திருக்குறள் மூலமும் தெளிபொருள் வசனமும். 1930

22. ஜகவீர பாண்டியன் - தூத்துக்குடி —திருக்குறள் குமரேச வெண்பா. 1931

23. T. S. பரமசிவம் பிள்ளை-சேப்பாக்கம், திருவல்லிக்கேணி—திருக்குறள் சாரம்—108 அதிகாரமும் வசனமா யெழுதியுள்ளது. 1931

24. தி. அ. அனந்தநாத நயினார்-ஆடிசன்பேட்டை,காஞ்சீபுரம்-திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைன சமய சித்தாந்த விளக்கமும். 1932

25. A. இராமலிங்கம்—திருக்குறள் நீதி-திருக்குறளின் ஈரடியை ஓரடியாக எழுதியுள்ளார் இது கலாநிலயம் என்னும் வாரப் பத்திரிகையில் வெளியாகி வருகின்றது. 1933

26. வை. மு. சடகோப ராமானுஜாசாரியர் - 108 அதிகாரங்கள். பரிமேலழகருரையுடனும் விசேஷக் குறிப்புரையுடனும் சென்னை சர்வகலாசாலை பரீட்சைகளுக்கு வருஷா வருஷம் தனித்தனியே பதிப்பித்தது.

27. வேதகிரி முதலியார்—பரிமேலழகர் உரையைத் தழுவிய பதவுரையும் குறிப்புரையும் [நம் பார்வைக்குள் வராத வேறு சில நூல்களும் உண்டு.]

திருக்குறள் முதற்குறிப் பகராதி.

அ

அகடு ஆரார் 936
அகப்பட்டி 1074
அகரமுதல 1
அகலாது 691
அகழ்வாரை 151
அகனமர்ந்து 84
அகன் அமர்ந்து 92
அஃகாமை 178
அஃகி அகன்ற 175
அங்கணத்துள் 720
அசையியற்கு 1098
அச்சம் உடை 534
அச்சமேகீ 1075
அஞ்சாமை அல் 497
அஞ்சாமைஈ 382
அஞ்சும் அறியா 863
அஞ்சுவது அ 428
அஞ்சுவதோ 366
அடக்கம் அம 121
அடல்வேண்டும் 343
அடல்தகையும் 768
அடுக்கியகோ 954
அடுக்கிவரினும் 625
அடுத்ததுகா 706
அணங்குகொல் 1081
அணிஅன்றோ 1014
அந்தணர் என் 30
அந்தணர் நூற் 543
அமர் அகத்து 814
அமர் அகத்துவ 1027
அமிழ்தினும் 64
அமைந்தாங் 474
அரங்கின்றி 401
அரம்பொரு 888
அரம்போலு 997
அரிதரோதேற் 1153
அரிதாற்றி 1160
அரியகற்று 503
அரியவற்றுள் 443
அரிய என்று 537

அருங்கேடன் 210
அருஞ்செவ்வி 565
அருட்செல் 241
அருமறை 847
அருமைஉடை 611
அரும்பயன் 198
அருவினை 483
அருளல்லது 254
அருளில்லார் 247
அருளொன்றும் 757
அருளொடும் 755
அருள்கருதி 285
அருள்சேர் 243
அருள்வெஃகி 176
அலந்தாரை 1303
அலர்எழ ஆர் 1141
அலர்நாண 1149
அல்லல் அரு 245
அல்லவை 96
அல்லற்பட் 555
அவர் தந்தார் 1182
அவர் நெஞ்சு 1291
அவா இல்லார் 368
அவாவினை 367
அவாவென்ப 361
அவிசொரிந் 259
அவையறிந்து 711
அவையறியார் 713
அவ்வித்தழுக் 167
அவ்வியம் 169
அழக்கொண்ட 659
அழச்சொல் 795
அழல்போலும் 1228
அழிவதூஉம் 461
அழிவந்த 807
அழிவின் அவை 787
அழிவின்று 764
அழுக்கற்று அ 170
அழுக்காறு அ 35
அழுக்காறு-யான் 135
அழுக்காறு-பார் 165

அழுக்காறென 168
அழுக்காற்றின் 164
அளவல்ல 289
அளவளாவு 523
அளவறிந்தார் 288
அளவறிந்து 479
அளவின்கண் 286
அளித்தஞ்சல் 1154
அறஞ்சொல் 185
அறத்தாறிது 37
அறத்தாற்றின் 46
அறத்தான்வரு 39
அறத்திற்கே 76
அறத்தினூஉ 32
அறம்சாரா 1047
அறம்பொரு 501
அறவாழி 8
அறவினையா 321
அறவினையும் 909
அறனழீஇ 182
அறனறிந்து 441, 635
அறனாக்கம் 163
அறனியலான் 147
அறனிழுக்கா 384
அறனீனும் 754
அறனெனப் 49
அறன்அறிந்-வெ 179
அறன்கடை 142
அறன்கூறான் 181
அறன்நோக்கி 189
அறன்வரையான் 150
அறிகிலார் 1139
அறிகொன்று 638
அறிதோறு 1110
அறிந்தாற்றி 515
அறிவிலார் 843
அறிவிலான் 842
அறிவினான் 315
அறிவினுள் 203
அறிவின்மை 841
அறிவுஅற்றம் 421

அறிவுடையார் 427, 430
அறிவுருவு 684
அறுவாய்நி 1117
அறைபறை 1076
அற்கா இயல் 333
அற்றதறிந்து 944
அற்றமறைத் 846
அற்றம்மறை 980
அற்றவர் என் 365
அற்றார் அழி 226
அற்றாரைத்தே 506
அற்றார்க்கொ 1007
அற்றால்அள 943
அற்றேம்என் 626
அனிச்சப்பூ 1115
அனிச்சமும் 1120
அன்பகத்தில் 78
அன்பறிவு 513, 682
அன்பிலன் 862
அன்பிலார் 72
அன்பிற்கும் 71
அன்பின்வழிய 80
அன்பின்விழை 911
அன்பீனும் 74
அன்புடைமை 681, 992
அன்புநாண் 983
அன்பும்அறனு 45
அன்புற்றமர்ந்த 75
அன்பொரீஇ 1009
அன்பொடுஇ 73
அன்றறிவாம் 36

ஆ

ஆகுஆறு 478
ஆகூழால் 371
ஆக்கங்கருதி 463
ஆக்கம்அதர் 594
ஆக்கம்இழ 593
ஆக்கமும் 642
ஆங்கமை 740
ஆபயன்கு 560
ஆயும்அறிவி 918
ஆய்ந்தாய்ந் 792
ஆரா இயற்கை 370
ஆவிற்குநீர் 1066
ஆள்வினையும் 1022
ஆற்றாரும் 493
ஆற்றின் அளவ 477, 725
ஆற்றின்வருந் 468
ஆற்றின்நிலை 716
ஆற்றின் ஒழுக்கி 48
ஆற்றுபவர்க் 741
ஆற்றுவார் ஆற்றல் 225, 891, 985

இ

இகலான்ஆம் 860
இகலிற்குஎ 858
இகலின்மி 856
இகலெதிர் 855
இகலென்னும் 853
இகல்என்ப 851
இகல்காணா 859
இகழ்ச்சியிற் 539
இகழ்ந்தெ 1057
இடம் எல்லா 1064
இடனில்பரு 218
இடிக்கும்துணை 447
இடிபுரிந்து 607
இடிப்பாரை 448
இடுக்கண்கா 1030
இடுக்கண்படி 654
இடுக்கண்வருங் 621
இடும்பைக்கு 623
இடும்பைக்கே 1029
இடைதெரிந் 712
இணரெரி 308
இணர்ஊழ்த்து 650
இதனை இதனா 517
இமைப்பின் 1129
இமையாரின் 906
இம்மைப்பிறப் 1315
இயல்பாகும் 344
இயல்பினான் 47
இயல்புளி 545
இயற்றலும் 385
இரக்கஇர 1051
இரத்தலின் 229
இரத்தலும் 1054
இரந்தும்உயி 1062
இரப்பன்இரப் 1067
இரப்பாரை 1058
இரப்பான்வெ 1060
இரவார் இரப் 1035
இரவுள்ளஉள் 1069
இரவென்னு 1068
இருநோக்கு 1091
இருந்துள்ளி 1243
இருந்தோம்பி 81
இருபுனலும் 737
இருமனப்பெ 920
இருமைவகை 23
இருவேறு 374
இருள்சேர் 5
இருள்நீங்கி 352
இலக்கம்உ 627
இலங்கிழா 1262
இலமென்று 174
இலம்என்ற 1040
இலர்பலர் 270
இலனென்று 205
இலனென்னும் 223
இல்பிறந்தார் 1044
இல்லதென் 53
இல்லாரை 752
இல்லாளை 905
இல்லாள்கண் 903
இல்லைதவற 1321
இல்வாழ்வான் 41
இவறலும் 432
இழத்தொறூஉ 940
இழிவறிந்துண் 946
இழுக்கல் 415
இழுக்காமை 536
இழைத்தது 779
இளித்தக்க 1288
இளிவரின் 970
இளைதாகமு 879
இளையர்இன 698
இறந்தமைந் 900
இறந்தவே 531
இறந்தார் 310
இறப்பேபுரி 977
இறலீனும் 180

இறுதிபய	690
இறைகடியன்	564
இறைகாக்	547
இற்பிறந்தார்	951
இனத்தாற்றி	568
இனம்போன்று	822
இனிஅன்ன	1294
இனிய உள	100
இனைத்துணைத்	87
இனையர் இவ	790
இன்கண் உடை	1152
இன்சொலால்	91, 387
இன்சொல் இனி	99
இன்பத்துள்	629, 854
இன்பம் இடை	369
இன்பம் ஒரு	1052
இன்பம் கடல்	1166
இன்பம்விழை	615, 628
இன்மை இடு	1063
இன்மைஎன	1042
இன்மைஒ	988
இன்மையின்	558, 1041
இன்மையுள்	153
இன்றிஅமை	961
இன்றும்	1048
இன்னாஎன	316
இன்னாசெ-ரை	314
இன்னாசெ-ர்	987
இன்னாதிரக்	224
இன்னாதுஇ	1158
இன்னாமை	630
ஈ	
ஈட்டம் இவறி	1003
ஈதல்இசை	231
ஈத்துவக்கும்	228
ஈர்ங்கைவி	1077
ஈவார்கண்	1059
ஈன்றபொழு	69
ஈன்றாள்மு	923
ஈன்றாள் பசி..	656
உ	
உடம்பாடு	890
உடம்பொடு	1122
உடுக்கை	788
உடுப்பதூஉம்	1079
உடைசெல்	939
உடைத்தம்	473
உடைமையுள்	89
உடையர்எ	591
உடையார்	395
உட்கப்படா	921
உட்பகை	883
உணர்வது	718
உணலினும்	1326
உண்டார்கண்	1090
உண்ணற்க	922
உண்ணாது	160
உண்ணாமைஉ	255
உண்ணாமைவே	257
உதவிவரைத்தன்	105
உப்பமைந்	1302
உயர்வுஅக	743
உயிருடம்பின்	330
உயிர்ப்ப	880
உய்த்தல்	1287
உரம்ஒரு	600
உரன் என்னும்	24
உரன்நசை	1263
உருவுகண்டு	667
உருளாயம்	933
உரைப்பார்	232
உலகத்தார்	850
உலகத்தோ	140
உலகந்தழீஇ	425
உலைவிடத்	762
உவக்காண்எம்	1185
உவந்துறை	1130
உவப்பத்	394
உழந்துழந்	1177
உழவினார்	1036
உழுதுண்டு	1033
உழுவார்	1032
உழைப்பிரி	530
உளபோல்	574
உளரெனினும்	730
உளரென்னும்	406
உளவரை	480
உள்ளக்களி	1281
உள்ளத்தார்	1249
உள்ளத்தால்	282, 294
உள்ளம்இலா	598
உள்ளம்உடை	592
உள்ளம்போ	1170
உள்ளற்க	798
உள்ளியஎ	309
உள்ளியதுஎ	540
உள்ளினும்	1201
உள்ளினேன்	1316
உள்ளுவது	596
உள்ளுவன்	1125, 1184
உள்ளொற்றி	927
உறங்குவது	339
உறன்முறை	885
உறாஅதவர்க்	1292
உறாஅதவர்போ	1096
உறாஅதோ	1143
உறாஅர்க்கு	1200
உறின்உயிர்	778
உறின்நட்டு	812
உறுதோறு	1106
உறுபசியும்	734
உறுபொருளு	756
உறுப்பமைந்	761
உறுப்பொத்	993
உறுவதுசீர்	813
உறைசிறியார்	680
உற்றநோய்	261, 442
உற்றவன்	950
உற்றான்	949
ஊ	
ஊக்கம்	486
ஊடலில்தோற்	1327
ஊடலில்தோன்	1322
ஊடலின்உண்	1307
ஊடல்உணங்	1310
ஊடல்உணர்த	1109
ஊடற்கண்	1284
ஊடிஇருந்	1312
ஊடிப்பெ	1328
ஊடியவ	1304
ஊடுகமன்	1329
ஊடுதல்	1330

ஊண் உடை 1012
ஊதியம்என் 797
ஊரவர்கௌ 1147
ஊருணிநீர் 215
ஊழிபெய 989
ஊழிற்பெரு 380
ஊழையும் 620
ஊறொரால் 662
ஊனைக்குறி 1013

எ

எச்சம்என் 1004
எண்சேர்ந்த 910
எண்ணித்துணி 467
எண்ணியஎண் 666
எண்ணியார் 494
எண்ணென்ப 392
எண்பதத்தால் 991
எண்பதத்தான் 548
எண்பொருள 424
எதிரதாக் 429
எந்நன்றி 110
எப்பொருளும் 695
எப்பொருள் 355, 423
எய்தற்கரி 489
எரியால்சு 896
எல்லாப்பொ 746
எல்லார்க்கும் 125, 582
எல்லாவிளக் 299
எல்லைக்கண் 806
எவ்வதுஉறை 426
எழுதுங்கால் 1285
எழுபிறப்பும் 62
எழுமைஎழு 107
எளிதென 145
எள்பகவ 889
எள்ளாத 470
எள்ளாமை 281
எள்ளின் இளி 1298
எற்றிற்கு 1080
எற்றென்று 655
எனைத்தானும் 317, 416
எனைத்திட் 670
எனைத்துணை 144
எனைத்துநி 1208
எனைத்தும் 820
எனைத்தொ 1202
எனைப்பகை 207
எனைமாட்சி 750
எனைவகை 514
என்ஐமுன் 771
என்பிலதனை 77
என்றும் ஒரு 652

ஏ

ஏதம்பெருஞ் 1006
ஏதிலார் 837
ஏதிலார்குற் 190
ஏதிலார்போ 1099
ஏந்தியகொ 899
ஏமுற்றவ 873
ஏரினும்நன் 1038
ஏரின் உழா 14
ஏவவும்செய் 848

ஐ

ஐந்தவித்தான் 25
ஐயத்தினீ 353
ஐயப்படா 702
ஐயுணர்வு 354

ஒ

ஒட்டார் 967
ஒண்ணுதற் 1088
ஒண்பொருள் 760
ஒத்ததறிவா 214
ஒப்புரவினால் 220
ஒருதலையான் 1196
ஒருநாள்எழு 1269
ஒருபொழுதும் 337
ஒருமைக்கண் 398
ஒருமைச் 835
ஒருமைமக 974
ஒருமையுள் 126
ஒலித்தக்கால் 763
ஒல்லும்கரு 818
ஒல்லும்வகை 33
ஒல்லும்வாய் 673
ஒல்வது 472
ஒழுக்கத்தின் 136, 137
ஒழுக்கத்து 21
ஒழுக்கமும் 952
ஒழுக்கமுடைமை 133
ஒழுக்கமுடைய 139
ஒழுக்கம்விழு 131
ஒழுக்காறு 161
ஒளியார்முன் 714
ஒளியொருவற் 971
ஒறுத்தாரை 155
ஒறுத்தார்க்கு 156
ஒறுத்தாற் 579
ஒற்றினான் 583
ஒற்றும்உரை 581
ஒற்றொற்றி 588
ஒற்றொற்று 589
ஒன்றாஉலக 233
ஒன்றாகநல் 323
ஒன்றாமை 886
ஒன்றானும் 128
ஒன்றெய்தி 932
ஒன்னார்த் 264

ஓ

ஓஒ இனிதே 1176
ஓஒதல்வே 653
ஓதி உணர்ந்து 834
ஓம்பின் அமை 1155
ஓர்த்துள்ள 357
ஓர்ந்துகண் 541

க

கடலோடா 496
கடல்அன்ன 1137
கடனறிந்து 687
கடன்என்ப 981
கடாஅஉரு 585
கடாஅக்களி 1087
கடிதோச்சி 562
கடிந்தகடிந் 658
கடுமொழியும் 567
கடுஞ்சொல் 566
கடைக்கொட்க 663
கணைகொடிது 279
கண்உள்ளார் 1127
கண்உள்ளில் 1126
கண்களவு 1092
கண்டதுமன் 1146
கண்டார்உயிர் 1084

கண்டுகேட் 1101
கண்ணில்துனி 1290
கண்ணிற்கு 575
கண்ணின்பச 1240
கண்ணின்று 184
கண்ணுடையர் 393
கண்ணும்கொ 1244
கண்ணொடுக 1100
கண்ணோட்-இ 577
கண்ணோட்-எ 571
கண்ணோட்-து 572
கண்தாம்கலு 1171
கண்நிறைந்த 1272
கதங்காத்து 130
கதும்எனத்தா 1173
கயல்உண்கண் 1212
கரத்தலும்ஆற் 1162
கரப்பவர்க்கு 1070
கரப்பிடும்பை 1056
கரப்பிலாநெ 1053
கரப்பிலார் 1055
கரப்பினும் 1271
கரவாதுஉவ 1061
கருமணியில் 1123
கருமத்தால் 1011
கருமம்சிதை 578
கருமம்செய 1021
கருவியும்கால 631
கலங்காதுக 668
கலந்துணர் 1246
கல்லாஒரு 405
கல்லாதமே 845
கல்லாதவரின் 729
கல்லாதவரும் 403
கல்லாதான் 402, 404
கல்லார்ப் 570
கல்லான்வெ 870
கவறும்கழக 935
கவ்வையால் 1144
கழாஅக்கால் 840
களவினால்ஆகி 283
களவின்கண் 284
களவென்னு 287
களித்தறியேன் 928
களித்தானை 929
களித்தொறும் 1145
கள்ளுண்ணா 930
கள்வார்க்கு 290
கறுத்தின்னா 312
கற்கசடற 391
கற்றதனால் 2
கற்றறிந்தார் 717
கற்றாருள் 722
கற்றார்முன் 724
கற்றிலன் 414
கற்றீண்டு 356
கற்றுக்கண் 686
கனவினும் 819
கனவினான் 1214

கா

காக்கபொரு 122
காக்கைகர 527
காட்சிக்கெ 386
காணாச்சின 866
காணாதான் 849
காணின்குவ 1114
காணுங்கால் 1286
காண்கமன் 1265
காதலகாதல் 440
காதலர்இல் 1224
காதலர்தூ 1211
காதல்அவர் 1242
காதன்மை 507
காமக்கடல் 1164
காமக்கடும் 1134, 1167
காமக்கணிச் 1251
காமமும்நாணு 1163
காமம்உழந் 1131
காமம்என 1252
காமம்விடு 1247
காமம்வெகுளி 360
காலங்கருதி 485
காலத்தினால் 102
காலாழ்களரி 500
காலைஅரும்பி 1227
காலைக்குச் 1225
கானமுயல் 772

குடம்பை 338
குடிஆண்மை 609
குடிசெய்வல் 1023
குடிசெய்வார் 1028
குடிதழீஇ 544
குடிபுறங்காத் 549
குடிப்பிறந்தார் 957
குடிப்பிறந்து 502, 794
குடிமடிந்து 604
குடியென்னும் 601
குணநலம் 982
குணநாடி 504
குணம்என்னும் 29
குணனும்குடி 793
குணனிலனாய் 868
குலம்சுடும் 1019
குழல்இனிது 66
குறிக்கொண்டு 1095
குறித்தது 704
குறிப்பறிந்து 696
குறிப்பின் 703, 705
குற்றமேகாக் 434
குற்றம்இல 1025
குன்றனார் 898
குன்றின்அனை 965
குன்றேறி 758

கூ

கூடியகாமம் 1264
கூத்தாட்டு 332
கூழுங்குடியும் 554
கூறாமைநோ 701
கூற்றங்கு 269
கூற்றத்தை 894
கூற்றமோ 1085
கூற்றுடன்று 765

கெ

கெடல்வே 893
கெடாஅவழி 809
கெடுங்காலை 799
கெடுப்பதூஉம் 15
கெடுவல்யான் 116
கெடுவாக 117
கெட்டார்க்கு 1293

கே
கேடறியாக் 736
கேடில்விழுச் 400
கேடும்பெருக் 115
கேட்டார்ப் 643
கேட்டினும் 796
கேட்பினும் 418
கேள்இழுக்கம் 808
கை
கைம்மாறுவே 211
கையறியா 925
கைவேல்க 774
கொ
கொக்கொக்க 490
கொடியார் 1169, 1235
கொடுத்தலும் 525
கொடுத்துங் 867
கொடுப்பதுஅழு 166
கொடுப்பதூஉ 1005
கொடும்புரு 1086
கொடைஅளி 390
கொலைமேற் 551
கொலையிற் 550
கொலைவினை 329
கொல்லா-ந 984
கொல்லாமை 326
கொல்லான் 260
கொளப்பட் 699
கொளற்கரி 745
கொன்றன்ன 109
கோ
கோட்டுப்பூ 1313
கோளில் 9
ச
சமன்செய் 118
சலத்தாற் 660
சலம்பற்றி 956
சா
சாதலின் 230
சாயலும் 1183
சார்புணர்ந்து 359
சால்பிற்கு 986
சான்றவர் 990
சி
சிதைவிடத் 597
சிறப்பறிய 590
சிறப்பீனுஞ் 311
சிறப்பீனும் 31
சிறப்பொடு 18
சிறியார் உணர் 976
சிறுகாப்பின் 744
சிறுபடையான் 498
சிறுமைந 1231
சிறுமைபல 934
சிறுமையும் 769
சிறுமையுள் 98
சிறைகாக்கும் 57
சிறைநல 499
சிற்றினம் 451
சிற்றின்பம் 173
சினத்தை 307
சினமென்னும் 306
சீ
சீரிடங்காணி 821
சீரினுஞ்சீ 962
சீருடைச் 1010
சீர்மை 195
சு
சுடச்சுட 267
சுவைஒளி 27
சுழலும் இசை 777
சுழன்றும் ஏற் 1031
சுற்றத்தால் 524
சூ
சூழாமல்தா 1024
சூழ்ச்சிமுடி 671
சூழ்வார்கண் 445
செ
செப்பம்உடை 112
செப்பின்-பு 887
செயற்கரிய-செ 26
செயற்கரியயா 781
செயற்கைய 637
செயற்பாலசெ 437
செயற்பாலதோ 40
செயிரின்தலை 258
செய்கபொரு 759
செய்தக்க 466
செய்துஏமஞ் 815
செய்யாமற் 101, 313
செய்வானை 516
செய்வினை 677
செருக்கும் 431
செருவந்த 569
செல்லிடத்து 301
செல்லாஇ 302
செல்லாமை 1151
செல்லான் 1039
செல்வத்துள் 411
செல்விருந் 86
செவிகைப்ப 389
செவிக்குண 412
செவிச்சொல் 694
செவியின் 420
செவியுணவின் 413
செறுஅச்சிறு 1097
செறிதொடி 1275
செறிவறிந்து 123
செறுநரை 488
செறுவார்க் 869
செற்றவர் 1256
செற்றார்என 1245
செற்றார்பின் 1255
சென்றஇட 422
சொ
சொலல்வல் 647
சொல்லப்ப 1078
சொல்லுக 200, 645
சொல்லுதல் 664
சொல்வணக் 827
சொற்கோட் 119
ஞா
ஞாலங்கருதி 484
த
தகுதிஎன 111
தக்காங்கு 561
தக்கார்இன 446
தக்கார்தகவி 114
தஞ்சம்தம 1300
தண்ணம்துறை 1277
தணந்தமை 1233

தந்தைமகற் 67
தந்நலம் 916
தமராகித் 529
தம்நெஞ்சத் 1205
தம்பொருள் 63
தம்மில் இருந் 1107
தம்மிற்பெரி 444
தம்மிற்றம் 68
தலைப்பட்டார் 348
தலையின் இழிந் 964
தவஞ்செய் 266
தவமும்தவ 262
தவம்மறைந் 274
தவறிலர் 1325
தள்ளாவிளை 731
தற்காத்து 56
தனக்குவமை 7
தனியேஇருந் 1296
தன்குற்றம் 436
தன்துணை இன் 875
தன்னுயிர் 268
தன்னுயிர்க்கி 318
தன்னுயிர் நீ 327
தன்னூன்பெரு 251
தன்னெஞ்சு 293
தன்னைஉணர் 1319
தன்னைத்தான் 209, 305

தா

தாம்இன்புறு 399
தாம்வீழ்வா-த 1191
தாம்வீழ்வா-மெ 1103
தாம்வேண் 1150
தார்தாங்கி 767
தாளாண்மை 613, 614
தாளாற்றி 212
தானம்தவம் 19

தி

திறனல்ல 157
திறனறிந்து 644
தினற்பொரு 256
தினைத்துணை 104, 433, [1282

தீ

தீப்பாலதான் 206
தீயவைசெய் 208
தீயவைதீய 202
தீயளவன்றி 947
தீயினால் சுட்ட 129
தீவினையார் 201

து

துஞ்சினார் 926
துஞ்சுங்கால் 1218
துணைநலம் 651
துப்பார்க்கு 12
துப்பின்எவ 1165
துப்புரவுஇல் 1050
தும்முச்செறு 1318
துளிஇன்மை 557
துறந்தாரின் 159
துறந்தார்க்கு 263
துறந்தார்க்கும் 42
துறந்தார்படி 586
துறந்தார்பெரு 22
துறப்பார் 378
துறைவன் 1157
துனியும்புல 1306
துன்பத்திற் 1299
துன்பம்உற 669
துன்புறூஉம் 94
துன்னாத்-து 1250
துன்னியார் 188

தூ

தூங்காமை 383
தூங்குக 672
தூய்மை 364, 688

தெ

தெய்வத்தான் 619
தெய்வம் 55
தெரிதலும் 634
தெரிந்தஇன 462
தெரிந்துண 1172
தெருளாதான் 249
தெளிவிலத 464
தெள்நீர் 1065
தென்புலத்தார் 43

தே

தேரான்தெளி 510
தேரான்பிற 508
தேவர்அனையர் 1073
தேறற்க 509
தேறினும் 876

தொ

தொகச்சொ 685
தொடங்கற் 491
தொடலைக் 1135
தொடிநோக் 1279
தொடிப்புழு 1037
தொடியொடு 1236
தொடின்சுடி 1159
தொட்டனைத் 396
தொல்வர 1043
தொழுதகை 828

தோ

தோன்றிற் 236

ந

நகல்வல்லர் 999
நகுதற்பொரு 784
நகைஈகை 953
நகையும் 304
நகையுள்ளும் 995
நகைவகையர் 817
நசைஇயார் 1199
நச்சப்படாத 1008
நடுவின்றி 171
நட்டார்குறை 908
நட்டார்க்கு 679
நட்டார்போல் 826
நட்பிற்குவீற் 789
நட்பிற்குஉறு 802
நண்பாற்றார் 998
நத்தம்போல் 235
நயந்தவர் 1181, 1232
நயனிலசொ 197
நயனிலன் 193
நயனுடையான் 219
நயனொடு 994
நயன்ஈன்று 97
நயன்சாரா 194
நலக்குரியார் 149
நலத்தகை 1305
நலத்தின்கண் 958
நலம்வேண்டி 960
நல்ஆண்மை 1026

நல்குரவு	1045	நிலத்தில்	959	நோவற்க	877
நல்லவை	375	நிலவரை	234	நோனாஉடம்பும்	1132
நல்லார்கண்	408	நிலைமக்கள்	770	ப	
நல்லாறெனை	324	நிலையஞ்சி	325	பகச்சொல்லி	187
நல்லாறெனி	222	நிலையிற்றிரியா	124	பகல்கருதி	852
நல்லாற்றான்	242	நில்லாத	331	பகல்வெல்லும்	481
நல்லினத்தின்	460	நிழல்நீரும்	881	பகுத்துண்டு	322
நவில்தொறும்	783	நிறைஅரியர்	1138	பகைநட்பாக்	874
நற்பொருள்	1046	நிறைநீர	782	பகைநட்பாம்	830
நனவினால்	1213, 1217	நிறைநெஞ்சம்	917	பகைபாவம்	146
நனவினான்கண்	1215	நிறைமொழி	28	பகைமையும்	709
நனவினான்நம்	1220	நிறையுடைமை	154	பகையகத்துச்	723
நனவினான் நல்	1219	நிறையுடையே	1254	பகையகத்துப்	727
நனவென	1216	நினைத்திருந்து	1320	பகையென்னும்	871
நன்னீரை	1111	நினைத்தொன்று	1241	பசக்கமன்	1189
நன்மையும்	511	நினைப்பவர்	1203	பசந்தாள்	1188
நன்றறிவாரிற்	1072	நீ		பசப்பெனப்	1190
நன்றாகும்	328	நீங்கான்	864	படல்ஆற்றா	1175
நன்றாங்கால்	379	நீங்கில்	1104	படியுடையார்	606
நன்றாற்றலு	469	நீரின்றுஅமை	20	படுபயன்	172
நன்றிக்கு	138	நீரும்நிழல	1309	படைகுடி	381
நன்றிமறப்பது	108	நு		படைகொண்	253
நன்றென்றவற்	715	நுணங்கிய	419	பணியுமாம்	978
நன்றேதரினும்	113	நுண்ணிய நூல்	373	பணிவுடையன்	95
நா		நுண்ணியம்	710	பணைநீங்கி	1234
நாச்செற்று	335	நுண்மாண்	407	பண்என்ஆம்	573
நாடாது	791	நுனிக்கொம்பர்	476	பண்டறியேன்	1083
நாடென்ப	739	நூ		பண்பிலான்	1000
நாணாமை	833	நூலாருள்	683	பண்புடையார்	996
நாணால்	1017	நெ		பதிமருண்டு	1229
நாணும்	1297	நெஞ்சத்தார்	1128	பயனில	192
நாணொடு	1133	நெஞ்சில்	276	பயனில்	196
நாண் அகத்தில்	1020	நெடுங்கட	17	பயன்தூக்கார்	103
நாண்என	1257	நெடுநீர்	605	பயன்தூக்கி	912
நாண்என்னும்	924	நெடும்புனல்	495	பயன்மரம்	216
நாண்வேலி	1016	நெய்யால்	1148	பரிந்தவர்	1248
நாநலம்	641	நெருநல்	336	பரிந்தோம்பிக்	132
நாம் காதல்	1195	நெருநற்று	1278	பரிந்தோம்பிப்	88
நாடொறும்	553	நெருப்பினுள்	1049	பரியது	599
நாடோறும்	520	நோ		பரியினும்	376
நாளென	334	நோக்கினாள்	1082,1093	பருகுவார்	811
நி		நோதல்எவன்	1308	பருவத்தோ	482
நிணம்தீயில்	1260	நோயெல்லாம்	320	பருவரலும்	1197
நிலத்தியல்	452	நோய்நாடி	948	பலகுடை	1034

பலசொல்லக் 649
பலநல்ல 823
பல்குழுவும் 735
பல்லவை 728
பல்லார்பகை 450
பல்லார்முனி 191
பழகியசெல்வ 937
பழகியநட் 803
பழைமையென 801
பழிமலைந் 657
பழியஞ்சி 44
பழுதெண்ணும் 639
பழையம்என 700
பற்றற்றகண் 349, 521
பற்றற்றேம் 275
பற்றிவிடா 347
பற்றுகபற் 350
பற்றுள்ளம் 438
பனிஅரும்பி 1223
பன்மாயக் 1258

பா

பாடுபெறுதி 1237
பாத்தூண் 227
பாலொடுதேன் 1121

பி

பிணிக்கும 1102
பிணியின்மை 738
பிணைஏர்மட 1089
பிரித்தலும் 633
பிரிவுரைக்கும் 1156
பிழைத்துணர் 417
பிறப்பென்னும் 358
பிறப்பொக்கும் 972
பிறர்க்கின்னா 319
பிறர்நாண 1018
பிறர்பழியும் 1015
பிறவிப்பெரு 10
பிறன்பழி 186
பிறன்பொரு 141
பிறன்மனை 148

பீ

பீலிபெய் 475

பு

புகழ்இன்றால் 966
புகழ்ந்தவை 538
புகழ்பட 237
புகழ்புரிந் 59
புக்கில் 340
புணர்ச்சி 785
புத்தேளுலக 213
புரந்தார் 780
புலத்தலில் 1323
புலப்பல்என 1259
புலப்பேன் 1267
புல்லவையுள் 719
புல்லாதிரா 1301
புல்லிக்கிடந் 1187
புல்லிவிடா 1324
புறங்குன்றி 277
புறங்கூறி 183
புறத்துறுப் 79
புறந்தூய்மை 298
புன்கண்ணை 1222

பெ

பெண்இயலார் 1311
பெண்ணினால் 1280
பெண்ணின் 54
பெண்ணேவல் 907
பெயக்கண்டு 580
பெயல்ஆற்றா 1174
பெரிதாற்றி 1276
பெரிதினிது 839
பெரியாரை 892
பெருக்கத்து 963
பெருங்கொடை 526
பெருமைஉடை 975
பெருமைக்கும் 505
பெருமைபெரு 979
பெரும்பொரு 732
பெறாஅமை 1295
பெறின்என் 1270
பெறும்அவற் 61
பெற்றார் 58

பே

பேணாதுபெட்ப 1283
பேணாதுபெட் 1178
பேணாதுபெண் 902
பேதைபெருங் 816
பேதைப்படு 372
பேதைமைஎன் 831
பேதைமைஒன் 805
பேதைமையுள் 832
பேராண்மை 773

பொ

பொச்சாப்பார் 533
பொச்சாப்பு 532
பொதுநலத்தார் 915
பொதுநோக்கா 528
பொய்படும் 836
பொய்ம்மையும் 292
பொய்யாமை 296, 297
பொருட்பெண் 913
பொருட்பொரு 914
பொருளல்ல 351, 751
பொருளற்றார் 248
பொருளாட்சி 252
பொருளான்ஆ 1002
பொருளென் 753
பொருள்கருவி 675
பொருள்கெடுத் 938
பொருள்தீர்ந்த 199
பொருள்நீங்கி 246
பொருள்மாலை 1230
பொள்ளென 487
பொறியின்மை 618
பொறிவாயில் 6
பொறுத்தல் 152
பொறையொரு 733

போ

போற்றின் 693

ம

மகன்தந்தை 70
மக்களேபோல் 1071
மக்கள்மெய் 65
மங்கலம் 60
மடல்ஊர்தல் 1136
மடிமடிக் 603
மடிமை குடிமை 608
மடியிலாமன் 610
மடியுளாள் 617
மடியைமடி 602
மடுத்தவாய் 624

மணிநீரும் 742
மணியில்திகழ் 1273
மண்ணொடு 576
மதிநுட்பம் 636
மதியும்மடந் 1116
மயிர்நீப்பின் 969
மருந்தாகி 217
மருந்தென 942
மருந்தோமற் 968
மருவுகமா 800
மலரன்ன 1119
மலரினும் 1289
மலர்அன்ன 1142
மலர்காணின் 1112
மலர்மிசை 3
மழித்தலும் 280
மறத்தல் 303
மறந்தும் 204
மறப்பினும் 134
மறப்பின் 1207
மறம்மானம் 766
மறவற்க 106
மறைந்தவை 587
மறைபெறல் 1180
மறைப்பேன் 1161, 1253
மற்றும்தொடர் 345
மற்றியான் 1206
மனத்தது 278
மனத்தானும் 453
மனத்தின் 825
மனத்துக்கண் 34
மனத்துளது 454
மனத்தொடு 295
மனநலத்தின் 459
மனநலம் 457, 458
மனந்தூய்மை 455
மனம்தூயார் 456
மனம்மாணா 884
மனைத்தக்க 51
மனைமாட்சி 52
மனையாளை 904
மனைவிழை 901
மன்னர்க்கு 556
மன்னர்விழை 692
மன்னுயிர் 244, 1168

மா

மாதர்முகம் 1118
மாலைநோய் 1226
மாலையோ 1221
மாறுபாடில் 945

மி

மிகச்செய்து 829
மிகல்மேவல் 857
மிகினும் 941
மிகுதியான் 158

மு

முகத்தான் 93
முகத்தின் இனி 824
முகத்தின்மூது 707
முகநக 786
முகநோக்கி 708
முகைமொக்கு 1274
முடிவும் 676
முதலிலார்க்கு 449
முயக்கிடை 1239
முயங்கிய 1238
முயற்சிதிரு 616
முரண்சேர்ந்த 492
முறிமேனி 1113
முறைகோடி 559
முறைசெய்து 388
முறைப்பட 640
முற்றாற்றி 748
முற்றியும் 747
முனைமுகத்து 749
முன்னுறக் 535

மே

மேலிருந்தும் 973
மேற்பிறந்தார் 409

மை

மையல்ஒரு 838

மோ

மோப்பக்குழை 90

யா

யாகாவா 127
யாண்டுச்செ 895
யாதனின்யா 341
யாதானும் 397
யாமும்உளேம் 1204
யாம்கண்ணில் 1140
யாம்மெய்யா 300
யாரினும்கா 1314
யானென 346
யான்நோக்குங் 1094

வ

வகுத்தான் 377
வகைமாண் 897
வகையறச் 465
வகையறிந்து 721, 878
வசையிலா 239
வசையென்ப 238
வசையொழிய 240
வஞ்சமனத்தா 271
வருகமன் 1266
வருமுன்னர் 435
வருவிருந்து 83
வரைவிலா 919
வலியார்க்கு 861
வலியார்முன் 250
வலியில்நிலை 273
வழங்குவது 955
வழிநோக்கான் 865
வழுத்தினாள் 1317
வறியார்க் 221
வன்கண்குடி 632

வா

வாணிகஞ் 120
வாய்மை 291
வாராக்கால் 1179
வாரிபெருக்கி 512
வாழ்தல்உயிர் 1124
வாழ்வார்க்கு 1192
வாளொடு 726
வாள்அற்று 1261
வாள்போல் 882
வானின்று 11
வானுயர் 272
வானோக்கி 542

வி

விசும்பிற் 16
விடாஅதுசென் 1210

விடுமாற்றம் 689
விண்ணின்று 13
வித்தும்இ 85
வியவற்க 439
விருந்து 82
விருப்பறா 522
விரைந்து 648
விலங்கொடு 410
வில்லேர் 872
விழித்தகண் 775
விழுப்புண் 776
விழுப்பேற்றின் 162
விழைதகை 804
விழையார் 810
விளக்கற்றம் 1186
விளிந்தாரின் 143
விளியுமென் 1209
வினைகலந்து 1268
வினைக்கண் 519, 612
வினைக்கு உரிமை 518
வினை செய்வார் 584
வினைத்திட்பம் 661
வினைபகை 674
வினையான் வினை 678
வினைவலியும் 471

வீ

வீழப்படுவார் 1194
வீழுநர் வீழப் 1193
வீழும் இருவர் 1108
வீழ்நாள் 38
வீழ்வாரின் 1198
வீறெய்தி 665

வெ

வெண்மையென 844
வெருவந்த 563
வெள்ளத்தனை 622
வெள்ளத்து 595

வே

வேட்டபொழுதி 1105
வேட்பத்தாம் 646
வேட்பன 697
வேண்டற்க 177, 931
வேண்டாமை 363
வேண்டிய 265
வேண்டின் 342
வேண்டுங் 362
வேண்டுதல் 4
வேலன்று 546
வேலொடு 552

வை

வைத்தான்வாய் 1001
வையத்துள் 50

பிழையும் திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
32	19	அறுக்காறு	அழுக்காறு
52	28	வைப்பழி	வைப்புழி
84	3	எய்திக்	எய்தியக்
87	26	துன்பத்துன்	துன்பத்துள்
93	28	மனவுறுதியும	மனவுறுதியும்
,,	,,	கொடையும	கொடையும்
118	11	கருத்தினும்	கருதினும்
132	21	குழிதழீஇக்	குடிதழீஇக்
161	தலைப்பு	வினைத்திட்டம்	வினைத்திட்பம்
167	5	வழியுரப்பான்	வழியுரைப்பான்
,,	15	வஃகணவன்	வன்கணவன்
186	8	அணிந்து	அறிந்து
194	17	யாதும	யாதும்
195	33	நாட்டர்	நட்டார்
200	15	தம்எள் ளுவாரை	தம்எள்ளு வாரை
227	35	நேயாள வின்றி	நோயள வின்றி
239	33	பண்பில்லான்	பண்பிலான்
266	28	கண்ணோடு	கண்ணொடு
282	13	பிரிவஞ்சம்	பிரிவஞ்சும்
323	19	உடல்	ஊடல்
334	25	வாலறிவன்	வாலறிவின்

343	39	புண்டார்	பூண்டார்
345	20	தருமம், அகலும்	தருமம் அகலும்,
,,	,,	பொருள், திரியும்	பொருள் திரியும்,
,,	,,	காமம், செய்யும்	காமம் செய்யும்,

English Translation.

Verse.	146	Omit the word 'and'
,,	169	For 'passeth' read 'pass'
,,	174	,, 'Godlike' ,, 'god-like'
,,	225	,, 'appeseso' ,, 'appeases'
,,	288	,, 'him' ,, 'one'
,,	314	,, 'done to' ,, 'done unto'
,,	337	,, omit the word 'at'
,,	352	,, 'him' read 'one'
,,	377	,, 'disposer' ,, 'Disposer'
,,	424	,, 'truth' ,, 'truths'
,,	450	Delete commas.
,,	684	Delete comma after the word 'keen'
,,	687	For 'ambassador' read 'ambassadors'
,,	696	Insert a comma after the word 'him'
,,	712	Delete comma after the word 'deliver'
,,	840	For 'rotes' read 'roses'
,,	843	,, 'itsself' ,, 'itself'
,,	867	,, 'allow' ,, 'allows'
,,	1002	,, 'oblivious' ,, 'forgetful.
,,	1081	Insert ? after the word 'adorned'
,,	1159	For 'hearts ar removed' read 'hearts far removed'
,,	1238	For 'one another's arms' read 'each other's arms'
,,	1257	,, 'loviug' ,, 'loving'
,,	1291	Insert 'not' before the word 'remain'.

The B. N. Press, Educational Printers, Madras.